# என்னை என்ன செய்தாயடா?






இன்பா அலோசியஸ்


என்னை என்ன
செய்தாயடா?
LOVE
இன்பா அலோசியஸ்

http://www.pustaka.co.in

# என்னை என்ன செய்தாயடா?

# Ennai Enna Seithayada?

Author:

இன்பா அலோசியஸ்

**Infaa Alocious**

For more books

http://www.pustaka.co.in/home/author/infaa-alocious-novels

**Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.**

**All other copyright © by Author.**

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

## பொருளடக்கம்

பகுதி - 1.

பகுதி - 2.

பகுதி - 3.

பகுதி - 4.

பகுதி - 5.
பகுதி - 6.
பகுதி - 7.
பகுதி - 8.
பகுதி - 9.
பகுதி - 10.
பகுதி - 11.
பகுதி - 12.
பகுதி - 13.
பகுதி - 14.
பகுதி - 15.
பகுதி - 16.
பகுதி - 17.
பகுதி - 18.
பகுதி - 19.
பகுதி - 20.
பகுதி - 21.
பகுதி - 22.
பகுதி - 23.
பகுதி - 24.
பகுதி - 25.
பகுதி - 26.
பகுதி - 27.

பகுதி - 28.
பகுதி - 29.
பகுதி - 30.
பகுதி - 31.
பகுதி - 32.
பகுதி - 33.
பகுதி - 34.
பகுதி - 35.
பகுதி - 36.
பகுதி - 37.
பகுதி - 38.
பகுதி - 39.

# பகுதி - 1.

“துரை..., துரை....”, காட்டுக் கூச்சலாக ஒலித்த ஸ்ரீ ஐஸ்வர்யா தேவியின் குரலில், கைவேலையை அப்படியே போட்டுவிட்டு, ஹாலுக்கு விரைந்தார் துரை. ஸ்ரீ ஐஸ்வர்யா தேவி..., பெயருக்கு ஏற்றாற்போல்..., ஐஸ்வர்யமும், ஆளுமையும் சேர்ந்த ஒரு கலவை அவள்.

பணம்..., பணம் மட்டுமே அவளிடம் பேச முடியும். பணம் இல்லையா..., அவர்களை கால் தூசிக்கு கூட மதிக்க மாட்டாள். அதிலும்..., ஆண்கள் என்றால் எப்பொழுதும் அவளுக்கு இளைப்பம் தான். இந்த உலகிலேயே அவள் மதிக்கும் ஒரு ஆண்மகன் என்றால்..., அது அவளது தந்தை ஸ்ரீராமை மட்டும்தான்.

அவளது தாயும், பாட்டியும் இருந்த வரைக்கும்..., அவரையே கூட அவர்கள் மதித்தது இல்லை. மகள் விரும்பிவிட்டாள் என்ற ஒரே காரணத்துக்காக மட்டுமே, தனக்குப்

பிடிக்கவில்லை என்றாலும், ஸ்ரீராமை மருமகனாக ஏற்க முன்வந்தார் சாந்தி தேவி.

சாரதா தேவி, ஸ்ரீராமை விரும்பி மணந்த காரணத்தால்..., அவரை பெரிதாக மதிக்கவில்லை என்றாலும், அலட்சியம் செய்தது கிடையாது. அதனாலோ என்னவோ..., ஐஸ்வர்யா தந்தையை மதிக்க கற்றுக் கொண்டாள். அதைவிட..., தன்னை சாப்பிட்டாயா..., தூங்கினாயா என ஒரு வார்த்தை கேட்காத தாயை விட, தாய்க்குத் தாயாக இருந்த தந்தைமேல் அவளை அறியாமலேயே மதிப்பு தோன்றியதுதான் உண்மை.

சாந்தி தேவி அரச வம்சத்தை சேர்ந்தவர் என்பதால்..., அந்த மகாராணிக்குரிய தோரணை, கம்பீரம்..., ஆளுமை..., அனைத்தும் ஐஸ்வர்யா தேவியிடமும் கொட்டிக் கிடந்தது என்னவோ உண்மை. சாந்தி தேவிக்கு, தன் மகள் சாரதா தேவியை விட, புத்திசாலியாக விளங்கிய ஐஸ்வர்யா தேவியை அவ்வளவு பிடிக்கும்.

தன் நேரடி வாரிசாக அவளைத்தான் அவர் நியமித்தார். எனவேதான்..., படிப்பை முடிக்கும் முன்பே..., தேவி பப்ளிகேஷன் ப்ரைவேட் லிமிட்டட்டின் எம்டி இருக்கையில் அமர்ந்துவிட்டாள்.

இந்தியா முழுவதும் பள்ளி, கல்லூரிகள்..., மருத்துவக்கல்லூரி புத்தகங்கள், எஞ்சினியரிங் கல்லூரி புத்தகங்கள் என அனைத்தும் அவர்கள் பதிப்பகத்தார் வெளியிட்டுக் கொண்டிருந்தார்கள்.

இதை மேலும் மெருகேற்ற..., வெளிநாட்டு புத்தக நிறுவனத்தோடு இணைந்து செயல்பட்டு..., உலக அளவில் உயர வேண்டும் என்பதே அவளது லட்சியம்.

தனக்குக் கீழே ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை கட்டிக் காப்பதால்..., எப்பொழுதும் அவளிடம் ஒரு மிதப்பு வெளிப்படும். அவளது அக்கவுண்டில் மட்டுமே ஆயிரம் கோடி பணம் இருக்கிறது என்றால்..., அவள் சொத்து மதிப்பை கணக்கிட்டுக் கொள்ளுங்கள்.

கோபமும், எரிச்சலும் கலந்து அவள் துரையை உறுத்து விழிக்க,“அம்மா...”, தன் வயதையும் மறந்து தன்மையாய் அவளை ஏறிட்டார்.

“எங்கே என் ப்ரேக் பாஸ்ட்...”, சட்டமாக டைனிங் டேபிள் முன் அமர்ந்து அவள் கேட்க, விழித்தார்.

ஆனாலும் சட்டென தன்னை சுதாரித்தவர், “ஒரு நிமிஷம் இருங்கம்மா..., இப்போ ரெடி பண்ணிடுறேன்...”, அவர் கிச்சனுக்குள் நுழைய,

“ஹல்லோ..., உங்க இஷ்டத்துக்கு, நான் டிபன் சாப்பிடுறதா...?”, எரிச்சலாக அவள் மொழிய, கையைப் பிசைந்தார். தினமும் காலையில் ஒன்பது முப்பது மணிக்கு டிபன் சாப்பிட வருபவள், இன்று எட்டரைக்கே மேஜைமேல் வந்தால் அவரும் என்னதான் செய்வார்?

இவ்வளவி பெரிய வீட்டில் சாப்பாட்டுக்கு குறைவிருக்கவில்லை, அவள் சாப்பிடும் சாப்பாடு தயாராகவில்லை என்பது மட்டுமே அங்கே பிரச்சனை.

பிரம்மாதமாக அவள் எதையும் சாப்பிடப் போவதில்லைதான். காலை வேளையில் அவளுக்குப் பிடித்த சாப்பாடு என்றால், அது கெல்லாக்ஸ், ப்ரெட், சேண்ட்விச், டோஸ்ட்..., அல்லது ரெண்டு ஆம்லேட், பால், ஜூஸ்..., இவற்றில் ஏதாவது ஒன்றைத்தான் சாப்பிடுவாள்.

அதை தயாரிக்கவும் பத்து நிமிடங்களுக்கு மேல் ஆகப்போவதில்லை. ஆனால்..., அதை அவளிடம் யார் சொல்வது? தினமும் காலையில் அவளுக்கு காபி கொடுக்கும்பொழுதே..., இதுதான் வேண்டும் என சொல்லிவிடுவாள்.

அதையே..., அவள் வரும் நேரத்துக்கு சரியாக தயாரித்து, அவள் டேபிள் முன்பு அமரும்பொழுது, அவளுக்கு முன்பாக வைத்துவிடுவார். ஒரு நிமிடம் தாமதித்தாலும், அன்றைய சாப்பாட்டை தவிர்த்து விடுவாள்.

அப்படிப்பட்டவள்..., இன்று சாப்பாடே தயாராகவில்லை என்று சொல்லும் பொழுது, அதை எப்படி பொறுத்துக் கொள்வாள்? காலையிலேயே, இன்று சீக்கிரம் கிளம்பிவிடுவேன் என சொல்லியிருந்தால், இப்படி ஒரு சூழ்நிலையே வந்திருக்காது.

ஆனால் இதை யார் அவளிடம் சொல்வது? சங்கடமாக அவளைப் பார்த்தவாறே நிற்க,

“நான் உங்களை வேலைக்கு வச்சிருக்கேனா..., இல்ல நீங்க என்னை வேலைக்கு வச்சுருக்கீங்களா...?”, மேலும் அவள் பொரிய, தன் சிந்தையை கலைத்தார்.

“அம்மாடி..., அப்படியெல்லாம்...”,

“ஜஸ்ட் ஷட்டப்..., உங்க சென்டிமென்ட் எல்லாம் எனக்கு கேட்க நேரமில்லை, நான் கிளம்பறேன்...”, விருட்டென இருக்கையில் இருந்து எழுந்து செல்ல முயன்றாள்.

“தேவி...”, தந்தையின் அந்த ஒற்றை அழைப்பு, அவள் காலை கட்டிப் போட, அவர் பக்கம் திரும்பினாள். மனைவி, மாமியார் என அவர்கள் இருக்கும் வரைக்கும், தேவி என்ற நாமத்தையே உச்சரித்திராதவர், என்று அவர்கள் காலமானார்களோ..., அன்றுமுதல் மகளை இப்படித்தான் அழைக்கிறார்.

அதென்னவோ தன் மகளைக் காணும்பொழுதெல்லாம் தன் மாமியார் சாந்தி தேவியின் நினைவுதான் அவருக்கு எழும். அவள்மேல் ஒரு பெரிய மதிப்பையும், மரியாதையையும் அது ஏற்படுத்தும். ஆனாலும்..., அவள் தன் மகள் என்பதில் அவர் தெளிவாக இருந்தார்.

“குட் மோர்னிங் டேட்...”, அவரிடம் உரைக்க,

“வெரி குட் மோர்னிங் தேவி...”, அவளிடம் உரைத்தவர், துரையிடம் ஒற்றை பார்வையை செலுத்த, அவரும் புரிந்ததற்கு அடையாளமாக கிச்சனுக்குள் சென்று மறைந்தார்.

“என்னம்மா…, இன்னைக்கு இவ்வளவு சீக்கிரம்…”, தன் மணிக்கட்டில் கட்டியிருந்த ரோலக்ஸ் வாட்சில் மணி பார்க்க…, மனமோ…, ‘அப்போ டிரைவரும் வந்திருக்க மாட்டான்…’, ஓரவிழியில் வாசலை கவனிக்க, அவர் நினைப்பு சரியே என்பதுபோல் வாசலில் கிரியின் முகம் பார்வைக்கு கிடைக்கவில்லை.

‘இன்னைக்கு நாள் நல்ல நாளே இல்லை…’, மனதுக்குள் எண்ணிக் கொண்டவர், ‘தனக்கு கீழே வேலை பார்ப்பவர்கள் அனைவரும், தனக்கு அடிபணிய வேண்டும், என நினைப்பது என்ன நியாயம்…?’, அவரால் மனதுக்குள்தான் வெதும்ப முடிந்தது.

ஒரு காருக்கு ஒன்பது காரும், மூன்று டிரைவரும் இருந்தாலும், ஐஸ்வர்யாவுக்கு அவளது பென்சும்…, அதை ஓட்ட கிரியும் மட்டுமே அவளுக்கு வேண்டும். இது இல்லையென்றால் அது…, என்ற கொள்கையே அவளிடம் கிடையாது. அப்படி ஒரு பிடிவாதம்…, அது அவளுடன் பிறந்தது என்றே சொல்ல வேண்டும்.

“செக்கந்த்ரா பாத்தில் இருந்து நேத்து நைட் ரெண்டு லாரி வந்து நிக்கிது, அதை அன்லோட் பண்ணணும்…, ஐ’ம் லீவிங்…”, பேச்சு அத்தோடு முடிந்தது என அவள் கிளம்ப முயல, ஸ்ரீராமுக்கு இன்ஸ்ட்டண்டாக ஒரு மாரடைப்பு வரும்போல் இருந்தது.

தன்னை முயன்று நிலைப்படுத்திக் கொண்டு, தன்னால் முடிந்த அளவு நேரத்தை தாமதிப்போம் என்ற முடிவிற்கு வந்தவராக, “அப்போ நேத்து நைட்டே இன்னைக்கு சீக்கிரம் போகணும்னு உனக்குத் தெரியும்…”, நிதானமாக நடந்தவர் சோபாவில் சென்று அமர, அவளோ இருந்த இடத்தில் இருந்து அசையவே இல்லை.

“சோ வாட்…”, இதுதான் ஐஸ்வர்யா…, நான் இப்படித்தான்…, உன்னால் என்ன செய்ய முடியும் என்ற பாவனையில் அவள் கேட்டு வைக்க, அவள் குணம் தெரிந்தவராக, மௌனமாக ஒரு பெருமூச்சை வெளியேற்றினார்.

“ஐயா..., உங்க ஜூஸ்...”, துரை அவரிடம் ஜூஸை திணிக்க, அந்த ஜூஸை மகளிடம் கொடுத்தால் அதற்கும் ஏதாவது பேச்சு கேட்க வேண்டியிருக்கும் என எண்ணியவராக, அதை குடிக்கும் முயற்சியில் இறங்கினார்.

துரைக்கும் அதே நினைப்புதான்..., ‘இன்னும் இந்த பிடிவாதத்தை விடலையே...’, ‘ரெண்டு நிமிஷத்தில் ரெடி பண்ணிடுவேன்..., ஆனாலும் அதை தொட்டுகூட பாக்கப் போவதில்லை..., பிறகு யாருக்குச் செய்து வைக்க...’, அவரால் வருத்தம் மட்டுமே பட முடிந்தது.

துரை அங்கிருந்து கிச்சனுக்குள் நுழைய..., “சொல்லியிருந்தால் நான் அந்த வேலையை பார்த்திருப்பேனே...”.

“டோன்ட் பீ சில்லி டேட்..., நான் கிளம்பறேன்...”, அவள் வாசல் பக்கம் நகர, ‘என்ன நடக்கப் போகுதோ...? கிரி..., இன்னைக்கு உன் வேலை காலிதான்...’, அவர் எண்ணி முடிக்கும் முன்னர், வியர்வை சொட்டிய முகத்தோடு, கலவரமாக வாசல் பக்கம் அவன் முகம் தெரியவே, நிம்மதியாக மூச்சு விட்டார்.

பின் பக்க கதவை அவளுக்காக கிரி திறந்துவிட, அவள் உள்ளே அமரவே, கதவை பூட்டிவிட்டு, தன் இருக்கையில் அமர்ந்து காரை கிளப்ப..., அந்த ஏசி காருக்குள் கூட, ஓடிவந்த படபடப்பும், எங்கே தாமதித்துவிடுமோ என்ற பயமும் அடங்க அவனுக்கு சிறிது நேரமானது.

****“உப்ப்...., உப்ப்....”, உடல் முழுவதும் வியர்வை வழிய, மூக்கு நுனியில் வியர்வை சொட்ட, டம்பிள்ஸ்சை கைக்கு ஒன்றாக வைத்துக் கொண்டு கைகளுக்கு பயிற்சி கொடுத்துக் கொண்டிருந்தான் நம் கதையின் நாயகன் வினித் சக்சேனா.

ஆறடி உயரம், அதற்கேற்ற உடற்கட்டு, நிதமும் உடற்பயிற்சி செய்வதற்குச் சான்றாக, உடல் முழுவதும் முறுக்கேறி இருந்தது. அதிலும் கை மசில்சும், நெஞ்சின் உரமும்..., அவன் உழைப்பை பறைசாற்ற, உடலை தழுவி நிற்கும்

கையில்லாத பனியனில் அவனைப் பார்க்கும் எந்தப் பெண்ணும், கண்டிப்பாக ஒரு ஏக்கப் பெருமூச்சு விடுவாள்.

அதைவிட அவனது பிரத்தியேக தன்மையே..., கருகருவென அவன் தேகம், கை கால் என படர்ந்திருக்கும் முடிதான். அவனது நண்பன் கார்த்திக், அவனை சீண்ட வேண்டுமென்றால், அவன் கை முடியைப் பிடித்து இழுப்பதுதான் அவன் செய்யும் வேலையே.

வினித் மூச்சை பிடித்து உடற்பயிற்சி செய்ய, கார்த்திக்கோ தான் உடுத்திருந்த கைலிக்குள் சுருண்டிருந்தான். வினித்தின் சத்தம் அவனை எட்ட, கைலியை சற்று விலக்கிப் பார்த்தவன்..., “ஏண்டா வினித்..., இப்போ என்னத்துக்குடா புஸ் புஸ்ன்னு மூச்சு விட்டு என் தூக்கத்தை கெடுக்குற...?

“நானும் ஏதோ பாம்புதான் வந்துடுச்சாக்கும்னு பயந்தே போயிட்டேன்...”, கைலியை இறக்கி, இடுப்பில் முடிந்தவாறே எழுந்து அமர்ந்தவன், கையை மேலே தூக்கி..., சோம்பல் முறித்துவிட்டு, “ஹவ்...”, என தாராளமாக ஒரு கொட்டாவியை வெளியேற்றினான்.

“அப்படியே பாம்பு வந்து புஸ் புஸ்ன்னு சொன்ன உடனே மட்டும் ஐயா அப்படியே எழும்பிக் கிழிச்சுடுவீங்களோ..., போடா சோம்பேறி...”, டம்பிள்ஸை கீழே வைத்துவிட்டு, விரல்களுக்கு பயிற்சியளிக்கும் செய்கையை வினித் செய்ய,

“டேய் மச்சான்..., எனக்கு ஒரு சந்தேகம்..., இப்படி அங்கே அங்கே கட்டி கட்டியா உடம்பை மாத்துறியே..., இதுக்கு ஏண்டா இவ்வளவு கஷ்டப்படணும், நாலுபேரை விட்டு நாலு தட்டு தட்டச் சொன்னா, அவனுங்க ஈசியா செஞ்சுட்டுப் போறானுங்க..., இதுக்குபோய்..., ஹா...ஹா...”, பெரிய நகைச்சுவையை சொல்லிவிட்ட நினைப்பில் அவன் சிரிக்க,

அருகில் இருந்த டம்பிள்ஸையும், அவனையும் வினித் ஒரு பார்வை பார்க்க, அவன் நினைப்பு புரிந்தவனாக, “வேண்டாம் மச்சான்..., அறியாத புள்ளை, தெரியாமல்

சொல்லிடுச்சு..., என்னை வுட்டுடு...”, கார்த்திக் எழுந்து ஓட முயல,

“ம், ம்.., என்ன சொன்ன...? அறியாத புள்ளையா...? நீயா...? அப்படியெல்லாம் உன்னை சும்மா விட முடியாது. முதல்ல இந்த டம்பிள்சை எடுத்து, நூறு புஷ்ஷப்ஸ் எடுக்குற... அதுதான் உனக்கு தண்டனை...”, பாய்ந்து வந்து அவனை பிடிக்க முயன்றான்.

“அய்யய்யோ..., என்னை கொல்லப் பாக்குறானே...”, அலறியவன், அந்த மொட்டை மாடியின் ஓரத்தில் இருந்த அந்த ஒற்றை அறைக்குள் சென்று புகுந்துகொள்ளப் பார்க்க, ஒரே தாவலில் அவனை பிடித்தவன், தன் கைக்குள் இருந்த அந்த இயந்திரத்தை, கார்த்திக்கின் கைக்குள் மாற்றி அழுத்த, பழக்கமில்லாத அந்த செய்கையில் வாய்விட்டே அலறினான்.

“அடடா..., இன்னா சார் நீ..., சின்னப் பையன் மாதிரி சத்தம் போட்டுக்கினு, கீழே இருந்து வீட்டுக்காரம்மா வந்துடப் போகுது...?”, வேகமாக அவன் வாயை அடைக்க முயன்றான் குமார்.

“ஏண்டா குமாரு..., உனக்கு கல்யாணம் ஆயிடுச்சா சொல்லவே இல்ல..., நேத்து நைட் தண்ணிபோடும்போது கூட, தனி மரமா இருக்கேன்னு புலம்புன, விடிய முன்னாடி எப்படிடா...?”, விழி விரித்து கார்த்திக் கேட்க, கடுப்பானான் குமார்.

“என்னது..., எனக்கு கண்ணாலமா...? என்னசார் உளர்ற...?”, அவன் புரியாமல் கேட்க,

“அதாண்டா..., என்னமோ வீட்டுக்காரம்மா காதில் விழுந்துடும்னு பயப்பட்ட, இப்போ இப்படி சொல்ற...?”, சிரிப்பை அடக்கிய குரலில் கார்த்திக் வினவ,

“வீட்டுக்காரமா..., அட ராமா..., இன்னாசார் விளாட்டு இது...? உனக்கு இது பத்தாது சார். வினித் சார்..., அந்த இரும்பு குண்டை எடுத்து இவர் தலையிலேயே போடு சார்...,

அப்பத்தான் இந்த வாய்கொழுப்பு அடங்கும்…”, அடக்கப்பட்ட கோபத்தில் பொரிந்தான்.

“மச்சான்…, என் நேரத்தை பாத்தியாடா…, அவன் சொன்னது தப்பில்லையாம்…, நான் திருப்பி கேட்டதுதான் தப்பாம்…, இந்த உலகமே இப்படித்தாண்டா இருக்கு….”, அவன் அப்பாவிபோல் உரைக்க, கார்த்திக்கின் கையை இன்னும் அழுத்தினான் வினித்.

அவன் வேண்டுமென்றே குரல் எழுப்பிக் கத்த, அவன் வாயை வேகமாக அடைத்தான் குமார். “சார்…, நிசமாவே இன்னைக்கு ஓணரம்மா மேலே வந்து வீட்டை காலிபண்ண சொல்லப் போகுது. ஏற்கனவே ஒருத்தர்ன்னு சொல்லிட்டு மூணுபேர் இருக்கோம்னு கத்தும்…, இன்னைக்கு…”, அவன் சொல்லி வாயை மூடும் முன்பே,

தன் பருத்த தேகத்தை தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு மேலே வந்து, மூச்சு வாங்க நின்றார் லட்சுமியம்மா.

“என்னடா…, இன்னைக்கு காத்து ரொம்ப பலம்மா அடிக்குது. விடுற அனலில் சென்னையோட ஹீட்டே எகுறும் போல…?”, கார்த்திக் வினித்தின் காதைக் கடித்தான்.

‘சும்மா இரேண்டா…’, வினித் பார்வையால் அவனை எச்சரித்தான்.

“இங்கே என்ன நடக்குது…?”.

“யாருமே நடக்கலையே…, எல்லாம் நிக்கத்தானே செய்யிறோம்…”, கார்த்திக் வாயை வைத்துகொண்டு சும்மா இராமல் உரைக்க,

“என்ன ஜோக்கா…, இதுக்கு உன் கூட இருக்கானுங்களே அவனுங்க வேண்ணா இளிப்பானுங்க…, நான் இல்லை…, வீட்டை வாடகைக்கு விடும்போதே என்ன சொன்னேன்…? நீ இருக்க இடமே தெரியக் கூடாதுன்னு சொன்னேனா இல்லையா…? இப்போ என்னன்னா இந்த தெருவுக்கே கேக்குற மாதிரி சத்தம் போட்டால் என்ன அர்த்தம்…?”, அவர் கோபம் அதிகரித்தது.

“லட்சுமியம்மா..., அவன் கையில் ஏதோ முள் குத்திடுச்சாம்..., அதை எடுத்துட்டு இருந்தோமா..., அதான் பையன் கத்திட்டான்...”, கார்த்திக்கின் கையை பலம்மாக வினித் அழுத்த, இப்பொழுது முன்னைவிட அதிகமாக வலித்தாலும் கத்த முடியாமல் வலியில் நெளிந்தான்.

“ஆமா..., நீ என்னைக்கு இங்கே இருந்து போற...? ரெண்டுநாள் இருப்பேன்னு சொல்லிட்டு ரெண்டு மாசமா டேரா போட்டுட்டு இருக்க, இதுக்கு என்ன அர்த்தம்...?”, கடுமையாக இருந்தது அவர் வார்த்தைகள்.

வினித்தின் முகம் நொடியில் இறுகிவிட, அவ்வளவு நேரம் அங்கே இருந்த இலகுத்தன்மை சட்டென மாறியது. கார்த்திக் பதில் சொல்லும் முன்பே, “ஆமா..., இந்த குமாரை என்னத்துக்கு இங்கே சேத்துட்டு இருக்க...? நீயே ஒண்டிகட்ட..., உனக்கு சமைக்க ஒரு ஆள்ன்னா உனக்கே ஓவரா இல்ல...”, அவன்மேல் இருந்த மொத்த கோபத்தையும் வெளிப்படுத்தினார்.

“லட்சுமியம்மா..., நீங்க பேசுறது உங்களுக்கே நியாயமா இருக்கா...? என் ஒருத்தனுக்கு நீங்க இந்த ரூமை வாடகைக்கு கொடுக்கும்போது ஆயிரத்தி ஐநூறு ரூபாய் வாங்குனீங்க. இப்போ மூவாயிரத்தி ஐநூறு ரூபாய் கொடுக்குறேன்.

“ஒத்த ரூமுக்கு இவ்வளவு வாடகைன்னா கேக்குறவங்க சிரிப்பாங்க. வேண்ணா சொல்லுங்க..., இப்போவே இவனுங்களை அனுப்பிட்டு, ஆயிரத்தி ஐநூறு ரூபாய் மட்டும் கொடுக்குறேன்..., என்ன சம்மதமா...?”, சரியாக அவர் உயிர் நாடியை பிடித்துவிட, அவனுக்கு பதில் சொல்ல சற்று திணறித்தான் போனார்.

அவர் வாடகைக்கு விட்டிருக்கும் அந்த ஒற்றை அறையானது பத்துக்கு பதினொன்று விஸ்த்தாரம் உடையது. அறைக்குள் சின்ன தடுப்பு வைத்து, அந்தபக்கம் சின்ன மேடை இருக்க, அதுதான் அவர்கள் சமையலறை. குளிக்க, மற்றும் அவசர தேவைக்கு..., அந்த மொட்டை மாடியின் ஒரு ஓரத்தில் இரண்டு அறைகள் இருந்தது.

“நான் இப்போ என்ன கேட்டேன்...? எதுக்கு இவ்வளவு சத்தம் வருதுன்னு தானே கேட்டேன்..., கொஞ்சம் சத்தத்தை குறைச்சுகோங்க..., பிறகு இங்கே அசோசியேஷனில் நான்தான் போய் பதில் சொல்லணும் புரியுதா...?”, இதற்குமேல் இங்கே நிற்பது சரியில்லை என கிளம்பிவிட்டார்.

அவர் செல்லவே..., “டேய் மச்சான்..., அந்தம்மா என்ன புதுசாவா பேசுது..? எதுக்குடா மூஞ்சிய இப்படி வச்சுட்டு இருக்க...? விடுடா..., விடுடா..., நான்ல்லாம் என் எம்டி கிட்டே இதைவிட கேவலா எல்லாம் வாங்கியிருக்கேன்...”, வினித்தின் தோளை தட்டினான்.

“என்னால் உனக்கு ரொம்ப கஷ்டம் இல்லடா...”, வினித் சின்னக் குரலில் வினவ,

“நான் என்ன உன்னை சுமந்துட்டா இருக்கேன்..., ரொம்ப கஷ்டப்பட. முதல்ல குளிச்சுட்டு வா..., நானும் குளிச்சுட்டு கிளம்பறேன்..., இன்னைக்கு வேற எங்க ஆபீஸில் விபி இன்டர்வியூ இருக்கு. அந்தம்மா குணத்துக்கு ஒருத்தனும் ஒரு மாசத்துக்கு மேல தங்க மாட்டேங்கான்..., நம்ம உயிர் போகுது...”, புலம்பியவன், அறைக்குள் செல்ல, அவன் பின்னாலேயே சென்றான் வினித்.

“இன்னா சார்..., பணத்தை பத்தி பேசுன உடனே அந்தம்மா பெட்டிப் பாம்பா அடங்கிடுச்சு..., ஆனாலும் அத்தோட கெத்த வுட மாட்டிக்கு பாத்தீங்களா...?”, குமார் வினவ, “அதைபத்தி நமக்குத் தெரியாதா...? சரி இன்னைக்கு காலையில் என்ன டிபன்...?”, கார்த்திக் சாப்பாட்டுக்குத்தாவ, மற்றவை பின் சென்றது.

அனைவரும் குளித்து கிளம்பி, அரக்க பரக்க உணவுண்டு முடிக்க, வழக்கமாக எதையாவது கலகலப்பாக பேசிக்கொண்டிருக்கும் வினித்தின் அமைதி குமாரையும், கார்த்திக்கையும் சங்கடத்துக்குள்ளாக்கியது.

இதுவரைக்கும் லட்சுமியம்மா வினித்திடம் பேசியது கிடையாது. அதற்கு கார்த்திக்கும் அனுமதித்தது

கிடையாது. இன்று தங்கள் விளையாட்டு சற்று எல்லை மீறிவிட்டதோ என கார்த்திக் சங்கடப்பட, ‘என்னால் தானே கார்த்திக் அடிக்கடி அந்த அம்மாவிடம் பேச்சு கேட்க வேண்டி இருக்கிறது’, என மனதுக்குள் சங்கடப்பட்டுக் கொண்டிருந்தான் வினித்.

“சரி மச்சான் நான் கிளம்பறேன்..., ஏதாவது வேணும்ன்னா எனக்கு கால் பண்ணு..., சாப்பாடு குமார் செஞ்சு வச்சிருக்கான் சாப்பிடு..., எதையும் மனசுக்குள் போட்டு குழப்பிக்காதே..., ப்ரீயா விடு...”, அவனை தேற்றியவன் கிளம்பினான்.

அவன் கிளம்பவே, “கார்த்திக்..., உங்க கம்பெனி விபி இன்டவியூ ஓபன் இன்டர்வியூவா இல்ல...”, அவன் முகம் யோசனையில் சுருங்கி இருக்க, ஒரு தீர்மானத்தில் அவன் கேட்ட விதம் கார்த்திக்கின் புருவம் உயர்த்த, அதே சிந்தையோடு அவனை ஏறிட்டான்.

“இப்போ எதுக்குடா இந்த கேள்வி...?”, புரியாமல் கேட்டான்.

“ம்ச்..., கேட்டதுக்கு பதில் சொல்லு...?”, அவன் அதிலேயே நின்றான்.

“ஐயோ சார்..., உனக்கு அத்தெல்லாம் சரிப்படாது சார்..., அந்தம்மா மூஞ்சக்காட்டும்..., மதிக்கவே செய்யாது..., அது சரியான ராட்சசி..., வேணாம் சார்...”, குமார் வேகமாக இடையிட்டான்.

“அவன் சொல்றது சரிதான் வினித். உன் நேச்சர்க்கு அது செட்டாகாது..., உனக்கு வேணும்னா சொல்லு..., நான் ஜாப் தேடித் தரேன். உன் குவாலிபிகேஷன் என்னன்னு சொல்லு..., அதுக்கு ஏத்தமாதிரி பாக்கலாம்...”, அவனும் குமாரின் கருத்தையே ஒத்து ஊதினான்.

“டேய்..., நான் அந்த லட்சுமியம்மா பேசுனதுக்கா இப்படி இருக்கறேன்னு நினைக்கிற...? ச்சே..., ச்சே..., என்னால் உனக்கு பெர்டன் அதிகமாயிடுச்சேன்னுதான் யோசிக்கறேன். நான் இப்படியே இருக்குறது சரி வராது.

இத்தனை மாசம் நான் என்னைபத்தி மட்டுமே யோசிச்சுட்டு இருந்துட்டேன்.

“உன்னைபத்தி யோசிக்கவே இல்லை. அது எவ்வளவு பெரிய தப்புன்னு இப்போ எனக்குப் புரியுது. சரி லீவ்இட்..., நான் கேட்டதுக்கு பதில் சொல்லு...”.

“என்ன மச்சான் இது...? நான் இவ்வளவு தூரம் சொல்றேன்...”, கார்த்திக் தயங்க, வினித் முகத்தில் பிடிவாதத்தை பார்க்க.., “ஓகே கூல்..., இது ஓபன் இன்டர்வியூ தான். உலகத்திலேயே விபியை ஓபன் இன்டர்வியூ வைத்து எடுக்கும் ஒரே கம்பெனி எங்க கம்பெனியாகத்தான் இருக்கும்.

“வர்ற எவனுமே ஒரு மாசத்துக்கு மேலே தங்க மாட்டான். ஏன்னா..., அந்தம்மா படுத்துற பாடு அப்படி. இந்த லட்சணத்தில்..., இன்டர்வியூக்கு வரவங்க கோட் சூட் போட்டுதான் வரணும் என்பதுதான் முதல் கண்டிஷனே.

“குவாலிபிகேஷன் வேற..., ஐஐடி பெர்சனாலிட்டிதான் வேணுமாம். சேலரி மட்டும் வஞ்சகமே இல்லாமல் கொடுப்பாங்க..., வருஷத்துக்கு முப்பது லட்சம்..., எக்ஸ்பீரியன்ஸ் கைக்கு கேக்குறதை கொடுப்பாங்க. என்ன கொடுத்தால் என்ன..., மனுஷனுக்கு வேலை செய்யிற இடத்தில் நிம்மதி வேண்டாம்...

“அதான் சொல்றேன்..., உன் குவாலிபிகேஷன் என்னன்னு முதல்ல சொல்லு, மத்ததை நான் பாத்துக்கறேன்....”, அவனுக்கு அந்த கம்பெனி செட்டே ஆகாது என்ற விதத்தில் சொல்ல,

“ம்..., ஓகே..., நீ கிளம்பு..., இன்னைக்கு வழக்கத்தை விட லேட்டாச்சு...”, வினித் உரைக்க, அலறியடித்துக்கொண்டு கிளம்பினார்கள், கார்த்திக்கும், குமாரும்.

அவர்கள் கிளம்பவே..., இவ்வளவு நாட்களாக தொடாமலே வைத்திருந்த தன் சூட்கேசை முதல் முறையாக கையில் எடுத்தான் வினித் சக்சேனா.

பணத்திலேயே புரளும், பணத்துக்கு மட்டுமே மதிப்பளிக்கும், பணம் மட்டுமே பேசும் ஸ்ரீ ஐஸ்வர்யா தேவியும்..., சென்னையின் ஒரு மூலையில், ஒற்றை அறையில் நண்பனின் தயவில் வாழ்ந்துவரும் வினித் சக்செனாவும் சந்தித்துக் கொண்டால்...?

***

# பகுதி - 2.

காலையில் பத்து மணிக்கே கோபத்தின் உச்சியில் இருந்தாள் ஐஸ்வர்யா. ‘ஒரு கம்பெனியின் எம்டி நானே காலையில் எட்டு முப்பது மணிக்கே வந்திருக்க, எனக்குக் கீழே வேலை பார்க்கும் யாரும் இன்னும் வரவில்லை..., அதெப்படி முடியும்...?’, கண்மண் தெரியாத கோபம்..., அடக்கும் வழியே தெரியாமல் தத்தளித்தாள்.

யூனியன் ஆட்கள் சரியாக ஒன்பது முப்பது மணிக்கு வேலையில் இறங்க, அதுவரைக்கும் காண்ட்ராக்டில் இருந்த பையன்களுக்கு அப்பொழுதுதான் சற்று மூச்சுவிடவே முடிந்தது.

காண்டிராக்ட் பசங்களை விரட்டி வேலை வாங்கியவள், யூனியன் ஆட்களிடம் அதை செய்ய முடியாமல் கையைப் பிசைந்தாள் என்பதுதான் சரியாக இருக்கும். அதென்னவோ எப்பொழுதுமே அவர்களுக்கும், அவளுக்கும் ஏழாம் பொருத்தம்தான்.

எவ்வளவுதான் செய்தாலும் இந்த யூனியன் ஆட்களுக்கு நன்றி விசுவாசம் இல்லையே என்பது அவளது எண்ணம். ஆனால் அவர்களுக்கோ..., கோடி கோடியாக லாபம் கொழிக்கும் முதலாளி, லாபத்தில் கொஞ்சம் தங்களுக்கும் கொடுப்பதில் எதுவும் குறைத்துவிடப் போவதில்லை...

அதேபோல்..., தங்கள் உழைப்புக்கேற்ற ஊதியத்தை மட்டுமே அவர்கள் கொடுக்கிறார்கள்..., தங்கள் உழைப்பை அவர்கள் சுரண்டக் கூடாது என்பதும் அவர்கள் எண்ணமாக இருந்தது.

‘இந்த சூப்ரவைசரும்..., மேனேஜரும் எங்க போய் தொலைஞ்சானுங்க...?’, யூனியன் ஆட்களின் மெத்தனமான வேலை அவளை கொந்தளிக்கச் செய்துகொண்டிருந்தது.

நேரம் சரியாக பத்தை நெருங்க, சூப்ரவைசர் குமாரும், மேனேஜர் கார்த்திக்கும் அரக்கப்பரக்க அலுவலகத்துக்குள் நுழைந்தார்கள்.

“ஐயோ சார்…, இந்தம்மா இங்க இன்னா பண்ணுது…? நாம தீந்தோம்…”, அலறலோடு உள் நுழைந்தான்.

அவனுக்குக் குறையாத மன பயத்தில் இருந்தாலும் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல், “ஏண்டா…, இந்தம்மா இன்னைக்கு லாரியை அன்லோட் பண்ணணும்னு சொல்லுச்சா என்ன…?”, இதழ் பிரியாமல் கேட்டான்.

“இந்த கம்பெனிக்கு நீ மேனேஜரா இல்ல நானா…? என்கிட்டேயே கேக்க…?”.

‘ஆமா…, பொல்லாத மேனேஜர்…, இங்கே நீயும் நானும் ஒண்ணுதான்’, மனதுக்குள் நினைத்ததை வெளியே சொல்லாமல்,

“இந்த வெளக்கமாறெல்லாம் நல்லாத்தான் பேசுற. லோட் வந்தது உனக்குத் தெரியுமா…? செக்கியூரிட்டி உனக்கு கால் பண்ணல…?”, நடையை விரைவுபடுத்தியவாறே கேட்டான்.

“போ சார்.., அவன் சொல்லியிருந்தால் உன்கையில் சொல்லாம இருப்பேனா…? இந்தம்மா மனசுக்குள் நினைக்கதை எல்லாம் நாம எப்படி செய்ய முடியும்…?”, புலம்பியவாறே பையோமேட்ரிக் மெஷினில் விரலைப் பதித்துவிட்டு,

“சார்…, நான் மொதோ போறேன்…, நீ பின்னாடியே வா…”, கார்த்திக்கிடம் உரைத்துவிட்டு, பீதியோடே லாரியை நெருங்கினான்.

“குட் மோர்னிங் மேம்…”, குமார் வேகமாக ஒரு வணக்கத்தை வைக்க, ஐஸ்வர்யாவின் பார்வை இன்று உனக்கு பேட் மானிங் தான் என சொல்லாமல் சொன்னது.

ஏற்கனவே அவர்கள்மேல் கொலைவெறியில் இருந்தவள், குமாரைப் பார்க்கவும் அது உச்சத்தில் நின்று ஆட்ட…,

“இந்த மாசம் சேலரி வந்துதா…?”, எதற்கு இந்த கேள்வியை கேட்கிறாள் என்பது புரியாமல், “வந்துச்சு மேம்…”, பதில் சொல்லாமல் இருந்தால் அதற்கும் வாங்கிக் கட்டவேண்டி

இருக்குமே என்ற நினைப்பில், வேகமாக பதில் உரைத்தான்.

“இங்கே நீ சூப்ரவைசரா இல்ல நானா...?”, இந்த கேள்வியில் சட்டென அவன் தொண்டை உலர்ந்து போனது.

அவன் பதில் சொல்ல தாமதமாகவே..., “கேட்டது காதில் விழல...”, அவள் குரல் உயர்த்தவும், கார்த்திக் அங்கே வருவதற்கும் சரியாக இருந்தது.

“அது..., வந்து மேம்...”, குமார் திணற, அவனைக் கண்டுகொள்ளாமல், கார்த்திக்கின் பக்கம் திரும்பியவள்,

“ஓஹோ..., மேனேஜர் சாரும் இப்போதான் வரீங்களா...? உங்க வேலையெல்லாம் நானே செய்யிறதா இருந்தால், உங்களுக்கெல்லாம் சம்பளம் தண்டத்துக்கு கொடுக்கறேனா...?”, அவள் கூச்சலில், அன்லோட் செய்துகொண்டிருந்தவர்கள் ஒரு நிமிடம் வேலையை நிறுத்திவிட்டார்கள்.

சுற்றுபுறம் ஒரு நிமிடம் உறைந்ததாகத் தோன்றவே..., “வாட்...?”, அவள் கேள்வியில்..., மீண்டும் வேலை நடக்கத் துவங்கியது.

கார்த்திக்கிற்கு சற்று அவமானமாக இருந்தது. ‘அங்கே வேலை செய்யும் ஆட்களுக்கும், தனக்கும் வித்தியாசம் இல்லாமல் போனது போன்ற பிரம்மை. ‘நான் இங்கே மேனேஜரா இல்ல இவ வீட்டு வேலைக்காரனா...?’, மனம் பொரும,

‘லோட் இறக்கவேண்டும் என்று எப்பொழுது சொன்னாய்...? லோட் எப்பொழுது வந்தது என்று எனக்குத் தெரியுமா...?’, நுனிநாக்கு வரை வந்த கேள்வியை அடக்குவது கார்த்திக்கிற்கு மிகுந்த சிரமமாகவே இருந்தது.

இந்த கேள்வியை அவளிடம் அவ்வளவு சுலபமாக கேட்டுவிட முடியாது என்பது அவனுக்குத் தெரியும். ‘இந்த வேலையே வேண்டாம்...’ என தூக்கிப் போட்டுவிட்டுச் செல்ல அவனுக்கு ஒரு நிமிடம் கூட ஆகாது.

ஆனால்...., மாதம் பிறந்தால் கைநீட்டி வாங்கும் அரை லட்சம் சம்பளம் அவனை வாய்மூடி இருக்கச் சொன்னது. இருபதெட்டு வயதில், அரை லட்சம் என்பது அவனைப் பொறுத்தவரைக்கும் அதிகத் தொகைதான்.

இவனது இந்த சம்பளத்தை நம்பி..., ஒரு நல்ல இடத்தில், தங்கள் சக்தியையும் மீறி தன் முதல் தங்கைக்கு வரன் பார்த்திருக்கும் இந்த நேரத்தில், சட்டென வேலையை விட்டுவிடவோ, அதைப்பற்றி நினைக்கவோ முடியாது.

தன் கோபத்தை அடக்கியவன்..., “மேம்..., இதோ இன்னும் ஒருமணி நேரத்தில் முடிச்சுடறேன்..., அடுத்த அரைமணி நேரத்தில் ரிபோர்ட் உங்க டேபிள்மேல் இருக்கும்...”, அவள் கோபத்தை கண்டுகொள்ளாமல், அவன் பதிலுரைக்க,

“உனக்கு வேறே சாய்ஸ் இருக்குன்னு நினைக்கறியா...?”, அவள் கேள்வியில், அப்படியே ரிசைன் லெட்டரை அவள் முகத்தில் விட்டெறிந்தால் என்ன என்ற ஆத்திரம் அவனுக்கு எழுந்ததை, முயன்று கட்டுபடுத்திக் கொண்டான்.

“நீங்க போங்க மேம்..., நான் நிக்கறேன்..., நின்னு வேலையை முடிச்சுட்டு சீட்டுக்குப் போறேன்...”, அப்பொழுதும் தன்மையாகவே உரைத்தான்.

“நின்னு முடிக்கற..., அவ்வளவு தான்...”, கட்டளையாகவே உரைத்துவிட்டு, விருட்டென அங்கிருந்து நகர்ந்து சென்றாள்.

மழையடித்து ஓய்ந்ததுபோல் இருந்தது. “ஏய்..., இன்ன வேடிக்கை.., சீக்கிரம் வேலையாவட்டும்...”, குமார் விரட்ட, வேலை ஜரூராக நடக்கத் துவங்கியது.

கார்த்திக்கும் அங்கேயே நிற்க, “சார்..., நீ இன்னாத்துக்கு இங்கன தேவுடு காக்க..., எல்லாம் நான் பாத்துக்கறேன்..., நீ ரூமுக்கு போசார்...”, எப்பொழுதும் ஏசி அறையிலேயே இருப்பவன், இன்று வெயிலில் நிற்பதைப் பார்த்து அக்கறையாக உரைத்தான்.

“அடப்போடா..., நமக்கென்ன வெயில் புதுசா...? முதல்ல வேலையாவட்டும், நீ அதைப் பார்...”, சற்று கோபமும், எரிச்சலும் கலந்து உரைக்க, அவனிடம் வாதாடாமல் அங்கிருந்து கிளம்பிவிட்டான்.

இங்கே வேலை நடக்க..., தன் அறையில் சுழல் நாற்காலியில் அமர்ந்த ஐஸ்வர்யா..., இதுவரை நின்ற களைப்பு நீங்க, தன் மேஜைமேல் தயாராக வைத்த, குளிர்ந்த நீரை ஒரே மூச்சில் குடித்து முடித்தாள்.

ஒரு பேச்சுக்காக கூட, அதை தனக்குக் கொடுத்த சந்தியாவுக்கு ஒரு நன்றியை அவள் உரைக்கவில்லை. அதை ஒரு வேதனையோடு பார்த்துக் கொண்டிருந்தார் ஸ்ரீராம்.

“இதென்ன பிடிவாதம் தேவி..., அவங்க வேலையை அவங்க பாத்துக்க மாட்டாங்களா...? தேவையில்லாமல்...”, நீயும் டென்ஷன் ஆகி, மற்றவரையும் டென்ஷன் பண்ணுகிறாயே...’, என அவர் உரைக்க வந்த வார்த்தைகள் பாதியிலேயே நின்று போனது.

“சந்தியா..., இன்னைக்கு என்னோட ப்ரோக்ராம்...”, தந்தையின் பேச்சை கண்டுகொள்ளாமல் தன் பியேவிடம் கேட்க,

“மேம்..., இன்னைக்கு விபி இன்டர்வியூ பதினோரு மணிக்கு இருக்கு. அதுக்குப் பிறகு, ஆப்பரேஷன் டீமோட ஒரு மீட்டிங் இருக்கு..., அப்படியே சேல்ஸ் மேனேஜர் கான்பிரன்ஸ் கால் இருக்கு...”, அவள் ஒவ்வொன்றாக பட்டியலிட, அவற்றை கவனிக்கிறாளா..., இல்லையா என்ற பாவனையில் கேட்டுக் கொண்டாள்.

தன் எதிரில் சுவரில் இருந்த கடிகாரத்தில் நேரம் பார்க்க, அது சரியாக பத்து முப்பதை காட்ட, “இண்டர்வியூவுக்கு எத்தனை கேண்டிடேட் வந்திருக்காங்க...?”, இருக்கையில் இன்னும் நன்றாக சாய்ந்துகொண்டு அவள் அலட்சியமாக கேட்க,

“மூணு கேண்டிடேட் வந்திருக்காங்க மேம். எல்லோரையும் கான்பிரன்ஸ் ரூமில் உக்கார வைத்திருக்கேன். நீங்க எப்போ வரச் சொல்றீங்களோ..., அப்போ வரச் சொல்றேன்...”, மென்மையாக பதில் கொடுத்தாள்.

“ஷார்ப் லெவன்க்கு பஸ்ட் கேண்டிடேட்டை அனுப்பு..., இப்போ அவங்க ஃபயில்...”, அவள் கை நீட்ட, தன் கையில் இருந்த ஃபயிலை அவள் கையில் கொடுத்தாள் சந்தியா.

அதில் மேலோட்டமாக பார்வையை செலுத்தியவள்..., “வேல்முருகன், வினோத், வினித்...”, வாய்விட்டே பெயர்களை உச்சரித்தவள், “எவனாவது ஒருத்தனாவது தேறுவானா...?”, தனக்குத் தானே கேட்டுக் கொண்டாளா? அல்லது தன்னிடம்தான் கேட்டாளா என்பது புரியாமல் சற்று திணறிப் போனாள் சந்தியா.

இதற்கு தான் பதில் சொன்னால்..., உன்னிடம் கேட்டேனா...? என எகிறவும் செய்யலாம்..., உனக்கென்ன காது செவிடா என கடிக்கவும் செய்யலாம் எனப் புரிந்தவளாக, மையமாக தலையசைத்து வைக்க, “சரி நீ போ..., நான் பெல் அடித்த பிறகு அவனுங்களை அனுப்பு...”, ஐஸ்வர்யா உரைக்க, பெரிய விடுதலை உணர்வோடு அங்கிருந்து விரைந்தாள்.

நேராக கான்பிரன்ஸ் அறைக்குச் சென்றவள்..., “ஜெண்டில்மென்..., ப்ளீஸ் சிட் அவுட்சைட்..., உங்க இன்டர்வியூ இப்போ துவங்கிடும்...”, சந்தியா உரைக்க, மூவரும் எழுந்து வெளியே போடப்பட்டிருந்த இருக்கையில் அமர்ந்தார்கள்.

சரியாக பதினோரு மணிக்கு வேல்முருகன் அழைக்கப்பட, இருக்கையில் அமர்ந்திருந்த ஐஸ்வர்யாவைப் பார்த்தவன், ஒரு நொடி திகைத்து, பின்பு இயல்பானான்.

அந்த ஒரு நொடி அவன் பார்வையில் தெரிந்த அதிர்ச்சியும், சட்டென குழைந்து போன அவன் தேகமும், அவள் கேள்விக்கு, ஒரு மாதிரி தலையை ஆட்டி அவன் ஒத்து ஊதுவதுபோல் பதிலளித்த விதமும், ஐஸ்வர்யாவுக்கு

எரிச்சலைக் கிளப்ப, “நான் உன் ஸ்டேன் என்னன்னு கேட்டேன்…”, சற்று எரிச்சல் கூட்டி கிட்டத்தட்ட கத்தினாள்.

“நீங்க என்ன சொல்றீங்களோ அதுதான் மேம் என் ஸ்டேன்…”, அவன் பதில் எரியும் கொள்ளியில் எண்ணையை ஊற்ற…, “கெட் அவுட்…”, அவளது சட்டென்ற பதில், அவனை வாயடைக்கச் செய்தது.

“மேம்…”, அவன் திணற…, “உன்னை போன்னு சொன்னேன்…”, இளக்கமே இல்லாமல் அவள் உரைக்க, சட்டென அங்கிருந்து வெளியேறினான்.

“என்ன ஜென்மம் இவ…”, வெளியேறியவன் வாய்க்கு வந்தபடி பேசிச் செல்ல, அங்கிருந்த மற்ற இருவரும் ஒருவர் மற்றவரை பார்த்துக் கொண்டார்கள்.

“வினோத்…, நீங்க போகலாம்…”, சந்தியா உரைக்க, ஒரு சிறு தயக்கத்தோடு எழுந்து சென்றான்.

அவனும் அவளைப் பார்த்து வேல்முருகனைபோல் திகைத்தவன், அடுத்த நொடி…, அவளைவிட அதிகமாக தெனாவெட்டை வருவித்துக் கொண்டு எதிர் இருக்கையில் அமர்ந்தான்.

“இந்த கம்பெனியைப் பத்தி கொஞ்சம் சொல்லு…”, அவள் குரலா, பாவனையா…, தெனாவெட்டா…, அவள் ஒருமை அழைப்பா…, எதோ ஒன்று அவனுக்கு எரிச்சல் மூட்ட,

“ஏன்…, உங்க கம்பெனியை பத்தி உங்களுக்கே தெரியாதா…?”, முன்கோபியான அவன் பட்டென கேட்டுவிட்டான்.

“ஹலோ…, இங்கே இன்டர்வியூக்கு தானே வந்திருக்க…?”, அவள் குரல் உயர்த்த…

“நான் இன்டர்வியூக்கு தான் வந்திருக்கேன்…, இங்கே அதுதான் நடக்குதா…?”, அவன் திருப்பி கேள்வி கேட்க,

“ஜஸ்ட் கெட் அவுட்…”, அவள் கடித்த பற்களுக்கிடையில் வார்த்தைகளை துப்ப…, “என் பிரண்ட் அப்போவே

சொன்னான்..., பணத்துக்கு ஆசைப்பட்டு போகாதடா..., அங்கே மதிப்பே இருக்காதுன்னு..., அது சரியாத்தான் இருக்கு...”, உரைத்தவன், இருக்கையை பின்னுக்கு தள்ளிவிட்டு கிளம்பிவிட்டான்.

வெளியே வந்தவன்..., வினித்தைப் பார்த்து..., “பாஸ்..., இது வேலைக்காகாது..., ஒரு விபி இன்டர்வியூன்னா எத்தனை ரவுண்ட் இருக்கும்னு தெரியுமா...? என்ன லெவல்ல இருக்கும்னு தெரியுமா...? நான் அப்போவே நினைத்தேன்..., என்னடா..., விபி இன்டர்வியூவையே ஓபனா பண்றாங்கன்னா அது எப்படிப்பட்ட கம்பெனியா இருக்கும்னு.

“இங்கே வந்தபிறகு தானே விஷயமே தெரியுது..., இது அல்லிராணி கோட்டைன்னு..., கிளம்புங்க பாஸ்...”, அவனிடம் சொல்லிவிட்டு, தன் கோட்டை கழட்டி கையில் வைத்துகொண்டு கிளம்பிவிட்டான்.

சென்ற இருவருமே இந்த கம்பெனியைப் பற்றியும், அவளைப் பற்றியும் நன்கு தெரிந்துகொண்டுதான் வந்தார்கள். ஆனால்..., அவளை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்ற தெளிவில்லாமல் போகவே, தோல்வியில் திரும்பினார்கள்.

வினித்தோ..., தான் கொண்டு வந்திருந்த மடிக் கணினியில் பார்வையை திருப்பியவன், அதை ஸ்லீப்மோடுக்கு மாற்றிவிட்டு காத்திருக்க, அடுத்ததாக அவனை அழைப்பதாகச் சொல்லவே, இதழில் உறைந்த செயற்கை புன்னகையோடு அவள் அறைக்குள் அடியெடுத்து வைத்தான்.

“குட் மோர்னிங் மேம்...”, அவளது ஆணவமான இருப்பை கண்டுகொள்ளாமல் அவன் உரைக்க, தன் விழிகளை கூர்மையாக்கி அவனை வெறித்தாள்.

தன்னைப் பார்த்தவுடன் மற்ற ஆண்களிடம் ஏற்பட்ட சிறு அதிர்ச்சியும், திகைப்பும் இல்லாததை மனதுக்குள் குறித்துக் கொண்டாள். அதே நேரம், குழைவோ,

விறைப்போ எதுவும் இல்லாமல், அவன் இயல்பை மாற்றாமல், அதே நிமிர்வு, நேர்கொண்ட பார்வை, தன் நிலையில் கிஞ்சித்தும் மாறாத அவன் தன்மையையும் கண்டுகொண்டாள்.

இதுவரை அவள் பார்த்த, சந்தித்த ஆண்கள் அனைவருமே, ஒரு பெண் நேர்கொண்ட பார்வையாக, அவர்கள் கண்களை சந்தித்து பேசினால், அவர்களை அறியாமலேயே ஒரு தயக்கம் அவர்களிடம் வந்து ஒட்டிக் கொள்வதை கண்டிருக்கிறாள்.

ஆனால்..., இவனோ..., எதிரில் இருப்பவள் ஒரு பெண் என்ற நினைப்பே இல்லாமல், கம்பீரம் குறையாமல் நின்ற தோற்றம், அவள் வழக்கத்தை மீறி, அவள் விழிகள், சில வினாடிகள் அவனை அளவிட்டது. அதை அவள் உணர்ந்ததை விட, அவள் தந்தை கச்சிதமாக உணர்ந்தார் என்பதுதான் உண்மை.

அவன் பார்வையோ..., அவளைக் கண்டு அதிர்ந்ததை விட, அவள் அருகில் அமர்ந்திருந்த ஸ்ரீராமைப் பார்த்துதான் ஒரு நொடி திகைத்து, அவர் கண்களில் தெரிந்த எச்சரிக்கை உணர்வில் சட்டென தெளிந்து, இயல்புக்குத் திரும்பியது.

‘வாடா என் இளம் சிங்கமே..., ஆண்மகனே...’, ஸ்ரீராமின் மனம் அவனை ஆர்ப்பாட்டமாக வரவேற்றது.

அனைத்தையும் ஒற்றை நோட்டத்தில் கண்டுகொள்ளும் ஐஸ்வர்யாவின் விழிகள் கூட, அந்த நொடிக்கும் குறைவான அவகாசத்தில் அவன் விழிகளில் வந்துபோன திகைப்பை கண்டுகொள்ள முடியவில்லை.

அவள் தலையசைத்து இருக்கையை காட்ட, “தேங்க்ஸ்...”, ஒரு நன்றியோடு அதில் அமர்ந்தான்.

“அதென்ன.., நீ வேலை பார்த்த எந்த கம்பெனியிலும், ஆறு மாதங்களுக்கு மேல் இருக்கவில்லை....? நீயே வேலையை விட்டாயா...? இல்லையென்றால்....”, அவள் இழுக்க, அவளது கண்களோ..., என்ன சொல்லப் போகிறாய் என அலட்சியமாக வெறித்தது.

அவளது ஒருமை அழைப்பு அவனுக்கு எட்டினாலும், அதை அப்படி ஒன்றும் பெரிதாக அவன் எடுத்துக் கொள்ளவில்லை. எந்த ஆண்மகனையும் அவள் மரியாதை தன்மையில் அழைப்பதில்லை என கார்த்திக் மூலம் அவன் அறிந்த விஷயம், அவனை மாற்றியிருந்ததோ என்னவோ....

அதைவிட..., பெண்கள் ஆண்களை மரியாதையாகத்தான் அழைக்க வேண்டும் என்ற சம்ப்ரதாய எண்ணங்களையும் அவன் வைத்திருக்கவில்லை. எனவே அவளது அழைப்பை வெகு சாதாரணமாகவே எடுத்துக் கொண்டான்.

“என்னுடைய தேவை அந்த கம்பெனிகளுக்கு அவசியமில்லாமல் போகவே, நானே வெளியேறிவிட்டேன்...”, அவன் சாதாரணமாக உரைக்க, முதல் முறையாக அவள் புருவம் மேலேறியது.

“அப்படின்னா...?”, அவள் கேட்க...,

“ஒரு நிமிஷம்....”, தான் அதற்கு முன்பு, அந்த கம்பெனிகளில் செய்த மாற்றங்களை தன் மடிக்கணினியின் உதவி கொண்டு அவன் விளக்க, அவனது ஐடியாக்கள், அடியோடு அந்த கம்பெனியின் கட்டமைப்புக்களையே மாற்றியிருப்பதை நொடியில் உணர்ந்து கொண்டாள்.

“வெல்..., அதெல்லாம் சின்ன கம்பெனிகள்..., ஆனால் இது...? மூன்று தலைமுறைக்கும் மேலாக இருக்கும் நிறுவனம். இங்கே என்ன மாற்றத்தை உன்னால் புகுத்திவிட முடியும்...?”, ‘தான்’ என்ற ஆணவம் அதில் மிளிர்ந்தே காணப்பட்டது.

“அதை நான் இப்பொழுதே சொல்ல முடியாதே. என் ஒவ்வொரு ஐடியாவும் கோடி பெறுமானமுள்ளது. அதை அவ்வளவு ஈஸியா சொல்லிடுவேன்னு நீங்க எப்படி நினைக்கறீங்க...?”, அவன் நிறுத்தி நிதானமாக வினவ, சுர்ரென எழுந்த கோபத்துக்கும் மேலாக..., மனதின்

மூலையில் ஒரு ஆண்மகனை கடுகளவு மதிப்போடு நோக்கியது ஐஸ்வர்யாவின் கண்கள்.

அப்படியே தன் இரு கரங்களையும் சேர்த்து தட்டவேண்டும்போல் இருந்தது ஸ்ரீராமுக்கு.

முயன்று தன்னை கட்டுபடுத்திக் கொண்டவர்..., ஒரு மெச்சுதல் பார்வையை அவன் பக்கம் செலுத்தினார். முதல் முறையாக தன் மகள் ஒரு ஆண்மகன் முன்னால் பேசா மடந்தை ஆகியிருப்பதைப் பார்த்து எல்லையில்லா ஆனந்தம் கொண்டார்.

“அப்போ..., வேலை கொடுத்தால்தான் வாயை திறப்பாயோ...?”.

“நான் இப்போ உங்ககிட்டே பேசிட்டு தானே இருக்கிறேன்...”, அவன் மடக்க,

“என்ன..., வேலை வாங்க இப்படி ஒரு சீப் டெக்னிக்கா...?”, ஒருவேளை கோபப்படுத்தினால் விஷயத்தை கறந்துவிடலாம் என எண்ணினாள் போல.

“நானென்ன பெர்மனன்ட் வேலையா கேட்கிறேன்....? ஆறு மாசம் வாய்ப்புக் கொடுங்க, திருப்தி இல்லையா..., தாராளமா என்னை அனுப்பி விடலாம்..., சாய்ஸ் இஸ் யுவர்ஸ்...”, அவன் அசால்ட்டாக தோளைக் குலுக்க, முதல் முறையாக அவளிடம் தடுமாற்றம்.

இதுவரை அவன் வேலை செய்த கம்பெனிகளில் ஏற்படுத்திய மாற்றம், அது அவர்களுக்கு எவ்வளவு உதவியாக இருக்கும் என்ற கண்கூடான உண்மை..., ‘நீ வெத்து வேட்டு...’, என அவளால் மறுக்க முடியவில்லை. இது அவனது முதல் வெற்றியோ....

எப்படியும் அவனை வெல்ல விடக் கூடாது என்ற முடிவில்..., “அப்படின்னா, இங்கேயும் ஆறுமாதத்துக்கு மேல் தங்க மாட்டாய்....”, அவள் இழுக்க,

“உங்களுக்கு அனுப்ப விருப்பமில்லை என்றால் தாராளமா சொல்லிவிடலாம்....”, இதழ் ஓரம் அரும்பிய மெல்லிய

சிரிப்பில் அவன் உரைக்க, அவனது பதிலடியில் சுறுசுறுவென்று ஏறிய கோபத்தை அடக்குவது அவளுக்கு முடியாத காரியமாகத்தான் இருந்தது.

ஸ்ரீராமின் இதயம் இப்பொழுது முரசு கொட்டத் துவங்கியது. எங்கே இவனையும் வெளியே அனுப்பிவிடுவாளோ..., பயம் கவ்விக் கொண்டது.

மற்ற இருவரையும் கெட் அவுட் சொல்லியதைபோல் சொல்ல முடியாமல், அவன் திறமை அவள் கண்முன் விரிய, தன் நாவை கட்டுபடுத்தியவள், "ஆறுமாத காலம் எல்லாம் என்னால் கொடுக்க முடியாது. ஏனென்றால்..., ஒரே மாதத்தில் போகவேண்டும் என்று நீயே பிரியப்படலாம்...", இதற்குமுன் இருந்த விபிக்களை வைத்து அவள் உரைத்தாள்.

அவளது இந்த பதிலில்தான் அவரால் இயல்பாக மூச்சுவிட முடிந்தது. அதே நேரம்..., இந்த எம்டி இருக்கையில் அமர அவளுக்கு அனைத்து தகுதிகளும் இருக்கிறது என அவரே ஒத்துகொண்ட நிமிடம் அதுவாகத்தான் இருக்கும்.

தன் சொந்த கோபத்தை, கம்பெனியின் வளர்ச்சிக்காக தடுக்கிறாள் என்றால்..., கண்டிப்பாக அவள் திறமைசாலிதானே...,

"ஓ..., வேண்ணா இப்படிப் பண்ணலாம்..., ஆறுமாதம் இருந்தே ஆகணும்னு ஒரு காண்ட்ராக்ட் சைன் பண்ணிடலாம். விஷயம் முடிந்தது...", அவன் இலகுவாக உரைக்க, அதற்கு சம்மதம் சொன்ன பிறகுதான்...., அவனுக்கு தான் வேலை கொடுப்பதாக முதலில் சொல்லவே இல்லையே என்ற உண்மை புலப்பட்டது.

ஆனாலும்..., தன் கெத்தை விட்டுக் கொடுக்காமல்..., "ஒரு மாதத்துக்குள் உன் முதல் ஐடியா இங்கே செயல்படவில்லை என்றால்..., இந்த ஆறுமாத ஒப்பந்தம் செல்லுபடி ஆகாது....", அவள் தன் பிடியை விடாமல் உரைக்க,

"இந்த ஒப்பந்தம் காலாவதி ஆவதே உங்களுக்குத் தெரிய வராது மேடம்...", அவன் பணிவாக உரைப்பதுபோல்

இருந்தாலும், அதில் ஒளிந்திருந்த சவாலை அவள் கண்டுகொண்டாள்.

“பார்க்கலாம்..., ஓவர் கான்பிடன்ஸ் உடம்புக்கு ஆகாது...”, எள்ளலாக உரைக்க,

“நன்றி...”, இரு புருவம் உயர்த்தி அவன் சொன்ன அந்த நன்றி..., அவளை சுழட்டியது மட்டும் உண்மை.

‘என்ன மனிதன் இவன்..?’, இந்த கேள்வியை தன் வாழ்நாள் முழுவதும் தனக்குள் கேட்டுக் கொண்டிருப்போம் என சத்தியமாக அவள் அந்த நிமிடம் எண்ணியிருக்கவே மாட்டாள்.

***

# பகுதி - 3.

சந்தியா தயாரித்துக் கொண்டு வந்த ஒப்பந்த படிவத்தில் அவள் கையெழுத்திடப் போக..., “மேம்..., சேலரி பார்ட் நாம டிஸ்கஸ் பண்ணவே இல்லையே...”, அவன் வேகமாக உரைக்க, கையெழுத்திடச் சென்ற அவள் கரம் அசைய மறுத்து அப்படியே தேங்கியது.

எப்படியாவது அவனை வாயடைக்கச் செய்தே ஆகவேண்டும் என்ற வேகம் கிளம்ப, “மாதம் ஐந்து லட்சம் சம்பளம்....”, அவள் அறிவித்ததில், சந்தியாவின் விழிகள் தெறிக்க, ஸ்ரீராம் கூட திடுக்கிட, அவனோ..., ஒரு சாதாரண தோள் குலுக்கலில், அதை ஏற்றுக் கொண்டான்.

“அதையும் கையோட எழுதிடுங்க...”, அவன் உரைக்க, அப்படியே அந்த பேப்பரை கசக்கி அவன் முகத்தில் விட்டெறியும் வேகம் அவளுக்குள் கிளர்ந்து எழுந்தது.

அவனிடம் பெரிய வியப்பையும், தடுமாற்றத்தையும், ஆச்சரியத்தையும், நன்றியையும் அவள் எதிர்பார்க்க, ‘அப்படியா..., சந்தோசம்....’, என்ற பாவனையைக் கூட வெளிப்படுத்தாத அவன் நிலை..., அவளது பிபியை எகிற வைத்தது மட்டும் உண்மை.

“ஒரு மாதம் இந்த தொகையை செலவழிப்பது ஒன்றும் எனக்கு அவ்வளவு பெரிய சிரமம் இல்லை...”, என் தகுதியை பார்த்தாயா என்ற பாவனையில் அவள் உரைக்க,

“இது தேவையில்லாத செலவு என்று நீங்கள் கருதுவதாக இருந்தால்...”, சற்று இடைவெளி விட்டவன், “இந்த ஒப்பந்தத்தை அப்படியே நிறுத்திவிடலாம்....”, எனக்கு ஒன்றும் அது அவ்வளவு பெரிய தொகை இல்லை, என்ற அவனது அலட்சியம்..., அவனை மிஞ்ச வேண்டும் என்ற வேகத்தை அவளுக்குக் கொடுத்தது.

“குட் ப்ளே...”, விழிகளை அவன்மீது பதித்தவாறு அவள் கையெழுத்திட, மனமோ..., ‘என்னிடம் கைநீட்டி சம்பளம்

வாங்க வந்தவனுக்கு இவ்வளவு திமிரா...?’, அவனது தன்மானம் அவளுக்குத் திமிராகத் தெரிந்தது.

அவள் பேச்சில், எங்கே அவன் கோபம் கொள்வானோ என ஸ்ரீராமும், சந்தியாவும் பதட்டமடைய, அவன் கூலாகவே இருப்பதைப் பார்த்து திகைத்தார்கள்.

“சந்தியா...”, இமைக்காமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்த அவளை ஐஸ்வர்யாவின் குரல் கலைக்க, “மேம்...”, “இதை ஒரு கவர்ல போட்டு எடுத்துட்டு வா...”, அவளை அனுப்பியவள்,

“நாளைக்கு காலையில் உன்னை நான் இங்கே எதிர்பார்க்கிறேன்...”, என் பேச்சு முடிந்தது என மடிக்கணியில் தன் பார்வையை திருப்பிக் கொண்டாள்.

“தேங்க்ஸ் மேம்...”, அவனது நன்றியிலும், அழைப்பிலும் கண்டிப்பாக மரியாதையும், நன்றியும் கொட்டிகிடக்கவில்லை என்பதை உணர்ந்தவளுக்கு, மனதுக்குள் பல்லை மட்டுமே கடிக்க முடிந்தது.

இருக்கையில் இருந்து எழுந்தவன், “தேங்கக்யூ சார்...”, ஸ்ரீராமின் பக்கம் கையை நீட்ட, தன்னை அறியாமலேயே இருக்கையில் இருந்து எழுந்தவர், “கங்கிராட்ஸ்..., வெல்கம்டு அவர் பேமிலி...”, நெஞ்சார அழைத்தார், வாழ்த்தினார்.

ஐஸ்வர்யா கணினியில் இருந்து முகத்தை திருப்பி அவரை ஏறிட..., வினித்தோ..., இரு புருவம் சுருக்கி, தலையை லேசாக சரித்து..., ‘என்ன...?’, என்ற பாவனையில் கேட்க,

“நாம வேலை செய்யும் இடமும் ஒரு குடும்பம் போலத்தானே..., அதைத்தான் சொன்னேன்...”, அவர் குரலில் பிசிறே இல்லாமல் உரைக்க, “தேங்க்ஸ் அகேயின்...”, வினித் மகிழ்ந்த அளவு ஐஸ்வர்யா மகிழவில்லை.

அவன் தன் கணினியை எடுத்துக் கொண்டு கிளம்ப, “டேட்...”, அவள் புரியாமல் அழைக்க,

“நீ செய்யிறது நல்லாவே இல்லை தேவி..., அவன் உன்னைவிட ஐந்து வயது பெரியவன். அவன் வயதுக்கு இல்லை என்றாலும், அவன் வேலைக்காவது நீ மதிப்புக் கொடுக்க வேண்டாமா...?”, முதல் முறையாக அவளை கடிந்துகொண்டார்.

“இதென்ன புதுசா...?”, ‘உங்களைத் தவிர வேற யாரையாவது நான் மதிப்பாக பேசி இருக்கிறேனா?’, என அவள் விழிகள் அவரிடம் கேள்வி கேட்டது.

அதற்குமேல் அவளிடம் வாதாடி எந்த பிரயோஜனமும் இல்லை என்பது புரிந்தவராக, சட்டென அமைதியானார். கண்டிப்பாக அவனிடம் பேசவேண்டும் என்று மனதில் குறித்துக் கொண்டார்.

‘இவ்வளவு நாள் எங்கே போயிருந்தான்? இங்கே எப்படி வந்தான்? இங்கே என்ன செய்கிறான்...? அவன் அதிர்சியடைந்ததைப் பார்த்தால், கண்டிப்பாக நான் இங்கே இருக்கிறேன் என்பது அவனுக்கு தெரிந்திருக்கவில்லை என்றே தோன்றுகிறது...’, மனதுக்குள் கேள்விகள் படையெடுக்க, அமைதியாகவே அமர்ந்துகொண்டார்.

“டேட்..., ஆர் யூ ஒகே...?”, சட்டென அவர் அமைதியாகிவிடவே, அவர் தோள் தொட்டு உலுக்கி, அவரை நடப்புக்குத் திருப்பினாள்.

“ஹான்..., என்ன தேவி...? ஏதாவது கேட்டியா...?”, நினைவை கைவிட்டவராக வினவ, “நத்திங்...”, பேச்சை முடித்துக் கொண்டாள்.

“சரியான திமிர் பிடித்தவன் இல்லை டேட்...”, திடுமென அவள் உரைக்க, சற்று திடுக்கிட்டுத்தான் போனார்.

இதுவரை அவள் எந்த ஆண்மகனைப் பற்றியும் பேசியதே கிடையாது. அவளுக்கு பார்த்த வரங்களைப் பற்றி கூட, அவராகவே கேட்டால்தால் வாயே திறப்பாள்.

அதுவும்..., “ம்ச்..., லீவ் இட்...”, சட்டென ஒதுக்கித் தள்ளும் பேச்சாகத்தான் அது இருக்கும். அதற்க்கு மேலும் அவளை

வற்புறுத்தினால், “ஐ கான்ட் ரிமம்பர் ஹிம் டேட்…”, அவனைத்தான் தன் வருங்கால கணவனாக தந்தை பேசுகிறார்…, என்பவனுக்கே அவள் கொடுக்கும் முக்கியத்துவம் அவ்வளவுதான்.

அப்படியிருக்க, வேலைக்காக வந்த வினித்தைப் பற்றிய அவளது பேச்சு…, அது எதிர்ப்பதமாக இருந்தாலும், ஒரு ஆண்மகனை தன் மகள் நினைவில் நிறுத்துகிறாள் என்பதே அவருக்கு கோடி கிடைத்த மகிழ்ச்சி. அவள் உள்ளக்கடலில் வினித் கல்லெறிந்துவிட்டான் என்பதைக் கண்டுகொண்டவருக்கு அவ்வளவு சந்தோசம்.

ஏற்கனவே ஐஸ்வர்யாவின் இருபத்தைந்தாவது வயதின் துவக்கத்தில் திருமணம் நடைபெறவில்லை என்றால்…, அவளுக்கு திருமணமாகும் சாத்தியக்கூறே இல்லையென அவரது குடும்ப ஜோதிடர் வேறு அவர் வயிற்றில் புளியைக் கரைத்திருக்க, இன்னும் தன் கைவசம் இருக்கும் மூன்றே மாதங்களை எண்ணி தவித்துக் கொண்டிருந்தார்.

ஸ்ரீராம் ஒன்றும் ஜோதிடத்திற்கோ, ஜாதகத்திற்கோ…, பஞ்சாங்கத்திற்கோ அடிமை இல்லைதான்…, ஆனாலும் ஒரு விஷயம் நமக்குத் தெரியாமல் இருக்கும் வரைக்கும்தான் நிம்மதியாக இருக்க முடியும்.

சாகும் நாள் தெரிந்துவிட்டால், வாழும் நாள் நரகமாகிவிடும் என்பதர்க்கேற்ப, மகளது ஜாதக விஷயம் தெரியாமல் போயிருந்தால் கூட நிம்மதியாக இருந்திருப்பார். அது தெரியவந்த அன்றிலிருந்துதான்…, அவரது நிம்மதி மொத்தமாக பறிபோய்விட்டது என்றே சொல்லலாம்.

அதிலும், அவர் தொடர்ச்சியாக மாப்பிள்ளைகளைப் பார்ப்பதும், அவர்களை அவள்முன் நிறுத்துவதும், அவள் கொஞ்சம் கூட அலட்டிக் கொள்ளாமல், அவர்களை தவிர்ப்பதும், அவளது நடவடிக்கைகள் பிடிக்காமல், வந்த வரங்கள் அனைத்தும் போய்விட, கவலை அவரை பிடித்துக் கொண்டது.

சில வரன்கள்..., தங்களிடம் இருக்கும் பணத்துக்காகவாவது திருமணம் செய்ய முன்வர, அவர்கள் பொருளாதார நிலை தங்களுக்கு சற்று கீழாக, அவர்களை அவள் நடத்திய விதம் மிகவும் மோசமாக இருக்க, அவரால் கையைப் பிசைய முடிந்ததே தவிர வேறு எதுவும் செய்ய முடியவில்லை.

அப்படி இருக்கையில்..., முதல் முறையாக ஒரு ஆண்மகனைப் பற்றி அவளது வார்த்தைகளைக் கேட்டு அவர் மகிழாமல் இருந்தால் தான் ஆச்சரியம்.

சந்தியாவிடமிருந்து தனது கடிதத்தை பெற்றுக் கொண்டவன், "யூ ஆர் கிரேட்...", சட்டென அவனிடமிருந்து உதிர்த்த வார்த்தைகளுக்கான காரணம் புரியாமல் அவள் அவனைப் பார்க்க,

"வெற்றிகரமா மேடம்க்கு பிஏவா ரெண்டு வருஷத்தை கடந்திருக்கீங்களே அதுக்குச் சொன்னேன்...", அவன் விளக்கத்தில், அவள் முகத்தில் மெல்லிய புன்னகையும், சிறு திகைப்பும் எட்டிப் பார்த்தது.

"ஆல் தி பெஸ்ட் சார்...", அவள் வாழ்த்த,

"ஜஸ்ட் கால் மீ வினித்..., நோ பார்மாலிட்டீஸ்..., ப்ரண்ட்ஸ்...", அவன் கை நீட்ட, அவள் திகைப்பு பன்மடங்கு அதிகரித்தது.

"அட..., என்னங்க நீங்க..., ப்ரண்ட்ஸ்ன்னு தானே சொன்னேன்..., என்னமோ ஐ லவ் யூ சொன்ன மாதிரி இப்படி ஒரு ரியாக்ஷன்...", அவன் நீட்டிய கையை மடக்காமல் சீண்ட..., அவனை சந்தேகமாக ஒரு பார்வை பார்த்தாள்.

"ஹம்..., நீங்க என்னை நம்பலை..., சரி விடுங்க..., ஒரு வாரம் பழகின பிறகு என்னை கண்டிப்பா நீங்க ப்ரண்டா ஏத்துப்பீங்க எனக்கு அந்த நம்பிக்கை இருக்கு. சரி..., கார்த்திக் எங்கே இருப்பான்னாவது எனக்குச் சொல்ல முடியுமா...?", முகத்தை சீரியசாக வைத்துக் கொண்டு அவன் கேட்டாலும், அவள் முகத்தில் விரிந்த பிரகாசத்தை கண்டுகொண்டவன், அதே நிலையில் நின்றான்.

“கார்த்திக்..., உங்களுக்கு அவரைத் தெரியுமா...?”, அவள் குரலில் ஒரு பரபரப்பு.

“ஏங்க..., அவன் என்ன சித்திரக் குள்ளனா..., கண்ணுக்குத் தெரியாமல் இருக்க...?”, அவன் கேலியில் இறங்க, கார்த்திக்கிற்கு தெரிந்தவன் என அறிந்தவுடன், அவன்மேல் எழுந்த சந்தேகம் மறைய, வாய்விட்டே சிரித்தாள்.

அத்தோடு..., “ஐ’ம் சந்தியா..., ப்ரண்ட்ஸ்...”, இப்பொழுது அவள் கை நீட்ட, “இந்த கார்த்திக் பயலுக்கு இப்படி ஒரு மதிப்பா..., நம்பவே முடியலை..., எனிவே..., ப்ரண்ட்ஸ்...”, இருவரும் கரம் குலுக்கிக் கொண்டார்கள்.

“நான் கேட்டதுக்கு நீங்க இன்னும் பதிலே சொல்லலையே சந்தியா...?”.

“கார்த்திக் இப்போ லெப்ட் சைட் இருக்கும் இடத்தில் அன்லோட் பண்ணும் இடத்தில் இருப்பார்..., இல்ல..., அது முடிந்திருக்கும், அவரோட கேபின்ல இருக்கலாம்...”, நேரத்தை பார்த்துவிட்டு அவள் உரைக்க,

“அவனோட கேபின்...”,

“நேரா போய்.., லெப்ட் திரும்பி..., வராண்டாவின் எண்டில் அவர் ரூம் இருக்கும்...”, அவள் வழிகாட்ட, ஒரு நன்றியோடு அங்கிருந்து கிளம்ப முயன்றான்.

சட்டென நினைவிற்கு வந்தவனாக..., “சந்தியா ஒரு சின்ன சந்தேகம்...”.

“கேளுங்க...”.

“அன்லோட் பண்ணும் இடத்தில் மேனேஜர்க்கு என்ன வேலை...?”, அவன் கேள்வியில் வெளிப்படையாகவே திகைத்தவள், வேகமாக தன் அறை வாயில் மூடியிருக்கிறதா...? ஐஸ்வர்யா அறைக்குச் செல்லும் குறுக்குப் பாதை அடைத்திருக்கிறதா என்பதை பார்வையிட்டவள், நிம்மதியாக மூச்சு விட்டாள்.

“அட…, என்னங்க நான் அவ்வளவு பெரிய கேள்வியா கேட்டேன்…? ஒரு சின்ன கேள்வி…, அதுக்கு ஏன் இவ்வளவு ஆர்ப்பாட்டம்…?”.

“வினித்…, சில விஷயங்களை நாம கேள்வி கேட்கவே முடியாது. சோ…”, ‘கேள்வி கேட்டு என்னை சங்கடப் படுத்தாதே…’, என மெதுவாக அவள் உரைக்க, “ஐ அண்டர்ச்டூட்…”, உரைத்தவன், அங்கிருந்து விடை பெற்றான்.

நண்பனைப் பார்க்கவேண்டும் என்று உள்ளம் விரும்பியது. அவன் கேள்விகளுக்கு எப்படி பதில் சொல்லப் போகிறோம் என்ற தயக்கம் இருந்தாலும், நாளைமுதல் ஒரே அலுவலகத்தில் சந்திக்க நேரும்பொழுது, இன்றைய நிகழ்வை அவனிடம் மறைத்ததுபோல் தோன்றிவிடக் கூடாதே என்ற எண்ணம் எழவே, கால்களை எட்டிப் போட்டான்.

முதல் பாதையைக் கடந்து, ஒர்க்கிங் ஏரியாவைத் தாண்டும் வேளையில், அங்கே வேலை செய்த ஊழியர்களின் செயல்பாடு அவனுக்கு அவ்வளவு திருப்தியை அளிக்கவில்லை.

அது உணவு இடைவேளையாக இருந்தபொழுதும், தாங்கள் வேலை செய்யும் இடத்தில் இருக்கிறோம் என்ற நினைவே இல்லாமல், ஏதோ கல்யாண வீட்டுக்கு வந்துவிட்டு, திருப்தியாக உண்ட பிறகு, கூட்டமாக அமர்ந்து உரையாடுவதைப் போன்று இருந்தது அவர்கள் நடவடிக்கை.

அதைப் பார்த்தவாறே நடந்து, சந்தியா உரைத்த இடத்துக்கு வந்து சேர்ந்தவன், மேனேஜர் என்ற பெயர்ப் பலகையிட்ட கதவுக்கு முன்னால் நின்றவன், ஒற்றை விரலால் கதவைத் தட்டி ஒலி எழுப்பிவிட்டு, கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே செல்ல, அவனை வரவேற்றதோ வெறுமையான அறையே.

‘அட..., இவன் எங்கே போனான்...?’, யோசனையோடு திரும்ப,

“ஹாய் வினித்..., உங்களைப் பிடிக்கத்தான் வேகமா வந்தேன். இப்போ லஞ்ச் டைம்..., கார்த்திக் கேண்டீன் போயிருப்பார். இந்த டோர் வழியா வெளியே போய் ரைட் சைட் பார்த்தால் கேண்டீன் தெரியும்...”, கார்த்திக்கின் அறைக்கு வெளியே இருந்த கதவைக் காட்ட,

“ஓ..., தேங்க்ஸ்..., நீங்களும் லஞ்ச் சாப்பிடத்தான் போறீங்களா? சேர்ந்தே போகலாமா...?”, அவன் இயல்பாக கேட்க, “இல்ல..., நான் லஞ்ச் எடுத்துட்டு வந்துட்டேன்..., யூ கேரிஆன்...”, விலகிச் சென்றாள்.

‘ஹப்பா..., இவனைப் பாக்கதுக்கு எங்கே எல்லாம் அலைய வேண்டியதா இருக்கு. இந்த சென்னை வெயிலுக்கு கோட் வேற....’, எண்ணியவன், தன் ‘கோட்’டை கழட்டி, கையில் போட்டுகொண்டு கேண்டீன் நோக்கி நடந்தான்.

“அட இன்னாசார்..., என்னத்துக்கு இப்போ மூஞ்சிய வலிச்சிகினு உக்காந்திருக்க...? அந்தம்மா என்ன இன்னைக்குதான் உன்ன புதுசா கத்துதா...? பேசாமல் சாப்பிடு சார்...”, குமார் கார்த்திக்கிடம் உரைத்துக் கொண்டிருந்தான் குமார்.

“ம்ச்..., அதுக்கில்லடா..., இது வேற...”, தன் முன்னால் இருந்த தட்டில் இருந்த உணவை அளைந்தான்.

“அத்தானே பாத்தேன்..., அந்தம்மாட்ட கத்து வாங்குறது என்ன நமக்கு புதுசா...? பொறவு எதுக்குசார் இப்படி இருக்க...?”, உணவை வாயில் அடைத்துக்கொண்டு அவன் வினவ, கொலைவெறியில் அவனை முறைத்தான்.

“சொல்லாங்காட்டி போ..., அத்துக்கு இன்னாத்துக்கு இப்படி முறைக்கணும்...?”, வெகு சாதாரணமாக உரைத்தவன் உணவில் கவனமாக,

“ஏண்டா..., உனக்கு கொஞ்சம் கூட கோவமே இல்லையா...?”, திடுமென அவன் கேட்க, வாயில் அடைத்த

உணவோடு குமார் ஏறிட்டான்.

“கோவமா…, இன்னாத்துக்கு…”, ஒரு நொடி யோசித்தவன்…, “அ…, அட…, நம்ம ஆளுங்க வேலை செய்த அழகுக்குத்தான் மூஞ்ச இப்படி வச்சிருந்தியா…? அவனுங்க என்ன புச்சாவா பண்றாங்க…? தினத்துக்கும் இதே கத தானே…, பொறவு என்னத்துக்கு அத்தையே யோசனை பண்ணிக்கிட்டு…, பேசாம சாப்பிடு சார்…”, அரைகுறை சுவையோடு இருந்த உணவை, பசிக்கு புசித்தே உண்டான்.

அதே நேரம்…, குமாரின் செய்கையில் வெறுப்புற்ற கார்த்திக் நிமிர்ந்து பார்க்க, கம்பீர நடையில் வினித் உள்ளே நுழைவதைப் பார்த்தான். அவனுக்கே தன் கண்களை நம்ப முடியாமல், “டேய்…, அது நம்ம வினித்தா…?”, அவனை உலுக்க…,

“வினித் சாரா…, அவரெங்கே…”, துவங்கியவன், “அவரேதான் சார்…, ஆளே அடையாளம் தெரியலை…, தாடியைக் காணோம்…, கையில் கம்பியூட்டர் பொட்டி, ஒரு கையில் கோட்டு…, பூட்சு…, இன்னாசார் நடக்குது இங்க…? நான் கனா காங்கனா என்ன…?”, நம்ப முடியாமல் அவனை இருவரும் பார்க்க,

இவர்களைப் பார்த்த வினித், “ஹாய் கைஸ்…”, கோட்டை தூக்கி தோளில் போட்டவாறு அவர்கள் அருகில் இருந்த இருக்கையில் வந்து அமர்ந்தான்.

“வினித்…, நீ இங்கே…?”, அவன் தோற்றமும், நடையும், பரிமாற்றமும் எதையோ அவனுக்கு உணர்த்த, தான் உணர்ந்ததை நம்ப முடியாமல் திணறினான்.

வினித்தோ…, கொஞ்சம் கூட தடுமாறாமல், தன் கோட்டில் மடித்து வைத்திருந்த அந்த கடிதத்தை கார்த்திக்கிடம் கொடுக்க, புருவங்கள் முடிச்சிட அதை பெற்றுக் கொண்டவனுக்கு, பார்வையை அந்த கடிதத்தில் செலுத்த, அது உரைத்த செய்தியை நம்பவும் முடியவில்லை, நம்பாமல் இருக்கவும் முடியவில்லை.

நண்பனுக்கு வேலை கிடைத்துவிட்டது என்பதில் மட்டற்ற மகிழ்ச்சிதான். ஆனால்..., ஏற்கனவே வினித் நடத்தையில், அவனுக்கு ஏற்பட்டிருந்த சந்தேகம் இப்பொழுது வலுப்பெற..., “அப்படின்னா...?”, கேள்வியாகத் துவங்கியவன், பேச்சை பாதியில் நிறுத்திக் கொண்டான்.

வினித்தை முதல்முறை சந்தித்தபொழுதே..., ‘என்னைப் பற்றி எந்த கேள்வியும் கேட்பதில்லை என்று உறுதி கொடுத்தால் மட்டுமே உன்னோடு வருவேன் என உரைத்தவன் அவன். அப்படியிருக்கையில்..., எந்த விதத்தில் இந்த கேள்வியை அவனிடம் கேட்பது எனத் தெரியாமல் நிறுத்திவிட்டான்.

கார்த்திக் கேட்க வருவது புரிந்தாலும், அதை புரியாதவனாக பாவித்தவன், “அப்படின்னா..., எனக்கு வேலை கிடைச்சுடுச்சுன்னு அர்த்தம்...”, அவன் தட்டில் இருந்த சிப்சை எடுத்து வாயில் போட்டுக் கொண்டான்.

“என்ன...? சார்..., நாங்க ரெண்டுபேரும் அவ்வளவு சொல்லியும்..., ஹும்..., உன் தலையெழுத்து..., நீ இங்கதான் குப்ப கொட்டணும்னு எழுதியிருந்தால் யார் என்ன பண்ண முடியும்? ஆனா கூட..., எனக்கு சந்தோசம் தான்...,

“முன்ன நாங்க ரெண்டுபேர் மட்டும் புலம்புவோம்..., இப்போ நீயும் சேந்துட்ட இல்ல..., இன்னும் கொண்டாட்டம் தான். சரி நீங்க பேசிட்டு வாங்க, நான் அவனுங்களை இப்போவே சூட்டுகோல் போட்டாத்தான்..., அடுத்த அரைமணி நேரத்தில் வேலைய ஆரம்பிப்பானுங்க.

“இன்னைக்கு சரியா டெஸ்பேச் ஆகலன்னா அதுக்கு வேற அந்தம்மா மூஞ்சக் காட்டும்...”, குமார் தன் உணவை முடித்துக் கொண்டு கிளம்பிவிட்டான்.

அவன் சென்ற பிறகு..., “என்ன கார்த்திக்..., எதுவுமே சொல்ல மாட்டேங்குற...?”, வினித் அவனைக் கலைக்க,

“வாழ்த்துக்கள்..., உன்னோட வரவு..., இந்த கம்பெனிக்கு ஒரு நல்வரவா இருக்கட்டும்...”, காலையில் வேண்டாம் என

மறுத்தவன், இப்பொழுது அதைச் செய்யவில்லை என்பதை வினித்தும் கவனித்துக் கொண்டான்.

“ஹம்..., இங்கே நிறைய மாத்தவேண்டி இருக்கும் போல..., எம்டி முதல்..., லேபர் வரை...”, வினித் நிதானமாக உரைக்க, ‘நானும் இங்கே வந்த பொழுது இப்படித்தான் நினைத்தேன்...’, என எண்ணியவாறு கார்த்திக் வினித்தைப் பார்த்து புன்னகைக்க,

“கண்டிப்பா நான் மாத்திடுவேன் கார்த்திக்..., இது என்னோட சேலஞ்ன்னே நீ எடுத்துக்கலாம்...”, தன் விரலில் ஒட்டியிருந்த சிப்சின் எண்ணெயை டிஷ்யூ பேப்பரில் துடைத்தவாறு புன்னகை முகமாக அவன் உரைத்தாலும், அவன் குரலில் ஒலித்த பிடிவாதம்..., கார்த்திக்கை திகைக்க வைத்தது மட்டும் உண்மை.

***

# பகுதி - 4.

மறுநாள் காலையில் வழக்கம்போல் தன் வேலையில் ஈடுபட்டிருந்தவனை, உறக்கம் கலைந்து எழுந்தமர்ந்து மௌனமாக வேடிக்கை பார்த்தான் கார்த்திக்.

எப்பொழுதும் அவனைப் பார்த்தவுடன் எழும் அதே சந்தேகம் இப்பொழுதும் அவனைப் பிடித்து ஆட்ட, அதற்கான விடையை அறிந்துகொள்ள முடியாமல் சற்று திணறவே செய்தான்.

முதல் முறையாக வினித்தை சந்தித்த விதம் அவன் கண்களில் நிழலாடியது. இரண்டு மாதங்களுக்கு முன் ஒரு நாள்..., தன் பெரிய தங்கைக்கு ஒரு வரன் தகைந்து வந்திருப்பதால், அவனை அவசரமாக கிளம்பி வரச் சொல்லவே, விடுமுறை கிடைக்காது என்ற காரணம் காட்டி அதை தட்டிக் கழிக்கவே முயன்றான்.

ஆனால்..., பெற்றவர்கள் வருந்தி அழைக்கவே, வேறு வழியின்றி சனிக்கிழமை மதியம் கிளம்பிச் சென்றுவிட்டு, ஞாயிறு மாலை திரும்பிவிடலாம் என முடிவு செய்தவன் கிளம்பிவிட்டான்.

திருச்சி பஸ்ஸில் ஏறி அமர்ந்தவன், தன் பார்வையை சுழற்ற, அங்கிருந்த நிழற்குடைக்குக் கீழே நின்றிருந்த வினித்தைப் பார்த்தவனுக்கு, அவன் முகத்தில் கவிழ்ந்திருந்த பசியின் தாக்கத்தை நொடியில் உணர்ந்து கொள்ள முடிந்தது.

அதைவிட..., அவனது மரியாதையான தோற்றம்..., கண்டிப்பாக அவன் ஒரு சாதாரண வீட்டுப் பையனாக அவனை நினைக்க முடியவில்லை. அவன் மேனியைத் தழுவியிருந்த அலன்சொலி டிஷர்ட்டும், விலை உயர்ந்த கால் சட்டையும், காலில் இருந்த ஷூவும், அவன் இடக்கையை இறுக்கியிருந்த டைமண்ட் வாச்சும்,

அவன் அருகில் வீற்றிருந்த அமெரிக்கன் டூரிஸ்டர் சூட்க்கேசும், அவன் முக பாவமும், கண்டிப்பாக இதற்குமுன்

பசியையே அறிந்திராதவன் என கட்டியம் கூறியது.

கண்டிப்பாக அவன் இரண்டு நாட்களாவது உணவு உண்டிருக்க மாட்டான் என்பதை அவன் முகத்தை வைத்தே உணர்ந்து கொண்டான். தானும் முதல்முறை சென்னைக்கு வந்தபொழுது பசியின் கொடுமையை உணர்ந்தவனாயிற்றே....,

கார்த்திக்கின் மிகப்பெரிய பலவீனமே..., யார் பசியோடு இருப்பதையும் அவனால் பார்க்க முடியாது. அவனுக்கு வேலை கிடைத்த பிறகு, தினமும் ஒரு பசித்தவருக்காவது உணவு கொடுப்பதை வழக்கமாக கொண்டிருப்பவன் அவன்.

அப்படி இருக்கையில்..., இளைஞன் ஒருவன் பசியில் கசங்கிய முகத்தோடு, என்ன செய்ய என்று தெரியாத திகைப்போடு நிற்பதை அவனால் பார்த்தும் பாராமல் செல்ல முடியவில்லை.

அதைவிட..., பசியில் செத்தாலும் சாவேனே தவிர, யாரிடமும் உதவி என்று ஒரு வார்த்தை கேட்க மாட்டேன் என அவன் முகத்தில் தெரிந்த பிடிவாதத்தை அவனால் படிக்க முடிந்தது. இப்பொழுது தான் உணவு வாங்கிக் கொடுத்தால் கூட அவன் பெற்றுக் கொள்வான் என அவனால் நம்ப முடியவில்லை.

உண்ணாவிரதமிருந்து தன்னை மாய்த்துக் கொள்வதுதான் அவன் எண்ணம் என்பதை அவன் முகத்தைப் பார்த்தே அனுமானித்தவனுக்கு, ஊருக்கு போகவேண்டிய வேலை இருப்பதால், அவனை மேலே கவனிக்கவும் முடியாமல் திணறினான்.

அதே நேரம்..., உணவு கூடையை சுமந்தவாறு ஒரு சிறுவன் வியாபாரத்துக்கு வர, அவனிடம் இரண்டு உணவுப் பொட்டலங்களை வாங்கியவன், “தம்பி..., இந்த சாப்பாட்டை அதோ..., அங்கே நிக்கும் அண்ணாகிட்டே நான் கொடுத்தேன்னு சொல்லி கொடுக்கறியா...?

“அவங்க வேண்டாம்னு சொன்னாலும் கேக்கக் கூடாது....”, உரைத்தவன்..., அவன் சொன்ன பணத்தை விட அதிகமாக இருபது ரூபாயை அவன் பையில் திணிக்க, சந்தோஷமாகவே இறங்கிச் சென்றான் சிறுவன்.

சரியாக அதே நேரம்..., வயிற்றைக் கிள்ளும் பசியில் உள்ளுக்குள் துடித்துக் கொண்டிருந்தான் வினித். இரண்டு நாட்களாக சென்னையின் சாலைகளை சுற்றிய களைப்பும், மனச் சோர்வும் அவனை துவளச் செய்தது.

ஆனாலும்..., வேலை தேடவோ..., கிடைத்த வேலையைச் செய்யவோ..., கையில் இருக்கும் பொருளை வித்தோ..., தன் உயிரை காத்துக்கொள்ள அவன் விரும்பவில்லை.

‘எதற்காக வாழவேண்டும்...?’, இந்த கேள்வியே அவனை ஆக்கிரமித்தாலும்,

“இந்த உலகத்தில் உனக்கென ஒரு திட்டம் இல்லாமல் எதுவும் இல்லை தம்பி. அந்த கடவுள் உன்னை சும்மா படைத்திருக்க மாட்டார். உனக்கான பணியை செய்து முடிக்காமல், தற்கொலை செய்துகொள்ள நினைப்பது கோழைத்தனம்.

“சாக தைரியம் கொண்ட நீ..., ஏன் வாழ அந்த தைரியத்தை உபயோகிக்க கூடாது. சரியாக ஏழு நாள்..., உன் சாகும் எண்ணத்தை தள்ளிப்போடு, அதற்குமுன் உனக்கு ஒரு வழி பிறக்கவில்லை என்றால்..., உன் வழியை நீ செயல்படுத்து....”, அவர் உரைக்க,

“நான் இதற்குமேல் ஒரு துரும்பைக் கூட அசைக்க தயாராக இல்லை...”, அவன் பிடிவாதம் குறையாமல் உரைக்க,

“நீ எதுவும் செய்ய வேண்டாம்..., ஆனால் தானாக வரும் உதவியை மட்டும் மறுக்காதே..”, ஒரு பெரியவரின் கனிவான குரல் மட்டுமே அவன் செவிகளை நிறைக்க, பிடிவாதமாக அமர்ந்திருந்தான்.

‘ஹம்..., இங்கே கேக்குறவனுக்கே உதவி கிடைக்காது..., இதில் தானாக உதவி...’, இகழ்ச்சியாக மனதுக்குள்

எண்ணிக் கொண்டான்.

அவனுக்கு நிச்சயம் தெரியும்..., தன்னிடம் தற்பொழுது இருக்கும் பொருட்டளை விற்றாலே..., பல மாதங்களுக்கு தன்னால் ஒரு வசதியான வாழ்க்கை வாழ முடியும்.

ஆனாலும் ஒரு பிடிவாதம்..., 'அந்த கடவுள் அப்படி என்ன திட்டத்தை வைத்திருக்கிறான்..., அதையும் பார்த்துவிடுவோம்...', வீம்பு..., உயிரை உருக்கும் பசியையும் அசையாமல் தாங்கிக் கொண்டான்.

மனதின் ஓரம் ஒரு சிறு கோபம் கூட எழுந்தது. 'எல்லாம் அந்த பெரியவரால் வந்தது. என்றைக்கோ அனைத்திற்கும் ஒரு முடிவு கட்டியிருப்பேன்...', மனம் ஆற்றாமையாக நினைத்துக் கொண்டது.

'இதற்குமேல் எதுவும் இல்லை. இன்னும் ஒரு நாள் போனால் கூட, தான் மயக்கமடைந்து விழுந்துவிடுவோம் என்பதை அவன் உணர்ந்தே இருந்தான். அதற்கு முன்பாக..., ஏதாவது ஒதுக்குபுறமான இடத்துக்குச் சென்றுவிடலாம் என்ற முடிவோடு அவன் எழ,

அவனுக்கு முன்பாக ஒரு சிறுவன் வந்து நிற்பதைப் பார்த்தவன், 'என்ன', என்ற கேள்வியோடு ஏறிட,

"அண்ணே..., இந்தாங்கண்ணே...", இரண்டு சாப்பாட்டு பொட்டலங்களை அவன் முன்பாக நீட்ட, "என்கிட்டே காசு இல்லப்பா...", அவன் மறுக்கவே,

"ஏற்கனவே அந்த அண்ணா காசு கொடுத்துட்டாங்கண்ணே...", அவன் காட்டிய திசையில், அந்த பஸ் நகர, அதில் பார்வையை ஓட்டியவனுக்கு, கண்டிப்பாக யார் அதை செய்தார்கள் என்பது தெரியவில்லை.

அந்த பெரியவரின் முகம் மீண்டும் நினைவிலாட, வார்த்தைகள் வேதமாக ஒலிக்க, மறுக்காமல் அந்த உணவை பெற்றுக் கொண்டான்.

வாழ்க்கையில் முதல் முறையாக கடவுளின் கடைக்கண் பார்வை தன்மேல் விழுவது போன்ற நினைப்பு, நிறைவு. உணவை உண்டவனுக்கு புதிதாக ஒரு தெம்பு வந்து ஒட்டிக் கொண்டது.

மீண்டும் பழைய நிகழ்வாக, கையில் அந்த பெட்டியோடு ஊர் சுற்றியவன், மறுநாள் சென்னையில் வந்து இறங்கிய கார்த்திக்கின் பார்வையில் விழ, பிரிக்கமுடியாத ஏதோ ஒரு பந்தம் அவனை வினித்தின் பக்கம் இழுத்துச் சென்றது.

“ஹல்லோ..., ஐ’ம் கார்த்திக்...”, கரம் நீட்ட..., “வினித்..., அப்போ அந்த சாப்பாடு..., நீ தானா...?”, கேட்டவன் தானும் கரத்தை நீட்ட, மென்மையாக புன்னகைத்துக் கொண்டார்கள்.

“சென்னைக்கு புதுசா...? வேலை தேடறியா...?”, கார்த்திக்கின் எந்த கேள்விக்கும் அவன் பதில் சொல்லவில்லை என்றாலும், “ப்ளீஸ்..., என்கிட்டே எந்த கேள்வியும் கேட்காதே...”, வினித்தின் பதில் மேலே அவனை கேள்வி கேட்க அனுமதிக்கவில்லை.

“ஓகே..., தேங்க்ஸ்...., பாய்...”, வினித் கிளம்பிவிட,

“வினித்..., ஆர் யூ கம்மிங் வித் மீ...”, தன் முதுகின் பின்னால் ஒலித்த கார்த்திக்கின் குரலில், நம்ப முடியாமல் நின்றுவிட்டான்.

“ஆர் யூ ஜோக்கிங்...? எந்த நம்பிக்கையில் என்னை அழைக்கிறாய்...? நான் திருடனாகவோ, கொலைகாரனாகவோ இருந்தால்...?”.

“ஹா..., ஹா..., நீ திருடிச் செல்லும் அளவுக்கு என்னிடம் எதுவும் இல்லை. அப்படிப் பார்த்தால் நீதான் என்னைப் பார்த்து பயப்பட வேண்டும்...”, அவன் கரத்தில் இருந்த கடிகாரத்தையும், கழுத்துச் செயினையும், வலக்கையில் இருந்த பெட்டியையும் பார்வையிட்டவாறே கார்த்திக் உரைக்க, இப்பொழுது சிரிப்பது வினித்தின் முறை ஆயிற்று.

தன்னைப்பற்றிய ஏதோ ஒரு சந்தேகம் அவன் மனதில் முளைவிட்டிருப்பதை வினித் உணர்ந்து கொண்டான். கண்டிப்பாக தான் உயிரை மாய்க்கும் முடிவோடு இருப்பதை அவன் உணர்ந்ததாலேயே இப்படி நடந்துகொள்கிறான் என முழுதாக நம்பினான்.

காதல் மட்டுமல்ல..., நட்பும் ஒரு நொடியில் முளைவிடும் என்பதை இருவரும் உணர்ந்த தருணம் அது.

சட்டென வாட்ச்சையும், செயினையும் கழட்டியவன் அதை கார்த்திக்கின் கரத்தில் திணித்துவிட்டு, “இந்த பெட்டியில் இருக்கும் எதுவும் உனக்கு உதவப் போவது இல்லை...”, சாதாரணமாக உரைத்துவிட்டு கார்த்திக்கை ஏறிட, முழுதாக ஸ்தம்பித்திருந்தான்.

“ஹேய் வினித்..., நான் சும்மாதான்...”, கார்த்திக் அவற்றை அவனிடம் திரும்ப அளித்தவாறு திணற,

“எப்படியும் இது எனக்கு ஜஸ்ட் அலங்காரப் பொருளாகத்தான் இருக்கப் போகிறது. நான் உன்னுடன் வரவேண்டும் என்றால்..., இதை நீயே வைத்துக் கொள்ள வேண்டும்...”, வினித்தின் பதிலில், அவன் தன்னோடு வருவதை எண்ணி மகிழ்வதா, இல்லை இப்படி ஒரு செய்கையை செய்துவிட்டானே என வருத்தப்படுவதா என்று அவனுக்குப் புரியவில்லை.

தொடர்ந்த நாட்களில்..., இருவரும் பிரிக்க முடியாத பிணைப்பாக, நட்பாக, உயிராக மாறிப்போனது மட்டும் உண்மை.

அதையே எண்ணியவாறு கார்த்திக் வினித்தையே பார்த்திருக்க, “என்னடா..., மலரும் நினைவுகளா?”, கையில் இருந்த டவ்வலால் அவன் முகத்தில் லேசாக அடித்து கலைக்க, நினைவுகளில் இருந்து கலைந்தவன், அவனைப் பார்த்து புன்னகைத்தான்.

“இன்னைக்கு கம்பெனிக்கு வரியா வினித்....?”.

“ஆமா..., இன்னைக்கே வேலையில் சேரச் சொன்னாங்க சோ..., சரி காலையில் இருந்து இந்த குமாரைக் காணோமே..., நீ அவனைப் பாத்தியா?”.

“என்னது..., காலையில் இருந்து காணோமா? ஒருவேளை வீட்டுக்கு போயிருப்பானோ...?”, எழுந்து அறைக்குச் சென்றவன், எதையாவது உண்ண செய்து வைத்திருக்கிறானா என நோட்டமிட, கையில் விபூதி, குங்குமத்தோடு அறைக்குள் நுழைந்தான் குமார்.

அதைப் பார்த்த கார்த்திக், “என்னடா இது...? திடீர்ன்னு..., கோவிலுக்கெல்லாம் போயிருக்க...?”, புருவம் உயர வினவினான்.

“அதான் நம்ம வினித் சார் மொதோ மொதோ நம்ம கம்பெனிக்கு வரார்ல்ல, அதான்..., அவருக்கு நல்ல தெகிரியத்த கொடு ஆத்தான்னு வேண்டிக்கப் போயிருந்தேன். சார்..., நீ மூஞ்சக் காட்டு சார்...”, வினித்தை திருப்பியவன், அவன் நெற்றியில் விபூதி, குங்குமத்தை வைத்துவிட்டான்.

“டேய்..., அவன் இன்னும் குளிக்கலடா...”, கார்த்திக் தடுக்க,

“இப்போ குளிச்சா மட்டும் சாமி காப்பாத்துமா...? வுடு சார்..., நான் என் ஆசைக்கு செய்தேன்..., நீ வேற...?”, அவன் அசால்ட்டாக சொல்லிச் செல்ல,

“என்னடா இவன்...? இவன் நல்லவனா கெட்டவனா...?”, வினித் கேட்க, “நானும் அதையேதான் மச்சான் யோசிச்சுகிட்டு இருக்கேன்...”, குமார் முதுகையே வெறித்தான்.

அத்தோடு..., “வினித்..., கிளம்பலாம்... முதல் நாளே லேட்டா போனால் அந்தம்மா கத்தும்...”, அடுத்த அரைமணி நேரத்தில் குளித்து கிளம்பிவிட்டார்கள்.

வழக்கமாக கார்த்திக்கும், குமாரும் ஒரே வண்டியில் செல்வதால், அன்று குமாரை பஸ்ஸில் போகச் சொல்லிவிட்டு, வினித்தும், கார்த்திக்கும் இன்று

வண்டியில் செல்ல, ஒரு கம்பெனியின் விபி..., பைக்கில் வந்து இறங்குவதைப் பார்த்து பற்களை நரநரவென கடித்துக் கொண்டாள் ஐஸ்வர்யா.

அவள் அறையில் இருந்து பார்த்தால் கம்பெனியில் மெயின் கேட் தெரியுமாதலால்..., அவளால் உள்ளே வரும் அனைத்து வாகனங்களையும் பார்க்க முடியும்.

சட்டென மகளது முகத்தில் தெரிந்த கோபத்துக்கான காரணம் புரியாமல் குழம்பிய ஸ்ரீராம்..., “என்னம்மா திடீர்ன்னு...?”, அவர் கேள்வியை முடிக்கும் முன்பே...,

“ரேஸ்கல்..., ஆபீஸ்க்கு எப்படி வரான் பாருங்க. நம்ம கம்பெனியோட விபி..., இப்படி..., ச்சே..., அதுவும் கோட் போட்டுட்டு...., எப்படித்தான் பைக்கில் வரானோ...”, கடுகடுவென பொரிந்தாள்.

ஸ்ரீராமும் இதை எதிர்பார்க்கவில்லை என்பது அவரது முகத்தைப் பார்த்தே அவளால் உணர்ந்துகொள்ள முடிந்தது. சில பதவிகளுக்கென்று ஒரு மதிப்பும், மரியாதையும், ஒரு கௌரவமும் இருக்கிறது. பிடிக்கிறதோ, பிடிக்கவில்லையோ..., அதற்கேற்றவாறு இருக்க வேண்டியது கட்டாயமாக்கப் படுகிறது.

எரிச்சலை முகத்தில் அப்பட்டமாகத் தேக்கியவாறு அவள் அமர்ந்திருக்க, கார்த்திக்கிடம் விடைபெற்று கிளம்பியவன், பூணுல் போடும் முறையில் தன் லேப்டாப் பேகை போட்டுக்கொண்டு, விரிந்த புன்னகையோடு அலுவலகத்துக்குள் நுழைந்தான்.

அவன் யார் என்று அங்கே வேலை செய்யும் யாருக்கும் தெரியாதானாலும், அவன் உடை..., அவன் யாராக இருக்கக் கூடும் என்ற யூகத்தை தொழிலாளர்களுக்கு அளித்தது.

“என்னப்பா..., புது விபி வந்திருக்கிறார் போல..., இவர் எத்தனை நாள் தாங்குவாரோ...”, இதேபோன்ற விதவிதமான பேச்சுக்களை கேட்டவாறு அவள் அறையை நோக்கி நடந்தான்.

ஒற்றை விரலால் கதவைத் தட்டியவன், ஒரு நிமிடம் தாமதித்து, கதவைத் திறந்துகொண்டு அறைக்குள் நுழைந்தான்.

“குட் மோர்னிங் மேம்..., மோர்னிங் சார்...”, வாழ்த்தியவன், அவள் முகத்தில் தெரிந்த ரவுத்திரத்தில் குழம்பியவனாக, ஸ்ரீராமை ஏறிட்டான்.

“இதான் நீ ஆபீஸ் வர லச்சணமா...?”, அடக்கப்பட்ட கோபத்தில் அவள் கொதிக்க,

வேகமாக தன் முதுகின் பின்னால், அவளுக்கு எதிரில் இருந்த சுவரில் மாட்டியிருந்த கடிகாரத்தில் நேரத்தை பார்த்தவன், அது ஒன்பது இருபதைக் காட்டவும், வேகமாக குனிந்து தன் உடையை சரி பார்த்தவன், அடர் நீலநிறத்தில் பேண்டும், கோட்டும் போட்டு, கச்சிதமாக உடை அணிந்திருப்பதை மீண்டும் ஒரு முறை சரி பார்த்துக் கொண்டான்.

நிதானமாக அவன் செயல்பட, அவள் கோபம் கரையைக் கடக்கவா என அனுமதி வேண்டியது.

“மேம்..., டைமும் ஓகே. நானும்...”, என்னவோ சினிமா மாடல் மாதிரி அவள் முன்பு போஸ் கொடுக்க, அவன் தைரியத்தில் ஸ்ரீராம் வியக்க, அவளோ அவனை பஸ்மமாக்கும் விதத்தில் முறைத்தாள்.

“என்ன கொழுப்பா...?”, அவள் தோரணையாக வினவ...,

“இருக்காதே..., எக்ஸசைஸ் பாடி மேம்..., எப்பவும் ஃபிட்டு தான்...”, அவனும் அதே விதத்தில் உரைத்தான்.

“ஷட்டப்...”, கோபத்தை அடக்க வேகமாக மூச்சை வெளியிட, “சார்..., மேடம்க்கு பிபி ரெயிஸ் ஆயிடுச்சு போல..., உடனே டாக்ட்டர்க்கு போனைப் போடுங்க...”, அவன் அக்கறையில் நிஜமாகவே அவளுக்கு பிபி எகிறியது மட்டும் உண்மை.

ஸ்ரீராம் அவனைப் பார்த்து தலையை மெதுவாக ‘வேண்டாம்’ என்பதுபோல் அசைக்க, தன்

விளையாட்டுத்தனைத்தை கைவிட்டவன், அமைதியாக அவளை ஏறிட்டான்.

“என் கம்பெனியின் விபி..., இப்படி ஓசி பைக்கில் வந்தால்..., என் கம்பெனியின் மதிப்பு என்னாவது...?”, தன் கேள்வியை நேரடியாக அவன்முன் வைக்க,

“ஓ..., மேம்..., உங்க கம்பெனியின் விபிக்கு ஒரு அபிசியல் வண்டி கொடுக்கவேண்டும் என்ற காமன்..., இல்ல..., இந்த விஷயம் கூட தெரியாமல், செய்யாமல் இருந்துவிட்டு...”, மிகவும் சாதாரணமாக விரலை அவள் பக்கம் சுட்டிக் காட்ட, திகைத்துப் போனாள்.

இதற்கு முன்பு இருந்த எந்த விபிக்களும் கேட்காத ஒரு விஷயம், கேட்க தயங்கிய விஷயம், அவளிடம் பேசவே சிந்திக்காத ஒரு விஷயம், அவன் வெகு சாதாரணமாக உரைக்க, சுர்ரென எழுந்த கோபத்தை அடக்க முடியாமல் திணறிப் போனாள்.

“ஒரு விபிக்கு கார் கூட வாங்க முடியாதா...?”, கோபத்தை அவள் அடக்க,

“விபிக்கு கார் வேணும்னு நீங்க நினைத்தால், அதை நீங்கதான் வாங்கிக் கொடுக்கணும். மற்றபடி..., எனக்கு கார் வேண்டாம்..., அது எனக்கு அவசியமும் இல்லை...”, பேச்சை அத்தோடு நிறுத்தியவன், “மேம்..., என்னோட ரூம்...”, அவன் கேள்வியில், நிச்சயம் திடுக்கிட்டுத்தான் போனாள்.

“இதை நீ சந்தியாவிடம் கேட்க வேண்டும்...”, அடக்கப்பட்ட கோபத்தில் பொரிந்தாள்.

“ஓகே...”, அதை அவன் இலகுவாக எடுத்துக் கொண்டு, “சார்ஜ் எடுத்துட்டு, உங்களை வந்து பாக்கறேன்...”, சிறு தலையசைபோடு வெளியேறிவிட்டான்.

“டேட்..., ஹிஇஸ் இரிட்டேட்டிங் மீ...”, மேஜைமேல் இருந்த தண்ணீரை வேகமாக வாயில் சரித்துக் கொண்டாள். நேற்றுவரை அவளை யாருமே பாதிக்க அனுமதிக்காதவள்,

முதல் முறையாக தன் உணர்வை வெளிப்படுத்துகிறாள். ஸ்ரீராமுக்கு அது மிகவும் பிடித்தது.

அடுத்த வேலையாக..., அவள் தன் கணினியில் மூழ்க, அடுத்த ஒருமணி நேரம் எப்படி சென்றது என்பதே அவர்களுக்குத் தெரியவில்லை.

அவள்மேஜைமேல் இருந்த தொலைபேசி குரல் கொடுக்க, அதை எடுத்து காதுக்கு கொடுத்தவள், “சொல்லு...”, அது கண்டிப்பாக சந்தியாவாகத்தான் இருக்கும் என்பது அவளுக்குத் தெரியும்.

அவள் தொலைபேசிக்கு வரும் அழைப்புக்கள் அனைத்தும் சந்தியாவைத் தாண்டிதான் அவளை எட்ட முடியும். ஐஸ்வர்யாவே யாரையாவது அழைக்கவேண்டும் என்றால் கூட, ஒற்றை எண்ணை அழுத்தி, சந்தியாவைத் தொடர்புகொண்டு, தான் தொடர்புகொள்ள வேண்டிய ஆளுக்கு அழைக்கச் சொல்வாள்.

“மேம்..., ப்ரசாத் வந்திருக்கிறார்...”, சந்தியா உரைக்கவே, ஒரு நொடி புருவம் சுருக்கி யோசித்தவள், “வரச்சொல்...”, தொலைபேசியை வைத்துவிட்டாள்.

அடுத்த நிமிடத்தின் துவக்கத்தில், அறைக்குள் நுழைந்த அவனைப் பார்த்தவளின் முகம், உணர்வுகளைத் துடைத்து, ஒருவித அலட்சியத்தை தத்தெடுத்தது.

“ஹாய் தேவி..., ஹவ் ஆர் யூ..., இப்போதான் ஸ்ரீலங்காவில் இருந்து வந்தேன். டேட் விஷயத்தை சொன்னார்..., ஐ வாஸ் சோ எக்சைட்டட்...”, அவன் பேசிக்கொண்டே போக, அவள் கண்கள் அவனை இகழ்ச்சியாக வெறித்தது.

அவள் பார்வையைக் கண்டவனுக்கு ‘இவளுக்கு ஒரு வேளை விஷயமே தெரியாதோ..’ என குழம்பிப் போனான்.

வேகமாக அவள் அருகில் இருந்த ஸ்ரீராமை பார்க்க, அவர் பார்வையோ கவனமாக அவனை ஏறிட்டது. ‘என்னடா இது...?’ நொந்து போனான்.

“வாட் டு யூ வான்ட் ப்ரசாத்…?”, அவள் கேள்வி அவனை மேலும் குழப்ப,

“ஹேய்…, நம்ம ரெண்டு பேருக்கும்…”, அவன் பேச்சை கை உயர்த்தி தடுத்தவள், “சோ வாட்…”, பட்டுத்தெரித்தாற்போல் வந்து விழுந்தன வார்த்தைகள்.

“ஐ திங்…, யூ ஆர் நாட் இன் அ மூட்…, ஐ வில் கம் லேட்டர்…”, அவன் இருக்கையில் இருந்து எழுந்து கொண்டான்.

“ப்ரசாத்…, ஜஸ்ட் ஸ்டாப் திஸ் நான்சென்ஸ் ஓகே…, திஸ் இஸ் மை ஆபீஸ்…, இங்கே எதைப் பற்றியும் விவாதிக்க நான் தயாரா இல்லை. அட் தி சேம் டைம்…, ஐ’ம் நாட் இன்ட்ரஸ்ட்… சோ…”, அவள் உரைக்க, அந்த ப்ரசாத்தின் முகம் அவமானத்தில் சிறுத்துப் போனது.

“ஏன்…, எனக்கென்ன குறை…”, அவன் பின்வாங்க தயாராக இருக்கவில்லை.

“நான் கெட் அவுட்ன்னு சொல்ல முன்னாடி நீ போய்ட்டா நல்லா இருக்கும்”, உன் கேள்விக்கான பதில் இதுதான் என அவள் உரைக்க, அவன் முகம் கோபத்தை தத்தெடுத்தது.

“என்னடி…, நீயென்ன பெரிய ரதியா…? பணத் திமிர்டி உனக்கு. உன்னையெல்லாம் மனுஷன் கல்யாணம் பண்ணணும்னு நினைப்பானா…?”, அவன் கோபத்தில் வார்த்தைகளை விட,

“அப்போ நீ யார்…?”, அவள் மடக்க, வார்த்தைகள் வளர்வதைப் பார்த்த ஸ்ரீராம்…, “ப்ரசாத்…, போதும்ப்பா…, நீ கிளம்பு…”, அவர் இடை புகுந்தார்.

“அங்கிள்…, நீங்க என்னவோ ரொம்ப ரிக்வஸ்ட் பண்ணதா டேட் சொன்னாங்க. நானும் போனால் போகட்டும்னு…, பார்த்தால்…”,

“ப்ரசாத்…, நீ போனால் போகட்டும்னு கல்யாணம் பண்ணிக்கிற அளவுக்கு என் மகள் இறங்கிவிடலை…, நான் கேட்டது தப்புதான் நீ கிளம்பு…”, அவர் உரைக்க,

“இந்த ஜென்மத்தில் இவளுக்கு கல்யாணம் நடக்காது...”, சாபம் கொடுத்துவிட்டு வெளியேறினான்.

அவன் இருக்கும் வரைக்கும் மகளுக்கு ஆதரவாக இருந்தவர், அவன் செல்லவே, “தேவி..., இப்படியே செய்தால் நானும் என்னதாம்மா செய்யட்டும்? எனக்கு உன் கல்யாணத்தை பாக்கணும்னு ஆசை இருக்காதா...?

“அவனுக்கென்ன குறை..., வசதியிலும், படிப்பிலும் உனக்கு இணையானவன்...”, அவர் ஆற்றாமையில் புலம்ப,

“எனக்கு ஒரு சந்தேகம்..., இப்போ பேச்சுவார்த்தை தானே நடக்குது. அவன் என்னவோ கட்டுன பொண்டாட்டி மாதிரி உரிமையா வந்து பேசறான். என் எண்ணம்.., என் முடிவு..., என் விருப்பம்..., இதெல்லாம் ஒரு பொருட்டே இல்லையா?

“இது வேலை நடக்கும் இடமா..., இல்ல..., ஜஸ்ட் ஸ்டாப் டேட்..., எனக்கு பிடிக்கலை...”, அடுத்த நிமிடம், அவள் வேலையை பார்க்கத் துவங்கினாள்.

அதே நேரம்..., அவள் அறைக்கதவு தட்டப்பட..., “எஸ்...”, அவள் குரலில் உள்ளே நுழைந்தவனைப் பார்த்தவளுக்கு பற்றிக்கொண்டு வந்தது.

“ஏய்..., இதென்ன கொஞ்சம் கூட மேன்ஸ் இல்லாமல்..., இதுதான் நீ இதற்கு முன்னால் வேலை பார்த்த விதமா...? ஒரு எம்டியை எப்படி சந்திக்க வேண்டும் என்ற முறை உனக்குத் தெரியாது...?”, இருக்கும் கோபம் மொத்தத்தையும் அவன்மேல் இறக்க, சலனமே இல்லாமல் அவளை பார்த்துக் கொண்டிருந்தான் வினித்.

அவன் அசையாத பார்வையில்..., முதல் முறையாக தணிந்து போக வேண்டி இருந்தது அவளுக்கு.

***

# பகுதி - 5.

கோபத்தில் படபடவென அவள் பொரிய, நிதானம் தவராமலே அவளை ஏறிட்டான் வினித். அவனது இந்த நிதானமே அவள் கோபத்தை அதிகரிக்கச் செய்தாலும், அவனது பொறுமை எதையும் செய்ய விடாமல் தடுக்க, பற்களை உள்ளுக்குள் கடித்தவாறு அவனை வெறித்தாள்.

அவன் ஒரு வார்த்தை கூட பேசத் தயார் இல்லை என்பதுபோல் அசையாமல் நிற்க, தன் தந்தையை திரும்பிப் பார்க்க, அவரோ..., அங்கே நடப்பதற்கும் தனக்கும் சம்பந்தமே இல்லை என்பதுபோல், கையில் இருந்த ஃபைலில் எதையோ தேடிக் கொண்டிருந்தார்.

“டேட்...”, அவரை அழுத்தமாக அழைக்க,

“கூப்ட்டியாம்மா....?”, பொறுமையாக அவர் வினவ, அவளுக்கு வெறுத்துப் போனது. ஓர விழியில் வினித்தை கவனிக்க, இவர்கள் பேச்சில் கவனம் இல்லாதவனாக தன்னை காட்டிக் கொண்டாலும், கண்டிப்பாக உள்ளுக்குள் சிரிக்கிறான் என்பதை மட்டும் அவளால் உணர்ந்துகொள்ள முடிந்தது.

தந்தையிடம் பேசி கேட்கச் சொல்வதற்குள், மேலும் ஏதாவது நிகழ்ந்துவிடலாம் என எண்ணியவளாக, அதை தவிர்ப்பதற்காக, தானே அவனிடம் பேச முடிவெடுத்தாள்.

“கேட்டது காதில் விழலையா...?”, தன் கெத்தை விடாமலேயே கேட்டாள்.

“கேட்காமல் என்ன..., ரொம்ப திவ்யமாவே கேட்டது. பட் மேம்..., நான் இந்த கம்பெனியோட விபி..., இதோட எதிர்கால வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து செயல்பாடுகளையும், வழிமுறைகளையும் செயல்படுத்தும், உருவாக்கும் நிலையில் இருப்பவன்.

“அப்படி இருக்கும்பொழுது..., ஒவ்வொரு முறையும் ப்ரோபர் சேனல் வழியாகத்தான் வரவேண்டும் என்றால்..., இட்ஸ்

இம்ப்பாசிபிள் மேம்....", அவன் தன் நிலையில் உறுதியாக இருக்க, தன்னை முதன் முதலில் எதிர்த்துப் பேசும் அவனை என்ன செய்வது எனத் தெரியாத விதத்தில் வெறித்தாள்.

இதுவரை அவளிடம் வேலை பார்த்த அனைவருமே..., அவள் சொல்லுக்கு கட்டுப் பட்டே பார்த்தவள் அவள். மறுப்பு என்ற ஒரு விஷயமே அவள் பொறுப்பேற்ற இந்த நான்கு வருடங்களில் அவளுக்குப் புதியது. அப்படியிருக்கையில்....

ஆனாலும்..., தன்னிடம் கைநீட்டி சம்பளம் வாங்கப் போகும் ஒருவன்..., இவ்வளவு நிமிர்வாக மறுப்பதை அவளது தன்மானம் அனுமதிக்கவில்லை.

அதையே வார்த்தைகளில் கொட்டி, "உனக்கு நான்தானே சம்பளம் கொடுக்கப் போகிறேன்...?", திமிராக வினவ,

"கொடுக்கும் சம்பளத்துக்கு ஒரு தலையாட்டி பொம்மைதான் வேண்டுமென்றால் அதற்கு நான் அவசியமில்லை...", கால்களை சற்று அகட்டி, கம்பீரமாக நெஞ்சை நிமிர்த்தி நின்றவன், இரு கரங்களையும் பேன்ட் பாக்கெட்டுக்குள் நுழைத்துக்கொண்டு கூர்மையாக அவளை வெறிக்க, ஒரு முழு ஆண்மகனின் பரிணாமத்தை முதல் முறையாகப் பார்த்த ஐஸ்வர்யா ஒரு நொடி திகைத்துப் போனாள்.

'இது எப்படி சாத்தியம்...?', அவள் மூளை அவளிடம் உரக்கக் கேட்டது இதைத்தான்.

ஸ்ரீராம் தன் கண்களையோ, காதையோ நம்ப முடியாத திகைப்பில் அமர்ந்திருந்தார். தனக்குக் கீழே வேலை பார்க்கும் ஒரு ஆண்மகனை மகள் பேச விடுவதே ஆச்சரியம் என்றால்..., அவன் பேசுவதைக் கேட்டு வாயடைத்துப் போயிருப்பது பேராச்சரியமாக இருந்தது.

"ம்ச்..., இப்போ என்ன சொல்ல வர...?", முழுத் தோல்விதான்..., ஆனால் அதையும் அலட்சியமாகவே வெளிப்படுத்தினாள்.

“உங்களுக்கும் எனக்கும் நடுவில் எப்பொழுதும் நோ மீடியேட்டர்...”, இப்படித்தான் என பிடிவாதமாக ஒலித்தது அவன் குரல்.

‘சப்பாஷ் கண்ணா...’, ஸ்ரீராம் அவனை மனதுக்குள் பாராட்டிக் கொண்டார்.

“டூ யூ திங் இஸ் திஸ் பாசிபிள்...?”, அவள் கேள்வியாக ஏறிட...,

“ஐ வில் மேக் இட் பாசிபிள்...”, அவன் குரல் நம்பிக்கையாய் ஒலித்தது.

“நான் இந்த கம்பெனியின் எம்டி...”.

“அதை நான் மறுக்கவே இல்லையே...”,

“உன் ஒருத்தனுக்காக நான் எப்பொழுதும் காத்திருக்க முடியாது...”.

“அதற்கு அவசியம் இருக்காது...”, பேச்சில் அவனிடம் அவளால் வெல்ல முடியவில்லை.

அவள் தலை மறுப்பாக அசைந்தாலும், இதற்கு சம்மதிப்பதைத் தவிர அவளுக்கு வேறு வழி இருக்கவில்லை.

“ஓகே...”, அரைமனதாகவும், கோபமாகவும் அவள் உரைக்க, “தேங்க்ஸ்...”, சட்டென புன்னகைத்து அவன் நன்றியை உரைக்க, மேஜைமேல் இருக்கும் தண்ணீர் பாட்டிலை அவன் முகத்தில் விட்டெறிந்தால் என்ன என்ற கோபம் எழுந்தது அவளுக்கு.

அதை கட்டுப்படுத்தியவள், அவன் இன்னும் அங்கே நிற்பதைப் பார்த்தவள், கேள்வியாக புருவத்தை உயர்த்தினாள்.

அதில் ‘இன்னும் என்ன...?’, என்ற பாவனை வெளிப்பட,

“லேபர் அட்டன்டென்ஸ் விஷயம், லீவ் பற்றி பேசணும்...”, அவன் உரைக்க, கண்டிப்பாக இவனுக்கு பயித்தியம்தான்

பிடித்திருக்கிறது என்ற முடிவிற்கு அவள் வந்துவிட்டிருந்தாள்.

“உனக்கென்ன...”, வார்த்தையில் அதை வெளியிடப் போனவள்..., அந்த வார்த்தையின் கனம் உணர்ந்து சட்டென வாய் மூடியவள், “அதை கவனிப்பது அட்டெண்டர் வேலை..., அதை மேற்ப்பார்வை இடுவது மேனேஜரோட வேலை...”, கடித்த பற்களுக்கிடையில் வார்த்தைகளை அரைத்து துப்பினாள்.

“சாரி மேம்..., என்னோட ஒவ்வொரு பேச்சுக்கும் உங்க நிலைப்பாடு இதுவாகத்தான் இருக்கும்னா..., என்னால் இங்கே எதுவும் செய்ய முடியாது”, அவன் வார்த்தையில் இருக்கும் வருத்தமும், மரியாதையும், குரலில் துளி கூட இல்லாமல் போக, வாழ்நாளிலேயே உணர்ந்திராத கோபத்தை உணர்ந்தாள் ஐஸ்வர்யா.

மகளது நிலையைக் கண்ட ஸ்ரீராமுக்கே பாவமாகப் போய்விட, “வினித், ஒரு டூ மினிட்ஸ்...”, அவர் இடைபுகுந்து அவளைக் காப்பாற்ற, “ஓகேசார்...”, வேகமாக அவள் அறையில் இருந்து வெளியேறினான்.

அவன் செல்லவே..., “டேட்..., இம்ப்பாசிபிள்..., அவனுக்கு எவ்வளவு திமிர் பாத்தீங்களா...? ராஸ்க்கல்...”, பல்லைக் கடிக்க, மகளை அமைதியாகவே ஏறிட்டார்.

“என்ன டேட்..., நான்பாட்டுக்கு புலம்பிட்டே இருக்கேன்..., நீங்க கண்டுக்காமல் இருந்தால் என்ன அர்த்தம்....?”, அவரிடம் வெடிக்க,

“உனக்கு ஏம்மா இவ்வளவு கோபம்...?”, அமைதியாக அவர் வினவ,

“டேட்..., புரிஞ்சுதான் பேசறீங்களா? லேபர் அட்டன்டன்ஸ் விஷயம் பற்றி அவன் என்கிட்டேயா விசாரிக்கணும்...?”, அதிர்ச்சியாக கேட்டாள்.

“இப்படி ஒரு சின்ன விஷயத்தையே உன்கிட்டே பேசணும்னு டிசைட் பண்ணியிருக்கான்னா..., அது

எவ்வளவு பெரிய விஷயமா இருக்கணும்?”, ஆமாம் எனச் சொன்னால் அவள் கோபம் அதிகரிக்கும் என உணர்ந்தவராக, அவளையே முடிவெடுக்கத் தூண்டினார்.

இப்படி ஒரு கோணத்தில் சிந்தித்திராதவள், சட்டென அமைதியாகி, ‘அதானே…’ என சரியாகச் சிந்தித்தாள்.

அவள் அமைதியை சரியாக பயன்படுத்தியவர், “உன் கோபத்தை ஒதுக்கி வச்சுட்டு, உன் கீழே வேலை பார்க்கும் அவன் பேச்சை கேட்க வேண்டுமா என யோசிப்பதை விட்டுவிட்டு, ஆலோசனை சொல்லத்தான் அவனை வேலைக்கு வைத்திருக்கிறாய் என மட்டும் யோசி…,

“அவன் சொல்வதை நான் கேக்க வேண்டுமா…? என குதர்க்கமா யோசிக்காமல், அவன் சொல்லும் யோசனை சரியா வருமா இல்லையா என யோசி…, என்னைக் கேட்டால்…, இந்த கம்பெனிக்கு இப்போதான் ஒரு சரியான விபி கிடைத்திருக்கிறான் என்று சொல்வேன்.

“அவனுக்கு மரியாதை கொடுக்கவில்லை என்றாலும், அவன் பதவிக்கு மரியாதை கொடுப்பது நம் கடமை தேவி…”, அவள் அவனை அமரச் சொல்லாத தவறையும் அழகாக சுட்டிக் காட்டி, அவனை சரியாக பயன்படுத்தும் யோசனையையும் உரைக்க, அவர் சொல்வதை அரை மனதாக ஏற்றுக் கொண்டாள்.

“அவனுக்கு ரொம்ப திமிர் டேடி…”, அவளால் சகித்துக்கொள்ள முடியாமல் புலம்ப,

“திறமை இருக்கும் இடத்தில் கொஞ்சம் திமிரும் இருக்கத்தான் செய்யும் தேவி…”, அவளை கூர்மையாகப் பார்த்து அவர் உரைக்க, அவளும் அதே பார்வையை அவரிடம் செலுத்த இருவரும் அர்த்தமுடன் புன்னகைத்துக் கொண்டார்கள்.

சற்று நேரத்தில் மீண்டும் கதவு தட்டும் ஓசை கேட்க, “எஸ்…”, மிடுக்கு குறையாமல் அழைக்க, முதலில் பார்த்த அதே முகபாவத்தோடு உள்ளே வந்தான் வினித்.

“சொல்லு...”, இடக்கையால் இருக்கையை சுட்டிக் காட்டியவாறு அவள் விஷயத்துக்கு வர, வாய் வார்த்தையாக உரைக்காத அவள் செய்கையை மனதுக்குள் குறித்தவாறே, இருந்தாலும் அவள் பிடிவாதம் இறங்கியிருப்பதையும் குறித்துக் கொண்டு இருக்கையில் அமர்ந்தான்.

“மேம்..., மேனேஜ்மென்ட் எப்பொழுதும் ஸ்டாஃப் பக்கமா..., இல்லை யூனியன் பக்கமா...?”, அவன் கேள்வியில் குழம்பியவள்,

“ஸ்டாஃப்பும் யூனியனும் வேறா...?”, அவள் கேள்வியை அவன் பக்கம் திருப்ப,

“கண்டிப்பா வேறதான்..., ஸ்டாஃப் எப்பொழுதும் கம்பெனி பக்கம் இருப்பாங்க, யூனியன் ஆட்கள் எப்பொழுதும் கம்பெனிக்கு எதிரா இருப்பாங்க. இப்போ சொல்லுங்க...”, மீண்டும் அவன் கேள்வியை கேட்டான்.

“இதற்கு என்னோட பதில் என்னவா இருக்கும்னு நினைக்கற...?”.

“அதை உங்க வாயாலேயே தெரிஞ்சுக்கத்தான் கேள்வியே கேக்கறேன்...”, அவனது இந்த பிடிவாதமே அவனை வெறுக்கத் தூண்டியது.

ஒரு பக்கம் இழுத்தால், மறு பக்கம் விட்டுக் கொடுக்க வேண்டும்..., ஆனால் இங்கே..., இருவருமே விட்டுகொடுக்க மறுக்க, அவளுக்கு எரிச்சல் மூண்டது.

“விஷயத்துக்கு வா...”, பதில் உரைக்காமல் அவனிடம் எரித்து விழ,

“ஓகே...”, அவள் பிடிவாதத்தையும், வெறுப்பையும் மேலே தூண்ட மனமின்றி, ஸ்ரீராமின் கெஞ்சல் பார்வைக்கு வேண்டி இரங்கியவன், அடுத்த பதினைந்து நிமிடங்களை தனதாக்கிக் கொண்டு, அலுவலகத்தில் நடக்கும் யூனியன் ஆட்களின் லீவ் பிரச்சனையை உரைக்க, ‘இப்படி நடக்கிறதா..?’, என கொதித்துப் போனாள்.

அவள் முடிவை அவள் முகமே அவனுக்கு வெளிச்சம் போட்டுக் காட்ட, “இப்போ இந்த விஷயத்தை உடனே நாம தடுத்து நிறுத்தணும்..., இல்லன்னா..., இது வளர்ந்து பெருசாகலாம்..., காண்டிராக்ட் ஆட்களையும் இது பாதிக்கலாம்....”, அவன் முத்தாய்ப்பு வைத்தான்.

“இதனால் அவங்க ஸ்டைக், அது இதுன்னு போனால்...”, தேவையில்லாத தலை வலி ஆயிற்றே என்று அவள் தயங்கினாள்.

“இப்போ யூனியன் ஆட்கள்தான் கம்பெனி வேலையை பாக்குறாங்களா? பதினொன்றே பேர்தான் யூனியன் ஆட்கள்..., மீதி நாப்பதுபேர் காண்ட்ராக்ட் பசங்க..., இப்போ சொல்லுங்க..., எல்லாத்தையும் நான் வழிக்கு கொண்டு வரேன்..., என்ன நீங்க தைரியமா இருக்கணும்..., அதுதான்...”, அவன் குறும்பாக இழுக்க,

“ஏய்..., யாரைப்பாத்து என்ன சொன்ன..? நான் யாருக்கும் பயப்பட மாட்டேன். அதுவும் என்கிட்டே கைநீட்டி சம்பளம் வாங்கும் அவங்களுக்கு நான் பயப்படுறதா...? போ..., முதல்ல சொன்னதை உன்னால் செய்ய முடியுதான்னு பார்...”, கோபமாக, அலட்சியமாக பதில் கொடுத்தாள்.

“தேங்க்ஸ்...”, கண்களில் தேக்கிய சிரிப்போடு இருக்கையில் இருந்து எழுந்தவன், மெல்லிய தலையசைப்பில் ஸ்ரீராமிடம் விடைபெற்றுவிட்டு வெளியேறினான்.

அவள் இதழ்கடையில் துடித்த சுழிப்போடு அவன் முதுகை வெறிக்க, ஸ்ரீராமுக்கோ மனதுக்குள் ஒரு பெரும் நமைச்சல்...., அவனிடம் பேசியே ஆக வேண்டும்.

ஐஸ்வர்யாவின் அறையில் இருந்து வெளியேறிய வினித், முதல் வேலையாக கார்த்திக்கை தேடிச் செல்ல, அவனை தன் அறையில் பார்த்த கார்த்திக், சட்டென இருக்கையில் இருந்து எழுந்தவன், “சார்..., ஏதாவது முக்கியமான விஷயமா...?”, பரபரப்பாக அவனை ஏறிட்டான்.

“சிட் டவுன் கார்த்திக்... எஸ்...”, உரைத்தவன் அவன் அறைக்குள் நுழைந்து, அவன் எதிரில் இருந்த இருக்கையில் அமர, “சார்..., எதுவாக இருந்தாலும் என்னை போனில் கூப்பிட்டு இருக்கலாமே...”, பவ்யமாகவே குரல் கொடுத்தான்.

“லீவ் தேட் பார்மாலிட்டி..., கம் டூ தி பாயின்ட்..., நாளையில் இருந்து யூனியன் ஆட்கள் லீவ் கேட்டால் அதை என்கிட்டே கேக்கச் சொல்லுங்க. அப்படியே..., இதை ஒரு சர்க்குலரா ரெடி பண்ணி, நோட்டிஸ் போர்டில் போட்டு வைங்க..., இன்னைக்கு சாயங்காலத்துக்குள்ளே இந்த மெஸ்சேஜ் அவங்களை ரீச் ஆகி இருக்கணும்...”, இருக்கையில் இருந்து எழுந்து கொண்டான்.

“சார்..., யூனியன் ஆட்களோட...”, அவன் தயங்க, “டூ வாட் ஐ சே...”, நான் சொன்னதைச் செய் என அழுத்தமாகச் சொல்லிவிட்டு வெளியேறிவிட்டான்.

என்று வினித் இந்த கம்பெனிக்குள் அடியெடுத்து வைப்பதாக முடிவானதோ, அன்றே அலுவலகத்துக்குள் இருவரும் விபி, மேனேஜர் என்ற முறையில் மட்டுமே பழகுவது என்பதை இருவரும் ஒருவருக்கொருவர் முடிவெடுத்துக் கொண்டனர்.

எனவே அலுவலகத்தில் எந்தவிதமான சலுகைகளையோ, பேச்சுக்களையோ அவர்கள் வைத்துக்கொள்வதில்லை, என முடிவெடுத்திருக்க, அலுவலகத்தில் பழகுவது மிகவும் எளிதாகவும், முறையாகவும் இருந்தது.

அதுவே இன்றைய அவர்கள் பேச்சிலும் வெளிப்பட, அடுத்த அரைமணி நேரத்துக்கு முன்பாகவே அலுவலக பையன் குணா மூலமாக விஷயம் அனைவருக்கும் தெரியவர, “இன்னாங்கடா இது புதுசா கீது...”, “புது சோக்கு எம்மா நாளைக்கு...?”, “அத்த நாளைக்கு பாத்துக்கலாம்”, வித விதமான முணுமுணுப்புகளோடு அனைவரும் அந்த நோட்டீஸ் போர்டை கடந்து சென்றார்கள்.

கார்த்திக்கின் மனதில் மட்டுமல்ல, ஸ்ரீராமின் மனதிலும் அன்று புயல் அடித்தது மட்டும் உண்மை. ஐஸ்வர்யாவோ..., ஒருவித ஆர்வத்தோடு அடுத்து வந்த நாட்களை எதிர் பார்த்தாள்.

தொடர்ந்த நாட்களிலும் அப்படியொன்றும் விடுப்பு எடுப்பது பெரிதாக குறைந்துவிடவில்லை. அதைப் பார்த்தவள், அவனிடம் அதைப்பற்றி குறிப்பாக பேசி, நக்கலாக ஒரு சிரிப்பு சிரிக்க, அவனோ அதை கவனித்தேன் என்ற பாவனையை கூட வெளிப்படுத்தாமல் விலகிச் சென்றான்.

‘திமிரைப் பார்..., அடுத்த மாசம் உனக்கு இருக்குடா...’, அவன் போக்கை எண்ணி பல்லைக் கடிக்கவே அவளால் முடிந்தது.

விடுமுறை கேட்பவர்களுக்கு தயவே இல்லாமல் அவன் மறுப்பை வெளியிட, யூனியன் ஆட்களோ அவனது மறுப்பை கண்டுகொள்ளாமல் விடுப்பை தொடர்ந்தார்கள்.

தாங்கள் கேட்ட சிக் லீவ்(SL), கேசுவல் லீவ்(CL) அனைத்தையும் அவன் மறுப்பதைப் பார்த்தவர்கள், கோபம் கொண்டார்கள். அதே நேரம், அவன் சொன்னவாறு PLலில் விடுமுறையை சேர்க்க, அவர்கள் மறுப்பை அவன் கண்டுகொள்ளாதது மிகப்பெரிய சர்ச்சையை அங்கே கிளப்பியது.

ஸ்ரீராமுக்கு அது ஒரு பக்கம் வயிற்றைப் பிசைய, கார்த்திக்கோ கதிகலங்கிக் கொண்டிருந்தான். இதை உணர்ந்தாலும், ஐஸ்வர்யா கண்டுகொள்ளாமல் இருக்க, ‘இவள் என்ன செய்வாளோ...’, என ஸ்ரீராம் கவலை கொள்ளத் துவங்கினார்.

மின்னல் வேகத்தில் நாட்கள் கடக்க, அடுத்த மாதத்தின் துவக்கமும், யூனியன் ஆட்களின் சம்பளமும் அவர்கள் லீவுக்குத் தக்க குறைக்கச் சொல்லி அக்கவுண்ட் செக்ஷனுக்கு வினித்திடமிருந்து உத்தரவு பறக்க, அவர்கள் அதை செவ்வனே செய்தார்கள்.

அவர்கள் கம்பெனி துவங்கிய இத்தனை காலத்தில், ‘லாஸ் ஆப் பே’ என்பதை முதல் முதலில் அவர்கள் அறிந்த தருணம் இது.

அந்த தகவலை, கம்பெனியின் எம்டி என்ற நிலையில் ஐஸ்வர்யாவுக்கும் அவர்கள் தெரிவிக்க..., “என்ன....? நிஜமாகவா....?”, அவளது ரியாக்ஷன் இதுவாகத்தான் இருந்தது.

இந்த விஷயத்தை அவ்வளவு சாதாரணமாக லேபர்கள் எடுத்துகொள்ள மாட்டார்கள் என்பது அவளுக்குப் புரிய, உறங்கச் சென்ற தந்தையை அறைக்கே சென்று தட்டி எழுப்பினாள்.

இத்தனை வருடகாலத்தில், ஒரு நாள் கூட மகள் இப்படி செய்ததில்லை என்பதால், சற்று பரபரப்பாகவே எழுந்து வந்தார். “என்னம்மா...? எதுவும் பிரச்சனையா...?”, கவலையானார்.

“அவனுக்கு கிறுக்குதான் பிடிச்சிருக்கு டேட்... எந்த தைரியத்தில் அவன் இதைச் செய்யறான்? லேபர்ஸ் எல்லாம் சும்மா இருப்பாங்களா? ஓ மை காட்...”, எடுத்தவுடன் அவள் பொரிய, சத்தியமாக அவருக்கு எதுவும் புரியவில்லை.

“யாரைச் சொல்ற...? யாருக்கு கிறுக்கு....?”, அவர் நெற்றியை தேய்க்க,

“இப்படியே நல்லா தூங்குங்க..., கம்பெனிக்குள்ளே என்ன நடக்குது, அவன் என்ன செய்யறான்..., எதையுமே பாக்காதீங்க...”, அதற்கும் பொரிய, பரிதாபமாக விழித்தார்.

“முதல்ல விஷயத்தை தெளிவா சொல்லு தேவி...”, ஹாலில் இருந்த சோபாவில் சென்று அமர, அவர் எதிரில் அமர்ந்தவள், தனக்கு வந்த தகவலை பகிந்து கொள்ள, இதுவரை இருந்த வயிற்றை பிசையும் உணர்வு போய்..., வயிறே இல்லாமல் போனது போன்ற உணர்வு.

ஒரு நிமிடம் அவரால் எதையும் பேசவே முடியவில்லை. சற்று நேரத்தில் தன்னைத் தெளிந்தவர், “நிஜமாவா…?”, ஒரு வேளை தான் தவறாகக் கேட்டோமோ என்ற எண்ணத்தில் தெளிவுபடுத்திக் கொள்ள கேட்டார்.

“அக்கவுண்ட்ஸ்ல இருந்து தகவல் வந்தது. அவங்க வேலைமெனக்கெட்டு சொல்வாங்களா…?”, அவன்மேல் இருக்கும் கோபத்தில் வள்ளென விழுந்தாள்.

“சேலரி கிரெடிட் பண்ணிட்டாங்களா…?”, பதைப்பாக கேட்க, “எப்படி கிரெடிட் பண்ணச் சொல்றீங்க…? நான் ஒரு நாள் ஹோல்ட் பண்ண சொல்லியிருக்கேன்…, அவன்கிட்டே பேசுங்க… கம்பெனியை இழுத்து மூடவே வந்து சேர்ந்தான் போல…”, காரத்தோடு, சேர்த்து எரிமலையே வெடித்தது அவள் பேச்சில்.

“நல்ல வேலை பண்ண…, நான் அவன்கிட்டே பேசறேன்…”, அவனிடம் பேசுவதால் எந்த பயனும் இருக்கப் போவதில்லை என்பது அவருக்கு நன்றாகவே தெரியும், ஆனாலும்…, அதைத் தவிர வேறு வழி அவரிடம் இருக்கவில்லை.

மறுநாள் காலையில் ஐஸ்வர்யா வரும் முன்பு, வினித்திடம் அரைமணிநேரம் பேசியும், அவனை அவன் முடிவில் இருந்து இம்மி கூட அவரால் மாற்ற முடியவில்லை.

யூனியன் ஆட்கள் எப்படி நடந்துகொள்வார்களோ என்ற கவலை ஒரு புறம் இருந்தாலும், தன் மகள் என்ன செய்வாளோ என்பதுதான் மிகப்பெரும் கவலையாக இருந்தது.

தன் அறைக்குள் நுழைந்த அடுத்த நிமிடமே, சந்தியா மூலமாக அவள் அழைத்த அழைப்பு, வினித்தின் மேஜைமேல் இருந்த அலைபேசியில் தெறிக்க, “தேவிதான்…”, ஸ்ரீராம் கவலையாக உரைக்க, அவனோ…, சாதாரணமாகவே அழைப்பை ஏற்றான்.

“குட் மோர்னிங் மேம்…, டூ மினிட்ஸ்…”, தொலைபேசியில் உரைத்தவன், “சார் போகலாம்…”, இருக்கையில் இருந்து

எழுந்துகொண்டான்.

“வினித்...”, அவனைத் தேக்க,

“நாம மேடத்தோட ரூமிலேயே போய் பேசிக்கலாம் சார்...”, என் முடிவு இதுதான் என மறைமுகமாக உரைத்துவிட்டு நடையை விரைவுபடுத்த, எதுவும் செய்ய இயலாத தன்மையில் அவனைப் பின்தொடர்ந்தார்.

ஒற்றை விரலால் அவள் அறையின் கதவை தட்டியவன் உள்ளே நுழைய, “ஆர் யூ மேட்...”, அவள் வார்த்தைகள் பாய்ந்து வந்து அவன் செவியை அறைந்தது.

அவளுக்கு முன்பாக வந்து நின்றவன், அவள் அடுத்த வார்த்தை பேசும் முன்பு இடக்கையை உயர்த்தி தடுக்க, பேச வந்த வார்த்தைகள் பட்டென தடைபட, மீண்டும் அவள் சுதாரித்து பேசத் துவங்கும் முன்பே, “நிலத்தில் இறங்கி களை எடுக்கணும்னா, அதை செய்துதான் ஆகணும். இல்ல..., நெல்லோட சேர்ந்து அதுவும் வளரட்டும்னா மகசூல் பாதிக்கத்தான் செய்யும்.

“அப்படி களை எடுக்கவும் வேண்டாம்னா..., நீங்க இந்த கம்பெனியை மூடிட்டு வீட்டிலேயே இருக்கலாம்..., எதுக்கு தேவையில்லாமல் களைக்கு உரம் போட்டு, தண்ணி ஊத்தி வளக்கணும்...”, அவன் பேச்சு அவளுக்குப் புரிந்தாலும், அதை ஏற்கும் நிலையில் அவள் இருக்கவில்லை.

“இத்தனை வருஷம் இந்தக் கம்பெனி அப்படிதான் இருக்கு...”.

“இத்தனை வருஷம் நான் இங்கே இல்லை. ஆனா இப்போ நான் இருக்கிறேன்..., இனிமேல் இப்படித்தான்..., வேண்டாம்னா சொல்லுங்க, நான் எதையும் செய்யலை...”, அழுத்தமாக நின்றுகொண்டான்.

“மச்..., நீ செய்வது உனக்கு சின்ன விஷயமா தெரியுதா...?”.

“நான் அப்படி சொல்லவே இல்லை...”.

“பிரச்சனை வந்தால்...?”,

“வராமல் இருக்காது...”,

“அப்படின்னா...?”, கோபமானாள்.

“என்னைக் கை காட்டுங்க. எவன் வருகிறான்..., எவன் வருவான்..., நான் பாத்துக்கறேன்...”, அவன் பேச்சு, அவன் தைரியம்..., அவன் தோரணை..., அவளுக்குள் எதையோ நழுவச் செய்ய, சட்டென அதை இறுக்கிப் பிடித்தாள்.

“நீயென்ன பெரிய ஹீரோவா...?”, நக்கல் வழிந்தது.

“பெரிய ஹீரோ என்றால்தான் ஒத்துப்பீங்களா? ஏன்..., சின்ன ஹீரோ என்றால் கண்டுக்க மாட்டீங்களா என்ன...?”, அவனும் அதே விதத்தில் பதில் கொடுத்தான்.

“இது விதண்டாவாதம்..., இதுக்கு என்ன விலை ஆகும்னு நீ நினைக்கற...?”, அவள் தனக்கு நேரப்போகும் நஷ்டக் கணக்கை அவள் கணக்கிட,

“மிஞ்சிப்போனால் என் உயிர் போகுமா...? போகட்டும்...”, அவன் அசால்ட்டாக உரைக்க, “வினித், என்ன பேச்சு இது...?”, ஸ்ரீராம் கடிந்து கொள்ள, முதல் முறையாக எடுத்தெறிந்து பேச முடியாத தயக்கம் ஐஸ்வர்யாவின் வாயைக் கட்ட, அதை உணர்ந்த ஸ்ரீராமுக்கு மூளைக்குள் சட்டென ஒரு மின்னல் வெட்டியது.

அது இருவரின் வாழ்வையும் பொசுக்குமா, பிரகாசமாக்குமா என்பதுதான் இப்பொழுது கேள்வியே.

***

## பகுதி - 6.

கடல் அலையில் கால் பதிய நின்றிருந்தான் வினித். அவன் அருகில் சற்று தூரத்தில் மணலில் அமர்ந்திருந்தார் ஸ்ரீராம்.

வினித்தின் முதுகை வெறித்தவருக்கு, கடந்து சென்ற ஒரு வாரத்தின் தாக்கம் மனதை விட்டு நகர மறுத்தது. ஆனால்..., அதை அசால்ட்டாக கையாண்ட அவனோ அமைதியாகவே இருந்திருந்தான்.

‘அப்பப்பா...., என்ன ஒரு தன்னம்பிக்கை..., தைரியம்...’, அவரால் வியக்காமல் இருக்க முடியவில்லை.

தேவியும் ஒரு விஷயத்தை நொடியில் கையாண்டு விடுவாள்தான். ஆனால், அவள் வழிமுறை இவனது வழிமுறையில் இருந்து முற்றிலும் வேறாக இருக்கும்.

தன் எதிரியை பணத்தால் அடித்து அடக்கியே பழகியவள் அவள். உதாரணமாக..., ஏழு சதவீதம் ஊதிய உயர்வு வேண்டும் என ஊழியர்கள் கேட்டால்..., அதை ஒன்பது சதவீதமாகக் கொடுத்து அவர்கள் வாயை அடைத்து விடுவாள்.

மேலே அவளிடம் பேசவே அஞ்சும் அளவுக்கு...., பணத்தைக் கொண்டே அவர்களை அடிப்பாள். எதற்கும் பணத்தை செலவிடுவதைப் பற்றி அவள் கவலைப் படுவதே கிடையாது.

யூனியன் ஆட்கள் வேலை செய்யவில்லையா..., காண்ட்ராக்ட் பசங்களை ஒன்றுக்கு பத்தாகப் போட்டு வேலையை முடிப்பாள். பணம் போவதைப் பற்றி அவள் கவலைப் படுவது கிடையாது. அவர்களை அடக்கவும் அவள் முயல்வது இல்லை..., இதைச் செய் என கட்டாயப் படுத்தவும் மாட்டாள்.

அதென்னவோ தன் எதிரில் அவர்கள் பேசுவதைக் கூட அவள் விரும்புவது இல்லை. தன் எதிரில் வரும் தகுதி கூட அவர்களுக்குக் கிடையாது என்ற மனநிலை உடையவள்.

தன் தகுதிக்கு அவர்களோடு உரையாடுவதையே கவுரவக் குறைச்சலாகக் கருதுபவள்.

அவர்களை எப்பொழுதும் எட்டியிருக்கச் செய்வதையே விரும்புவாள். எப்பொழுதும் அவளுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையில் மிகப்பெரிய இடைவெளி இருக்கும்.

அதுவே யூனியன் ஆட்களுக்கு சாதகமாகிப் போக, யூனியன் மூலமாக அனைத்து சலுகைகளையும் சுலபமாகப் பெற்றுக்கொண்டு, வேலையும் செய்யாமல் ஈஸி வாழ்க்கை வாழப் பழகி விட்டார்கள்.

தானுமே அவர்களை அடக்க முயன்றதில்லை. எப்பொழுதுமே கம்பெனியின் கடிவாளம் அவரது மாமியார் வீட்டு பெண்கள் வசமே இருந்ததால்..., அவரால் பெரிதாக கம்பெனிக்குள் எதையும் அவர் செய்ய முடிந்ததில்லை.

முதல் முறையாக..., யூனியன் ஆட்களின் கொட்டத்தை அடக்கமுயன்று அதில் அவன் வெற்றியும் பெற்றிருக்கிறான் என்பதை இப்பொழுது கூட அவரால் நம்ப முடியவில்லை.

அவனுக்கு பக்கபலமாக தன் மகளும் இருந்தாள் என்பதைத்தான் அவரால் நம்பவே முடியவில்லை. சம்பள விவகாரத்தில் வினித்தின் பிடிவாதமே ஜெயிக்க, தங்கள் சம்பளத்தில் பணம் குறைந்திருப்பதைப் பார்த்த ஊழியர்கள் திகைத்துப் போனார்கள்.

அதிலும் லாஸ் ஆப் பே என்பதைப் பார்த்தவர்கள் கொந்தளித்துப் போனார்கள். இதற்குக் காரணம் வினித் தான் என்பது அவர்களுக்குப் புரிய, மொத்தமாகச் சென்று அவன் அவன் அறையை முற்றுகையிட, அவர்களை தைரியமாகவே எதிர்கொண்டான் வினித்.

“நீ எப்படி இதைச் செய்யலாம்...”, “உனக்கு அவ்வளவு தைரியமா...”, “என்ன ஒரு திமிர்...”, “உன்னை விட்டோமா பார்...”, என ஆளுக்கு ஆள் எகிற,

“யூனியன் தலைவனைத் தவிர மற்றவன் அனைவரும் என் அறையை விட்டு வெளியே போகலாம். என்ன பேசுவதாக இருந்தாலும் அவன் மட்டும் பேசட்டும்…”, கொஞ்சம் கூட தைரியத்தை இழக்காமல் அவன் உரைத்தான்.

“அவர்ட்ட என்ன பேசுறது…? எங்ககிட்டே பேசு சார்…, எங்களோட லீவைத்தானே நாங்க எடுத்தோம். அதில் என்ன சம்பளத்தை குறைப்பது…?”, அவர்கள் கோபம் கொண்டு கூச்சலிட, அங்கே பெரும் குழப்பம் நிலவியது.

அவர்களது கோபத்தில் அசையாதவன், “என்ன ஹரி…, யூனியன் ஆட்கள் ரெண்டுபேருக்கு மேல்…, விபியின் கேபினுக்குள் வந்து குரல் உயர்த்திப் பேசினால் என்ன நடக்கும்னு அவங்களுக்கு வேண்ணா தெரியாமல் இருக்கலாம்…, உங்களுக்கு கூடவா தெரியாது….?”,

அவனது அந்த நிதானமான கேள்வி…, அந்த கூச்சலிலும், அறையை சட்டென உறை அமைதிக்கு கொண்டு சென்றது.

ஹரியின் முகமும் சற்று வெளிறிப் போக…, “ஏய்…, எல்லாம் கொஞ்சம் அமைதியா இரு. சார்…, ஒரு நிமிஷம் சார்…, நான் பேசிக்கறேன் சார்…”, அவனிடம் அடியோடு பணிந்தவன், தொழிலாளர் பக்கம் திரும்பியவன், “எல்லாரும் முதல்ல வெளியே போ…”, குரல் உயர்த்தினான்.

“என்ன ஹரி…, சார் என்னவோ சொன்ன உடனே பயந்துட்ட பாத்தியா…? இதுதான் நீ எங்களுக்கு நியாயம் பேசும் அழகா…?”, ஒருவன் எகிறிக்கொண்டு வர,

“மச்…., விஷயம் புரியாமல்…, வெளியே வாங்க சொல்றேன்…”, அவர்களை இழுத்துக்கொண்டு வெளியேறினான். அவர்கள் செல்லவே, வினித்தின் முகத்தில் ஒரு மர்ம புன்னகை.

“விடு ஹரி…, அவன் ஒத்த சொல்லு சொன்னா…, உடனே பயந்துடுவியா? இதுக்கே இப்படின்னா…, இன்னும் ரெண்டு மாசத்தில் நடக்கபோற யூனியன் ரெனிவல் மீட்டிங்கில், நம்ம இங்கிரிமெண்டைப் பத்தி எப்படி பேசுவ…?”.

“என்ன நிர்வாகத்துகிட்டே பணம் வாங்கிட்டியா...?”,

“நீ அவங்க கையாளா...?”, ஆளாளுக்கு பேச, “போங்கையா..., விவரமில்லாமல் பேசாதீங்க. நீங்க கேட்டதெல்லாம் செய்யணும்னா முதல்ல உங்களுக்கு வேலை வேணும்..., அது புரியுதா...?”, கிட்டத்தட்ட கத்திதான் அவர்களை அடக்க வேண்டி இருந்தது.

“என்னய்யா சொல்ற...?”, அவர்கள் அதிர்ச்சியாக,

“இப்போ கேளுங்க என்னன்னு. இதுக்கு மேலே நாம இந்த விஷயத்தை பேச முடியாது. அப்படியே பேசணும்னா..., நம்ம வக்கீல் வந்தாகணும்”, அவன் தெளிவாக உரைக்க, மற்றவர்கள் விழித்தார்கள்.

“இப்போ எதுக்குப்பா வக்கீலு..., நாலு வார்த்தை அந்த அம்மாட்ட பேசினால் தானா வழிக்கு வந்துட்டு போகுது....”, ஒருவன் எடுத்துக் கொடுக்க,

“என்ன சொன்ன...? முதலாளியம்மாவை பாக்குறதா...? சரி..., முதல்ல அந்த அம்மாவைத்தானே பாக்கப் போறதா இருந்தோம். ஏன் செய்யலை...?”, அவன் கிடுக்கிப் பிடிக்க, சட்டென கேட்டவனின் வாய் அடைந்து போனது.

ஐஸ்வர்யாவின் அறை இருக்கும் பக்கம் கூட யாரும் செல்ல முடியாத அளவுக்கு, செக்கியூரிட்டி ஆட்களை நிறுத்தி வைத்துவிட்டான் வினித். அந்த செக்கியூரிட்டி ஆட்களுக்கு முதலில் கொடுக்கப்பட்ட கட்டளையே, அவனைத் தாண்டி ஒருவர் கூட அவள் அறை இருக்கும் பக்கம் கூட செல்லக் கூடாது.

அப்படியே சென்றால்..., அடுத்த நொடியே அவர்கள் வேலை பறிக்கப்பட்டு, அவர்கள் வீட்டுக்கு அனுப்பி வைக்கப் படுவார்கள் என்பதே. எனவே..., சாதாரணமாகக் கூட அவள் அறை இருக்கும் பக்கம் யாரையும் அவர்கள் அனுமதிக்கவில்லை.

அதை நினைவு கூர்ந்தவர்களுக்கு, முதல்முறையாக விஷயத்தின் கனம் அவர்களை எட்டியது.

“ஹரி..., என்னதாம்ப்பா பிரச்சனை...? சத்தியமா புரியலப்பா. நாமதான் பாதிக்கப்பட்டிருக்கோம்..., அதே நேரம், பேசவும் யோசிக்கிறோம்..., விஷயம் என்னன்னு சொல்லுப்பா...”.

“என்னத்த சொல்லச் சொல்ற..., வந்திருக்க புது விபி விஷயத்தை அக்குவேற ஆணிவேற பிரிக்கிறார். உண்மை என்னன்னா..., நம்ம யூனியன் சட்டப்படி, நமக்கு மேலே இருக்கும் மேனேஜர், விபி, எம்டி, இப்படி யாரை பார்க்கப் போறதா இருந்தாலும், அதுவும் எந்த விஷயத்துக்கா இருந்தாலும், ரெண்டுபேருக்குமேல் போகக் கூடாது.

“அதாவது யூனியன் தலைவரும், அவரோட ஒரு ஆளும் மட்டுமே போகணும். அதை மீறி யாராவது போனால்..., அவர்களுக்கு மெமோ கொடுத்துடுவாங்க. மூணு மெமோ வாங்கிட்டா..., முன்னறிவிப்பே இல்லாமல் அவங்களை டெர்மினேட் செய்யும் உரிமை நிர்வாகத்துக்கு உண்டு.

“அதைத்தான் இப்போ விபி மறைமுகமா சொன்னார்....”, அவன் விளக்க, அனைவர் முகங்களிலும் குழப்பம்.

“அப்படின்னா...?”, கேள்வியாக இழுக்க, “அப்படின்னா.., இப்போ எல்லோருமே மெமோ வாங்கப் போறோம்னு அர்த்தம்...”, அவன் உரைக்க, முதல் முறையாக, தங்கள் பிடி வலுவிழப்பதை அவர்கள் உணர்ந்தார்கள்.

அதுவரை அங்கே நடப்பதை பதைப்போடு பார்த்துக் கொண்டிருந்த சந்தியாவும், கார்த்திக்கும் ஒருவர் ஒருவரை சற்று நிம்மதிப் பார்வை பார்க்க, சந்தியா விஷயத்தை ஐஸ்வர்யாவிடம் தெரிவிக்க விரைந்தாள்.

சந்தியாவின் மூலம் விஷயத்தை அறிந்த ஐஸ்வர்யா வியந்து போனாள். நிச்சயம் இன்று பெரிய பூகம்பமே நிகழும் என அவள் எதிர்பார்த்திருக்க, கிளம்பிய சுனாமி பேரலை, கரையைக் கடக்க முடியாமல் திணறுவதை உணர்ந்தவளுக்கு அப்படி ஒரு ஆச்சரியம்.

பணத்தை மீறிய ஒரு ஆளுமையின், பதவியின், பவரை அவள் உணர்ந்த தருணம் அதுவாகத்தான் இருக்கும்.

“வாட்..., ஆர் யூ சுயர்(sure)...?”, நம்பமுடியாமல் வினவ, தான் கேட்டவற்றை ஒன்றுவிடாமல் விவரித்தாள் சந்தியா.

சந்தியா விவரிக்க விவரிக்க, ஐஸ்வர்யாவின் முகம் பலத்த யோசனையை பிரதிபலித்தது. ‘அப்படியென்றால்..., நிர்வாகம் யார் பக்கம் நிற்கும்? என அவன் கேட்டதுக்கு அர்த்தம் இதுவா...?’, அவள் மூளை வேகமாக கேள்வி எழுப்பியது.

யூனியன் ஆட்கள் பக்கம் நிற்க முடியாது. ‘அப்போ, அவனுக்கு பக்கபலமா இருக்கப் போறியா...?’’, மூளை கேள்வி எழுப்பியது.

‘மிஞ்சிபோனால் என் உயிர் போகுமா... போகட்டும்...’, அவன் குரல் காதுக்குள் ஒலிப்பது போன்ற பிரம்மை, அதை நொடியில் ஒதுக்கியவள், தன் கௌரவத்தை காப்பாற்ற வேண்டி, தன் வாக்கை காப்பாற்ற வேண்டியாவது எதையாவது செய்தே ஆகவேண்டும் என எண்ணினாள்.

அதேநேரம்..., விஷயத்தை கேட்டுக் கொண்டிருந்த ஸ்ரீராம் வாயைத் திறக்கும் முன்பாகவே, “சந்தியா..., வக்கீலை கூப்பிடு...”, ஐஸ்வர்யா உரைத்திருந்தாள்.

மகளது வார்த்தைகளை கேட்ட ஸ்ரீராம் வியந்துபோனார். சந்தியாவும் திகைத்தவள், சட்டென தெளிந்து அவள் சொன்ன வேலையை செய்ய போனாள்.

அடுத்த அரைமணி நேரத்தில் வக்கீல் வாசுதேவன் அங்கே இருக்க, யூனியன் ஆட்கள் அனைவருக்கும் முதல் மெமோ அளிக்கப்பட்டது. யூனியன் வக்கீல் விஷயத்தை கேள்விப்பட்ட உடனேயே..., தான் இதில் எதுவும் செய்ய முடியாது என உரைத்து விட்டிருந்தார். எனவே அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை.

இதுவே வினித்தின் வெற்றியென்றால்..., அதற்குப் பிறகு நடந்தவைதான் பெரிதிலும் பெரிது. லீவ் விஷயத்தை கட்டோடு ஒரு முடிவிற்கு கொண்டு வந்துவிட்டிருந்தான்.

இனிமேல் சிக் லீவ் இரண்டு நாட்களுக்கு மேல் கிடையாது. அப்படியே இரண்டுநாட்களுக்கு மேல் எடுத்தால்..., மூன்றாம் நாள், தங்கள் கம்பெனியின் பிரதான மருத்துவரின் உடல்நிலை பற்றிய தெளிவான ரிப்போர்ட்டோடு மட்டுமே வர வேண்டும்.

அப்படி வரவில்லை என்றால்..., மூன்றுநாளும் லீவாகவே கருதப்படும். அரசாங்க விடுமுறைக்கு முந்தினநாளோ, பிந்தைய நாளோ விடுமுறை எடுத்தால்..., அந்த நாளும் சேர்த்து, இரண்டு நாளாக விடுமுறை கணக்கில் கொள்ளப்படும்..., இப்படியான விதிமுறைகளை, யூனியன் ஆட்களால் மீற முடியவில்லை.

யூனியன் வக்கீலோ..., அவர்கள் உரிமைகளுக்காக மட்டுமே யூனியன் பாடுபடுமே தவிர, அவர்கள் எடுக்கும் விடுமுறைக்கோ, அதை தடுக்கும் நிர்வாகத்துக்கோ எந்த விதத்திலும் பொறுப்பேற்க முடியாது என சொல்லிவிட்டார்.

வேறு வழியின்றி யூனியன் ஆட்கள் தான் அடங்கிப் போக வேண்டி இருந்தது. இப்படி ஒரு சுபமான முடிவை கண்டிப்பாக ஐஸ்வர்யா எதிர்பார்த்திருக்கவில்லை என்பதை அவளது முகபாவத்தை வைத்தே ஸ்ரீராமால் உணர்ந்துகொள்ள முடிந்தது.

இன்னும் அவனது அடக்குமுறையும், வழிமுறையும் தொடரும் என்பது அவன் பிடிவாத முகத்தை வைத்து உணர்ந்துகொண்டாலும், அது என்னவென்று கேட்கவோ, அவனது முதல் வெற்றிக்கு பாராட்டவோ, ஒரு அங்கீகாரம் கொடுக்கவோ அவள் தயாராக இருக்கவில்லை.

அவன் கடமையைத் தானே செய்தான்..., என பிடிவாதமாக, குதர்க்கமாக எண்ணிக் கொண்டாள்.

அவளைபோல் ஸ்ரீராமால் இருக்க முடியவில்லை. அவளது அறைக்கே வினித்தை அழைத்து பாராட்ட, அவளை ஓர விழியால் கவனித்தவன், “இட்ஸ் மை டியூட்டி சார்...”, என் கடமையைத்தான் செய்தேன் என அவன் உரைத்த நொடி,

தன் கட்டுப்பாட்டையும் மீறி, அவன் விழிகளை நொடியில் சந்தித்து மீட்டுக் கொண்டாள்.

அவள் பார்வை தன்னை ஏறிட்டு விலகியதைப் பார்த்தவன், ‘ஓ..., அம்மணியும் இதைத்தான் நினைத்தாங்களோ....?’, எண்ணியவன் தன் உணர்வுகளை மறந்தும் முகத்தில் வெளிக்காட்டவில்லை.

“பட் சார்..., நான் மேம்க்கு தேங்க் பண்ணியே ஆகணும். நம்ம வக்கீலை வைத்து உடனே நடவடிக்கை எடுத்துட்டாங்க..., எனக்கு சப்போட்டா நிர்வாகம் செயல்பட்டதில் எனக்கு ரொம்ப சந்தோசம்....”, கண்டிப்பாக அவன் பேச்சில் பொய்யில்லை என்று அவன் முகம் எடுத்துரைத்தது.

“இட்ஸ் அவர் டியூட்டி...”, வார்த்தைகளை வெளியிட்ட பிறகுதான், இவனுக்கு நான் ஏன் பதில் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் எழ, பார்வையை பிடிவாதமாக மடிக்கணினியில் பதித்திருந்தாலும், சிந்திவிட்ட வார்த்தைகளை திரும்பப் பெற முடியாமல் அமைதியானாள்.

‘தன் மகள்தான் பேசினாளா...?’ ஸ்ரீராமுக்குதான் மயக்கம் வரும்போல் இருந்தது. வினித்தின் ஆளுமைக்கு முன்னால், மகளது பணக்கார திமிர் உதிர்வதை ஒருவித திகைப்போடும், திருப்தியோடும் பார்த்துக் கொண்டிருந்தார்.

அடிப்படையில் அவள் ஸ்ரீராமின் வார்ப்பு என்றே சொல்லலாம். அழகில் வேண்டுமானால் தன் மனைவியைக் கொண்டு பிறந்திருந்தாலும், மனதளவில் அவரது இரக்ககுணம் அவளிடம் அப்படியே இருப்பதை, அவள் குழந்தையாக இருந்தபொழுது உணர்ந்திருக்கிறார்.

கூட்டுபுழுவை கொட்டிக் கொட்டி கடந்தையாக மாற்றுவதுபோல், தன் மாமியார் அளித்த போதனையும், பணக்காரி என்ற மமதையும், செருக்கும், ஆணவமும்,

தங்களுக்கு இணையாக இந்த உலகத்தில் யாரும் இல்லை என்ற போதனையும்,

பணத்தில் தங்களுக்கு இணையாக இல்லாதவரோடு பழகுவதோ, பேசுவதோ கூட பாவம் என்ற முறையில் அவளுக்கு துர்போதனை வழங்கப்பட, தன் மகளை கண்டிக்கவோ, தடுக்கவோ முடியாத இயலாமையில் ராம் ஒதுங்கிப் போக, ஐஸ்வர்யா தன் பாட்டியைக் கொண்டே வளர்ந்துவிட்டாள்.

அவள் வளர்ந்த பிறகு, சொல்பேச்சு கேட்கும் நிலையை அவள் கடந்துவிட்டாள் என்பது புரிய, தன் அமைதியைத் தொடர்ந்தார். இப்பொழுது முதல் முறையாக, ஒரு ஆண்மகனிடம், அதுவும் தனக்குக் கீழே வேலை பார்ப்பவன், கை நீட்டி சம்பளம் வாங்குபவன் என்ற எண்ணத்தை தவிர்த்து, அவனிடம் உரையாடுவதை மிகப்பெரிய மாற்றமாகவே அவர் கண்டார்.

ஏற்கனவே தங்கள் ஜோதிடர் ஏற்படுத்திய மனதின் அலைகள் அடங்க மறுத்து ஆர்ப்பரிக்க, தான் ஏற்கனவே கொண்டுவந்த வரன்களை ஒரு துளி கூட அவள் மதிக்காமல், பொருட்படுத்தாமல் போக, அந்த ஆர்ப்பரிப்பு சுனாமி பேரலையாக அவரை சுருட்டிக் கொண்டிருந்தது.

முதல்நாள் அவனை சந்தித்தபொழுதே மனதின் ஓரம் விழுந்த விதை, இன்று வேர்விட்டு விருட்சமாகத் துவங்கவே, மனதுக்குள் இருப்பதை அவனிடம் கேட்டுவிடுவது என்ற முடிவோடு, அவனையும் கடற்கரைக்கு அழைத்துக்கொண்டு வந்துவிட்டார்.

பக்கத்தில் ஏதோ அசைவை உணர்ந்து தன் நினைவுகளில் இருந்து கலைந்தவர், அருகில் திரும்பிப் பார்க்க, “என்ன சார்.., இங்கே வந்து ஒருமணி நேரத்துக்கும் மேல ஆகுது...., எதுவுமே பேசாமல் அமைதியா இருக்கீங்க...?”, அங்கே நிலவிய அமைதியை கலைத்தான்.

தயக்கமும், சிறு குழப்பமுமாக அவனை ஏறிட்டவர்..., “உன்கிட்டே ஒரு மாசமா பேசணும்னு நினைக்கறேன்...,

ஆனா இன்னைக்குத்தான் சந்தர்ப்பம் கிடைச்சது. சாரிப்பா…", மெல்லிய குற்றவுணர்வோடு பேசினார்.

"ஹையோ சார்…, இதுக்கெல்லாம் போய் சாரி சொல்லிட்டு…, உங்களை மறுபடியும் பாத்ததே எனக்கு போதும் சார்…", நெகிழ்வாக உரைத்தவன், நன்றிப் பெருக்கோடு அவரை ஏறிட்டான்.

அவன் கரத்தை பற்றியவர்…, "வாழ்க்கை எப்படிப்பா இருக்கு…?", அவன் கரத்தை அழுத்தினார்.

அவரை முகம் முழுக்க பூரிப்போடு ஏறிட்டவன், "எனக்கான கடவுளோட திட்டம் என்னன்னு தேடிகிட்டே இருக்கேன் சார்…, ஆனா இந்த தேடல் கூட அழகாத்தான் இருக்கு, பிடிச்சிருக்கு…", அவன் முகத்தில் நிறைவான புன்னகை.

"நீங்க மட்டும் இல்லன்னா…, என்னைக்கோ…", மேற்கொண்டு அவனை பேச விடாமல், அவன் தோளை அழுத்தமாக பற்ற, வார்த்தைகளை விழுங்கிக் கொண்டான்.

"இனிமேல் இப்படி பேசவே கூடாது. உன் திறமையும், உழைப்பும் வீணாக்காமல், அது குன்றின்மீது ஏற்றிய விளக்கா பிரகாசிக்கணும். உன் திறமை உனக்கே தெரியலை வினித்…, எதைப் பற்றியும் யோசிக்காமல் வாழ்க்கையை எதிர்கொள்…", உரைத்தவரின் பார்வை கடல் அலையை வெறித்தது.

மீண்டும் அவர் அமைதியாகிவிட, அவர் தன்னிடம் எதையோ பேச வெகுவாகத் தயங்குவது அவனுக்குப் புரிந்தது. அதை உணர்ந்தவனாக, "சார்…, என்னவோ சொல்ல வரீங்க…, என்கிட்டே சொல்ல என்ன தயக்கம்? இந்த உயிரே நீங்க கொடுத்த அறிவுரையால் தப்பிப் பிழைத்தது.

"அன்னைக்கு மட்டும்…, இதே மாதிரி ஒரு கடற்கரையில் நீங்க என்னை சந்திக்காமல் போயிருந்தால்…, தயங்காமல் என்னிடம் பேசாமல் போயிருந்தால்…, இப்படி ஒரு சூழலில் நாம மீண்டும் சந்திக்கும் சந்தர்ப்பமே வந்திருக்காது.

“சோ…, தயங்காமல் பேசுங்க. இப்பவும் உங்க வார்த்தைகள் எதுவாக இருந்தாலும் நான் கேட்க தயாராக இருக்கிறேன்…”, உண்மையான நன்றி அவன் குரலில் மிளிர்ந்தது.

அந்த நேரமும் தான் எண்ணும் விஷயத்தை அவ்வளவு சுலபமாக அவனிடம் பேச அவரால் முடியவில்லை. இதயம் தாளம் தப்புவது போன்ற உணர்வு.

தான் எடுத்திருக்கும் முடிவு சரியானதா? தவறானதா? தனக்குள்ளாகவே எழும் குழப்பம்…, அமைதியாகவே அமர்ந்துகொண்டார்.

“சொல்லுங்க சார்…”, தான் உயிரோடு இருப்பதற்குக் காரணமான அவரது பிரச்சனை எதுவாக இருந்தாலும் தன்னால் முடிந்த உதவியை செய்தே ஆகவேண்டும் என்ற முனைப்போடு அவன் இருந்தான்.

‘இதற்குமேல் தயங்க எதுவுமில்லை என முடிவெடுத்தவராக, “ஐஸ்வர்யாவை கல்யாணம் பண்ணிக்கோ வினித்….”, தன் மொத்த தைரியத்தையும் திரட்டி சொல்லிவிட்டார்.

தன் காதில் விழுந்த வார்த்தைகளை நம்ப முடியாமல் திகைத்துபோய் அவரைப் பார்த்தான் வினித்.

***

# பகுதி - 7.

தன் செவியைத் தீண்டிய செய்தி உண்மை தானா? 'ஐஸ்வர்யாவை திருமணம் செய்து கொள்ளவா சொன்னார்...? தெரிந்துதான் சொல்கிறாரா? அவர் சொன்ன வார்த்தைகளின் பொருள் அவருக்குப் புரிந்ததா? எந்த விதத்தில் இந்த திருமணத்தை சரியென அவர் நினைக்கிறார்...?' மூளை பரபரவென சூடாக, ஒரு நிமிடம் அவன் மூளை அடுக்கடுக்காக கேள்விகளை முன்வைத்தது.

அவன் முகத்திலேயே கவனமாக இருந்தவர், அவன் முகத்தில் குழப்பத்தையும், கேள்விகளையுமே கண்டவருக்கு ஒரு பக்கம் பெருத்த நிம்மதியாக இருந்தது.

அவன் முகத்தில் பிடிக்காத தன்மையையோ, கோபத்தையோ, அருவருப்பையோ கண்டிருந்தால் அடுத்த நிமிடமே தன் கோரிக்கையை எண்ணி மன்னிப்பு வேண்டி, அதை மறக்கச் சொல்லியிருப்பார்.

அப்படி எதுவும் இல்லாமல் போகவே..., அவனை திருமணத்துக்கு சம்மதிக்க வைத்துவிடலாம் என்ற பெருத்த நம்பிக்கை எழுந்தது.

வினித்துக்கோ..., தான் எப்படி உணரவேண்டும் என்று கூட சிந்திக்க முடியாத திகைப்பு..., இந்த ஒன்றரை மாதங்களில்..., ஐஸ்வர்யாவை முதலாளி என்ற இடத்தை தவிர்த்து, மனதளவில் கூட வேறு விதமாக கருதியது கிடையாது.

எங்கே அவளை பெண்ணாக சிந்திக்கத் துவங்கினால்..., அவள் அதிகாரத்துக்கு அடிபணிய வேண்டுமா என்ற எண்ணம் தன் மனதில் வேரூன்றி விடுமோ...? அதனால் அவளோடு சுமுகமாகவோ..., கம்பெனியின் வளர்ச்சி விஷயத்திலோ ஈடுபட முடியாமல் போய்விடுமோ என்ற அச்சமே அதற்குக் காரணம்.

மற்றபடி..., அவள் பெண்ணே இல்லை..., பேய் என்றோ..., அடங்கா பிடரி என்றோ..., பொண்ணா அவ..., என்றோ

எந்தவிதமான எதிர்மறை சிந்தைகளையும் தன் மூலையில் ஏற்றியது கிடையாது.

அதனால் தானோ என்னவோ..., ‘அவளையா...’ என்ற எண்ணம் அவன் மூளையை தாக்கவில்லை. ‘இது சரிவருமா...? ஒத்துவருமா...? அவள் ஏற்றுக் கொள்வாளா...?’, என்பன போன்ற சிந்தையே மேலோங்கியது.

அதைவிட, அவளை கல்யாணம் பண்ணிக்கொள்கிறாயா என கோரிக்கை கூட அவர் வைக்கவில்லை, மாறாக..., பண்ணிக்கொள் என சொல்லிவிட்ட அந்த வார்த்தைகள்..., சட்டென மறுத்துவிட அவனால் முடியவில்லை.

அதைவிட..., படபடவென மூளையை ஆக்கிரமித்த சில விஷயங்கள்..., தன் வாழ்நாளிலேயே அன்பென்னும் ஒரு விஷயம் தனக்கு நெருக்கமானவர்களிடமிருந்து கிடைக்கவே செய்யாதா...?’ அந்த ஒற்றை கேள்வி ஏற்படுத்திய தாக்கம்..., அவனால் அந்த கேள்வியின் கனத்தை தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

அவன் முகம் ஒரு மாதிரியாக கசங்கிப் போவதைப் பார்த்த ஸ்ரீராமுக்கு தாள முடியவில்லை. இதுவரை இதமாக பற்றியிருந்த அவன் கரத்தை அழுத்தமாக பற்றிக்கொள்ள, தன் முகபாவத்தை மாற்றிக்கொள்ள முடியாமலேயே அவரை ஏறிட்டான்.

“சார்...”, நெஞ்சை அழுத்திய வேதனையான ஒற்றை அழைப்பு அவன் வாயில் இருந்து உதிர, அவனை தோளோடு இறுக்கிக் கொண்டார்.

‘தான் அவனை ஏதோ ஒரு விதத்தில் பலமாக உலுக்கிவிட்டோம் என்பது அவருக்குப் புரிய..., “கூல் மை பாய்...”, ஒரு தந்தையின் பரிவில் அவர் உரைக்க, அந்த நிமிடம் ‘ஓ...’வென்று கதறி அழவேண்டும்போல் இருந்தது அவனுக்கு.

ஆண்கள் அழக்கூடாது என்ற விதியை யார் வகுத்தது..., வாய் விட்டு அழுதுவிட்டால் அவன் மன பாரம்

இறங்கியிருக்கும்...., ஆனால் அதைச் செய்ய விரும்பாமல்..., ஒரு சிறுவனாக மாறி அவர் கழுத்தை இறுக கட்டிக் கொண்டான்.

அவன் தோளை தன் இரு கரத்தால் தட்டியவர்..., “உனக்கு நான் இருக்கிறேன் வினித்..., நாங்க இருக்கிறோம்...”, அந்த சூழலிலும் தன் மகளையும் இணை சேர்க்க..., அழுவதா..., சிரிப்பதா என்றே அவனுக்குத் தெரியவில்லை.

ஏதோ ஒரு விதத்தில் அந்த வார்த்தைகள் அவனுக்கு அளித்த நம்பிக்கை பெரிது. சற்று நேரம் அந்த ஆதரவான தோளின் அணைப்பில் இருந்தவன், தன்னை சுதாரித்துக்கொண்டு அவரை விட்டுப் பிரிந்து, அவர் அருகில் அமர்ந்தான்.

மாலைவேளைக்கே உரிய இதமான கடற்கரை காற்று அவர்கள் மேனியைத் தழுவ, சற்று இறுக்கம் தளர்வதை உணர்ந்தான். “என்னப்பா..., உயிரை காப்பாத்திய இவரே..., நம்ம உயிரை எடுக்க முடிவு பண்ணிட்டாருன்னு யோசிக்கிறியா...?”, கடற்கரையை வெறித்தவனது முகம் பார்த்து கேட்டார்.

சட்டென திரும்பி அவர் முகம் பார்த்தவன்..., ‘இல்லை...’ என்பதுபோல் மறுப்பாக தலையசைத்து, அவர் விழிகளை ஏறிட்டான்.

“வினித்..., இவ்வளவு நாளில் கண்டிப்பா தேவியைப் பற்றி நீ புரிஞ்சிருப்ப..., அவளை திமிர் பிடித்தவளா, யாரையும் மதிக்காதவளா, பணத்திமிர் உள்ளவளா, அலட்சியமா..., அசட்டையா, மத்தவங்களைப் பற்றி அக்கறை இல்லாதவளா..., இப்படித்தான் நீ பார்த்திருப்ப, கேள்விப் பட்டிருப்ப”, இதில் நிறுத்தியவர்...,

அவன் புருவங்கள் கேள்வியாய் நெரிய..., “இதையெல்லாம் கண்டிப்பா நான் மறுக்கப் போவதில்லை...”, அவர் வார்த்தைகளை முடித்தபொழுது, அவன் புருவங்கள் மேலேறியது.

“என்னடா..., பெத்த பொண்ணைப் பற்றியே இவன் இப்படி சொல்றானேன்னு நீ நினைக்கலாம்..., ஆனால் அதுதான் உண்மை....”, இப்பொழுது அவன் முகம் பாராமல், கடற்கரை பக்கம் திரும்பியவர், ஆழமாக மூச்சை இழுத்து விட்டார்.

அவனோ..., அவரையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். இவ்வளவு நேரம் இயல்பாக இருந்த ஸ்ரீராமின் முகம், நொடியில் கலங்கிப் போக, இமையோரம் ஒரு துளி நீர் பளபளத்தது.

“ஐயோ..., சார்..., என்ன இது..., குழந்தை மாதிரி...?”, அவன் பதறிப் போக, “கொஞ்சம் காலார நடக்கலாம் வினித்...”, கை ஊன்றி எழுந்துகொண்டார்.

மறுபேச்சின்றி அவரைப் பின்தொடர, “தேவியை நல்லா கவனித்தால் ஒரு விஷயம் உனக்கு நல்லா புரியும்..., அது என்னன்னா..., அவளுக்கு நட்பு என்று எந்த உறவுமே கிடையாது. அது அவளோட தப்பில்லை..., அவ மனசுக்குள் விதைத்துவிட்ட விதையின் பயன் இது.

“எப்பொழுதுமே தனிமைதான் அவளோட துணை. எந்த உணர்வுகளையும் அவள் வெளிக்காட்டி நான் பார்த்ததே இல்லை. சந்தோஷமா, துக்கமா, கவலையா, யோசனையா..., இப்படி எதையுமே அவளுக்கு பகிர்ந்துக்க ஆள் கிடையாது.

“கோபத்தை மட்டுமே அவ அதிகமா வெளிக்காட்டி இருக்கிறாள்..., அது ஏன்னு எனக்குப் புரியலை, புரிய வந்தப்போ..., காலம் ஓடியே போய்டுச்சு. இப்படியே போனால்..., இன்னும் கொஞ்ச நாளில் அவளுக்கு இந்த வாழ்க்கை சலிப்பு தட்டிடும்.

“வாழ்க்கை சலித்துப் போனால்..., வாழ எண்ணம் வருமா?”, அவர் கேள்வியாக நிறுத்த, என்ன பதில் சொல்வது எனத் தெரியாமல் அமைதியாகவே நடந்தான்.

“பணம் மட்டும்தான் வாழ்க்கை என அவ நினைச்சுட்டு இருக்கா. ஆனா..., பணம் மட்டுமே வாழ்க்கை இல்லைன்னு அவளுக்குப் புரியணும். நமக்குன்னு நாலுபேர் வேணும்...,

மனம் விட்டு பேசணும், வாய் விட்டு சிரிக்கணும்..., துக்கம்னா அழணும்..., அடிச்சுக்கணும், பிடிச்சுக்கணும்..., ஊர் சுத்தணும்..., ஓய்வெடுக்கணும்..., இப்படி எல்லாத்தையும் அவ அனுபவிக்கணும்னு நான் விரும்பறேன்..., ஆசைப்படறேன்...

“பொறுப்பான அப்பாவா..., அவளை ஒருத்தன் கையில் பிடித்துக் கொடுத்துட்டா, அவன் அவளை பாத்துப்பான்..., அன்பை, நேசத்தை, வாழ்க்கையை புரிய வைப்பான்னு நானும் ஏங்கறேன்..., எதிர்பார்த்தேன்.

“ஆனா..., நான் பார்த்த ஒவ்வொரு வரனுமே..., பணத்தை மட்டுமே பிரதானமா கொண்டு வந்தது. அப்படி வந்த அனைவரையுமே ஒற்றை பார்வையால் விரட்டி அனுப்பிட்டா. என்னால் எதுவுமே செய்ய முடியலை.

“அவளை நான் கண்டித்து வளத்திருந்தால்..., என்னால் இப்பொழுதும் அதைச் செய்ய முடியும். ஆனால்..., அவ விருப்பப்படியே அவளை வளத்துட்டேன்.... இப்பவும் அவளிடம் அழுத்திச் சொல்ல என்னால் முடியவில்லை.

“வரவனும்..., அவமேல் அன்பையும் அக்கறையும் செலுத்துவான்னு பார்த்தால், நல்லா நடிகனுன்களா இருக்காங்களே தவிர, அவ குணத்தை மாத்தவோ, அனுசரிக்கவோ தயாரா இல்லை.

“இப்போ பூதாகரமான பிரச்சனையே..., இன்னும் ரெண்டு மாசத்தில் அவளுக்கு திருமணம் நடந்தாகணும்..., அப்படி நடக்கவில்லை என்றால், அவ வாழ்க்கையில் திருமணம் என்ற ஒன்று நடக்காமலே போய்விடும்னு சொல்லிட்டார்...”, இதைச் சொல்லும்பொழுதே அவர் தொண்டை கமற, வார்த்தைகள் தடுமாறியது.

தன்னை மீட்டுக் கொண்டவர், “எனக்கு என்ன செய்யிறதுன்னே தெரியலை..., ஜோதிடம், ஜாதகம் இதையெல்லாம் நம்பவில்லை என்றாலும்..., இப்படி ஒரு விஷயத்தை அசட்டை செய்யும் அளவுக்கு இந்த

அப்பாவுக்கு தெம்பில்லை வினித்....", நடையை நிறுத்தியவர், அவன் கரத்தை பற்றிக் கொண்டார்.

அதில் ஒரு கெஞ்சல் வெளிப்பட்டது. 'இதற்கும் தனக்கும் என்ன சம்பந்தம்? இதில் தான் எங்கே வந்தோம்...?', யோசனையோடு அவரை ஏறிட,

"இருபத்தைந்து வருடமாக யார் பேச்சையும், யார் உணர்வுக்கும், யார் வார்த்தைக்கும் கட்டுப்படாதவள், கண்டுகொள்ளாதவள், முதல் முறையாக ஒரு ஆண்மகனை மதிப்பதும், பேச்சை கேட்பதும் உண்மை என்றால்..., அது உன்னிடம் மட்டும்தான்....", அவர் கண்களில் எதிர்பார்ப்பு நிறைந்தது.

"இதற்காக மட்டும் திருமணம் செய்துகொள்ள முடியுமா சார்...?", கேள்வியாக நிறுத்தினான்.

"இதற்காக மட்டும் திருமணம் செய்ய முடியாதுன்னு எனக்கும் தெரியும் வினித். என் மகளுக்கு வாழ்க்கையின் அழகான பக்கங்களை உன்னால் உணர்த்த முடியும்னு நான் நம்பறேன்...".

அந்த பதிலில் விரக்தியாக சிரித்தவன்..., "அது என்னால் முடியும்னு நீங்க நினைக்கறீங்களா?".

"ஒரு விஷயத்தின் அருமை, அதற்காக ஏங்குறவங்களுக்குத் தெரியாமல் வேற யாருக்குத் தெரியும் வினித்....", இந்த பதிலில் திகைத்துப் போனான்.

அவன் வாயடைத்துபோய் அவரைப் பார்க்க, "உனக்கு நான் ஒரு வாக்கு கொடுக்கறேன் வினித். தேவி கண்டிப்பா உனக்கு ஒரு நல்ல மனைவியா ஒரு நாள் மாறுவா. அவளை மாற்ற உன்னால் மட்டுமே முடியும். கண்டிப்பா உன்மேல் அவளுக்கு ஒரு சின்ன பொறி இருக்கு, அதை கவனமா நீ ஊதினால்..., அது நெருப்பா வளர வாய்ப்பு அதிகம்.

"அந்த நெருப்பை எப்படிக் கையாள வேண்டும் என்பது உனக்கு நான் சொல்லிக் கொடுக்க வேண்டிய அவசியம்

கிடையாது. எனக்கு நூறு சதவீதம் நம்பிக்கை இருக்கு..., அவளை உன்னால் மாற்ற முடியும்...”, நம்பிக்கையாக உரைத்தார்.

“உன் தோளில் நான் சுமத்துவது பெரிய பொறுப்பு என்பது எனக்குத் தெரியும் வினித். அவ ஒரு குழந்தை..., என்ன..., பிடிவாதமான குழந்தை. பாசம் என்ற விஷயம் எப்படி இருக்கும் எனத் தெரியாத குழந்தை, அதை காட்டத் தெரியாத குழந்தை..., ஒரு முறை நீ அவளுக்கு அதை உணர்த்திட்டா போதும்...

“அதற்குப் பிறகு..., அந்த பாசம் உனக்கு பல மடங்கா திரும்பக் கிடைக்கும்...”, தன் மகளின் வாழ்க்கைக்காக அவனிடம் யாசிக்கும் நிலையில் அவர் இருந்தார்.

எங்கே அவன் மறுத்துவிடுவானோ, ஒதுக்கிவிடுவானோ... என மனம் முழுக்க ஒருவித பயம் அவரை கவ்விக் கொண்டது.

“சார்..., உங்களுக்கு என்னைப் பற்றி என்ன தெரியும்? எந்த நம்பிக்கையில் உங்க பொண்ணோட வாழ்க்கையை என்னிடம் ஒப்படைக்க முடிவெடுத்தீங்க?”, மனதுக்குள் நெருடிய முதல் விஷயத்தை கேட்டான்.

“நான் விடலை பையன் கிடையாது வினித். என் ஐம்பத்தைந்து வயது அறிவு முதிர்ச்சியில், ஒருவன் நல்லவனா கெட்டவனா என்பதைக் கூடவா கணிக்க முடியாது. உன்னைப் பற்றியே உனக்கு ஒரு விஷயம் சொல்லவா?”, அவர் பீடிகையாய் நிறுத்த, அவன் முகத்தில் அதை அறிந்துகொள்ளும் ஆர்வம் சுடர் விட்டது.

“வாழவே விருப்பம் இல்லாமல், வாழ்க்கையை முடித்துகொள்ளும் எண்ணத்தோடு வீட்டை விட்டு கிளம்பிய நீ..., உன் படிப்பு சான்றிதழ்களை கையோடு கொண்டுவந்ததற்கு என்ன அர்த்தம்? காலை முதல் மாலை வரை கடற்கரை அலையில் கால் கடுக்க நின்றதற்கு காரணம் என்ன? என்னைக்காவது இதை நீ

யோசித்திருக்கிறாயா?", அவர் கேள்வியில் ஸ்தம்பித்து போனான்.

இப்படி ஒரு விஷயத்தை இன்று வரை அவன் யோசித்தது கிடையாது. வாழ்க்கையை முடிக்கும் எண்ணத்தோடு கிளம்பிய தான்..., அந்த நேரத்திலும் சான்றிதழ்களை எடுத்து வைக்கக் காரணம்...., ஏதோ ஒரு விதத்தில் வாழ்ந்துவிட மாட்டோமா என்ற எண்ணத்தை தவிர வேறு எதுவாக இருக்கும்?' தனக்குத் தானே கேட்டுக் கொண்டான்.

முகம் விகசிக்க..., மெல்லியதாக சிரித்தவன்..., "சரி..., சரி..., ஆனாலும்.., திருமணம் என்பது என் ஒருத்தனின் சம்மதத்தில் முடிவாகும் விஷயம் கிடையாதே சார். அதற்கு முக்கியமா உங்க மகளோட சம்மதம் முக்கியமாச்சே....", தன் சம்மதத்தை மறைமுகமாக அவன் வெளிப்படுத்தினான்.

"சொல்லப்போனால் அந்த பொறுப்பை கூட நான் உன்னிடம் தான் கொடுக்கப் போகிறேன். அவளை திருமணத்துக்கு சம்மதிக்க வைப்பது உன் பொறுப்பு...", அதையும் அவன் பக்கம் தள்ளிவிட திகைத்துப் போனான்.

"ஹையோ சார்..., அவளைப் பற்றி நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியது இல்லை..., அன்னைக்கு எனக்கு நீங்க கொடுத்த அறிவுரையைத்தான், நான் தினமும் நினைத்துக் கொள்கிறேன். எனக்கான கடவுளின் திட்டம் இதுதான் என்றால்..., கண்டிப்பா அதை நான் ஏற்றுக் கொள்கிறேன்", அவனது பதிலில், அவனை ஆரத் தழுவிக் கொண்டார்.

அதே நேரம்..., அவளை அவன் ஒருமையில் உருவகப்படுத்தியதையும் குறித்துக் கொண்டார். உரிமை உள்ள இடத்தில் மட்டுமே இது சாத்தியம் என அவர் எண்ண..., அலுவாகத்தை தவிர வெளியே அவளை அவன் இப்படித்தான் அழைப்பான் என்ற உண்மையை அவர் உணராமல் போனது விந்தையே.

"அப்படிஎன்றால் உனக்கு சம்மதமா....? எப்போ தேவி கிட்டே பேசப் போகிறாய்?", ஆர்வமாகக் கேட்டார்.

‘எப்போ சம்மதம் கேட்கிறார் பார்...’, மனதுக்குள் எண்ணியவன்,

“பேசப்போறேன் இல்லை..., பேசப் போறீங்க. வழக்கம்போல் எப்படி வரனைப் பற்றி சொல்வீங்களோ, அப்படியே சொல்லுங்க..., நான் சம்மதித்துவிட்டேன்னே சொல்லுங்க, மீதியை அந்த ஆண்டவனும், நானும் பாத்துக்கறோம்...”, அவன் முகத்தில் ஒருவித தீர்மானம் தெரிந்தது.

“என் மக உன்னோட சேர்ந்து வாழ்வதை நான் பாக்கணும் வினித்..., உன்மேல் எனக்கு நம்பிக்கை இருக்கு...”, பற்றிய கையை இருவரும் பிரித்துகொள்ளவே இல்லை.

“இன்னொரு முக்கியமான விஷயம் சார்..., உங்க அந்தஸ்த்துக்கு சமமில்லாத யாரையுமே உங்க மகள் மதிக்காதபொழுது, என்னை எப்படி...”, அடுத்த பக்கத்தையும் சிந்திக்கவேண்டுமே...

அவரோ..., “ஒரு பெண்ணுக்கு இணை ஒரு ஆண்தான்..., ஒரு முழுமையான ஆண்மகனைத்தான் எந்த பெண்ணும் விரும்புவாள், எதிர்பார்ப்பாள்..., அதற்கு என் பெண்ணும் விதி விலக்கில்லை...”, மறைமுகமாக எதையோ உணர்த்தினார்.

மாலை மறைந்து இரவும் வந்துவிட்டிருக்க, “உங்க நம்பிக்கையை என்னால் முடிந்த அளவு காப்பாற்றுவேன் சார்...”, உரைத்தவன், “அப்போ நீங்க கிளம்புங்க சார்..., வழக்கத்தை விட லேட் ஆயிடுச்சு....”, அவரை கையோடு அழைத்துக்கொண்டு சென்றவன்..., அவரை காரில் ஏற்றிவிட்டு, டிரைவரிடம் பார்த்து போக சொல்லிவிட்டு கிளம்பினான்.

“நீயும் வாயேன் வினித்..., உன்னை டிராப் பண்ணிட்டு நான் வீட்டுக்கு போறேன்...”, அவர் அழைக்க, “இல்ல சார்..., நான் கொஞ்ச நேரம் இருந்துட்டு வரேன்..., நீங்க போயிட்டு வாங்க...”, திரும்பிச் சென்றவன், பழைய இடத்தில் படுத்துக் கொண்டான்.

கைகள் இரண்டையும் தலைக்கு அணைவாக வைத்தவன், நட்சத்திரங்கள் மின்னிய வானத்தை வெறித்தான். முழு நிலவின் அழகை விட, அதில் தெரிந்த நிழல் உருவங்களும், ஒரு சிறுவனின் ஏக்கப் பார்வையும், ஒடுங்கிய தோற்றமும்..., பெற்றவர்களில் அலட்சியத்தை தாங்க முடியாத ஏக்கமும்..., இப்படியான தோற்றங்கள் உலாவ, இமைகளை மூடிக் கொண்டான்.

மூடிய இமைகளுக்குள் ஐஸ்வர்யாவின் பிம்பத்தை கொண்டுவர முயன்றான். நிச்சயமாக அவனால் முடியவில்லை..., இதழ்கடையில் ஒரு புன்னகையா, விரக்தி பிரதிபலிப்பா..., எதுவென்றே தெரியாத ஒன்று உற்பத்தியானது.

‘ஒன்றரை மாதங்களாக அவளை தினமும் சந்திக்கிறேன்..., ஆனால் கூட அவள் பிம்பம் என் மனதில் பதியவில்லை. அப்படியிருக்க..., அவளோடு எனக்குத் திருமணம்...’ உரக்க சிரிக்கவேண்டும்போல் இருந்தது.

‘இந்த திருமணம் நடக்குமா?’ அவனுக்கென்னவோ நம்பிக்கை இல்லை. அதை ஸ்ரீராமிடம் தெரிவிக்க மனமின்றி அமைதியாகிவிட்டிருந்தான். ஐஸ்வர்யாவின் குணத்திற்கு, தன்னைவிட கீழே இருக்கும் மனிதர்களையே துளி கூட மதிக்காதவள், தனக்கு இணையாக அவனை ஏற்பாளா என்ன?

தொண்ணூற்றுஒன்பது சதவீதம் அவனுக்கு நம்பிக்கை இல்லை. ஆனால் அந்த பத்து சதவீதம்..., அதுவும் ஸ்ரீராமின் வாக்கை மீற முடியாமல் நடந்துவிட வாய்ப்புண்டு.

அப்படி நடந்துவிட்டால்..., அதன் பிறகு தன் வாழ்க்கை எப்படி இருக்கும்? தன்னை அவள் மதிப்பாளா? கண்டிப்பாக அவள் தன்னோடு வரப்போவதில்லை, அப்படியென்றால்..., தான்தான் அவள் வீட்டுக்குச் செல்ல வேண்டும்..., மீண்டும் அடுத்த அத்தியாயமா....?’ நினைப்பே அலுப்பாகவும் சலிப்பாகவும் இருந்தது.

‘அவள் கழுத்தில் நீ தாலி கட்டிவிட்டால்..., அவள் உனக்கு மனைவி..., அவளை நேசிக்கவும், மதிக்கவும்..., உனக்கு கடமை உண்டு’ அவன் மனசாட்சி குரல் கொடுக்க, மீண்டும் விழிகளை மூடிக் கொண்டான்.

‘என் வாழ்க்கை புதைகுழியாகிப் போகுமா? இல்லையென்றால் ஆறாக, நீரோடையாக இருக்குமா? கடலின் அலையென அலைக்கழிக்கப் படுவேனா?’ சிந்தைகளின் தாக்கத்தில் இருந்து அவனால் வெளியேற முடியவில்லை.

அதே நேரம்..., தனக்குப் பழக்கமான காலடியோசைகள் அருகில் கேட்க, விழி திறந்தவனுக்கு முன்னால், அவனைப் பார்த்தவாறு நின்றிருந்தனர் கார்த்திக்கும், குமாரும்.

***

# பகுதி - 8.

தன் நண்பர்களை அந்த நேரம் அங்கே எதிர்பார்த்திராத வினித், சட்டென எழுந்து அமர, அவன் அருகில் நிதானமாக அமர்ந்தான் கார்த்திக்.

“நீங்க பேசிட்டு இருங்க..., நான் பஜ்ஜி ஏதாவது வாங்கிட்டு வரேன்...”. குமார் கிளம்பிவிட, நண்பர்களின் வரவால், அந்த சூழலின் இறுக்கம் குறைவதை உணர்ந்த வினித், கார்த்திகைப் பார்த்து மெல்லியதாக புன்னகைத்தான்.

“நான் இங்கே இருக்கேன்னு யார்டா சொன்னா...?”, வினித் கேட்க,

“சாயங்காலம் சீக்கிரமே ஆபீஸ்ல இருந்து கிளம்பிட்ட, ஆனா ரூம்ல உன்னை காணோம்னு சொன்ன உடனேயே..., நீ இங்கதான் இருப்பன்னு குமார் கூட்டி வந்தான்...”, உரைத்தவன், நம்பனை கூர்மையாக பார்த்தான்.

அவன் பார்வையை உணர்ந்தவன், “என்னடா..., என்னமோ இன்னைக்குத்தான் பாக்குற மாதிரி புதுசா பாக்குற...?”, நிலைமையை எளிதாக்க முயன்றான்.

“இல்ல சும்மாதான்....”, தயங்கியவன்..., “ஆர் யூ ஓகே மச்சான்...?”, அந்த கேள்வியில் சிறு தவிப்பும் எட்டிப் பார்த்தது.

வினித் கார்த்திக்குடன் சென்னைக்கு வந்த புதிதில்..., அவன் அடைக்கலம் முழுவதும் கடற்கரை தான். எப்பொழுதும் ஏதாவது யோசனை..., முகத்தில் கவிழ்ந்திருக்கும் இறுக்கம்..., விரக்தி..., அதை மாற்றுவதற்கு கார்த்திக்கும், குமாரும் மிகுந்த பாடுபட்டார்கள்.

சில நாட்களில் அவனும் தேறிவிட்டான். நீண்ட நாட்களுக்குப் பிறகு வினித் கடற்கரையை நாடவே..., எதுவும் பிரச்சனையாக இருக்குமோ, பழைய நினைவுகளோ என சற்று கவலை கொண்டான்.

கார்த்திக்கின் மனம் புரிந்தவனுக்கு பெருமையாக இருந்தது. தன்னைப் பற்றி சிந்திக்கும் ஒரே ஜீவன்..., தன்னலம் நாடாமல், எதையும் எதிர் பாராமல், நட்பு ஒன்றே முக்கியம் எனக் கொண்டவன், தன்னைப் பற்றி ஆராயவோ, கேள்வி கேட்கவோ முயலாதவன்..., யாருக்கு கிடைக்கும் இப்படி ஒரு நட்பு...,

பூரித்துப் போனவன்...., “நீ இருக்கும்போது எனக்கென்னடா குறைச்சல்..., ஜஸ்ட் இன்னைக்கு பீச்க்கு வந்தால் நல்லா இருக்கும்னு தோணிச்சு..., அதான் வந்தேன். மற்றபடி எதுவும் இல்லை...”, தன் குழப்பத்தை ஒதுக்கிவிட்டு நட்பில் இறங்கினான்.

ஸ்ரீராம் கேட்டது எந்த விதத்தில் நடைபெறும் எனத் தெரியாமல், தேவையில்லாமல் ஏன் விஷயத்தை வெளியிடவேண்டும் எனத் தயங்கியே அவ்வாறு செய்தான். ஒரு வேளை அது நடக்காமலே போய்விட்டால், பேசிய பேச்சுக்களை திரும்பப்பெற முடியாதே..., எனவே பேச்சுவார்த்தை அடுத்த கட்டத்துக்குச் சென்றால் சொல்லிக் கொள்ளலாம் என விட்டுவிட்டான்.

அதே நேரம்..., குமார் கையில் இரண்டு தட்டு பஜ்ஜிக்களோடு வர, பேசியவாறே ஆளுக்கொன்றை எடுத்து கடித்துக் கொண்டார்கள்.

அப்பொழுதுதான் நினைவிற்கு வந்தவனாக..., அவசரமாக தன் அலைபேசியை எடுத்துப் பார்த்தான் வினித். கார்த்திக்கின் தங்கை வர்ஷாவிடமிருந்து மூன்று அழைப்புக்கள் வந்திருப்பதை பார்த்தவன், புருவம் சுருக்கி யோசனைக்குச் சென்றான்.

‘என்னவாக இருக்கும்...? தேவையில்லாமல் வர்ஷா இத்தனை கால் செய்ய மாட்டாளே..., எதுவும் அவசரமோ...?’ ஸ்ரீராமிடம் பேசிகொண்டிருந்த காரணத்தால், அலைபேசி ஒலித்தும் அதை எடுக்காமல் தவிர்த்திருந்தான்.

‘இப்போ எப்படி பேச..?’, சிந்தித்தவன்..., “கார்த்திக்..., ஒரு அர்ஜன்ட் கால் பேசிட்டு வரேன்...”, உரைத்தவன் எழுந்து

நடந்தவாறே, வர்ஷாவுக்கு அழைத்தான்.

அவன் அழைப்பு சென்று சேர்ந்த அடுத்த நொடி, அவள் அதை செவிமடுக்க, தன் அழைப்புக்காக அவள் காத்துகொண்டிருப்பது புரிந்தது.

“அண்ணா..., எப்படிண்ணா இருக்கீங்க? சாரிண்ணா பிஸியா இருந்தீங்களா? டிஸ்டப் பண்ணிட்டேனா...?”, தவிப்பாய் கேட்டாள்.

“நான் ரொம்ப நல்லா இருக்கேம்மா. டிஸ்டப் பண்ண ஆளில்லாமல் இருக்கேன்..., அப்படி இருக்கும்போது..., சரி சொல்லும்மா..., அப்படி என்ன கார்த்திக்குக்கு தெரியக் கூடாத விஷயம்...?”, நேரடியாக விஷயத்துக்கே வந்தான்.

ஒரு நொடி அமைதியானவள்..., “அது வந்துண்ணா..., அண்ணா கிட்டே இல்லையே....”, படபடத்தாள்.

“அவன் தூரமாதான் இருக்கான்..., நீ சொல்லும்மா...”,

“அண்ணா..., எனக்கு நிச்சயம் பண்ணியிருக்க வரன் வேண்டாண்ணா...”, இதைச் சொல்லும்பொழுதே அவள் குரல் சற்று நடுங்கியது. அழுகையும் எட்டிப் பார்த்தது.

புருவம் சுருக்கியவன்..., “ஏம்மா..., உனக்கு மாப்பிள்ளையை பிடிக்கலையா...?”,

“ஐயோ அதெல்லாம் இல்லண்ணா...”, அவன் கேள்வி முடியும் முன்னமே, பதில் வேகமாக வந்தது.

“வேற என்னம்மா...? சொல்லு...”, தூண்டினான். அவனுக்குத் தெரியும், வர்ஷாவும்..., அவளுக்கு நிச்சயம் செய்திருக்கும் ராஜேஷும் அலைபேசியில் தங்கள் வாழ்க்கைக் கனவை வளர்க்கிறார்கள் என்று. அப்படியிருக்கையில்..., திடீரென என்னவாயிற்று...?’ அவன் குழப்பத்துக்கு இதுதான் காரணம்.

“அண்ணா உங்ககிட்டே சொல்லலையா...? ரெண்டு நாளைக்கு முன்னாடி..., திடீர்ன்னு அவரோட அம்மா வந்து..., மாப்பிள்ளைக்கு வைரத்தில் ஒரு மோதிரமும்,

பொண்ணுக்கு சின்னதா ஒரு மூக்குத்தியும் போடுங்கன்னு சொல்லிட்டு போயிட்டாங்கண்ணா…

“ஏற்கனவே எங்க சக்திக்கு மீறிதான் நகை, வண்டி…, வெள்ளிஜாமான்னு பேசியிருக்காங்க. இப்போ திடீர்ன்னு…, அண்ணாவுக்கு எவ்வளவுதான் பாரத்தை ஏத்த முடியும்…, அதான்….”, இப்பொழுது அழுகை வெடித்தது அவள் குரலில்.

திருமணத்துக்கு இன்னும் பதினைந்தே நாட்கள் மீதமிருக்க, என்ன இது புதுக் குழப்பம்…?’ அவனுக்கே கவலையாகிப் போனது. கூடவே கோபமும் எட்டிப் பார்க்க,

“ஓ…, இதுக்கு மாப்பிள்ளை சார் என்ன சொல்றார்….?”, அவன் கோபத்தை அடக்கிக் கொண்டு கேட்டான்.

“அவருக்கு இது தெரியாதுண்ணா…, அப்படியே தெரிந்தாலும் பிரச்சனைதான் பெருசாகும்…, அதான்…, நீங்களே பேசி….”, இதற்குமேல் அவளால் சொல்ல முடியவில்லை.

திருமண நிச்சயம் முடிந்த அன்று முதல்…, கணவனாக மனதுக்குள் வரித்துவிட்ட அவனை வேண்டாம் என சொல்வது அவளுக்கு பெரும் தயக்கமாகவும், நெஞ்சை அறுக்கும் வலியாகவும் இருந்தது.

ஆனால்…, குடும்ப நிலை, தனக்கு கீழ் இருக்கும் தங்கை, அண்ணனின் வயது…, என நினைக்கையில்…, தன் வலியை தாங்கிக்கொள்ள அவள் முயன்றாள்.

“அப்படியா…, சரி…, நீ கவலைப்படாமல் இரு…, இந்த அண்ணா பாத்துக்கறேன்…, நீ கல்யாணப்பொண்ணா லட்ச்சணமா கனவு மட்டும் காண்…, எல்லாம் நல்லபடியா நடக்கும்…”, அலைபேசியை வைத்தவனுக்கு மீண்டும் மனம் பாரமாகிப் போனது.

ஏற்கனவே கார்த்திக் தங்கையின் திருமணத்துக்காக பணத்துக்கு அல்லாடுவது அவனுக்குத் தெரியும். அப்படியிருக்க…, மீண்டும் ஒரு பாரமா….? யோசனையாக அவனை நெருங்கினான்.

‘பார்த்துக் கொள்ளலாம்..., நான் அவனுடன்தானே இருக்கிறேன்...’, முடிவெடுத்தவன் நிம்மதியாக உணர்ந்தான்.

அங்கே குமாரும் கார்த்திக்கும் தீவிரமாக எதைப் பற்றியோ விவாதித்துக் கொண்டிருக்க, அவர்கள் அருகில் சென்று அமர்ந்தவன், “டேய்..., எதுக்குடா இப்படி அடிச்சுக்கறீங்க? சொல்லிட்டு சண்டை போடுங்கடா...”, அவர்கள் இடையில் புகுந்தான்.

“டேய் மச்சான்..., இவன் என் கையால் அடி வாங்காமல் போக மாட்டாண்டா...”, கோபமாகப் பொரிந்தான் கார்த்திக்.

“அட போ சார்..., பதில் சொல்ல முடியலன்னா அடிப்பியா...? நல்ல கதையா கீதே...”, குமார் நக்கலடித்தான்.

“அதான் பதில் சொல்லிட்டேனேடா...”,

“அட..., அவன் என்ன கேட்டான்..., அதுக்கு நீ என்ன சொன்ன?”, வினித் கார்த்திக்கிடம் கேட்க,

“கத்திரிக்காய்க்கு இங்கிலீஷ்ல என்னன்னு கேட்டான்..., பிரிஞ்சால்னு சொன்னேன்...”,

“சரியாத்தனடா சொல்லியிருக்கான்...”, வினித் குமாரின் பக்கம் திரும்ப,

“நீ மிச்சத்த கேளு சார்...”.

“சொல்லுடா...”,

“அதுக்கு இந்த குமார் என்ன சொல்லறான் தெரியுமா...? எங்க ஊர்ல எல்லாம் கத்தரிக்காயை பீன்சுன்னுதான் சொல்லுவோம்னு சொல்றாண்டா. நான் பீன்ஸ் வேற காய்னு சொன்னா..., அப்போ பீன்ஸை தமிழ்ல சொல்லுன்னு உயிரை வாங்கறாண்டா....”, கார்த்திக் பரிதாபமாக சொல்லி முடிக்க,

வினித் வயிற்றை பிடித்துகொண்டு சிரிக்கத் துவங்கினான். அவனால் சிரிப்பை அடக்கவே

முடியவில்லை. “அதெப்படிடா உன்னால மட்டும் இப்படியெல்லாம் முடியுது…?”, வாய்விட்டு சிரித்தவாறே குமாரிடம் கேட்க,

“ம்கும்…, புத்திசாலியா இருந்தாலே உங்களுக்கு பொறுக்காதே. கார்த்தி சார்க்கு பதில் சொல்ல முடியலல்ல…, அப்போ நான் சொன்னது தானே சரி. பீன்சுன்னா கத்தரிக்காய் தானே…”, குமார் கேட்டு முடிக்கவே…, கொலைவெறியில் அவனை அடிக்கத் துரத்தியிருந்தான் கார்த்திக்.

அவர்கள் இருவரும் ஓட…, தானும் அவர்களோடு இணைந்துகொண்டான். நண்பர்களின் கொட்டத்தில் சற்று நேரம் தன் கவலைகளை மறந்தவன், இரவு மொட்டை மாடியில், நிலவைப் பார்த்தவாறு படுத்திருக்க,

‘ஸ்ரீராம் சார் ஐஸ்வர்யாவிடம் எதையாவது பேசியிருப்பாரா? நாளைக்கு என்னை கடித்துக் குதறாமல் இருப்பாளா?’ சிந்தையை கலைத்தது…, அந்த நேரமும் கார்த்திக்கும், குமாரும் சண்டை போட, அந்த வழக்கை கேட்டவாறே உறங்கிப் போனான்.

இங்கே அவன் நிம்மதியான நித்திரையில் இருக்க, முழுதாக உறக்கம் தொலைத்திருந்தாள் ஐஸ்வர்யா. தோட்டத்தின் நடுவில் அமைத்திருந்த ஊஞ்சலில் அமர்ந்திருந்தவளுக்கு, நிலவின் குளுமையோ, தென்றலின் தீண்டலோ, இரவின் ஆளுமையோ எதுவும் அவளைத் தணிக்க முடியவில்லை.

“இந்த அப்பாவுக்கு கண்டிப்பா கிறுக்குதான் பிடிச்சிருக்கு…”, உரக்க சொன்னவள், கால்களை உந்தி தன் கோபத்தை வெளிப்படுத்த, ஊஞ்சலோ பேயாட்டம் போட்டது.

தன் அறையில் இருந்து அதைப் பார்த்தாலும்…, தன் மகள் தான் சொன்னதைப் பற்றி சிந்திப்பதே போதுமென்று படுக்கையில் விழுந்தார்.

“ஷிட்...”, மீண்டும் கத்தியவள், தன் கோபத்தை கட்டுப்படுத்த முடியாமல் திணறினாள்.

“அவருக்கு மூளை இருக்கா இல்லையா...”, அவளால் அவர் சொன்னதை ஜீரணிக்கவே முடியாமல் திண்டாடினாள்.

இமைகளை மூடி தன் கோபத்தை கட்டுப்படுத்த, மூடிய இமைகளுக்குள் தன் இருபக்க பேண்ட் பாக்கெட்டில் கைகளை நுழைத்தவாறு, அழுத்தமாக நின்ற அவன் தோற்றம் கண்ணுக்குள் வர, பட்டென விழிகளை திறந்து கொண்டாள்.

அவனோ இவள் பிம்பம் தெரியாமல் திகைக்க, இவளுக்கோ அப்பட்டமாக தன் முன் அவன் நிற்பது போன்ற தோற்றம் தோன்ற..., அப்படியென்றால் அவள் மனதுக்குள் அவன் இருக்கிறானா?

“ராஸ்க்கல்...”, பற்களை கடித்துக் கொண்டாள்.

சட்டென ஊஞ்சலில் இருந்து இறங்கியவள், தோட்டத்தை சுற்றிலும் போட்டிருந்த நடைபாதையில் நடக்கத் துவங்கினாள். தூய்மையான வெள்ளையில் சிறிய வயலட் நிற பூக்கள் வாரியிறைத்த மெல்லிய இரவு உடையை அவள் அணிந்திருக்க, தலையை விரித்து விட்டிருந்ததால் அலையலையாக கூந்தல் காற்றுக்கு ஆட..., நிலவின் ஒளியில் ஒரு மோகினியென இருந்தது அவள் தோற்றம்.

நெருக்கத்தில் பார்த்தால் எந்த ஆண்மகனையும் ஒரு நொடி தடுமாற வைத்துவிடும் வசீகரத்தில் இருந்தாள். ஆனால் அதற்கு மாறாக அவள் முகமோ..., கோபத்தில் ஜொலித்தது.

அவள் சிந்தையோ..., தந்தை தன்னிடம் பேசியதில் நிலைத்தது. எப்பொழுதும் இரவு முடித்தவுடன் உறங்கச் செல்லும் தந்தை, அன்று தன்னிடம் பேச விரும்பி ஹாலில் சோபாவில் காத்திருக்க, தானும் உணவை முடித்துவிட்டு அவர் அருகில் சென்றாள்.

சென்றது எவ்வளவு தவறென்று இப்பொழுது வருந்தினாள்.

“டேட்..., டூ யூ வாட் டு டெல் சம்திங்...”, கேள்வியாக அவர் அருகில் அமர்ந்தாள்.

“ம்...”, தலை அசைத்தவர்..., ஒரு தீர்மானத்தோடு நிமிர..., அவர் முகத்தை வைத்தே விஷயத்தை யூகித்தவள்...,

“ஓ டேட்..., மறுபடியும் சேம் பல்லவி..., இப்போ யார் பையன்...? பேர் என்ன...? நாளைக்கு என் முன்னாடி வழிஞ்சுட்டே நிக்கப் போறானா...? நீங்க சொன்னால் கேக்கவே மாட்டீங்களா? எனக்கு இப்போ கல்யாணம் வேண்டாம்..., எனக்கு இன்ட்ரஸ்ட் இல்லை....”, அலுப்பும், சலிப்புமாக உரைத்தாள்.

அவள் புலம்பலை பொறுமையாக கேட்டவர்..., “இந்த முறை மாப்பிள்ளையை நான் முடிவு பண்ணிட்டேன்...”, அதே பொறுமையோடு பதில் உரைத்தார்.

“வாட்..., முடிவு பண்ணிட்டீங்களா? நெவர் டேட்..., என் சம்மதம் இல்லாமல் எதுவும் முடிவாகாது...”, இருக்கையில் இருந்து எழுந்துகொண்டாள்.

“சரி..., மாப்பிள்ளை யார்ன்னே கேக்காமல் போறியே...”, அவளைத் தேக்க,

“ம்ச்..., எப்படியும் காலையில் வந்து வழியப் போறான்..., பிறகென்ன..., லீவ் இட்...”, அசட்டையாக தோளைக் குலுக்கினாள்.

“இந்த முறை அப்படி நடக்காது...”, அவரும் அதே அசட்டையாகவே உரைக்க,

“ம்ஹும்..., பார்க்கலாம்...”, அவள் நடையைத் தொடர,

“வினித் தான் நான் பார்த்திருக்கும் மாப்பிள்ளை”, அவர் குரல் காதில் விழ, அடுத்த அடி எடுத்து வைக்க முடியாமல் அவள் கால்கள் நின்று போனது.

‘இதைத்தான் நான் எதிர் பார்த்தேன்...’, ஸ்ரீராமின் மனம் கும்மாளமிட்டது. இதற்கு முன்பு வரைக்கும், மாப்பிள்ளை இவன் எனச் சொன்னால்..., ‘அப்படியா...’ என கேட்டுவிட்டு

ஒதுங்கிவிடும் மகள், முதல் முறையாக உறைகிறாள் என்றால் உற்சாகம் பிறக்காதா என்ன.

“கம் அகெயின்…”, சட்டென திரும்பி அவள் படபடக்க,

“வினித்தை தான் நம்ம வீட்டு மாப்பிள்ளையா முடிவு பண்ணியிருக்கேன்னு சொன்னேன்…”, தெளிவாக, அழுத்தம் திருத்தமாக உரைத்தார்.

“ஆர் யூ மேட் டேட்…”, அதிர்ச்சி விலகாமல் கேட்டாள்.

“இந்த விஷயத்தில் எனக்கு ‘மேட்’ தாம்மா…”,

“எப்படி டேட்…, இதை…, அவனை…, ஹி இஸ்…”, அவளால் எப்படி வரையறுக்க என்றே தெரியவில்லை. சொல்லப்போனால் பேரதிர்ச்சியாகத்தான் இருந்தது.

யாரையோ…, எவனையோ…, எப்படியோ…, அவள் கற்பனைகள் பயணிக்க, தனக்குக் கீழே வேலை பார்க்கும் ஒருவனை, தன் கணவனாக அவளால் கற்பனை செய்து பார்க்கக் கூட முடியவில்லை.

அதிர்ச்சியில் பேச்சு கூட வர மறுத்தது. ‘ச்சீ…, போயும் போயும் அவனா? அவனையா…? முடியாது…’, என்பன போன்ற எந்தவிதமான எதிர்மறையான வார்த்தைகள் எதுவும் அவள் வாயில் இருந்து வெளிப்படாததே, ஸ்ரீராமுக்கு பெரிய ஆறுதலாக இருந்தது.

அதே நேரம்…, இந்த அளவு அதிர்ச்சியை அவளிடம் அவர் எதிர்பார்த்திருக்கவில்லை. குரல் கூட நடுங்கும் அளவு…, வார்த்தைகள் தடுமாறும் அளவு…, அந்த சூழலில் அவளுக்கு தனிமை கொடுப்பதே சரியெனத் தோன்ற…,

“நிதானமா யோசிச்சு சொல் தேவி. இதுவரைக்கும் உனக்கு எத்தனையோ வரன்களை கொண்டு வந்துவிட்டேன்…, முடிவை உன் கையிலேயே கொடுத்தேன்…, ஆனா நீ…, எல்லாத்தையும் அலட்சியம் பண்ணிட்ட. இப்போ நான் அகெயின் ஒரு வரன் கொண்டு வந்திருக்கேன்…, ஆனா நான் ஒரு தீர்மானத்துக்கு வந்துட்டேன்…, சோ…”, வார்த்தைகளை முடிக்காமலே சென்றுவிட்டார்.

அதற்குமேல் ஒரு வார்த்தை பேசினாலும்..., தான் பேசிய வார்த்தைகள் பூமராங் போல், தன் மகள் வாயால் வந்து தன்னைத் தாக்கும் அபாயம் இருப்பதால்..., வேகமாக கிளம்பிவிட்டார்.

அவர் என்னவோ சொல்லிவிட்டு சென்றுவிட்டார்..., ஆனால் அதைக் கேட்டவளுக்குத்தான் இருப்பே கொள்ளவில்லை. ‘எத்தனையோ கோட்டீஸ்வரன்களை புறங்கையால் தள்ளி தான் தவிர்த்திருக்க, என்ன எண்ணத்தில் இதைச் செய்கிறார்...?’, அறைக்குச் சென்றவளுக்கு ஒரு நொடி கூட அறைக்குள் இருக்க முடியவில்லை.

இந்த நிமிடம்..., பல கோட்டீஸ்வரன்களை அப்படிச் செய்தவள், ஒற்றை வார்த்தையில் இந்த ப்ரப்போசலை தவிர்த்திருக்கலாம் என்பதை அறியாமல் போனது விந்தையே.

ஒருவேளை..., அவள் ஆழ்மனம் அவனை நோக்கிச் செல்லத் துவங்கிவிட்டதன் அறிகுறியா இது? இதை அவள் உணராமல் போனதேன்...?

மூச்சடைக்கும் உணர்வு. அதிலும்..., நாளை காலையில் அவன் தன்னை எப்படிப் பார்ப்பான் என்பதை நினைத்தாலே..., அப்படியே பற்றிக்கொண்டு எரிந்தது.

பல கோட்டீஸ்வரன்களே வாயைப் பிளந்துகொண்டு தன் பணத்துக்காக வந்திருக்கையில், இவன் எம்மாத்திரம்..., மனம் காந்தியது. அறையை விட்டு வெளியேறினால் இந்த உணர்வு போகுமா என எண்ணியவளாக தோட்டத்தில் தஞ்சம் புகுந்தாள்.

பலன் என்னவோ பூஜ்யமாகத்தான் இருந்தது. கால்கள் களைக்கும் வரைக்கும் நடந்தவள்..., இதற்குமேல் முடியாது என கால்கள் கெஞ்சும் வேளையில் தன் அறைக்குள் நுழைந்து படுக்கையில் விழுந்தாள்.

‘நாளை எப்படி இருக்கும்...?’, இந்த நினைவு மட்டும் நீங்காமல் மனதில் ரீங்காரமிட்டது.

இருவரும் ஒரே விதத்தில் விடியலை எதிர்நோக்க..., அந்த விடியல் எப்படி இருக்கும்?

***

# பகுதி - 9.

தன் அறைக்குள்...., தன் மடிக்கணினியில் விழிகள் பதிந்திருந்தாலும், நொடிக்கொருமுறை வாசலைத் தழுவும் விழிகளை உணராமலே தன் வேலையைச் செய்வதாக பாவலா காட்டிக் கொண்டிருந்தாள் ஐஸ்வர்யா.

பார்வை அவளை அறியாமலேயே கடிகாரத்தில் பதிய, 'கடிகாரம் ஓடவில்லையோ...', தனக்குள் எண்ணமிட்டவள், கைகடிகாரத்தையும் பார்க்க, அதுவும் ஒன்பது இருபத்தைந்தை காட்ட, ஒரு ஓரம் அலுப்பாக உணர்ந்தாலும், அது எதனால் என்பதை ஆராயாமல், விழியை கணினியில் பதித்தாள்.

அடுத்த நிமிடம் மீண்டும் கண்கள் வாசலைத் தழுவ, 'ஐயாவுக்கு அதுக்குள்ளே கொம்பு முளைச்சுடுச்சு போல..., எனக்குத் தெரியுமே...', கோபமும் எட்டிப் பார்த்தது.

ஆனால் அவள் மனசாட்சிக்குத் தெரியும்..., அவன் எப்பொழுதும் பத்து மணிக்கு முன்பாகத்தான் அலுவலகத்துக்குள் நுழைவான் என்று. அதை ஒத்துகொள்ளத்தான் அவளது ஈகோ இடம் கொடுக்கவில்லை.

ஒரு வேளை..., அவளுக்குள்ள ஆர்வம் அவனிடம் இல்லை என்று எண்ணுகிறாளோ....? இதை அவளிடம் யார் சொல்லி அடி வாங்கிக் கட்டுவது..., மனசாட்சி பவ்யமாக பதுங்கிக் கொண்டது.

அவள் பரபரப்பை காணாமல் கண்டுகொண்டிருந்தார் ஸ்ரீராம். 'தன் முடிவில் தவறில்லை...' என அவரே தேறிகொண்ட நிமிடங்கள் அவை.

தன் மகள் வாழ்க்கையை விளையாட்டாய் எடுத்துகொள்ள மாட்டாள் என்ற நம்பிக்கை. தன் வருங்கால கணவனை ஆர்வமாய் எதிர்கொள்கிறாள் என்ற எதிர்பார்ப்பு கலந்த ஆர்வம்..., தன்னை கட்டுபடுத்திக் கொண்டு அமர்ந்திருந்தார்.

‘என்னம்மா..., யாரையோ எதிர்பாக்குற போல...’ என விளையாட்டாய் கேட்டு நிலைமையை சிக்கலாக்கிக் கொள்ள விரும்பாதவராக, தனக்குக் கொடுத்த வேலையை முனைப்பாக கவனிப்பதாக அமர்ந்துகொண்டார்.

அவருக்குமே வினித், ஐஸ்வர்யாவை எப்படி எதிர்கொள்வான் என்ற எதிர்பார்ப்பு இருக்கத்தான் செய்தது. அதை வெளியே காட்ட முடியாமல் அமர்ந்திருந்தார்.

அந்த நேரம்..., சரியாக கார்த்திக்கின் பைக் உள்ளே நுழைய, பின்னிருக்கை காலியாக இருப்பதைப் பார்த்தவளுக்கு..., இப்பொழுது வினித் கையில் கிடைத்தால் கடித்துக் குதறும் வேகம் இருந்தது.

ஒரு வழியாக இவர்களது பொறுமையை முழுதாக சோதித்துவிட்டு, அவனிடமிருந்து ஒரு செய்தியே அவர்களை எட்டியது.

“எக்ஸ்கியூஸ்மீ மேம்...”, சந்தியாவின் அழைப்பை அந்த நேரம் இடையூறாகவே கருதியவள், எரிச்சலுடனே அவளை ஏறிட்டாள்.

‘எஸ்...’ ஒரு பார்வை மட்டுமே ஐஸ்வர்யாவிடம் இருக்க, அதையே சம்மதமாக ஏற்றவள்...,

“மேம்..., வினித் சார் இன்னைக்கு லாயரை பாத்துட்டு லேட்டா வரதா இன்ஃபாம் பண்ணார். அதான்.., மெஸ்சேஜ்ஜய் உங்ககிட்டே கன்வே பண்ணலாம்னு வந்தேன்...”,

“இப்போ லாயரை பாக்க என்ன அவசியம் வந்ததாம்...?”, சந்தியா சொல்லி முடிக்கும் முன்பே..., வார்த்தைகள் தெறித்துவந்து விழ, திகைத்துப் போனாள்.

“மேம்..., லாஸ்ட் வீக்கே...”, கடந்த வாரமே லாயரிடம் லேபர் ரிட்டையர்மென்ட் விஷயமாகப் பேச அப்பாயின்மென்ட் வாங்கச் சொல்லி தன்னிடம் உரைத்ததே ஐஸ்வர்யாதான் என்பதை சொல்ல முடியாமல், சொன்னால் அவளது கடும்

கோபத்துக்கு ஆளாக வேண்டி வருமே என அஞ்சியவளாக பேச்சை நிறுத்திக் கொண்டாள்.

“லாஸ்ட் வீக் சொன்னால் போதுமா…? நேத்தே என்கிட்டே ஞாபகப்படுத்தியிருக்க வேண்டாம்…?”, எரிந்து விழ, ஒரு அவஸ்தையான உணர்வோடு நின்றிருந்தாள்.

நேற்று ஞாபகப்படுத்தியிருந்தால்…., ‘ஒண்ணு ஒண்ணையும் நான் சொன்னால்தான் செய்வீங்களா? அப்போ உங்களுக்கா புத்தி கிடையாதா..?’ என எகிறியிருப்பாள்…, இதையும் மனதுக்குள் எண்ணியவளாக கையைப் பிசைந்தாள்.

“சாரி மேம்…, இட்ஸ் அவர் டியூட்டி…, சோ…, இனிமேல் இது ரிப்பீட் ஆகாது”, தன்மேல் தவறே இல்லாதபொழுதும் சந்தியா மன்னிப்பை வேண்ட, ஶ்ரீராமுக்குத்தான் ஒரு மாதிரியாக போயிற்று.

‘நீ போ’ என்று அவரால் சொல்லவும் முடியாது…, அமைதியாகவே அங்கே நடப்பதைப் பார்க்க, “லாயர் என்ன சொன்னாராம்…?”, வேறு விஷயத்துக்குத் தாவினாள்.

“வினித் சார் வந்த பிறகு உங்ககிட்டே பேசுறதா சொன்னார் மேம்…”, பணிவை கைவிடாமலே உரைக்க, மையமாக தலையசைத்தவள், அவளை போகச்சொல்லி தலையசைக்க, விட்டால் போதுமென்று கிளம்பிவிட்டாள்.

ஐஸ்வர்யா தன் பொறுமையை இழுத்து பிடித்து கட்டிக் கொண்டிருக்க, அறையை விட்டு வெளியேறிய சந்தியா.., கார்த்திக்கை சந்திக்கச் சென்றாள்.

“கார்த்திக்…”, அவன் அறையை தள்ளிக்கொண்டு உள்ளே நுழைய, “சொல்லுங்க…”, மரியாதையாக அவளை ஏறிட்டான்.

அவன் பார்வை கண்ணியமாக அவளைப் பார்க்க…, உள்ளுக்குள் சுருண்ட மனதை திடப்படுத்திக் கொண்டு, “வினித் சார் கால் பண்ணாரா…?”, குரலை சாதாரணமாக வைத்துக் கொள்ள போராடினாள்.

அதென்னவோ..., ஒரு ஆண்மகன்..., ஒரு பெண்ணிடம் காதலைச் சொல்லிவிட்டு, அந்த காதலை அவள் ஏற்கவில்லை என்றால் சாதாரணமாக எடுத்துக் கொள்ளும் நம்மால்..., ஒரு பெண் ஆண்மகனிடம் காதலைச் சொல்லி, அதை அவன் ஏற்கவில்லை என்றால் சாதாரணமாக எடுத்துகொள்ள முடிவதில்லை.

அதே நிலையில் தான் சந்தியாவும் இருந்தாள். கார்த்திக்கை பார்த்த நொடியில் மனதுக்குள் விழுந்த விதை, அவன் நடத்தை, பேச்சு, கண்ணியம் இவற்றைப் பார்த்து வேர் விட்டு விருட்ச்சமாக வளரத் துவங்கியது.

ஒற்றை பெண்ணாக பிறந்து வளர்ந்த காரணத்தால்..., இதுவரை ஏமாற்றம் என்ற ஒன்றை அவள் தன் வாழ்வில் அன்று வரை சந்தித்தது கிடையாது. அதுவும்...., என்று அவள் தன் நேசத்தை கார்த்திக்கிடம் உரைத்தாளோ..., அவன் தனக்கு அப்படி ஒரு நினைவே இல்லை என்று மறுத்த நொடி..., தன் வாழ்வில் அனைத்தையும் இழந்ததுபோல் உணர்ந்தாள்.

தன் காதல் தோல்வியைக் கூட பெற்றவர்களிடம் சொல்லி அவள் புலம்ப, அவர்கள்தான் அவளைத் தேற்றி அனுப்பி வைத்தார்கள். அவர்கள் மட்டும் இல்லையென்றால்..., இன்று சந்தியா இல்லை.

விருப்பமில்லாதவர்களை தொல்லை செய்யக் கூடாது என பெற்றவர்கள் கொடுத்த அறிவுரை மூளைக்குப் புரிந்தாலும், பாழாய் போன மனதுக்குப் புரியாமல்..., கார்த்திக்கை பார்க்கும்பொழுதெல்லாம் தவித்துதான் போனது.

“ஆமா..., வினித் லாயர்ட்ட எல்லாம் பேசிட்டானாம். மோகனை கூப்ட்டு பேசிப் பார்க்கணும்னு சொன்னான். அதுக்கு முன்னாடி..., மேம் கிட்டே ஒரு வார்த்தை சொல்லிடலாம்னு சொன்னான். ஆனா...”,

“என்ன ஆனா...”, அவள் துருவ,

“ம்ச்..., அவன் சொல்றதுக்கெல்லாம் மேம் ஒத்து வருவாங்களா? வேண்டாம்னு சொன்னால் கேக்க மாட்டேங்குறான். நடப்பது நடக்கட்டும்னு வேடிக்கை பார்க்கவேண்டி இருக்கு...”, வருத்தமாக உரைத்தான்.

“வாழ்க்கையில் நிறைய விஷயங்கள் அப்படித்தான் கார்த்திக்...”, விழிகளை அவன் முகத்தில் நிலைக்கவிட்டு அவள் உரைக்க, அவள் கண்களை ஏறிட்டவனது பார்வை நிர்மலமாகத்தான் இருந்தது.

அவனது அந்த பார்வையை தாங்கிக் கொள்ளும் சக்தி அற்றவளாக..., “நான் அவர்ட்டயே பேசிக்கறேன்..”, திரும்பி நடக்க..., அந்த நொடியில் கார்த்திக்கின் முகத்தில் கவிழ்ந்த வேதனையை அவள் பார்க்கவில்லை.

சட்டென தன்னைத் தெளிந்தவன், தேவையில்லாத எதிலும் மனதை ஈடுபடுத்தக் கூடாது என மீண்டும் தனக்குள் உரு போட்டவனாக, இருக்கைக்குத் திரும்பினான்.

அவன் எதை..., யாரை தேவையில்லை என்று எண்ணுகிறானோ..., அதிலேயே மனம் லயிப்பதை தடுக்க முடியாமல், சிரமத்தோடு தன் வேலையில் ஈடுபட்டவன், முயன்று வினித்தின் யோசனைக்குள் தன்னை திணித்துக் கொண்டான்.

மதிய உணவு இடைவேளையில்..., கால் டேக்ஸியில் அலுவலகம் வந்து இறங்கியவன், ஒன்று முப்பது வரையிலும் ஐஸ்வர்யாவை சென்று காண முடியாது என்பதை உணர்ந்தவனாக, தன் நண்பன் கார்த்திக்கை சந்திக்கச் சென்றான்.

வினித்தின் வரவுக்காகவே காத்திருந்த கார்த்திக்..., அவனையும் அழைத்துக் கொண்டு கேண்டீன் செல்ல, மீண்டும் ஒரு முயற்சியாக அவனிடம் பேசிப் பார்த்தான். பலன் என்னவோ பூஜ்யமாக இருந்தபொழுதும், அவன் ஆளுமையையும், தைரியத்தையும் வியக்காமல் இருக்க முடியவில்லை.

“டேய்..., இதை எப்படி மேடம் ஒத்துக்கும்னுதான் தெரியலை...., எப்படியும் செரி கடுப்பாயிடும்..., எதுக்கும் கொஞ்சம் லேட்டாவே போ..., ஒரு வேளை சாப்பாடு பத்தலைன்னு பாய்ஞ்சு விழுந்து உன்னை குதறிடப் போகுது...”, கார்த்திக் உரைக்க, வாய் விட்டே சிரித்தான் வினித்.

“கார்த்திக்..., இந்த விஷயத்தை நான் எப்போ சொன்னாலும் மேடம் பாயிறது உறுதிதான். வக்கீலே வேணாம்னுதான் சொல்றார்...”, ஸ்பூனால் உணவை வாய்க்குள் திணித்துகொள்ள, அவன் சொன்ன விஷயம் தாளாமல், கார்த்திக் தான் உணவை உண்ண மறந்தான்.

“சாப்பிடுடா...”, வினித் கலைக்க, “மாப்ள..., அதான் அந்தாளே வேணாம்னு சொல்றாரே..., பிறகு ஏண்டா...?”, அதிர்ச்சியானான்.

“அட..., லேபர் நம்ம சொல்ப்படி கேக்கணும்..., அதை விட்டு..., நாம அவங்க சொல்ப்படி ஆடக் கூடாது அவ்வளவுதான். இது எவ்வளவு பெரிய ஆப்பர்ச்சூனிட்டி..., இதைபோய் விடுறதா...?”, அவன் கூலாக சொல்லி உணவை உண்ண..., சத்தியமாக இதற்குமேல் ஒரு பிடி கூட உண்ண முடியாது என தன் உணவை முடித்துக் கொண்டான் கார்த்திக்.

“இது உனக்கு ஆப்பர்ச்சூனிட்டியா...?”, கடுப்பானான்.

“இல்லையா பின்ன..., இந்த கம்பெனிக்குள்ளே யூனியனே இல்லாமல் பண்றேன் பார்...”, அவன் சாதாரணமாக விட்ட சவாலில் ஒளிந்திருந்த தடைகளை, தடங்கல்களை, நடைமுறை சிக்கலை உணர்ந்த கார்த்திக் வாயடைத்துப் போனது மட்டும் உண்மை.

“அட..., நான்தானே செய்யப்போறேன்..., அதுக்கு நீ ஏன் முகத்தை கலவர பூமியா மாத்துற...? விட்டுத் தள்ளுடா..., இன்னைக்கு கேண்டீன் சாதம் நல்லா இருக்குல்ல...”, உணவை ரசித்து உண்ண, அவனைப் பார்த்த கார்த்திக்கிற்கு தான் எப்படி உணர்கிறோம் என்றே தெரியவில்லை.

வினித் எவ்வளவு கூலாக இருந்தானோ..., அதற்கு மாறாக கொதிநிலையில் தகித்துக் கொண்டிருந்தாள் ஐஸ்வர்யா. ஏற்கனவே அவன் அலுவலகம் வந்துவிட்டதை பார்த்துவிட்டாள். உடனடியாக தன்னை வந்து பார்ப்பான் என அவள் எண்ண..., ஒரு மணி நேரமாக அவன் தன் அறைக்குக் கூட திரும்பாததை பார்த்து..., எங்கே தன் ரத்தநாளங்கள் அனைத்தும் ஒருங்கே வெடித்துவிடுமோ என அஞ்சினாள்.

‘திமிர்..., உடம்பு முழுக்க திமிர்..., இடத்தை கொடுத்தால் மடத்தை பிடுங்குவானுங்க...’, அவனை தன் வருங்காலக் கணவனாக ஏற்க முடியாது என எண்ணிக் கொண்டே..., அவனை அந்த இடத்தில் வைத்துதான் சிந்தித்துக் கொண்டிருந்தது அவளது மூளை.

ஒரு வழியாக அவளது மொத்த பொறுமையையும் சோதித்துவிட்டு, அவள் அறை வாயிலை விரல்களால் சொடுக்கிவிட்டு உள்ளே நுழைந்தான்.

“குட் நூன் மேம்...”, முதல்நாள் தன் அறைக்குள் நுழைந்தபொழுது இருந்த முகபாவத்துக்கு சற்றும் குறையாத நிலையிலேயே அவன் முகம் இருக்க, அவள் முகமோ கொவ்வைப் பழமாக சிவந்திருந்தது.

அவனிடம் எதை எதையோ..., எப்படி எப்படியோ கற்பனை செய்து வைத்திருந்தவளுக்கு..., தடதடவென அனைத்தும் இடிந்து விழுந்த உணர்வு.

அவனது அந்த டிரேட்மார்க் முகபாவம்..., குரல்..., மரியாதை..., அழைப்பு..., வாழ்த்து..., ஒரு நொடியில் அனைத்தையும் ஒப்பிட்டுவிட்டாள்.

தன் வாழ்த்துக்கு அவளிடம் எதிர்வினை எதுவும் இல்லாமல் போகவே..., “மேம்..., எனி ப்ராப்ளம்....?”, லேசாக புருவம் சுருக்கி, தலையை மெல்லியதாக அசைத்து அவன் கேட்டு நிறுத்தி, ஸ்ரீராமையும் ஒரு பார்வை பார்க்க..., விழிகள் பிரகாசிக்க அவனை ஏறிட்டார் ஸ்ரீராம்.

“மொத்த ப்ராப்ளமும் நீதான்...”, அவள் வெடிக்க...,

“பார்டன்...”, புரியாமல் வினவினான்.

“ம்ச்..., வேர் டிட் யூ கான் இன் தி மார்னிங்...?”,

“ஐ அல்ரெடி இன்ஃபாம்ட் டு சந்தியா...”, அவன் பதில் அவளை மேலும் கொதிக்கச் செய்ய,

“என்ன..., அவதான் உன் பாசா(Boss)...”, இந்த கேள்வி எதற்கு என ஒரு நொடி யோசித்தவன்...,

“நீங்க அப்படி நினைத்தால் என்னால் எதுவும் செய்ய முடியாது...”, அசட்டையாகவே பதில் கொடுத்தான்.

‘ஓ காட்..., இவன் மட்டும் எப்படித்தான் இப்படி இருக்கானோ...’, மனதுக்குள் வெதும்பியவள்..., “இப்போ ரிப்போட்டாவது நீங்க சொல்வீங்களா இல்ல..., அதுக்கும் சந்தியா வருவாங்களா...?”, இப்போ சொல்லவில்லை என்றால் எதையாவது எடுத்து உன் தலையில் போட்டுவிடுவேன் என்னும் அளவுக்கு அவள் கோபம் இருந்தது.

“லாயர்ட்ட பேசிட்டேன்..., அவருக்கும் என்னோட டெர்ம்ஸ் ஓகே தான்...”.

“வாட்..., உன் டெர்ம்ஸ்..., கம் அகெயின்..., ஹவ் டேர் யூ...”,

“ஜஸ்ட் ஸ்டாப் இட் மேம்..., விஷயம் என்னன்னு தெரிஞ்சுக்க முன்னாடி..., வாய்க்கு வந்தபடி பேசுறது..., ஐ’ம் நாட் எ லேபர்..., ஐ’ம் தி விபி ஒஃப் திஸ் கம்பெனி..., கிவ் ரெஸ்பெக்ட் அண்ட் டேக் ரெஸ்பெக்ட்...”, குரலை உயர்த்தாமலேயே கோபத்தை இப்படி வெளிப்படுத்த முடியுமா? தன் உச்ச கோபத்திலும் சட்டென அமைதியானாள்.

அவன் தாடை இறுகிய விதம்..., விழிகளில் வழிந்த தீர்க்கம்..., வார்த்தையில் தெறித்த அழுத்தம்..., கண்டிப்பாக தான் செய்தது சரியில்லை என்று தெரிந்தாலும் அதற்காக வருத்தம் தெரிவிக்கும் நிலையில் அவள் இருக்கவில்லை.

காலை முதல் தான் அனுபவித்த டென்ஷன் தான், தன்னை இப்படி பேச வைத்தது என்பதை உணர்ந்தவளுக்கு..., மனதின் ஓரம் சிறு நெருடல். இதுவரை ஒரு ஆண்மகனை அலட்சியப்படுத்தியிருக்கிறாளே தவிர, அவமானப்படுத்தியதில்லை.

வார்த்தைகள் தன்னை மீறி வெளிவந்துவிட்டதை உணர்ந்தாலும், மன்னிப்பு என்பதை அவளால் எந்த சூழலிலும் கேட்க முடியாது.

ஒரு தேவையான அமைதி அங்கே நிலவ..., அதை கலைக்க முனையாமல் அசையாமல் நின்றான் அவன்.

“சிட்(sit)....”, அவள் அகராதியில் இதுவே பெரிய மன்னிப்பு வேண்டல் தான். ஆனால்..., அவனோ..., “நோ மேம்..., நீங்க முதல்ல செருப்பால் அடிப்பீங்க..., பிறகு பாராட்டி மாலை போடுவீங்கன்னா..., எனக்கு ரெண்டுமே வேண்டாம்...”, அவன் குரலில் ஒலித்த பாவம்..., கண்டிப்பாக அவன் தன்மானத்தை சீண்டிப் பார்த்துவிட்டோம் என்பது அவளுக்கு புரிந்து போனது.

“ஓகே..., வாட் இஸ் யுவர் ஒப்பீனியன்....?”, இப்பொழுது அவள் குரல் முழுதாக இறங்கி இருந்தது.

அவள் பெயருக்காக கூட மன்னிப்பு வேண்டாததை குறித்துக் கொண்டவன், தன்னை கட்டுப்படுத்திக் கொண்டு, “முத்தையாவை உடனே வேலையை விட்டு அனுப்புவதுதான் பெஸ்ட்...”, குரல் இறுகவே உரைத்தான்.

தான் அமரச் சொல்லியும் அவன் அமராததை வைத்தே..., அவன் கோபம் குறையவில்லை என்பதை உணர்ந்தவள், இப்பொழுது அவனை எதிர்த்து வாயாட விரும்பவில்லை என்றாலும், அவன் சொல்லும் விஷயம் மிகப்பெரும் விளைவை ஏற்படுத்தும் என்பதை உணர்ந்தவளாக....

“அவர் ஏற்கனவே அறுபது வயதில் ரிட்டையர்மென்ட் என்ற விதிமுறை இருக்கும் பொழுது வேலைக்கு வந்தவர்...”, அவள் அறிவுறுத்தினாள்.

“அதுக்குத்தான் நாம ஒன்றும் அவரை அப்படியே அனுப்பப் போவது இல்லையே..., அடுத்த இரண்டு வருடத்து சம்பளத்தையும் மொத்தமாக கொடுத்துத்தானே அனுப்பப் போகிறோம்...?”, அவன் எடுத்துரைக்க,

“அதற்கு அவரை இரண்டு வருடம் வேலையே செய்ய வைத்துவிடலாமே..”, எரிச்சலாக மொழிந்தாள்.

“இப்போ முத்தையாவுக்கு கொடுக்க வேண்டிய பணத்துக்குப் பார்த்தால், அதன் பிறகு அவரைத் தொடர்ந்து அடுத்த மாதத்தில் வேலைக்குச் சேர்ந்த ஆறுமுகம், மொக்கை, பச்சையப்பன்..., இவங்க மூணுபேருக்கும் இரண்டு வருடம் வேலையை நீட்டிக்கவேண்டிவரும் பரவாயில்லையா...?”, அவன் அழுத்தமாக வினவ, அவளிடம் அதற்கு பதில் இல்லை.

ஆனாலும்..., அவனிடம் தான் இறங்கிப் போவதா என வீம்பாக எண்ணியவள், “அதான்..., அன்னைக்கு வக்கீல் அவங்க மூணுபேர் கிட்டேயும் ஏதோ எழுதி கையெழுத்து வாங்கினால் போதும்னு சொன்னாரே...”, அவள் இழுக்க,

“ஓ..., அப்போ தாராளமா செய்ங்க...”, தோளைக் குலுக்கியவன், அதற்குமேல் அவளிடம் வாயாடாமல் கிளம்பிவிட்டான்.

‘இவளுக்கெல்லாம் பட்டால்தான் புத்திவரும்..., என்னவோ செய்யட்டும்..., ஒழியட்டும்...’, அவள் தன்னை பேசியதை அவ்வளவு சாதாரணமாக அவனால் எடுத்துகொள்ள முடியவில்லை.

இதுவே சாதாரண நேரமாக இருந்திருந்தால் நிச்சயம் போராடியிருப்பான், உண்மை நிலையை எடுத்து உரைத்திருப்பான்..., ஆனால் இப்பொழுது..., அவளை மணம் முடிக்க ஸ்ரீராம் பேசியிருக்கும் இந்த வேளையில்..., அவள் பேச்சுக்களை சகித்துக்கொள்ள அவனால் முடியவில்லை.

அவளது இந்த கோபத்துக்குப் பின்னால்..., கண்டிப்பாக ஸ்ரீராமின் பேச்சு இருக்கும் என்பதை உணர முடியாத

அளவுக்கு அவன் சின்னப் பையன் இல்லையே....

திருமணம் ஒரு கட்டாயத்தில் நடப்பதாக இருந்தாலும், ஒருவர் மீது அன்பு இல்லை என்றாலும்..., மதிப்பாவது இருக்க வேண்டும் என அவன் எண்ணினான்.

'வாழ்க்கையை நிதமும் இதே போராட்டத்தோடு எதிர்கொள்ள முடியுமா? நடக்குமா...?' அவனுக்கு கலக்கமாக இருந்தது.

'இது நிச்சயம் சரி வராது..., முடியவே முடியாது என மறுத்துவிட வேண்டும்...' அவன் முடிவாக எண்ணிக்கொள்ள, தன் நிலையை இன்னும் அழுத்தமாக பற்றிக் கொண்டார் ஸ்ரீராம்.

இருக்கும் மன நிலையில் நிச்சயம் இன்னும் ஒரு முறை அவளை எதிர்கொள்ள முடியாது என எண்ணியவன், சந்தியாவிடம் விடுப்பு என உரைத்துவிட்டு கிளம்பிவிட, அவன் அலுவலகத்தை விட்டுச் செல்வதைப் பார்த்த ஐஸ்வர்யாவுக்கு மனதுக்குள் பெரும் குழப்பம்.

அவள் மனநிலை குழம்பியிருப்பதைப் பார்த்த ஸ்ரீராம், “எப்பொழுதும் பெர்சனலையும், அஃபிசியலையும் குழப்பிக்க கூடாது தேவி. இதை நான் உனக்குச் சொல்லிகொடுக்கத் தேவையில்லை..., ஆனா ஞாபகப்படுத்த வேண்டியது என்னோட கடமை.

“நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்..., வினித் ஆர்டினரி பெர்சன் கிடையாது. இன்னைக்கு நீ செய்தது சரியும் கிடையாது. நிதானமாக யோசி, இந்த அப்பா சொல்வது புரியும்...”, அவரும் கிளம்பிவிட்டார்.

தன் டிரைவரை அழைத்துக்கொண்டு வினித் சென்ற திசையில் சென்றவர், மெயின் ரோட்டை அடையாத அவன் அருகில் காரை நிறுத்தச் சொன்னவர், “ஏறுப்பா...”, அவர் அழைக்க, தன் முடிவை அவரிடம் சொல்வதற்காக மறுக்காமல் ஏறிக் கொண்டான்.

ஆனால்..., அடுத்தடுத்து நடந்த விஷயங்கள்..., அவன் வாயைத் திறக்க அனுமதிக்கவே இல்லை. அதேபோல்..., வாழ்க்கை என்னும் சூறாவழி தன்னை சுழற்றத் துவங்கிவிட்டதை உணர்ந்தவனுக்கு போராடும் தைரியமும் சேர்ந்தே எழுந்தது.

***

# பகுதி - 10.

ஸ்ரீராமுடன் காருக்குள் பயணித்தவன், தன் முடிவை டிரைவரை வைத்துகொண்டு எப்படிச் சொல்ல என தெரியாமல் தயங்க, காருக்குள் நிலவிய அமைதியை கலைத்தவர், “பிரபாகர்..., காரை சுவாமிஜி ஆஷ்ராமத்துக்கு விடு....”, அவர் உரைக்க, கார் மெயின் ரோட்டில் வேகமெடுத்தது.

‘இப்போ எதுக்கு...?’ கேள்விப் பார்வையோடு வினித் அவரை ஏறிட, சொல்கிறேன் என்பதுபோல் தலையை அசைத்தவர், சீட்டில் சாய்ந்துகொண்டு கண்மூடிக் கொண்டார்.

‘என்னடா இவர்...?’ எண்ணியவன் அவரையே வெறிக்க, அவர் மூடிய விழிகளுக்குள் கருமணிகள் சுழன்று அவர் சிந்தனையை எடுத்துரைக்க, அமைதியாக அமர்ந்துகொண்டான்.

அடுத்த ஒருமணி நேரம் ஒரு யுகமாகக் கழிய, கார் திரும்பிய சோலைவனத்தைப் பார்த்தவனது விழிகள்..., ‘சென்னையின் சந்தடியில் இருந்து முற்றிலும் மாறுபட்டு, அமைதியே உருவான அந்த இடத்தை பிரமிப்பாகப் பார்த்தான்.

அவன் வாழ்நாளிலேயே இப்படி ஒரு இடத்துக்கு வந்ததில்லை என அவன் பார்வை சொன்னது. கார் ஒரு மரத்தின் நிழலில் போய் நிற்க, “ப்ரபா..., சுவாமிஜி இருக்காரான்னு பாத்துட்டு வா...”, அவனை அனுப்பியவர், தன் பக்க கதவை திறந்து வைத்து இயற்கையின் காற்றை வரவேற்றார்.

அதேபோல் தானும் செய்தவன்..., தன் மயக்கத்தில் இருந்து விடுபட்டு, தன் முடிவைச் சொல்ல வாயைத் திறந்த வேளை..., “என்னப்பா..., கல்யாணம் வேண்டாம்னு முடிவெடுத்துட்ட போல...”, அவர் கேள்வியில் வாயடைத்தவன், அவரை ஏறிட்டான்.

“கண்டிப்பா நீ இந்த முடிவுக்குத்தான் வந்திருப்பன்னு எனக்குத் தெரியும். ஆனா..., நான் உன்கிட்டே ஒரே ஒரு விஷயத்தை மட்டும்தான் சொல்ல விரும்பறேன்...” நிறுத்தியவர்..., “தேவியை நீ பாதிக்கிற...”, அவ்வளவுதான் உரைத்தார்.

அதைக் கேட்டவனுக்கோ..., வாய்விட்டு நகைக்க வேண்டும்போல் இருந்தது. சற்று நேரத்துக்கு முன்னால் தன்னை ஒரு மனிதனாகக் கூட மதிக்காமல் இவர் மகள் பேசியதென்ன..., இவர் விடும் கதையென்ன...’ அவன் எண்ணத்தை அவன் விழிகள் எடுத்துரைக்க,

“என் மகள் இதுவரை ஆண்களை அலட்சியப்படுத்திதான் பார்த்திருக்கிறேன், இல்லையா..., அசட்டை செய்து பார்த்திருக்கிறேன்..., முதல் முறையாக ஒரு எதிர்பார்ப்பையும், கோபத்தையும் பார்க்கிறேன்...”, மேலே எப்படி அவனுக்கு விளக்க என்று புரியாமல் தடுமாறினார்.

‘அவ கோபமா பட்டாள்...? என்னை அவமானப்படுத்தினாள்...’ அவள் உரைத்த வார்த்தைகள் அவன் காதுக்குள் ஒலிப்பது போன்ற பிரம்மை.

சுள்ளென அவரிடம் கேட்டுவிட நாக்கு துடித்தாலும், வார்த்தைகள் ஏற்படுத்தும் வலியை உணர்ந்தவனாக அவன் அமைதியாக இருக்க, “சார்..., சுவாமிஜி இருக்கிறார்...”, உரைத்த ப்ரபா விலகிச் சென்றான்.

அவன் செல்லவே..., “உனக்கு ஜாதகம், ஜோதிடம் இதில் எல்லாம் நம்பிக்கை இருக்கா வினித்?”, அவர் கேள்விக்கு, ‘இப்போ இது அவசியமா என எண்ணியவன், ‘இல்லை’ என தலை அசைத்தான்.

“ஆனா இனிமேல் நம்புவாய் பார்..., வா..., சுவாமிஜியிடம் பேசிய பிறகும் உன் முடிவில் மாற்றம் இல்லையென்றால்..., நான் ஏற்றுக் கொள்கிறேன்”, இறங்கி நடந்தார். அவரை பின்பற்றினான் வினித்.

‘இவன் எந்த ஏமாத்து பேர்வழியோ..., சுவாமிஜீயாம்..., எத்தனை பேரை பார்த்திருக்கிறேன்...’ எள்ளலாக

எண்ணிக் கொண்டான்.

ஸ்ரீராம் தன் காலணியை கழட்டிவிட்டு அந்த மண் குடிசைக்குள் செல்ல, அவரைப் பின்பற்றி உள்ளே சென்றவனுக்கு வியப்பு காத்திருந்தது.

ஒரு ஏசி அறைக்குள் வந்துவிட்ட குளுமையை அந்த குடிசை அளிக்க, அந்த அறையோ துடைத்துவைத்த குத்துவிளக்காக பளிச்சிட்டது. அறையின் மூலையில் இருந்த ஒற்றை பாயும், மறு மூலையில் இருந்த மண் பானையும் மட்டுமே பார்வைக்கு கிடைக்க, மருந்துக்கு கூட எந்த சுவாமி படமோ, பூஜை செய்த அடையாளமோ இருக்கவில்லை.

அதன் பிறகுதான் தன் எதிரில் அமர்ந்திருந்த சுவாமிஜியை பார்த்தவன், அவர் விழிகளில் வழிந்த தீட்சண்யத்தையும், முகத்தில் இருந்த சந்தத்தையும், மீசை தாடிக்கிடையில் கீற்றாக தெரிந்த இதழையும், அதில் தவழ்ந்த புன்னகையையும் கண்டவனது கரங்கள் தாமாகவே எழுந்து அவரை வணங்கியது.

கையை உயர்த்தி அவனை ஆசீர்வதிப்பதுபோல் குவித்தவர், “ஆயுஷ்மான் பவ…”, அவனுக்கு ஆசீர் வழங்கினார். அவரது எளிமையும், தோற்றமும் அவன் மனதில் சற்றுமுன் எழுந்த எண்ணத்தை அழிக்க, அந்த இடத்தின் ஏகாந்தம் அவனை தழுவியது.

அவன் அறையை அளவிட, அவனை அளவிட்ட சுவாமிஜி…, “கடைசியா உங்க மருமகனை கண்டு புடிச்சுட்டீங்க போல…”, ஸ்ரீராமிடம் அவர் வினவ, சத்தியமாக அவரிடம் இப்படி ஒரு வார்த்தைகளை எதிர்பாராத வினித் திகைத்துப் போனான்.

“சுவாமி…”, ஸ்ரீராம் பவ்யமாக அழைக்க…, “நான் போனமுறை நீங்க இங்கே வந்தபொழுது என்ன சொன்னேன்..? அடுத்தமுறை உங்க மருமகனோடுதான் என்னை வந்து பாப்பீங்க என்று சொன்னேன் தானே…, அது

நடந்துவிட்டதா...?”, அவர் கைகள் அவரது நீள தாடியை நீவியது.

‘அப்போ திட்டம் போட்டு என்னை இங்கே அழைத்து வந்தீங்களா?’ வினித்தின் பார்வை ஸ்ரீராமை துளைக்க, அவரோ மறுப்பாக தலை அசைத்தார்.

“தம்பிக்கு என் பேச்சில் நம்பிக்கை இல்லை போல...”, உரைத்தவர், “தத்தா...”, குரல் கொடுக்க, குடிசையின் பக்கவாட்டில் இருந்த கதவின் வழியாக, காவி உடை அணிந்த மற்றொரு வயதான துறவி வந்து, தான் கையோடு கொண்டு வந்திருந்த மையில் அவன் பெருவிரலில் தடவி, பேப்பரில் வைத்துகொண்டு உள்ளே சென்றவர், அடுத்த ஐந்து நிமிடத்தில் கையில் ஒரு ஓலைச் சுவடியோடு திரும்பி வந்தார்.

அதை பவ்யமாக சுவாமிஜியின் கையில் கொடுத்தவர், திரும்பிச் சென்றுவிட, அந்த ஓலைச் சுவடியை பிரித்த சுவாமிஜி..., பார்வையை அதில் நிதானமாகச் செலுத்தியவர், “வெளிநாடும், உள்நாடும் கலந்த கலவை நீ.

“அப்பா பெயர் மாற்றியதால் பெரிய ஆளாக அறியப் பட்டிருப்பார். உயிரைக் காக்கும் கருவிகளின் பிறப்பிடம் உங்கள் தொழில்...”, அவர் மேலே என்ன சொல்லியிருப்பாரோ..., “வேண்டாம்...”, அவன் ஒற்றை வார்த்தை அவரை நிறுத்தியது.

‘சொல்...’ என்பதுபோல் அவனை ஏறிட, அவர் உரைத்த வார்த்தைகளை நம்பவும் முடியாமல், நம்ப முடியாமல் போகவும் முடியாமல் திகைத்துபோய் அமர்ந்திருந்தான்.

இதை ஸ்ரீராம் தான் அவரிடம் உரைத்திருப்பார் என அவனால் சந்தேகப்படவும் முடியவில்லை. ஏனென்றால் அவருக்கே எதுவும் தெரியாது. அப்படி இருக்கையில்...,

“அதெப்படி நான்தான் ஐஸ்வர்யாவின் கணவன் என்று அவ்வளவு உறுதியா சொல்றீங்க...?”, தன் கேள்வியை முன்வைத்தான்.

“ஐஸ்வர்யாவின் கணவனது பெயர் ‘வி’ என்ற எழுத்தில் ஆரம்பிக்கும்…”, அவரது இந்த பதில் மேலும் ஆச்சரியமளிக்க, அடுத்த கேள்வியை கேட்க முடியாமல் அமர்ந்திருந்தான்.

அவரோ…, அவனது கேள்வியை எதிர்பாராமல், “உனக்கும் ஐஸ்வர்யாவுக்கும் பத்துப் பொருத்தமும் பொருந்தி இருக்கிறது. அவள் கணவன் நீதான்…, இது கடவுள் போட்ட முடிச்சு. அப்படியே ஆயிரத்தில் ஒரு பாகமாக…, நீ இங்கே வராமல் போயிருந்தால்…, ஐஸ்வர்யாவுக்கு இந்த ஜென்மத்தில் திருமண பாக்கியம் என்பது கிடையாது…”, அவர் நிறுத்த,

“அப்போ…, இப்பொழுது நான் சம்மதிக்கவில்லை என்றால்…”, அவன் கேள்வியில் அவர் இதழ்கள் புன்னகையில் விரிந்தது.

“விதியை மாற்றி எழுதும் வல்லமை நம் யாருக்கும் கிடையாது மகனே…”, சாந்தமாகவே உரைத்தார்.

“என் விதி இதுதானா…?”, மூளைக்குள் படபடவென ஓடிய சிந்தனை இப்படி ஒரு கேள்வியை அவர் முன் வைக்க,

“இந்த உலகத்தில் அவளைத் தவிர, உன்னை யாராலும் அந்த அளவு நேசிக்க முடியாது…, ஆனால்…, அதை நீ அடைய போராட வேண்டி இருக்கும். சும்மா கிடைக்கும் எதற்கும் மதிப்பு இருக்காது என்பதை இத்தனை நாளில் நீ உணர்ந்திருப்பாயே…”, அவரது பூடகமான பதில், மேலே எதையும் சிந்திக்க விடவில்லை.

இவ்வளவு நேரம் அவர் உதிர்த்த வார்த்திகளில் இருந்த உண்மை, அவனை இதையும் நம்பத் தூண்டியது…, அதேபோல்…, ஏங்கவும் வைத்தது…, எதிர்பார்க்கவும் வைத்தது.

“அப்போ…, ஐஸ்வர்யாதான் என் மனைவி என்று சொல்றீங்களா?”.

“நான் சொல்லவில்லை..., உன்னையும் அவளையும் படைத்த அந்த பிரம்மா சொல்லுகிறான்..., இடையில் நான் ஒரு தரகர் மட்டுமே. அவளை திருமணம் செய்துகொள்”, இப்பொழுது அவர் குரலில் இருந்த அழுத்தத்தை மீறும் துணிவு அவனுக்கு இருக்கவில்லை.

அவனை வெளியே போகச்சொல்லி கண் காட்ட, அவரை வணங்கிவிட்டு வெளியேறினான். சுவாமிஜி சொன்ன வார்த்தைகள் அடி மனதில் தித்தித்தது மட்டும் உண்மை.

அவன் வெளியேறவே..., “இந்த திருமணத்தை எவ்வளவு முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் நடத்தி முடித்துவிடுங்கள் ஸ்ரீராம்...”, ஓலைசுவடியில் பதிந்த அவர் விழிகளில் ஒரு மெல்லிய தடுமாற்றம்.

“சுவாமி..., எதுவும் தப்பா இருக்கா...?”, ஒரு தந்தையின் பரிதவிப்பு அவரிடம்.

“இருவருக்கும் கணக்கை போட்ட பிரம்மா..., ஒரு பெரிய முடிச்சையும் போட்டிருக்கிறான்..., சம்போ மகாதேவா...”, அவர் வாய் உரக்க உச்சாடனம் செய்தது.

“சுவாமி..., அது என்னன்னு நான் தெரிஞ்சுக்கலாமா...?”, தயக்கமாகவே கேட்டார்.

“ஒரு விதத்தில் தெரிந்து கொள்வது நல்லதுதான்...”, சற்று பொறுத்தவர், “இவனை மரணம் துரத்துது...”, அவர் வீசிய அணுகுண்டை தாங்க முடியாமல் துடித்துப் போனார் ஸ்ரீராம்.

“சுவாமி..., அப்படின்னா..., என் பொண்ணின் நிலை...?”, பரிதவித்தார்.

“இவன் கையால் அவள் கழுத்தில் தாலியேறாவிட்டால்..., அவளுக்கு தாலி பாக்கியமே இல்லை...”, அடுத்த பூகம்பத்தை தாங்கும் சக்தி அற்றவராக துடித்துப் போனார்.

மகளை கன்னியாகவே வைத்திருப்பதா...? அதை தன்னால் செய்ய முடியுமா? அதற்காக..., இவனுக்கு திருமணம் செய்து வைத்து..., அவளை விதவையாக காண முடியுமா? அந்த

சக்தி தனக்கு இருக்கிறதா…? இதயம் எங்கே வெடித்துச் சிதறிவிடுமோ என அஞ்சி…, கையால் நெஞ்சை தாங்கிக் கொண்டார்.

“இதற்கு பரிகாரமே இல்லையா சுவாமி…”, அழும் குரலில் கேட்க, “அதான் திருமணம் செய்து வைத்துவிடுமாறு சொன்னேனே…”, அவர் அசராமல் உரைக்க, தலை சுற்றியது ஸ்ரீராமுக்கு.

“புரியலையே சுவாமி…”, அப்பாவியாக உரைக்க, “ஐஸ்வர்யாவுக்கு தாலி பாக்கியம் கெட்டி…, அவள் சுமங்கலியாகத்தான் இந்த உலகத்தை விட்டு போவாள். அப்படியென்றால் நீங்களே யோசிங்க…”, ஓலைசுவடியை மூடிவிட்டு, விழிகளையும் மூடி அவர் அமர்ந்துவிட, சற்று திணறினாலும், நிதானத்துக்கு வந்து சிந்திக்கத் துவங்கினார்.

ஒரு ஐந்து நிமிடம் செலவழித்தவருக்கு, அப்பொழுதுதான் விஷயம் புரிந்தது. ‘வினித்தை மரணம் துரத்தினாலும், எப்பொழுது அவன் ஐஸ்வர்யாவின் கழுத்தில் தாலி கட்டுகிறானோ…, அதன் பிறகு, ஐஸ்வர்யாவின் தாலி பாக்கியம் அவனைக் காப்பாற்றும்.

‘அதே நேரம்…, ஐஸ்வர்யாவும் திருமதியாக வாழ்வாள், அவளது குறையும் நிவர்த்தி செய்யப்படும். அப்படியென்றால்…, கடவுள் ஒவ்வொரு விஷயத்தையும் ஒரு கணக்கோடுதான் செய்கிறான்…

“சுவாமி…”, அவர் ஆனந்த கூத்தாடி அழைக்க, “புரிந்ததா…, நிம்மதியாகச் செல்…, ஒரே ஒரு விஷயம்…, திருமணம் இன்னும் நாற்பத்தைந்து நாட்களுக்குள் நடக்க வேண்டும்.

“இல்லையென்றால் எமன் முந்திக்கொள்வான்…”, அவர் உரைக்க, “அப்படி நடக்க விட மாட்டேன் சுவாமி…”, உரைத்தவர், அவர் பாதம் பணிந்துவிட்டு எழுந்து வெளியே வந்தார்.

அவரை எதிர்கொண்ட வினித்தை ஏறிட்டவர்…, “சொல்லுப்பா…, இன்னும் உன் முடிவு அதே தானா…?”, அவர்

கேள்விக்கு, “ஐஸ்வர்யா சம்மதித்தால் எனக்கு இனிமேல் தடையில்லை...”, உறுதியாக உரைத்தான்.

அவன் மனதுக்குள்..., அவளை நேசிக்க வைக்க போராடுவேன் என்ற தீர்மானம் எழுந்தது.

“கண்டிப்பா நாம சேர்ந்து அவளை மாற்றலாம் வினித். கண்டிப்பா இந்த திருமணம் நடக்கும்..., அதுவும் நாற்பத்தைந்தே நாளுக்குள்...”, அவர் தீர்மானமாக உரைக்க, கண்டிப்பாக அந்த தீர்மானத்துக்குப் பின்னால் ஏதாவது காரணம் இருக்கும் என்பதை யூகித்தவன் அமைதியாகவே இருந்தான்.

காருக்குச் செல்லும் முன்னர்..., அவன் கரத்தை பற்றியவர்..., “வினித், எனக்காக..., தேவி என்ன செய்தாலும், சொன்னாலும் பொறுத்துகொள். அவள் கழுத்தில் தாலி ஏறிய பிறகு, நீ என்ன செய்தாலும், சொன்னாலும் நான் கண்டுகொள்ள மாட்டேன். அதுவரைக்கும்...”, கெஞ்சினார்.

“என் மனைவிக்கு என்னை என்ன செய்யவும் உரிமை உண்டு சார்...”, அவன் பதிலில்..., அவனை இறுக தழுவிக் கொண்டார்.

“அப்படியே என்னை மாமா என அழைத்தால் சந்தோஷப்படுவேன்”, அவர் உரைக்க, “ஐஸ்வர்யாவுக்கு தெரிந்தால் அவ்வளவுதான்..., சோ..., உரிமையோடவே கூப்ட்டுகறேன். அதுவரைக்கும் நீங்க சார் தான்...”, அவன் கூற்றை ஏற்றுக் கொண்டார்.

அதன் பிறகு நடந்தவை தான் சுவாரசியமானவை. அன்று மதியமே கிளம்பிய தந்தை அலுவலகம் வராமல் போக, கண்டிப்பாக அவர் வினித்தைத்தான் சந்திக்கப் போயிருக்கிறார் என்பதை ஐஸ்வர்யா உணர்ந்து கொண்டாள்.

அன்று மாலை வீட்டுக்குச் சென்றவள், அவரிடம் கேட்க, மறுப்பார் என அவள் எதிர்பார்க்க, அவரோ..., “உங்கள் திருமணத்தைப் பற்றி பேசத்தான் போயிருந்தேன்.

பேசிவிட்டேன்…”, உரைத்தவர்…, தனது கிளப்புக்கு போவதாகச் சொல்லிவிட்டு கிளம்பிவிட்டார்.

‘பேசிட்டாரா…? என்ன பேசினாராம்…? அவன் இப்பொழுது சம்மதம் சொன்னானா…?’ தெரிந்துகொள்ள மனம் விரும்பினாலும், அதை ஒதுக்கிவிட்டு தன் அறைக்குச் சென்றாள்.

இன்று ஒரு சிறு பார்வையில் கூட எதையும் வெளியிடாத அவன் அழுத்தத்தையும், அவன் கோபத்தையும், அவன் அசட்டையையும் கோர்வையாக எண்ணியவளுக்கு…, ‘இது எத்தனை நாள்…, பார்க்கலாம்…’, இதழ்களை இகழ்ச்சியாக வளைத்தாள்.

ஆனால்…, அடுத்த ஒரு வாரமும் சரி…, எந்தவிதமான மாற்றமும் இல்லாமல் செல்ல, அவளை சந்திப்பதை கூட அவன் தவிர்த்தான். அப்படியே பேசவேண்டி இருந்தாலும், அவள் தொலைபேசியில் அழைத்து உரையாடி வைத்துவிட்டான்.

அன்றும் அலுவலகத்தில் ஒரு பிரச்சனையில் தலையிட்டு அவன் உரையாட, அதைப்பற்றி அவளுக்கு உரைக்க வேண்டி அவளை அழைத்தான்.

அவளோ…, அதைக் கண்டுகொள்ளாமல்…, “அந்த முத்தையா விஷயம் பத்தி பேசணும்…, கம் டு மை ரூம்…”, அவள் அழைக்க, ‘அப்படி வா வழிக்கு…’, எண்ணியவன்…, கவனமாக துடைத்த முகத்தோடு அவள் அறைக்குச் சென்றான்.

முழுதாக ஏழு நாள் இடைவேளைக்குப் பிறகு அவனைப் பார்க்கிறாள். அவள் இடக்கை தன் எதிரில் இருந்த இருக்கையை காட்ட, ஒரு நன்றியோடு அதில் அமர்ந்தவன்…, சாதாரணமாகவே அவளை ஏறிட்டான்.

அவளோ…, அவனை ஒரு ஆராயும் பார்வை பார்த்தவள், அடுத்தபடியாக எதையோ தேடினாள். தன் தேடலுக்கான விடை இல்லாமல் போகவே, ‘நடிக்கிறான்…’ என எண்ணிக் கொண்டவள், கோபமாக முகத்தை மாற்றிக் கொண்டாள்.

அவள் முகத்திலேயே கவனமாக இருந்தவனுக்கு..., அவள் முகத்தில் வந்துபோன பாவங்கள் நிச்சயம் பிடித்தது. அந்த கோபம் கூட. அதை கட்டுப்படுத்தியவன்,

“சொல்லுங்க...”, அவளைத் தூண்ட, “ஆறுமுகம், மொக்கை, பச்சையப்பன் மூணுபேரும் ஃபாம்ல சைன் பண்ண மாட்டேன்னு சொல்லிட்டாங்க...”, விஷயத்தை அத்தோடு முடித்துக் கொண்டாள்.

“ஓ..., இதில் நான் என்ன செய்ய...?”, சாதாரணமாக வினவ,

“இந்த கேள்வியை என்கிட்டே கேக்கத்தான் உன்னை வேலைக்கு வச்சிருக்கேனா...?”, அவள் மூச்சு சூடாகத் துவங்கியது.

“நான் என்ன செய்யணும்னு சொல்லுங்க..., அப்படியே செய்யறேன்...”, பிடிகொடுக்காமல் பேசினான்.

‘அடேய்...’ கொலைவெறி கிளர்ந்தாலும், தன் வேலை நடக்கவேண்டுமே என சிந்தித்தவளாக..., “அதான் அன்னைக்கு என்னவோ பெருசா உன் ஸ்டேன்னு சொன்னியே..., அதேயே செய்...”, போனால் போகிறதென்று அனுமதி வழங்குவதுபோல் அவள் உரைக்க,

“உங்களுக்கு முழு சம்மதம் இல்லையென்றால் எதுவும் வேண்டாம்..., நீங்க வக்கீலை வைத்தே பாத்துகோங்க...”, அவன் இருக்கையில் இருந்து எழ முயன்றான்.

“ம்ச்..., அதான் செய்ன்னு சொல்றேன்ல..., வேற என்ன சொல்லட்டும்...”, எரிச்சலை கட்டுப்படுத்திக்கொண்டு மொழிய, மனதுக்குள் சிரித்துக் கொண்டவன், “ஓகே..., பாக்கறேன்...”, கிளம்பிவிட்டான்.

வாசலை அடைந்தவன்..., “மேம்..., இன்னைக்கு உதய் வீட்டு பார்ட்டிக்கு போகணும்....”, உரைத்துவிட்டு வெளியேற..., அப்பொழுதுதான், அன்று சந்தியா விடுப்பு என்ற விஷயமே அவளுக்கு நினைவிற்கு வந்தது.

‘அப்படின்னா..., இன்னைக்கு யார் என் சார்ட்டை போட்டா...?’ கேள்விக்கு விடையாக, அங்கே வினித் நிற்க, அவளையும்

அறியாமல் ஒரு திருப்தி. அதே நேரம்..., ஒவ்வொரு முறை அவனை எதிர்கொள்ளும் பொழுதும், அவன் கண்கள் எதையாவது வெளியிடுகிறதா என தேடும் தன் மனதை தடுக்க முடியாமல் தவித்தாள்.

‘மாலையில் ஏதாவது நடக்குமா...?’ மனம் ஆர்வமாக..., கோபமாக..., அவன் நடிப்பை கண்டுகொள்ள வேண்டும் என எண்ண..., எப்படியும் சந்தியா இல்லாத காரணத்தால்..., அவன்தான் வந்தாக வேண்டும் என்பது அவளுக்குத் தெரியும். ஸ்ரீராமுக்கு இப்படியான பார்ட்டிகள் எப்பொழுதும் பிடிக்காது. எனவே மாலையை எதிர் பார்க்கத் துவங்கினாள்.

மாலையும் நெருங்க, கவனமாக தன்னை அலங்கரித்துக் கொண்டவள், டிரைவர் கிரியோடு கிளம்ப, வினித் எப்படி வருவான்? என்ற கேள்வி துளைத்தாலும், அதை பெரிதாக்காமல், ‘எப்படியும் வந்துவிடுவான்’ என எண்ணிக் கொண்டாள்.

இந்த நம்பிக்கையை அவளுக்கு அளித்தது எது என சிந்தித்திருக்கலாமோ?

உதய் வீட்டை அடையும் வரைக்கும் அவனைக் காணவோ, அவனிடமிருந்து தகவல் எதுவும் வரவோ இல்லை.

ஆனால் எப்படி வந்தான்..., எப்பொழுது வந்து சேர்ந்தான் என அவள் உணரும் முன்பே..., அவள் உதயின் கையில் பரிசை கொடுக்கும் வேளையில், “வாங்க தேவி..., ஹல்லோ வினித்...”, தனக்குப் பின்னால் இருப்பவனை நோக்கி அவன் கையை நீட்டும் பொழுதுதான்..., வினித் தன் பின்னால் இருப்பதையே அறிந்தாள்.

சட்டென திரும்பி அவனை ஏறிட..., “வாங்க மேம்..., பார்ட்டி ஹால் இந்தப் பக்கம்...”, கூட்ட நெரிசலின் இடக்கையால் ஆட்களை விலக்கியவன், ஒரு பாடிகார்ட் போல் அவளை அழைத்துச் சென்றான்.

உதயின் செல்ல மகள் கேக்கை வெட்ட..., உடனடியாக ட்ரிங்க்ஸ் பார்ட்டி, பஃபே சிஸ்ட்ட உணவு என துவங்க,

எதிலும் கலந்துகொள்ளாமல், அவளுக்கு இரண்டு இருக்கைகள் தள்ளி அமர்ந்திருந்தான் வினித்.

அவன் அருகில் ட்ரிங்க்ஸ் ட்ரே பேரர் வர..., அதில் ஒன்றை கைகளில் எடுத்தவன், பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. அவள் விழிவிரித்து அவனைப் பார்க்க, அவனோ..., தன் அருகில் இருந்த ஒரு பெரியவரிடம் தீவிரமாக எதையோ பேசிக் கொண்டிருந்தான்.

உதயின் மனைவி ஜீவா வந்து..., அவளை உணவு உண்ண அழைக்க, எழுந்து சென்றவள்..., தன் கையில் இருந்த அலங்கார பேக் கை நழுவி விழப் போவதை உணர்ந்து பிடிக்கும் முன்பே..., ஒரு வலிய கரம் அதை பற்றியிருந்தது.

“யூ கேரி ஆன்...”, உரைத்தது வேறு யாருமல்ல..., வினித் தான். அவள் உணவை உண்டு முடிக்கும்வரை அது அவன் கையில் தான் இருந்தது.

‘இது வேண்டுமா..., அது வேண்டுமா.., இதுவா..., அதுவா...? இங்கே..., இப்படி...’ இப்படியான எந்தவிதமான அனாவசிய வழிசலோ, உரிமையோ, உணர்வோ..., எதையும் வெளிப்படுத்தாமல்..., அவள் தனிமையை கெடுக்காமல், அதே நேரம்..., உனக்காக நான் இங்கே இருக்கிறேன் என்ற இருப்பையும் அழகாய் அவன் உணர்த்த, அதில் கண்டிப்பாக நடிப்பில்லை என்பதை அவள் உணர்ந்தாலும் ஏற்கத்தான் தயாராக இல்லை.

அவள் உணவை முடித்துவிட்டு, டிஷ்யூ பேப்பரால் தன்னை சுத்தம் செய்து திரும்ப, அவள் அருகில் இருந்த இருக்கையில் அவள் பர்ஸை வைத்தவன், தன் உணவை உண்ணச் சென்றான்.

அவனை கவனிக்கக் கூடாது என அவள் எண்ணினாலும்..., அவன் உண்ணும் விதத்தை நிச்சயம் கவனித்தாள். ‘அடப்பாவி..., இப்படித் திங்கறான்...’, ஒரு கட்டத்தில் அவள் நினைப்பு இதுவாகத்தான் இருந்தது.

அவள் கிளம்ப முயல்கையில்..., ஜீவா அருகில் வர, மரியாதை நிமிர்த்தம் அவளிடம் உரையாடிவிட்டு,

அவளிடமும், உதயிடமும் விடைபெற்றுவிட்டு அவள் திரும்ப, காரில் ஏறிய மறு நிமிடம்..., “குட் நைட் மேம்..., கிரி.., கேர்புல்...”, அவர்களுக்கு விடை கொடுக்க, மரியாதையை எந்த இடத்திலும் கைவிடாத அவன் தன்மையை எப்படி எடுத்துகொள்ள எனத் தெரியாமல், ஆனால்..., ஒருவித மோன நிலையில் பயணித்தாள்.

அதே நேரம்..., ‘அவன் மனசுக்குள் என்னதான் இருக்கு...? அப்பா சொன்னதுக்கு எந்த எதிர்வினையும் காணோமே...’ மனம் எண்ண..., தன் மனம் எதை விரும்புகிறது எனத் தெரியாமல் குழம்பிப் போனாள்.

***

# பகுதி - 11.

இரவில் படுக்கையில் விழுந்தவளுக்கு, நிச்சயம் மனதுக்குள் வினித் கபடி ஆடினான். கொஞ்சமும் அலட்டல் இல்லாத அவன் நடத்தையும், என் இடம் இதுதான் என்ற அவன் செய்கையும், நான் உத்தமன் என்ற வேஷம் இல்லாத அவன் பரிமாற்றமும்..., கண்டிப்பாக அவன் ஆர்டினரி மேன் இல்லை..., தன்னை மீறி எண்ணிக் கொண்டாள்.

இதற்குமுன் பார்த்த வரன்கள் அனைவருமே..., அவளை சட்டென தன்னவளாக ஆக்கிக் கொள்ளவும்..., சொத்துக்காக வேண்டி, தங்கள் குணத்தை மறைத்து நடிக்கவும் தயாராக இருக்க, இவனோ..., பார்ட்டியில் கூட, தான் அருகில் இருக்கும்பொழுதே தைரியமாக ட்ரிங்க்ஸ் க்ளாசை கையில் எடுத்துக் கொண்டதை எண்ணியவள்...

‘தைரியம்தான்...’ வியந்தவள், தான் அங்கே இருந்த வரைக்கும் அவனது நடத்தைகள் ஒவ்வொன்றையும், அவன் செய்கைகள் ஒவ்வொன்றையும் ஆராய..., அதில் கண்டிப்பாக நடிப்பு இல்லை என்பதையும், தன்னிடம் எந்தவிதமான உரிமையையோ, வழிசலோ இருக்கவில்லை என்பதையும் சேர்த்தே எண்ணிக் கொண்டாள்.

‘அதெப்படிடா இப்படி இருக்க...?’ படுக்கையில் குப்புற விழுந்தவள், தலையணையை தன் நெஞ்சோடு இறுக்கிக் கொண்டாள்.

‘இன்னும் எவ்வளவு நாள்ன்னு பாக்கறேண்டா...’ எண்ணியவள், சுகமான கனவோடு உறங்கிப் போனாள். மறுநாள் காலை தனக்கு ஏற்படப்போகும் அதிர்ச்சியை அறியாதவளாக.

காலையில் ஏதோ ஒரு சத்தத்தில் கண்விழித்தவளுக்கு, அது தன் வீட்டில் இருந்து வருகிறது என்பதை உணர்ந்தவள், தன் நைட் கோட்டை தேடி அணிந்தவள்..., ‘ரோப்’பை முடிந்தவாறே படிகளில் வேகமாக இறங்கினாள்.

“துரை..., என்ன சத்தம்...?”, கொஞ்சம் கோபமாகவே வினவினாள். அதிகாலை உறக்கத்தை யாராவது கலைத்தால் அவளுக்கு அவ்வளவு கோபம் வரும். அப்படி இருக்கையில்..., வீட்டுக்குள்ளேயே நடந்தால் சும்மா இருப்பாளா?

“அம்மா..., ஐயா எப்பவும் சீக்கிரம் எழுந்துடுவாங்க. இன்னைக்கு இவ்வளவு நேரமாச்சு ஆனா இன்னும் எழுந்து வரலை அதான்...”, தவிப்பும், கலக்கமும், பயமும் கவ்வ அவர் உரைக்க, ஒரு நொடி திணறிப் போனாள்.

“என்ன..., டேட் இன்னும் வரலையா...? கால் தி ஆம்புலன்ஸ்...”, அவள் கூச்சலிட்ட அதே நேரம்..., அவர்கள் வீட்டு ஹாலில் இருந்த தொலைபேசி வீறிட..., ஓடிபோய் அதை எடுத்தார் துரை.

“ஐயா..., யாரா இருந்தாலும் சரி..., பிறகு கால் பண்ணுங்க...”, உரைத்தவர் தொலைபேசியை கட் செய்தவர்..., ஆம்புலன்சுக்கு அழைத்தார்.

மீண்டும் தொலைபேசிக்கு அழைத்த வினித்..., அது பிசியாக இருப்பதை உணர்த்தவே..., “கார்த்திக்..., அர்ஜண்ட் கிளம்பு...”, பைக்கில் அடுத்த ஐந்தாவது நிமிடம் பைக் ஐஸ்வர்யாவின் வீட்டின் முன்னால் நிற்க, இறங்கி வீட்டுக்குள் ஓடினான் வினித்.

“டேய் மாப்ள..., வீட்டுக்குள்ளே போகாதே...”, கார்த்திக் தடுக்கும் முன்பே, வீட்டுக்குள் பாய்ந்திருந்தான்.

“சுத்தம்...”, கார்த்திக் வாசலோடு தேங்க...,

வாசலில் ஆம்புலன்ஸ் வந்து நிற்கவே..., தானும் பதட்டமாக வீட்டுக்குள் நுழைந்தான் கார்த்திக். அங்கே ஒரு அறை வாயிலை தன் தோளால் இடித்துக் கொண்டிருந்தான் வினித். தானும் அவனோடு இணைந்தவன்..., அடுத்த மூன்று முட்டல்களில் கதவு லாக் உடைய, அறைக்குள் பாய்ந்தார்கள்.

அவர்களோடு தானும் உள்ளே பாய்ந்த ஐஸ்வர்யா..., "டேட்...", கதறலோடு ஸ்ரீராமின் கட்டிலை நெருங்கினாள். அங்கே ஸ்ரீராம் விழிகள் மூடி அசையாமல் படுத்திருக்க, அவர்மேல் போய் விழுந்தாள்.

"ம்ச்..., இது அழற நேரமா...? முதல்ல விலகு...", அவளை ஒற்றை கையால் விலக்கியவன், அடுத்த நிமிடம் பரபரப்பாக செயல்பட்டு...,

"கார்த்திக்..., கார்ல அவளை கூட்டி வா..., நான் முன்னால் போறேன்...", உரைத்தவன், ஆம்புலன்ஸ்சில் அவரை ஏற்றிக்கொண்டு மருத்துவமனை நோக்கி பயணித்தான்.

'அடப்பாவி..., என்னை இவகிட்டே சிக்க விட்டுட்டு போறியேடா..., என்னை பேயோட்டப்போறா...' மனதுக்குள் பொருமியவன், அமைதியாக வெளியே இருந்த இருக்கையில் அமர்ந்து கொண்டான்.

வேகமாக தன் அறைக்குச் சென்று உடை மாற்றியவள், புயலென வெளியேறி, "போகலாம்..." கார் கீயை அவனை நோக்கி வீசியவள், பின்னிருக்கையில் சென்று அமர்ந்தாள்.

பொதுவாக யாரையும் மதிக்காதவள், தனக்கு கீழே வேலை செய்யும் யாரையும் வீட்டுக்குள் வர அனுமதிக்காதவள், யாருடனும் சரிசமமாக பயணிக்க விரும்பாதவள்..., அதைவிட தன் பிஎம்டபிள்யூவை டிரைவர் தவிர மற்றவர்களை தொடவே அனுமதிக்காதவள், இன்று எதைப் பற்றியும் சிந்திக்கும் நிலையில் இருக்கவில்லை.

அவள் குழப்பத்தில் இருப்பதை உணர்ந்த கார்த்திக்கும்..., அமைதியாக அதே நேரம் விரைவாக காரை செலுத்தினான்.

மருத்துவமனையில் அவசரசிகிச்சைப் பிரிவில் ஸ்ரீராம் அனுமதிக்கப் பட்டிருக்க, வராண்டாவில் அமர்ந்திருந்த வினித்துக்கு மனம் முழுவதும் குழப்பம்.

‘இவர்தானே காலையில் போன் பண்ணச் சொன்னார்..., நானுமே என்ன இது புதிதாக என நினைத்தேனே..., இப்போ என்னன்னா...’, அவனை மேலே சிந்திக்க விடாமல்..., வேக நடையோடு அவனை நெருங்கினாள் ஐஸ்வர்யா.

“டேடிக்கு எப்படி இருக்கு...? என்ன சொன்னாங்க...? பேசினாரா...? வாயத்தொற...”, படபடத்தவள், அவனை பேசவே அனுமதிக்காமல் பொரிந்தாள்.

“ரிலாக்ஸ்..., டாக்டர் பாத்துட்டு இருக்காங்க..., அவங்க வெளியே வந்தால் தான் தெரியும்...”, அவன் முடிக்கவும்..., அறைக்குள்ளிருந்து மருத்துவர் வெளியே வருவதற்கும் சரியாக இருந்தது.

அவரைப் பார்த்தவள்..., “அங்கிள்..., நீங்களா...? டேட் எப்படி இருக்காங்க...? அவங்களுக்கு ஒண்ணும் இல்லையே..., நான் பாக்கலாமா...?”, விட்டால் அறைக்குள் பாய்ந்துவிடுவேன் என்பதுபோல் நின்றாள்.

“தேவி..., இது ஐசியூ..., நினைத்த நேரம் உள்ளே போக முடியாது. முதல்ல ரூமுக்கு வா...”, அழைத்தவர் எதையும் சொல்லாமல் நடக்கவே..., அவர்களோடு செல்வதா..., வேண்டாமா என்ற குழப்பத்தில் சற்று தயங்கினான்.

“தேவி..., உன் உட்பீயையும் வரச் சொல்..., கண்ணு முழிச்ச உடனே வினித் வந்தானான்னுதான் கேட்டான்...”, அவர் நடந்தவாறே உரைத்துச் செல்ல, தந்தையின் உடல்நிலையைப் பற்றிய கவலையில்..., வினித்தை தன் வுட்பீ என சொன்னதைக் கூட அவள் பெரிதாக்காமல், அவனை திரும்பி ஒரு பார்வை பார்த்துவிட்டு நடந்தாள்.

‘மகாராணி வான்னு வாயத் தொறந்து சொல்ல மாட்டாங்க...’, அந்த நேரத்தில் அவள் அமைதியை ஆச்சரியமாக எண்ணியவன், மனதுக்குள் செல்லமாக அவளை திட்டிக்கொண்டு சென்றான்.

‘டேய் அவ மட்டும் தெளிவா இருந்தா உனக்கு சங்குதான்...’, மனசாட்சி குரல் கொடுக்க, அமைதியானான்.

அறைக்குள் நுழைந்தவள்..., “நீங்க எப்போ இந்தியா வந்தீங்க...? டேட் நீங்க வந்துட்டதா சொல்லவே இல்லையே. டேட்.....”, அவர் காட்டிய இருக்கையில் அமர்ந்தவாறு கேட்டாள்.

வினித்தும் அவள் பக்கத்தில் இருந்த இருக்கையில் அமரவே..., “நான் வந்து பத்து நாள் ஆகுதும்மா...”, உரைத்தவர் தன் மூக்குக் கண்ணாடியை நிதானமாகக் கழட்டி மேஜைமேல் வைத்தார்.

ஐஸ்வர்யா அவர் பதிலுக்காக முகம் பார்க்க, “ராமுக்கு மைல்ட் அட்டாக்..., இன்னும் கொஞ்சநேரம் நீங்க கவனிக்காமல் விட்டிருந்தாலும்...”,

“டோன்ட் சே இட் அங்கிள்...”, அவரை மேலே சொல்ல விடாமல் இடை மறித்தாள்.

“கிட்டத்தட்ட மரணத்தை தொட்டுட்டு வந்துட்டான். இனிமேல் அவனை கவனமா பாத்துக்கணும். அதிர்ச்சிதர எந்த விஷயத்தையும் அவன்கிட்டே பேச வேண்டாம்...”, இன்னும் அவர் சொல்லிக்கொண்டே போக..., அடுத்து அவர் சொன்ன எந்த விஷயமும் அவள் காதில் ஏறவே இல்லை.

இந்த உலகத்தில் தனக்கென இருக்கும் ஒரே உறவு..., ஒரே சொந்தம்..., ஒரு நொடியில் அது இல்லாமல் போயிருக்கும்.., இந்த உலகத்தில் தான் அனாதையாக நின்றிருப்போம்..., மூளைக்குள் மின்னல் வெட்டியது போன்ற உணர்வு.

தாயும், பாட்டியும் இந்த உலகத்தை விட்டு போனபொழுது கூட, தனக்கென தன் தந்தை இருக்கிறார் என்ற தைரியமும், நம்பிக்கையும் இருந்தது. ஆனால் இப்பொழுது..., மனம் அடித்துக் கொண்டது.

ஒரு நொடி..., இந்த உலகில் தான் தனியாக நிற்பதுபோல் தோன்ற, அந்த நினைவே அவளுக்கு படபடப்பை கொடுத்தது. மெல்லியதாக கண்கள் செருகும் உணர்வு. அவள் தலை தோய்வதுபோல் இருக்க..., அவள் அருகில் இருந்த வினித், சட்டென அவள் கரத்தை பற்றியவன்...,

“டாக்டர்..., வட்டார் ப்ளீஸ்...”, அவர் டேபிள்மேல் இருந்த தண்ணீரை எடுத்து, சட்டென அவள் வாயில் புகட்டினான்.

அந்த நேரம்..., அவன் கரத்தை அழுத்தமாக..., மிகவும் அழுத்தமாக பற்றிக் கொண்டாள். அந்த ஆதரவு அப்பொழுது தேவையாக இருந்தது. அதை உணர்ந்தவனும்..., தன் கரத்தை விலக்கிக் கொள்ளவில்லை.

நீரை குடித்தபிறகே அவளால் நிதானத்துக்கு வர முடிந்தது. “என்னம்மா நீ..., நீதான் அவனைப் பாத்துக்கணும்னு சொல்றேன்..., இப்போ உன்னை பாத்துக்கவே ஒரு ஆள் வேணும் போல. ம்..., ராம் சரியான ஆளைத்தான் பிடிச்சிருக்கான்..., மேட் பார் ஈச் அதர்...”, அவர் உரைக்க,

“ப்ளீஸ் டாக்டர்..., இப்போதைக்கு சார் பத்தி மட்டும் பேசலாமே...”, எப்பொழுதும் இதையே பேசினால்..., தேவையில்லாமல் அவளை தூண்டி விட்டதாக ஆகிவிடுமோ என்பதாலேயே அவன் அவ்வாறு உரைத்தான்.

“இல்ல வினித்..., இப்போ அவனுக்கு இருக்கும் மிகப்பெரிய கவலையே..., தனக்கு இப்போ ஏதாவது ஒண்ணு ஆகியிருந்தால்..., தன்னோட மகள் தனியாளா நின்னிருப்பாளே என்பதுதான். இப்போ அதைவிட பெரிய கவலையே..., உனக்கு தன்னால் ஒரு திருமணம் செய்து வைக்க முடியவில்லயே என்ற கவலைதான்.

“அவன் இப்படியே கவலைப்பட்டுட்டு இருந்தால்..., இதுவே அவனை நிரந்தர நோயாளியா மாற்றிவிடும். இப்போ அவன் உடல்நிலை உன் வார்த்தைகளில் மட்டும்தான் அடங்கி இருக்கு....”, நிதானமாக உரைத்து நிறுத்தியவர்,

“இன்னைக்கு ஒரு நாள் அவன் ஐசியூ விலேயே இருக்கட்டும். நாளைக்கு ஸ்பெஷல் வார்டுக்கு மாற்றும்போது நீங்க இருந்தால் போதும்...”, நீங்கள் போகலாம் என்பதுபோல் பார்த்தார்.

ஐஸ்வர்யாவின் உலகம் நொடியில் தனியாகிப் போன உணர்வு..., தன் அழுகையை கட்டுப்படுத்தியவள், “ஒரே ஒரு முறை..., டேடியை நான் பாக்கணும்...”, குரல் நைந்து வெளியேறியது.

“இப்படியே அங்கேயும் போய் அழுது வைத்தால் அவன் இன்னும் சோர்ந்துடுவான்..., சோ...”, மறுப்பை தெரிவித்தார்.

“நோ அங்கிள்..., அழ மாட்டேன்..., ப்ளீஸ்...”, தன் வாழ்நாளில் முதல் முறையாக கெஞ்சினாள்.

“ஐ வில் டேக் கேர் டாக்டர்...”, வினித் இடைபுக, மருத்துவரின் கண்களில் வந்து போன பளபளப்பு எதனால் என்பது அவனுக்கு சத்தியமாக புரியவில்லை.

“தென் ஓகே....”, அவர் தன் கண்ணாடியை அணிந்துகொள்ள, இருவரும் வெளியே வந்தார்கள்.

அறையை விட்டு வெளியேறியவள்..., தன் தந்தை இருந்த ஐசியூவுக்குள் கால்கள் தடுமாற நுழைய..., வினித் வெளியிலேயே தேங்கிக் கொண்டான். அதிக உரிமை ஆபத்து என்பது அவனுக்குத் தெரியும்.

அறைக்கு நடுவில்..., உபகரணங்களுக்கு மத்தியில், ஸ்ரீராம் விழி மூடி படுத்திருக்க, அடிமேல் அடி வைத்து அவரை நெருங்கியவளுக்கு..., அழுகை முட்டிக்கொண்டு வந்தது.

முயன்று தன்னை தேற்றியவள்..., ட்ரிப்ஸ் இறங்கிய அவர் வலக்கரத்தை பற்றியவள்..., “டேட்..., டேட்...”, வெடிக்கத் துவங்கிய விம்மலை அடக்கி அவள் அழைக்க, மெதுவாக விழி திறந்தவர்..., சோபையாக அவளை நோக்கினார்.

அவர் விழிகள் மேலும் எதையோ தேடி சுழல, தன் பின்னால் நோக்கியவள், அங்கே வினித்தை காணாமல் திகைத்தாள்.

அவர் விழிகள் பரிதவிக்க...., அந்த நொடி.., அவள் மேலே எதையும் சிந்திக்கவே இல்லை. “ஒரு நிமிஷம்ப்பா...”, உரைத்தவள்..., பாய்ந்தோடி கதவைத் திறந்து, வராண்டாவில் இருந்த இருக்கையில்

அமர்ந்திருந்தவனைப் பார்த்து..., “என்னவோ சொன்ன...?”, கேட்டவள் உள்ளே திரும்ப, ‘ஹப்பா..., இப்போ கூட பொரியிறாளே...’ எண்ணியவன் உள்ளே சென்றான்.

ஸ்ரீராமின் கரம் அவனை நோக்கி நீள..., “சார்..., இப்போ எதையுமே யோசிக்காதீங்க. முதல்ல நீங்க வீட்டுக்கு வாங்க..., எல்லாம் பிறகு பேசிக்கலாம்...”, சட்டென அவர் கரத்தை தாங்கியவன், அவருக்கு தைரியம் உரைத்தான்.

அவன் பேச்சு அவருக்கு நிம்மதி கொடுத்ததோ என்னவோ..., ஐஸ்வர்யாவுக்கு மனதின் ஓரம் ஒரு நெருடல்..., ‘தன்னை அவன் தவிர்க்கிறானா? தவிர்க்க விரும்புகிறானா?’, அவன் முகம் பார்க்க, அவனோ, ஸ்ரீராமிடம் மட்டுமே கவனமாக இருந்தான்.

“கவலைப்படாமல் இருங்க..., நான் நாளைக்கு காலையில் வந்து உங்களை பாக்கறேன்...”, பேசிவிட்டு வெளியேறினான்.

அவள் அவனையே வெறிக்க..., “நீயும் போம்மா...”, ஸ்ரீராம் உரைக்க, அவன் பின்னால் சென்றாள்.

அவள் வர காத்திருந்தவன்..., ஏற்கனவே விஷயம் கேள்விப்பட்டு மருத்துவமனைக்கு கிரி வந்திருக்க, அவனை அவளை அழைத்துச் செல்ல உரைத்தவன், அங்கே ஒதுங்கி நின்றிருந்த கார்த்திகைப் பார்த்து..., “நாம ஏதாவது ஆட்டோ பிடிச்சு போய்க்கலாம்...”, வருகிறோம் என்ற பாவனையில் அவளிடம் தலை அசைத்தவன், கிளம்பியே விட்டான்.

அவ்வளவு நேரம் மனதில் இருந்த நம்பிக்கையும், தைரியமும் அவனோடு செல்வதுபோல் உணர்ந்தவள்..., அவன்மேல் கடும் கோபம் கொண்டாள். அவளைப் பொறுத்த வரைக்கும்..., அவள் எதற்காகவும் எப்பொழுதும் ஏங்கியதோ, எதிர்பார்த்ததோ கிடையாது.

அவள் மனதில் நினைத்ததை கூட நிறைவேற்ற அவளை பெற்றவளும், பாட்டியும், தந்தையும் தயாராக இருக்க,

இதுவரை எதுவுமே அவளுக்கு கிடைக்காமல் இருந்ததில்லை.

அவன் ஆதரவை வேண்டுகிறாளா..., இல்லையா என தீர்மானிக்கும் முன்பே, கடமையைச் செய்துவிட்டு விலகும் அவன் செய்கை அவளுக்கு எரிச்சலை கொடுத்தது.

அதே நேரம்..., உரிமையாய் அவன் எதையாவது செய்திருந்தால், அதை ஏற்கும் மனநிலையும், பக்குவமும் நிச்சயம் அவளுக்கு இருக்கவில்லை என்பதை அவன் உணர்ந்தே அவ்வாறு செய்தான் என்பதை அவளுக்கு யார் சொல்லி புரிய வைப்பது?

அவன் அவளை ஜெயிக்கத் துவங்கிவிட்டானா...? கேள்வியின் பதில் அவளிடமே இப்பொழுதும் சிக்கித் தவித்தது.

அடுத்த நாட்களில் கூட, அவன் காலையும், மாலையும் மருத்துவமனை வந்தான் தான். ஐந்தாம் நாள் ஸ்ரீராம் வீட்டுக்குச் செல்ல..., அவனும் உடன் வந்து வீட்டில் விட்டான். அவர் அறையில் அவரை படுக்க வைத்தவன், ஐஸ்வர்யா தன் அறைக்குச் செல்லவே..., வேகமாகச் சென்று கதவை தாழிட்டுவிட்டு வந்தான்.

அவர் படுக்கைக்கு அருகில் இருந்த சோபாவில் அமர்ந்தவன்..., “எதுக்கு சார் இந்த நாடகம்...?”, அவன் வினவ, திடுக்கிட்டு போனார்.

“வினித்..., நீ....”, அவர் தடுமாற...,

“உண்மையான அட்டாக்குக்கும்..., நாடகத்துக்கும் வித்தியாசம் தெரியாத அளவுக்கு நான் என்ன சின்னப் பையனா...?”, அவன் நிதானமாக வினவ,

படுக்கையில் இருந்து எழுந்து அமர்ந்தவர்..., “என் மகளை யோசிக்க வைக்க எனக்கு வேற வழி இருக்கலை வினித். இப்போ கண்டிப்பா அவ ஒரு முடிவிற்கு வர வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறாள். என்னோட கோரிக்கையா...,

அவள் திருமணத்தை தான் கேட்டிருக்கிறேன்…”, அவர் உரைக்க கவலையானான்.

“இது சரிவரும்னு நினைக்கறீங்களா…?”,

“கண்டிப்பா சரியாக வரும். அவ உன்கிட்டே பேசணும்னு சொன்னாள். ஆனால்…, நான்தான் நீயே அவனிடம் பேசுன்னு சொல்லிட்டேன்…”, அவர் உரைக்க, திடுக்கிட்டான்.

“நிஜமாவா…?”, அவனால் நம்பவும் முடியவில்லை.

“நீயே பார்…, அனேகமா நாளைக்கே உன்கிட்டே பேசுவாள்…”, அவர் உரைத்ததுதான் நடந்தது.

இத்தனை நாளாக அலுவலகம் செல்லாத காரணத்தால்…, ஸ்ரீராம் வீட்டுக்கு வந்த அன்றே கிளம்பிவிட்டாள். அலுவலகம் வழக்கம்போல் இயங்க, வினித்தும் அவன் வேலையை செய்துகொண்டிருந்தான்.

லேபர் ரிட்டயர்மென்ட் விஷயத்தை அவன் ஒரு முடிவிற்கு கொண்டு வந்திருக்க, அதைப் பற்றி அவளிடம் விவாதிக்க அவள் அறைக்குச் சென்றான்.

“மேம்…, முத்தையா கேஸ் போட்டிருக்கார்…”, அவன் உரைக்க, “ஓ…, இதைத்தானே நாம எதிர் பார்த்தோம்…, இனிமேல் எல்லாம் வக்கீல் பாத்துப்பார்…”, உரைத்தவள்…, “மத்தவங்க என்ன சொல்றாங்க..?”, வினவ, “கண்டிப்பா பிரச்சனை வர வாய்ப்பே இல்லை…”, அவன் நம்பிக்கை, அவளுக்கு வியப்பை அளித்தாலும், அதில் நம்பிக்கை பிறக்கவே செய்தது.

அவன் பேசி முடிந்தது என கிளம்ப…, அவள் முக பாவனை அவனிடம் எதையோ பேச முயல, மீண்டும் இருக்கையில் அமர்ந்துகொண்டான்.

அவள் நினைவுகளோ…, மருத்துவ மனையில் தந்தை பேசியதையே சுற்றி வந்தது. அன்று மூன்றாம் நாள்…, அவள் கரத்தை நடுக்கமாகப் பற்றியவர்…, “எனக்கு பயம்மா இருக்கு தேவி. எங்கே உன்னை இப்படியே…, தனியா

விட்டுட்டு போய்டுவேனோன்னு ரொம்ப பயம்மா இருக்கு. இன்னும் உன் சம்மதத்துக்காகத்தான் நான் காத்துட்டு இருக்கிறேன்...", அவர் குரல் அவளிடம் கெஞ்சிற்று.

அன்று அதற்கு அவள் பதில் கொடுக்கவில்லை. ஆனால்..., நேற்று அவர் அதே கேள்வியை கேட்க..., "அவருக்கு இதில் விருப்பம் இருப்பதுபோல் தெரியவில்லையே டேட்...", முதல் முறையாக அவன் பக்கம் என்னவென்று கேட்டாள்.

"அவன்கிட்டே பேசினால் தெரிந்துவிட்டுப் போகிறது...".

"டெல் ஹிம் டு மீட் மீ டேட்...", ஒரு முடிவோடு அவள் உரைக்க,

"நீயே அவன்கிட்டே சொல்லிடும்மா..., நான் சொன்னால் அவன் வர மாட்டான்...", அவர் தீர்மானமாக உரைத்துவிட, இதோ அவன் முன்னால் விஷயத்தை எப்படிச் சொல்லவென்று தெரியாமல் அமர்ந்திருந்தாள்.

'தானாக ஒருவனை பேச அழைப்பதா...?' மனம் முரண்டினாலும், தந்தை இருக்கும் நிலையில், காலம் தாழ்த்தவும் அவளால் முடியவில்லை. அதைவிட..., தன்னை ஒருவன் வேண்டாம் என தவிர்ப்பதா? அலட்சியப்படுத்துவதா...? அவனை வீழ்த்த வேண்டும்... அது தன் அழகானாலும், பணமானாலும்..., ஒரு கை பார்க்க வேண்டும்.

இப்பொழுது அவள் எண்ணம் இதுவே. அவனை வீழ்த்த வேண்டும்....

அவள் அமைதியாகவே இருக்க, "மேம்...", அவளை கலைத்தவன், "எனி திங் இம்பார்ட்டன்ட்...?", அவன் கேள்வியில் மனதுக்குள் பல்லைக் கடித்தாள்.

"சாயங்காலம் காஃபி டேக்கு வா..., பேசணும்...", அவள் முனகலாக உரைக்க,

"காஃபி டே..., பரவாயில்லை இங்கேயே சொல்லுங்க...", அவன் நழுவ,

“பெர்சனல் விஷயம்..., சோ...”, கோபம் வெடிக்கவா என அனுமதி வேண்டியது.

“உங்க பெர்சனல் விஷயம்...”, அவன் வார்த்தைகளை..., அவளது சூடான பார்வை தடுத்து நிறுத்தியது.

“இட்ஸ் டூ மச்..., நம்ம மேரேஜ் ப்ரப்போசல் பத்தி பேசணும்...”, அவள் கோபத்தில் வெடிக்க,

“ஓ..., கண்டிப்பா வரேன்....”, சிரிப்பை உள்ளடக்கிய குரலில் உரைத்தவன், இருக்கையில் இருந்து எழுந்துகொண்டான்.

மனமோ..., ‘விஷயத்தை உன் வாயால் கன்ஃபாம் பண்ணிக்கலன்னா..., அங்கே வந்ததும் எதுக்கு வந்தன்னு என்னையவே நீ கேள்வி கேட்டால்..., அதான்....’, அவன் விழிகள் அவளை ஏறிட, கவனமாக தன் எண்ணம் விழிகளில் தெரிந்துவிடாமல் மறைத்துக் கொண்டான்.

இந்த முதல் வெற்றியும்..., அவள் பேச்சும்..., அவன் மனதை மீட்டியது என்னவோ உண்மை. ஆனால்..., இது அவளது முதல் தோல்வியாயிற்றே..., அவள் இதை ஏற்றுக் கொள்வாளா?

***

# பகுதி - 12.

ஆறு முப்பதுக்கு வர வேண்டிய இடத்துக்கு, ஆறு மணிக்கே ஆஜராகிவிட்டான். மனதுக்குள் நிச்சயம் பிரளயம் மூண்டது மட்டும் உண்மை.

ஐஸ்வர்யாவை திருமணம் செய்வது ஒன்றும் அவ்வளவு பெரிய விஷயமாக அவனுக்குத் தோன்றவில்லை. திருமணத்துக்குப் பிறகு? இந்த கேள்விதான் அவனை அலைக்கழித்தது.

அவள் அலட்சியத்தையும், கோபத்தையும், வெறுப்பையும் தன்னால் தாங்கிக் கொள்ள முடியுமா? பொதுவாக பெண்கள்தான் திருமணத்தின் பொழுது இப்படியான குழப்பங்களையும், பரிதவிப்பையும் சந்திப்பார்கள்.

ஆனால் இங்கே..., அவன் வாழ்நாளில் இத்தனை நாள் உணர்ந்திராத அன்பை, திருமணம் அவனுக்கு ஈடேற்றுமா என்ற மிகப்பெரிய எதிர்பார்ப்போடு அமர்ந்திருந்தான்.

அவன் ஒரு விஷயத்தில் உறுதியாக இருந்தான். தன்னை திருமணம் செய்ய முடியாது என அவள் உரைத்தால்..., என்ன நடந்தாலும் அவள் கழுத்தில் தாலி கட்டுவதில்லை என்ற உறுதிதான் அது.

அவன் கண்டவரை, ஐஸ்வர்யாவின் குணத்துக்கு, எப்பொழுதோ அவளால் முடியாது என மறுத்திருக்க முடியும். ஆனால்..., அப்படிச் செய்யாமல், தன்னிடம் பேச வருவதே..., அவள் மனதின் விருப்பத்தை அவனுக்கு உணர்த்தியது.

ஐஸ்வர்யாவை பொறுத்தவரை, பணம் இல்லாதவர்களை ஒரு பொருட்டாக கூட மதிக்க மாட்டாள். அப்படிப்பட்டவள், எப்படி தன்னை கணவனாக யோசிக்க ஆயத்தமானாள்? இந்த வினாவே..., அவள்மேல் சிறு நம்பிக்கை துளிர்க்க காரணமாக அமைந்தது.

இப்படியாக பலவித குழப்பத்தில் இருந்தவன், இறுதியாக..., என்ன நடந்தாலும் பார்த்துக் கொள்ளலாம்...., ‘எனக்கு மறு

உயிர் கொடுத்த ஸ்ரீராமுக்காக மட்டுமல்ல..., அந்த சுவாமிஜி கொடுத்த நம்பிக்கையும், என் எதிர்பார்ப்பும் ஈடேறும் என்ற நம்பிக்கையில் காத்திருக்கத் துவங்கினான்.

என்ன சூழலிலும் அவளிடம் தோற்றுவிடக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தான். இந்த இரண்டு மாதங்களுக்குள்ளாக, அவளது குணம் அவனுக்கு அத்துப்படியாகி இருந்தது. அந்த நம்பிக்கை கைகொடுக்க..., மனநிலையை உற்சாகமாக மாற்றிக் கொண்டான்.

அவனது எந்த குழப்பமும் ஐஸ்வர்யாவுக்கு இருக்கவில்லை. அவன் வேஷம் இன்று கலையுமா? இல்லையென்றால் என்ன செய்வான் என பார்ப்போம்..., அசால்ட்டாகவே கிளம்பி வந்தாள்.

நேரம் ஆறு இருபதை நெருங்கும் வேளையில் காஃபி டேக்குள் அவள் நுழைய, கண்கள் சுழன்று அவனைத் தேடியது.

எப்படியும் தன்னைக் காண வேண்டி சீக்கிரமாகவே கிளம்பி வந்திருப்பான் என அவள் எண்ணினாள். ஆனால்..., அங்கே குழுமியிருந்த கூட்டத்துக்கு மத்தியில் தேடியும் அவன் கிடைக்காமல் போக, முதல் தளத்தில் இருந்த ஏசி அறைகள் அடங்கிய கேபினில் சென்று அமர்ந்தாள்.

அவள் கார் உள்ளே வரும்பொழுதே கவனித்த வினித், காருக்குள் இருந்து அவள் கீழே இறங்கிய அந்த நிமிடம்..., உறைந்துதான் போனான்.

இத்தனை நாளாக..., புடவையில் மட்டுமே பார்த்து பழகிய ஐஸ்வர்யாவை, முதல் முறையாக..., ஒரு லாங் ஸ்கேர்ட்..., டாப்புடன் பார்க்கிறான். ஒரு டீனேஜ் பெண்ணின் நளினம் அவளிடம் மிளிர்ந்தது. அவள் நடையும், பார்வையும்..., ‘இவ இவ்வளவு அழகா...?’, முதல் முறையாக தன்னைத் தானே கேட்டுக் கொண்டான்.

அழகு நிலையம் சென்று வந்திருக்கிறாள் என்பதை..., அவளது செயற்கை கேர்லி ஹேரும்..., முக பளபளப்பும்

உரைக்க இமைக்க மறந்து அவளை வெறித்தான். வாசல் அருகில் நின்றவள் பார்வையை சுழற்றிய விதமும், உதட்டை சுழித்த அழகும்..., இமைகளை சிமிட்ட மறந்தான்.

வினித் அழகான பெண்களை பார்க்காதவன் கிடையாது. எத்தனையோ பெண்களை கடந்துதான் வந்திருக்கிறான். இவளை விட அழகான பெண்களுடன் பழகியும் இருக்கிறான். அப்பொழுதெல்லாம் மனதில் சிறு சலனம் கூட தோன்றியது கிடையாது.

அப்படி இருக்கையில்... முதல் முறையாக அவளை... தன் உரிமையானவளாக, உடமையாகப் போகிறாள் என்ற எண்ணத்தில் பார்த்ததால் அழகாகத் தெரிகிறாள் என தன்னையே சமாதானம் செய்து கொண்டான்.

அவள் முதல் தளத்துக்குச் சென்று, குறிப்பிட்ட அறைக்குள் செல்வது வரைக்கும்.., இமைகளை சிமிட்டாமல் அவளையே பார்த்திருந்தான். அந்த நேரம் அவனைப் பார்த்த எவரும்..., நிச்சயம் இவன் பெண்களையே பார்த்திருக்க மாட்டானோ..., என எண்ணும் அளவு இருந்தது அவன் பார்வை.

அவள் அறைக்குச் செல்லவே ஐந்து நிமிடங்கள் சென்றிருக்க, அடுத்த நிமிடங்களில் தன்னை நிதானத்துக்கு கொண்டுவர பயன்படுத்திக் கொண்டான். கண்டிப்பாக அவள் முன்னால்..., அவள் முகத்தை ஏறிட முடியாது...., அப்படியே பார்த்தாலும், அதில் உணர்வுகளை வெளிப்படுத்த முடியாது என்பது அவனுக்குத் தெரியும்.

அவனது இந்த நிலையே..., அவளை ஏற்க தான் தயாராகி விட்டோம் என்பதை அவனுக்கு உணர்த்த, இனிமேல் பின்வாங்க முடியாது என்பது அவனுக்குப் புரிந்து போனது.

நேரம் ஆறு முப்பதை நெருங்க..., பக்கவாட்டில் தோட்டம்போல் அமர்ந்திருந்த அந்த இடத்தில் இருந்து எழுந்தவன்..., அவள் இருந்த அறைக்குச் செல்லத் துவங்கினான்.

இங்கே பத்து நிமிடங்களை கழித்த ஐஸ்வர்யாவுக்கோ...., எரிச்சலாக வந்தது. இதுவரை அவளுக்காகத்தான் அனைவரும் காத்திருந்து பார்த்திருக்கிறாள்..., முதல் முறையாக அவள் ஒருவனுக்காக காத்திருக்கிறாள்.

‘இடியட்..., எங்கே போய் தொலைந்தான்? ஒரு வேளை மறந்துவிட்டானோ?’ இந்த நினைவே சட்டென மனதை சோர்ந்து போகச் செய்தது.

அவன்மேல் கோபமாக இருக்கும் இந்த நேரத்தில் கூட, அவன் வர மாட்டானோ என எண்ணி சோர்ந்தால்..., கண்டிப்பாக அவனை எதிர்பார்க்கிறாள் என்று தானே அர்த்தம்? ஆனால் அதை அவள் உணரவில்லை, உணர முயலக்கூட இல்லை.

நேரத்தைப் பார்த்தவள்..., இன்னும் பத்து நிமிடத்தில் அவன் வரவில்லை என்றால்..., கிளம்பி போய்க்கொண்டே இருக்க வேண்டும் என எண்ணியவாறு, கடிகாரத்தைப் பார்த்துவிட்டு, மேஜைமேல் இருந்த நாளிதழை கையில் எடுத்துக் கொண்டாள்.

அதே நேரம்..., பக்கத்தில் கல்லூரி மாணவிகள் கூட்டம் ஒன்று வர, அவர்கள் ஏற்படுத்திய ஓசையில் கலைந்தவள், திரும்பிப் பார்க்க, கிட்டத்தட்ட பத்து மாணவிகளுகு மத்தியில், அலன்சோலி டீ ஷர்ட்டும்..., அடர் நீல வர்ண ஜீன்சும், காலில் ரீபோக் ஷூவும் அணிந்து, நெற்றியில் கவிழும் முடியோடு..., கோபியர் மத்தியில் கண்ணனாக வந்துகொண்டிருந்தான் வினித்.

அந்த சூழலில் அவனைப் பார்த்த ஐஸ்வர்யா ஆச்சரியமாக விழி விரித்தாள். அத்தோடு..., அவன்மேல் கட்டுக்கடங்காத கோபம் கிளர்ந்தது. அந்த மாணவியரில் ஒருத்தி அவனைப் பார்த்து ஏதோ சொல்ல, அவளை திரும்பிப் பார்த்தவன் மெல்லியதாக சிரிக்க, அந்த சிரிப்பில் அவள் இதயம் நழுவியது மட்டும் அப்பட்டமான உண்மை.

‘அவங்க கிட்டே என்ன இளிப்பு வேண்டிக் கிடக்கு...? வரதே லேட்..., இதில் இளியல் வேற...’ அவன் அந்த பெண்களிடம்

சிரித்ததற்கு வெதும்பினாளா, இல்லையென்றால் தன்னிடம் இப்படி சிரித்ததில்லையே என பொரிந்தாளா..? அது அவள் மட்டுமே அறிந்த உண்மை.

தினமும் கோட், சூட்..., பார்மல் ஷூவில் பார்த்து பழகியவன், இன்று சாதாரண உடையில்..., மிகவும் வசீகரமாக இருந்தான். கையில் இருந்த மொபைலை சுழற்றியவாறே..., அந்த பெண்களிடம் பதிலுக்கு எதையோ உரைத்தவன், இவள் இருந்த அறைக்கு வர, அவ்வளவு நேரமும் அவனைத்தான் முறைத்துக் கொண்டிருந்தாள்.

அவள் பார்வையை சந்திக்கவில்லை என்றாலும், ஓரவிழியில் தன் கவனம் மொத்தத்தையும் அவள் மீதே வைத்திருந்தவன், அவள் அசையாத பார்வையை உணர்ந்து மிகப்பெரும் நிம்மதியும், திருப்தியும் கொண்டான்.

தான் திருமணம் செய்யப்போகும் பெண், தன்னை முதலிலேயே காதலிக்கவில்லை என்றாலும், அவளைக் கவரும் விதத்திலாவது தான் இருக்கவேண்டும் என அவன் விரும்பியதில் தவறேதும் இல்லையே.

அவளை என்றாவது ஒருநாள் தன்னை விரும்ப வைக்கும் வித்தை அவனுக்குத் தெரியும்தான். முதலில் அவளை கவரவேண்டியது அவனது கடமையாயிற்றே.

அவள் அறைக்கு வந்தவன்..., “ஹாய் ஐஸ்வர்யா...”, கை உயர்த்தி ஆட்டியவன், விழிகளை அவள் விழிகளோடு நிலைக்கவிட்டு, அவள் எதிரில் இருந்த இருக்கையில் அமர்ந்தான்.

அவன் அமரவே..., சட்டென தன் முகபாவத்தை மாற்றியவள், அவனை கவனிக்காதவள்போல் காட்டிக் கொண்டாள். அதே நேரம்...

அவனது ஐஸ்வர்யா என்ற அழைப்பு அவளுக்கு மிகுந்த வியப்பை அளிக்க, அதை கொஞ்சம் கூட மறைக்க முடியாமல் விழிகளில் பிரதிபலித்தாள்.

அவள் வியப்பை கண்டவன்..., “என்ன..., அப்படிப் பாக்குற...?”, வினவ,

“ஐ'ம் யூவர் பாஸ்...”, அவள் நினைவூட்ட..., “இப்போ இல்லன்னு நான் சொல்லவே இல்லையே. ஆனால்..., அது அலுவலகத்துக்குள்ளே மட்டும்தான். அதை விட்டு வெளியே..., நீ ஒரு பெண், நான் ஒரு ஆண் அவ்வளவு தான்...”, தோளைக் குலுக்கி சாதாரணமாக உரைத்தான்.

“ஓ..., அப்போ கான்பிடன்ஸ் தான் இல்ல...”, நக்கலாக கேட்டாள்.

“நீ எதை மனதில் வச்சுட்டு கேக்கறன்னு எனக்குப் புரியுது. அது நடக்காமல் போனாலும்..., வெளியே..., என்னிடமிருந்து உனக்கு மதிப்பு கிடைக்குமே தவிர, மரியாதை கிடைக்காது...”, அவன் தெளிவாக உரைக்க, அவளுக்கு.. தான் எப்படி உணர்கிறோம் என்றே புரியவில்லை.

முன்னர் போலியான மரியாதைகளை விரும்பாதவள் தான்.... அதே நேரம்..., அவனது இந்த இயல்பும் அவளை வெதும்ப வைத்தது. அவன் அவளை ஆர்வமாக ஒரு பார்வை பார்த்திருந்தால்..., அவள் ஈகோவுக்கு தீனி கிடைத்திருக்குமோ என்னவோ..., அது இல்லாமல் போகவே, எரிச்சலாக வந்தது.

கோபமாக அவள் எதையோ உரைக்கப் போகையில்..., பேரர் அவர்கள் முன்னால் வந்து நின்றான். அவன் வரவே..., அமைதியானவள்..., முகத்தை திருப்பிக்கொண்டு அமர்ந்திருந்தாள்.

“சார்..., ஆடர் ப்ளீஸ்...”, அவன் கேட்க,

“என்ன சாப்பிடுற...?”, வினித்தின் கேள்விக்கு அவன் முகம் பார்த்தவள்..., “நான் இங்கே சாப்பிட வரலை...”, அவனுக்கு மட்டும் கேட்கும் குரலில் சற்று சீற்றமாக உரைத்தாள்.

அவனோ அதை கண்டுகொள்ளாமல்..., “வெளியே ஒரு ஸ்வீட் ஸ்டால் பார்த்தேனே...”, வினித் இழுக்க,

“அது இந்த பில்டிங் ஓனரோடது தான் சார்..., இங்கேயே ஆர்டர் எடுப்போம்...”,

“ஓ..., அப்போ..., ஒரு ரசமலாய்..., ஒரு க்ளோப் ஜாமூன் கொண்டு வாங்க. ஒரு பத்து நிமிஷம் கழிச்சு..., ஒரு சில் கிரீன் டீ..., ஒரு ஹாட் காபி எடுத்துட்டு வாங்க..., அப்படியே ஒரு வாட்டர் பாட்டில்...”, வினித் சொல்லிக் கொண்டிருக்க,

அவனது ரசமலாய் என்ற ஆர்டரில்..., மீண்டும் திகைத்துப் போனாள். மேலும் அவன் உரைத்த சில் கிரீன் டீ..., தண்ணீர்..., இவை எப்படி அவனுக்குத் தெரியும்? அலுவலக நிமித்தமாக ஒரு முறைதான் அவன் தன்னோடு வந்திருக்கிறான். அதுவும்... உதய்..., ஜீவா குழந்தையின் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் ஒரு மணி நேரம் மட்டுமே தன்னோடு இருந்தான்.

அதற்குள்ளாகவே..., தான் என்ன சாப்பிட்டோம்..., தனக்கு என்ன பிடிக்கும் என்பது வரை கவனித்திருக்கிறானே..., மனதுக்குள் வியந்துபோனாள்.

பேரர் செல்லவே..., அவன் இனிப்புகளை கொண்டுவரும் வரைக்கும் அங்கே மௌனமே நிலவியது. பேரர் ஆடர் செய்ததை வைத்துவிட்டுச் செல்ல, அவள் பக்கம் ரசமலாய் இருந்த கிண்ணத்தை நகர்த்தியவன், “இதை நான் ஆர்டர் செய்தேன்னு நினைக்கறதை விட..., இதை சாப்ட்டுட்டு, உனக்கான பில்லை நீயே கொடுத்துடு..., பிரச்சனை ஓவர்...”, சமாதானமாக உரைத்தான்.

அதன் பிறகும் கிண்ணத்தை எடுக்காமல் போனால் நன்றாக இருக்காது என்பதால் அதை கையில் எடுத்தாலும்..., மனதுக்குள் ஏதோ நெருடும் உணர்வு. அவனை விட்டு தூரமாக நிறுத்துவதாக அவள் உணர்ந்தாள். அந்த எண்ணம் மனதை பாரமாக்கியது மட்டும் உண்மை.

தனக்கு பிடித்ததை அவன் கவனித்து ஆர்டர் செய்ததில் மகிழ்ந்த மனம், அவன் தன்னையே பில்லை கொடுக்கச் சொன்னதில் சற்று சோர்ந்தது. மனித மனதின் விந்தை...,

நெருங்கி வருகையில் விலகிச் செல்வதும்..., விலகிச் செல்கையில் விரும்பி வருவதும் தானே...

அதற்கு ஐஸ்வர்யாவும் விதிவிலக்கில்லை. மௌனமாக அதை உண்டவள், எதையும் பேசாமலே இருக்க, “என்னை எதற்கு வரச்சொன்னாய், அதை இன்னும் சொல்லவே இல்லையே...”, ஒரு ஜாமூனை வாயில் போட்டவன் அவளிடம் கேட்டான்.

அவனிடம் கோபமாக எதை எதையோ கத்தவேண்டும் என வந்தவளுக்கு வார்த்தைப் பஞ்சம் வந்து போனது. ஏற்கனவே அவனிடம் கோபத்தைக் காட்டி, அதற்கான விளைவாக..., ஒரு வாரம் தன்னை அவன் தவிர்த்ததை அவ்வளவு சுலபமாக அவளால் மறக்க முடியவில்லை.

அவனது இந்த அகந்தையையும், தவிர்ப்பையும், இலகுத் தன்மையையும் அழித்தே ஆகவேண்டும் என்ற வெறியே பிறந்தது. அவனை தன் காலடியில் வீழ்த்தியே தீர வேண்டும்..., வேகம் பிறந்தது. வைராக்கியம் எழுந்தது.

‘உனக்கு என்னை திருமணம் செய்ய என்ன தகுதி இருக்கிறது...., எனத் துவங்கி..., தாறுமாறாக அவனை கேள்வி கேட்க நுனி நாக்கு துடித்தாலும், அவனை கட்டிவைத்து உதைக்க வேண்டும்..., உள்மனம் அவளை தடுக்க, அதுதான் சரியான யோசனையாக அவளுக்கும் தோன்றியது.

இதையே..., எங்கே இந்த கேள்விகளையெல்லாம் அவனிடம் கேட்டால், தன்னை திருமணம் செய்ய மறுத்து விடுவானோ என அவள் ஆழ்மனம் அஞ்சியதோ..., இந்த வினாவை அவளிடம் யார் கேட்பது?

சட்டென தன் கோபத்தை ஒதுக்கியவள்..., “இந்த கல்யாணத்தில் எனக்கு சம்மதம்..., உனக்கு...?”, என்னவோ போலியாகக் கூட மரியாதையை அவள் பேச்சில் அவளால் கொண்டு வர முடியவில்லை.

அவளிடம் வித விதமான கோபத்தையும், எரிச்சலையும், பேச்சுக்களையும் எதிர்பார்த்து வந்தவன்..., இப்படி ஒரு

பேச்சை எதிர்பாராமல் திகைத்துப் போனான்.

சொல்லப்போனால் மிகப்பெரும் அதிர்ச்சி..., அடுத்த வாய் ஜாமூனை எடுத்த கை உறைந்து போக..., பாதியிலேயே அது நின்று போனது.

அவனிடம் தான் எதிர்பார்த்த அதிர்ச்சி இருந்ததை எண்ணி மகிழ்ந்தவளுக்கு, அவன் முகத்தில் இருந்த பாவனையைத்தான் தாங்க முடியவில்லை.

அது சந்தோஷ அதிச்சியை வெளிப்படுத்தாமல், சந்தேக அதிர்ச்சியை வெளிப்படுத்த..., 'அப்படியானால்..., இவன் என்னிடம் மறுப்பை மட்டுமே எதிர்பார்த்து வந்தானா...?', 'நல்ல ஏமாற்றம் அவனுக்கு...', எண்ணியவளுக்கு, தான் எதிர்பார்த்த மகிழ்ச்சியைத்தான் அடைய முடியவில்லை.

"என்ன பேச்சையே காணோம்...?", தன் ஏமாற்றத்தை மறைத்துக்கொண்டு அவள் வினவ,

தன்னை சீர்படுத்திக் கொண்டவன், "அப்படியென்றால் இதை ராம் சார்ட்டையே சொல்லியிருக்கலாமே..., அவரும் சந்தோஷப் பட்டிருப்பார்..., நாம் இங்கே வர தேவையும் இருந்திருக்காது...", ஒருவாறு தன்னை தேற்றிக் கொண்டான்.

'கண்டிப்பாக அவள் மனதுக்குள் வேறு திட்டம் இருக்கு...', தனக்குள் சொல்லிக் கொண்டான்.

அவள் கண்களில் அவ்வளவு நேரம் லேசாக ஒட்டிகொண்டிருந்த மயக்கம் விடைபெற்று சென்றிருக்க, அதில் ஒளிர்ந்த கோபம்..., இயலாமை, அதை அவள் மறைக்க முயன்ற விதம்..., மனதுக்கு ஏதோ விபரீதத்தை உணர்த்தினாலும்,

தன்னை அவமானப்படுத்தும்படி அவள் எதையும் பேசாததும், திருமணத்தை மறுக்காததுமே பெரிய விஷயமாகத் தெரிய, தாலியை அவள் கழுத்தில் கட்டிய பிறகு, அவள் என்ன சொன்னாலும், அது என் மனைவி சொன்னது தானே.

அதை என்னால் தாங்கிக்கொள்ள முடியும். அன்பை கொடுத்து, அன்பை பெறவேண்டும் என்றாலும்..., நான் கொடுப்பதை நீ தந்தே ஆகவேண்டும் என்று சொல்ல அது என்ன வியாபாரமா? முதலில் புரிதல் வேண்டும்..., எனவே..., அனைத்தையும் பிறகு பார்த்துக் கொள்ளலாம்..., முடிவெடுத்தவன், தன் யோசனையை ஒதுக்கிவிட்டு புன்னகைத்தான்.

“ஒரு ரசமலாய் வாங்கிக் கொடுக்க இவ்வளவு கணக்குப் பார்ப்பாயா நீ...?”, அந்த நேரம் அவனை சீண்டவேண்டும்போல் இருந்தது.

“ஒரு ரசமலாய் என்ன..., இன்னும் என்ன வேணுமோ வாங்கிகொள்...., அதை என் ட்ரீட்டாக வைத்துகொள். புது பைக் வாங்கியிருக்கிறேனே...., அதற்கான ட்ரீட்...”, அவன் உரைக்க...,

‘பெரிய பைக்...’, கொட்டத்துவங்கிய வார்த்தைகளை, பேரர் வைத்துவிட்டு விலகிய ஐஸ் கிரீன் டீயைக் கொண்டு விழுங்கினாள்.

அடுத்த நிமிடங்கள் பேச்சுவார்த்தை இன்றி கழிய, அவனிடம் விடைபெற்று காரில் பயணித்தவளுக்கு, கோபமும், நிம்மதியும் ஒருங்கே எழுந்தது.

எப்பொழுதும் எதையும் ஆராயப் பிடிக்காதவள்..., தலையை உலுக்கிக்கொண்டு பின்னிருக்கையில் சாய்ந்துகொள்ள, நிம்மதியான ஒரு மோனநிலை அவளை தழுவத் துவங்கியது.

வீட்டுக்கு வந்தவளுக்கு, தன் அறையில் படுத்தவுடன் தோன்றிய விஷயம் ஒன்றுதான்..., ‘என்னை என்னடா செய்தாய்...? என்னவோ பேச வந்து, எதையோ பேசிட்டேனே...’, அவள் குழப்பம் துவங்கியது.

தன் புத்தம்புது யமஹா ஜிஜே..., பைக்கில் பயணித்தவனுக்கு, மனம் முழுவதும் நிம்மதி. தன் அறைக்கு வந்தவன், முதல் வேலையாக ஸ்ரீராமுக்கு அழைத்து விஷயத்தை சொல்லிவிட்டான்.

அவருக்கு மட்டற்ற மகிழ்ச்சி..., அதை மீண்டும் மீண்டும் அவனிடம் வெளிப்படுத்தியவர், முடிந்த அளவு திருமண ஏற்பாட்டை விரைந்து பார்க்கத் துவங்கினார்.

எங்கே தாமதித்தால் தன் மகள் முடியாது என மறுத்துவிடுவாளோ என்ற பயமே அதற்குக் காரணம். இறுதியாக தன் குருஜீயை சந்தித்தவர், அடுத்த பதினைந்தாவது நாள் அவர் குறித்துக் கொடுத்த நாளில் திருமணத்தை வைக்க முடிவெடுத்தார்.

அந்த முடிவை வினித்திடமும் அறிவிக்க, சட்டென ஒருவித அமைதியில் மூழ்கினாலும், தனக்கு சம்மதமென்று தலையசைத்தவனுக்கு, தான் இன்னும் இந்த விஷயத்தை தன் நண்பர்களிடம் அறிவிக்கவில்லை என்ற கவலை தொற்றிக் கொண்டது.

விஷயத்தை கேள்விப்பட்டால் அவர்கள் எவ்வாறு எடுத்துக் கொள்வார்கள் என்பது அவனுக்குப் புரியவில்லை என்றாலும், நிச்சயம் சந்தோஷப்பட மாட்டார்கள் என்பது திண்ணம்.

இதற்குமேலும் தாமதிக்க முடியாது என்பதை உணர்ந்தவன், நண்பர்களிடம் விஷயத்தைச் சொல்ல தயாரானான். அதே நேரம்..., அடுத்த வாரம் கார்த்திக்கின் தங்கையின் திருமணம் இருக்கவே, அதற்கும் ஆயத்தமானான்.

***

# பகுதி - 13.

கார்த்திக் அந்த பிரபலமான நகைக்கடையில் சற்று டென்ஷனாக சுற்றிக் கொண்டிருந்தான். கல்யாணம் பண்ணிப்பார்..., வீட்டை கட்டிப்பார் என்று சும்மாவா சொன்னார்கள்...? செயல்பட முடியாத தந்தையை வைத்துக் கொண்டு, தான் பெற்றவன் இடத்தில் இருந்து நடத்தி வைக்கும் திருமணம்.

அந்த பாதிப்பு அவனிடம் அதிகம் இருந்தது. பெற்றவளால் அவனுக்கும் சரி, தன் மகள்களுக்கும் சரி..., நல்ல கல்வியை மட்டுமே கொடுக்க முடிந்தது. பணம் காசையோ..., பொருளையோ அவளால் சேர்த்து வைக்க முடியவில்லை.

அதைப் பற்றி கார்த்திக்கும் கவலைப் பட்டது கிடையாது. ஆனால்..., சட்டென எழுந்த வைர மோதிரமும்..., மூக்குத்தியும்..., அவனை ஆழ்கடலுக்குள் அமிழ்த்துக் கொண்டிருந்தது.

அவனை நம்பி கடன் கொடுப்பவர் அனைவரிடமும் வாங்கியாயிற்று..., இருப்பது கிரெடிட் கார்ட் மட்டும்தான்..., வாங்கிய நகைக்கான பில், அவனது கிரெடிட் லிமிட்டுக்கு சற்று அதிகமாக இருக்க, கடையில் வைத்து என்ன செய்வது எனப் புரியாமல் கையைப் பிசைந்தான்.

அவன் தனியாக வந்த காரணத்தால்..., வினித்திடமும் கைமாற்றாக கூட வாங்க முடியாத ஒரு சூழல். அவனையுமே வேண்டும் என்றேதான் கழட்டி விட்டுவிட்டு வந்திருந்தான். இதுவரைக்கும் அவனிடம் தான் எதையும் எதிர்பார்த்தது கிடையாது.

ஆனால்..., முதல்நாள் அவனைப் பார்த்த விதத்தையும், இப்போதைய அவன் நடை, உடை, பாவனை..., உடையில் வெளிப்படும் ரசனை..., தேர்வு..., இதையெல்லாம் பார்க்கும்பொழுதே..., அவன் சாதாரண வீட்டுப் பிள்ளை என்பதை அவனால் நம்ப முடியவில்லை.

அந்த ஏற்றத்தாழ்வே..., அவனிடமிருந்து பணம் விஷயத்தில் சற்று எட்டியிருக்க வைத்தது. அவன் நட்பை மட்டுமே அவன் மனம் நாடியது. எந்த சூழலிலும் பணம் தங்கள் நட்புக்குள் வந்துவிடக் கூடாது என்பதில் மிகுந்த கவனமாக இருந்தான்.

எனவேதான்..., எத்தனையோ முறை தங்கையின் திருமணம் பற்றியும், வரதட்சணை பற்றியும் அவன் கேட்டபொழுதெல்லாம்..., தானே சம்மாளித்துகொள்வதாக சொல்லி கழண்டு கொண்டிருந்தான்.

இப்பொழுது கூட..., ஒரு ஐம்பதாயிரம் ரூபாய் மட்டும் தன் அக்கவுண்டுக்கு ட்ரான்ஸ்பர் செய்யச் சொன்னால் நொடியில் செய்துவிடுவான்தான். ஆனால்..., இவ்வளவு நாள் இல்லாமல்..., இறுதி நேரத்தில் கேட்க அவனுக்கு தயக்கமாக இருந்தது.

வேறு யாரிடமும் வாங்கவே முடியாது என்ற சூழலில்..., மாப்பிள்ளைக்கு மோதிரத்தை மட்டும் வாங்கிக் கொண்டு, தங்கைக்கு மூக்குத்தியை பிறகு வாங்குவதாக சொல்லிவிட்டு கடையில் இருந்து கிளம்பிவிட்டான்.

இன்னும் திருமணச் செலவு வேறு இருக்கிறதே..., அதற்காக ஒதுக்கிய பணத்தில் கைவைத்தால்..., திருமண மண்டபத்தில் எந்தவிதமான சிக்கலிலும் சிக்கிக் கொள்ள அவன் தயாராக இருக்கவில்லை. எனவே..., அதற்காக ஒதுக்கிய பணம் அப்படியே இருக்கட்டும்..., அவளுக்கு மூக்குத்தியை மட்டும் பிறகு போடுவதாக சொல்லிக் கொள்ளலாம்..., என எண்ணியவன்..., சற்று கனத்த மனதோடே கடையை விட்டு வெளியேறினான்.

முதல் கவலையே..., இந்த ஏற்பாட்டுக்கு மணமகனின் தாய் ஒத்துக் கொள்வாரா என்பதாகத்தான் இருந்தது. ஒரு வேளை..., தன் மகனுக்கான மோதிரம் வந்துவிட்டதால் அமைதியாகி விடலாம் என தனக்குத் தானே தைரியம் சொல்லிக் கொண்டவனாக கிளம்பிவிட்டான்.

அதே நேரம்..., அவன் அலைபேசி அதிர..., பேண்ட் பாக்கெட்டில் இருந்து அதை எடுத்தவன்..., அதில் ஒளிர்ந்த வினித்தின் எண்ணைப் பார்த்து புருவம் உயர்த்தியவன்..., அதற்கு செவிமடுத்தான்.

பொதுவாக அவர்கள் அலைபேசியில் பேசிக்கொள்ளும் சந்தர்ப்பம் குறைவு. எப்பொழுதும் நேரடியாக அறையில் சந்திக்கும்பொழுது பேசிக் கொள்வதுதான் அவர்கள் வாடிக்கை. வினித் அலுவலகம் வந்த பிறகு, அலுவலக விஷயத்துக்காக மட்டுமே அவன் அழைப்பது.

‘இன்று எல்லா வேலையையும் முடித்துவிட்டு, அவனிடம் சொல்லிவிட்டுத்தானே வந்தேன்..., வேலையில் எதுவும் குளறுபடியாகிவிட்டதா? அப்படி இருந்தால் கூட அழைக்க மாட்டானே...’, யோசனையோடு எடுத்தான்.

“சொல்லுடா..., ஆபீஸ்ல எதுவும் பிரச்சனையா...? நான் வரணுமா?”, அவன் கேள்விக்கு...

“ம்ச்..., பெர்மிஷன் கேட்டுட்டு போன உன்னை, ஆபீஸ் விஷயத்துக்கு வேண்டி தொல்லை செய்வேனா? இது அது இல்லை..., வேற..., இன்னைக்கு நைட் டின்னருக்கு ஹோட்டல் போகலாமா? நான் இங்கே இருந்தே குமாரை கூட்டி வரேன்..., என்ன சொல்ற...?”, வினித் குரலில் இருந்த ஒருவித பாவனை, கார்த்திக்கை யோசிக்க வைக்க, அதை உதறியவனாக,

“எந்த ஹோட்டல்ன்னு சொல்லுடா..., நான் ரூமுக்கு போய், வாங்கின ஜூவல்ஸ் எல்லாத்தையும் ரூம்ல வச்சுட்டு, அப்படியே ப்ரெஷ் ஆகிட்டு வரேன்...”, அவன் உரைத்த ஹோட்டல் பெயரை கேட்டவன் அலைபேசியை அணைத்து வைத்தான்.

மூவரும் அந்த புகாரி ஹோட்டலின் கூபே அறையின் மங்கிய வெளிச்சத்தில், உணவு வகைகளை ஒரு கை பார்த்துக் கொண்டிருந்தனர். உணவை ஆர்வமாக உண்டாலும்..., இடை இடையே சற்று யோசனைக்குச்

செல்லும் வினித்தை கவனித்தாலும், தன் வேலையைத் தொடர்ந்தான் கார்த்திக்.

‘எப்படியும் பேசத்தான் அழைத்திருக்கிறான்..., அவனே துவங்கட்டும்...’, அலுவலக விஷயத்தை சர்ச்சை செய்தவாறு உண்டார்கள்.

“இன்னும் வேற ஏதாவது வேணுமா...?”, வினித்தின் கேள்விக்கு, “சார்..., ஒரு தந்தூரி சிக்கன் சொல்லு சார்..., சும்மா நச்சுன்னு இருக்கும் இங்கே..”, குமார் உரைக்க, அதற்கு ஆர்டர் கொடுத்தவன், குமாரை ஏறிட்டான்.

“குமார்..., ஜீவல் எல்லாம் ஏற்கனவே வாங்கிட்டேன்னு அன்னைக்கு சொன்ன, இப்போ என்னன்னா..., இன்னைக்கு ஜீவல் கடையில் இருந்து என்கிட்டே பேசின..., என்னதான் நடக்குது...?”.

அவன் கேள்வியில், கார்த்திக் சற்று திணற, அவன் முகத்தில் பார்வையை நிலைக்க விட்ட வினித், “நானும் உன் குடும்பத்தில் ஒருத்தன்னு நினைச்சுட்டு இருக்கேன்..., ஆனா..., நான் வெளி ஆள்ன்னுதான் நீ நினைக்கிற இல்ல...”, வினித் நிதானமாக கேட்க, சற்று திடுக்கிட்டுத்தான் போனான்.

“ஹையோ மச்சான்..., என்ன நீ இப்படியெல்லாம் பேசற...? நீ நினைக்கற மாதிரியெல்லாம் எதுவும் இல்லை. நீயும் எங்க அம்மா வயித்தில் பிறக்காத பிள்ளையாகத்தான் அவங்க உன்னை பாக்கறாங்க. என் தங்கச்சிங்க ரெண்டுபேரும் உன்னையும் ஒரு அண்ணனாகத்தான் பாக்கறாங்க வினித்...”, அவன் கவலைப்படுவது பிடிக்காமல் வேகமாக உரைத்தான்.

வினித் இன்னும் அசையாமல் இருக்கவே..., “இப்போ உனக்கு என்ன விஷயம்னு தெரியணும் அவ்வளவு தானே. அது ஒண்ணும் இல்லை...”, துவங்கியவன்..., பிரச்சனையை உரைக்க, “அப்போ என்கிட்டே கேக்கணும்னு உனக்குத் தோணவே இல்லையா...?”, இந்த கேள்விக்கு பதில் சொல்ல தடுமாறினான்.

“நம்ம நட்புக்குள் பணம் நுழைய வேண்டாம்னு நான் நினைக்கறேன் வினித்....”, என்னை புரிந்துகொள்ளேன் என்ற பாவனையில் அவன் முகம் பார்க்க, அமைதியானான் வினித்.

இந்த உலகத்தில் பணம் மட்டுமே பிரதானம் என்ற உறவுகளையும், நண்பர்களையும் மட்டுமே சந்தித்தவனுக்கு, தன்னிடமிருந்து நட்பை மட்டுமே விரும்பும் கார்த்திக்கை நண்பனாக அடைய என்ன தவம் செய்தோம் என்ற வியப்பு எழுந்தது.

புரிந்ததற்கு அடையாளமாக தலை அசைத்தவன்..., அவனை தோளோடு அணைத்துக் கொண்டான்.

“இப்போ என்ன பண்ணப் போற? மாப்பிள்ளை வீட்டில் ஒத்துப்பாங்களா?”, அவன் கேள்விக்கு...,

“இங்கே பாதி கல்யாணம் இப்படித்தான் நடக்குது வினித், சோ..., கண்டிப்பா ஒத்துப்பாங்க...”, அவன் உரைக்க, அவன் நம்பிக்கையையும், பாசத்தையும் எண்ணி வியந்தான்.

“யூ ஆர் கிரேட் கார்த்திக்...”, வார்த்தையிலும் அதை வெளியிட்டான்.

“கிரேட் எல்லாம் இல்லை..., இது என்னோட கடமை.., அவ்வளவு தான்...”, சாதாரணமாக உரைத்தான். அவர்களை கண்டுகொள்ளாமல் தன் உணவில் மட்டுமே கவனமாக இருந்த குமார்..., அவர்களை நிமிர்ந்து பார்த்தவன், “இப்படி பாசத்தை பிழியவா சார் இங்கே இட்டாந்த...?”, அவர்களை கலைத்தான்.

அதானே என்ற எண்ணத்தில் வினித்தை விலக்கியவன், “என்ன விஷயம் வினித்..., அதைச் சொல்லவே இல்லையே...”, அவனைத் தூண்டினான்.

ஒரு நொடி அமைதியானவன்..., “இன்னும் பதினைந்து நாளில் எனக்குத் திருமணம்...”, எந்தவிதமான பீடிகையும் இல்லாமல் விஷயத்தை போட்டு உடைத்தான்.

குமார் தன் வாயில் அடைத்த உணவோடு அவனை ஆச்சரியமாக வெறிக்க, கார்த்திக்கோ..., இரு புருவம் உயர தன் அதிர்ச்சியை வெளியிட்டான்.

நொடியில் தன்னை சுதாரித்தவன்..., “வாழ்த்துக்கள் வினித். பொண்ணு...”, அவன் இழுக்க...,

“ஸ்ரீ ஐஸ்வர்யா தேவி...”, அவன் உரைத்த மறு நிமிடம்..., பக்கென சாப்பாடு புரைக்கேற தாள முடியாமல்..., கண்களில் நீர் வர இருமிய குமார்..., கண்ணீர் வழியும் விழியோடு..., பக்கென சாப்பாட்டை விழுங்கியவன், “இன்னாது..., அந்த பொம்பளையா...?”, கூவியே விட்டான்.

“குமார்...”, குரலில் அழுத்தமும், கோபமும் கலந்து கார்த்திக் அழைக்க, அப்பொழுதுதான் தன் தவறு புரிந்தவனாக,

“மன்னிச்சுடு சார்..., நான் வாய் தவறி சொல்லிட்டேன்..., இன்னாசார்..., வேணாம் சார்...”, குமாரால் அந்த விஷயத்தை ஜீரணிக்கவே முடியவில்லை.

கார்த்திக்கிற்கும் பேரதிர்ச்சி தான். ஆனால் அவன் வேலை நிமித்தமாக, தன் உணர்வுகளை எப்பொழுதும் சட்டென வெளியிட்டு பழகியிராத காரணத்தால்..., தன்னை வெளிப்படுத்தாமல், அதிர்ச்சியை விழுங்கிக் கொண்டு அமைதியாக இருந்தான்.

“என்ன வினித்..., எதற்காக இப்படி ஒரு முடிவு? நம்ப முடியவில்லையே...”, பணத்துக்காக இதைச் செய்ய துணிந்திருப்பானோ..., என ஒரு நொடி எண்ணியவன், சட்டென அந்த நினைப்பை அழித்தவனாக வினவினான்.

“வாழ்க்கையில் சில விஷயம் ஏன் இப்படி நடக்குதுன்னு ஆராயவே முடியாது கார்த்திக். நாலு மாசத்துக்கு முன்னாடி வரைக்கும், எனக்கு உன்னை மாதிரி ஒரு நட்பு கிடைக்கும் என்று நான் எண்ணினேனா? ஆனால் கிடைத்ததே..., அதேபோல்..., இதுவும் ஒரு கட்டம்...”, தன் செய்கைக்கு தன்னாலேயே நியாயம் கற்பிக்க முடியாதவனாக திணறினான்.

“இதற்கு மேடம் சம்மதம் சொல்லிட்டாங்களா...?”, இதற்கு வினித் மையமாக தலையசைக்க..., அதை நம்ப முடியாதவனாக, இல்லையென்றால்..., ராம் சார் ஏதாவது...?”, தன் பார்வையை கூர்மையாக்கினான்.

இதையும் நம்ப முடியவில்லையே என அவன் பார்வை சொன்னது. அதை உணர்ந்தவனாக..., “நான் இப்போ..., இந்த நிமிஷம்..., உன் முன்னால் இருக்க காரணம் நம்ம ஸ்ரீராம் சார் தான். அவர் மட்டும் இல்லையென்றால், என்றைக்கோ இந்த வினித் இல்லாமல் போயிருப்பான். சோ...”, பேச்சை பாதியில் நிறுத்தினான்.

“வினித்..., நான் சொல்கிறேன் என்று தப்பா நினைக்காதே..., நம்ம மேடம் எப்பொழுதும்..., யாரையும் மதித்து நான் பார்த்ததே கிடையாது. அதுவும் பணம் இல்லாதவர்களை, மனிதனாகக் கூட மதித்தது கிடையாது. அதே வேளை...., எத்தனையோ கோடீஸ்வரன்களை கூட..., துச்சமாக பாவித்து விரட்டியதை நானே பார்த்திருக்கிறேன்.

“அப்படி இருக்கையில்..., இது சரி வரும் என நினைக்கிறாயா? உயிர் கொடுத்தார் என்ற காரணத்துக்காக..., உன் வாழ்க்கையையே எப்படி அவர் பணையம் வைக்க முடியும்? அதற்கு அவருக்கு என்ன உரிமை இருக்கிறது?”, சற்று கோபமானான்.

ஏற்கனவே நண்பன் வாழ்க்கையில் ஒரு அடி பட்டு வந்திருக்கிறான் என்பது அவனுக்குத் தெரியும். அப்படி இருக்கையில்..., மீண்டும் ஒரு அடியை அவனால் தாங்கிக் கொள்ள முடியுமா...? என்ற மிகப்பெரிய வினா எழுந்து கார்த்திக்கை மிரட்டியது.

“என் வாழ்க்கை எப்பொழுதுமே பணையப் பொருள்தான் கார்த்திக்....”, உச்ச வலியில் தெறித்து விழுந்த வார்த்தைகள்..., சட்டென அமைதியாக, “நான் வாக்கு கொடுத்துட்டேன் கார்த்திக். இனிமேல் என்னால் மீறவோ, பின்வாங்கவோ முடியாது.

“இத்தனை நாளாக என்னைப் பார்க்கிறாய். என் வாழ்க்கையை பாதியில் நான் விட்டுவிடுவேன் என்றோ..., தோல்வி அடைவேன் என்றோ நீ நினைக்கிறாயா...?”, அவன் குரல் இப்பொழுது சாதாரணமாக மாறி இருக்க, கார்த்திக்கின் தலை இல்லை என ஆடியது.

“அதுக்கு..., உன் வேலையும் வாழ்க்கையும் உனக்கு ஒண்ணா சார்..., புரியாம பெனாத்துறியே. இதுக்கு நீ கண்ணாலம் கட்டாமையே இருக்கலாம்...”, தாள முடியாமல் பொருமினான் குமார்.

“டேய்..., உன்னை நான் பேசாமல் இருக்கச் சொன்னேன். நீ கேட்ட சிக்கன் வந்துடுச்சு இல்ல..., பேசாமல் சாப்பிடு..”, கார்த்திக் குரல் உயர்த்த,

“அட போ சார்..., சிக்கன் வவுத்துக்குள்ள போய் கூவுது. மனச போட்டு உலுக்கிட்டு, துண்ண சொன்னா..., எனக்கு வேணாம்...., முதல்ல இத்த நிப்பாட்ட சொல்லு. உன் சோக்காளி தானே..., நான்தான் வேலைக்காரன்..., நீ சொன்னா கேப்பாப்ல..., சொல்லு சார்...

“அத்தெல்லாம்..., சரி சரி..., உடனே மொறைக்காத..., அந்தம்மா எல்லாம்..., எப்படி சார் கட்டிக்கிட்டு குடும்பம் நடத்துறது? புள்ளகுட்டி எல்லாம் பொறக்கணுமா வேணாமா...?”, அவன் பேசிக்கொண்டே போக..., அவன் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டான் கார்த்திக்.

இவ்வளவு நேரமும் குமாரின் பேச்சில் தாங்க முடியாத வலியை அனுபவித்த வினித்..., கார்த்திக்கின் இந்த செய்கையில் திடுக்கிட்டவனாக, “விடு கார்த்திக்..., என்மேல் இருக்கும் அக்கறை தானே அவனை இப்படி பேச வைக்குது...., பரவாயில்லை...”, தன் வாழ்க்கை திருமணத்துக்கு முன்பே அலசப்படும் நிலையை வெறுத்தவனாக இருந்தாலும், நண்பன் என்பதால் பொறுத்துக் கொண்டு பேசினான்.

குமாரோ..., கார்த்திக் கொடுத்த அடியை அசராமல் பெற்றுக் கொண்டவன், “இன்னும் ரெண்டு அடி வேண்ணா அடி

சார்..., ஆனா..., இந்த கண்ணாலம் மட்டும் வேண்டாம்.

“நீ எம்மா நாள் என்னாண்ட புலம்பியிருக்க..., வினித் சார் மனசு காயப்பட்டு வந்திருக்கார்..., அவரை நல்லபடியா பாத்துக்கணும்னு. ஆனா.., இப்போ நீயே அவரை அந்தம்மா கிட்டே தள்ளி விடுறியே..., உனக்கே சரியா படுதா...? நீ சொல்லு...”, அவன் அடித்த கன்னத்தில் தன் இடக்கரத்தை தாங்கியவனாக புலம்பினான்.

“ம்ச்...”, அடித்துவிட்டோமே என்ற குற்ற உணர்விலும், அவன் பேச்சில் இருந்த நியாயத்திலும் திகைத்துபோய் அமர்ந்திருந்தான் கார்த்திக்.

“சாரிடா..., கோபத்தில்..., புரிஞ்சுக்கோ குமார். இது அவனோட வாழ்க்கை. இதில் நீயோ நானோ ஒரு அளவுக்கு மேல் தலையிட கூடாது. இப்போ அவனை நல்லா புரிஞ்ச நீயே, இப்படி அவன் கஷ்டப்படுற மாதிரி, அவன் வாழ்க்கையைப் பத்தி பேசினால்..., அவன் எப்படி தாங்கிப்பான்..., நீயே சொல்லு...”, நீ சொல்லும் விஷயம் அவனுக்கே தெரியாதா..., என மறைமுகமாக அவனுக்கு உணர்த்தினான்.

“எனக்கு நம்பிக்கை இருக்கு..., அவன் வாழ்க்கையை காப்பாத்திக்க அவனுக்குத் தெரியும். அது வரைக்கும்..., நீயும் நானும் அவனுக்கு சப்போட்டாத்தான் இருக்கணும் புரியுதா...”, அவன் கன்னத்தை தடவியவாறு உரைத்தான்.

“எனக்கென்னவோ...”, துவங்கியவன்..., கார்த்திக்கின் கோபம் உணர்ந்து, மேலும் வினித்தின் அமைதியைப் பார்த்து, தன்னை கட்டுப்படுத்தியவன், “நீ சொல்றது சரிதான் சார்..., நம்ப ரூம் கதவு அவருக்காக எப்பவும் தொறந்தே இருக்கும். சர்த்தானா சார்...”, அவன் கேட்க, அந்த நிலையிலும் சட்டென சிரித்துவிட்டான் கார்த்திக்.

மேலும் வினித் பக்கம் திரும்பியவன்..., ஒரு மன்னிப்பு வேண்டும் பார்வை பார்க்க, இமைகளை மூடி ‘நான் பார்த்துக் கொள்கிறேன்’ என உரைத்தவன், குமார் கேள்வியாக தன்னை பார்ப்பதை உணர்ந்து,

“என்ன குமார்..., இன்னும் ஏதாவது சொல்லணுமா...?”, வினவ,

“சார்..., அப்போ பேச்சிலர் பார்ட்டி கொடுக்கத்தான் இங்கே இட்டாந்தியா? பாத்தியா..., இது தெரிஞ்சிருந்தால் ரெண்டு புள்ளு வாங்கிட்டு வந்திருப்பேன். சும்மா மஜாவா இருந்திருக்கும். அப்போ நீ நம்ம கார்த்தி சார் தங்கச்சி கண்ணாலத்துக்கு வர மாட்டியா...?”, திடுமென கேட்டான்.

கார்த்திக் இதில் அதிர்ந்து வினித் முகம் பார்க்க, “தங்கச்சி கல்யாணத்துக்கும் இதுக்கும் என்னடா சம்பந்தம்? இங்கே எல்லா ஏற்பாட்டையும் அவங்க காண்டிராக்ட் ஆட்கள்ட்ட விட்டுடுவாங்க. சும்மா அங்கே நிக்க வேண்டியது மட்டும் தான் நம்ம வேலை.

“எனக்கு தாலி கட்டுறது மட்டும்தான் வேலை..., பிறகு என்ன..., எனக்கு இங்கே சென்னையில் தெரிஞ்சவங்க, சொந்தம் நீங்க ரெண்டே பேர்..., பிறகு யாரை அழைக்க எனக்கு நேரம் வேணும்...? முதல்ல தங்கச்சி கல்யாணத்தை முடிக்கிறோம் அவ்வளவு தான்...”, கார்த்திக் மனதில் பாலை வார்த்தான்.

“அத்த சொல்லு..., வுட்டா உனக்கு அந்த சோலியை கூட வைக்காமல் அந்த அம்மாவே உனக்கு தாலியைக் கட்டும்...”, குமார் இடி இடியென சிரிக்க, நண்பர்கள் இருவரும் அவனை அடிக்கப் பாய்ந்தார்கள்.

கேலியும் கலாட்டாவுமாக அந்த இரவு கழிய, இரவு மொட்டை மாடியில் உறங்கச் செல்கையில், கார்த்திக் வினித்தை இறுக அணைத்து விலக, அது கொடுத்த ஆறுதல் அளப்பரியது. யானை பலம் கொண்டான் வினித்.

அடுத்த நாளே..., ஒரு வார விடுமுறையில் கார்த்திக் ஊருக்குச் செல்ல, திருமணத்துக்கு முந்தின நாள் தாங்கள் இருவரும் வருவதாகச் சொன்னார்கள்

அதேபோல் இருவரும் கிளம்பிச் செல்ல, அவர்கள் விடுப்பு வாங்க மிகப்பெரும் பாடே படவேண்டி இருந்தது. குமார் சூப்ரவைசர் என்ற முறையில் விடுப்பே கொடுக்க முடியாது

என சாதிக்க, இப்பொழுது வினித்தின் அறிவுரையின் பேரில் சிக் லீவ் எடுத்துக் கொண்டு வந்திருக்கிறான்.

திருமண வீட்டில் நலுங்கு வைப்பது, ரிஷப்ஷன் என முந்தினநாள் கழிய, மேடையில் ஜோடியாக இருந்த தங்கையைப் பார்த்தவனுக்கு, இன்னும் தான் விஷயத்தை மாப்பிள்ளையின் அன்னையிடம் சொல்லவே இல்லை என்பதே பதட்டத்தை கொடுத்தது.

பந்தியில் இருந்தவர்களை கவனித்துக் கொண்டு, தாம்பூலம் சரியாக வழங்கப்படுகிறதா என பார்த்துகொண்டு, பம்பரமாக சுழன்றாலும், தங்கையின் கழுத்தில் தாலி ஏறும் முன்பாக விஷயத்தை தெரிவித்தே ஆகவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தான்.

ஓரளவுக்கு கூட்டம் குறைந்த பிறகு, அவர்களை தேடிச் சென்றவன், எப்படி விஷயத்தை துவங்குவது என தடுமாற, அந்த நேரம்..., மாப்பிள்ளை ராஜேஷ்..., “வாங்க மச்சான்..., என்ன இந்த நேரம் வந்திருக்கீங்க? எதுவும் முக்கியமான விஷயமா? நானே உங்ககிட்டே பேசணும்னு நினைத்தேன்..., நீங்களே வந்துட்டீங்க...”, அவனை அழைத்துக்கொண்டு வெளியேறினான்.

‘இவன் எதற்காக நம்மைத் தேடினான்...? ஒரு வேளை இவனும் வண்டி வேறு பெரிதாக கேட்பானோ...?’, மனதுக்குள் சிறு கலக்கத்தோடு அவன் பின்னால் சென்றான்.

மொட்டை மாடிக்கு தனியாக அவனை அழைத்துச் சென்றவன்..., “கார்த்திக்..., ஏற்கனவே எனக்கு வரதட்சணை வாங்கி திருமணம் செய்வதில் உடன்பாடு இல்லை..., ஆனால்..., என் அம்மாவின் திருப்திக்காக மட்டுமே நான் பேசாமல் இருந்தேன்.

“இப்போ என்னன்னா..., எனக்கு எதுக்கு வைரத்தில் மோதிரம்...? உங்க தங்கைக்கு வைரத்தில் நெக்லஸ்..., மூக்குத்தி, தோடு..., இதையெல்லாம் பாக்கும்போது எனக்கு

என்ன சொல்றதுன்னே தெரியலை. திருமணம் முடிந்த கையோடு இந்த வைரத்தை எல்லாம் ரிட்டன் வாங்கிடுங்க.

“இப்போ சபையில் போட்டது தாலி கட்டும் வேளையில் இல்லை என்றால் ஒரு மாதிரி பேசுவாங்க. அதனால் தான் பிறகுன்னு சொன்னேன். எனக்கு மட்டும் இது முன்பே தெரிந்திருந்தால் தடுத்திருப்பேன்...., எனக்கும் ஒரு தங்கை இருக்கிறாள்..., அவளோட கல்யாணத்தப்போ நாங்க எவ்வளவு கஷ்டபட்டோம்னு எங்களுக்குத் தெரியும். அதான் சொல்றேன்...”, அவன் பேசி முடிக்க, கார்த்திக்கால் பதில் உரைக்க கூட முடியவில்லை.

வேகமாக அவனிடம் விடைபெற்றுச் சென்றவன், தன் தங்கையைக் காணச் சென்றான். “என்னண்ணா...?”, அவள் வினவ..., “இந்த வைர நகையை வினித்தா உன்னிடம் கொடுத்தான்...?”, அவன் கேள்வி எதற்கென்று புரியாமல்..., ஆமென்று தலை அசைத்தாள்.

“எதுவும் பிரச்சனையாண்ணா....? நீங்க கொடுக்கச் சொன்னதா சொல்லித்தான் கொடுத்தாங்க. அப்போ நீங்க சொல்லலையா...? இதோ இப்போவே கழட்டுறேன்...”, அவள் கழட்டப் போக, வேகமாக அவளைத் தடுத்தவன்..., “போட்டுக்கோம்மா..., நான் பேசிக்கறேன்...”, அவன் அங்கிருந்து செல்ல முயன்றான்.

“என்னப்பா..., எதுக்கு இவ போட்டிருக்கும் நகையை கழட்டப் போறா?”, தாய் பதட்டமாக முன்னே வர,

“என்னடா பேசிப்ப...? என் தங்கைக்கு நான் திருமண சீர் கொடுப்பதை நீ என்ன கேக்குறது...? இப்போ இந்த இடத்தில்..., எனக்கு உரிமை இல்லை என்று சொல்லிவிட்டு..., அதை கழட்டி கொடுக்கச்சொல்...”, வினித் அழுத்தமாக உரைக்க, கண் கலங்கிப் போனார்கள்.

மறுநாள் திருமணம் நல்லபடியாக முடிய..., குமார் கிளம்பிவிட, வினித் மேலும் இரண்டுநாள் இருந்துவிட்டு..., கார்த்திக்குடன் கிளம்பிச் சென்றான்.

தொடர்ந்த நாட்கள் அலுவலகத்தில் ஐஸ்வர்யாவோடு மோதலோடு கடக்க, அனைத்திலும் அவனது பிடிவாதமே வென்றது. இறுதியாக அவர்கள் திருமணத்துக்கு இன்னும் மூன்று நாட்களே இருக்க, ஒரு வாரம் விடுமுறை வேண்டி..., ஐஸ்வர்யாவுக்கு மெயில் அனுப்பினான்.

அதனோடு... அவர்கள் திருமண பத்திரிக்கையும் அவன் இணைத்திருக்க, சற்று நேரம் தன்னை மறந்து அதைப் பார்த்தவளுக்கு, உள்ளுக்குள் மெல்லிய குறுகுறுப்பும், கோபமும் ஒருங்கே எழுந்தது.

‘பெரிய இவன்..., என்னமோ லவ் பண்ணி கல்யாணம் பண்ணப் போறவன் மாதிரி, ஒரு வாரம் லீவ் வேணுமாம். இங்கே என்னன்னா..., ஒரு பார்வைக்கு கூட பஞ்சமா இருக்கு. அப்படியே பாத்தாலும்..., மூணாவது மனுஷியை பாக்குற மாதிரி பாக்குறது.

“இதில் இவருக்கு..., ஏழு நாள் லீவ் கேக்குது. வரட்டும் இன்னைக்கு...’, கருவியவள்..., அவன் வரவுக்காய் காத்திருந்தாள்.

எப்படியும் அவன் அனுப்பும் மெயிலுக்கு பதில் மெயில் போகவில்லை என்றால், அதைப்பற்றி விவாதிக்க வந்து விடுவானே. அவள் எண்ணி முடித்த வேளை..., அறைக்கதவு தட்டும் ஓசை கேட்க, அவனை நேர்கொண்ட பார்வையில் எதிர்கொண்டாள்.

‘இன்னும் மூணு நாள்ல அவ கழுத்தில் தாலி கட்டப்போற புருஷன்..., என்னைப் பாக்குற பார்வையைப் பார்...? எவண்டா நீன்னு பாக்குறா...?’, மனதுக்குள் எண்ணியவன்..., அவள் எதிரில் இருந்த இருக்கையில் சென்று அமர்ந்தான்.

அவள் சொன்னால் சொல்..., என்பதுபோல் அவள் வேலையைத் தொடர, “மேம்..., நான் லீவ் கேட்டு மெயில் போட்டிருந்தேன். பதில் வரவே இல்லையே....?”, கேள்வியாக நிறுத்தினான்.

“ஆமா..., மெயில் பார்த்தேன். ஜஸ்ட் உங்க வருங்கால மனைவியைப் பற்றி தெரிஞ்சுக்கலாமேன்னு நினைத்தேன்...”, ‘சொல்டா பார்ப்போம்...’ அவள் கண்கள் பளபளத்தது.

நொடிக்கும் குறைவான நேரத்தில் அவன் கண்கள் பளிச்சிட, அதை மறைத்தவன், “அவளைப் பற்றியா...? அவளைப்பத்தி பெருசா சொல்ற அளவுக்கு எதுவும் இல்லை. இது அரேஞ்சிடு மேரேஜ்..., சோ..., அவகிட்டே பேசும் சந்தர்ப்பம் இன்னும் அமையலை...”, அழகாய் நழுவினான்.

மனதுக்குள் பல்லைக் கடித்தவள்..., “அப்போ பொண்ணுகிட்டே சம்மதம் கேக்கவே இல்லையா...? இதென்ன கட்டாயக் கல்யாணமா...?”, போலி ஆச்சரியம் அவள் குரலில்.

“அவ சம்மதம் இல்லாமல் இந்த திருமணம் நடக்குமா...? அவளே தன் வாயால், என்னிடம் திருமணத்துக்கு சம்மதம்னு சொன்ன பிறகுதான்..., இந்த ஏற்பாடே நடந்தது...”.

“பொண்ணுகிட்டே பேசும் சந்தர்ப்பமே அமையலன்னு சொன்னீங்க. ஒரு வேளை அவளுக்கு இப்பொழுது இந்த திருமணத்தில் விருப்பம் இல்லையென்றால்...”, அவள் கண்களில் சவால் தெரிந்தது.

“இப்பொழுது மட்டும் இல்லை..., அவள் கழுத்தில் தாலி ஏறும் அந்த இறுதி நிமிடம் வரைக்கும் அவளுக்கு நேரம் இருக்கு. எப்போ வேண்ணாலும்..., எந்த நிமிஷம் வேண்ணாலும் அவ அதை செய்யலாம். அதேபோல்..., யாரும் அவள் கையைக் கட்டியோ, காலைக் கட்டியோ குண்டுகட்டாக தூக்கிக் கொண்டு மணவறைக்கு வரப்போவதில்லை..., சோ...”, அவன் இலகுவாக தோளைக் குலுக்க, அவள் முகம் இருண்டு போனது.

அந்த இருள் எதனால் வந்தது என்பதையும், மனதில் கவிழ்ந்த ஏமாற்றம் எதற்கு என்பதையும் ஒரு நொடி அவள்

ஆராய்ந்திருந்தால்..., அடுத்தடுத்த தவறுகள் நடக்காமல் தடுத்திருக்கலாம்.

தன்னை நொடியில் மீட்டவள்..., “ஓ..., கேரி ஆன்...”, அந்த வார்த்தைகளில் தொனித்த பாவனையை சத்தியமாக அவன் எதிர்பார்க்கவில்லை.

‘ஐயோ..., வில்லத்தனமா எதையோ யோசிக்கிறாளே...’, அவன் மனதுக்குள் அலறியவனாக..., புன்னகை முகமாக எழுந்து சென்றான்.

***

# பகுதி - 14.

விடிந்தால் திருமணம்..., மண்டபத்தில் இருந்த வினித்துக்கு, தான் எப்படி உணர்கிறோம் என்றே புரியவில்லை. வாழ்வில் ஒரே முறை நடைபெறும் திருமணம் எந்தவிதமான பரவசத்தையோ..., எதிர்பார்ப்பையோ..., ஆசையையோ தூண்டவில்லை.

மாறாக..., ஒருவித அமைதியும், வெறுமையும் கலந்த உணர்வு எழுந்து அவனை அலைக்கழித்தது. ஒரு வேளை..., ஐஸ்வர்யா ஒரு முறையாவது அவனை கணவனாக எண்ணி ஒரு பார்வை பார்த்திருந்தால் இப்படி தோன்றியிராதோ என்னவோ.

இதோ..., சற்று முன்பு அறைக்கு வெளியே..., தன்னை நேருக்கு நேர் பார்த்தபொழுது கூட, ஒருவித இறுக்கத்தில் சென்ற அவள் தோற்றம்..., மனதை கலங்கவே செய்தது.

படிகளில் ஏறியவள்..., தோழியர் கூட்டத்தோடு வந்தாலும்..., அவர்கள் கேலியில் கூட முகம் சிவக்காமல்..., தன்னை நேருக்கு நேர் பார்த்த அந்த பார்வை..., அவன் ஒன்றும் பத்தாம்பசலி போல்..., அவள் தன்னைப் பார்த்ததும் நாணிக் கோணவேண்டும் என்று எல்லாம் விரும்பவில்லை.

மாறாக..., ஒரே ஒரு பார்வை..., அதுவும் உரிமையாகக் கூட வேண்டாம்..., சொந்தமாக..., எனக்கானவன் என்ற சிறு உணர்வு... அதைக் கூட வெளிப்படுத்தாத அவள் பார்வையில்..., எதற்காக இந்த திருமணம்...? ஆயிரம் முறையாக தன்னை கேட்டுக் கொண்டான்.

‘இந்த எதிர்பார்ப்பும்..., ஏக்கத்தோடே என் காலம் கழிந்துவிடுமா?’, எண்ணமே அவனை கழிவிரக்கத்தில் தள்ள..., தான் மிகவும் பலவீனமாகிப் போவதை உணர்ந்தான்.

அதிலும்..., பாசத்துக்கு ஏங்கும் குழந்தையென அவன் மனம் தனிமையில் ஏங்கித் தவித்தது. இருபத்தொன்பது

வருடங்களாக அவன் அனுபவிக்கும் அந்த துயரம்...? என்று முடிவிற்கு வரும்...? ஏக்கம் மனதை பிசைந்தது.

மனைவி என்ற உறவை ஒரு மாதத்துக்கு முன்பு வரைக்கும் அவன் சிந்தித்து பார்த்தது கூட கிடையாது. ஒரு வருடத்துக்கு முன்பு வரைக்கும் அந்த உறவின்மேல் தீராத வெறுப்பும், அருவருப்பும் எழுந்தது மட்டும் உண்மை.

வாணலிக்குத் தப்பி, நெருப்பில் விழுந்துவிட்ட கதையாக மாறிப் போகுமோ? சட்டென அந்த நினைவில் வெதும்பிப் போனான்.

‘இறைவா...? எனக்கு பாசமான ஒரு மனைவியைக் கொடு...’, கிடைக்கவே போவதில்லை எனத் தெரிந்தாலும்..., இந்த எதிர்பார்ப்பு கலந்த இறை நம்பிக்கையில் தானே உலகின் ஜீவன்கள் அனைத்தும் சுழல்கின்றன. அதற்கு வினித் மட்டும் விதி விலக்கா என்ன...?

ஆனால்..., மனதின் மூலையில், அவளுக்கு தன்மேல் ஒரு சிறு துரும்பளவாவது விருப்பம் இருக்கிறது என்பதை வெளியிட்டால் நன்றாக இருக்கும்.., என மனம் ஏங்கியதை தவிர்க்க முடியாமல் தடுமாறவும் செய்தான்.

அவன் தன் யோசனையில் மூழ்கி இருக்க..., “சார்..., வினித் சார் இங்கதான் இருக்கார் பாருங்க. நான் சொன்னப்போ நீ கண்டுக்கவே இல்லையே...”, குறைபடுதலோடு ஒலித்த குமாரின் நினைவில், தன் மன சஞ்சலங்களை ஒழித்துவிட்டு அவர்கள் பக்கம் திரும்பினான்.

என்னதான் தேர்ந்த நடிகர்களாக இருந்தாலே சில வேளைகள் திணறிப்போகும் சூழலில்..., புதிதாக நடிக்கும் வினித் எம்மாத்திரம்...? அவன் மன குழப்பத்தை விழிகள் எடுத்துரைக்க, கார்த்திக் கவலை கொண்டான்.

குமாரோ..., “இன்னாத்துக்கு சார் இங்கன நின்னு பீல் பண்ணிக்கிட்டு இருக்க? இப்போ கூட சொல்லு...”,

“டேய்..., உன் திருவாயை மூடிகிட்டு முதல்ல இங்கே இருந்து போ..., அதான் பசிக்கின்னு சொன்னல்ல..., அந்த

வேலையைப் பாரு...", கார்த்திக் கோபம் கூட்டி கத்தினான்.

"அக்கங்..., இம்மா நேரமும் இவரக் காணோம்னு என்னைய வல்ச்சிகின்னு சுத்துன..., இப்போ தொரத்துற பாத்தியா...? என்னவோ போ சார்..., மன்சே சரியில்ல..., சோறு கூட துண்ண மிடில..., நீ சொல்றாங்காட்டியும் ரெண்டு லெக் பீஸ் வச்சு பிரியாணி துன்னுட்டு வரேன்...", சோகமாக சொல்லிவிட்டு கிளம்பினான்.

"டேய்..., பிரியாணி சோறு இல்லையா...?", கார்த்திக்கின் குரல், அவன் முதுகின் பின்னால் அதிர்ச்சியாக ஒலிக்க...,

"இத்தெல்லாம் நல்லா பேசு..., விஷயத்த மட்டும் கண்டுக்காத. என்னவோ போங்க...", இதற்குமேல் எதுவும் சொல்வதற்கில்லை என்பதுபோல் கிளம்பிவிட்டான்.

கடந்த பதினைந்து நாட்களாக குமாரின் விடாத புலம்பல் இதுதான். இடை இடையே தண்ணி வேறு போட்டு வந்து புலம்பும் அளவு சென்றுவிட்டான். குமாரும் மிரட்டியும், திட்டியும் பார்த்தும் எந்த பலனும் இருக்கவில்லை.

"விடுடா..., என்னைக்காவது ஒருநாள் அவனே புரிஞ்சுப்பான்....", அவனுக்கே அந்த நம்பிக்கை இருக்கிறதா இல்லையா என்று தெரியாதபொழுதும், வினித் கார்த்திக்கை அடக்கி விடுவான்.

கார்த்திக்கிற்கும் இந்த திருமணத்தில் பிடிப்பில்லை என்றபொழுதும், வினித்துக்கு தன் வாழ்க்கையின்மேல் இருக்கும் அக்கறையை விடவா தான் அதிகமாக பட்டுவிட முடியும் என்ற எண்ணம்.

அத்தோடு..., திருமணம் என்பது அவனது தனிப்பட்ட விஷயம்..., அதில் தான் அநாகரீகமாக மூக்கை நுழைப்பது சரியில்லை என்றே எண்ணி ஒதுங்கி இருந்தான்.

தன்னால் முடிந்த அளவு..., அவன் குழப்பத்தை, தனிமையை போக்க முயன்று, அவனுக்கு உறுதுணையாக இருக்க முயன்றான். இப்பொழுதும் அவனை தேடக் காரணமே...,

மண்டபத்துக்கு அவன் ஊர்வலமாக வந்த பிறகு, சட்டென அவன் மாயமாய் மறைந்துவிட்டானே என்பதால் தான்.

“சாரி வினித்..., என்னதான் சொன்னாலும் அவன் கேக்கவே மாட்டேங்குறான். எனக்கு என்ன செய்யிறதுன்னே தெரியலை...”, மன்னிப்பை வேண்டினான்.

“உன்னை மாதிரியே அவனுக்கும் என்மேல் பாசம் கார்த்திக். நீ என்ன நடந்தாலும் எனக்கு துணையா இருக்கணும்னு நினைக்கற..., அவன் இந்த கஷ்டத்தில் இருந்து என்னை மொத்தமா விலக்கணும்னு போராடுறான். ரெண்டுக்குமே பாசம் தானே காரணம்...”, அதை இலகுவாகவே எடுத்துக் கொண்டான்.

“ரூம்ல இருக்காமல்..., இங்கே பனியில் என்ன பண்ற வினித்? உடம்புக்கு ஏதாவது வந்தால்..., முதல்ல ரூமுக்கு வா...?”, அவனிடம் எதையும் துருவாமல் உடல்நிலையை காரணம் காட்டி அழைத்தான்.

‘இத்தனை நாள் மொட்டை மாடியில்..., ஒற்றை போர்வையோடு உறங்குவதை மறந்தவனாக அழைக்கும் தோழனை பாசம் போங்க பார்த்தான்.

‘இவன் மட்டும் என் வாழ்க்கையில் வராமல் போயிருந்தால்...?’, நினைவோடு அவன் கரத்தை பற்றிக் கொண்டான். அதையே அவன் வார்த்தையில் வெளிப்படுத்த...,

“இப்போ நீ நல்லா உதை வாங்கப் போற..., கல்யாண மாப்பிள்ளையா லச்சணமா வந்து ரெஸ்ட் எடு...”, மறந்தும் கூட, மனைவியைப் பற்றி கனவு காண் என்று சொல்லவில்லை. அவனும் எப்படிச் சொல்வது என மணமகளை நினைத்து விட்டுவிட்டான் போல.

“உன்கிட்டே நானே பேசணும்னு நினைத்தேன்..., என்னால்..., இனிமேல்..., நான்..., ஸ்ரீராம் சார் வீட்டில் தான் இருக்கப் போகிறேன்....”, எப்படிச் சொல்லவென்று தெரியாமல் தடுமாறி, ஒரு வழியாக உரைத்தான்.

எங்கே தன்னைப்பற்றி தவறாக எண்ணி விடுவானோ என மனம் சுணங்கினான். ஏற்கனவே தனியாக வீடு பார்ப்பதைப் பற்றியோ..., அவர்கள் வாழ்க்கை எங்கே நடக்கும், துவங்கும் என்பது பற்றியோ அவன் உரைக்காமல் இருக்கவே..., இப்படித்தான் இருக்கும் என எண்ணிய கார்த்திக், அமைதியாகவே இருந்தான்.

“இதில் என்ன இருக்கு மச்சான்..., ஸ்ரீராம் சார் ரொம்ப நல்லவர்..., கண்டிப்பா உன் கௌரவத்துக்கு எந்தவிதமான பங்கமும் வராது..., எனக்குத் தெரியும்....”, சாதாரணமாகவே எடுத்துக் கொண்டான்.

அதே நேரம்..., ஒரு ஆழமான அமைதி அவனிடம் வெளிப்பட, “என்னடா..., எதுக்கு திடீர்ன்னு சைலன்ட் ஆகிட்ட...”, அவன் தோளை உலுக்கினான் வினித்.

“சொல்லலாமா..., கூடாதான்னு எனக்குத் தெரியலை..., ஒரே ஒரு விஷயம்...”, கார்த்திக் வெகுவாகத் தயங்கினான்.

“உனக்கு என்னிடம் இல்லாத உரிமையா..., சொல்லுடா...”.

“நமக்கு என்ன வேணும்னு நாம விரும்புறோமோ..., அதை முதல்ல மத்தவங்களுக்கு கொடுக்கணும். ஒரு வேளை அது உடனே இல்லன்னாலும், பிறகு பலன் கொடுக்கலாம். நம்பிக்கையை மட்டும் இழக்காதே.

“அவங்க வளர்ந்த விதம்..., பணம்தான் எல்லாம்னு அவங்களுக்கு போதிச்சிருக்கு. பணம் மட்டும் இல்லை..., வாழ்க்கையில் பாசம்தான் முக்கியம்னு நீ புரிய வை. உன்னால் முடியும்..., ஆனால்..., அதை எப்படி செயல்படுத்தணும் என்பது உனக்குத்தான் தெரியணும்.

“ரெண்டு மாசமா அவங்களை ஆபீஸ்ல சம்மாளிக்கறியே..., உனக்குத் தெரியாதா என்ன...?”, கண்ணைச் சிமிட்டி அவன் உரைக்க, வினித் முகத்தில் ஒரு நம்பிக்கையும், புன்னகையும் பளிச்சிட்டது.

“கார்த்திக்...”, நெகிழ்வாக அழைத்தவன்..., நண்பனை நன்றியோடு இறுக அணைத்திருந்தான். அவனை

ஆதரவாக தோள் தட்டியவன்..., “சியரப் மை மேன்...”, அவனை விலக்கி..., தோளை அழுத்தினான்.

வினித்தின் மனதில் இவ்வளவு நேரம் இருந்த சஞ்சலங்கள் ஓடி ஒளிந்ததுபோல் இருந்தது. ‘அவள் ஒன்றும் கெட்டவள் இல்லை..., அவளுக்குத் தெரியாது...’ இதையேதான் ஸ்ரீராம் அவனிடம் ஏற்கனவே உரைத்திருந்தார்.

அதையே இப்பொழுது கார்த்திக் நினைவூட்ட..., அதற்கான வழிமுறை என்ன என்று சிந்திக்கத் துவங்கினான். கார்த்திக் அவனை அறையில் விட்டுவிட்டு, தன் தாயையும், தங்கையையும் அறையில் விட்டுவிட்டு வருவதாக சொல்லிவிட்டு கிளம்பிவிட்டான்.

அதே நேரம்..., ஐஸ்வர்யாவும் தன்னை மீறி அவனைத்தான் சிந்தித்துக் கொண்டிருந்தாள். படிகளில் தான் ஏறி வந்தபொழுது அவன் கண்களில் வழிந்த பாவனை அவளை என்னவோ செய்தது.

கண்டிப்பாக எதையோ தன்னிடம் யாசித்தது..., என்ன அது...?’ சிறிது நேரமாக சிந்தித்தும் விடை கிடைக்காமல் போக, ‘பேசாமல் அவனிடமே கேட்டுவிடுவோமா....?’ ஒரு நொடி பட்டென மின்னிய சிந்தையில்..., விதிர்த்து போனாள்.

‘ச்சீ..., ஏன் என் புத்தி இப்படி போகுது?’, மானசீகமாக தலையில் அடித்துக் கொண்டவள்..., ‘என்னை என்னடா பண்ற...?’, கோபமாக எண்ணிக் கொண்டாள்.

அதே நேரம்..., அவனிடம் தங்களை அறிமுகப்படுத்துகொள்ள சென்ற தோழிகள், இரண்டு மூன்றுமுறை சென்றும் அவனைக் காணவில்லை என திரும்பி வந்திருக்க, ‘எங்கே சென்றிருப்பான்...? ஒரு வேளை இந்த திருமணம் பிடிக்காமல்...’ அந்த சிந்தையை முழுதாக முடிக்கக் கூட அவள் விரும்பவில்லை.

இரவு உணவு உண்ண வேண்டிய நேரமும் கடக்க...., அவளைத் தேடி வந்தார் ஸ்ரீராம்.

“அம்மாடி…, சாப்பாட்டை இங்கேயே கொண்டுவர சொல்லட்டுமா? ஏற்கனவே ரொம்ப நேரமாச்சே…”, அவர் குரலில் சிறு தயக்கம் ஒளிந்திருந்ததோ.

ஏற்கனவே சற்று யோசனையில் இருந்தவள், அவரது இந்த பேச்சில் விஷயம் பெரியது என யூகித்துக் கொண்டாள். “டேட்…, அவன் எங்கே…?”, அவளது கேள்வியில் சற்று திடுக்கிட்டுத்தான் போனார். கண்டிப்பாக அவளிடம் இந்த கேள்வியை எதிர்பார்க்கவில்லை என்பதை அவரது முகம் காட்டிக் கொடுத்தது.

“யாரம்மா கேக்க…?”, புரியாதவராக பாவித்தார்.

“யூ நோ டேட்…”, அவள் குரலில் காரம் ஏற, கவலை அவரை தொற்றிக் கொண்டது.

ஏற்கனவே வினித்தை சாப்பிட அழைக்க, தனக்கு பசியில்லை என நாசூக்காக சொல்லி அவரை அனுப்பிவிட்டான். திருமணம் முடிந்த பிறகே வரவேற்பு என்பதால்…, மண்டபத்தில் அந்த நேரம் பெரிதாக கூட்டம் இருக்கவில்லை.

காலையில் சீக்கிரமே முகூர்த்தம் என்பதால் தான், மணமக்கள் இருவரும் மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டார்கள். எனவே…, மணமக்கள் சாப்பிட வந்தார்களா? இல்லையா…? என கவனிக்க அங்கே பெரிதாக யாரும் இருக்கவில்லை.

“அது வந்தும்மா…, மாப்பிள்ளைக்கு கொஞ்சம் தலை வலியாம்…, அதனால்…”, அவர் சொல்லி முடிக்கும் முன்பே, தன் அறையை விட்டு வெளியேறியிருந்தாள்.

“அம்மாடி…”, அவர் அவள் பின்னால் விரைந்தார்.

அந்த நேரம் அவள் மணமகன் அறைக்குச் செல்வதை வேலை செய்பவர்கள், யாராவது பார்த்தால் என்ன நினைப்பார்கள் என்ற கவலை அவருக்கு எழுந்தது. ஆனாலும்…, இரண்டாம் மாடியில் அவர்கள் இருவரின் அறை மட்டுமே இருந்ததால்…, பெரிதாக யாரும் கவனிக்கப்

போவதில்லை என தன்னையே சமாதானம் செய்துகொண்டார்.

அவள் பின்னாலேயே செல்வது அவ்வளவு சரியாக தோன்றாத காரணத்தால், அவர் பின்தங்கிவிட்டார். மனதின் ஓரத்தில்.., அவனோடு சண்டை போடக்கூடாதே என மனம் பதறினாலும், கோபமாக என்றாலும் அவனை தேடிச் செல்கிறாளே என தன்னை தேற்றியவர்..., மாடிப்படிக்கு அருகில் சென்று நின்றுகொண்டார்.

அவளோ அறையை நாசூக்காக தட்டிவிட்டு, விருட்டென கதவைத் திறந்து உள்ளே செல்ல, அங்கே படுக்கையறை வெறுமையாக இருக்க, பால்கனியின் கதவு திறந்திருப்பதைப் பார்த்தவள் அங்கே சென்றாள்.

கைகளை நெஞ்சுக்கு குறுக்காக கட்டியிருந்தவன், வானில் தெரிந்த நட்சத்திரங்களில் பார்வையை பதித்திருந்தான்.

“ம்கும்...”, அவள் தொண்டையை கனைக்க..., நம்ப முடியாத ஆச்சரியத்தோடு, சட்டென அவளை திரும்பிப் பார்த்தான்.

அவன் கண்களில் வழிந்த ஆர்வத்துக்கும், ஆச்சரியத்துக்கும் காரணம் புரியாமல், அதே நேரம்..., இன்னும் அவன் விழிகள் சொல்லத் துடித்த வார்த்தைகளின் அர்த்தம் புரியாமல் அவனை வெறித்தவள், அதை உதறியவளாக..., “உன் மனசுக்குள் நீ என்னதான் நினைச்சுட்டு இருக்க...?”, கோபமாக வினவினாள்.

‘உன்னைத்தான்...’ என சொல்லத் துடித்த நாவை அடக்கியவன்..., “தேங்க்ஸ்...”, தொண்டை சற்று அடைக்க, கமறலாக உரைத்தான்.

அவன் சொன்ன நன்றிக்கான காரணம் புரியாமல் அவள் வெறிக்க, “பீல் அலோன் ஐஸ்வர்யா..., ஐ டோன்ட் நோ ஒய்...”, அவள் கண்களுக்குள் ஊடுருவி அவன் உரைக்க..., “லூசா நீ...”, என கத்தத் துவங்கியவளது வார்த்தைகள் தொண்டைக்குழியில் சிக்கிக் கொண்டது.

தன் வாழ்நாளிலேயே உணர்ந்திராத ஒரு உணர்வு அவளை வெகு வேகமாக ஆக்கிரமிக்க..., அப்படியே அவனை இறுக அணைத்துகொள்..., அவள் மனதின் கட்டளையை செயல்படுத்த முடியாமல் திண்டாடிப் போனாள்.

தொண்டை அடைக்கும் உணர்வு..., ஒரு நிமிடம் அங்கே வார்த்தைகளற்ற மௌனம் ஆட்சி செய்ய..., அவனோ அந்த நிலையை கலைக்க விரும்பாமல், அவளையே இமைக்காமல் பார்க்க, தன்னை மீட்டவள், “என்ன சொன்ன...? அது..., அதான் எப்போ பாத்தாலும் உன்னோடவே ரெண்டுபேர் இருப்பானுங்களே..., எங்கே அவனுங்க...? இப்போ உன்னோட இருக்காமல் எங்கே போய் தொலைஞ்சானுக...?”, கோபமாக வினவினாள்.

“ம்ச்...”, அலுப்பாக உரைத்தவன், திரும்பிக்கொள்ள..., “சாப்ட்டியா...? நான் சாப்பிடப் போறேன்..., வா...”, அதட்டலாகவே அழைத்தவள், திரும்பி நடந்தாள்.

வினித்தால் நடப்பவை அனைத்தையும் நம்பவே முடியவில்லை. கார்த்திக்குடன் பேசிவிட்டு ஒரு தெளிவான முடிவிற்கு வந்தாலும், தன்னை கொஞ்சம் கூட பிடிக்காத அவளை மணந்து தான் எதை சாதித்துவிடப் போகிறோம்..., என மனம் குழம்பிப் போனான்.

அதுவும் நேரம் கடக்க..., இதற்குமேல் தான் எதிர்பார்த்த எந்தவிதமான எதிர்வினையோ, அறிகுறியோ இனிமேல் நடக்க வாய்ப்பே இல்லை என மனம் உரைக்க, படுக்கை அவனை முள்ளாய் குத்த, பால்க்கனியை தஞ்சம் புகுந்தான்.

அதன்பிறகு நடந்தவை தான்..., அவனை வியப்பின் உச்சியில் நிறுத்தியது. அவள் திரும்பி நடக்கவே..., நொடியும் யோசிக்காமல் அவள் கரத்தை பற்றி நிறுத்த..., உள்ளுக்குள் நொடியில் பரவும் சில்லென்ற உணர்வின் காரணம் புரியாமல், கொஞ்சம் படபடப்பாய் அவனை ஏறிட்டாள்.

“என்னை கல்யாணம் பண்ணிக்கிறது கட்டாயத்தாலையா ஐஸ்?” ‘என்னை உனக்கு பிடித்திருக்கிறதா...?’ இரண்டாவது கேள்வியை கேட்க முடியாமல் நிறுத்திக் கொண்டான்.

அவளது தாக்கம் அவனிடம் இல்லை என்பதை..., அவனது கேள்வி அவளுக்கு உணர்த்த, சுள்ளென எதையோ சொல்லத் துவங்கியவள், ஒரு விதத்தில் அவனது ஐஸ் என்ற அழைப்பு அவளை அமைதிபடுத்த, “என்னை எதற்காகவாவது ஃபோர்ஸ் பண்ண முடியும்னு நினைக்கறியா...? உளறாமல் வா...”, அவன் கேள்விக்கு இது பதில் இல்லை என்றாலும்..., அவனுக்கு இதுவே போதுமானதாக இருந்தது.

ஐஸ் மழையாய் உள்ளம் நொடியில் நனைய, பற்றியிருந்த அவள் கையை விட மனமில்லாமல்..., இறுக பற்றிக்கொண்டு அவளோடு வெளியேறினான்.

பதைப்போடு வெளியே காத்திருந்த ஸ்ரீராம்..., கைகளைக் கோர்த்தவாறு வந்த வினித்தையும், மகளையும் கண்டவர்..., விழிகளை கசக்கிக் கொண்டு மீண்டும் பார்த்தார்.

தன்னை அறியாமலே தன் கையை அவனிடமிருந்து உருவிக் கொண்டவள், “டேட்..., திஸ் இஸ் டூ மச்...”, குறைபட்டாள். அவரோ முகம் விகசிக்க சிரித்தவர், வினித்தின் கரத்தை அவள் அறியாமல் அழுத்தியவர், இருவரையும் சாப்பாட்டு ஹாலுக்கு அழைத்துச் சென்றார்.

சாப்பாட்டு அறையில், நொடியில் ஒரு பரபரப்பு தொற்றிக்கொள்ள, அவர்கள் பின்னால் குழந்தையின் குதூகலத்தோடு வந்த ஸ்ரீராம்..., விடலைப் பையனாக, ஒவ்வொரு பதார்த்தத்தையும் பரிமாற வைத்தார்.

ஐஸ்வர்யா தன் வழக்கத்தை மாற்றிகொள்ளாமல் இரண்டு சப்பாத்தி, பன்னீர் மசாலா..., ஒரு இனிப்பு என அளவோடு நிறுத்திக்கொள்ள, பசியில்லை எனச் சொன்னவனோ..., உணவை ஒரு கை பார்த்துக் கொண்டிருந்தான்.

அவனை கவனிக்கதவள்போல் காட்டிக் கொண்டாலும்..., அவன் உண்ணும் வேகத்தில் அவன் பசியை

உணர்ந்தவள்..., 'இவ்வளவு பசியை வைத்துகொண்டு ஏன் பசியில்லை என்று சொன்னான்? எதையாவது மனதில் போட்டு குழப்புகிறானோ? தனிமையாக உணர்கிறேன் என்று வேறு சொன்னானே...', அவளால் உண்ண முடியவில்லை.

"என்ன..., லேட்டானதால் சாப்பிட முடியலையா? அப்போ பால் கொஞ்சம் குடி...", அவள் உணவுப் பழக்கம் இத்தனை நாளில் அவனுக்கு அத்துப்படி ஆகியிருந்ததால் அவ்வாறு உரைத்தான்.

உணவை உண்டு.., தங்கள் அறைக்குத் திரும்பும் வரைக்கும் அவர்களுக்குள் மௌனம் நிலவ, "தேங்க்ஸ்... அண்ட் குட் நைட்...", அவன் நெகிழ்வாய் உரைக்க..., "முதல்ல போய் தூங்குடா..., தேங்க்ஸ் சொல்ல வந்துட்டான்...", தன் மன உணர்வுகளை அவளால் வெளியே காட்ட முடியவில்லை.

அது அவளுக்குப் பழக்கமும் இல்லை என்பதுதான் சரியாக இருக்கும். படுக்கையில் விழுந்த இருவருக்கும் மனம் நிம்மதியில் திளைத்தது என்று சொன்னால் அது மிகையில்லை.

ஆனால்..., இருவரின் நிம்மதியும்..., மகாராணிப் பரம்பரையில் வந்த சாந்தி தேவியின் உடன் பிறப்புக்களும்..., உறவுகளும் வரும்வரை மட்டுமே நிலைக்கும் என்பதை அந்த இருவரும் அந்த நேரம் உணரவில்லை.

அவ்வளவு ஏன்..., அவள் கழுத்தில் மூன்று முடிச்சை அவன் இட்டு முடித்த பிறகே..., வாழ்க்கையின் சிக்கலில் தான் வசமாக சிக்கிக் கொண்டோம் என்பதை அவன் பூரணமாக உணர்ந்தான்.

சாந்தி தேவியின் வாரிசு ஆணவத்தை கை கோர்க்குமா? இல்லை..., சாரதா தேவியின் வழியில் காதலைப் பற்றுமா...? விடையறியா வினாக்கள்...

***

# பகுதி - 15.

தன் வாழ்நாளிலேயே முக்கியமான விடியல்..., இப்படி ஒரு நாள் வருமென்று அவன் எண்ணியிராத நாள்...

இரவு ஒருவித அமைதியில் கழிந்திருக்க, விடியலும் சுகமாகவே இருக்கும் என்ற எண்ணத்தில் அவன் இருக்க, மணமேடையில் அவன் இருக்கும்பொழுதே, ஒரு பெரியவரின் குரல் ஓங்கி ஒலித்துக் கொண்டிருந்தது.

அவன் என்னவென்று பார்க்க..., மேடைக்கு சற்று தள்ளி..., ஸ்ரீராமிடம், ஒரு பெரியவர், குரல் உயர்த்தி சாடிக் கொண்டிருந்தார். ஸ்ரீராமா.., ஒரு சங்கடமான முகபாவத்தில் அவர் முன்னால் நின்று கொண்டிருந்தார்.

அதைப் பார்த்தவன்..., என்னவென்று எழுந்து செல்ல முயல, “தம்பி..., நீங்க எழுந்திரிக்க கூடாது. அதை பெரியவங்களே முடிச்சுப்பாங்க. நீங்க ஐயர் சொல்வதை செய்ங்க...”, கார்த்திக்கின் தாய் உரைக்க, எழுந்து செல்ல முடியாத சூழலில் அமைதியாக அமர்ந்து கொண்டான்.

அதே நேரம்..., மணமகளை அழைத்து வரச்சொல்லி ஐயர் சொல்ல..., “என்ன சாமி..., நான் இங்கே கல்யாணமே வேண்டாம்னு சொல்றேன்..., நீர் பொண்ணை வரச் சொல்றீர்..., முதல்ல எழுந்து போங்க..., இந்த கல்யாணம் நடக்காது...”, அவர் குரல் கர்ண கொடூரமாக ஒலித்தது.

வினித் சட்டென மேடையில் இருந்து எழ முயல, ஸ்ரீராமின் கெஞ்சல் பார்வை அவனை அடக்கியது. அப்பொழுது ஐஸ்வர்யா அறையில் இருந்து வெளிப்பட...., ஸ்ரீராமால் அந்த சூழலை கையாள முடியவில்லை.

“டேட்..., இங்கே என்ன சத்தம்...?”, முழு அலங்காரத்தில் இருந்தவள் அவரை நெருங்க, அப்பொழுதுதான் மற்றவரைப் பார்த்தாள்.

“தாத்தா..., வாங்க..., நீங்க எப்போ வந்தீங்க...?”, அவள் கேள்விக்கு,

“ஏன் வந்தேன்னு நீயும் கேக்கப் போறியா…?”, வயதானாலும் அவர் குரல் கர்ஜனையாகவே வெளி வந்தது.

“என்ன தாத்தா…?”, அவள் தகப்பனை பார்க்க,

பெரியவரோ…, “அம்மாடி…, நீ இளவரசிம்மா…, போயும் போயும்…, உனக்கும் உங்க அம்மா மாதிரியா புத்தி போகணும்? ஊர் பேர் தெரியாதவனைப் போய்…, எங்கே…, பன்னியோட சேர்ந்த கன்றும் எதையோ திங்குமாம்…, அதே மாதிரி…”, அவர் சொல்லிக்கொண்டே போக.., ஸ்ரீராம் தன் நெஞ்சைப் பிடித்துகொண்டு சரியத் துவங்கினார்.

“டேட்…”, அவள் தந்தையைத் தாங்க…, “அம்மாடி…, எனக்கு உன் கல்யாணத்தை பாக்கணும்…”, அவர் குரல் கெஞ்சிற்று.

“அது நான் இருக்கும் வரைக்கும் நடக்காது…”, பெரியவர் எகிற,

“தாத்தா…, கொஞ்சம் அமைதியா இருங்க. டேட்…, முதல்ல ஹாஸ்பிடல் போகலாம்…, ஆம்புலன்ஸ்…”, அவள் கலங்கிப் போனாள். போராடும் தன் தந்தையைப் பார்க்கவா…, தன் தாத்தாவையா…? திண்டாடினாள்.

வினித் யார் தடுத்தும் கேளாமல்…, மேடையில் இருந்து பாய்ந்து வந்தவன், ஸ்ரீராமை தாங்கினான்.

அந்த பெரியவர் வேறு யாருமல்ல…, சாந்தி தேவியின் ஒன்று விட்ட அண்ணன்தான் இது. சாரதா தேவியைத்தான் தன் மகனுக்கு எடுக்க முடியவில்லை என்றால், ஐஸ்வர்யாவையாவது தன் பேரனுக்கு பார்க்கலாம் என அவர் எத்தனையோ முறை முயல…, அதுவும் நடக்க முடியாத அவரது கோபமே, குடும்ப கௌரவம் என்ற பெயரில் வெளிப்பட்டது.

ஏற்கனவே அவருக்கு ஸ்ரீராம் என்றால் இளப்பம் தான். தன் தங்கை இருந்தவரை அவரை கொஞ்சம் கூட மதித்தது கிடையாது. அப்படி இருக்கையில், இந்த திடீர்

திருமணத்தை அவர் எதிர்பார்த்திருக்கவே இல்லை. அந்த கோபமே பீரிட்டு கிளம்பியது.

“நாழி ஆறது..., முகூர்த்த நேரம் தவறிடப் போறது...”, ஐயர் வாங்கிய காசுக்கு தன் வேலையை சரியாகச் செய்ய,

“தேவி..., இங்கே பார்..., எனக்கு ஒண்ணும் இல்லை..., முதல்ல நீ மணமேடைக்கு போ. வினித்..., இவளை அழைச்சுட்டு போ. உங்க கல்யாணத்தை கண்டாலே எனக்கு எல்லாம் சரியாயிடும்...”, அவர் வார்த்தையை தட்ட முடியாமல், இருவரும் மணமேடைக்கு திரும்பினர்.

அவள் கழுத்தில் தாலி கட்டி முடிக்கவே..., “நினைத்ததை நடிச்சே சாதிச்சுட்ட இல்ல. உன்னைப்போலவே ஒரு அன்னக்காவடியை அவளுக்கு மாப்பிள்ளையா கொண்டு வந்து, என் தங்கையின் பரம்பரையையே பழி வாங்கிட்ட இல்ல...”, விஷம் தோய்ந்த வார்த்தைகளை கக்கினார்.

அது வரைக்கும் மனதில் எதுவும் பதியாமல் இருந்த ஐஸ்வர்யாவுக்கு, மனதுக்குள் மிகப்பெரும் நெருடல் பூதாகரமாக கிளர்ந்தது.

அடுத்து நடந்த எந்த சடங்கிலும் அவளால் இயல்பாக கலந்துகொள்ள முடியவில்லை. இத்தனை நாள் அவள் எண்ணத் தயங்கிய ஒரு விஷயம், தன் கழுத்தில் தாலி ஏறிய பிறகு தோன்றுவது எதனால் என்பதை சிந்திக்க மறுத்தாள்.

அவள் தன் சிந்தையை மட்டுமே போட்டு குழப்பிக் கொள்ள..., வினித்தின் மனம் வேதனையில் நிரம்பி வழிந்தது. ‘இத்தனைநாள் இது வரவில்லை என்ற அவனது எண்ணம் சரியான நேரத்தில் பொய்த்துப் போக..., செய்யும் சடங்குகளில் தன்னை திருப்பினான்.

ஆனால்..., அதுவரை அவளிடம் இருந்த இலகுத்தன்மை தொலைந்து போக, ஒருவித இறுக்கம் குடி கொண்டது. அத்தோடு..., செய்யும் செயல்களில் அவள் பிடித்தமின்மை வெளிப்பட, அவளை மற்றவர் அறியாதவாறு திசை திருப்ப முயன்றான்.

ஆனால்..., அவன் முயற்சிகள் அனைத்தும் அவளுக்கு கோபத்தையும் எரிச்சலையும் ஒருங்கே அளிக்க..., அத்தோடு தன் உறவினர் மத்தியில் வினித்தை திருமணம் செய்ததால் தரம் தாழ்ந்ததாக உணர்ந்தாள்.

என்னவோ முள்ளின்மேல் நிற்கும் உணர்வு. புகைப்படத்துக்கு தன் முகத்தையே காட்ட முடியாத அளவுக்கு வெறுப்பு. அவளுக்கு இந்நாள்வரை போதித்து வந்திருந்த விஷயம்..., பணம் மட்டுமே அனைத்தும் என்ற போதனை..., தேவையற்ற நேரத்தில் உறவுகளால் கிளறப்பட, ஸ்ரீராம் செய்வதறியாமல் திகைத்துப் போனார்.

இப்பொழுது நிஜமாகவே மாரடைப்பு வந்துவிடுமோ என அஞ்சும் அளவுக்கு அவர் நிலை இருந்தது. எந்த பிரச்சனையும் வந்துவிடக் கூடாது என்பதால்தான்..., உறவுகளுக்கு இறுதியாக அழைப்பிதழ் வைத்தார். ஆனால் கூட..., சரியான நேரத்தில் அவர்கள் வேலையைக் காட்ட துடித்துப் போனார்.

அவர் பார்வை முழுவதும் வினித்தையே கெஞ்சியது. மகள் தன் விழியை கோபமாய் சந்திக்கும் விதம் பார்த்தால்..., பிரளயமே மூளும் உணர்வு. எப்படியோ இங்கிருந்து கிளம்பினால் போதும் என்ற முடிவிற்கு அவர் வந்திருக்க, அதற்கும் முடியாமல் சடங்கு சம்ரதாயம் அவர் காலை கட்டிப் போட்டது.

ஒரு வழியாக அனைத்தும் முடிய...., காலையில் நான்கு மணிக்கே எழுந்ததால் மணமக்கள் சோர்வாக இருப்பார்கள் என கார்த்திக் துவங்கிய ஒரு விஷயத்தை கெட்டியாக பிடித்துகொண்டு..., மணமக்களை சற்று நேரம் அவர்கள் அறையில் ஓய்வெடுக்க அனுப்பினார்கள்.

மீண்டும் நல்லநேரம் துவங்கிய பிறகே வீட்டுக்குத் திரும்ப முடியுமாகையால்..., அவர்களுக்கு தனிமை சாத்தியமானது. அறைக்கு வந்த அவனிடம் சண்டை போட முயல, அதற்கு முடியாமல் புகைப்படக்காரர்களின் இருப்பு அவளைத் தேக்கியது.

அதே நேரம்..., வினித்தின் சாதாரணமான அணுகுமுறையும், என்னவோ காதலன் போல விரிந்த புன்னகையோடு புகைப்படத்துக்கு அவன் அளிக்கும் போசும்..., அவளுக்கு பற்றிக்கொண்டு வந்தது.

ஒரு கட்டத்தில் முடியவே முடியாது எனத் தோன்ற..., “கொஞ்சம் நீங்க ரெண்டுபேரும் வெளியே இருங்க...”, புகைப்படம், வீடியோ கிராஃபரை வெளியே அனுப்பியவள்..., அவனை பிலுபிலுவென பிடித்துக் கொண்டாள்.

அவள் பேச்சுக்களை நிதானமாக கேட்டவன்..., “எனக்கு ஒரு சந்தேகம்..., இப்போ அவங்களை வெளியே அனுப்பிட்டு நாம ரெண்டுபேர் மட்டும் தனியா இருக்கோமே..., இதுக்கு அவங்க எதுவும் நினைச்சுக்க மாட்டாங்களா?”, அவன் கேள்வியில் தூக்கிவாரிப் போட்டது.

தான் செய்த மடத்தனம் புரிய, அதை அவனிடம் வெளிப்படுத்த விரும்பாமல், “நீ பேச்சை மாத்தாதே. என்னையும் எங்க அப்பாவையும் நல்லா ஏமாத்தி..., வசியம் செய்து இப்படி ஒரு நிலைக்கு கொண்டு வந்துட்ட இல்ல...”, அவள் சாட...,

“இப்போ நான் என்ன சொன்னாலும் உனக்கு தப்பாவேதான் தெரியும் சோ.., நான் இப்படியே கிளம்பறேன்..., நீ எதையோ சொல்லி சம்மாளி..., இல்லையா..., உன் கௌரவத்தை காப்பாத்திட்டேன்னு போய் தம்பட்டம் அடி. என்னவோ செய்...”, அவன் தன் கழுத்தில் இருந்த மாலையை கழட்டப் போக.., திக்கென அவள் மனம் அடித்துக் கொண்டது.

அவனையும் விட முடியாது..., சொந்தங்களின் பேச்சையும் கேட்க முடியாது, அவளுக்கு தலை வலித்தது. அவளது அதிர்ந்த முகத்தைப் பார்த்து, அவள் நிலையை உணர்ந்தவனாக, “சொந்தம் எல்லாம் இன்னைக்கு வரும்.., நாளைக்கு போய்டும். ஆனா..., நம்ம உறவு நிலையானது ஐஸ்வர்யா..., இதற்குமேல் நான் எதுவும் சொல்வதற்கு இல்லை”, முடித்தவன், அமைதியாக அமர்ந்து கொண்டான்.

அவனுக்கும் தலையை வலித்தது. அவளோ..., இவ்வளவு நேரம், தான் கோபமாக பேசியதற்கும்..., அவன் போகிறேன் என்று சொன்னவுடன் ஏற்பட்ட மௌனத்துக்குமான காரணத்தை ஆராய முனையாமல் அமைதியானாள்.

அவனுக்கு அவளது அந்த அமைதியே பெரும் நம்பிக்கையை அளிக்க, தன் திருமணம் தோல்வி அடையாது என்ற மிகப்பெரும் நம்பிக்கையை அவனுக்கு அளித்தது.

அவர்கள் அமைதியை..., வெளியே கேட்ட கார்த்திக்கின் குரல் கலைக்க, எழுந்து சென்று கதவைத் திறந்தான் வினித்.

“வினித்..., சாப்டுட்டு கிளம்பலாம்னு சொன்னாங்க..., அதான் வந்தேன்...”, எதுவும் பிரச்சனை இல்லையே..., என பார்வையால் வினவியவாறு அவன் உரைக்க,

“நீ போ..., நாங்க வரோம்...”, அவனை அனுப்பிவிட்டு, வருகிறாயா? என்பதுபோல் ஒரு பார்வை பார்த்தான். அவளுக்கும் இங்கே இருந்து போனால் போதும் என்றிருக்க..., கிளம்பிவிட்டாள்.

அதன் பிறகு சாப்பிட்டு, அவள் வீட்டுக்குச் சென்று பூஜை அறையில் விளக்கேற்றி, பால் பழம் குடித்து..., அவள் அறைக்குச் செல்லும் வரைக்கும் இருவரும் ஒரு வார்த்தை கூட பேசிக்கொள்ளவில்லை.

அந்த பெரியவர்..., “இது எத்தனை நாள் நிலைக்கிறது எனப் பார்க்கிறேன். ஒரு நாள் என் முன்னாடிதான் வந்து நிற்கணும்...”, சாபத்தோடு கிளம்பிவிட, அவரோடு மற்ற உறவுகளும் கிளம்பி விட்டார்கள்.

வினித் தற்போதைக்கு விருந்தினர் அறையில் தங்கிக் கொள்வதாக பிடிவாதமாக உரைக்க, ஸ்ரீராம் பெரிதாக மறுக்கவில்லை. எங்கே இவ்வளவு நேரம் அமைதியாக இருக்கும் தன் மகள், புதிதாக எதையும் துவங்கிவிடக் கூடாதே என்ற கவலை அவருக்கு.

அத்தோடு..., மாலையில் வரவேற்புக்குத் தேவையான ஆயத்தங்கள் சரியாக நடக்கிறதா என மேற்பார்வையிட வேண்டி இருந்ததால்..., அவனுக்கு அறையை காட்டிவிட்டு..., அகன்றுவிட்டார்.

தன் அறையில் அலங்காரத்தை கலைத்த ஐஸ்வர்யா படுக்கையில் விழுந்து, எதையும் சிந்திக்கப் பிடிக்காமல், முடியாமல் விழிகளை மூடிக்கொண்டு உறங்கிவிட, வினித் ‘இனிமேல் என்ன நடக்கும்...?’ எனப் புரியாமல் விழித்திருந்தான்.

மாலையில் சொந்தங்களின் இருப்பு இல்லாமல்..., நண்பர்களும், தொழில் முறை நட்புக்களும் மட்டுமே இருக்க, பெரிதாக எந்த குழப்பமும் இருக்கவில்லை.

ஆனாலும்..., மாப்பிள்ளை யார்? அவன் பின்புலம் என்ன? என விசாரித்தவர்களுக்கு..., விளக்கங்கள் கிடைக்காமல் போக..., குழம்பிப் போனார்கள்.

ஒரு சில வம்பு வளர்க்கும் ஆட்கள்..., “இவளுக்கு திருமணம் நடந்ததே பெரிய விஷயம்..., அல்லிராணி..., சண்டிராணி...”, என பேச்சு வளர்த்தாலும், தங்கள் போலி கௌரவத்தையும், மதிப்பையும் காப்பாற்றிக் கொள்ள விலகிக் கொண்டார்கள்.

சிலரது கேள்விக்கு..., “மாப்பிள்ளையின் குணத்துக்காகத்தான் அவனை தேர்ந்தெடுத்தேன் என ஸ்ரீராம் உரைக்க..., அவர்களும் கலைந்து சென்றார்கள்.

நன்றாக ஓய்வெடுத்ததாலோ என்னவோ..., ஐஸ்வர்யா சற்று தெளிந்திருந்தாள். மற்றவரது பேச்சுக்கள் அவளை எட்டாமல் போனதாலும் இந்த அமைதி இருந்திருக்கலாம்.

ஆனால்..., வந்திருந்த யாருமே இருவரின் ஜோடிப் பொருத்தத்தை குறை சொல்லவே இல்லை. இருவருக்கும் இப்பொழுது மனப்பொருத்தம் இருந்ததோ என்னவோ..., ஆனால் உருவப் பொருத்தம் கச்சிதமாக இருந்தது.

ஜாடிகேற்ற மூடிபோல்..., அவனது செர்வானி உடையும்..., அவளது அலங்காரமும், உடையும்..., ஹப்பா..., பார்ப்பவரை மீண்டும் ஒரு முறை பார்க்கத் தூண்டும் விதத்தில் இருந்தார்கள்.

வந்தவர்கள் நிறையபேர் அதை அவர்களிடமே தெரிவிக்க..., அவளது மனக்கிலேசம் கூட அந்த நேரம் அழிந்து, அமிழ்ந்து போனது. தன் அருகில், தோளோடு தோள் உரச, கம்பீரமாக நின்ற அவன் தோற்றமும், நாசூக்காக தன் தோளில் கை போட்டு, புகைப்படத்துக்கு போஸ் கொடுக்கும் அவன் விதமும்..., பாராமல் பார்த்து மகிழ்ந்தாள்.

ஏனோ அவன் முகத்தை நேருக்குநேர் ஏறெடுத்துப் பார்க்க ஏதோ ஒன்று தடுத்தது. புரியாத சில உணர்வுகள்..., மாய உலகுக்குள் இருக்கும் உணர்வு. அவன் அருகாமையை அவள் கொஞ்சம் கூட வெறுக்கவில்லை.

தொழில் முறையில் எத்தனையோ ஆண்களோடு நேருக்கு நேராக பேசி இருக்கிறாள். கல்லூரியில் கூட உடன் பயின்ற ஆண் நண்பர்களை ஒரு பொருட்டாக மதிக்காத காரணத்தால்..., யாரோடும் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் வைத்ததில்லை.

தன் வாழ்நாளிலேயே ஒரு ஆண்மகனோடு இத்தனை நெருக்கத்தில், தோள் உரசும் அருகாமையை அனுபவிக்கிறாள். அது ஒத்துகொள்ள முடியாத விதத்தில் இருக்கவில்லை என்பதுதான் உண்மை.

ஒருவித மயக்க நிலையில் நேரம் கடக்க, அதை கெடுப்பதற்கென்றே வந்தான் பிரதாப். தன் மனைவியோடு மேடையேறியவன்..., “ஹேப்பி மேரீட் லைஃப்...”, செயற்கையாக வாழ்த்தியவன்..., “ஓ..., இந்த கோட்டீஸ்வரனுக்காகத்தான் என்னை வேண்டாம் என்று சொன்னாயா?”, அவன் கேட்டு முடிக்கையில், புகைப்படக்காரர் அழைக்கவே, பேச்சை நிறுத்தினான்.

மேடை நாகரீகம் கருதி வினித் அமைதிகாக்க..., அவனது இந்த பேச்சை எதிர்பார்க்கவில்லை, விரும்பவில்லை

என்று பிரதாப்பின் மனைவியின் முகம் காட்டிக் கொடுத்தது.

“சாரி…”, அவள் அவனை அழைத்துச் செல்ல முயல, “அப்படி என்னிடம் இல்லாதது என்ன இருக்கிறது இவனிடம்…”, நக்கலாக ஐஸ்வர்யாவை ஒரு பார்வை பார்த்தான்.

“என்னங்க…, என்ன பேச்சு இது…? வாங்க…”, அவள் அழைக்க, “ஒரு நிமிஷம்…”, அவர்களை நிறுத்திய ஐஸ்வர்யா…, “நான் ஒரு ஆம்பளையை கல்யாணம் பண்ணிக்கணும்னு நினைத்தேன் பிரதாப்…”, கண்கள் பளபளக்க, சிரித்த முகமாக அவனுக்கு பதிலடி கொடுத்தவள்…, “தேங்க்ஸ் பார் கம்மிங்…”, தேனொழுக நன்றி உரைக்க, அவன் முகம் அவமானத்தில் சிவந்து போனது.

‘இது உனக்குத் தேவையா…?’, பிரதாப்பின் மனைவி அவன் கையை உதறிவிட்டு முன்னால் நடக்க…, அவள் பின்னால் ஓடினான் பிரதாப்.

அவள் பதிலடியில்…, வினித் சிறகில்லாமல் வானத்தில் பறக்க, “இவன்ல்லாம் என்கிட்டே கேள்வி கேக்குற அளவுக்கு வச்சுட்ட இல்ல…”, அவள் கேள்வி அவன் சிறகுகளை வெட்டி வீழ்த்தியது.

ஒரு விதத்தில் அவள் கேள்வி அவனை வேதனைப் படுத்தினாலும், ‘நீ ஏன் நல்ல நிலையில் இல்லாமல் போனாய்…’ என அவள் நினைப்பதன் வெளிப்பாடுதான் இது என்பதை உணர்ந்து மகிழ்ச்சியும் கொண்டான்.

ஆனால்…, அவளுக்கு அந்த உள்ளுணர்வு வேலை செய்யவில்லையோ என்னவோ…, முகம் கடுகடுவென மாறிப் போனது. ‘இவன் எனக்குத் தகுதி இல்லாதவன்…’, அந்த எண்ணம் மீண்டும் வலுப் பெற்றது.

அதை அவளது அடுத்து வந்த செய்கையான…, அவள் தோளில் படிந்த அவன் கையை விலக்குவதில் அவனுக்குத் தெரிய…, ‘உன் மனசுக்குள் ஒளிந்திருக்கும் காதலை வெளியே கொண்டுவர வைத்து…, என்னிடம் நீ ஐ லவ் யூ

சொல்லாமல் உன்னை தொடப்போவதும் இல்லை, விடப்போவதும் இல்லை...' உறுதி கொள்ள வைத்தது.

அடுத்து வந்த நிமிடங்கள் அனைத்தும் யுகங்களாகக் கழிய..., எப்பொழுது இந்த ரிஷப்ஷன் முடியும் என அவன் ஏங்கிப் போனான். அவ்வளவு நேரமும் சற்று நிம்மதியாக உலவிய ஸ்ரீராம்..., மகளது கடுகடுத்த முகத்தைப் பார்த்து கவலை கொண்டார்.

கார்த்திக்கின் முகமும் வாட..., நண்பனுக்கு குளிர்பானம் கொடுக்கும் சாக்கில் அருகில் சென்றவன்..., "என்னடா..., அந்த பிரதாப் உடுக்கை அடிச்சுட்டு போயிட்டானா...? சம்மாளிடா..., எல்லாரும் பாக்கறாங்க...", உரைத்துவிட்டு சென்றான்.

தன் கையில் இருந்த மற்றொரு குளிர்பானத்தை அவள் பக்கம் நீட்ட..., "எனக்கு வேண்டாம். எல்லாம் உங்க ப்ரண்டுக்கே கொடுங்க...", வெடுக்கென உரைக்க..., அவன் அமைதியாக விலகிச் சென்றான்.

நேரமும் கடக்க..., ஒரு பக்கம் களைப்பு, மறு பக்கம் பசி, மனதுக்குள் கோபம்..., ஐஸ்வர்யா ஒரு வழியாகிப் போனாள். கார்த்திக் கொண்டுவந்த குளிர்பானத்தை வினித் வாங்கி அவளிடம் கொடுக்க, அந்த நேரம் அது மிகப்பெரும் தேவையாக இருக்கவே..., அப்பொழுது வாங்கிக் குடித்தாள்.

அதன் பிறகு கூட்டமும் சற்று குறையத் துவங்கவே..., சற்று அமர்வதற்கும் நேரம் கிடைக்க..., ஒரு வழியாக முடித்துவிட்டு வீட்டுக்கு வர, அங்கே அறையில் இருந்த அலங்காரம் அவள் கோபத்தை பல மடங்கு தூண்டி விடவே..., தன் கோபம் மொத்தத்தையும் அவனிடம் வெளிப்படுத்தினாள்.

அவனுமே அந்த அலங்காரத்தை எதிர்பார்க்கவில்லை என அவன் முகம் வெளிப்படுத்த..., அது ஏற்படுத்திய அதிர்ச்சி அவளை வேறு விதத்தில் தாக்கியது.

‘இவனுக்கு ஏன் இவ்வளவு அதிர்ச்சி..., அப்படியென்றால்...’, கோபம் சுர்ரென

“இந்த அறைக்குள் வரும் தகுதி உனக்கு இருக்கா? எனக்கு நீ இணை ஆக முடியுமா? நீயும் நானும் ஒன்றா...? என் நிழலைத் தொடும் தகுதி கூட உனக்குக் கிடையாது. அப்படியிருக்கையில்..., நடிக்கறியா...? எனக்கு உன்னைப் பற்றி தெரியாது என நினைக்கிறாயா...?”, மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க கத்தித் தீர்த்தாள்.

ஏனோ அவன் முகத்தில் கண்ட அதிர்ச்சியை அவளால் அவ்வளவு ஈசியாக எடுத்துகொள்ள முடியவில்லை. தன்னை ஒருவன் தவிர்ப்பதா என்ற ஈகோ..., அதை தாங்கிக்கொள்ள முடியாத பிடிவாதம். ஏற்க முடியாத அவமானம்..., அனைத்தும் சேர்ந்து அவளை கண்மண் தெரியாத கோபத்துக்கு ஆளாக்கியது.

அவள் மூச்சுவாங்க இடைவெளி விட..., “என் தகுதி என்னன்னு உன் கழுத்தில் இருக்கும் அந்த மஞ்சள் கயிற்றிடம் கேள்...”, அவன் நிதானம் அவளை தூண்டி விட்டது.

“மஞ்சள் கயிறா...? இதற்கு என்னிடம் மதிப்பிருக்கும் என எண்ணுகிறாயா? உன் நினைப்பு எதுவும் பலிக்காது. இந்த ஜென்மத்தில் நீ நினைப்பது எதுவும் நடக்காது. என் நிழலைத் தொடவே தகுதி வேண்டும் என நினைக்கும் எனக்கு..., என்னையே தொட.., ஒரு பிச்சைக் காரனா..? இல்லை..., முடியாது..., இந்த ஜென்மத்தில் அது நடக்காது...”, தன் கோபம் மொத்தத்தையும் அவனிடம் கொட்டவேண்டும் என முடிவெடுத்துவிட்டாள்.

“என்னை நீ நெருங்கவே முடியாது. அதற்கு நான் அனுமதிக்க மாட்டேன்...”, தன் போக்கில் புலம்பினாள்.

அவளை கை தூக்கி தடுத்தவன்..., “முதல் விஷயம்..., நீ என்ன நினைத்து பேசுகிறாயோ..., எனக்கு உன்மேல் அப்படி எந்த எண்ணமும் இல்லை. உன்னைப் பார்த்தால்...,

இந்த நிமிஷம் வரைக்கும்..., எனக்கு ‘அப்படி’ ஒரு எண்ணம் வரவே இல்லை..., வரவும் வராது.

“உன்னை ஒரு பொண்ணாக நினைத்தால் தான் அதெல்லாம் தோணும். இந்த நிமிஷம் வரைக்கும் உன்னை நான் பொண்ணாவே நினைக்கலை போதுமா. இப்போ சந்தோஷமா..., போ...”, ஒரே போடாக அவன் போட, அவளது ஈகோ பெரிதாக அடி வாங்கியது அங்கே.

“என் வாழ்க்கையில் நான் செய்த மிகப்பெரிய பிழை இதுதான். உன்னைபோய் நான் கல்யாணம் செய்ய ஒத்துகிட்டேன் பாரு. உன் தகுதியை நினைக்காமல்..., உன் பிச்சகாரத்தனத்தை ஒரு பொருட்டா மதிக்காமல்..., நீ இதை சொல்ல வேண்டியது தான்.

“நான் கேட்க வேண்டியதுதான்..., உனக்கெல்லாம் மனசாட்சி இருக்கா? உன் தராதரம் தகுதி தெரியவே இல்லை இல்ல..., நான் கேட்டுட்டே இருக்கேன், நீ பேசாமல் இருந்தால் என்ன அர்த்தம்...”,

தன் முன்னால் காளியின் மறு உருவமாக நின்ற மனைவியின் சிவந்த முகத்தை தயக்கமே இல்லாமல் எதிர்கொண்டான் வினித். ஐஸ்வர்யாவோ..., தன் கோபத்தை அடக்கும் வழி தெரியாமல், அவனிடம் காட்டுக் கூச்சல் போட்டுக் கொண்டிருந்தாள்.

“நான் சொல்லிட்டே இருக்கேன்..., பதில் பேசாமல் இருந்தால் என்ன அர்த்தம்?”, மூச்சுக்காற்றில் வெம்மை ஏற அவள் கேட்க, அவளை நிதானமாக ஏறிட்டான் வினித்.

“இப்போ நான் என்ன சொல்லணும்னு நீ எதிர்பாக்குற? இல்ல செய்யணும்னு எதிர் பாக்குற? சரி..., உன் பேச்சுக்கே வருகிறேன்..., நான் உனக்கு தகுதி இல்லாதவன், பிச்சைக்காரன்..., அன்னக்காவடி..., சோ அண்ட் சோ...,

“ஆமா..., என் நிலை இதுதான். இதை உன்னிடம் நான் மறைத்து திருமணம் செய்யவில்லையே. இப்போ என்ன..., நீ உன் வாழ்க்கையிலேயே மிகப்பெரிய முட்டாள்த்தனத்தை

செய்துட்ட. அதை தாங்கிக்க முடியாமல் கத்திட்டு இருக்க அப்படித்தானே.

“உன் தவறை நொடியில் சரி செய்து விடலாம்…”, அவன் நிறுத்த, கோபம் குறையாமலே அவனை ஏறிட்டாள்.

“பெருசா எதுவும் இல்லை…, காலையில் உன் கழுத்தில் நான் கட்டிய அந்த மஞ்சள் கையிற்றை மட்டும் கழட்டி, என் கையில் கொடுத்துவிடு. நான் இப்படியே கிளம்பி விடுகிறேன்…”, முகத்தில் எந்தவித பாவனையும் வெளிப்படுத்தாமல் அவன் உரைக்க, இருக்கும் கோபத்தில் அதை அப்படியே செயல்படுத்தி விடுவோமா என சிந்தித்தாள்.

அவள் சிந்தை போகும் திசையை உணர்ந்தவன்…, “ஆனா…, இதை செய்யதுக்கு ஒரே ஒரு சின்ன கண்டிஷன்…”, அவன் நிதானமாக உரைக்க, அவள் முகத்தில் ஒரு ஏளனம் குடிகொண்டது.

“எத்தனை கோடி வேண்டும்…?”, அவள் கேள்விக்கு…, ஒரு நொடியில் வேதனையில் சுருங்கிய அவன் முகம், அடுத்த நிமிடமே இயல்புக்கு மாற,

“என்னைப்பற்றி ரொம்ப உயர்வா நினைத்ததற்கு நன்றி. ஆனால்…, நான் சொல்ல வந்தது அது இல்லை. காலையில் முப்பத்து முக்கோடி தேவர்கள் முன்னிலையில்…, ஆயிரம் சொந்தங்களுக்கு மத்தியில் நடந்த நம் திருமணம், இங்கே இப்போ…, ஒரே ஒரு சொந்ததுக்கு முன்னால் பிரிந்தால் போதும்…”, அவன் பேச்சுக்கு, அவள் கேள்வியாக ஏறிட,

“அது வேற யாரும் இல்லை. உன் அப்பாதான்…, நீயே போய் அழைச்சுட்டு வரியா…, இல்ல நான் போய் அழைச்சுட்டு வரவான்னு மட்டும் யோசிச்சு சொல்…”, உரைத்தவன்…, அங்கிருந்த சோபாவில் சென்று அமர்ந்தான்.

மனம் முழுவதும் வேதனையில் கசங்கிப் போனது. காலை அவள் கழுத்தில் தாலி கட்டியது முதல், இப்பொழுது ரிஷப்ஷன் முடித்து அறைக்குள் நுழைந்த நிமிடம்

வரைக்கும், அவளிடம் போராடிக் களைத்த மனமும், உடலும்..., சற்று ஓய்வுக்காக அவனிடம் கெஞ்சியது.

அடுத்த நிமிடம் அவனே எதிர்பாராத வித்தத்தில்..., அவன்மேல் படீர் என ஒரு சிறிய பேன் ஸ்டாண்ட் வந்து விழ, அதிர்ச்சியில் அவன் நிமிர்ந்து பார்க்கும் முன்னர்..., “என்னடா சொன்ன...? எங்கே திரும்பச் சொல் பார்ப்போம்...? என் அப்பாவை அழைச்சுட்டு வரணுமா...? அவ்வளவு சீக்கிரம் என்கிட்டே இருந்து நீ தப்பிச்சுடுவியா...?”, அவன் தலைமுடி கொத்தாக அவள் கைகளுக்குள் இருக்க, அவன் முடியைப் பிடித்து ஆட்டிக் கொண்டிருந்தாள் ஐஸ்வர்யா.

அது கொடுத்த வலியைக்கூடப் சுகமாக பொறுத்துக்கொண்டு..., தன்னிடம் முழு உரிமையோடு, மனைவியின் பொசசிவ் குணத்தோடு சண்டையிடும் மனைவியை ஏறிட்டவன்..., ‘இப்பொழுதே நீ என் மனைவியாகிவிட்டாய் என்பதை யார் உனக்குச் சொல்லி புரிய வைப்பது...?’ கேள்வியோடு அவளை ஏறிட்டவன்...

“ஏய்..., ஐஷு..., விடு வலிக்குது...”, நிஜமாகவே அலற..., “வலிக்குதா..., நல்லா வலிக்கட்டும்..., இனிமேல் இப்படித்தான் உனக்கு வலிக்கும்...”, அவன் அலறலை கண்டுகொள்ளாமல் அவள் தொடர..., ‘இந்த முதலிரவு கூட நன்றாகத்தான் இருக்கிறது...’ அந்த ரணகளத்திலும் அவன் மனம் குதூகலமாக எண்ணிக் கொண்டது.

அல்லிராணி அவன் இதயராணியாவது எப்பொழுது...?

***

# பகுதி - 16.

அவனை அடித்து ஓய்ந்தவள் தன் படுக்கையில் சென்று அமர்ந்து அவனை ஏறிட்டவள், எதுவும் சொல்லாமல் படுத்துக் கொண்டாள். எதையும் யோசிக்க முயலவில்லை. மனதின் ஓரத்தில் எழும் குரலின் ஓசை என்னவென்று ஆராய முயலவில்லை.

சற்று நேரத்தில் தன் அருகில் யாரோ படுக்கும் உணர்வு தோன்ற..., பட்டென படுக்கையில் இருந்து எழுந்து அமர்ந்தாள். அவனோ..., அவள் எழுந்ததை உணர்ந்தாலும்..., அசைவே இல்லாமல் இருந்தான்.

அவளுக்கு அப்பொழுதுதான் அந்த உண்மை முழுதாக உரைக்கிறது. தன் வாழ்வில் இனிமேல் அவனை தவிர்க்கவே முடியாது என்று. இதுவரை தன் அறையாக, தன் படுக்கையாக மட்டுமே இருந்த உலகை, இனிமேல் அவனோடு பங்குபோட்டுக் கொள்ள வேண்டும் என்ற உண்மையும் தெளிய, தான் எப்படி உணர்கிறோம் என்றே அவளால் பிரித்தறிய முடியவில்லை.

வழக்கமில்லாத இந்த பட்டுப் புடவை வேறு அவளுக்கு எரிச்சலைக் கொடுக்க, அதை எப்பொழுது அவிழ்த்து எறிவோம் என இருந்தது. அதைவிட, இதுவரை சுதந்திரமாக இருந்த தன் உலகில், இனிமேல் அவனுக்காகவும் தான் பார்க்க வேண்டும் என்பது அலுப்பாக இருந்தது.

அதே நேரம்..., நேற்றுவரை தனிமையில் இருந்த நிலை மாறி..., மனதுக்குள் ஒரு நிம்மதி பரவுவதையும் தடுக்க முடியாமல் தடுமாறினாள். ஆனாலும்..., அவனோடு ஒரே படுக்கை அறையை பகிர்ந்து கொள்ள அரை மனதாக சம்மதித்த அவள் மனம், அவனோடு படுக்கையை பகிர தயங்கியது.

எனவே..., “ஏய்..., என்ன நீ..., எதுக்கு இப்போ என் பெட்ல படுக்குற? போ..., போ..., போய் அந்த சோபாவில் படு...”,

தலையணையை எடுத்து அவன் முதுகில் அடித்தவாறு அவனை எழுப்பினாள்.

“ம்ச்..., அதெல்லாம் போக முடியாது. அந்த சோபா எனக்கு பத்தாது. உனக்குத்தான் சரியா இருக்கும்..., நீயே போ...”, அவள் அடியை பெற்றுக்கொண்டு அசராமல் உரைத்தான்.

ஏனோ அவனை கீழே படு என்று சொல்ல அவளுக்கு வாய் வரவில்லை. மேலும் தலையணையால் அவனை இரண்டு போட்டவள்..., “இங்கே பார்..., உன் கால் கை ஏதாவது என்மேல் பட்டுது..., நான் பொல்லாதவளா மாறிடுவேன்...”, கத்தினாள்.

“இப்போ மட்டும் பொண்ணா இருக்குற மாதிரி...”, அவன் சத்தமாகவே முனக, “என்ன சொன்ன..., எங்கே திருப்பிச் சொல்...”, அவள் கேள்வியை அவன் கண்டுகொள்ளவே இல்லை.

அவனிடம் பதில் இல்லாமல் போகவே..., மீண்டும் படுக்கையில் விழுந்தவள்..., சற்று நேரம் அமைதியாக இருந்தாள். அவனது முதுகு சீராக எழுந்து அடங்குவதைப் பார்த்தவளுக்கு..., பொறாமையாக இருந்தது.

‘இவனுக்கு மட்டும் எப்படி தூக்கம் வருது...’ யோசித்தவளுக்கு சட்டென அந்த யோசனை வர..., தலையணையால் அவனை அடித்தும் எழாமல் போகவே..., வேகமாக அவன் சட்டையைப் பிடித்து உலுக்கினாள்.

நல்ல உறக்கத்தில் இருந்தவனது உறக்கம் கலைய... “அதான் அங்கே போகமாட்டேன்னு சொல்லிட்டேனே.., இன்னும் என்ன...”, அவள் பக்கம் திரும்பியவன், உறக்கம் கலைந்த விழிகளோடு கேட்டான்.

“இங்கே பார்..., எனக்கு என் டாய்லெட்டை யாரும் யூஸ் பண்ணுறது பிடிக்காது. ஈரமா இருந்தால் எனக்கு ஒத்துக்காது..., அலர்ஜி ஆகும்...”, அவள் புதிதாக ஒன்றை கண்டுபிடிக்க...,

“ஓ அப்படியா…? அப்போ சரி…”, அரை உறக்கத்தில் கேட்டவன், தன் உறக்கத்தை தொடர்ந்தான்.

அவன் உறங்குவதைப் பார்த்தவள்…, “ஏய்…, நான் சொன்னது புரிஞ்சுதா…?”, அவனை மீண்டும் உலுக்கினாள்.

“ம்…, நீ நாளையில் இருந்து டாய்லெட் யூஸ் பண்ண மாட்டேன்னு சொன்ன அதானே…, நல்லா புரிஞ்சுது…”, அவன் குப்புற படுத்துக் கொள்ள, அவன் பேச்சில் விழித்தாள்.

‘அடப்பாவி…, அசராமல் தூங்கறானே…’, கடுப்பானாள்.

அவன் தூங்குவது பிடிக்காமல்…, மீண்டும் அவனை உலுக்க, ஏற்கனவே முந்தினநாள் தூக்கம் இல்லாதது…, காலையில் அதிகாலையில் எழுந்த அலுப்பு, பகலில் கூட கண்ணயராதது…, மாலையில் ரிஷப்ஷனில் நின்றது என அவன் மிகுந்த களைப்பாய் இருக்க…, அவளுக்கு காலைமுதல் மதியம் வரை உறங்கியதால் களைப்பு இருக்கவில்லை.

இப்பொழுது அவனுக்கு கோபமும், எரிச்சலும் எட்டிப் பார்க்க, “இங்கே பார் ஐஷூ…, ரெண்டுநாள் தூக்கம் இல்லாமல் செம டயடில் நான் இருக்கேன். இப்போ முதலிரவு கொண்டாடும் மூடில் நான் இல்லை புரியுதா…? இல்ல…, உனக்கு ஏதாவது செய்தால்தான் தூக்கம் வரும்னா…”, அவன் நிறுத்த…, அதிர்ந்து விழித்தாள்.

“சாரி…, ஐ’ம் நாட் இன் தி மூட்…”, அவன் முடித்துவிட்டு படுத்துவிட, பட்டென பற்றிய ஏதோ உணர்வு, பொசுங்கியதுபோல் உறைந்தாள். அதை மறைத்தவள்…, “நினைப்பை பார்…, போடா…”, தானும் படுத்துக் கொண்டாள்.

அதே நேரம்…, “ஐ’ம் நாட் பீல் கம்பார்ட்டபில் இன் திஸ் காஸ்ட்டியூம்…”, அவள் புலம்ப, “நான் கண்ணை மூடித்தான் தூங்குவேன்…”, உரைத்தவனிடம் அதற்குமேல் எந்த அசைவுமில்லை.

படுக்கையில் இருந்து எழுந்து, உடை மாற்றும் அறைக்குச் சென்றவள்..., தன் இரவு உடையை மாற்றிவிட்டு, அவன் அருகில் வந்து படுத்தாள். இப்பொழுது அவன் நேராக நிமிர்ந்து படுத்திருக்க, ஏசி காற்றின் வரவுக்கு, அவன் முன்னுச்சி முடி அசைவாடிக் கொண்டிருக்க, ஒரு நொடி தன்னை மீறி அவனை ரசித்தவள், அவன் பக்கம் திரும்பி படுத்துக் கொண்டாள்.

காலையில் கண் விழித்தவனுக்கு, சட்டென எழ முடியாமல், உடல்மேல் ஏதோ பாரம் அழுத்தும் உணர்வு. அது சுமையாக இல்லாமல், சுகமாக இருக்க, இமைகளைப் பிரித்தவனுக்கு, தன் கண்களையே நம்ப முடியவில்லை.

அவன்மேல் ஒற்றை காலையும் கையையும் தூக்கிப் போட்டிருந்தவள், அவன் கழுத்து வளைவில் முகம் புதைத்திருந்தாள். அவள் அவிழ்ந்த கூந்தல், அவன் முகத்தில் கோலம் போட, அவளிடமிருந்து எழுந்த ஒருவித வாசனை அவனை ஒரு ஆண்மகனாய் உணரத் தூண்டியது.

‘நேத்து அவ்வளவு பேசினா..., என் சுண்டு விரல் கூட படக் கூடாதுன்னு சொல்லிட்டு, இப்போ பசை போட்ட மாதிரி ஒட்டிகிட்டு இருக்கா...’, எண்ணியவன், ‘இப்போ முளிச்சான்னா பத்திரகாளியா மாறாமல் போக மாட்டாளே...’ இந்த எண்ணம் எழ..., அவளை விலக்கி எழ முயன்றான்.

அவன் முயற்சியில் அவளுக்கு விழிப்பு வர..., ஒரு நொடி முகத்தை அழுத்தமாக அவன் தோளில் உரசியவள்..., அவன் தாடையின் உரசலில்..., அதன் சொரசொரப்பில் சட்டென கண் விழித்தாள்.

பட்டென அவன்மேல் இருந்து விலகியவள்..., “நேத்து அவ்வளவு தூரம் சொல்லியும்...”, அவள் வார்த்தைகளை முடிக்க விடாமல், ஊன்றியிருந்த அவள் இடக்கையை பட்டென அவன் தட்டிவிட, அதை எதிர்பார்த்திராத அவள், பூமாலையாய் அவன்மேல் சரிந்தாள்.

உரமேறிய அவன் நெஞ்சின்மேல் மல்லிகைப் பந்தென அவள் விழ, அது ஏற்படுத்திய தாக்கம், இருவரையும் பலமாகத் தாக்கியது. ஒரு ஆண்மகனாய் அவனை இன்னும் அதிகமாக பாதித்தது என்பதுதான் சரியாக இருக்கும்.

அவள் போட்டிருந்த இரவு உடையின் கழுத்தின் அபாரமான இறக்கமும், அதன் மெல்லிய ஊடுருவும் அழகும், அது ஏற்படுத்திய உணர்வுகளும், பார்வை அவள் முகத்தில் நிலைக்க முடியாமல், அவள் மேனியில் நழுவிச் செல்ல முயன்றது.

அவன் மனம் அவன் கட்டுப்பாட்டுக்குள் இல்லையென்றால் அது நிச்சயம் நடந்திருக்கும்.

அப்படியே அவளை சரித்து, அவள்மேல் படர்ந்துவிட அவன் ஒவ்வொரு அணுவும் தவிக்க, ‘அதன் பிறகு...?’ அந்த வினா எழுந்த அடுத்த நிமிடம், அவன்மேல் இருந்து எழ முயன்றுகொண்டிருந்த அவளை விலக்கியவன், சட்டென அங்கிருந்து நகர்ந்தான்.

அவளுக்கு தான் எப்படி உணர்கிறோம் என்றே புரியவில்லை. அந்த உணர்வும், நிலையம் நிச்சயம் அவளுக்குள் ஒரு பாதிப்பை ஏற்படுத்தியது. ஏனோ அந்த நேரம் அவன்மேல் கோபம் வரவில்லை. அதைவிட..., உரமேறிய அவன் திண்மையான நெஞ்சை உணர்ந்தவளுக்கு..., ‘முரடன்...’ இந்த எண்ணம் எழ, தலையை உதறிக்கொண்டு எழுந்து சென்றாள்.

அவள் தன் காலைக் கடன்களை முடித்துவிட்டு வெளியே வர, ஒரு கையில்லாத பனியனும், ஒரு சாட்சும் போட்டுகொண்டு, தண்டால் எடுத்துக் கொண்டிருந்தான் அவன்.

ஓரவிழியில் அவனை கவனித்தவள், சட்டென கடந்து செல்ல முடியாதவாறு அவள் கால்கள் பின்னிக் கொண்டது. அவன் திரண்ட தோள்களும், திண்ணிய புஜமும், அதில் கருகருவென அடர்ந்திருந்த முடியும், முதுகிலும்..., அவன்

வெள்ளை பனியனை மீறி..., ஈரத்தில் மிளிர்ந்த அவன் முதுகின் முடியும்..., ‘கரடி...’ அவனுக்கு செல்லப்பெயரும் வைத்துவிட்டாள்.

பார்வையை நிச்சயமாய் அவனிடமிருந்து பிரித்துக்கொள்ள அவளால் முடியவில்லை. அவள் அறையில் இருந்த பால்க்கனிக்கு நேராக திரும்பி இருந்ததால், அவனால் அவள் பார்வையை உணர்ந்துகொள்ள முடியவில்லை.

இருவருமே நேரத்தைப் பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. ஏற்கனவே வினித் ஏழு நாட்கள் விடுப்பு எடுத்திருந்ததால் அவன் அலுவலகம் செல்வதைப் பற்றி எண்ணவே இல்லை.

காலையில் எழுந்தவுடன் காபி, டீ குடிக்கும் வழக்கம் என்றோ அவனை விட்டு சென்றிருக்க, அதைப் பற்றிய எண்ணமும் இல்லாதவனாய், தன் வேலையைத் தொடர்ந்தான்.

அவன் செய்கையில்..., ‘இவனுக்கு மூச்சு வாங்கல...?’ அதி முக்கியமான சந்தேகம் அவளுக்கு எழுந்தது.

ஒரு வழியாக அவன் தன் தண்டாலை முடித்துக்கொண்டு எழ, அப்பொழுதுதான் அவ்வளவு நேரமாக தான் அவனையே பார்த்துவிட்டு நின்றுவிட்டது புரிந்தது. சட்டென விலகு என அவள் மூளை அறிவுறுத்த, அவளது ஈகோவோ..., ‘நான் எதுக்கு போகணும்..., இது என் ரூம்...’, வீம்பாக எண்ணியவள், பார்வையை மட்டும் விலக்கிக் கொண்டாள்.

தன் இடத்தில் இருந்து எழுந்து திரும்பியவன், அவளை எங்கே எதிர்பார்க்கதவனாய் திகைத்தான். அவன் திகைப்புக்குக் காரணம்..., அவனை சோதித்த தன் இரவு உடையை மாற்றாமலே அவள் நின்றிருந்தாள்.

அதே நேரம் கதவு மெல்லியதாக தட்டப்பட..., வாசல் பக்கம் பார்த்தவள், அங்கே நகர..., ‘ஆண்டவா..., இப்படியேவா

வெளியே போவா...?' ஒரு நொடி அவன் தன் மூச்சடக்கி பார்த்திருந்தான்.

அவளோ..., கதவின் அருகில் ஸ்டாண்டில் மாட்டியிருந்த தன் நைட் 'கோட்'டை எடுத்து தன் நைட்டிக்கு மேலாக மாட்டி..., இடையில் முடிச்சிட்டவள், கதவைத் திறக்க, அப்பொழுதுதான்.., இழுத்து வைத்திருந்த தன் மூச்சை நிதானமாக வெளியிட்டான்.

'ஹப்பா...' ஆசுவாசமாய் உணர்ந்தவன், தன் நண்பன் கொண்டுவந்திருந்த தன் சூட்கேஸ் எங்கே என பார்க்கச் சென்றான்.

வெளியே சென்றவள், கையில் காபி ட்ரேயோடு உள்ளே வந்து, நேராக பால்க்கனிக்குச் சென்றவள்..., அங்கே இருந்த மூங்கில் கூடையில் அமர்ந்து நிதானமாக தன் காலை நேர காபியை அருந்த துவங்கினாள்.

அவனோ..., தன் டவ்வலோடு பாத்ரூம் பக்கம் நகர, ஏதோ உள்ளுணர்வு உந்த திரும்பியவள், அவன் குளிக்கப் போவதைப் பார்த்துவிட்டு, கையில் இருந்த காபியை மறந்து, வேகமாக அவனை நோக்கி ஓடி வந்தாள்.

"ஏய்.., எங்க போற...? அதான் நேத்தே சொன்னேனே...", அவள் படபடக்க,

"என்ன சொன்ன? தூக்கத்தில் நான் எதையும் கவனிக்கலை...", உரைத்தவன் அவளை தாண்டிச் செல்ல...

"அதான்..., எனக்கு என் டாய்லெட்டை மத்தவங்க யாரும் யூஸ் பண்றது பிடிக்காதுன்னு சொன்னேனே...", அவள் துவங்கியதில் இருந்த வேகம் முடிக்கும் வேளையில் இருக்கவில்லை.

அதை கவனித்தவன்.., மனதுக்குள் சிரித்தவனாக, "ஓ..., அப்படியா...? அப்போ சரி..., நான் மாமா ரூம்க்கு போய் குளிச்சுக்கறேன்....", உரைத்தவன், அவள் குடித்துவிட்டு மீதம் வைத்திருந்த காபியை நிதானமாக எடுத்தவன், ஒரே

மூச்சில் குடித்துவிட்டு, அவள் கையில் இருந்த சாசரில் வைத்தான்.

அவனது பதிலும், அவன் செய்கையும் வியப்பை ஏற்படுத்த..., “ஹையோ கரடி..., அது எச்சில்...”, அவள் படபடத்தாள்.

“என்ன..., உன் கப்பை எச்சில் பண்ணிட்டேன்னு சொல்ல வரியா...? சாரி..., அதில் இன்னொரு கப் பார்த்தேன்..., நீ அதிலேயே ஊத்தி குடிச்சுக்கோ...”, தோளைக் குலுக்கியவன், வெளியேற முயல,

அவன் எங்கே தன் தந்தையின் அறைக்கு நிஜமாகவே போய்விடுவானோ என எண்ணியவள், “டேய்..., கரடி..., இங்கேயே போய் குளிச்சுத் தொலை..., என் உயிரை வாங்காதே...”, அவன் முன்னால் சென்று நின்றாள்.

“எல்லாம் சரி..., அதென்ன கரடி...?”, ஏனென்று தெரிந்த பிறகும், அவன் ஒற்றை புருவம் உயர்த்தி கேட்க, அப்பொழுதுதான் இவ்வளவு நேரமாக தான் அவனை அப்படி அழைத்ததையே உணர்ந்தாள்.

“அது... அது... நான் எதுக்கு உனக்கு பதில் சொல்லணும்..., முடியாது போ...”, அவள் திரும்பி நடக்க, அவன் முகத்தில் ஒரு அழகான புன்னகை உதயமானது. எத்தனையோ நண்பர்கள் தன்னை கேலி செய்ய அந்த வார்த்தையை பயன்படுத்தியிருக்கிறார்கள் தான்.

ஆனால்..., தன் மனைவியின் வாயால் வந்த அந்த வார்த்தைகள்..., தன்னை அவள் கவனித்திருக்கிறாள்..., கவனிக்கிறாள்..., அழைக்கிறாள்..., ஒரு சுகமான உணர்வு அவனை தாலாட்டியது.

அடுத்த அரைமணி நேரத்தில், இருவரும் கிளம்பி, கீழே வர, அதுவோ மதிய சாப்பாட்டு வேளையாக இருந்தது. அவர்களுக்காக ஶ்ரீராம் காத்திருக்க, அங்கே அவர்கள் இருவரையும், யாரும் எந்த கேள்வியும் கேட்கவில்லை.

துரைதான், அவள் சாதம் சாப்பிடுகிறாளா? இல்லையென்றால் காலை உணவா எனத் தெரியாமல் குழம்ப, “துரை..., லஞ்ச் எடுத்துட்டு வாங்க. சேர்ந்தே சாப்பிடுறோம்...”, ஸ்ரீராம் உரைக்க, தலையை அசைத்தவர் வேகமாக தன் வேலையைச் செய்யத் துவங்கினார்.

உணவை உண்டவள்..., “அப்பா..., நான் ஆபீஸ் கிளம்பறேன்...”, அவள் அறிவிக்க, திகைத்துப் போனார்.

“அம்மாடி..., இன்னும் ரெண்டுநாள் கழிச்சு போகலாமே. அப்படியே நம்ம குலதெய்வ கோயிலுக்கு போய் ஒரு பூஜை போட்டுட்டு வந்துடலாம்...”, அவளை தடுக்க முயன்றார்.

“ம்ச்..., நேத்து வரைக்கும் நான் உங்க பேச்சை கேட்டது போதும் டேட். ஏற்கனவே நாலு நாள் வேலை அப்படியே இருக்கு, இதில்... இன்னும் ரெண்டு நாள்ன்னா..., முடியாது டேட்...”, கோபமாக சொல்லிவிட்டு கிளம்பிவிட்டாள்.

மதியம் இரண்டு மணிக்கு தன் அலுவலகத்துக்குள் நுழைந்த அவளை, அனைவரும் வியப்பாய் பார்த்தார்கள். கார்த்திக்கும், குமாரும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக்கொள்ள,

“இன்னாசார்..., இந்தம்மா இன்னைக்கே ஆபீஸ் வந்துடுச்சு..., சரி நம்ம வினித் சார் தனியா வூட்ல இன்னா கழட்றாராம்...”, அவன் புலம்ப, கார்த்திக்கின் கோபப்பார்வை அவனை கட்டுப்படுத்த, “இன்னாவோ போசார்..., மன்சே ஆறலை...”, புலம்பித் தள்ளினான்.

குமாரிடம் எவ்வளவு சொன்னாலும்..., கேட்காமல், வினித்தின் அந்தரங்கத்தை வெகு சாதாரணமாக அலசுவதை கார்த்திக்கால் தடுக்க முடியவில்லை.

அதைவிட தான் செய்வது தவறு என்பதை அவன் உணரவே இல்லை என்பதுதான் மிகப்பெரும் வேதனையாக இருந்தது. இதை இப்படியே விட முடியாது என்பதை உணர்ந்தவன், அவனை அழைத்துக்கொண்டு கேண்டீன் சென்றான்.

“இப்போ இன்னாத்துக்கு இங்கே இட்டாந்த..., அவனுங்க வேலை செய்ய வேணாவா...?” அவன் கேட்க,

“அவங்க வேலை செய்யிறதை விட, வினித்தை நீ இப்படி பேசுறதை முதல்ல நிறுத்தணும்...”, கோபமாக உரைத்தவன், ஆளுக்கொரு மீல்ஸ் வாங்கிகொண்டு அவன் எதிரில் அமர்ந்தான்.

“டேய் குமார்..., எனக்கொரு சந்தேகம்..., உனக்குன்னு இந்த உலகத்தில் யார் இருக்கா சொல்லு..., அதாவது உறவு, சொந்தம், பந்தம்..., இப்படி...”, அவன் வினவ,

“அதென்னத்துக்கு இப்போ...”

“சொல்லுடா....”

“உறவுன்னா..., ஒண்ணுவிட்ட மாமா..., என் சித்தப்பனுங்க..., அப்புறம் நீ, நம்ம வினித் சார்..., அவ்வளவுதான்...”.

“சரி..., நீ ஏன் அவங்க கூட இல்லை...?”, உனக்குத் தெரியாதா என்பதுபோல் அவனைப் பார்க்க,

“சரி..., நான் அந்த விஷயத்துக்கே வரலை..., இப்போ திடீர்ன்னு ஒரு பொண்ணு மேலே உனக்கு ஆசைப்படுற, அவளையே கல்யாணம் பண்ணிக்க ஒரு சந்தர்ப்பம் கிடைக்குது. ஆனா..., அவளுக்கு உன்னை பிடிக்கவே செய்யாது..., இப்போ நீ என்ன செய்வ?”,

“இன்னா கேள்வி சார் இது...? நான் ஆசைப்படுற பொண்ணுன்னா..., கண்டிப்பா அவளை கண்ணாலம் கட்டிப்பேன். அப்பாங்காட்டி என்னைய புரிய வச்சுட்டு போறேன்..., அதெப்படி விட முடியும்...?”, அவன் எதிர் கேள்வி கேட்க,

“உன் வழிக்கே வரேன்..., உன் கல்யாணம் எனக்கும் வினித்துக்கும் பிடிக்கலை, நாங்க ரெண்டுபேரும்..., இந்த கல்யாணமே வேண்டாம்..., அப்படின்னு சொல்லி..., அவளைப் பத்தி தப்பா பேசி..., உன் மொத ராத்திரி வரைக்கும் விமர்சனம் செய்தால்...”

“சார்..., நீ என் தோஸ்த்துன்னா..., என்ன வேண்ணா பேசுவியா...? அவ நான் ஆசைப்பட்ட பொண்ணு..., அப்படி எல்லாம் விட முடியாது...”, அவனை பேசவே விடாமல் எகிறினான்.

அவனை நிதானமாக ஏறிட்ட கார்த்திக்..., “ஒரு கற்பனை விஷயத்துக்கே உனக்கு இவ்வளவு கோபம் வருதே..., வினித்தோட மனைவியைப் பற்றி, அவன் அந்தரங்க வாழ்க்கையைப் பற்றி, அவன் வாரிசு வரைக்கும் விமர்சனம் பண்றியே..., உனக்கே இது நியாயமா இருக்கா? உனக்கு அது தப்பா தெரியவே இல்லையா...?”, அவன் நிதானமாக வினவ, வாயடைத்துப் போனான்.

ஆனாலும்..., “அத்து..., நான் ஆசைப்பட்டு கட்டிக்கிற பொண்ணை எப்படி நீ...”, அவன் சம்மாளிக்க,

“அப்போ..., அவன் மட்டும் பிடிக்காத பொண்ணை எப்படி கட்டிப்பான்...?”, அவன் கேள்விக்கு...

“சார்...”, அதிர்ச்சியானான்.

“ஆமாடா..., வினித் கண்டிப்பா அவங்களை ஆசைப்பட்டுதான் கல்யாணம் பண்ணியிருக்கான். தனக்கு பிடிக்காத பொண்ணை யாராலும், கட்டாயத்தால் கூட கட்டிக்க முடியாது. அதுவும்..., நம்ம வினித்தை அதை செய்ய வைக்க முடியும்னு நீ நினைக்கறியா...?”, அவன் கேட்ட கேள்வியில் இருந்த உண்மையில் திகைத்துப் போனான்.

தன் செய்கைக்கு நாணியவன்..., “இனிமேல் நான் அவராண்ட அப்படி பேச மாட்டேன் சார். அவங்க நல்லா இருக்கணும்னு நான் சாமியாண்ட வேண்டிக்கறேன்...”, உடனே தன் தவறை திருத்த முயன்றான்.

இருவரும் உண்டுவிட்டு வர, அலுவலகத்தில் இருந்த அனைவருக்கும் அன்றைய அவல் அவள்தான். வேலை நடந்ததோ என்னவோ..., அவளைப் பற்றிய பேச்சு தாராளமாக அங்கே அடிபட்டது.

அதே நேரம்..., பிரதாப் அங்கே வர, கேள்வியாக இருவரும் ஏறிட்டார்கள். அவனோ..., “இங்கே மேனேஜரைப் பாக்கணும்...”, உரைத்தவன், கார்த்திகை பார்த்து வந்தான்.

“என்னோட புது ப்ரைமரி ஸ்கூல்க்கு புக்ஸ் வாங்க வந்திருக்கேன்...”, உரைத்தவனை, வேறு வழியில்லாமல் தன் அறைக்கு அழைத்துச் சென்றான்.

ஆர்டர் கொடுத்தவன்..., “எவ்வளவு டிஸ்க்கவுண்ட் கிடைக்கும் என கேட்க, கார்த்திக் உரைத்ததை விட, மேலும் இரண்டு சதவீதம் அவன் குறைத்துக் கேட்க, கார்த்திக் மறுக்க, பிரதாப்போ பிடிவாதம் பிடிக்கவே, “நான் வேண்ணா மேடத்திடம் கேட்டுவிட்டு உங்களுக்கு கன்ஃபாம் பண்றேன்...”, உரையை முடித்தான்.

“மேடம்..., அப்போ தேவி இருக்காளா...?”, கேட்டவன், அவள் அறையைப் பார்த்து நடக்க, அவன் பின்னால் கார்த்திக் எழுந்து செல்லும் முன்பே, அவள் அறைக்குள் அவன் நுழைந்திருந்தான்.

ஆபீஸ் பையனும், கார்த்திக்கும் இந்த செய்கையை தடுக்க முடியாமல் கையைப் பிசைய..., அவனை அங்கே எதிர்பார்த்திராத ஐஸ்வர்யா..., “இதுதான் நீங்க வேலை பார்க்கும் லட்சணமா..., அவர்களிடம் எரிந்து விழுந்தவள்..., ஜஸ்ட் லீவ் திஸ் பிளேஸ் பிரதாப்...”, அலுவலகப் பையனை பார்வையால் சுட்டெரித்தாள்.

“சார்..., வெளியில போங்க சார்...”, அவன் உரைக்க,

“ஏய்..., நான் புக்ஸ் ஆர்டர் கொடுக்கத்தான் வந்திருக்கேன். ஆமாவா இல்லையான்னு உங்க மேனேஜரையே கேளுங்க...”, பிரதாப் அசையாமல் உரைக்க, வேறு வழியின்றி அவனை விட்டு, மற்றவரை போகச் சொன்னாள்.

அவள் உறைக்காமலேயே அவள் எதிரில் இருந்த இருக்கையில் அமர்ந்தவன், “ம்ச்..., உன்னை நினைத்தால் எனக்கு ரொம்ப பாவமா இருக்கு. மகாராணி தோரணையில் இருந்த நீ. இப்போ..., ஹம்..., இனிமேல் உன்

கீழே வேலை பார்ப்பவனின் மனைவி. என்ன இருந்தாலும் இனிமேல் ஒரு படி கீழே தான்.

“உன்னோட ஆணவத்துக்கு சரியான பரிசைத்தான் அந்த ஆண்டவன் கொடுத்திருக்கான்…”, எக்காளமாக உரைக்க, அவளது ஈகோ மீண்டும் தூண்டிவிடப் பட்டது அங்கே.

***

# பகுதி - 17.

பிரதாப் வந்து சென்ற பிறகு, அடுத்த அரைமணி நேரம் கூட அவளால் அலுவலகத்தில் இருக்க முடியவில்லை. மனம் முழுவதும் ஒருவித கோபம், எரிச்சல்..., எதைப் பார்த்தாலும் தூக்கி அடிக்கும் வேகம்..., சந்தியாவை கூட வறுத்து எடுத்துவிட்டாள்.

ஒரு கட்டத்தில் சந்தியாவாலேயே முடியாமல், “மேம்..., நீங்க வேண்ணா இன்னைக்கு வீட்டுக்குப் போய் ரெஸ்ட் எடுத்துட்டு...”, அவள் வார்த்தையை முடிக்க முடியாமல், ஐஸ்வர்யாவின் பார்வை தடுத்து நிறுத்தியது.

“கெட் லாஸ்ட் ப்ரம் மை சைட்...”, அவளது கூச்சலில் அவள் அறையை விட்டு வெளியேறிவிட்டாள்.

‘எல்லாம் அவனால்..., இந்த அவமானம் அசிங்கம்..., எல்லாம் அவனால். என்னை யோசிக்கவே விடாமல் ஏதோ செய்து..., என் கழுத்தில் தாலியே கட்டிட்டான்..., மத்தவங்க பேசுற மாதிரி அவன் ஏன்...’, அதற்குமேல் அவளால் யோசிக்கவே முடியவில்லை.

மற்றவர்கள் பேசும் விதத்தில் அவன் இருப்பதுதான் மிகுந்த மன உளைச்சலைக் கொடுத்தது. அதுவே அவன்மேல் இருக்கும் பாசத்தின் வெளிப்பாடுதான் என்பதை உணர முடியாமல் போனாள்.

இருக்கையில் இருந்து எழுந்தவள்..., சட்டென வெளியேறி தன் காருக்கு விரைய, அவள் அந்த நேரம் வருவாள் என எதிர்பார்த்திராத கிரி, அப்பொழுதுதான் தன் கையில் வாங்கிய டீயை, ஒரு வாய் கூட குடிக்காமல், அப்படியே தூக்கி போட்டுவிட்டு காருக்கு விரைந்தான்.

“எங்கே போய் தொலைஞ்ச..., இப்போ எல்லாருக்கும் இளக்காரமா போய்டுச்சு இல்ல...”, அவள் கோபத்துக்கான காரணம் புரியாமல், வேகமாக காரை கிளப்பினான்.

அதென்னவோ எப்பொழுதும் அவன் வரும் வேளையில், அவன் தயாராக இருக்கையில் இருக்க வேண்டும்.

இல்லையென்றால் ஒரு வழி செய்துவிடுவாள். அவன் அவசர தேவைக்கு ஒதுங்கியிருந்தால் கூட, அதை ஒரு பொருட்டாகவே கருத மாட்டாள்.

தான் வந்துவிட்டேன் என அவனது அலைபேசிக்கு அழைப்பதோ..., அவனை காத்திருக்கச் சொல்வதோ எதுவும் இருக்காது. இது உன் வேலை, இதை நீ செய்தே ஆகவேண்டும்..., ஒரு வரட்டு பிடிவாதமும், பணக்கார திமிருமே அவளிடம் இருக்கும்.

அவனது அலைபேசி எண் கூட அவளுக்கு தெரியாது. இவனது நம்பரை எல்லாம் வைத்துகொள்ளும் அளவுக்கு அவன் நிலை இல்லை. அவனுக்கு அந்த தகுதியும் இல்லை என்ற மனநிலை உடையவள்.

பழைய காலமாக இருந்திருந்தால்..., இதையும் தீண்டாமை என்ற விதத்தில் தான் சேர்க்க வேண்டும். அதென்னவோ பணம் படைத்தவருக்கு மட்டுமே அவளிடம் மதிப்பிருக்கும்.

அது முதல்முறையாக தவறியது வினித் விஷயத்தில் தான். தன்னை மீறிய அவன்மேலான அவள் நேசம்தான் அதற்கு காரணம் என்பதை அவள் உணரவே இல்லை.

நடந்துவிட்ட இந்த திருமணம் எவ்வளவு பெரிய பிழை என எண்ணத் துவங்கி விட்டாள். வீட்டின் முன்னால், கார் நின்ற பிறகு, அசுர வேகத்தில் வீட்டுக்குள் நுழைந்தவள், தன் கைப்பையை தூக்கி அங்கே இருந்த சோபாவில் விட்டெறிந்தாள்.

அவள் வந்த வேகத்தையும், செய்த செய்கையையும், அவள் பர்ஸை விட்டெறிந்த சோபாவுக்கு எதிரில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த ஆண்கள் இருவரும், ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள்.

அவள் எதையோ சொல்லத் துவங்கிய அதே நேரம்..., “மேம்...”, வெளியே கிரியின் குரல் கேட்க, ஆத்திரம் குறையாமல் திரும்பியவள் வாசலுக்கு விரைய, அவள் எதையோ செய்யப் போகிறாள் என்பதை உணர்ந்த வினித் அவள் பின்னால் விரைந்தான்.

“யூ ராஸ்கல்..., என்னை கூப்பிடும் அளவுக்கு நீ வந்துட்டியா...? உன்னையெல்லாம்...”, அவள் ஆத்திரமாக அவன் முன்னே செல்ல, சட்டென அவளை ஒற்றைக் கையால் பிடித்து தடுத்த வினித்,

“கிரி..., நீ போ..., காலையில் வந்தால் போதும்...”, வினித் உரைக்க, வேகமாக அங்கிருந்து அகன்றான் அவன்.

கடந்த ஐந்து நாட்களுக்கும் மேலாக..., அவனுக்கு விடுப்பு அளிக்காமல், இரவும் பகலும் வேலை வாங்கியிருக்க, இன்று விடுப்பு கேட்க வேண்டி அவளை அழைத்ததற்கு தனக்கு கிடைத்த பரிசை எண்ணி மனம் வெதும்பினான்.

அவள் வீட்டுப் படி தாண்டி அடியெடுத்து வைத்தாலே அவளுக்குப் பிடிக்காது என்பதால் தான் வெளியே இருந்து அழைத்தான். அதற்கும் அவளது பேச்சு அவனையும் கோபப்படுத்தியது. அதை மறைத்தவாறே அங்கிருந்து அகன்றான்.

அதை உணர்ந்த வினித்துக்கு கவலை உண்டானது. அவன் அந்த சிந்தையில் ஒரு நொடி மூழ்க,

“ஹவ்...” ‘டேர் யூ...’, அவள் உதிர்க்கபோகும் வார்த்தையை உணர்ந்தவன்,

“மைன்ட் யுவர் லாங்குவேஜ் ஐஸ்..., ஜஸ்ட் கண்ட்ரோல் யுவர் ஸெல்ப்...”, அவளை அடக்கியவன்.., அவள் கையைப் பற்றி தங்கள் அறைக்கு அழைத்துச் சென்றான்.

ஸ்ரீராம் மனம் பதைக்க நின்றுவிட்டார். மகளுக்கு கோபம் வந்தால், அவள் பேசுவது என்னதென்று அவளுக்கே தெரியாது. அப்படி இருக்கையில், இப்பொழுது வினித்தை எதையாவது சொல்லிவிட்டால்..., அவரால் கவலை மட்டுமே கொள்ள முடிந்தது.

“விடு..., என்னை விடுன்னு சொல்றேன் இல்ல..., என்னைத் தொட உனக்கு என்ன தகுதி இருக்கு...? எல்லாம் உன்னால் தான். என் முன்னாடி வாயைத் தொறக்காதவன் எல்லாம்..., இன்னைக்கு என் முன்னாடி உக்காந்து பேசுற அளவுக்கு

ஆயிட்டான்....”, தன் கோபத்தை குறைக்க முடியாமல் திணறினாள்.

அதென்னவோ..., மற்றவர் முன்னால் கீழாகிப் போகும் உணர்வு. அதுவும் கிரிக்கு முன்னால் வினித்தின் செய்கை, அவளை மூர்க்கமாக்கியது.

“என் தகுதின்னு எதை நீ மீன் பண்ற...?”,

“ஏன்..., உனக்கு அது தெரியாதா...? என் கையால் சம்பளம் வாங்குறவன் எல்லாம், என் முன்னாடி வரவே யோசிப்பான். ஆனா..., ஆனா..., நீ....”, அவள் முகத்தில் ஒரு அவமானத்தின் சாயல் கவிழ, துடித்துப் போனான்.

“அப்படின்னா...?”, தன் அதிர்ச்சியை ஜீரணிக்க முடியாமல், ‘என்னை திருமணம் செய்தது இவளுக்கு அவமானமா...?’ நினைப்பே கொடுமையாக, அவன் வினவ,

“ஆமா..., அப்படித்தான். என்னவோ அசிங்கமா..., அருவருப்பா...?”, அவள் சொல்லிக்கொண்டே போக...,

“போதும்..., போதும் ஐஸ்வர்யா..., அப்போ..., இதுவே என்கிட்டே பணம் இருந்தால் உனக்கு இப்படி அசிங்கமா, அருவருப்பா தோன்றாது இல்ல. அப்படின்னா..., என்னைப் பற்றி தீர்மானிப்பது என் குணமோ, மனசோ..., எதுவுமில்லை. பணம் மட்டும்தான் இல்ல...”, அவன் குரலில் இருந்த இறுக்கம்..., அவள் கோபத்தை குறைத்தாலும், அதை ஒத்துகொள்ள அவளது ஈகோ இடம் கொடுக்கவில்லை.

“நீ மட்டும் என்ன..., என்னை காதலிச்சா கல்யாணம் பண்ணிகிட்ட? என்கிட்டே பணம் இல்லன்னா..., என்னை கல்யாணம் பண்ணி இருப்பியா...? இந்த பணத்துக்கு வேண்டித்தானே....”,

“ஆமா..., ஆமா...”, கிட்டத்தட்ட, அவள் கையை உதறியவன் அறையே அதிரும் அளவு கத்த, ‘இவன் எதை ஆமாம் என்கிறான்...’, பதைப்பாய் நிமிர்ந்தாள்.

“நான் உன்னை விரும்பித்தான் கல்யாணம் பண்ணிகிட்டேன். இதை இப்போ உன்கிட்டே சொன்னா நீ காலில் போட்டிருக்கும் செருப்புக்கு இருக்கும் மதிப்பு கூட என் காதலுக்கு இருக்காதுன்னு தெரியும்..., ஆனாலும் சொல்றேன்..., எஸ்..., ஐ லவ் யூ..” அவனது பேச்சில்..., சர்வாங்கமும் அடங்க நின்றிருந்தாள்.

காதல்..., அதுவும் அவன் வாயால் அந்த மூன்றெழுத்து வாக்கியம் வரும் என்று அவள் கற்பனை கூட செய்து பார்த்ததில்லை. மனதுக்குள் ஒரு நொடியில் சில்லென்று எதுவோ பரவும் உணர்வு. அதை ஆழ்ந்து அனுபவி என மனம் உந்த..., தன்னை மீறி அதை அனுபவித்தாள்.

கல்லூரியில் கூட அவளிடம் சிலர் காதலைச் சொல்லியிருக்கிறார்கள் தான். அப்பொழுதெல்லாம் தோன்றாத ஒரு உணர்வு..., மனதின் ஓரம் இவ்வளவு நாளாக உறுத்திய ஏதோ ஒன்று விடுபட்டுச் செல்லும் உணர்வு. அப்படியே பறக்கும் உணர்வு.

தன் வார்த்தைகள் அவனை எந்த அளவு பாதித்திருக்கும் என்ற எண்ணம் இல்லாமல், தன் நினைவில் மூழ்கி இருந்தவளை, அவன் குரல் மீண்டும் நடப்புக்கு இழுத்து வந்தது.

அவனோ தொடர்ந்தான்..., “என் மனசுக்குள்ளே பூட்டி வச்சிருந்த காதலால் மட்டும்தான் உன்னை கல்யாணம் பண்ணிகிட்டேன். அதுவும்..., என்னை பெத்தவ கிட்டேயோ..., என்னைச் சுற்றி இருந்த பெண்கள் கிட்டேயோ..., அவ்வளவு ஏன்..., எனக்கு திருமணம் முடிக்க, முடிவு செய்த அந்த பெண்ணிடம் கூட இல்லாத ஒண்ணு....”, அந்த நேரம் அவன் கண்களில் ஒளிர்ந்த பிரகாசத்தின் காரணம் அறிய அவள் மனம் துடித்தது.

“அந்த ஒண்ணு..., முதல் முறையா உன்கிட்டே பார்த்தேன். அதனால் மட்டும்தான் உன்னை கல்யாணம் பண்ணிக்க ஆசைப்பட்டேன். ஆனா..., மத்த பொண்ணுங்க மாதிரியே..., உனக்கும் பணம் மட்டும்தான் கண்ணுக்குத் தெரியும்னு ரொம்ப லேட்டா புரிஞ்சுகிட்டேன்...

“நீ சொன்னியே..., உன் கீழே வேலை பார்ப்பவர்களைப் பற்றி. அவங்களும் மனுஷங்க தான். அவங்க செய்யும் வேலையில் ஒண்ணையாவது உன்னால் செய்ய முடியுமா? அவங்க வேலை செய்யலன்னா..., நீ பணம், பணம்னு சொல்றியே..., அது பத்து நாள் கூட உன்கிட்டே இருக்காது. அதை புரிஞ்சுக்க.

“அடச்சீ..., இதையெல்லாம் போய் உன்கிட்டே சொல்லிட்டு இருக்கேன் பாரேன். மனுஷ ஜென்மத்துக்கு இதெல்லாம் புரியும். நீதான் பணப் பேயாச்சே..., உனக்கெங்கே இதெல்லாம் எங்கே புரியப் போகுது? உன் மனசுக்குள்ளே இருப்பதே உனக்குத் தெரியாது. இதில்..., ச்சே...”, வாசலைத் திறந்து சென்றுவிட்டான்.

அவன் விலகிச் செல்லவே..., தன்னை விட்டு எதுவோ விலகிச் செல்லும் உணர்வை அனுபவித்தாள். அவன் தன்னை பணப்பேய் என்று சொன்னதோ, மனுஷியா என கேட்டதோ..., எதுவும் உறைக்கவில்லை. மாறாக...,

ஏற்கனவே அவனுக்கு வேறு பெண்ணை மணம் முடிக்க பேசினார்களா? பெற்றவள் என்று சொன்னானே..., அவர்கள் எல்லாம் எங்கே...? அவன் குரலில் வழிந்த வேதனையின் காரணம் என்ன...? தன்னையே கேட்டுக் கொண்டாள்.

அன்றைய இரவு உணவின் பொழுது அவன் ஒரு தோசையைக் கூட உண்ண முடியாமல் திணற, அதைப் பார்த்தவளுக்கு தன்னாலும் உணவை உண்ண முடியவில்லை. அவனது காதல் என்ற பதம் அவளை புரட்டிப் போட்டிருந்ததோ?

அது ஒரு நொடிதான்..., பிறகு தோளைக் குலுக்கியவள், தன் உணவை முடித்துக் கொண்டு அறைக்குச் சென்றாள்.

ஸ்ரீராம் வேதனையாக இருவரையும் ஒரு பார்வை பார்த்தவர், மகள் செல்லவே, வினித்தை நோக்கி வலி நிறைந்த பார்வையை செலுத்த, “வினித்...”, அவர் அழைக்க,

“ப்ளீஸ் மாமா..., எனக்கு கொஞ்சம் டைம் கொடுங்க...”, பாதி உணவில் எழுந்துவிட்டான். அறைக்குச் செல்ல மனமில்லை, அதே நேரம்..., நண்பர்களை தேடிச் செல்லவும் விரும்பவில்லை. தனிமை வேண்டும் என்ற உணர்வு உந்த..., தோட்டத்தை தஞ்சமடைந்தான்.

அறைக்குள் உடை மாற்றியவளுக்கோ..., ‘எங்கே அவன்...?’ என்ற கேள்வி உந்தியது. ‘இத்தனை நாளாக தனியாகத்தான் இருந்தோம் என்பதையே அவள் மறந்துவிட்டிருந்தாள். அவனை தான் ஏன் தேடுகிறோம் என்ற கேள்வியை அவள் தனக்குள்ளாக கேட்டிருந்தால் இதற்கெல்லாம் அவசியமே இருந்திருக்காது.

அவன் வண்டிச் சத்தம் வெளியே கேட்காததால், கண்டிப்பாக வெளியே அவன் செல்லவில்லை என்பது புரிந்தது. படுக்கையில் அமர்ந்தவளுக்கு, படுக்க முடியவில்லை. நேற்று அவள் உணராத தனிமையை இன்று உணர்ந்தாள்.

தான் பேசியது அனைத்தும் அவளுக்கு மறந்து போனது. மேலும் பத்து நிமிடங்களை கடத்தியவளால்..., அதற்குமேல் முடியவில்லை. ‘ஒரு வேளை மொட்டை மாடிக்கு சென்றிருப்பானா?’ அவள் மனமே அதை மறுத்தது.

சட்டென தோட்டத்தின் நினைவு வர, அங்கே செல் என தவித்த மனதை அடக்கியவாறு...., தன் அறையின் ஜன்னலைத் திறந்தாள். தோட்டத்தின் நடுவில் போட்டிருந்த இருக்கையில்..., கைகள் இரண்டால் தலையைத் தாங்கியவாறு தலை கவிழ்ந்து அமர்ந்திருந்தான்.

அன்று அவன் உரைத்த ‘பீல் அலோன்...’ என்ற வார்த்தை இன்று அவள் செவியைத் தீண்ட..., அதற்குமேல் அவளால் அங்கே இருக்க முடியவில்லை. கால்கள் இரண்டும் பறவையின் இறக்கையாய் மாற, படிகளில் தாவி இறங்கினாள்.

வினித்தோ..., தன்னைத்தானே சமாதானம் செய்துகொள்ள முடியாமல் அமர்ந்திருந்தான். அதுவும் கார்த்திக் உரைத்த

அந்த விஷயம்..., பிரதாப் வந்து சென்ற பிறகு மாறிய அவளது மூட்..., 'ஒரு வேளை..., அவனை தவறவிட்டுவிட்டோம் என யோசிக்கிறாளோ...?' அந்த நினைவு, அவள் வீசிய வார்த்தைகளை விட அதிகம் வலித்தது.

அவன் அருகில் புயலென நெருங்கியவள்..., "இந்த நேரம் இங்கே என்ன பண்ற...?", துடிக்கும் தன் இதயத்தை கைகளால் அழுத்தியவாறு அவள் கேட்க, சட்டென இருக்கையில் இருந்து எழுந்தவன், அவளை சுற்றிக்கொண்டு நடந்துவிட்டான்.

அவன் செய்கையில் மிகுந்த அவானமாக உணர்ந்தாள். அவள் வாழ்நாளிலேயே இப்படி ஒரு புறக்கணிப்பை அவள் அனுபவித்தது இல்லை. முகத்தில் அவன் காரி உமிழ்ந்தது போன்ற உணர்வு..., உறைந்துபோய் அவள் நிற்க,

"அந்த ப்ரதாப்பை மிஸ் பண்ணிட்டோம்னு பீல் பண்ற போல. ஆனால்..., இப்போ எதுவும் செய்ய முடியாது...", அவளுக்கு முதுகு காட்டியே உரைத்தவன், விருட்டென நகர முயல, அவன் கையை தாவிப் பிடித்திருந்தாள்.

"என்னடா சொன்ன...? கம் அகெயின்...", இப்பொழுது அவன் சட்டையை கொத்தாக பற்றியிருந்தாள்.

"நான் ஐஸ்வர்யா தேவிடா..., என் முடிவை நான் எப்பொழுதும் மறு பரிசீலனை செய்வது கிடையாது. அதுவும்..., அவனைபோய்...", உணர்ச்சி வேகத்தில் அவள் குரலும், தேகமும் நடுங்கியது.

"என்ன அந்த கார்த்திக் சொன்னானா...? அவனை வைத்து வேவு பாக்குறியா? இதுக்குத்தான்..., இந்த மாதிரி சீப் ஆட்களோட பழகக் கூடாது. அப்போ புத்தி இப்படித்தான் சாக்கடையை எல்லாம் யோசிக்கும்...", அவனை அடித்து துவைக்கும் வேகம் அவளிடம்.

"அவனைப் பற்றி பேசும் அருகதை உனக்குக் கிடையாது...?", வினித் கோபமானான்.

“என்ன சொன்ன...? எனக்கு அருகதை இல்லையா...?”, அவன் சட்டையைப் பிடித்து உலுக்கினாள்.

“ஆமா..., ஒரு சதவீதம் கூட கிடையாது. என்னை யார்ன்னே தெரியாதபோதே என் பசிக்கு சாப்பாடு போட்டவன். தெருவில் நின்ன எனக்கு படுக்க இடம் கொடுத்து, மூணு மாசம்..., என்னை ஒரு கேள்வி கூட கேட்காமல் பராமரித்தவன். அதெல்லாம் உன்னை மாதிரி பட்டு மெத்தையில் புரண்டு, பசியின் தடம் கூட தெரியாத உனக்கெல்லாம் புரியாது.

“என் வாழ்க்கையில் என்னை விட அதிக அக்கறை உள்ளவன்..., அதான் சொன்னேனே..., மனுஷங்களோட அருமை எல்லாம் உன்னை மாதிரி ஆட்களுக்குப் புரியாது....”, காட்டமாகவே பதில் கொடுத்தான்.

“அப்போ..., உனக்கு என்னை விட அவன்தான் முக்கியமா போய்ட்டான் இல்ல. அவன் சொன்னது உனக்கு பெருசா போச்சா...?”, அவளுக்கு தெரிந்தே ஆகவேண்டும் என்ற வேகம்.

“இதற்கு பதில் நான் சொல்லியே ஆகணுமா? சொன்னால் நீ தாங்க மாட்ட...”, அவளை உதறியவன், அறைக்குத் திரும்பினான்.

‘அப்படின்னா...?’ அவளால் அவனுக்கு தன்னைவிட மற்றவர் முக்கியம் என்பதை அவளால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

அறைக்குள் அவள் கோபமாக நுழைய, அவனோ..., படுக்கையில் படுத்து, கண்களை இறுக மூடியிருந்தான். அவன் அருகில் படுத்தவளுக்கு சுத்தமாக உறக்கம் தொலைந்து போயிருந்தது.

அவனுக்கு அவள் புரண்டு படுப்பது தெரிந்தாலும் அசைவே இல்லாமல் படுத்திருந்தான். நள்ளிரவில் விழிப்பு வந்தபொழுது கூட அவளது செய்கை தொடர, அவனுக்கு தான் என்ன செய்ய என்றே புரியவில்லை.

அன்புக்கு அடி பணியலாம்..., அவள் ஆணவத்துக்குப் பணிவதா என அவன் நினைக்க, அவள் இருட்டுக்குள் எதையோ சிறிது நேரமாக தேடுவது புலப்பட, மனம் தாளாமல் எழுந்து அமர்ந்துவிட்டான்.

அவன் எழுந்ததைப் பார்த்தவள்..., அவனைக் கண்டுகொள்ளாமல் தன் தேடலைத் தொடர, அவனோ சிறிது நேரம் பார்வையை அவள் பின்னால் அலையவிட்டுவிட்டு, அசையாமல் இருந்தான்.

அவன் அமைதி அவளை ஒருவித கோபத்துக்கும், பிடிவாதத்துக்கும் தள்ள, கால்களை சற்று உதைத்தவாறு தன் தேடலை தொடர்ந்தாள். அவளை இப்பொழுது பார்க்க, ஒரு சஸ்பாயில்ட் சயில்ட் போலவே தோன்றியது.

இரவில் தன்னைத்தேடி அவள் தோட்டத்துக்கு வந்ததும் மனதுக்குள் எழ,

அவள் கோபமும், மன உணர்வும் புரிந்தவனாக, தன் பிடிவாதத்தை தளர்த்திவிட்டு, “இந்த அர்த்த ராத்திரியில் என்ன தேடுற...?”, அவன் கேள்வியில் ஒரு நொடி தன் தேடலை நிறுத்தியவள்,

“என்னோட இயர் போனைக் காணோம்..., எனக்கு அது வேணும்...”, ஒருவித பிடிவாதத்தோடு ஒலித்தது அவள் குரல்.

“இந்த நேரம்...?”, அவன் நிறுத்த,

“எனக்கு தூக்கம் வரல..., தினமும் என்னோடவே வைத்திருப்பேன். இப்போதான் ஒரு வாரமா யூஸ் பண்றதில்லை..., அதான்..., எங்கேயோ...”, அலுப்பாக வந்து படுக்கையில் அமர்ந்து கொண்டாள்.

எப்பொழுதும் எதையும் தானாக செய்து அவளுக்கு பழக்கமில்லை என்பதால், அவளால் தன் இயர்போனை கண்டுபிடிக்க முடியவில்லை.

அது இருந்தால் தான் உறங்க முடியும் என்ற அவள் நிலையே..., அவள் அதற்கு எவ்வளவு அடிமையாகி

இருக்கிறாள் என்பது புரிய, இப்பொழுது எங்கே போய் அதைத் தேட என எண்ணியவன்…, “முதல்ல படு…, மத்ததை காலையில் பாத்துக்கலாம்…”, உரைத்தவன் படுத்துவிட்டான்.

அவள் மீண்டும் பிடிவாதமாக அமர்ந்திருக்க, “படும்மா…”, தன் கோபத்தை அவள்மேல் அதிகநேரம் அவனால் தேக்கி வைக்க முடியாமல் உரைத்தான்.

“ஐ கான்ட்…”, மனம் தளர்ந்த நிலையில் அவள் உரைக்க, தன் வார்த்தைகள் அவளை வெகுவாக தாக்கியிருப்பதை உணர்ந்தவன், அவள் கையைப் பிடித்து தன் அருகில் படுக்க வைத்தவன், ஆழ்ந்த பார்வையாக அவளைப் பார்த்திருந்தான்.

‘இதென்ன பார்வை…?’ அவளால் அவன் பார்வையை தொடர்ந்து எதிர்கொள்ள முடியாமல், இமைகளை மூடிக் கொள்ள, எப்பொழுது உறங்கினாள் என்பதை அவள் அறியவே இல்லை.

அன்றைய விடியலும் அவளுக்கு அவன் நெஞ்சே மஞ்சமாக இருக்க, வெயிலும், மழையும், குளிர் நிலவுமாக மாறும் அவள் குணம் புரியாமல், அவள் முகத்தையே வெறித்திருந்தான்.

***

# பகுதி - 18.

அடுத்து வந்த நாட்கள் எப்படிக் கழிந்தது எனக் கேட்டால் அதற்கு விடையில்லை. ஆனால்..., ஐஸ்வர்யாவோடான தன் பேச்சை வீட்டில் சுத்தமாக நிறுத்தி விட்டிருந்தான் வினித்.

அதே நேரம், அவள்மேல் அக்கறை கொண்டிருந்தான் என்பது மட்டும் உண்மை. அவள் அறைக்குள் வந்தவுடன் தன் அலைபேசி, டேப்..., லேப்டாப் என அனைத்தையும் எங்கே வைப்பாள் என்பது அவளே அறியாத விந்தை.

இவை மூன்றையும் எப்பொழுதும் தேடிக் கண்டுபிடிப்பாள். இல்லையா, அவள் அறையை சுத்தம் செய்ய வரும் பொன்னம்மா அதை எடுத்து டேபிள் மீது வைப்பாள்.

டேப், லேப்டாப் கூட அவள் கைக்கு கிடைத்துவிடும், ஆனால் மொபைல்..., அதை எங்கேயாவது வைத்துவிட்டு, வைத்த இடம் தெரியாமல் புலம்பும் அவள் வேலையைப் பார்த்து, சரியாக அதை கண்டுபிடித்து, எப்பொழுதும் டிரேசிங் டேபிள் மீது வைப்பது அவனது வேலையாகிப் போனது.

அவளே கூட..., இப்பொழுதெல்லாம் அவள் போனை அங்கே தேடி எடுப்பது வழக்கமாகியும் போனது. ஆனால்..., அதை தான் சரியாக அங்கே வைப்பது இல்லை என்பதையும் அவள் உணர்ந்தே இருந்தாள்.

அவளது இயர்போன் அவள் அருகில் இருந்தாலும், அதன் தேவைகள் அவளுக்கு ஏற்படவே இல்லை என்பதை உணர்ந்து, காலை வேளைகளில் திகைத்திருக்கிறாள்.

தனது உச்ச கோபத்தில் கூட, அவன் அருகாமையை நாடுவதை, அவன் பாராமுகம் தன்னை தாக்குவதை, உணர்ந்தவளுக்கு, அதை சரி செய்யும் விந்தை தெரியவே இல்லை.

அவனிடம் மன்னிப்பு கேட்கவோ, அவனிடம் இணக்கமாக உரையாடவோ அவளால் முடியவில்லை. அவளுக்குத் தெரியவில்லை என்பதும் மறுக்க முடியாத உண்மை.

அன்று அலுவலகத்தில் பேக்கிங் பிரிவில் ஏதோ பிரச்சனை என கேள்விபட்டவள், பிரச்சனை பெரிதாவதை உணர்ந்து என்னவென்று சென்று பார்த்துவிட்டு திரும்பும் வேளையில்..., பஞ்சிங் மெஷின் கீழே வழியில் இருந்ததை அவள் கவனிக்காமல் மிதித்துவிட, தடுமாறி விழப் போனவளை, சட்டென இடையில் தாங்கிப் பிடித்தான்.

அவனுக்கு எப்படியோ..., ஆனால்..., அவள் வெற்றிடையில் சட்டென முரட்டுத்தனமான அவன் கரத்தின் அணைப்பையும், அவன் கரத்தில் படர்ந்திருந்த முடியின் உரசலையும் உணர்ந்தவளுக்கு, அவன் கைகளுக்குள்ளேயே அடங்கிக் கொள்ளவேண்டும் என்ற வேகம் எழுந்தது.

அதை அடக்க முடியாமல் அவள் போராட, அவனுக்கு அப்படி எந்த உணர்வும் இல்லாமல்..., ஒரு நொடியில் அவளை விலக்கியவன்..., “ஆர் யூ ஓகே...”, கேட்டுவிட்டு அவளைக் கடந்து தன் அறைக்குச் சென்றான்.

அந்த நேரம் கோபம் சுர்ரென ஏற..., அவன் பின்னால் சென்றவள், படீரென கதவைத் திறந்து, அவன் முன்னால் நின்றவள், “இவ எப்போ விழுவா..., பிடிக்கலாம்னு இருந்தியா...? இல்ல அந்த பஞ்சிங் மெஷினை நீதான் அங்கே போட்டியா...?”, வீம்புக்கே கேட்டாள்.

அவள் கேள்வியில் அவளை நேர் பார்வை பார்த்தவன், “ஓ..., தெரியாமல் செய்துட்டேன். இனிமேல் இப்படி நடந்தால்..., கையைக் கட்டிக்கிட்டு பேசாமல் இருக்கறேன். சாரி...”, அவன் இமைக்காமல் அவளை வெறித்தவாறு, வார்த்தைகளை நிதானமாக உரைக்க, கோபமாக திரும்பிவிட்டாள்.

அவள் செல்லவே..., ‘வா... வா...., வழிக்கு வா...’, சிறு சிரிப்பில் எண்ணிக் கொண்டான்.

அவன் உரைத்த சாரி அவளுக்கு வேம்பாக கசந்தது. தான் என்ன எதிர்பார்க்கிறோம் என்பது அவளுக்கே புரியவில்லை.

தினமும் ஒரே அறையில், ஒற்றை படுக்கையறையில், அதிகாலை வேளையில் அவன் மேல் படுத்து உறங்கினால் கூட, அவன் கைகள் ஒரு நாளும் அவளை வளைத்ததில்லை. அது அவளுக்கு பெரிய குறையாகவே இருந்தது.

தன் பெண்மைக்கு ஏற்படும் இறக்கமாகவே அதை கருதினாள். தன்மேல் அவன் அக்கறை கொண்டாலும்..., ஒரு பெண்ணைக் காணும்பொழுது ஏற்படும் சலனத்தை தான் ஒருபொழுதும் கண்டதில்லை என எண்ணும்பொழுதே..., தான் அவனைக் கவரவில்லை என்பது புரிய, மனம் வெதும்பும்.

இது இயல்பாகவே ஒரு பெண்ணுக்கு ஏற்படும் உணர்வு. தனக்கு உரிமையானவன் தன் அழகை ரசிக்க வேண்டும்..., கொண்டாட வேண்டும், தான் அவனைக் கவர வேண்டும் என்பது..., ஆனால்..., வினித்திடம் அது சுத்தமாக இருக்கவில்லை.

ஐஸ்வர்யாவின் மனதுக்குள் அது பெரும் தாக்கங்களை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. அதைவிட..., வீட்டில் அவன் மௌனம்..., எதையாவது செய்து அவனை பேச வைக்க விரும்பினாலும், அதுவும் அவனை கோபப்படுத்தும் விதமாகவே மாறிப் போனது.

இந்த நேரத்தில் தான்..., கிரியைப் பற்றிய அவளது புலம்பல்கள் அதிகரிப்பதைக் கண்டான்.

அவளுக்கு இருக்கும் பெரிய கெட்ட பழக்கமே, தன் காரையோ, கிரியையோ தவிர வேறு காரையோ, மற்றவரை தன் வண்டியை ஓட்டவோ அவள் அனுமதிப்பதில்லை.

எனவே கிரிக்கு விடுமுறை என்பது கிட்டத்தட்ட இல்லாத நிலை தான். எவ்வளவோ சொல்லியும், அவளை அந்த விஷயத்தில் மாற்ற முடியவில்லை.

கிரிக்குமே...., சுளையாக பதினேழாயிரம் ரூபாயை எண்ணி வாங்கும் வேலையை விட்டுச் செல்ல மனமிருக்கவில்லை.

அதே நேரம்..., விடுமுறையற்ற அவன் வேலை, அவனை அலுப்பு கொள்ள வைக்க, ஒருவித எரிச்சலையும், கோபத்தையும் அவன் உணர்ந்தான்.

அதை உணர்ந்த வினித்தும் ஏதாவது செய்தே ஆகவேண்டும் என்ற முடிவிற்கு வந்தான். அன்று காலையில் அவள் கிளம்பிய பொழுது, தானும் அவளோடு வருவதாக உரைக்க, மறுக்காமல் நகர்ந்து இடம் கொடுத்தாள்.

காருக்குள் ஏறியவன், “கிரி..., இன்னைக்கு புது வேர்ஹவுஸ்க்கு இடம் பாக்க போகணும்..., அங்கே அம்பத்தூர் இண்டஸ்ட்ரி ஏரியா பக்கம் போ...”, அவன் உரைக்க, சட்டென அவனைத் திரும்பிப் பார்த்தவள், எதுவும் உரைக்காமல் அமர்ந்துகொண்டாள்.

கார் தன் இயல்பான பாதையில் இருந்து மாறி வேகமெடுக்க, அதிக வேகத்தைப் பார்த்த வினித்தின் புருவம் முடிச்சிட்டது.

“கிரி..., டைம் நிறைய இருக்கு..., சோ நிதானமாவே போ...”, அவன் உரைக்க, “சரிசார்...”, அவன் வாய் உரைத்தாலும், வேகம் குறையவே இல்லை.

“வர வர..., செவிடனாவே ஆயிட்டான். என்ன சொன்னாலும் கேக்குறதில்லை. முதல்ல இவனை மாத்தணும்...”, அவள் சத்தமாகவே புலம்பினாள்.

அவள் உரைத்த மறு நிமிடம்..., சாலையில் இருந்த ஸ்பீட் ப்ரேக்கரைப் பார்த்தான் கிரி. அதை வினித்தும் கவனிக்க..., “கிரி..., பாத்து...”, வினித் உரைக்கும் முன்பு..., வந்த வேகத்தில் அந்த வேகத்தடையில் கார் ஏற..., கிட்டத்தட்ட அரையடிக்கு மேல் துள்ளிய வண்டி..., ரோட்டில் இறங்கியபொழுது, உள்ளே இருந்த வினித்தே உறைந்தான் என்றால்..., ஐஸ்வர்யாவின் நிலையை கேட்கவும் வேண்டுமா.

அந்த நேரத்திலும்..., அவள் சீட் பெல்ட் போட்டிராத காரணத்தால்..., முன்னால் சென்று விழுந்துவிடக் கூடாதே

என்ற காரணத்தால்..., ஒற்றைக் கையால் தனக்கு முன்னிருந்த சீட்டையும்..., மற்றொரு கரத்தால் அவளையும் முன்னால் சென்று விழாமல் தடுக்க..., கலவையான அந்த சூழலில்..., அவன் கரம் எசகு பிசகாக அவளை தடுத்து நிறுத்தியது என்பது மட்டும் உண்மை.

கார் சீராக ஓடத் துவங்கியபொழுது கூட, தன் கையை அவள் மேனியில் இருந்து அகற்ற முடியாமல் அவன் இருக்க, அவன் கரத்துக்கு மேலாக, அவளது இரு கரமும் இறுக பற்றியிருந்ததே காரணம்.

“கிரி..., கவனம் எங்கே இருக்கு...?”, வினித் கத்த...,

“சாரி சார்..., ஏதோ யோசனை...”, காரை மிதமாக செலுத்த துவங்கினான்.

“நீ நம்ம ஆபீஸ்கே போ..., அம்பத்தூர் இன்னொரு நாள் போகலாம்...”, இன்னுமே அவள் தெளியவில்லை.

அவள் நிலையைப் பார்த்தவன்..., “கிரி..., ஒரு நிமிஷம் காரை ஓரமா நிப்பாட்டு...”, வினித்தின் கோபத்தில் மிரண்டவன்..., காரை நிறுத்திவிட்டு, சட்டென இறங்கிக் கொண்டான்.

“ஐஸ்வர்யா...?”, தன் ஒரு கை அவள் பிடியில் இன்னும் இறுக்கமாகவே இருக்க, மறு கையால் அவளை உலுக்கினான். அப்பொழுதுதான் கனவில் இருந்து தெளிந்தவள் போல்..., தன் மேனியில் அழுந்தியிருந்த அவன் கையை சட்டென விலக்கினாள்.

முகத்தில் ஒரு அவஸ்த்தையான புன்னகையும், சங்கடமும் மிளிர்ந்தது. ஆபத்துக்கு செய்த செய்கை என்றாலும்..., சற்று திணறலாகவே உணர்ந்தான்.

அன்று எதேச்சையாக நடந்ததற்கே தன் அறைக்கு வந்து கத்தியவள், இன்று என்ன சொல்வாளோ என்ற எண்ணம் தான் முதலில் எழுந்தது. அதுவும்..., தானாக அவள் காரில் ஏறியிருக்க...,

எங்கே அவள் தன்னை தவறாக எண்ணிவிடக் கூடாதே என்ற எண்ணத்தில், “ஐ’ம் சாரி..., நான் பர்ப்பசா பண்ணலை..., எங்கே நீ முன்னாடி போய் விழுந்து அடிபட்டுடக் கூடாதேன்னுதான்..., சாரி. ஆர் யூ ஓகே. முதல்ல தண்ணி குடி...”, அவளுக்கு தான் எப்படி உணர்கிறோம் என்றே புரியவில்லை.

அவன் கொடுத்த தண்ணீரை மறுக்காமல் வாங்கிக் குடித்தவள், அதே வேகத்தில் அவன் முகத்திலும் நீரை ஊற்ற..., “ஏய்..., அதான் தெரியாமல் பண்ணிட்டேன்னு சொல்றேன் இல்ல. சாரி கூட சொல்லிட்டேனே..., அந்த அவசரத்தில் இதையெல்லாம் எப்படி பாக்குறது...?”, தன் முகத்தில் வழிந்த கண்ணீரை துடைத்தவாறு புலம்பினான்.

“உன் சாரியை இப்போ நான் கேட்டேனா? இடியட்..., எங்கே அவன்..., அவனை இப்படியே போய்ட சொல்லு. இனிமேல் அவன் ஒரு நிமிஷம் கூட இருக்கக் கூடாது...”, கோபமானவள், காரில் இருந்து இறங்க முயன்றாள்.

“ம்ச்..., இப்போ எதுக்கு இந்த கோபம்...? எல்லாம் நான் பாத்துக்கறேன். நீ பேசாமல் இரு...”, அவளைவிட அதிகமாக கத்தியவன், கிரிக்கு தன் அலைபேசியில் இருந்து அழைத்தவன்..., அவன் வரவே காரை எடுக்கச் சொன்னான்.

தன் கோபத்தை அடக்க முடியாமல், திணறிபோய் அமர்ந்திருந்தாள் ஐஸ்வர்யா. அதை உணர்ந்த கிரி கொஞ்சம் நடுங்கினாலும், வினித் இருந்த காரணத்தால் சற்று தைரியமாகவே அமர்ந்திருந்தான்.

இதற்கு முன்னர் அவன் விடுமுறை கேட்ட பொழுதும், வராத நாளும் அவன்தான், ஐஸ்வர்யாவிடமிருந்து அவனை காத்தான். அத்தோடு..., சிலநாள் பாக்கெட் மணியும் கொடுக்க, வினித்தை அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது.

வினித்துக்கும் அவள் மேல் கோபம் என்பதால்..., கண்டிப்பாக தனக்கு சப்போட் செய்வான் என்று எண்ணினான். அதை உணர்ந்த வினித்துக்கு, மூன்றாம்

நபர் கவனிக்கும் அளவுக்கு தான் நடந்துகொண்டதை எண்ணி வெட்கியவன், தன் கோபத்தை மனதுக்குள் புதைத்தான்.

ஐஸ்வர்யாவோ வினித்தை பார்வையால் சுட, அவனோ தன்னை சாதாரணமாக காட்டிக்கொண்டு அமர்ந்திருந்தான்.

கார் அலுவலகத்தில் நின்றவுடன் அவள் இறங்கிச் செல்ல, கிரியை தோளில் கை போட்டு அழைத்துக் கொண்டு, தங்களது ஸ்க்ராப் புக் போட்டு வைக்கும் கிடங்கு இருக்கும் இடத்துக்குச் சென்றான் வினித்.

அதை தன் அறையின் ஜன்னல் வழியாகப் பார்த்த ஐஸ்வர்யா வேகமாக அங்கே செல்ல..., அங்கே..., அறையில் போட்டிருந்த பெஞ்சில் அவனை அமரவைத்து தானும் அமர்ந்தவன்..., "உனக்கு என்ன பிரச்சனை கிரி..., ஏன் இப்படில்லாம் பண்ற...? என்கிட்டே சொல்...", அவன் தோளில் கைபோட்டு வினவினான்.

அவன் கேள்வியில் திகைத்தாலும், அவன்மேல் கொண்ட குருட்டு நம்பிக்கையில்..., "பின்ன என்ன சார்..., ஒரு நாள் கூட லீவ் தராமல்..., அதைவிட.., நாயைவிட கேவலமா விரட்டினால்..., நானும் என்னதான் செய்யிறது..., அதான்...", ஒரு வழியாக அவனும் வாய் திறந்தான்.

"உனக்குப் பிடிக்கலன்னா நீ வேலையை விட்டுட்டு நின்னிருக்கணும். அதை விட்டுட்டு..., சம்பளம் கொடுக்கும் முதலாளி கெட்டவங்களாவே இருந்தாலும், அவங்களுக்கு விசுவாசமா வேலை பாக்கணும். அவங்களுக்கு ஒரு ஆபத்துன்னா..., அவங்களுக்கு உயிரையே கொடுக்கணும்...., ஆனா நீ...", அவன் நிறுத்த, முதல் முறையாக கிரிக்கு உதறல் எடுத்தது.

ஆனாலும்..., வினித்தின் முகம் கோபத்தை பிரதிபலிக்காத காரணத்தால், சற்று நிம்மதியாக உணர்ந்தவன், "நானும் விசுவாசமாத்தான் இருக்கேன்..", தயங்கி உரைத்தான்.

“எப்படி..., இன்னொரு முறை சொல்லு..., எனக்கு காது சரியா கேக்கலை...”, கையை காதுக்குப் பின்னால் குவித்து அவன் கேட்க,

“இல்ல சார்..., தெரியாமல்...”, வினித்தின் பார்வையில் சர்வாங்கமும் அடங்க, வார்த்தையை நிறுத்திவிட்டான்.

“நான் தெரியாமல் தான் கேக்கறேன். நீ ஒரு நாளில் முழுசா எத்தனை மணி நேரம் கார் ஓட்டுவ?”, அவன் கேள்வி எதற்கென்று புரியாவிட்டாலும்..., “என்ன சார்..., மொத்தமா ஒரு ரெண்டுமணி நேரம் ஓட்டுவேன்...”, அவன் குரல் இறங்கி விட்டது.

“அப்படின்னா..., மாசத்துக்கு ஞாயிற்றுகிழமை போனால்..., மொத்தமா இருபத்தஞ்சு நாள்..., இருபத்தஞ்சு இண்ட்டு ரெண்டு..., ஐம்பது மணிநேரம். வாங்குற சம்பளம் இருபத்தேழாயிரம்..., நடுவில் பேட்டா..., நைட் வந்தால் அதுக்கு நூறு ரூபா..., ம்...

“இங்கே லோட் மேன் இருக்கானே. அவனுக்கு வேலை ஒரு நாள் எட்டு மணி நேரம். அதுவும் அவன் விடாமல் பாக்ஸ் தூக்கியே ஆகணும். அவன் ஒரு மாசத்தில் இரநூறு மணிநேரம் வேலை பாத்தாகணும். அவன் சம்பளம் எவ்வளவு தெரியுமா...?”, அவன் கேள்விக்கு, கிரியின் தலை இல்லை என்பதாக அசைந்தது.

“உனக்கு தெரியாது. ஆனா எனக்குத் தெரியுமே..., அவன் சம்பளம் பத்தாயிரம் ரூபாய். மழை, வெயில், பனி..., வியர்வை..., எல்லாத்தையும் அவன் அனுபவிக்கணும். உனக்கு ஏசி கார்..., பகல் முழுக்க உறக்கம், உடம்பு நோகாமல் வேலை...., ஆனாலும்...,

“ஒரு நாள் லீவ் கிடைக்கலை..., பெர்மிஷன் கிடைக்கலன்னு..., உனக்கு தெரிந்த விதத்தில்..., அவங்களோட பலகீனத்தோட விளையாடுற. அதோட உயிரோடவும்...”, அவன் முடிக்க..., “ஐயோ சார்..., அப்படில்லாம் இல்லை..”, அலறியே விட்டான்.

தனக்கு அவள்மேல் இருக்கும் வெறுப்பை காட்ட நினைத்தானே தவிர, ஒருபொழுதும் அவளுக்கு ஆபத்து வரவேண்டும் என எண்ணியதில்லை.

வினித் சற்று நேரம் அமைதியாக..., வினித் சொன்ன விஷயங்கள் அப்பொழுதுதான் அவன் மூளையை சென்று அடைய..., தன் நிலையும், வேலையின் தன்மையும், அதில் இருக்கும் அனுகூலங்களும் அவனை எட்டியது.

தான் எவ்வளவு பெரிய பிழை செய்துவிட்டோம் என வருந்தவும் வைத்தது. ஏற்கனவே இங்கே வேலைக்கு சேரும்பொழுதே அவர்கள் சொன்ன விஷயம்தான். அப்படியிருக்கையில்..., இடையில் தனக்கு என்னவாயிற்று...? தன்னையே கேட்டுக் கொண்டான்.

“கிரி..., உனக்கு லீவ் வேணும்னு சொல்ற அன்னைக்கு, உனக்கு பதிலாக வேறு டிரைவரை நீ கூட்டி வந்திருக்கிறாயா?”, அவன் கேள்விக்கு இல்லை என கிரி தலையாட்ட...,

“உனக்கு பயம்...., எங்கே இன்னொருத்தனை கூட்டி வந்தால்..., அவன் இங்கே செட்டில் ஆயிடுவானோன்னு..., அப்படித்தானே...”, கூர்மையான வினித்தின் கேள்விக்கு, கிரியின் மௌனமே பதிலாக கிடைக்க, அதுவே உண்மை என அவனுக்கு உணர்த்த...,

“ஆனா நீ ஒரு விஷயத்தை யோசிக்க மறந்துட்ட கிரி. அவங்க எத்தனையோ டிரைவர்களை மாற்றி இருந்தாலும், நீ வந்த பிறகு உன்னை மட்டும் மாத்தவே இல்லை. அது ஏன்...? உன்னோட ஒழுக்கமும், நடத்தையும் தான் காரணம்.

“அவங்க கூட ஓட்ட பயப்படுற அவங்க வண்டியை, உன்னை மட்டுமே நம்பி கொடுத்திருக்காங்க. அது எப்படி...? நீ கேட்டப்போ எல்லாம் சத்தம் போட்டாலும்..., முன்பணம் கிடைத்ததா இல்லையா? இதையெல்லாம் எண்ணிப் பார்க்காமல்..., கண்ணை மூடிட்டு ஏதோ கோபத்தில்..., ரொம்ப தப்பு கிரி...”, அவனது பொறுமையான பேச்சை

கேட்டுக் கொண்டிருந்த ஐஸ்வர்யாவுக்கு கோபம் பற்றிக்கொண்டு வந்தது.

‘அவன்கிட்டே என்ன சமாதானம் வேண்டிக் கிடக்கு...?’ அவள் கொதிக்க,

“என்னை மன்னிச்சிடுங்க சார்..., இனிமேல் இப்படி ஒரு தவறை நான் செய்யவே மாட்டேன். நான் மேடத்துகிட்டேயே மன்னிப்பு கேட்டுடறேன். அவங்க எப்போ வரச் சொன்னாலும் கண்டிப்பா வருவேன். எனக்கு லீவ் வேணும்னா..., என் தம்பியை இங்கே கூட்டி வந்து விட்டுட்டுதான் போவேன்...”, அவன் உரைக்க, அமைதியாக கேட்டுக் கொண்டான்.

“இப்போ நீ சொன்னியே..., இது ரொம்பவே சரி...”, அவன் உரைக்க,

“அப்போ நான் போகவா சார்...”, கிரி தயக்கமாக கேட்க, வினித்தின் தலை சம்மதமாக ஆட, வெளியே இருந்த ஐஸ்வர்யா கொதித்துப் போனாள்.

கிரி வெளியே வரப் போவதை உணர்ந்தவள், அங்கிருந்து செல்ல முயல, அவள் மனமோ..., ‘இவன் இனிமேல் இங்கே இருக்க மாட்டான்...’ மனதுக்குள் எண்ணிக் கொண்டாள்.

அதே நேரம்..., “கிரி..., ஒரு நிமிஷம்...”, வினித்தின் குரல் அவர்கள் இருவரையும் தேக்க,

“இவ்வளவு நேரம்..., இந்த கம்பெனியின் விபியா பேசினேன். இப்போ...”, அவன் என்னவென்று உணரும் முன்பே..., வினித்தின் கரம் இடியென அவன் கன்னத்தில் இறங்க..., “சார்...”, அவன் அதிர்ந்ததை விட, ஐஸ்வர்யாவும் சேர்ந்தே அதிர்ந்தாள்.

அதோடு மனதுக்குள் ஒரு உற்சாக ஊற்று. “யார்ன்னு நினைச்ச..., அவ என் பொண்டாட்டிடா. நான் அவளோட இருக்கும்போதே உனக்கு இவ்வளவு தெனாவெட்டுன்னா..., நான் இல்லன்னா...? அவளை ஒருத்தன் என் முன்னால் ஒரு வார்த்தை பேசினாலே நான் சும்மா விட மாட்டேன்.

“நீ என்னன்னா..., என் கண்ணு முன்னாடியே அவளை..., பதறிட்டாடா. அவளுக்கு ஒரு சின்ன கீறல் கூட படலை என்பதால் மட்டும்தான் உன்னோட இவ்வளவு நேரம் வாயாலே பேசிட்டு இருக்கேன். இல்லன்னா..., அப்போவே..., இனிமேல் உன் பக்கத்தில் இருந்து இப்படி ஒரு தப்பு நடக்கக் கூடாது.

“அப்படி நடந்தால்..., நான் இவ்வளவு பொறுமையா பேசிட்டு இருக்க மாட்டேன். என்ன புரியுதா...?”, அவன் சட்டையை கொத்தாக பற்றிக்கொண்டு அவன் கர்ஜிக்க, கிரி நடுநடுங்கிப் போனான்.

வெளியே நின்றிருந்த ஐஸ்வர்யாவுக்குள் தடதடவென எதுவோ புரளும் உணர்வு. அதையும் மீறி..., ‘என்கிட்டே ஒரு வார்த்தை பேச மாட்டானாம்..., அவன் பொண்டாட்டியாம்.., யாரும் எதுவும் சொல்லிடக் கூடாதாம்...’, மனதுக்குள் சிணுங்கிக் கொண்டாள்.

“இப்போ கூட வெளியே போய்..., விபி என்னை அடிச்சுட்டான்னு நீ சொல்லி பிரச்சனையை கிளப்பலாம். நான் இப்போ விபியா இல்லை, அவளோட புருஷனா பேசிட்டு இருக்கேன் புரியுதா...”, அவனை உலுக்க, கிரி மூச்சுக்கே திணறிப் போனான்.

“இல்ல சார்..., இங்கே எதுவும் நடக்கலை. அப்படியே நடந்தாலும்..., என் தப்புக்கான தண்டனை அது. இனிமேல் நீங்க புது கிரியை பாப்பீங்க சார்...”, திணறி அவன் உரைக்க, அப்பொழுதுதான் அவனை தன் கையில் இருந்து விடுவித்தான்.

ஐஸ்வர்யா தான் வந்த சுவடு இல்லாமல் அறைக்குத் திரும்ப, அவர்களும் தங்கள் வேலைக்குத் திரும்பினார்கள். கிரிக்கு வினித் அடித்துவிட்டான் என்ற கோபம் சிறிதும் இருக்கவில்லை. மாறாக..., தன் கண்ணைத் திறந்த நல்லவனாகவே தெரிந்தான்.

சற்று நேரத்தில்..., யூனியன் ஆட்கள் அவனை வந்து சந்தித்து, அடுத்த இன்கிரிமென்ட் விஷயமாக பேச, தான்

ஐஸ்வர்யாவிடம் பேசிவிட்டு முடிவு சொல்வதாகச் சொல்லி அவர்களை அனுப்பிவிட்டு, அவள் அறைக்குச் சென்றான்.

அவ்வளவு நேரமாக ஒருவித மாய உலகில் திளைத்திருந்தவள், அவனைக் கண்டவுடன், அவனை சீண்டிப் பார்க்கும் வேகம் எழுந்தது.

“யாரோ பொண்டாட்டிக்காக சண்டை எல்லாம் போடுறாங்க டேட். நீங்க பாக்கலையே..., அட அட..., என்ன சீன்..., இம்ப்ரெஸ் ஆயிடுவேன்னு நினைச்சாங்க போல...”, அவள் நக்கலாக உரைக்க,

“நீ என்னம்மா சொல்ற...?”, ராம் குழம்பினார்.

“கட்டுன பொண்டாட்டியை இம்ப்ரஸ் பண்ண வேண்டிய கேடுகெட்ட நிலையில் நான் இருக்குறேன்னு நீங்க நக்கல் பண்றீங்களா? பண்ணுங்க..., அப்போவாவது அவளுக்கு புரியுதான்னு பார்ப்போம்...

“ஆனா ஒரு விஷயம்..., கட்டுன பொண்டாட்டி பணக்காரியா இருந்தாலும் சரி, பிச்சைக்காரியா இருந்தாலும் சரி, எனக்கு ஒண்ணுதான்..., அதாவது என் மனைவிக்கான இடம் என் மனதில் ஒண்ணுதான்னு சொல்ல வந்தேன்..., நீங்க தப்பா நினைக்காதீங்க...”, சொன்னவன், தான் கேட்க வந்ததை மறந்து வெளியேறினான்.

இதுவரையில் ஐஸ் மழையில் நனைந்த அவள் மனம்..., சட்டென தீ பற்றிக்கொண்ட உணர்வில் கொழுந்துவிட்டு எரிந்தது. அதன் வெம்மையை அவளால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

***

# பகுதி - 19.

தன் முன்னால் தயங்கியவாறு நின்றிருந்த ஸ்ரீராமின் நிலையை தாங்கிக்கொள்ள முடியாதவனாக, தன் இருக்கையில் இருந்து எழுந்து வந்தவன், “சார்..., இது உங்க ஆபீஸ். ஏன் இவ்வளவு தயக்கம்..., உள்ளே வாங்க...”, அவரை அழைத்து வந்தவன், தன் அறையின் வாயிலை கவனமாக அடைத்துவிட்டே வந்து அமர்ந்தான்.

“கம்பெனியோட விபியை பார்க்க வரதா இருந்தால் தயங்காமல் வரலாம். என் மருமகனை பார்க்க வந்தேன் அதான்...”, தான் பேச வந்த விஷயத்தை எப்படிச் சொல்வதென்று தெரியாமல் மேலும் தயங்கினார்.

அவர் நிலையைப் புரிந்தவனாக, தானும் அமைதியை கையில் எடுத்தவன், கையில் இருந்த பேனாவை சுழற்றியவாறு அமைதியாகவே அமர்ந்திருந்தான்.

சற்று நேரத்தில் தன்னை தேற்றியவராக..., “வினித்..., என் மக இளவரசிப்பா...”, அதற்குமேல் அவரால் சொல்ல முடியாமல் தொண்டை அடைத்துக் கொண்டது.

பிறக்கும்பொழுதே தங்கத் தட்டில் வைத்து தாங்கப்பட்ட மகளை, தன் கண் எதிரிலேயே ஒரு பிச்சைக்காரியோடு இணைத்து சொன்னதை பெற்றவரான அவரால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

மனம் கனத்துபோய்..., தன் மகள் இருந்த நிலையை காண சகியாதவராக அவனிடம் பேச வந்துவிட்டார்.

“உங்களுக்கு அவ இளவரசின்னா..., எனக்கு அவ மகாராணி மாமா...”, அவன் குரலில் கசிந்திருந்த வருத்தம்..., அவனும் வருத்தத்தில் இருப்பதை உணர்த்த, ஒரு பக்கம் நிம்மதியும், மறு பக்கம் கவலையும் ஒருங்கே கொண்டார்.

தன்னை தேற்றியவராக..., “பிறகு ஏம்ப்பா...?”, எப்படி கேட்பது என தயங்க,

“எனக்கு என் வாழ்க்கையை காப்பாத்திக்கணும் மாமா. என் ஐஷுவோட நான் மனசு ஒத்து வாழணும். அதுக்கு சில விஷயங்களை..., அது என் மனசுக்கே பிடிக்காமல் இருந்தாலும் நான் செய்தாக வேண்டிய கட்டாயத்தில் இருக்கேன்.

“இப்போ ஒரு வியாதி வந்தால் நாம வயித்தியம் பாக்குறது இல்லையா..., அது மாதிரிதான் இதுவும். ஆனா என்ன..., ஓப்பன்ஹார்ட் சர்ஜரியை..., மயக்கமருந்தே இல்லாமல், வலிக்க வலிக்க செய்யும் நிலையில் நான் இருக்கேன்.

“எனக்கு வேற வழி இல்லை மாமா. அவளுக்கு வலிக்கிரத்தை விட, ஆயிரம் மடங்கு எனக்கு வலிக்குது. ஆனா..., வலிக்குதேன்னு ஆப்பரேஷனை நிறுத்திட்டா..., அவளை மொத்தமா இழந்துடுவேன் மாமா. அவளை மொத்தமா இழக்குறதுக்கு..., இந்த வலி...”, அவன் தொண்டைக்குழி ஏறி இறங்கி அவன் வேதனையை பறை சாற்ற, சட்டென இருக்கையில் இருந்து எழுந்தவன், அவருக்கு முதுகு காட்டி நின்றுகொண்டான்.

“வினித்...”, அவன் படும் வேதனை தாளாமல்..., சட்டென எழுந்து அவன் தோள் தொட, அவர் கண்கள் மொத்தமாக கலங்கிப் போயிருந்தது.

“ஏன் மாமா இப்படி பண்ணீங்க...? பணத்தோட அருமையை அவளுக்கு சொல்லிக் கொடுத்த நீங்க..., கொஞ்சோண்டு..., பாசத்தோட அருமையை சொல்லிக் கொடுத்திருக்கலாம். அப்படி இருந்திருந்தால்..., நான் இவ்வளவு கஷ்டப்பட வேண்டி இருந்திருக்காது. அவளும்தான்...”, அவர் பக்கம் அவனால் திரும்பவே முடியவில்லை.

“நீங்க என்ன மாமா நினைச்சீங்க..., அந்த சாமியார் சொன்னார் என்ற காரணத்துக்காக அவளை கல்யாணம் செய்ய சம்மதிச்சேன்னா...? இல்ல மாமா..., அவளை பிடிச்சுதான் கல்யாணம் பண்ணிகிட்டேன். பிடிச்ச மனைவியை தள்ளி வச்சு பாக்குற கொடுமை..., என் ஆசையை பார்வையால் கூட வெளிப்படுத்த முடியாமல் இருக்குற கொடுமை. முடியல மாமா...

“ஒவ்வொரு நாளும் ஏதோ ஒரு எதிர்பார்ப்பில் விடிவதும், அது முடியாமல் போறதும். அவளுக்கு என்னை பிடிக்கலன்னா கூட பரவாயில்லை. அவ மனசுக்குள்ளே நான் இருக்கேன். அதை ஒத்துக்க முடியாமல், அவளோட ஈகோ தடுக்குறதும்..., அவ ஈகோக்கு தீனி போட என்னை வார்த்தையால் சுடுறா பாருங்க.

“முடியாது..., அவ பாசத்துக்கு வேண்டி, அவ காலில் விழக்கூட நான் தயாரா இருக்கேன். ஆனா அவ ஈகோக்கு என்னால் அடிபணிய முடியாது மாமா. ஒரு வருஷம் எனக்கு டைம் கொடுங்க..., உங்க பொண்ணு என்னோட வாழறதை உங்க கண்ணால் நீங்க பாப்பீங்க.

“அது வரைக்கும்..., ப்ளீஸ்..., என் கையை கட்டாதீங்க மாமா...”, அவர் பக்கம் திரும்பியவன், நேராக அவர் முகம் பார்த்தான்.

அவர் கண்கள் தன்னை மீறி வெந்நீரை வடிக்க..., தவித்துப் போனான். “மாமா..., நான் இவ்வளவு சொல்றேன்... நீங்க...”, அவர் கண்ணீரை வேகமாய் துடைத்தான்.

“இல்லப்பா..., இது ஆனந்தக் கண்ணீர். எங்கே கட்டாயத்தால் இந்த கல்யாணம் நடந்ததோன்னு தவிச்சுட்டு இருந்தேன். அது இல்லை..., உன் மகளை உயிரா நேசிக்கறேன்னு நீ சொன்ன அந்த வார்த்தை....., நான் எடுத்த முடிவு தப்பே இல்லன்னு எனக்கு புரிய வச்சுட்ட.

“நீ சொன்ன மாதிரி..., என் மக உன்னோட வாழறதை பார்க்க வேண்டி, என்னால் முடிந்ததை கண்டிப்பா நான் செய்வேன்..., உன்னை என் மருமகனா அடைந்ததை பூர்வ ஜென்ம புண்ணியமா நான் நினைக்கறேன்...”, அவனை இறுக அணைத்துக் கொண்டார்.

“என்னை புரிஞ்சுகிட்டதுக்கு தேங்க்ஸ் மாமா...”, அவனும் தன்னை மீட்டுக் கொண்டான்.

அதன் பிறகு அவர்களைப் பற்றிய கவலையை ஒத்துக்கிவிட்டு, தன் வேலையில் கவனம் செலுத்தினார். ஶ்ரீராம் தெளிந்ததுபோல்..., ஐஸ்வர்யாவுக்கு தெளிய

வழியில்லாமல் போக, அவளுக்கு அவன்மேல் கோபம் அதிகரித்துக் கொண்டே போனது.

இன்னும் ஒரு மாதத்தில் ஸ்டாக்ஆடிட் இருப்பதால்..., அதற்கான வேலைகள் ஜரூராக நடைபெறத் துவங்கின. வெளி ஆடர்களை சீக்கிரம் முடித்துவிட்டு, ஸ்டாக் அனைத்தையும் செக் செய்வது..., பேமெண்ட் செக்ஷன் சரியான விதத்தில் பேமெண்ட் வாங்கி இருக்கிறார்களா?

வேறு டீவியேஷன் இருக்கா..., என ஒவ்வொரு விதத்தையும் கார்த்திக் மூலமாக திட்டமிட்டு தெளிவாக முன்னின்று நடத்திக் கொண்டிருந்தான். வினித்தின் உடலுழைப்பு இல்லையென்றாலும், அவன் மூளை பலம்...., அனைவரையும் வியக்க வைத்தது.

முன்பெல்லாம் எதை முதலில் துவங்குவது..., எந்த ஆடரில் செய்வது என்பதே சற்று குழப்பத்தில் இருக்கும். ஆனால்..., வினித்தின் திட்டமிடல்..., ஐஸ்வர்யாவை நிச்சயம் கவர்ந்தது.

தன் அறையில் அமர்ந்துகொள்ளாமல்..., ஐந்து மணிக்கு மேல்..., தன் ‘கோட்’டை கழட்டி வைத்துவிட்டு, புல்ஹேண்ட் சட்டையின் கையை முழங்கை வரை மடித்து விட்டுக் கொண்டு, சட்டையின் முதல் இரண்டு பட்டன்களை கழட்டி விட்டுக் கொண்டு, காண்டிராக்ட் பசங்களோடு அவன் நின்று வேலை வாங்கும் விதத்தை, தன்னை அறியாமலே ரசிக்கத் துவங்கி இருந்தாள்.

மேல்சட்டையின் வழியாக எட்டிப் பார்க்கும் அவன் உரமேறிய நெஞ்சின் உறுதியும், அதில் படர்ந்திருக்கும் முடியும், அவன் கரத்தில் படர்ந்திருக்கும் முடியும்..., ஏனோ அவன் கைகளுக்குள் சிக்கிக் கொண்டு, அவன் நெஞ்சில் முகத்தை உரசிக்கொள்ள வேண்டும் என்ற வேகம் எழுந்தது.

அலுவலகத்தில் அலுவல் விஷயமாக மணிக்கணக்காக அவளோடு உரையாடுபவன், வீட்டுக்கு வந்தால் அவசியத்துக்காக கூட பேசிக் கொள்வதில்லை. அவன்

அப்படியொன்றும் அவளோடு பேசியது இல்லைதான். ஆனாலும்..., ஒரே அறையில்..., தன்னை ஒற்றை பார்வை, ஓரவிழி பார்வை கூட பாராமல்..., விறைப்பாக இருக்கும் அவன் குணம்..., அதுவே அவளைக் கவரத் துவங்கியிருந்தது.

அவள் மனதுக்குள் இவ்வாறு நினைக்க..., அவனோ..., அறைக்குள் அவள் உடுத்தும் உடையின் தன்மை தாளாமல்..., எங்கே அவளை நேராகப் பார்த்தால் தன் விழி எதையாவது காட்டிக் கொடுத்துவிடுமோ என அஞ்சியவனாக அவளை பார்க்க மறுத்தான்.

சில இரவுகளில்..., 'இவளுக்குன்னு எங்கே இருந்து இப்படித் துணியெல்லாம் கிடைக்குது?', அவள் அறியாமல் பெருமூச்சை வெளியேற்றுவான். அதில் கலந்திருக்கும் அனலை அவன் மட்டுமே அறிவான்.

'இப்படி உடையில் என் முன்னாடி அலையிறவ, வாயைத் தொறந்தால் உனக்கென்ன உரிமை இருக்குன்னு கேப்பா. ஏண்டி..., இந்த ரூமுக்கு வெளியே உன்னால் இதே உடையோடு போக முடியுமா? என்னை என் வெறியேற்றுகிறாய்...', அவளைப் பிடித்து கேட்கத் தூண்டும் கேள்வியை தனக்குள்ளாகவே புதைத்துக் கொள்வான்.

உள்ளுக்குள் அனலடித்து தகிக்கும் தேகத்தை என்ன செய்து குளிர்விப்பது என்பது அவனுக்கு சத்தியமாக புரியவில்லை. அதிகாலையில் அவளது நெருக்கம்..., ஒரு நொடியில் அனைத்தையும் முடித்துக் கொள்வோமா என எத்தனையோ நான் நினைத்தவன், அதன் பிறகு நடக்கும் விபரீதங்களை எண்ணி தடுத்துக் கொள்வான்.

இருவரும் ஒருவர் அறியாமல், மற்றவரை எண்ணி உருகத் துவங்கி இருந்தார்கள். மனதில் நேசம் இல்லாமல் இது சாத்தியம் இல்லை என்பதை ஐஸ்வர்யா உணராமல் போனதன் விளைவுதான்..., அடுத்தடுத்த அவர்கள் வாழ்க்கையை புரட்டியது.

அன்று ஸ்டாக்ஆடிட் நாள்..., அன்று அவள் கோபத்தை அதிகரிப்பது போல் அந்த சம்பவம் நிகழ, அவளுக்கே சற்று தன்னைப் பற்றி அறியும் தெளிவு வந்தது.

மொத்தம் ஏழு நாட்கள் ஸ்டாக் ஆடிட் நடைபெறும் என்பதால்..., ஐஸ்வர்யா சற்று பதட்டமாகவே இருந்தாள். அவளுக்கு வேலையை செய்வதிலோ, அதை திறம்பட நடத்துவதிலோ, நிர்வாகத்திலோ எந்த குழப்பமும் வராது.

ஆனால்..., இந்த ஆடிட் என்றாலே அவளுக்கு சற்று அலர்ஜிதான். அதுவும் அவளையே கேள்வி கேட்டு மிரள வைக்கும் ஒரு பிரிவாயிற்றே. அத்தோடு அவளுடைய ஜம்பம் பலிக்காத ஒரு நிர்வாகப் பிரிவும் கூட. எனவே..., ஆடிட் என்றாலே அவளுக்கு பிடிக்காது.

ஆனால்..., அதை தவிர்க்கவும் முடியாதே. சற்று பதட்டமாக அவள் அறையில் அவள் இருக்க..., அன்று ஆடிட்டர் மோகன் வராமல்..., அவரது உதவியாளர்கள் மூவரை அனுப்பியிருக்க, அதில் இருந்த ஒரு பெண்ணைப் பார்த்து அவளுக்கு பிபியே எகிறியது.

அதென்னவோ பெண்கள் வந்தால் அனைத்தையும் அடிமுதல் நுனிவரை ஆராயாமல் விட மாட்டார்கள். எனவே தான் சற்று டென்ஷன் ஆனாள்.

அவள் டென்ஷனைப் பார்த்தவன்..., “மேம்..., நீங்க டென்ஷன் ஆகுற அளவுக்கு ஒண்ணும் இல்லை. இந்த வருஷம் பக்காவா இருக்கும். நீங்க தைரியமா இருங்க...”, அவன் பேச்சு அவளுக்கு நம்பிக்கை அளித்தாலும், மறு பக்கம் ஏதோ குறையும் உணர்வு.

ஒரு வேலை ஆதரவாக அவன் தன் கரத்தை பற்றியிருந்தால் இப்படித் தோன்றியிராதோ என அவளால் எண்ணாமல் இருக்க முடியவில்லை.

அதை ஒதுக்கியவள்..., “ஓகே..., பாத்துக்கோ...”, உரைத்தவள் தன் அறைக்குள் முடங்கினாள்.

அடுத்த இரண்டு மணி நேரங்கள் அவஸ்த்தையாய் கழிய, அவள் டென்ஷனை குறைக்க வந்தாள் சந்தியா.

“மேம்..., ஆடிட் சும்மா அட்டகாசமா போகுது. இதுவரை செலக்ட் செய்த பதினைந்து டைட்டிலும் ஒண்ணு கூட பெண்டிங் இல்லாமல் பக்காவா இருக்கு. அந்த மனீஷா முகத்தைப் பாக்கணுமே..., நோண்டி நோண்டி பாத்து திணறுறா...”, அவள் வார்த்தைகள்..., ஐஸ்வர்யாவுக்கு யானை பலத்தை கொடுத்தது.

“ஓ..., நல்லது. விபி எங்கே...”, தன் உற்சாகத்தை வெளிக்காட்டாமல் கேட்டாள்.

“வினித், மனீஷவோடதான் இருக்கார். அவர்தான் டைட்டில் இருக்கும் பேப்பர் எல்லாத்தையும் சரி பார்த்து..., ரிப்போட் சொல்லச் சொல்ல, அவ கிட்டே சொல்றார்...”, அவள் சாதாரணமாகத்தான் உரைத்தாள். ஐஸ்வர்யாவுக்குத்தான் துணுக்கென்று இருந்தது.

ஸ்ரீராம் ஏற்கனவே ஆடிட் நடக்கும் இடத்தில் இருக்க..., “சரி நீ போ..., நான் டீ பிரேக் அப்போ வரேன்...”, அவள் உரைக்க,

“மேம்..., இப்போ டீ பிரேக் தான். அதான் நான் உங்ககிட்டே ரிப்போட் கொடுக்க வந்தேன்...”.

“ஓகே..., நீ போ..., நான் வரேன்...”, அவள் செல்லவே..., அவள் பின்னால் கான்பிரன்ஸ் ஹாலுக்கு விரைந்தாள்.

கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே சென்றவளுக்கு, அங்கே தான் கண்ட காட்சியில் விழிகள் தெறித்துவிடும்போல் விரிய..., அதிர்ச்சியை நொடியில் மறைத்தவள், தன்னை கட்டுப்படுத்துகொண்டு உள்ளே வந்தாள்.

ஆனால்..., அவள் வந்ததைக் கண்டுகொள்ளாமல்..., வினித்தோ..., தன் கையில் இருந்த டர்க்கி டவ்வலை மனீஷாவிடம் கொடுத்தவன், “ரெஸ்ட் ரூம் அந்தப் பக்கம் இருக்கு மனீஷா. ப்ளீஸ்...”, அவளை விழுந்து விழுந்து கவனித்துக் கொண்டிருந்தான்.

ஐஸ்வர்யாவின் தேகம் முழுவதும் பற்றிக் கொண்ட உணர்வு. அவனது கவனிப்பும்..., அக்கறையும் தனக்கு மட்டுமே வேண்டும் என்ற உரிமையும், பொறாமையும் தலை தூக்க..., தன்னை கட்டுப்படுத்த முடியாமல் திண்டாடினாள்.

அவனோ..., “டேய்..., உன்கிட்டே ஜூஸ் பாட்டிலை கொண்டுவான்னு மட்டும் தானே சொன்னேன். உன்னை யார்டா அதை ஓப்பன் பண்ணி எடுத்துட்டு வரச் சொன்னது...? இடியட்..., எதை எப்படி செய்யணும்னு சுயமாத்தான் தெரியாதுன்னா..., சொன்னால் கூடவா தெரியாது. இப்போ பார்...”, அடிக்குரலில் மற்றவருக்கு கேட்காத வகையில் குணாவை கடிந்துகொள்ள, அவனோ பரிதாபமாக விழித்தான்.

“ஐயோ சார்..., நான் ஹெல்ப் பண்ணத்தான்...”, அவன் திணற...,

“அந்த அறிவு கூட இல்லாமலா நான் அப்படியே எடுத்துட்டு வான்னு சொன்னேன். நீயும் உன் ஹெல்ப்பும். இப்போ பார்..., அவ என்ன மூட்க்கு மாறப் போறாளோ...? என் கண்ணு முன்னாடி நிக்காதே போ...”, அதே குரலில் உறுமினான்.

எப்பொழுதுமே லேபர் தவறு செய்தால் பாசம் கலந்த கண்டிப்பையே வெளிப்படுத்துபவன்..., இன்று அந்த மனீஷாவுக்காக கோபம் கூட்ட, ஏற்கனவே அவளை கவனித்ததில் கோபமானவள், அவன் கோபமும் சேர, கொந்தளிப்புக்கே போனாள்.

அதே நேரம், மனீஷா வர..., “மனீஷா..., ஓகே..., பாவம் சின்னப் பையன் அதான்...”, உரைத்தவன், அருகில் இருந்த சிறிய பாட்டின் தண்ணீரை எடுத்துக் கொடுத்தான்.

“இட்ஸ் ஓகே வினித்..., நான்தான் கொஞ்சம் கேர்லெஸா வாங்கிட்டேன். ஜஸ்ட் கையில் தான் கொட்டிடுச்சு. அதான் என் ட்ரெஸ் ஸ்பாயில் ஆகாமல், நீங்க ஜூஸ் பாட்டிலை வாங்கிட்டீங்களே...”, முகம் கொள்ளா புன்னகையோடு அவன் அருகில் சென்று அமர, பார்த்துகொண்டிருந்த

ஐஸ்வர்யாவுக்கு..., அவளை அப்படியே இழுத்து நாலு அறை விடவேண்டும் என்ற வேகம் எழுந்தது.

“ஹம்..., உங்களுக்கும் ஜூசுக்கும் செட் ஆகலை. சூடா காபி குடிக்கறீங்களா? சரவணா பவன் காபி ரொம்பவே நல்லா இருக்கும்...”, அவன் சொன்ன விதமே கண்டிப்பாக குடித்தே ஆகவேண்டும் என்ற விதத்தில் ஒலிக்க, அந்த காபியைப் பிடுங்கி அவன் தலையிலேயே கவிழ்க்கும் வேகம் எழுந்தது ஐஸ்வர்யாவுக்கு.

“நீங்க இவ்வளவு சொல்லும்போது..., கண்டிப்பா குடிக்கறேன்...”, அவள் உரைக்க, கார்த்திகை வினித் பார்க்க, அடுத்த நொடியில் குமார் பிளாஸ்க்குடன் அவர்கள் முன்னால் நின்றான்.

குமார் காபியை ஊற்ற, அதை தானே எடுத்து அவளுக்குக் கொடுத்தான் வினித். இப்பொழுது தன் கோபத்தை எப்படி கட்டுப்படுத்திக் கொண்டோம் என்றே தெரியாமல் எரிமலையாகவே நின்றாள் ஐஸ்வர்யா.

அங்கிருந்த யாருமே அவளை ஒரு பொருட்டாக கருதாதது போன்ற உணர்வு. அனைவரும் மனீஷை கவனிப்பதை பார்த்தவளுக்கு, அதுவும் வினித் அவளை பார்ப்பதையே வெறுப்பவள்போல், தன் முகத்தை திருப்பிக் கொண்டாள்.

கார்த்திக் ஐஸ்வர்யாவின் அருகில் வந்தவன்..., “மேம்..., காபி...?”, அவன் கேள்விக்கு..., வாயை மீறி வார்த்தைகள் சிதறிவிடாமல் இருக்க, அவள் பாடே படவேண்டி இருந்தது. இவ்வளவு உணர்வுக் குவியலிலும், அதை தன் முகத்துக்கு எட்ட விடாமல் இருந்ததுதான் அவளது விந்தையே.

“வேண்டாம்...”, அவள் குரல் அந்த இடத்துக்கே ஒட்டாமல் ஒலிக்க, கார்த்திக் சாதாரணமாக நகர்ந்துவிட, சட்டென அவளை நேருக்கு நேராகப் பார்த்தவன், அவள் முகத்தில் என்ன கண்டானோ..., “மனீஷா..., எக்ஸ்கியூஸ்மீ...”, அவளிடம் அனுமதி வேண்டிவிட்டு..., தன் இருக்கையை விட்டு எழுது ஐஸ்வர்யா அருகில் வந்தான்.

“மேம்..., ஒன் மினிட்...”, அவள் எதிரில் வந்து நிற்க, ‘ஏண்டா..., அவளை மனீஷா..., மனீஷான்னு கொஞ்சுற..., நான் உனக்கு மேடமா...?’ எண்ணியவள்..., அவன் மட்டும் உணரும் விதத்தில், அவனை உக்கிரமாக முறைத்தவள்..., மறுக்காமல் அவனோடு சென்றாள்.

அவள் அறைக்கு வந்தவர்களுக்கு அங்கே ஒரு சங்கடமான அமைதி நிலவ, “மேம்.., ஆடிட் நல்லபடியா போயிட்டு இருக்கு...”, எதையாவது சொல்ல வேண்டுமே என உரைத்தான்.

“பாத்தேன்..., பாத்தேன்...”, கடுப்பான அவள் பதிலில்..., வினித் வானத்தில் பறந்தான்.

‘பொறாமையாடி பொண்டாட்டி...’ மனதுக்குள் அவளை கொஞ்சியவன், “ஓ..., ப்ரேக் டைம் முடியப் போகுது..., நான் அங்கே இருந்தால் நல்லா இருக்கும்...”, அனுமதியா..., அறிவிப்பா என்று தெரியாத விதத்தில் அவன் உரைக்க..,

“ஏன்..., அவ காத்திருக்க மாட்டாளோ..., ஐயாவுக்கு போக அவ்வளவு அவசரம்...”, இவ்வளவு நேரம் இருந்த பொறுமை காற்றில் பறக்க கத்தியே விட்டாள்.

அவள் கத்தி முடித்து உக்கிரமாக அவனை முறைக்க, அவ்வளவு நேரம் அவன் முகத்தில் இருந்த விரைப்பான பாவனை தொலைந்து போக, அவன் முகத்தில் படர்ந்த மென்மையைப் பார்த்தவளது கோபம் கூட ஓடியே போனது.

அவனையே விழி எடுக்காமல் பார்த்துக் கொண்டிருக்க..., “நீ மட்டும் ஓகே சொன்னால்..., காபியை உனக்கு ஊட்டி விடவே நான் தயாரா இருக்கேன் ஐஷு...”, அவள் அருகில் நெருங்கியவன், தன் மொத்த காதலையும் குழைத்து..., அவள் காதுக்கு அருகில் குனிந்து மிகவும் மெதுவாக உரைக்க, அவன் குரலும், பார்வையும், அவன் அருகாமையும் ஒருவித மாய உலகத்துக்குள் அவளை இழுத்துச் செல்ல..., அந்த இனிமையை விழி மூடி அனுபவித்தாள்.

இன்னும் எதையோ வேண்டி அவள் மொத்த தேகமும் நடுங்க..., எதுவும் நிகழாமல் போகவே..., விழி திறந்தவளுக்கு, வெறுமையான அறை முகத்தில் அறைய..., அந்த சூழலை தாங்க முடியாமல் அவள் கண்கள் கலங்கும்போல் இருந்தது.

தன் நிலையை உணர்ந்தவளுக்கு..., ஒரு நொடி எதுவும் புரியவில்லை. ‘நானா..., இப்படி..., நானா இப்படி எண்ணினேன்...? எதையோ அவனிடம் யாசித்தேன்...? என்னிடம் கைநீட்டி சம்பளம் வாங்கும் அவனிடம் போய்..., சீ..., என் புத்தி ஏன் இப்படிப் போனது...’, தன் உணர்வை மறைக்க அவள் தன் ஈகோவை போர்த்திகொள்ள..., அவள் நேசம் அடிமனதில் சென்று பதுங்கிக் கொண்டது.

அதே நேரம்..., அவன் தன் மனதை கண்டுகொண்டான் என்ற எண்ணம் அவளை நிலை கொள்ளாமல் செய்ய..., ‘ச்சே..., என்னைப்பற்றி என்ன எண்ணியிருப்பான்...? இனிமேல் அவன் எப்படி என்னிடம் நடந்து கொள்வான்? அவன் மனதில் நான் கீழிறங்கி போனேனோ...? என் மதிப்பை எப்படி மீட்டெடுப்பேன்...’, தனக்குள் போராடினாள்.

ஒரு இனிமையான உணர்வை அதன் போக்கி அனுமதித்து, வாழ்க்கையை அழகாக்காமல்..., அதை நசுக்கி..., ஒரு உண்மையான நேசத்தை கொல்லும் முடிவிற்கு அவள் ஈகோ அவளைத் தள்ள..., பலியாகப் போவது யார்...?

***

# பகுதி - 20.

ஆடிட் அட்டகாசமாக முடிந்திருக்க..., அவர்கள் கம்பெனி வரலாற்றிலேயே மொத்தம் ஐந்தாயிரம் காப்பி மட்டுமே ஷாட்டேஜ் ஆக..., அதுவும் கூட ஒரு டைட்டில் ஐந்தாயிரம் காப்பி அதிகம் காட்டவே..., ஒரு புத்தகம் கூட மிஸ் ஆகாமல் கச்சிதமாக அந்த ஆடிட் நிறைவடைந்து இருந்தது.

ஆடிட்டர் மோகனே தன் வாழ்த்துக்களை நேரடியாக ஐஸ்வர்யாவிடம் அறிவிக்க, “வினித் மட்டுமே இதற்கு காரணம்..., அவர் மட்டும் இல்லன்னா..., இந்த ஆடிட் இவ்வளவு அழகா முடிந்தே இருக்காது...”, பாராட்டினார்.

அவர் அத்தோடு நிறுத்தியிருந்தால் கூட பரவாயில்லை..., மாறாக..., “ஸ்ரீராம்..., நீங்க முந்திகிட்டீங்க. அப்படி மட்டும் இல்லன்னா..., என் மக மனீஷாவுக்கு கண்டிப்பா வினித்தை நான் முடித்திருப்பேன். எப்பவுமே நீங்க லக்கிதான்...”, அவர் உரைக்க..., ஐஸ்வர்யாவின் விழிகள் அதிர்ச்சியை பிரதிபலித்தது.

மனீஷாவோ புன்னகையோடு தந்தையை ஏறிட்டவள்..., “டேட்...”, ஒரு மாதிரி இழுத்து சிணுங்கியவள்..., வினித்தைப் பார்த்து முழுப் புன்னகையைச் செலுத்த..., எழுந்து அவளை அடிக்கத் துடித்த கரத்தை அழுந்த மூடிக் கொண்டாள் ஐஸ்வர்யா.

அவள் புன்னகையும்..., அதற்கு குறையாத புன்னகையை வினித்தும் செலுத்த, உள்ளுக்குள் தகதகவென எரிந்தது. ‘கட்டுன பொண்டாட்டி நான், என்கிட்டே மூஞ்சைக் காட்டுவான். இவகிட்டே பல்லே சுளுக்குற அளவுக்கு என்ன இளிப்பு வேண்டிக் கிடக்கு...’, மனம் கொதித்தாள்.

தான் ஒரு நாள் கூட அவனிடம் பேசவோ, சிரிக்கவோ முயன்றதில்லை என்பதை வசதியாக மறந்து போனாள்.

“நீங்க சொல்றது சரிதான் மோகன். நான் மட்டும் இல்லை..., என் பொண்ணும் கொடுத்து வைத்தவள் தான்...”, ஸ்ரீராம்

உரைக்க, முகத்தை சாதாரணமாக வைக்க அவள் திண்டாட வேண்டி இருந்தது.

வினித்தை மற்றவர் பாராட்டுவது மனதுக்குள் சந்தோஷத்தை கொடுத்தாலும், அவனை தட்டிவை என அவள் ஈகோ அவளைப் பிடித்து ஆட்டியது.

அனைத்தும் முடிந்து அவர்கள் கிளம்ப..., வினித்தை அழைத்தாள் ஐஸ்வர்யா. ஏற்கனவே அங்கே நடந்த பேச்சால் அவள் முகம் மாறியதை உணர்ந்தவனாயிற்றே. ‘என்ன சொல்லப் போறாளோ...?’ யோசனையோடு அவள் முன்னால் அமர்ந்தான்.

“வக்கீல் போன் பண்ணியிருந்தார். இன்னைக்கு கேஸ் ஹியரிங் வருதாம். கொஞ்சம் என்னன்னு பாத்துட்டு வா...”, அவன் முகம் பார்க்காமல் உரைத்தாள்.

“என்ன..., கேஸ் ஹியரிங்..., நான் ரிப்போட் கொடுக்கறேன்...”, உரைத்தவன், கோபமாக வெளியேறினான். அவன் கோபம், அவன் நடையிலேயே தெரிந்தது.

அருகில் இருந்து அதைப் பார்த்துகொண்டிருந்த ஸ்ரீராம்..., “கேஸ் ஹியரிங்ன்னா என்னன்னு நினைத்த..., இப்போ போனால் எப்போ கூப்பிடுவாங்க என்ன ஏதுன்னே தெரியாது. அதுக்குபோய்...”, அவர் வருத்தபட்டார்.

“ஐ நோ டேட்...”, கோபமாக உரைத்தவள்..., “அதான் உங்க மாப்பிள்ளை அப்படியே எல்லாத்தையும் பக்காவா முடிக்கறாரே..., இதையும் முடிக்கட்டும்...”, அசால்ட்டாக உரைத்தாள். மிகவும் கவலையானார்.

அவனோ..., கார்த்திக்கை அழைத்து..., ஆன் டியூட்டியில் நீதிமன்றத்துக்கு அனுப்ப..., அவன் செல்லாததைப் பார்த்தவள்..., “நான் சொன்ன விஷயம் என்ன ஆச்சு...? போகலையா...?”.

“உங்களுக்குத் தேவை ரிப்போட்..., அது கிடைக்காமல் போனால் என்னன்னு கேளுங்க...”, விறைப்பாகவே பதில்

கொடுத்தான்.

“ரிப்போட் கொடுத்தால் போதுமா? அப்போ என் பேச்சுக்கு என்ன மதிப்பு”, அவனிடம் சாடினாள்.

“இங்கே சிலருக்கு அவங்க பதவிக்கே மதிப்பில்லாத பொழுது..., பேச்சுக்கு மதிப்பு கொடுக்காததைப் பற்றி பேசுறது ஆச்சரியமா இருக்கு...”, அவன் நக்கலாக உரைக்க, அவள் முகம் கருத்துப் போனது.

அவனை தன்னால் அடக்கமுடியவில்லையே என்ற வெறி அவள் மனதுக்குள் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே போனது. அவள் ஈகோவை தான் தூண்டி விடுகிறோம் என்பதை அறியாமலேயே..., அந்த வேலையை தாராளமாக செய்து கொண்டிருந்தான் வினித்.

தன் மகளைப் பற்றி முழுதாக தெரிந்த ஸ்ரீராமுக்கு, வினித்தி செய்கையை தடுக்கவும் முடியவில்லை..., ‘என் மகளிடம் அடங்கிப் போனால்தான் அவளை அடக்க முடியும்..’ என சொல்லவும் முடியாமல் நடுவில் திண்டாடிப் போனார்.

ஆனால்..., ஒரு முறையாவது மகளிடம் பேசவேண்டும் என முடிவெடுத்தவர், அதற்கு சரியான சந்தர்ப்பம் எதிர்பார்க்க, அந்த சந்தர்ப்பம் அமையப்போவது ஒரு இக்கட்டான சூழலில்தான் என்பது தெரியாமல், தன் வேலையைத் தொடர்ந்தார்.

அடுத்த நாட்களிலும் அலுவலகத்தில் மோதலும்..., வெற்றி வினித்தின் பக்கமுமாக அமைய..., ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் அவனை அடக்கி ஆள்வது என்ற முடிவில் அவள் தீவிரமானாள்.

அந்த சந்தர்ப்பம் அவளுக்கு அடுத்த நாளே அமைந்தது. இன்னும் இரண்டு நாளில் யூனியன் மீட்டிங் என முடிவாக, அவர்கள் ஊதிய உயர்வைப் பற்றி ஆலோசிக்க, வினித், ஸ்ரீராம், கார்த்திக், ஐஸ்வர்யா அனைவரும் கூடினார்கள்.

கான்பிரன்ஸ் ஹாலில் அனைவரும் இருக்க..., அங்கே நுழைந்த ஐஸ்வர்யா.., இருக்கையில் அமர, “இந்த மீட்டிங் எதுக்குன்னு உங்களுக்கே தெரியும். உங்க ஒப்பீனியன் என்ன...?”, பேச்சை துவங்கினாள்.

“இதில் எங்க ஒப்பீனியன் தேவையே இல்லை. நிர்வாகம், ஊழியர்கள் சம்பந்தப்பட்டது. நிர்வாகம் எவ்வளவு கொடுக்கப் போகுது? அவங்க டிமாண்ட் என்ன...? இதுக்கு ரெண்டு மூணு சிட்டிங்காவது அவங்களோட பேசினால் தான் தீர்வு கிடைக்கும்...”, வினித் தெளிவாக உரைத்தான்.

அவன் பேசி முடிக்கவே..., அவனைப் பார்த்து நக்கலாக சிரித்தவள், “இதை ஒரே சிட்டிங்கில் நான் முடித்திருக்கிறேன்...”, பெருமையாக உரைத்தாள்.

“ம்..., கேள்விபட்டேன். அவங்க டிமாண்ட் ஒன்பது ப்ரசன்ட்..., நீங்க லவன் ப்ரசண்டேஜ்ல முடிச்சீங்கன்னு. ப்ரம்மாதம்...”, அவன் குரலில் வழிந்த நக்கலைப் பார்த்து அவள் பிபி எகிறியது.

“ஏய்..., நான் இந்த கம்பெனியின் எம்டி..., என் முடிவையே விமர்சனம் பண்றியா...?”, எகிறினாள்.

“எனக்குத் தெரிஞ்சு எம்டின்னா..., கம்பெனிக்கு எவ்வளவு லாபம் சம்பாதிக்கலாம்..., லேபர்ட்ட எப்படி வேலை வாங்கலாம்..., அதை அவங்களுக்கே தெரியாமல் எப்படி செயல்படுத்தலாம்..., இப்படி யோசிப்பாங்க.

“ஆனா..., இந்த கம்பெனியின் எம்டி..., ம்...”, உதட்டை வளைத்து..., ப்ரம்மாதம் என்ற விதத்தில் வளைக்க..., பார்த்துகொண்டிருந்த கார்த்திக்கும், ஶ்ரீராமும் திகைத்தார்கள் என்றால்..., ஐஸ்வர்யா தன் எதிரில் இருந்த ஃபயிலை அவனை நோக்கி வீசியே இருந்தாள்.

தன்னை நோக்கி பாய்ந்து வந்த ஃபயிலை, இடக்கையால் அவன் அசால்ட்டாக தடுக்க..., கீழே விழுந்து அதில் இருந்த பேப்பர்கள் அனைத்தும் சிதறியது.

“தேவி...”, ஸ்ரீராமின் குரல் அவளை கண்டிக்க..., “மேம்..., திஸ் இஸ் டூ மச். ஒரு கம்பெனி மீட்டிங்கில், விபியை இப்படித்தான் நீங்க அவமானப்படுத்துவீங்களா? ஒரு விபிகே இங்கே இவ்வளவுதான் மதிப்பென்றால்..., இதை என்னால் ஒத்துக்கவே முடியாது. நீங்க மன்னிப்பு கேட்டே ஆகணும்...”, தன் இருக்கையை உதறிவிட்டு எழுந்தே விட்டான் கார்த்திக்.

“வாட்...”, மன்னிப்பு என்ற வார்த்தையை அவள் எதற்காகவும் பயன்படுத்தியது கிடையாது. அப்படி இருக்கையில்..., கோபம் குறையாமல் கத்தினாள்.

“தேவி..., அவளுக்குப் பதிலா நான் மன்னிப்பு கேட்டுக்கறேன்...”, ஸ்ரீராம் உரைக்க.., “டேட்...”, அவள் மறுத்து குரல் எழுப்பினாள்.

“உன்னை அமைதியா இருக்கச் சொன்னேன்...”, ஸ்ரீராம் நிலைமையை சம்மாளிக்க முயன்றார்.

“இதை ஒத்துக்க முடியாது சார்...”, கார்த்திக்கும் விடுவதாக இல்லை.

இப்பொழுது அவள் பார்வை வினித் பக்கம் திரும்ப, அதற்காகவே காத்திருந்தவன் போல்..., “டேய் மச்சான்..., விடுடா..”, இருக்கையில் இருந்து எழுந்தவன், நண்பனின் தோளை அழுத்திவிட்டு..., ஸ்ரீராமைப் பார்த்து, அவளை அழைத்துக்கொண்டு சென்றுவிடுமாறு ஜாடை காட்ட, அதைப் புரிந்தவராக அவளை அழைத்துக்கொண்டு வெளியேறினார்.

அவள் அறைக்குத் திரும்பியவளுக்கு..., அங்கே இருக்கவே முடியவில்லை. கார்த்திக்கை ஒரு கை பார்த்துவிடும் வேகம்..., “எவ்வளவு இருந்தால், எண்ணைப் பார்த்து மன்னிப்பு கேட்கச் சொல்வான்...? நான் ஸ்ரீ ஐஸ்வர்யா தேவி..., அவனுக்கு புரிய வைக்கறேன்...”, கருவினாள்.

“ம்ச்..., புரியாமல் உளறாதே தேவி. நீ செய்து வைத்த செயலின் கனம் உனக்குப் புரியவே இல்லையா? அது

ஒண்ணும் நம்ம வீட்டு கூட்டம் இல்லை, கம்பெனி மீட்டிங்...", அவளை தேக்கினார்.

"அதுக்கு...? அவன் என்னை மன்னிப்பு கேக்கச் சொல்வானா?", அவள் அதை மட்டுமே சிந்தித்தாள்.

"ஆண்டவா...", புலம்பியவர் இருக்கையில் சென்று அமர..., "முடியாது..., என்னால் இதை விட முடியாது...?", அறையை விட்டு வெளியேறி, கான்பிரன்ஸ் ஹாலுக்கு விரைந்தாள்.

அங்கே மூடிய கதவையும் மீறி, கார்த்திக்கின் குரல் அவள் காதில் அறைந்தது. "நான் கேக்குறது உன் காதில் விழுதா இல்லையா? பொறுமைக்கும் ஒரு எல்லை இருக்கு வினித். உன் வீட்டு பிரச்சனை நாலு சுவத்துக்குள்ளே இருக்கும் வரைக்கும் பரவாயில்லை. ஆனா..., இது ஆபீஸ் இங்கே நீ விபி..., உனக்கு அது ஞாபகம் இருக்கா இல்லையா...?", கார்த்திக் இவ்வளவு பேசுவான் என்பதையே ஐஸ்வர்யா அப்பொழுதுதான் அறிந்தாள்.

"எனக்கு நல்லாவே ஞாபகம் இருக்கு...", பொறுமையாகவே பதில் கொடுத்தான்.

"அப்படி இருந்துமா பேசாமல் இருக்கிறாய்...? உன் தன்மானத்தை, சுய மதிப்பை, கௌரவத்தை எல்லாத்தையும் இழந்துட்டு..., அப்படியென்ன நீ சாதிக்கப் போகிறாய். உன் நேசம் புரிந்த ஒருத்தருக்காக இதைச் செய்கிறாய் என்றால் கூட பரவாயில்லை.

"ஆனா..., ஒரு சுயநலப் பிறவிக்காக...", அவன் உரைத்த அடுத்த நிமிடம்,

"அவ என் மனைவி கார்த்திக்....", முதல் முறையாக வாய் திறந்தான்.

"அந்த நினைப்பு அவங்களுக்கு இருக்கணும்...", அவ்வளவு கோபத்திலும், அவளை மரியாதையாய் அழைக்கும் நண்பனின் செய்கையை குறித்துக் கொண்டான்.

"அது என்னோட கவலை..., நீ இதில் தலையிடாதே...", முதல் முறையாக பிரித்துப் பேசினான். அதை உணர்ந்த கார்த்திக்

திகைத்துப் போனான். ஏற்கனவே அந்த கேஸ் விஷயத்தில் நடந்ததும் அவனுக்குத் தெரியுமாகையால், ஐஸ்வர்யா வேண்டுமென்றே இதையெல்லாம் செய்வதை உணர்ந்ததாலேயே கோபம் கொண்டான்.

அது இவனுக்கும் தெரியாதா என்ன...? அவன் அதிர்ச்சியைக் கண்டாலும், வினித் அழுத்தமாகவே நிற்க, “அப்படின்னா..., இப்போ நான் மூணாவது மனுஷன் ஆயிட்டேனா...? இப்படி ஒரு பெண்ணுக்காக...”, அவன் வார்த்தையை முடிக்கும் முன்பே...,

“என்னோட மொத்த வாழ்க்கையும் அவதான் கார்த்திக். இதற்குமேல் நீ ஒரு வார்த்தை அவளைப் பற்றி பேசினாலும்..., நம்மோட நட்பை நான் இங்கேயே முறித்துக்கொள்ள வேண்டி இருக்கும்...”, அவன் குரலில் தெரிந்த வலியில், அடுத்த வார்த்தையை அவனால் பேச முடியவில்லை.

வெளியே இவர்கள் பேச்சை கேட்டுகொண்டிருந்த ஐஸ்வர்யாவுக்கு, தான் எப்படி உணர்கிறோம் என்றே தெரியவில்லை. அவன் பேச்சு இதயத்துக்குள் நுழைந்து பல அதிர்வுகளை ஏற்படுத்தியது மட்டும் உண்மை.

அவள் மேலும் சிந்திக்க முயல்கையில்..., கதவைத் திறந்துகொண்டு வெளியேறினான் கார்த்திக். அங்கே அவளை எதிர்பாராத அவன் திகைக்க, தன்னை நொடியில் மீட்டவள்..., “சரியான மூக்கறுப்பு போல...?”, நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு, கர்வமாக அவள் வினவ,

“என் மூக்கை மட்டும் இல்லை. அவன் என் கழுத்தையே அறுத்தாலும் நான் சந்தோஷமா செத்துப் போவேன். இப்போ கூட..., அவனோட மொத்த வாழ்க்கையும் நீங்கதான்னு சொல்றான். அது உங்களை பாதிக்கலை, என்னை அவன் திட்டியதுதான் உங்களுக்கு முக்கியமா போச்சு இல்ல..., அவன் வாழ்க்கையை விட, என் நட்பு ஒன்றும் அவ்வளவு பெரிதில்லை....”, கலங்கிய தன் கண்களை அவளுக்கு காட்டாமல் மறைத்தவன் விலகிச் சென்றான்.

ஏனோ கன்னத்தில் அறை வாங்கிய உணர்வு. ஏதோ கொஞ்சமாக அவன்பால் உருகத் துவங்கிய மனநிலை சட்டென மாறி..., ‘இவனிடம் பேச்சு கேட்கும்படியாக என்னை ஆக்கி விட்டானே...’, அதற்கும் கோபம் தான் வந்தது.

‘என்னிடம் சொல்ல வேண்டியதை, இவனிடம் சொல்கிறானே...?’, எதற்காக இந்த நினைப்பு வந்தது என்பதை அவள் ஆராய தயாராக இருக்கவில்லை.

கோபமாக தன் அறைக்குத் திரும்பியவள்..., அமைதியாகவே அமர்ந்து கொண்டாள். மூளை எதை எதையோ சிந்திக்க முயல, எதையும் ஆராய பிடிக்காமல் அமர்ந்துவிட்டாள்.

அன்று யூனியன் மீட்டிங் நாள்..., காலையில் அலுவலகம் கிளம்புகையிலேயே, ஐஸ்வர்யாவை எதுவும் பேசவேண்டாம் என சொல்லிவிட்டான். எதற்கு..., என கேட்க துடித்த நாவை அடக்கியவள்..., ‘அங்கே போய் பார்த்துகொள்வோம்...’ என விட்டுவிட்டாள்.

யூனியன் வக்கீல்..., இவர்களது வக்கீல்..., யூனியன் தலைவன், செயலர், பொருளர்..., வினித், ஐஸ்வர்யா..., கார்த்திக்..., ஸ்ரீராம்..., என அனைவரும் குழுமி இருக்க...,

“உங்க எதிர்பார்ப்பு எவ்வளவுன்னு சொல்லுங்க...”, பேச்சை துவங்கினார் கம்பெனி வக்கீல்.

“போன வருஷம் பதினொன்னு ப்ரசன்ட் தந்தீங்க. ஆனா..., இந்த வருஷம் எங்களுக்கு அதைவிட அதிகம் வேணும். உங்களுக்கே தெரியும்..., விலைவாசி முதல்..., பெட்ரோல் விலை வரை எல்லாம் ஏறிப் போச்சு. சோ..., எங்க எதிர்பார்ப்பு பதினைந்து சதவீதம்....”, யூனியன் தலைவன் ஹரி அசால்ட்டாக உரைக்க, அங்கிருந்த அனைவருமே திகைத்தார்கள்.

“யூனியன் லீடர் அவரோட எதிர்பார்ப்பை சொல்லிட்டார். இப்போ நீங்க சொல்லுங்க..., உங்களால் எவ்வளவு கொடுக்க முடியும்...?”, வக்கீல் கேட்க,

“வக்கீல் சார்..., அவங்க கேக்குறதை நாம அப்படியே தூக்கி கொடுக்க முடியுமா? அதிலும் விலைவாசி அது இதுன்னு காரணம் எல்லாம் சொன்னாங்க. எல்லாம் சரிதான்..., இப்போ..., ஒரு நாள்..., ஒரு கோடி ரூபாய் பில் பண்ணணும்னா..., அவங்க ஆட்கள் எவ்வளவு ஆடரை முடிப்பாங்கன்னு நீங்களே கேட்டு சொல்லுங்க...”, வினித் இருக்கையில் சாவதானமாக அமர்ந்துகொண்டு கேட்டான்.

“நாம இப்போ இன்கிரிமென்ட் பத்திதான் பேச வந்திருக்கோம். அப்படியிருக்கும்போது..., எதுக்கு தேவையில்லாத பேச்சு...?”, ஹரி குரல் உயர்த்தினான்.

ஐஸ்வர்யாவின் முகமும் அதே கேள்வியை வெளிப்படுத்த, “அட..., அப்போ நீங்களும் விலைவாசி எல்லாம் பத்தி பேசியிருக்கக் கூடாது. பேச்சுவார்த்தைன்னு வந்துட்டா..., கேட்ட கேள்விக்கு பதில் வந்துதான் ஆகணும்...”, தன் நிலையை அவன் மாற்றிக் கொள்ளவே இல்லை.

அவர்களது வக்கீலும்..., “நீங்க சொல்லுங்க ஹரி..., நம்ம பக்கம் பதில் சொல்லாமல் இருக்க முடியாது...”, அவர் உரைக்கவே,

“முப்பது லட்சத்தில் இருந்து, நாற்பது லட்சம் வரைக்கும் பில் பண்ணுவோம்...”, அவன் குரல் சுருதி இறங்கியது.

“வக்கீல் சார் கேட்டீங்களா...? ஒரு கோடி ரூபாயில் முப்பது லட்சம் மட்டும் அவங்க பில் செய்தால்..., மீதி எழுபது லட்சத்தை நாங்க காண்டிராக்ட் பசங்களை வைத்து செய்ய வேண்டி இருக்கு. அதிலும்..., அவங்க கூலி, அவங்க ஓவர் டைம் வேலை பார்த்தால் பேட்டா..., சாப்பாடு..., இப்படி கம்பெனிக்கு மூணு செலவு.

“அதாவது..., இவங்களுக்கு சம்பளமும் கொடுத்து, அதில் இப்போ இன்கிரிமென்ட் பதினைந்து சதவீதம் கொடுத்து, மேலே அவங்க செலவை எல்லாம் போட்டால்..., கம்பெனிக்கு நஷ்டம் தான் வரும். இதில் எங்கே லாபம் வர, இவங்களுக்கு இன்கிரிமென்ட் கொடுக்க...?”, அவன் பேச்சு, யூனியன் ஆட்களை எரிச்சல் மூட்டியது.

“அதுக்கு..., அப்போ இங்கிரிமெண்டே கிடையாதா...?”, ஹரி கோபமானான்.

“கிடையாதுன்னு நான் எப்போ சொன்னேன்...? உங்க தகுதிக்கும், உழைப்புக்கும் ஏற்ற விதத்தில்..., மூணு சதவீதம் மட்டும்தான் கொடுக்க முடியும்...”, அவன் உரைத்து முடிக்கவே, இருந்த இருக்கையை உதறிவிட்டு எழுந்தே விட்டான் ஹரி.

“என்ன..., மூணு ப்ரசண்டா..., என்ன பிச்சை போடுறீங்களா? இதுக்கு நாங்க ஒத்துக்கவே முடியாது. நாங்க போறோம்...”, அனைவரும் கிளம்பியே விட்டார்கள்.

அவர்களது வக்கீல் மட்டும் அங்கே தேங்க..., மற்றவர் அனைவரும் வெளியேறி இருந்தார்கள். வினித் பேசியது சரியானது என்றே மற்றவர்கள் அனைவரும் நினைத்தார்கள்.

ஆனால்..., ஐஸ்வர்யாவோ..., “வாட் தி ஹெல் இஸ் திஸ். நான் உன்கிட்டே என்ன சொன்னால்.., நீ என்ன செய்து வச்சிருக்க...? நயன் ப்ரசன்ட் கொடுக்கதா நான் முடிவு செய்ததை மாற்ற உனக்கு யார் அதிகாரம் கொடுத்தது?

“என்னடா இன்னும் உன் புத்தியை காட்டலையேன்னு நினைத்தேன். சரியான நேரத்துல காட்டிட்ட இல்ல..., நிர்வாகம் இன்னும் என் கையில் தான் இருக்கு, அது உனக்கு ஞாபகம் இருக்கா...? யாரைக் கேட்டு நீ இங்கே பேசின...? இப்போ அவங்களை பேச்சு வார்த்தைக்கு மீண்டும் யார் அழைப்பா? உன்...”, அவள் பேசிக்கொண்டே போக, இருக்கையில் இருந்து எழுந்தவன், அதை எட்டி உதைக்க..., அந்த நில்கமல் சேர் நொறுங்கியே போனது.

“ஷாட் அப்..., இன்னும் ஒரு வார்த்தை பேசினால்..., நான் மனுஷனாவே இருக்க மாட்டேன்....”, அவனது கோபத்தில்.., அந்த கட்டிடமே ஒரு நொடி குலுங்கியது.

“மேம்..., அவர் சரியாத்தானே பேசினார்...? அதுவும் உங்களுக்கு பேவரா பேசிய அவரை நீங்க அவமானப்படுத்தியது சரியே இல்லை. இந்த வருஷம்

பேச்சுவார்த்தை சரியா துவங்கி இருக்குன்னு நான் நினைக்க, நீங்க..., நான் நாளைக்கு வரேன்...”, யூனியன் வக்கீல் கிளம்பிவிட்டார்.

கார்த்திக்கும் கிளம்பிவிட, ஸ்ரீராம் அவளை வேதனையான பார்வை பார்த்துவிட்டு கிளம்பிவிட்டார். அப்படியே இருக்கையில் அமர்ந்து விட்டாள். தான் பேசியது அதிகமென்று தெரிந்தாலும், அதை ஒத்துகொள்ள ஈகோ இடம் கொடுக்கவில்லை.

நேராக கடற்கரை சென்ற வினித், கையை தலைக்கு அணைவாக்கி படுத்துவிட, விடாமல் ஒலித்த அலைபேசியை எடுத்தவன், “ப்ளீஸ் மாமா..., என்னை கொஞ்சம் தனியா விடுங்க...”, பட்டென உரைத்தவன் அலைபேசியை வைத்துவிட்டான்.

மதியம் கடந்து, மாலை மங்கி, இரவு உணவையும் முடித்து அறைக்கு வந்த பிறகும் வினித் வீட்டுக்கு வராமல் போக, முதல் முறையாக சற்று தவித்துப் போனாள் ஐஸ்வர்யா.

அதை மறைத்துக் கொண்டவள், ‘தானா வருவான்..., நீ தூங்கு...’ தனக்குத் தானே உரைத்தவள், படுத்துக் கொள்ள, முயன்று உறங்கியவளுக்கு, அடுத்த அரைமணி நேரத்தில் உறக்கம் கலைய, அவள் கரம் தானாகவே அருகில் துழாவி, எப்பொழுதும் படுக்கும் விதத்தில், கையையும் காலையும் அருகில் போட, ஏதோ குழிக்குள் விழப்போகும் உணர்வில் சட்டென கண் விழித்தாள்.

‘அப்படியென்றால்...?’ நேரம் பார்த்தவள்..., அது பதினொன்று முப்பதைக் காட்ட, ‘அப்போ..., தினமும் அவன் மேல் தான் என் உறக்கமா?’ தன்னைக் கேட்டுக் கொண்டவள், அவன் தலைக்கு வைத்துப் படுக்கும் தலையணையை இறுக்கிக் கொள்ள, அதில் இருந்து வந்த அவன் வாசனை அவளை இம்சித்தது.

‘அவன் அருகில் வேண்டும்...’, அவளால் இருக்க முடியவில்லை. தன் அலைபேசியை எடுப்பதும், அவனுக்கு அழைக்க முடியாமல் சோர்வதுமாக சதிராட்டம் போட்டவள்...,

இறுதியாக..., தன்னை திடப்படுத்திக் கொண்டு, அவன் எண்ணை தன் அலைபேசியில் அழுத்த..., தன் அருகில்..., அதிர்வை வெளிப்படுத்திய தன் அலைபேசியை, தலையை சற்று திருப்பிப் பார்த்தான் வினித்.

‘wife காலிங்....’ எழுத்து மின்னி மறைய..., அவ்வளவு நேரமாக மனதை அழுத்திய ஏதோ ஒன்று சட்டென மறைய, அதை ஆன் செய்தவன் காதுக்கு கொடுக்க..., “இப்போ நீ வரல..., என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது...”, கோபமாக ஒலித்த ஐஸ்வர்யாவின் குரல் முடியும் முன்பே, அது கட்டான ஓசை கேட்டது.

‘இதைக்கூட கோபமாத்தான் சொல்லத் தெரியுமா?’ கேட்டுக் கொண்டவன், ‘அப்படி என்னதாண்டி உனக்கு கோபம்? உன்னை அடிமைப்படுத்திருவேன்னு பயப்படுறியா? ஆனா..., இப்போவே நான் இல்லாமல்தான் உன்னால் தூங்க முடியலை என்பதை எப்போ புரிஞ்சுக்க போற...’, பெருமூச்சை வெளியேற்றினான்.

அடுத்த அரைமணி நேரத்தில் அவள் அறையில் இருந்தான். அவன் குளித்து முடித்து, உடைமாற்றி வந்து தன் இடத்தில் படுக்கும்வரை அசையாமல் இருந்தவள், அடுத்த நிமிடம், அவன்மேல் கையையும் காலையும் பரப்பிக்கொண்டு, அவன்மேல் அழுத்தமாக படுத்துக் கொண்டாள்.

‘ஐயோ..., இம்சை பண்றாளே...’, புலம்பியவன்...., மறந்தும் அவளை வளைத்துக் கொள்ளவில்லை. அதை உணர்ந்தவளுக்கு..., கோபம் பெருகினாலும், அவன் அருகாமையை விட்டு விலக முடியாமல், இன்னும் அவனை இறுகிக் கொண்டாள்.

***

# பகுதி - 21.

மறுநாள் காலை எழுந்தவளுக்கு, முதல் முறையாக தன் கணவன் முகம் காண தயங்கினாள். நேற்றைய நிகழ்வை நினைத்தவளுக்கு, உள்ளுக்குள் மெல்லிய படபடப்பு.

அவனை அவ்வளவு தைரியமாக அழைத்துவிட்டு, அவன் வந்த பிறகு கொஞ்சம் கூட தயக்கமே இல்லாமல் அவன்மேல் படுக்கும்பொழுது கூட ஏற்படாத தயக்கம் இப்பொழுது எட்டிப் பார்த்தது.

‘நேற்று அவன் தன்னை விலக்கித் தள்ளியிருந்தால்...?’, அந்த நினைவே விதிர்க்கச் செய்தது. அப்படி மட்டும் நிகழ்ந்திருந்தால், தன்னால் அதை தாங்கியிருக்க முடியாது என்பது புரிய, அவளுக்கு தான் எப்படி உணர வேண்டும் என்பதே புரியவில்லை.

அவளைப் பொறுத்த மட்டில்..., அவள் பேசிய எதுவும் அவள் நினைவிற்கு வரவில்லை. எப்பொழுது அவனை அழைத்தாளோ..., அப்பொழுதே அனைத்தையும் மறந்துவிட்டாள். அதுவே அவள் அவனிடம் மன்னிப்பு கேட்டதற்கு சமம் என அவள் எண்ணினாள்.

இதுவரை யாரிடமும், எதற்காகவும் அவள் இறங்கிப் போயிராத காரணத்தால்..., அவனிடம் பேசியதே பெரிது எனக் கருதினாள். வீட்டுக்கு வந்துவிட்டால் அவன் தன்னிடம் பேசாதது அவளுக்கு பெரிய குறையாகவே இருந்தது.

இப்பொழுது கூட, படுக்கையை விட்டு நகராமலே..., அவன் எங்கே என்று பார்க்க, அவனது வழக்கமான உடற்பயிற்சியில் அவன் ஈடுபட்டிருந்தான். எப்பொழுதும் போல..., அவன் முரட்டு தோள்கள் அவளை நிலையிழக்கச் செய்ய, ஓடிபோய் அவன் முதுகில் தொற்றிகொள்ளும் வேகம் எழுந்தது.

அவன்மேல் முதுகில் தான் தொற்றிக் கொள்வது போலவும்..., அவன் அவளையும் தாங்கிக் கொண்டு தண்டால் எடுப்பதாகவும் கற்பனை செய்ய, அது ஏற்படுத்திய மாயம் சுகமாகவே இருந்தது.

அதிலும் கையில்லாத பனியன் போட்டு..., திரண்டிருந்த அவன் புஜங்களின் வலிமையைப் பார்த்தவளுக்கு..., அந்த கரங்கள் தன்னை தொட்டு தழுவி தூக்கிக் கொண்டால் எப்படி இருக்கும்...? சிறு ஏக்கம் பிறந்தது.

இதுவரை எதற்கும் ஏங்கியிராதவள், முதல் முறையாக அவனுக்காக ஏங்க..., தன்னை ஏங்க வைக்கும் அவன்மேல் செல்லக் கோபம் எழுந்தது. அவன் கைகளுக்குள் தான் சுருண்டுகொள்ள வேண்டும் என்பதைத் தாண்டி அவள் எதையும் சிந்திக்கவில்லை.

அதைப்பற்றி சிந்திக்கும் தைரியம் இல்லையா..., இல்லையென்றால் அவனோடு கலக்கும் அளவுக்கு அவளுக்கு விருப்பமில்லையா...? இல்லையேல் அவன் தகுதியை எண்ணித் தயங்குகிறாளா என்பது அவள் மட்டுமே அறிந்த உண்மை.

தன் சிந்தையிலே ஊறியவள்..., எப்பொழுது படுக்கையை விட்டு எழுந்தாள், எப்பொழுது அவன் அருகில் சென்றாள்..., எதுவும் அவள் அறியவில்லை. மாறாக..., தன் தண்டாலை முடித்தவன்..., வேகமாகத் திரும்ப, மொத்தமாக அவள்மேல் மோதினான்.

ஏற்கனவே மாய உலகில் சஞ்சரித்தவளின் கவனம் எங்கே இல்லாமல் போக, அவன் திரும்பிய வேகத்தை எதிர்பாராத அவளும், அங்கே அவள் நிற்பாள் என்பதை எண்ணியிராத அவனும், நேருக்கு நேராக மோதிக் கொண்டார்கள்.

நனவுலகில் இருந்த அவன் சட்டென நின்றுவிட, திடுக்கிட்ட அவளால் தான் நேராக நிற்க முடியாமல் போனது. தடுமாறி விழப் போனவள், இறுதி நொடியில் சுதாரித்து நின்றாள்.

அவனோ..., “சாரி..., நான் கவனிக்கலை...”, உரைத்தவன் விலகிச் செல்ல, அவளுக்குத்தான் கோபம் பெருகியது.

அதிலும் தான் விழப் போகிறோம் என்பதை உணர்ந்தும்..., அவன் அசையாமல் நின்று வேடிக்கை பார்த்ததை அவளால் ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை.

“நான் விழப்போனது உனக்கு தெரியவே இல்லையா...?”, தன்னை தாண்டிச் சென்ற அவன் வழியை மறித்து கோபமாகக் கேட்டாள்.

“ஏன் தெரியாமல்..., நல்லாவே தெரிந்தது. ஆனா..., எதுக்கு வம்புன்னுதான் கையை கட்டிக்கிட்டு பேசாமல் இருந்தேன். எங்கே நீ விழுந்து அடி பட்டுடுமோன்னு நான் பதைத்து போய் உன் கையைப் பிடித்தால்..., என்னை வேணும்னு இடிச்சுத் தள்ளிட்டு..., கையை வேற புடிக்கிறியான்னு அதுக்கும் நீ பேயோட்டுவ..., எனக்கு அது தேவையா..., அதான்...”, அவள் முகத்தில் அடித்தாற்போல் பதில் சொல்லிவிட்டு விலகிச் சென்றான்.

அவன் பதிலில் ஆணியடித்தாற்போல் அப்படியே நின்றுவிட்டாள். அவனது அந்த அலட்சியத்தை அவளால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. ‘ஏன் நான் சொன்னால் குறைஞ்சு போய்டுவாரோ...’ தன் கோபத்தை அவன் தாங்கிக் கொள்ள வேண்டும் என எண்ணியது அவள் மனம்.

தன் கோபத்தை மட்டுமல்ல..., பாசத்தையும் அவனுக்கு பங்கு வைக்க வேண்டும் என்பது அவளுக்குப் புரியாமல் போனது.

அன்றைய காலைக் கடன்கள் துவங்கி..., அனைத்தும் சரியான விதத்தில் நடக்காமல்..., ஒருவித எரிச்சலிலேயே கழிந்தது. அவன் பார்வை தன்மேல் விழாததை எண்ணி..., மிகுந்த சோர்வுற்றாள்.

தன்னை அவன் பார்வை வருடிச் செல்ல வேண்டும் என அவள் மனம் தவியாய் தவித்தது. அது எதனால் என்று புரியவில்லை. குளித்து முடித்தவள், உடை மாற்றிவிட்டு அறைக்கு வர..., கண்ணாடியில் தன் உருவத்தைப்

பார்த்தவளுக்கு, அவள் உருவத்தை விட, தன்னை ஒரு நொடி நிமிர்ந்து பார்த்த வினித்தே அதிகம் தெரிந்தான்.

அவனோ..., குளித்து முடித்து..., கையில்லாத, உடலை ஒட்டிய பனியனும், பெர்முடாசும் அணிந்து..., கழுத்தில் சுற்றியிருந்த டவ்வலால் தலையை துவட்டிக் கொண்டிருந்தான்.

அவளின் பார்வையோ..., மீண்டும் அவன் பார்வை தன்மேல் விழாதா என ஏங்க, அவனோ..., தீவிரமாக எதையோ தேடியவன், தான் தேடிய பொருள் கிடைக்கவே..., வேகமாக அதில் பார்வையைப் பதித்தான்.

அவன் செய்கையைப் பார்த்தவளுக்கு..., கோபம் பெருகியது. ‘பெரிய இவன்..., பாக்க மாட்டானோ..., ஏன் நான் பார்க்கும் அளவுக்கு நன்றாக இல்லையா...?’, ஒரு நொடி கோபமாக எண்ணியவள், அடுத்த நிமிடமே கவலை கொண்டாள்.

கண்ணாடியில் தெரிந்த அவள் பிம்பம்..., அப்படி ஒன்றும் குறை சொல்லும்படி இருப்பதாக அவள் கருதவில்லை. வெண்மை தேகம், பார்ப்பவரை நிச்சயம் மீண்டும் பார்க்கத் தூண்டும் முக அமைப்பு, பிரம்மன் நேரமெடுத்து செதுக்கிய அங்க வளைவுகள்..., அதை அழகாய் காட்டும் அவள் சேலைக் கட்டு..., நிச்சயம் தான் அழகிதான்.

‘அப்படியிருக்கையில்..., இவன் மட்டும் ஏன்...?’, அவள் நெஞ்சு விம்மித் தணிந்தது.

அந்த சூழலில் இறுக்கத்தையோ..., தவிப்பையோ அவளால் தாங்க முடியவில்லை. தலையை வேகமாக ஒதுக்கியவள், தன் கைப்பையையும், மொபைலையும் எடுத்துக் கொண்டு வெளியேற முயன்றாள்.

அதே நேரம்..., “டேய் மச்சான்..., ஒரு நிமிஷம்...”, அவன் அழைப்பில், தன்னை மீறி திரும்பியவள், அவன் அலைபேசியில் பேசுவதைப் பார்த்துவிட்டு, நடையை எட்டிப்போட..., “டேய் உன்னைத்தான்..., சொல்றது காதில்

விழலையா...?”, மீண்டும் அவன் குரல் உயர்த்தவே, நின்று அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

“உனக்கு ‘வாட்ஸ்ஆப்’ல ஒரு இம்மேஜ் அனுப்பியிருக்கேன்..., கொஞ்சம் பாத்துட்டு போடா. ரொம்ப முக்கியம்..., கோவத்தில் அப்படியே போய்டாதே...”, அவளைப் பார்த்தவாறே உரைக்க..., ‘ஏன்..., அதை என்கிட்டே நேரடியா சொல்ல முடியாதோ...?’ எண்ணியவள், தன் அலைபேசியை பார்வையிட்டாள்.

அதில்..., அவள் போட்டிருந்த பளவுசின் பின்னால் இருந்த மூன்று முடிச்சுக்களில் ஒன்று அவிழ்ந்தும், இரண்டாவது..., சற்று நெகிழ்ந்தும் இருப்பதைக் கண்டாள்.

பார்த்தவளது விழிகள்..., அடுத்த நிமிடம் கோபமாக அவனை ஏறிட்டது. அவனோ..., அவள் பார்வை உணர்ந்து..., “டேய் மச்சான்..., நான் வேணும்னு எல்லாம் பாக்கலடா..., எதேச்சையா பாக்கும்போது, அது தானா என் பார்வையில் விழுந்திச்சு.

“இங்கே ஏதாவது லேடீஸ் இருந்தால்..., கண்டிப்பா அவங்ககிட்டே சொல்லி, இதை தெரியப்படுத்தி இருப்பேன். ஆனா எனக்கு வேற வழி இல்லை, அதான்...”, அவள் கண்களைப் பார்த்து அனைத்தையும் உரைக்க, தன் கைபேசியை அவனை நோக்கி வீசினாள்.

சட்டென அதைப் பிடித்தவன், “அதான் நான் வேணும்னு பாகலன்னு சொல்றேனே...”, அவன் பரிதாபமாக உரைக்க, அவள் கண்ணில் தெரிந்த பாவனையில் தன் பார்வையை வேகமாக விலக்கிக் கொண்டான்.

கோபமாக நடந்து ட்ரஸ்சிங் ரூமை அடைந்தவள், கதவை படாரென சாற்றிக்கொண்டு, அதில் தன் முதுகை சாய்த்து இளைப்பாறினாள். ‘இதைக்கூட அவன் என்னிடம் நேரடியாக சொல்ல மாட்டானா? அப்படியென்ன நான் வேண்டாதவளாகிப் போனேன்....?’, நெஞ்சு கனத்துப் போனது.

தன் ஆடைக்குள் உறுத்திய தாலி.. அவள், அவனுக்கு யார் என்பதை உணர்த்த, 'இதை அவன்தானே கட்டினான். அப்போ முடிந்தது..., இப்போ செய்வதற்கு என்ன...?', அவன் உரிமையாய் தன்னிடம் சொல்லாதது கடும் கோபத்தை விளைவித்தது.

அதைவிட..., அவன் செய்கைக்காக ஏங்கும் தன் மனதை அவளால் சமாதானம் செய்யவே முடியவில்லை. அந்த நினைப்பு இன்னும் கோபத்தையும், எரிச்சலையும் தன்மீதே விதைக்க,

அவனை திருமணம் செய்ததால் தானே இந்த தடுமாற்றமும், வலியும், எண்ணங்களும் தன்னை பாடாய் படுத்துகிறது. அவன் மட்டும் தன் வாழ்வில் வந்திருக்கவில்லை என்றால்..., இந்த தன் நிலைக்கே அவசியம் இருந்திருக்காதே. அந்த நினைப்பையே வெறுத்தாள்.

அறைக்குள் வினித்தும் தன்னை சமாதானம் செய்ய முடியாமல் அமர்ந்திருந்தான். எப்பொழுதுமே அறைக்குள் அவள் அவனோடு இருந்தால், அவன் உணர்வுகள் அவன் பேச்சை கேட்பதில்லை. அவள் அசைவு, அவள் உடை, அவள் வாசனை..., ஒரு ஆண்மகனான அவனை இம்சை செய்வது அப்பட்டமான உண்மை.

ஆனால்..., தன் தவிப்புக்களை மறந்தும் கூட அவளிடம் வெளிப்படுத்த மாட்டான். அதிலும், இரவுகள்..., தன் உணர்வுகளை அடக்க மிகுந்த சிரமப்படுவான். அவளது ஒளி ஊடுருவும் உடையும்..., எடுப்பான அழகுகளும், அது மறைந்தும் மறையாமல் வெளிப்படும் விதமும்..., ஒவ்வொரு இரவையும் கடக்க மிகுந்த சிரமப்பட்டான்.

அதைவிட..., தாய்மடியில் உறங்கும் குழந்தையென..., தன் நெஞ்சை மஞ்சமாக்கும் அவள் நெருக்கம்..., தன் உணர்வுகளை அவள் புரிந்துகொள்ளக் கூடாதே என மிகுந்த சிரமப்பட்டிருக்கிறான்.

ஒவ்வொரு நாளும் அவள் உடுத்தும் உடையை அவன் பாராமல் பார்த்து ரசிப்பான். அதிலும் விலை உயர்ந்த ஷிபான் புடவைகள் ஒவ்வொன்றையும் நாசூக்காய் அவள் அணியும் விதமும், அதற்கு இணையாக ஜாக்கெட்டின் அலங்காரங்களும்..., 'இவளுக்கு எவன் ஜாக்கெட் தைக்கிறான்...?' சில நாள் அவள் முன்னழகு அவனை பித்தம் கொள்ள செய்தது மட்டும் உண்மை.

இன்றும் அவள் உடுத்திருந்த அடர் ஊதா நிற புடவையும்..., அதற்கு இணையான அவள் ஜாக்கெட்டின் வடிவத்தையும் நாசூக்காய் பார்த்தவனுக்கு, அப்பொழுதுதான் அதில் இருந்த 'நாட்' சரியாக முடியப்படாததை கண்டான்.

அவள் முதுகுப் பிரதேசம் பாதி அவன் பார்வைக்கு விருந்தாக, குப்பென அவன் மூச்சுக்காற்றில் அனலடிக்கும் உணர்வு. ரத்தம் நொடியில் சூடாக, அவள் வெற்று முதுகில் தன் இதழைப் புதைக்கும் வேகம் எழுந்தது. அந்த உணர்வை அடக்கவே திண்டாடிப் போனான்.

தன்னை மீறி அவன் பார்வை அவளை நேராக சந்தித்த அந்த நொடியில்தான், அவள் பார்வை தன்னை நோக்குவதை உணர்ந்தவன், சட்டென தன்னை மீட்டுக் கொண்டான். அவள் அறையை விட்டு வெளியே செல்லபோகும் அந்த நேரம்தான்..., அவளிடம் விஷயத்தை சொல்லவேண்டும் என எண்ணியவன், அவளிடம் நேரடியாக சொல்ல முடியாமல் அனைத்தையும் செய்தான்.

முதல் காரணம் அவள் தன்னை கண்டுகொள்ளக் கூடாது என்பதாகவும், இரண்டாம் காரணம்..., அவள் கோபத்தை கிளற வேண்டாமே என்பதாக இருந்தது. ஆனால்..., அவள் அறைக்குச் செல்லும் முன்னர் பார்த்த பார்வை..., அவளை அப்படியே நெஞ்சோடு தழுவிக் கொள்ள கைகள் இரண்டும் பரபரக்க..., பார்வையை விலக்கிக் கொண்டான்.

அவள் உடை மாற்றும் அறைக்கதவை திறக்கும் ஒலியில் கலைந்தவன், அவள் பார்வையை எதிர்கொள்ள மறுத்தான்.

அதைப் பார்த்தவள்..., தன் அரையடி குதிகால் செருப்பு சப்திக்க..., அறை வாயிலை கோபமாகத் திறந்து வெளியேறினாள். அவள் செல்லவே..., ஒரு பெருமூச்சை தாராளமாக வெளியிட்டவன்..., உடை மாற்றும் அறைக்குச் செல்ல திரும்பினான்.

அதே நேரம்..., அவன்மேல் கடும் கோபத்தில் இருந்த ஐஸ்வர்யா படிகளில் கவனம் பதிக்காமல் போக, அவள் அரையடி குதிகால் செருப்பு ஸ்லிப்ஆக, “அம்மா...”, ஒருவித வீரிடலில் அடுத்த நான்கு படிகளில் தடுமாறி விழுந்தாள்.

“ஐஷூ....”, “அம்மாடி....”, “என்னங்கம்மா...”, வினித், ஸ்ரீராம்..., துரை மூவரின் குரலும் ஒருங்கே ஒலிக்க..., பதினெட்டு படிகளையும் இரண்டே எட்டில் கடந்த வினித்..., பாய்ந்து வந்து அவளை கைகளில் ஏந்தியிருந்தான்.

“ஆ..., கால் வலிக்குது....”, அவன் கரத்தை பற்றிக்கொண்டு எழுந்தவள், நிற்க முடியாமல் கதறினாள்.

“ஐஷூ..., ஓகே..., ஒண்ணும் இல்லை...”, அவளை சட்டென கைகளில் ஏந்தியவன்..., அங்கிருந்த சோபாவில் அமர வைத்தான்.

“அம்மாடி..., பாத்து வர மாட்டியா...?”, ஸ்ரீராம் அவன் பின்னால் வந்தார்.

“ஸ்..., ஆ...”, அவளோ வலியில் துடிக்க..., “துரை..., கொஞ்சம் ஐஸ் கியூப் கொண்டு வாங்க...”, அவள் காலுக்கு அருகில் மண்டியிட்டவன்..., அவள் புடவையை விலக்கி காலைப் பார்க்க..., இடது கணுக்காலில் சிறு வீக்கத்தை பார்த்தான்.

“ஐயோ..., அப்பா..., வலிக்குதுப்பா...”, தந்தையின் கரத்தை இறுக பற்றிக் கொள்ள, துரை கொண்டுவந்த ஐஸ் கியூபை அவள் கால் வீக்கத்தில் வைத்தான்.

“அம்மா..., ம்ஹும்..., என்னால் முடியலை...”, அவள் அரற்ற..., “வினித்..., ஹாஸ்பிடல் போய்டலாம். வீக்கம் வேற போடுது. எனக்கு பயம்மா இருக்கு...”, ஸ்ரீராம் புலம்ப, உடனே மருத்துவமனைக்குச் செல்ல முடிவெடுத்தான்.

அது அலுவலகம் செல்லும் நேரம் என்பதால்..., கிரியும் வந்திருக்க..., அவளை கைகளில் தூக்கிக் கொண்டு காருக்கு விரைந்தான். “கிரி..., காரை எடு. மாமா.., நாங்க முன்னாடி போறோம்..., நீங்க பின்னாடி வாங்க...”, அவளை இருக்கையில் அமர வைத்துவிட்டு, மறு பக்கம் ஏறியவன், அவள் காலை தன் மடியில் ஏந்திக் கொண்டான்.

“அவ வலி தாங்க மாட்டா வினித்...”, ஸ்ரீராம் உரைக்க,

“நான் இருக்கேன் மாமா...”, அவர் கையை அழுத்தினான்.

“ஸ்...”, அவள் வலியில் துடிக்க..., “சாரி..., மெதுவா பாத்துக்கறேன். ரொம்ப வலிக்குதா...? இதோ இப்போ ஹாஸ்பிடல் போய்டலாம்...”, ஒரு குழந்தையை சமாதானம் செய்வதுபோல் செய்தான்.

அவள் வலி தாங்க முடியாமல் அரற்ற..., “கிரி..., கோ பாஸ்ட்...”, அவனை விரட்டினான். அவள் காலை அலுங்காமல் சீட்டில் வைத்து விட்டு, அவள் முதுகுப் பக்கம் சென்று அமர்ந்து..., அவள் தோளை சுற்றி கை போட்டு, அவணைவாய் பிடித்துக் கொண்டான்.

அவள் முகத்தை தன் கழுத்தில் அழுத்திக் கொண்டவன்..., “கிட்டே வந்துட்டோம்..., கொஞ்சம் பொறுத்துக்க...”, அவள் கன்னத்தை ஆதரவாய் தடவினான்.

அவன் நெருக்கமும்..., அவன் கழுத்தில் புதைந்ததால் அவனிடமிருந்து எழுந்த ஆண்மை வாசனையும்..., அவன் முரட்டுக் கரத்தின் வெம்மையும், அவளை அந்த வலியான நேரத்திலும் தாக்கியது.

கூடவே..., சற்று நேரத்துக்கு முன்னால் அவன் தன்னை தவிர்த்ததும், தவிக்க விட்டதும் நினைவுக்கு வர..., தன் கோபத்தை தொடரவும் முடியாமல், அவன் ஆதரவை ஏற்கவும் முடியாமல் திண்டாடிப் போனாள்.

அடுத்த பதினைந்து நிமிடங்களில் மருத்துவமனைக்கு வந்துவிட, ஸ்டெரச்சரை எதிர்பாராமல்.., ஒரு குழந்தையை தூக்குவதைபோல், கரத்தில் ஏந்தியவன்...,

கேசுவாலிட்டியில் இருந்த படுக்கையில் அவளை அமர வைத்து..., காலை படுக்கையில் தூக்கி வைத்துவிட்டு மருத்துவரை அழைத்துவர வெளியேறினான்.

அவர் வந்து..., சாதாரண சுளுக்குதான் என சொன்ன பிறகும்..., “இல்ல டாக்டர்..., கால் வீக்கம் வேற இருக்கு. அவ வலியில் துடிக்கறா...? ஒரு எக்ஸ்ரே எடுத்துடுங்க....”, அவர் மறுப்பையும் அவன் சட்டை செய்யாமல் போக, அதையும் எடுத்துவிட்டே அடங்கினான்.

அதே நேரம் அங்கே வந்த ஸ்ரீராம்..., “டாக்டர்.., தேவிக்கு நிறைய மெடிசின் ஒத்துக்காது..., டக்குன்னு அலர்ஜி ஆயிடும்..., சோ...”, அவர் உரைக்க,

“ஓ..., அப்போ ஒண்ணு பண்ணுங்க..., ஒரு வெயின் இன்ஜெக்ஷன் போட்டுகோங்க. இல்லன்னா அவங்களால் வலி தாங்க முடியாது. அது ஒத்துக்குமா இல்லையான்னு பாக்க..., ஸ்கின்ல அதை முதல்ல செக் பண்ணிக்கலாம்...”, அவர் உரைத்துச் சென்றார்.

நர்ஸ் வந்து அந்த சோதனை ஊசியை போட..., “ஆ...”, அதற்கும் ஐஸ்வர்யா அலற..., “என்ன சிஸ்டர்..., வலிக்காமல் உங்களால் ஊசி போட முடியாதா? ஏற்கனவே அவ வலியில் துடிக்கறா..., இதில்..., ஐயோ..., இதென்ன இப்படி பல்ஜ் ஆயிடுச்சு...?

“இப்படித்தான் பொறுப்பே இல்லாமல் ஊசி போடுவீங்களா...? டாக்டர்...”, அவன் அலற...,

“ஐயோ சார்..., உங்க பொண்டாட்டி மேலே உங்களுக்கு பாசம்தான் எனக்குப் புரியுது. அதுக்காக இப்படியா...? டெஸ்ட் ஊசி இப்படித்தான் போடுவோம். இதில் இச்சிங்..., இல்ல பொரிப் பொரியா வந்தால், அந்த ஊசியை இவங்களுக்கு போட முடியாது...

“பத்து நிமிஷம் கழிச்சு என்கிட்டே வந்து சொல்லுங்க...”, அவள் அகன்றுவிட, ஐஸ்வர்யாவோ கால் வலியை தாங்க முடியாமல் சோர்ந்து போனாள்.

“என்னம்மா..., தலை சுத்துதா...? மயக்கமா இருக்கா...? இந்த ஊசி ஒத்துக்கலையா...? அலர்ஜி ஆகுதா...?”, சற்று தவித்துதான் போனான்.

அவள்மேல் உண்மையான நேசம் கொண்டவனாயிற்றே. அவள் வலியை வாங்கிக்கொள்ள முடியுமென்றால் எவ்வளவு நன்றாக இருக்கும்..., என எண்ணியவன்..., அதை அவளிடமும் உரைத்தே விட்டான்.

காலை முதல் தன்னை கண்டுகொள்ளாமல் தவிக்க விட்டவன்..., இப்பொழுது துடிப்பதைப் பார்த்து..., ஒரு பக்கம் பெருமிதம் கொண்டாலும், அவன் தன்னை தவிக்க விட்டது நினைவிற்கு வர, “ரொம்ப நடிக்காதே. உன் நடிப்பை நம்பி ஏமாற நான் ஒண்ணும் சின்ன பாப்பா இல்லை...”, தன் கன்னத்தில் இருந்த அவன் கரத்தை வெடுக்கென தள்ளி விட்டாள்.

அந்த நேரம் உள்ளே வந்த நர்ஸ்..., “அப்படிச் சொல்லாதீங்க மேம்..., உங்களை கையில் தூக்கிட்டு ஓடி வந்தது முதல், டியூட்டி டாக்ட்டரை அடிக்காத குறையா கூட்டி வந்தது, அவர் மறுத்தும் எக்ஸ்ரே எடுக்க வைத்தது..., அதோட ரிசல்ட்டை பதட்டமா எதிர்பார்த்தது என அவரோட தவிப்பை நான் பாத்துட்டுதான் இருந்தேன்...”, அவள் உரைக்க,

“பணத்துக்கு வேண்டி அவன் என்ன வேண்ணா செய்வான்..., உனக்கு தெரியாது...”, ஐஸ்வர்யா வெடுக்கென உரைக்க..., நர்ஸ் வினித்தின் முகம் பார்க்க, தாடை இறுக அமைதியை கையில் எடுத்தான். நர்ஸ் மேலே எதுவும் சொல்லாமல்..., தன் கையில் இருந்த ஊசியை அவள் இடையில் செருகிவிட்டு அகன்றாள்.

ஏதோ சொல்ல வந்த ஸ்ரீராமை பார்வையில் தடுத்தவன்..., “அப்போ..., இவ்வளவு நேரமா என்னோட தவிப்போ, துடிப்போ உனக்குப் புரியவே இல்லை. என் அக்கறை உன்னை அசைக்கவே இல்லை..., என் பாசம் உன் நெஞ்சைத் தொடவே இல்லை.

“அதுக்குப் பதிலா…, பணத்துக்காக நான் நடிக்கிறேன்னு மட்டும்தான் நினைக்கிற இல்ல. அப்போ…, என் பேங்க் பேலன்ஸ் அதிகமா இருந்திருந்தால், இதெல்லாம் உண்மைன்னு நீ நம்பி இருப்ப. அப்போ உன் அகராதியில் பணம் இருப்பவன் மட்டும்தான் பாசம் காட்ட முடியும் இல்ல.

“என்னோட பாசமெல்லாம் உனக்கு வேஷமா தெரியுது…, அப்போ இதுக்குமேல் நான் இங்கே இருக்க வேண்டிய அவசியம் இல்லை…”, கையில் இருந்த ரிப்போட்டை தரையில் விசிறியவன்…, அது அந்த அறை முழுவதும் சிதற, ஸ்ரீராம் அவன் தோளைத் தொட்டார்.

அவர் கரத்தை முகம் இறுக விலக்கியவன்…, “அவ கழுத்தில் கட்டிய தாலியை நான் உணர்ந்துதான் கட்டினேன்னு சொல்றேன். அது அவளுக்கு புரியவே இல்லை. இனிமேல் அவளுக்கு புரியும் என்ற நம்பிக்கையும் எனக்கு இல்லை.

“சில உறவு எல்லாம் எனக்கு ஒட்டவே செய்யாது மாமா. நாய்க்கு முழுத் தேங்காய் மாதிரி…, சொந்தமெல்லாம் எனக்கு…”, அவஸ்த்தையாக வார்த்தையை விழுங்கியவன், “நீங்களே உங்க பொண்ணை பாத்துகோங்க…, நான் போறேன்…”, அவரிடம் உரைத்தவன்,

அவள் பக்கம் திரும்பி…, “அன்னைக்கு சொன்னியே…, ஒரு நிமிஷத்தில் லட்சம் ரூபாய் சம்பாதிப்பேன்…, என் இடம் உனக்குத் தெரியுமான்னு கேட்டல்ல. இதோ…, இந்த கார்டில் பத்துலட்சம் ரூபாய் இருக்கு…, ஒரு பத்து நிமிஷம் உன்னால் என்கிட்டே பாசமா பேச முடியுமா…?

“நீ ஒரு வார்த்தை அப்படி பேச மாட்டியான்னு நான் ஏங்கிப் போயிருக்கேன் ஐஸ். இந்த பணத்தை மட்டுமே வைத்து என்னை எடை போடுவதை எப்போ நிறுத்துவ…? உன்னைப் பொறுத்த வரைக்கும் இதுவும் நடிப்புன்னுதான் சொல்வ…, சோ…, நான் போறேன்…”, அவன் கண்களில் வழிந்த வலியை அவளால் தாங்கிகொள்ளவே முடியவில்லை.

எப்பொழுதும் அவனைச் சீண்ட வேண்டும் என மட்டுமே துவங்கும் அவளது பேச்சுக்கள் அனைத்தும், அவளை மீறி..., வார்த்தைகள் தடிப்பதை அவளால் தடுக்க முடியவில்லை.

அவன் தனக்கு உடையவன்..., அவன்மேல் காதல் என்று சொல்வதை விட, தனக்குச் சொந்தமான பொருள்..., தனக்கு மட்டுமே உடையது. தான் அடித்தாலும், உதைத்தாலும் தனக்கு மட்டுமே வேண்டும்..., அவன் கரிசனை, காதல்..., கவனிப்பு..., நேசம்..., அனைத்தும் தனக்கு மட்டுமே என சுயநலமாய் சிந்தித்தாள்.

அப்படி இருக்கையில்..., அவனை மனதார காயப்படுத்த வேண்டும் என எண்ணியிராத அவளுக்கு..., அவன் பேச்சு மனதைப் பிசைந்தது.

“வினு....”, அவளது அந்த அழைப்பை கேட்காமலேயே அங்கிருந்து வெளியேறினான் வினித்.

***

# பகுதி - 22.

அந்த மருத்துவமனை அறைக்குள் பேரமைதி நிலவியது. அதை யார் கலைப்பது என தெரியாமல் ஆளுக்கு ஒரு பக்கம் பார்த்தவாறு நின்றனர். கீழே சிதறிக்கிடந்த பேப்பர்களை கிரி சேமித்தான். அதை அங்கிருந்த சிறு கபோடுக்குள் வைத்தவன், “சார்..., நான் கார்ல இருக்கேன். ஏதாவதுன்னா கூப்பிடுங்க...”, அவள் முகம் பாராமல் வெளியேறினான்.

‘இந்தம்மா ஏன் இப்படி இருக்கு...?’ அவனால் எண்ணாமல் இருக்க முடியவில்லை. அன்று ஒரு கணவனாக வினித் தன்னிடம், தன் மனைவிக்காக போராடியவனை பார்த்தவனாயிற்றே..., ‘எல்லாம் விதி...’ அவனுக்கு அதுதான் தோன்றியது.

கிரி செல்லவே..., “நான் போய் கிளம்பறோம்னு சொல்லிட்டு வரேன்...”, அவள் பதிலை எதிர் பாராமல் கிளம்பினார்.

“நோ டேட்..., ஐ வோன்ட் கம்...”, அவள் குரல் அவரை தேக்கியது.

“வராமல்..., இங்கே இருந்து என்ன செய்வதா உத்தேசம்...? அதான் இன்ஜெக்ஷன் எல்லாம் போட்டாச்சே...”, முதல் முறையாக தன் தந்தையின் கோபத்தை பார்க்கிறாள்.

“வினுவை வரச் சொல்லுங்க...”, அவர் முகம் பாராமல் உரைத்தாள்.

“யாரை...? வினித்தையா...? எந்த முகத்தை வச்சுட்டு அவனை கூப்பிடச் சொல்ற...? நாய்க்குட்டி மாதிரி காலை சுத்தி வந்தவனை..., ஒண்ணுக்கு ரெண்டு சூடா போட்டு விரட்டியாச்சு. இப்போ..., நான் பொறை போடுறேன் வந்து கவ்விட்டு போன்னு அவனை ஆசை காட்டச் சொல்றியா...?”, அவருக்கு இப்படி கூட பேசத் தெரியுமா என்பதுபோல் அதிர்ந்து போய் வெறித்தாள்.

“டேட்..., நீங்களா...?”, அதை வார்த்தையிலும் வெளிப்படுத்த,

“ஆமா..., நான்தான். நானேதான்..., உனக்கு உன் பாட்டியோட திறமை மட்டும்தான் கிடைச்சுருக்குன்னு இத்தனை வருஷமா நினைத்திருந்தேன்..., ஆனா..., அவங்க மொத்த திமிரும், ஆணவமும் உனக்குள்ளே அப்படியே இறங்கி இருக்குன்னு இப்போதான் புரிஞ்சுகிட்டேன்....”, வேதனையாக உரைத்தவர்..., அங்கே இருந்த இருக்கையில் தளர்ந்துபோய் அமர்ந்தார்.

“டேட்...”, அவள் பதட்டமானாள்.

அவள் பதட்டத்தை உணர்ந்தவர்..., “இல்ல..., இந்த உயிர் அவ்வளவு சீக்கிரமா போகாது போல...., இன்னும் என்னவெல்லாம் பாக்க வேண்டி இருக்கோ...”, அவர் குரல் தளுதளுத்தது.

இப்பொழுது அவளுக்கு கால்வலி சுத்தமாக மறந்து போனது. “ப்ளீஸ் டேட்...”, அப்படிப் பேசாதே என அவள் பார்வை அவரிடம் கெஞ்சிற்று.

“என்னை வேற என்னதாம்மா செய்யச் சொல்ற...? உன்னை மாதிரி உன் அம்மாவும் நினைத்திருந்தால்..., நான் அவளுக்கு கணவனாக ஆகி இருக்க முடியுமா? இத்தனைக்கும்..., அப்பொழுது என் சம்பளம் பத்தாயிரம் ரூபாய் தான். ஆனா..., அவ அதையெல்லாம் ஒரு பொருட்டா கருதியதே கிடையாது.

“நீயே யோசித்து பார்..., என் முகம் வாடினால் உன் அம்மா தாங்குவாளா? அந்த வீட்டுக்குள்..., வெளியே..., நாங்க எப்படி வேண்ணா இருந்து இருக்கலாம். ஆனால்..., எங்கள் படுக்கை அறைக்குள் ஒருயிராக இருந்ததை உன்னால் உணர முடியாது தேவி.

“மனதுக்குள் காதல் இருந்தால் குடிசையில் கூட மன நிம்மதியோடு வாழ முடியும். ஆனா நீ..., பணம்தான் எல்லாம்னு முடிவு பண்ணிட்ட. சரி..., இதற்குமேல் என்னால் வினித்தை ஏமாற்றவோ, கஷ்டப்படுத்தவோ முடியாது. இறுதியா ஒரு முடிவு எடுத்துடலாம்...”, அவர் உரைக்க, என்னவென்று மலங்க விழித்தாள்.

“என்ன புரியலையா..., உனக்கு ஏத்த மாதிரி..., ஏதாவது பணக்காரனா பாத்து...”, “ஜஸ்ட் ஸ்டாப் திஸ் நான்சென்ஸ் டேட்...”, அந்த பேச்சே ஒருவித அருவருப்பை அவளுக்கு கொடுக்க, அது அவள் முகத்திலும் பிரதிபலித்தது.

அந்த சூழலிலும் அது அவருக்கு மிகுந்த நிம்மதியைக் கொடுக்க, “ஏம்மா..., உன் நல்லதுக்கு தானே சொன்னேன்...”, அவர் மேலும் அவளை கலக்க,

“நீங்க எதுவும் சொல்ல வேண்டாம்...”, வெடித்தாள்.

“நான் அவனுக்கு ஒரு ப்ராமிஸ் பண்ணியிருந்தேன்..., அவனுக்கு ஒரு அம்மாவை நிச்சயம் கொடுப்பேன்னு..., ஆனா..., அவனுக்கு அம்மா ராசியே கிடையாதுன்னு அவன் வாயாலேயே சொல்ல வச்சுட்டு போக வச்சுட்ட. இப்போ உனக்கு சந்தோஷமா...?

“ஒவ்வொரு பெண்ணாலும் தன் கணவனுக்கு இன்னொரு தாயா மாற முடியும்..., ஆனா எல்லா ஆண்களாலும் தன் மனைவிக்கு இன்னொரு அப்பாவா மாற முடியாதுன்னு சொல்வாங்க. ஆனா..., அவன் உனக்கு இன்னொரு அப்பாவா மாறிட்டான். நீதான்.., அவனை ஏமாத்திட்ட தேவி...”, அவர் வார்த்தைகள் ஒன்றும், இரும்பு குண்டாக அவள் நெஞ்சை அழுத்தியது.

“ப்ளீஸ் கால் ஹிம் டேட்...”, தவித்துப் போனாள். அவனுக்கு தான் இதுவரை எதுவுமே செய்ததில்லை என்ற நினைப்பே அவளை துடிக்க வைத்தது. அவனை இப்பொழுதே காண வேண்டும் என உள்ளம் பரிதவித்தது.

“உண்மையான பாசத்தை தூக்கி நெருப்பில் வீசி அதை பொசுக்கிட்ட. அதை எப்படி உயிர்பிக்க...? என்னால் முடியாது தேவி. ஒவ்வொரு முறையும் நீ அவனை அவமதிப்பதும்..., அவன் அதை மறந்துட்டு உன்கிட்டே வரதும்..., மறுபடியும் நீ அவனை காயப்படுத்துவதும்..., பாவம்மா அவன்...”, அவருக்கும்..., அவனை எத்தனை முறைதான் ஏமாற்றுவது என்ற நினைப்பு.

“இப்போ கூட..., நான் மறுத்தும் கேட்காமல், நம்ம வீட்டில் தங்குவதற்கும் சாப்பாட்டுக்கும் முழுசா ஒரு லட்ச ரூபாயை தூக்கி கொடுக்கறான். நான் மறுத்தால்..., இந்த வீட்டிலேயே இருக்க முடியாதுன்னு பிடிவாதமா மறுத்துட்டான்.

“அப்படிப் பட்ட அவனைப்போய்.., பணத்துக்காக நடிக்கறான்னு..., போம்மா.., நீ புத்திசாலின்னு இவ்வளவு நான் நினைச்சுட்டு இருந்தேன். ஆனா..., அப்படி இல்லன்னு ப்ரூவ் பண்ணிட்ட...”, வேதனையாக சொல்லி நிறுத்தினார்.

அத்தோடு..., “ஒரு முறை அவன் உயிரை நான் காப்பாற்றி கொடுத்தேன். ஆனால்..., அதை நீ கொஞ்சம் கொஞ்சமா எடுக்கத்தானா என்பதை நினைத்தால்..., வேதனையா இருக்கு. இதற்கு பதிலாக..., அன்று அவனை நான் சாகவே விட்டிருக்கலாம்...”, தன்னை மீறி உளறிவிட்டார்.

“வாட்..., டேட்..., கம் அகெயின்...”, படுக்கையில் இருந்து இறங்கப் போனாள்.

“ம்ச்..., இப்போ அது உனக்கு எதுக்கு...? விடு...”, அவர் தவிர்க்க முயல, அவளோ விடவில்லை. இறுதியாக தான் அவனை முதல்நாள் கண்டதை அவளுக்கு உரைக்க..., ஏற்கனவே நொந்துபோய் இருக்கும் அவனை, தானும் தன் பங்குக்கு அதிகமாக வதைத்துவிட்டதை உணர்ந்தாள்.

“ஏன் டேட் இதை என்கிட்டே முன்னாடியே சொல்லலை...?”, வேதனையாக கேட்க...,

“இதென்ன சந்தோஷமா சொல்ற விஷயமா...? எல்லாம் அவன் தலையெழுத்து...”, அங்கே அசாத்திய அமைதி.

தன் கணவன் வாழ்க்கையையே வெறுத்து..., தற்கொலை செய்துகொள்ள துணிந்தவன் என்பதை அவளால் ஜீரணிக்கவே முடியவில்லை. உடனே அவனைக் காணவேண்டும் என்ற வேகம்..., அவனை இறுக கட்டிக்கொண்டு, அவனுக்கு தான் இருக்கிறோம் என உணர்த்தும் ஆவல்..., அதை அவளால் கட்டுப்படுத்தவே முடியவில்லை.

அவள் எதையோ கேட்க வாயைத் திறக்கையில், “சார், இது கேசுவாலிட்டி, உங்களை டாக்டர் அப்போவே கிளம்ப சொல்லிட்டார்...”, அந்த நர்ஸ் வந்து உரைக்கவே..., பேச்சை அத்தோடு நிறுத்திக் கொண்டார்கள்.

“ஓ..., இதோ இப்போ கிளம்பிடுறோம். கொஞ்சம் வீல் சேர் மட்டும் ஏற்பாடு பண்ண முடியுமா?”, அவர் கேட்க...,

“வார்ட் பாயை அனுப்பறேன்...”, அவள் திரும்ப,

“சிஸ்டர்..., ஒரு விசிட்டர் விஐபி ரூம் ஒண்ணு வேணும்...”, அவளை நிறுத்தியது ஐஸ்வர்யாவின் குரல்.

“அம்மாடி..., நீ போம்மா..., நாங்க கிளம்பறோம்...”, அவர் அவளை அனுப்பினார்.

“நோ டேட்..., நான் வரலை..., அவன் வர வரைக்கும் வரவும் மாட்டேன்...”, அந்த படுக்கையில் படுத்தவள், கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

“மச்..., என்ன விளையாட்டு இது தேவி...? எப்போ வேண்ணா இங்கே அவசர பேஷன்ட் வரலாம். முதல்ல கிளம்பு. எல்லாத்தையும் வீட்டில் போய் பேசிக்கலாம்...”, அவளை கிளப்ப முயன்றார்.

“நோ...”, அதில் இருந்த அழுத்தம், இதற்குமேல் அவளிடம் எதையும் பேச முடியாது என்பதை உணர்த்தியது. அவள் உள்ளுக்குள் மருகுவதையும் அவரால் புரிந்துகொள்ள முடிந்தது. சிந்திய பாலுக்காக வருந்துகிறாளே என அவரால் எண்ணாமல் இருக்க முடியவில்லை.

வேறு வழியே இல்லாமல்..., ஒரு அறையை புக் செய்து..., அங்கே மாறியே விட்டார்கள். அவள் பிடிவாதம் அப்பொழுதும் கூட குறையவே இல்லை. அவள் பிடிவாதம் கண்டு..., அவர் அவனுக்கு அழைக்க..., அவனோ அழைப்புக்களை கண்டுகொள்ளவே இல்லை.

இரண்டுமணி நேரமாக அவரும் முயல..., இறுதியாக..., “மாப்பிளை போனை எடுக்க மாட்டேங்காரும்மா...,

என்னதான் செய்யட்டும். நீயே உன் போனில் இருந்து போடு...”.

“என்கிட்டே போன் இருந்தால் நான் எதுக்கு உங்ககிட்டே கெஞ்சப் போறேனாம்?”, அவள் வெடுக்கென கேட்க..., கிரியை அழைத்தவர்..., வீட்டுக்குச் சென்று அவள் அலைபேசியை எடுத்து வரச் சொன்னார்.

அவரை திடுக்கிட்டு ஒரு பார்வை பார்த்தவன்..., ஐஸ்வர்யாவின் பிடிவாதம் உணர்ந்து..., அடுத்த நாற்பதாவது நிமிடம், அவள் அலைபேசியோடு அவள் முன்னால் இருந்தான் கிரி.

அதை வாங்கியவள்..., அடுத்த நிமிடம் அவனுக்கு அழைக்க,

மருத்துவமனைக்கு சற்று தள்ளி இருந்த பார்க்கில், தன் கோபத்தை கட்டுப்படுத்திக்கொண்டு அமர்ந்திருந்தவன்..., தன் அலைபேசி ஒலிப்பதை அவ்வளவு நேரமாக கண்டுகொள்ளவே இல்லை.

ஆனால்..., ஐஸ்வர்யாவின் எண்ணுக்காக தனியாக அவன் வைத்திருந்த பாடல் ஒலிக்கவே..., அந்த நேரத்திலும் அவனால் மகிழாமல் இருக்க முடியவில்லை.

அதே நேரம் மனதின் ஓரத்தில் அதிகமாக வலித்தது. ‘வீட்டுக்கு போய்ட்டா போல..., இப்போ அழற பிள்ளைக்கு லாலிபாப் கொடுக்குற மாதிரி, எனக்கு ஒரு கால்...’, அலுப்பாக எண்ணியவன் அதை எடுக்கும் ஆசையை கைவிட்டான்.

அவள் குணத்துக்கு..., மீண்டும் அவனை அழைக்க மாட்டாள் என்பது அவனுக்கு உறுதியே. ஆனால்..., முதல் அழைப்பு நின்ற அடுத்த நொடியே..., அடுத்த அழைப்பும் வர..., நம்பவா..., வேண்டாமா என்ற எண்ணத்தில் அதையே வெறித்தான்.

‘ஒரு வேளை..., இவ்வளவு நேரம் மாமா போனை எடுக்கவில்லை என்று, அவர்தான் அவள் எண்ணில் இருந்து அழைக்கிறாரோ...? அப்படித்தான் இருக்கும்...’

அதை சைலண்ட் மோடில் போட்டுவிட்டு..., இருக்கையில் சாய்வாக அமர்ந்து கொண்டான்.

ஐஸ்வர்யாவுக்கு..., தன் சுபாவத்தை மீறி அவனை அழைக்கிறோம் என்பதே உறைக்கவே இல்லை. மாறாக..., அவன் நன்றாக இருக்கிறான் என தெரிந்தே ஆகவேண்டும் என்ற வேகம்..., விடாமல் அழைத்தாள். இதுவரை தனக்கு கீழே இருக்கும் யாரின் அலைபேசி எண்ணையும் தன் அலைபேசியில் பதிவேற்றாதவள்..., அவன் எண்ணை மட்டும் எப்படி ஏற்றினோம் என்பதை சிந்திக்கவே இல்லை.

கண்கள் கலங்கும்போல் இருந்தது. எதற்காகவும் இதுவரை கலங்கியிராதவள், முதல் முறையாக அவனுக்காக கலங்கினாள். ஆனால் கண்ணீரை வடிக்கவில்லை..., மாறாக அவள் உள்ளம் கண்ணீர் வடித்தது.

‘அவன் எதுவும் தவறான முடிவிற்கு போய்விடக் கூடாது..., அவன் எனக்கு வேண்டும்..’, அவன் இல்லாத உலகை கற்பனை செய்யக்கூட அஞ்சியவளாக, விடாமல் அழைத்தாள். அந்த நேரம் தன் மனதை அவள் உணர்ந்திருந்தால் எவ்வளவோ நன்றாக இருந்திருக்கும்.

தன் மகளை இப்படிக் காண முடியாமல்..., “விடும்மா..., கோபம் குறைந்தால் அவனே வருவான். நாம வீட்டுக்கு போகலாம்...”, அவள் தலையை வருடினார்.

அவர் பேச்சை கண்டுகொள்ளாமல்..., “ப்ளீஸ் பிக் அப் தி கால்...”, ஒரு செய்தியை அவனுக்கு தட்டி விட்டவள்..., மீண்டும் அவனுக்கு அழைத்தாள்.

மெச்செஜ் டோனைக் கேட்டவன்..., தன் அலைபேசியின் செய்தியை வாசிக்க, முகம் யோசனையை பிரதிபலித்தது. விடாமல் ஒலித்த அலைபேசியை, இதற்குமேலும் தவிர்க்க முடியாமல்..., அதை அட்டென் செய்தவன்...,

“ப்ளீஸ் மாமா..., இன்னைக்கு ஒரு நாள் என்னை என் போக்கில் விட்டுடுங்க. நான் இப்படியே கார்த்திக் ரூமுக்கு போறேன். ஒரு ரெண்டுநாள் கழிச்சு வீட்டுக்கு வரேன்...”, அந்தப்பக்கம் பதிலை எதிர்பாராமல் பேசினான்.

பதிலுக்கு அங்கிருந்து எந்தவிதமான பதிலும் இல்லாமல் போகவே.., “ஐஷூ…?”, கேள்வியாக இழுத்தான்.

அவன் அலைபேசியை எடுத்து பேசியது பெரிய நிம்மதியைக் கொடுக்க, அவனது சோர்ந்த பேச்சு அவளை உருக்கியது. அது உணர்த்திய செய்தி கோபப்படுத்தியது.

‘என்னை விட்டு போய்டுவியா நீ…?’ கோபமாக எண்ணியவள், “ஹாஸ்பிட்டல் வா…”, அழைத்தாள்.

‘என்ன…, இன்னும் வீட்டுக்கு போகலையா…?’ திடுக்கிட்டவன், அதை மறைத்துக் கொண்டு, “நீங்க எதிர்பார்க்கும் பணக்காரன் யாரும் இங்கே இல்லை. சோ…, நீங்க போங்க…”, குரலில் அவ்வளவு இறுக்கம்.

“உன்கிட்டே நான் போகத் தெரியாதுன்னு சொல்லவா கால் பண்ணேன்? நீ வர…, இல்ல…, நீ வர வரைக்கும் நான் இங்கேதான் இருப்பேன்…”, அவன் பதிலை எதிர்பாராமல் வைத்துவிட்டாள்.

அவளைப் பொறுத்தவரைக்கும்…, தான் என்ன செய்தாலும் அவன் வேணும். அது எதனால் என்பதை மட்டும் சிந்திக்க மறுத்தாள். அவளது செல்ல விளையாட்டு பொருள்…, தான் தூக்கிப் போட்டாலும்…., தனக்கு மட்டுமே உடையது…, காதல் பிடிவாதம்…, உணராமல் செய்தாள்.

தன் பாசத்தை, தேடலைக் கூட கோபமாகவே வெளிப்படுத்தும் மகளை, என்ன செய்வது எனத் தெரியாமல் இயலாமையாக ஒரு பார்வை பார்த்தவர், அந்த அறையில் போட்டிருந்த மற்றொரு படுக்கையில் ஏறி அமர்ந்து கொண்டார்.

கிரி வராண்டாவில் காவல் இருந்தான். வினித்துக்கோ…, ஒரு பக்கம் கோபம் கட்டுக்கடங்காமல் பெருக, மறு பக்கம் அவள் அழைப்பை எண்ணி மகிழ்ந்தான்.

கலவையான உணர்வில்…, வேறு வழியின்றி மருத்துவமனைக்கு விரைய, அவனை எதிர்கொண்ட நர்ஸ்…, “நல்ல புருஷன் பொண்டாட்டி போங்க.

அவங்களுக்கு இப்போ சுத்தமா கால் வலியே மறந்து போச்சு. புருஷன்தான் வேணுமாம்...", நர்ஸ் சிரித்துவிட்டுச் செல்ல, அவன் மனதில் மெல்லிய சாரல்.

அதை துடைத்துவிட்டு..., அறைக்குள் கோபமாகவே நுழைந்தான். "நினைச்சதை சாதிச்சுட்ட இல்ல..., வந்துட்டேன்..., நீ கூப்ட்ட உடனே..., கொஞ்சம் கூட வெக்கமே இல்லாமல் ஓடி வந்திருக்கேன். இப்போ என்ன..., ஆலம்பனா..., உங்கள் அடிமை..., கட்டளை இடுங்கள்னு உன் காலடியில் கெஞ்சணும் அதானே..., உன் ஆசையை ஏன் கெடுக்கணும்..., அதையும் செய்யறேன்...", கோபமாக அவளை நெருங்கப் போகையில்..., கிரி அவன் கையைப் பிடித்து தடுத்தான்.

"சார்..., ஐயா...", பக்கத்து படுக்கையை அவன் சுட்டிக் காட்ட..., அப்பொழுதுதான் ஸ்ரீராம் அங்கே இருப்பதையே உணர்ந்தான்.

ஸ்ரீராம் அறையிலிருந்து வெளியேற..., கிரியும் அவரோடு சென்றவன், அறைக்கதவை சாத்திவிட்டு சென்றான்.

அவளோ..., அவன் கோபத்தை கண்டுகொள்ளாமல்..., "வீட்டுக்குப் போகலாம்...", அவன் கண்களை இமைக்காமல் பார்த்து உரைத்தாள்.

"அப்போ..., உனக்கு ஒரு வேலைக்காரனாத்தான் என்னை நினைத்திருக்கியா? நீ வான்னா வரணும்..., செய்ன்னா செய்யணும்..., என் எந்த உணர்வுக்கும் ஒரு மதிப்பும் கிடையாதா...?", கோபமாகவே கேட்டான்.

"சார்..", அறை வாயிலை ஒற்றை விரலால் தட்டிய நர்ஸ்..., கதவைத் திறந்துகொண்டு, வார்ட் பாய், வீல் சேரோடு உள்ளே வந்தாள்.

"சேர் வேண்டாம்..., நீங்க போங்க...", அவள் குரலே..., இப்பொழுது நீங்கள் வெளியே போய் ஆகவேண்டும் என ஒலிக்க, மறு பேச்சின்றி வெளியேறினர்.

“சேரை வச்சுட்டு போங்க…”, அவன் வீல் சேரை இருத்திக் கொண்டான்.

அவள் அவனை கோபமாக முறைக்க…, அவனோ அதைக் கண்டுகொள்ளாமல், “உக்கார்…”, அவளோ…, முகத்தை திருப்பிக்கொண்டு முடியாது என நிற்க, “எதுக்கு இந்த பிடிவாதம்…? உன்னால் நடக்க முடியாது…, சொன்னா கேள்…”, வேறு வழியின்றி அவன்தான் இறங்கிப் போக வேண்டி இருந்தது.

“இங்கே வரும்போது எப்படி வந்தேனோ.., அப்படியே கூட்டி போ…”, இப்பொழுதும் அவன் முகம் பார்க்கவில்லை.

‘பிடிவாதம்…, பிடிவாதம்…’, மனதுக்குள் திட்டியவன்…,

“அதெல்லாம் முடியாது. பேசாமல் உக்கார்…, இல்லன்னா நான் போயிட்டே இருப்பேன்…”, அவன் பிடிவாதமாக உரைக்க…, தன் அருகில் இருந்த வீல் சேரை ஒரே தள்ளாக தள்ளி விட்டவள்…, ஒற்றை காலால் நொண்டி ஆடுவதுபோல் துள்ளி துள்ளி நடந்தாள்.

“இம்சை…”, முனகியவன்…, “ஐஷூ…, உள்ளே வரப்போ எமர்ஜன்சி ஓகே. இப்போ உன்னை தூக்கிட்டு போனால்…, எல்லாம் ஒரு மாதிரி பேசுவாங்க. ஏற்கனவே அந்த நர்ஸ் என்னை நக்கலா பாத்துட்டு போறா. இதில்…, உன்னை தூக்கிட்டு வேற போனால் அவ்வளவு தான்…”, அவன் உரைக்க, கண்கள் மின்ன அவனைப் பார்த்தவள்…, காலை சற்று தாங்கியவாறு தரையில் வைத்தவள், முதல் முறையாக அவனைப் பார்த்து புன்னகைத்தாள்.

அவள் புன்னகையில் சொக்கியவன்…, அவள் தள்ளிவிட்ட வீல் சேரை அவள் அருகில் கொண்டுவர…, இப்பொழுது மறுக்காமல் அமர்ந்து கொண்டாள்.

காரை கிரி அவர்கள் அருகில் பின்பக்கம் கொண்டுவர…, கைத்தாங்கலாக அவளை ஏற்றியவன்…, “நீங்க போங்க…, நான் பிறகு வரேன்…”, கதவில் கை வைத்தவாறு உரைத்தவனை…, அவன் கையைப் பிடித்து இழுத்து உள்ளே ஏற்றினாள்.

“ம்ச்...”, அவன் மறுப்பை அவள் கண்டுகொள்ளவே இல்லை. ஸ்ரீராமும் அவர்கள் விளையாட்டை கண்டுகொள்ளாமல்..., “நான் என் காரிலேயே வரேன்...”, கழண்டு கொண்டார்.

கிரியும் ஒரு விதமான உற்சாகத்துடன் காரைக் கிளப்ப..., வீட்டுக்கு வந்தவள், “இங்கே யாருமே இல்லை...”, காருக்குள் இருந்து இறங்காமல் அவனைப் பார்த்து உரைக்க..., “கிரி...”, அவள் காதுக்குள் மெல்லமாக உரைத்து அவளை கடிந்தான்.

அவளோ காரில் இருந்து இறங்கி..., கதவை அடைத்துவிட்டு அதிலேயே சாய்ந்தவள், பிடிவாதமாக நின்றாள். அவனும் அவளை அதே பிடிவாதத்தோடு பார்க்க..., “கால் ரொம்ப வலிக்குதுடா..., இவ்வளவு நேரமா தூங்க கூட இல்லை...”, அவளது கெஞ்சலில்..., அடுத்த நிமிடம் தன் பிடிவாதத்தை கைவிட்டுவிட்டு, குழந்தைபோல் அவளை கைகளில் ஏந்தி இருந்தான்.

போகும்பொழுது எப்படியோ..., ஆனால் இப்பொழுது..., அவன் கழுத்தில் தன் இரு கரத்தையும் கோர்த்தவள்..., அழுத்தமாக அவன் நெஞ்சில் ஒட்டிக் கொண்டாள். ஒரு நொடி அவள் செய்கையில் தடுமாறியவன்..., அவளை நழுவ விடாமல் இருக்க, அவளை அழுந்த பற்றிக்கொள்ள வேண்டி இருந்தது.

அவளோ..., தன் முகத்தை அவன் நெஞ்சில் புதைத்துக் கொண்டவள், அவன் பிரத்தியேக வாசனையை ஆழ்ந்து அனுபவித்தாள். அவள் செய்கையில்..., படிகளில் அவன் சற்று திணறி ஏறவேண்டி இருந்தது.

‘கொல்றாளே...’, அவன் இதயம் தாறு மாறாக துடிக்க..., எப்பொழுது அறை வரும் என திண்டாடிப் போனான். ஒரு வழியாக படுக்கையில் அவளைக் கிடத்தியவன்..., அவசரமாக விலக முயல..., அவளோ..., அவன் கழுத்தில் கோர்த்திருந்த கரத்தை விலக்கிக் கொள்ளவே இல்லை.

முழுதாக அவள்மேல் படர்ந்திருக்கும் நிலை தான். ஏனோ மிகவும் அவஸ்த்தையாக உணர்ந்தான். அவளை விலக்கித்

தள்ள ஒரு நொடி அவனுக்குப் போதாது. ஆனால்..., அதைச் செய்ய அவனால் முடியாது. தன்னிடம் புதைந்திருக்கும்..., ஆதரவு தேடும் பெண்மையை அவமதிக்க அவனால் முடியாது.

அதே நேரம்..., அவன் உணர்வுகள் அவன் சொல் பேச்சை கேட்க மறுக்க..., “ஐஷூ...”, அவன் குரல் கிசுகிசுப்பாக ஒலித்தது.

அவள்மேல் அழுத்தமாக படர்ந்துகொள்ள அவன் மனம் உந்த..., அதைச் செய்ய தைரியமற்றவனாய்..., தன் இரு கரத்தையும் அவளுக்கு இரு பக்கமும் ஊன்றி இருந்தான். அவளோ..., அவன் நெஞ்சுக்குள் புதைந்திருந்த முகத்தை நிமிர்த்தவே விரும்பவில்லை.

“ஐஷூ..., யாராவது வந்துடப் போறாங்க...”, நிச்சயம் யாரும் வர மாட்டார்கள் எனத் தெரிந்தாலும்..., அவளை கலைக்க வேண்டுமே என உரைத்தான்.

அவளோ..., கழுத்தில் கோர்த்திருந்த தன் கரத்தை.., அவன் பின்னந்தலைக்கு இடம் மாற்றியவள்..., தன் முகத்தை நிமிர்த்திய அதே நேரம்..., அவன் முகத்தை தன்னை நோக்கி இழுத்தவள்..., அவன் நடக்கப்போவதை யூகிக்கும் முன்பே..., தன் இதழ்களை அவன் இதழ்மீது பதித்து விட்டாள்.

அவன் கைகள் பலமிழக்க அவள்மேல் அழுத்தமாக படர்ந்துவிட்டான். தாறுமாறாக எதையோ செய்யச்சொல்லி அவன் உணர்வுகள் பாடாய் படுத்த, அவள் சூழ்நிலையை தான் சாதகமாக்கிக் கொள்ளக் கூடாது என எண்ணியவன்..., அவள் போக்கில் விட்டுவிட்டான்.

அவன் முரட்டு இதழ்களின் வெம்மை அவளை உருக வைக்க, அவன் மீசை முடி அவளை இம்சிக்க..., கீழுதட்டை மென்மையாக பற்றிக் கொண்டாள். அவனிடம் பதிலடி வேண்டி உள்ளம் காத்திருக்க, அவன் அமைதி அவளை சோர்வுறச் செய்தாலும்.., அவன் நெகிழ்வது..., அவன்

தன்மேல் படரும் விதத்தில் புரிய..., சற்று ஆர்வமாகவே தன் செய்கையைத் தொடர்ந்தாள்.

அவனோ..., மூச்சடக்கி காத்திருந்தான். படுகையில் இருந்த அவன் கைகள், இப்பொழுது அவளை சுற்றிக்கொள்ள..., ஒரு கை அவள் முதுகைத் தாங்க, மற்ற கையோ..., அவள் பின்னந்தலையில் பதிந்து, அவளை மொத்தமாக தனக்குள் இறுக்கிக் கொண்டான்.

அவன் அணைப்பில் அவளுக்கு மூச்சு முட்ட..., 'முரடன்...', அவள் அவனுக்கு சட்டிபிகேட் வழங்க...., 'பஞ்சுப்பொதி...' அவளை அணைத்தவன் எண்ணிக் கொண்டான்.

முடியவே கூடாது என அவன் ஏங்க..., மூச்சுக்காற்றின் தேவை அவளை அவனிடமிருந்து விலக வைத்தது. மொத்தமாக கனிந்திருந்த அவன் முகம், அவன் தாபத்தை அவளுக்கு உணர்த்த..., 'இதற்குமேல் என்னால் முடியாது...', தனக்குள் எண்ணியவள்..., விழி திறக்க மறுத்த அவனை தன்னில் சாய்த்துக் கொண்டாள்.

"யூ ஆர் சோ சாப்ட்...", அவள் காதுக்குள் அவன் உளற..., "ம்..., நல்ல கண்டுபிடிப்பு...", மெல்லியதாக நாணமாக சிரித்தாள்.

இருவரின் இதயத்துடிப்பும் மற்றவர் கேட்கும் அளவுக்கு நெருக்கம்..., இம்சையான தருணத்தை..., கெடுத்துக்கொள்ள இருவரும் விரும்பவில்லை.

"ஐ'ம் ப்ளஸ்ட்(blessed)...", அவன் குரலில் தெரிந்த கண்ணீர் தடம்..., அவளை உலுக்கியது.

"நான் உன்கிட்டே சாரி சொல்ல மாட்டேன்..., தேங்க்ஸ்ம் தான்...", அவனை, அவன் மனநிலையை மாற்ற முயன்றாள்.

"எனக்கு வேண்டாம்..., இதுவே போதும்...", அந்த அணைப்பை அவன் இன்னும் இறுக்க..., அவன் தலை கோதியவள்..., அந்த நிமிடத்தை அனுபவித்தாள்.

***

# பகுதி - 23.

கலையவே கூடாது..., விலகவே கூடாது என அவன் மனம் அவனை வேண்ட, அதை கட்டாயமாக மறுத்தே ஆகவேண்டிய கட்டாயத்தில்...., அவள் கைகள் சற்று நெகிழ்ந்த தருணத்தை தனதாக்கியவன், சட்டென அறையை விட்டு வெளியேறி இருந்தான்.

அவன் விலகிய விதத்தையும், வெளியேறிய வேகத்தையும் கண்ட ஐஸ்வர்யாவுக்கு..., முகத்தில் அடி வாங்கிய உணர்வுதான் ஏற்பட்டது. தானாக அவனை முத்தமிட்ட நொடியை இன்னும் கூட அவளால் நம்ப முடியவில்லை.

அவன் அவள் முகம் பார்த்து எதையாவது பேசியிருந்தால் கூட இப்படி உணர்ந்திருக்க மாட்டாளோ என்னவோ. ஆனால்..., அவன் விலகிச் சென்ற விதம், அவளை வெகுவாக காயப்படுத்தியது என்பதுதான் உண்மை.

அதன் வலியையும்.., அவன் செய்கையையும் அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. ‘என்னை அப்படி என்னதாண்டா செய்தாய்...? அன்று என்னை திருமணம் செய்ய சம்மதிக்க வைத்தாய். இன்று..., என்னையே உன்னை நெருங்க வைத்துவிட்டாயே...’, தனக்குள்ளேயே கேட்டுக் கொண்டவளுக்கு, அது காதல் என்பது மட்டும் புரியவே இல்லை.

‘ச்சே..., என்னைப் பற்றி என்ன நினைத்திருப்பான்? அலைகிறேன் என்று எண்ணியிருப்பானோ...? அப்படித்தான் இருக்கும். அதனால் தான் இப்படி ஓடிப் போனான்....’, கண்டதையும் எண்ணி, தன் காதல் மனதை குழப்பிக் கொண்டாள்.

எங்கே..., அவள்தான் அவன்மேல் தனக்கு காதல் வரும் என்பதை சிந்திக்க கூட மறுத்தாளே. ஒரு வேளை..., அது தன் நிலைக்கு இழுக்கு என எண்ணினாளோ..? காதலில் சங்கமிப்பது இரண்டு உள்ளங்கள்தானே தானே தவிர..., அங்கே பணத்துக்கோ, படிப்புக்கோ..., அந்தஸ்த்துக்கோ

இடமில்லை என்பதை எண்ணும் நிலையில் அவள் இருக்கவில்லை.

‘அவனுக்கு அப்படியென்ன திமிர்...? நானா போனால்..., அவன் தள்ளிப் போவானா...?’, கோபம் பெருகியது. அவள் ஒன்றை மறந்துவிட்டாளா..., இல்லை சிந்திக்க மறுத்தாளா என்பது புரியவில்லை..., அது என்னவென்றால், இந்த நேரம்..., அவன் அவளை அடைய எண்ணியிருந்தால், கண்டிப்பாக தான் மறுத்திருக்க மாட்டோம் என்பதுதான் அது.

அவனை தன்னை நெருங்கும் அளவு அனுமதிக்க நினைக்கிறோம் என்றால், அது அவன்மேல் இருக்கும் அதிகப்படியான காதலால் தான் என்பதை அவள் யோசிக்க மறுத்தாள்.

அறையை விட்டு வெளியேறிய வினித்தோ..., வீட்டுத் தோட்டத்திலே தஞ்சம் புகுந்தான். அங்கே நடைபாதையில் மண்டியிட்டு அமர்ந்தவன்..., தன் இரு கரத்தால் முகத்தை மூடியவன், தன் உள்ள உணர்வுகளை அடக்க முடியாமல்..., தன்னை கட்டுப்படுத்த முடியாமல், கண் கலங்கினான்.

அவன் முதுகு அவன் முழு கட்டுப்பாட்டையும் மீறி குலுங்க..., வாய்விட்டு அழவேண்டும் என்ற உணர்வை முயன்று கட்டுப்படுத்தினான். அந்த நிமிடம், தான் வாழ்வதன் அர்த்தம் புரிந்த உணர்வு. தன் வாழ்க்கை சரியான பாதையில் போகும் அறிகுறி. தனக்கென..., வாழ்வில் ஒரு பிடிப்பு, தன்னை நேசிக்கும் ஜீவன் ஒன்றை கண்டுகொண்ட நிறைவு.

அப்படியே வாய்விட்டு சிரிக்க வேண்டும் எனவும்..., அதே நேரம் வாய்விட்டு அழ வேண்டும் எனவும் ஒரு உணர்வு. சொல்லப்போனால்..., தங்கள் அறையை விட்டு அவன் இவ்வளவு வேகமாக வெளியேறக் காரணமே இந்த உணர்வுதான்.

அவனை துரத்திய இந்த உணர்வை, அவள் முன்னால் காட்ட தைரியம் இல்லாமல்..., அவள் முன்னால் தன்

கண்ணீரை காட்ட வெட்கப்பட்டுத்தான்..., அங்கிருந்து ஓடி வந்துவிட்டான்.

தன் வாழ்நாளிலேயே வாங்கிய முதல் முத்தம் அவனை அவ்வளவு உருக்கியிருந்தது. தான் பிறந்தது முதல்..., பெற்ற தாயிடம் கூட உணர்ந்திராத அந்த அணைப்பும்..., நினைவு தெரிந்தது முதல்..., ஆசையாகவோ, பாசமாகவோ..., பாராட்டுதலாகவோ..., கூட பெற்றிராத இதழ் முத்தம்.

குழந்தையாக இருந்தபொழுது ஏக்கமாகவும்..., மாணவ பருவத்தில் எதிர்பார்ப்போடும்..., வாலிப பருவத்தில் ஆதரவாகவும் தாயிடமோ, பெற்றவரிடமோ எதிர்பார்த்து..., ஏங்கி..., ஏமாந்து போன விஷயம்..., எதிர்பாராத நொடியில்..., எதிர்பாராத நேரத்தில்..., எதிர்பார்த்தே இராத ஆளிடமிருந்து..., தன் மனதுக்கினியவளிடமிருந்து..., அதுவும்..., அவ்வளவு இறுக்கத்தில்..., மொத்த நேசத்தையும் குழைத்து..., தன் இதழ்களில் அவள் கவிதை எழுதிய அந்த நிமிடம்...,

அப்படியே உறைந்துவிட மாட்டோமா...? இந்த நிமிடம் கடக்காமல்..., அப்படியே இருந்து விடாதா...? அவன் மொத்தமாக ஏங்கிப் போனான். அவளுக்கு பதிலடி கொடுக்கும் எண்ணத்தை விட..., அந்த முத்தத்தை அனுபவிக்கச் சொல்லி அவன் பிள்ளை மனம் கெஞ்சியது.

ஒரு வளர்ந்த ஆண்மகனாக, முரட்டு முடிவுகளையும் அசால்ட்டாக எடுக்கும், தன் முடிவில் உறைத்து நிற்கும் முழு ஆண்மகனாக மட்டுமே தனக்கு அறிமுகமான அவனுக்குள்..., இப்படி ஒரு குழந்தை மனம் கொண்ட வினித் இருப்பதை அவள் எதிர்பார்த்திருக்க மாட்டாள் தான்.

ஒரு ஆண்மகன் தன் மனைவியிடம் மறு தாயை எதிர்பார்க்கிறான் என்பதை யார் அவளுக்கு உணர்த்துவது? அவனாகவே உரைத்தால் தவிர, அவன் மனநிலை அவளுக்கு புரியப் போவதில்லை...., அப்படி இருக்கையில், இந்த கண்ணாமூச்சியை யார் முடிப்பது?

அவன் தனிமையில்..., அவன் தோள்மேல் அழுத்தமாக ஒரு கை பதிய, திடுக்கிட்டவன்..., சட்டென தன்னை மீட்டுக் கொண்டு எழுந்தான். அங்கே ஸ்ரீராமை எதிர்பார்த்திராதவன்..., “மாமா..., சொல்லுங்க...?”, என்ன சொல்ல எனத் தெரியாமல் தடுமாறினான்.

“வினித்.., என் பொண்ணுக்காக நான் உன்கிட்டே மன்னிப்பு கேட்டுக்கறேன். அவளுக்கு தான் என்ன செய்யிறோம்...? என்ன எதிர்பார்க்கிறோம் என்பதே தெரியலை...”, எப்பொழுதும் இதையே அவனிடம் சொல்ல வேண்டி இருக்கிறதே என வேதனை கொண்டார்.

“லீவ் இட் மாமா..., ஐ’ம் ஒகே..., நான் போய் ஐஸ்வர்யாவை பாக்கறேன்...”, அந்த இடத்தை விட்டு அகன்றான்.

ஸ்ரீராம் அலுவலகம் கிளம்பிவிட..., அவளை தனியாக விட்டுச்செல்ல மனமின்றி, அறையில் சென்றான். அங்கே..., மருந்தின் வீரியத்தில், ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள் ஐஸ்வர்யா. அப்பொழுது அவள் அலுவலக உடையிலேயே இருப்பதைப் பார்த்தவன், அன்று அவள் உடை பற்றி பேசியது நினைவிற்கு வர, சற்று தயக்கமாக அவளை நெருங்கினான்.

அவள் ஜாக்கெட்டில் குத்தியிருந்த ‘பின்’னை கவனமாக நீக்கியவன், மடிப்புக்களை விரித்து, அவள் மார்பில் புடவையை போர்த்தியவன், பெட்ஷீட்டை எடுத்து, அதற்கு மேலே போர்த்திவிட்டு, அவளைப் பார்த்தவாறு, அங்கிருந்த சோபாவில் சென்று அமர்ந்து கொண்டான்.

அதே நேரம்..., கார்த்திக்கை அழைத்து, வேலை சரியாக நடப்பதை உறுதி செய்தவன்.., தன்னால் முடிந்தால் மதியத்துக்கு மேல் வருவதாக உரைத்தான்.

“எனி இஷ்யூ...? இஸ் எவ்ரிதிங் ஃபயின் தேர்...?”, கவலையானான்.

“ஐஸ்வர்யா படிக்கட்டில் ஸ்லிப் ஆகி விழுந்துட்டா. ஹாஸ்பிடல் போயிட்டு இப்போதான் வந்தோம்..., அதான்...”.

“என்ன…? விழுந்துட்டாங்களா? அடி எதுவும் பலமா…?”, கவலையானான்.

“அதெல்லாம் இல்லடா…, ஜஸ்ட் சுளுக்குத்தான்…, ரெண்டுநாள் காலை கீழே வைக்கக் கூடாதுன்னு சொல்லிட்டார். பெயின் கொஞ்சம் இருக்கு. மத்தபடி ஓகே தான்….”.

“ஓகே…, டேக் கேர்…”, உரைத்தவன் வைத்துவிட்டான்.

தன் மடிக்கணினியில் அலுவலக மெயிலைப் பார்த்தவன், கொச்சின், பெங்களூர், செக்கந்திராபாத்…, விசாகபட்டினம், பாம்பே…, டெல்கி என அனைத்து கம்பெனிகளின் ஆடர் பற்றி, அது செயல்படும் விதம் பற்றி, அதை ஆர்கனைஸ் செய்யும் தொழில்நுட்ப விஷயம் என அனைத்தையும் அன்று ஆராய்ந்தான்.

மதிய உணவு வேளை கடந்து…, நேரம் மூன்றைத் தொட…, அப்பொழுதுதான் கண் விழித்தாள் ஐஸ்வர்யா. விழிகளைத் திறக்காமலேயே அவள் கைகள் அருகில் துழாவுவதைப் பார்த்தவன், அந்த தேடல் தனக்கானது என்பதை உணர்ந்து மெல்லியதாக சிரித்துக் கொண்டான்.

‘எப்போ பார் கிட்டவே இருக்கணும்…’, செல்லமாக கொஞ்சிக் கொண்டான்.

அவளோ…, தான் தேடும் பொருள் அருகில் இல்லாமல் போகவே…, சட்டென எழுந்தவள்…, வேகமாக போர்வையை விலக்கிவிட்டு, கீழே இறங்கவே…, கீழே ஊன்றிய காலின் வலி விண்ணென தெறித்த பிறகுதான், தனக்கு அடிபட்டதே அவள் நினைவிற்கு வந்தது.

“ஸ்…, அம்மா…”, அவள் தடுமாறி படுக்கையில் அமரும் முன்னர், ஓடி வந்து அவளை ஒற்றைக் கையால் தாங்கியவன், கீழே விழுந்திருந்த அவள் முந்தானையை மறு கையால் சரி செய்தான்.

“இது எப்படி…?”, வேகமாக அவன் முகம் பார்க்க..,

“இல்ல..., அன்னைக்கு..., புடவையில் தூங்குறது உனக்கு அன்ஈஸியா இருக்குன்னு சொன்னியா...? அதான்..., அந்த ஞாபகத்தில்..., உனக்கு ஹெல்ப் பண்ணலாம்னு...”, அவள் கண்கள் கோபத்துக்குச் செல்ல வார்த்தைகளை நிறுத்திவிட்டான்.

அவளோ..., “அதுக்கு..., தூங்கின பிறகு புடவையை அவுப்பீங்களா?”, சுள்ளென கேட்டாள்.

“ஹேய்..., புடவையை எங்கே அவிழ்த்தேன்...? ஜஸ்ட் பின்னைத்தான்...”, பதறினான். அவன் பதிலில் அவளுக்கு சிரிப்பு வரும்போல் இருக்க, தலையை சற்று குனிந்து கொண்டாள்.

“எனக்கு கால்லதான் அடி பட்டிருக்கு..., கையில் இல்லை...”, தன்னை நிதானித்துகொண்டு பதில் கொடுத்தாள்.

“ஓ..., சாரி...”, அவன் குரல் இறங்கி ஒலிக்க..., “ம்ச்..., இப்போ உன்கிட்டே சாரி கேட்டேனா...?”, அதற்கும் எகிற..., அவனுக்குத்தான் தலை சுற்றியது.

அதன் பிறகும்..., அவளுக்கு நடக்க முடியாமல் இருக்கவே..., உடை மாற்றும் அறைக்கும்..., அவசர தேவைக்கு பாத்ரூம் வரைக்கும் அவன் தேவையை, உடனிருப்பை அவள் நாட..., சந்தோஷமாகவே அதைச் செய்தான்.

ஆனால்..., அவளிடம் வெளிப்பட்ட ஒரு சிறு மாறுதல்..., மீண்டும் அவள் மனதளவில் தன்னைவிட்டு விலகிச் சென்றதை அவனுக்கு உணர்த்தியது. அது மனதை வருத்தினாலும், அதைக் கண்டுகொள்ளாமல்..., உணவு, மாலையில் காபி..., என அனைத்தையும் அறையில் அவளோடு பங்கிட்டுக் கொண்டான்.

அவளுக்குத்தான் மனதுக்குள் ஏதோ ஒரு விஷயம் உறுத்திக் கொண்டே சென்றது. அதை அடக்கவும் முடியாமல், இயல்பாய் அவனிடம் இருக்கவும் முடியாமல்..., ஒரு அவஸ்த்தை.

“என்னை ரொம்ப சீப்பா நினைச்சிருப்ப இல்ல...?”, திடுமென ஒலித்த அவள் கேள்வியை உணர்ந்த பிறகுதான்..., அவள் விலகலுக்கான காரணமே அவனுக்குப் புரிந்தது.

‘அப்படியென்றால்..., நீ அதை உணர்ந்து செய்யவில்லையா...? ஒரு வேகத்தில் செய்துவிட்டாயா...? அதற்காகவா இவ்வளவு நேரமாக வருந்துகிறாய்...?’, அவ்வளவு நேரமாக பிரகாசமாக இருந்த அவன் முகம், சட்டென அடிபட்ட குழந்தையின் முகபாவத்துக்கு மாற..., ‘ஏன் அந்த கேள்வியைக் கேட்டோம்...’ என நொந்து போனாள்.

அவனுக்கு பதில் பேசும் சந்தர்ப்பத்தை அளிக்காமல், அவன் அலைபேசி ஒலிக்கவே..., அதில் ஒளிர்ந்த கார்த்திக்கின் எண்ணைப் பார்த்தவன், தவிர்க்க முடியாமல் அதை உயிர்ப்பிக்க..., அதை டேபிளில் இருந்து எடுக்கப் போகையில்..., ஸ்பீக்கரை தெரியாமல் அழுத்திவிட...,

“சார்..., நான் குமார் பேசறேன். காலையில் இன்னாவோ மேடத்துக்கு சுளுக்குன்னு சொன்னியாம்..., நமக்குத் தெரிஞ்ச ஆயா ஒண்ணு இருக்கு..., சும்மா கை வச்சாலே சரியாப் பூடும்..., நீ மட்டும் சரின்னு சொல்லு..., உடனே இட்டாரேன்...”, அவன் குரல் ஒலித்து முடிக்க, அதே நேரம்..., கார்த்திக்கின் குரல் ஒலித்தது.

“டேய்..., நான் மேடம் ஒத்துக்க மாட்டாங்கன்னு சொன்னால் கேக்க மாட்டேங்கான். விஷயம் கேள்விபட்டதில் இருந்து என் காதை பஞ்சர் பண்ணிட்டு இருக்கான். நீயே சொல்லு...”, அவன் குரலிலும் சிறு எதிர்பார்ப்பு இருக்கவே செய்தது.

நான்கு வருடங்களாக அவளைப் பார்க்கிறார்கள், அவர்களுக்கு அவளைத் தெரியாதா என்ன? ஏழை என்றாலே எட்டடி தள்ளி நிற்பவள்..., அவளுக்கு இவையெல்லாம் எட்டிக்காய் என்பது தெரியுமே. ஆனாலும்..., நண்பனின் மனைவி என்பதால் எழுந்த கரிசனையே இது.

“நீ என்ன மச்சான் சொல்ற...?”, மீண்டும் கார்த்திக்கின் குரல் ஒலிக்கவே..., ஐஸ்வர்யாவை பார்த்தவாறே...,

“என்னடா..., நம்ம குமாரா அது...?”, பேச்சை தொடர்ந்தான்.

“சார்..., அத்தே குமார் தான். இத்தே ரெண்டு மாசத்துக்கு முன்னாடிங்காட்டியும்..., ஐயா கண்டுக்கவே மாட்டார். இப்போன்னா அத்து உண்ற சம்சாரமாச்சே..., மன்சு கேக்கல சார்..., சுளுக்கு எப்படி வலிக்கும் தெரியுமா...? நீ ஒருக்கா கேளேன்..., ஆயா கை மட்டும் மேடம் கால்ல பட்டுச்சு..., சும்மா குதிர கணக்கா நாளைக்கே எழுந்து ஓடும் சார். கேட்டு சொல்றியா...?

“நான் கையோட கூட்டியாறேன்...”, தன் உடன்பிறப்புக்கு ஒன்றைப்போல் அவன் குரல் கெஞ்சிற்று.

ஐஸ்வர்யாவின் முகத்தில், பிடித்தமின்மையும்..., குழப்பமும் ஒருங்கே எழ, “நீ...”, இழுத்தவாறே அவளைப் பார்த்தவன்..., ‘உன் முடிவுதான்..’ என அவளையே பார்க்க, அவள் தலை சரி என்பதுபோல் ஆடியது.

அதை நம்ப முடியாமல் பார்த்தவன்.., “அழைச்சுட்டு வாங்கடா...”, “நெசமாவா..” “உண்மையாகவா...”, குமாரின் குரலும், கார்த்திக்கின் குரலும் ஒருங்கே ஆச்சரியமாக ஒலித்து அடங்கியது.

“பத்து நிமிஷத்தில் அங்கே இருப்போம்...”, உரைத்தவர்கள், சொன்னதுபோல் அங்கே இருக்கவே..., வீட்டுக்கு வெளியே வந்தவன், “எப்படிடா...?”, ஆச்சரியமாக அவனிடம் கேட்க..., “டேய் மச்சான்..., இங்கே கேக்க முன்னாடியே அவன் பாட்டியை ரெடி பண்ணிட்டான். பாட்டியை பாடாப்படுத்தி ரெண்டு வேளை குளிக்க வச்சு..., புதுத்துணி..., எடுத்து கொடுத்து,

“வெத்தலை போடக் கூடாதுன்னு அதை வேற புடுங்கி வச்சு..., இவன் அலும்பு தாங்கலடா. இப்போ மட்டும் நீ வரச் சொல்லல..., பாட்டி வயசான காலத்தில் ஜெயிலுக்கு போனாக்கூட பரவாயில்லன்னு இவனை கொலையே பண்ணியிருக்கும்...”, அவன் உரைத்து முடிக்கவே,

நண்பர்கள் மூவரும் உரக்கச் சிரிக்க, அவர்கள் பேச்சை கேட்டுக் கொண்டு மாடி பால்க்கனியில் இருந்த ஐஸ்வர்யாவும் சிரித்துவிட்டாள்.

“டேய்..., பாட்டி தப்பா நினைக்கப் போறாங்கடா...”, வினித் உரைக்க,

“அது அடுத்த கதை மச்சான். பாட்டிக்கு இடியே விழுந்தால் கூட, பட்டாசு வெடிக்கறாங்களான்னு கேக்குற அளவுக்குத்தான் காது கேக்குது. இதில் இவன் விஷயத்தை எப்படிச் சொன்னான்னுதான் புரியலை..., ஆனா பாரு, என்னைய பாத்த உடனே..., இந்த தம்பிக்கா சுளுக்குன்னு கேக்குது...”, கார்த்திக் கேலி செய்தான்.

“அட போட..., இதென்ன பிரம்மாதம்...., ரெண்டு தடவை விழுந்து காமிச்சு, அங்கே போகணும்னு சொன்னா..., உடனே ஆட்டும்னு சொல்லுச்சு. இதென்ன பிரம்மாதம்...”, அவன் உரைக்க, ஐஸ்வர்யாவுக்கே ஒரு மாதிரியாக போயிற்று.

இவர்களையெல்லாம் இதுவரைக்கும் ஒரு துரும்பாக கூட அவள் மதித்தது இல்லை. ஆனால்..., நட்புக்காக எதையும் செய்யத்தயாராக இருக்கும் இவர்களை வியக்காமல் இருக்க முடியவில்லை.

வினித்தும் நெகிழ்ந்தவன்..., “சரி..., உள்ளே வாங்கடா...”, அழைக்க, இருவருமே ஒரு சேர மறுத்துவிட்டார்கள். வினித்தும், ஒரு அளவுக்குமேல் வற்புறுத்த முடியாமல், பாட்டியை மட்டும் அழைத்துக் கொண்டு சென்றான்.

மாடி ஹாலில் ஒட்டியிருந்த பால்க்கனிக்கு முன்னால் அவள் இருக்க, டீபாமேல் நீட்டியிருந்த அவள் கால் பக்கம் சென்ற அந்த வயதான பாட்டி, துரையிடம் கேட்டு வாங்கியிருந்த விளக்கெண்ணையை அவள் காலில் பதமாக தேய்த்துவிட்டு...,

“சொத்தூண்டு வலிக்கும் பொறுத்துக்க தாயி...”, உரைத்தவர்..., அவள் காலை தன் இரு கைகளிலும் ஏந்த..., அவர் செய்யப்போவதை யூகித்தவனாய்..., சட்டென அவள்

பின்னால் சென்றவன், அவள் முகத்தை திருப்பி, தன் தோளில் புதைத்துக் கொண்டான்.

அடுத்த நிமிடம்..., அந்த வயதான பெண்மணியின் கைகளுக்கு எப்படித்தான் அவ்வளவு வலு கிடைத்ததோ என்னும் அளவு, அவள் காலை ஒரே திருபாக திருப்ப..., சுள்ளென எழுந்த வலியில், குப்பென ஒரு வியர்வையும்..., 'ஆ' வென கத்த முடியாமல்..., வினித்தின் தோளை பலம் கொண்ட மட்டும் கடித்துவிட்டாள்.

அவள் கொடுத்த வலியை பொறுத்துக் கொண்டவன்..., அவள் கடித்ததை விடும் வரைக்கும் அசையக் கூட இல்லை. அவன் தோள் சதை அப்படியே கொத்தாக வெளியே வரவில்லையே தவிர, அவள் பல்த்தடம் முழுதாக அவன் தோளில் பதிந்து, ரத்தம் கட்டியே விட்டது.

காலில் உணர்ந்த வலி, அவளை ஒருவித மயக்கத்துக்கு உட்படுத்த, அப்படியே அவளை இருக்கையில் சாய்த்தவன்..., "ஐஸ்வர்யா..., ஐஸ்...", அவள் கன்னம் தட்ட..., "தம்பி..., தண்ணி தெளி..., அப்படியே சூடா எதையாச்சும் கொடு. நாளைக்கி சரியாப்பூடும்...", அந்த பாட்டி எழுந்து சென்றுவிட்டார்.

நண்பர்களை கவனிக்க கூட செல்லாமல் தேங்கியவன், துரையிடம் ஏதாவது காசு கொடுக்கச் சொல்லி உரைக்க..., அவர் கொடுத்த பணத்தை வாங்கிக் கொண்டு அவர்கள் அனைவரும் சென்றே விட்டார்கள்.

மறுநாள் காலையில் எழுந்தவளுக்கு..., காலை ஊன்றி நடக்கும் அளவுக்கு கால்வலி குறைந்திருக்க..., "கிரேட்...", அவனிடம் தன் காலைக் காட்டி முணுமுணுத்தாள்.

அடுத்து வந்த நாட்களில்..., ஏனோ கார்த்திக்கையும், குமாரையும் கண்டு அவள் முகம் திருப்பிக் கொள்ளவில்லை. அதற்காக அவர்களிடம் பேசினாள் என்பதில்லை..., மாறாக..., அவள் மாற்றத்தை அவர்களும் உணரும் அளவு நடந்துகொண்டாள்.

ஒரு வேளை..., அவர்கள் முகத்தை ஏறெடுத்து பார்த்ததே பெரிய மாற்றம் தானோ.

அதே நேரம்..., வினித்துக்கும், அவளுக்கும் நடுவில் இணக்கம் குறைந்த உணர்வு. அது ஏனென்று அவளுக்குப் புரியவே இல்லை. இத்தனைக்கும் வீட்டில் அவளிடம் பேசாதவன், அவளிடம் பேசவே செய்தான். ஆனாலும்..., அந்த வித்தியாசத்தை அவள் உணர்ந்தாள்.

அன்றும் அப்படித்தான்..., இரவு உணவை முடித்தவர்கள், அறைக்கு உறங்கச் செல்ல..., “ஐஸ்..., உன்னோட போன்...”, உரைத்தவன், அவள் முகம் பார்க்காமல் செல்ல, ‘ஒருவேளை இதுவோ...?’ எண்ணியவள், அதை நிவர்த்திசெய்யும் வேலையில் இறங்கினாள்.

சட்டென ஒரு தயக்கம்..., இதுவரை அவனை ஏய் என்றோ.., டேய் என்றோ தான் அழைத்திருக்கிறாள். அலுவலகத்தில் அழைப்பு என்பதே இருக்காது. அப்படியிருக்கையில்..., அவன் பெயரைச் சொல்ல திடுமென ஒரு தயக்கம்..., அன்று மருத்துவமனையில் அவளை மீறி அவனை அழைத்த அழைப்பு, அவளுக்கு மறந்தே போனது.

இப்பொழுது எப்படி அழைக்க எண்ணியவள்..., எதுவும் தோன்றாமல்.., “ம்கும்...”, இரண்டு முறை கனைத்துப் பார்த்தாள்.

அவன் திரும்பியும் பாராமல் போகவே..., “கூப்ட்டா என்னன்னு கேக்க மாட்டியா...?”, தன் அருகில் இருந்த அவனது தோள் தொட்டு திருப்பினாள்.

“கூப்ட்டியா...? எப்போ...? எப்படி...?”, அவளை கேள்வியாக ஒரு நொடி ஏறிட்டு, அவன் கேட்க..., அவள் என்னவென்று உரைப்பாள்...? விழித்தவள்..., நொடியில் சுதாரித்து..., “டேய்.., கரடி.., வேண்டாம்...”, கடுப்பானாள்.

“ஓ..., கரடின்னு கூப்ட்டியா...? சரி..., என்ன...?”, அவன் சாதாரணமாக கேட்க, கடுப்பானாள்.

“ஒண்ணும் இல்லை..., தூங்கலாமா...?”, கேட்டவள், பட்டென படுக்கையில் படுத்துக் கொண்டாள். அவளுக்கு தெரிந்துவிட்டது..., அவன் தன் கண்களைப் பார்த்து பேச மறுக்கிறான் என. ஆனால்..., அதை அவனிடம் என்னவென்று கேட்பது...? அது அவளால் முடியாத காரியம்.

எப்பொழுது உறங்கினாள்..., எப்பொழுது அவன்மேல் சென்று சாய்ந்தாள் எதுவும் அவளுக்கு நினைவில்லை. ஆனால்..., நள்ளிரவில், அவன் அலைபேசி அதிரும் ஒலியில், சட்டென கண் விழித்தாள்.

அவள் விழித்துவிடக் கூடாதே என நொடியில் அவன் அலைபேசியை எடுத்தாலும், அதற்குள் கண்விழித்த மனைவியை, அவள் தோளில் தட்டி உறங்க வைக்க, அவன் செய்கையில் அவள் தூக்கம் சுத்தமாக கலைந்து போனதுதான் உண்மை.

‘அப்படின்னா..., இத்தனை நாட்களாக நான் என் இயர்போனை தேடாததன் காரணம் இவன் தானா...? இப்படித்தான் என்னை உறங்க வைக்கிறானா?’ அவள் எண்ண..., “ஒண்ணும் இல்லடா..., தூங்கு...”, மெல்லியதாக ஒலித்த அவன் சமாதானமும்..., மீண்டும் தன் தோளில் தட்டிய அவன் கரமும், அதுதான் உண்மை என்பதை உணர்த்த, உறக்கம் முற்றாக கலைந்து போனது.

அதைவிட..., “என்ன...?”, உச்ச பதட்டமாக ஒலித்த அவன் குரலும்..., ‘அவள் எழுந்துவிடக் கூடாதே..., என பதறிய அவன் செய்கையும்..., அவளை குழந்தையை படுக்கையில் சாய்ப்பதுபோல் கிடத்தியவன்..., அந்த நேரத்திலும், மெல்லியதாக அவள் நெற்றியில் இதழ் ஒற்றி, அவசரமாக விலகினான்.

அவளுக்கு என்னவோ..., அந்த நேரம்..., தான் ஒரு குழந்தையாகிப் போன உணர்வு. அப்படியே அவனுக்குள் ஒட்டிக்கொள்ள வேண்டும் என தோன்ற, அதைச் செய்ய முடியாமல்..., “எப்போ...? எங்கே...? யார் பார்த்தா...? ஃபயர் சர்வீஸ்க்கு போன் போட்டாச்சா...? இதோ இப்போ நான் வரேன்...”, அடுக்கடுக்காக அவன் குரல் பதட்டமாக

ஒலிக்க..., அதற்குமேல் அவளால் படுக்கையில் இருக்க முடியவில்லை.

யாருக்கோ..., எங்கேயோ..., ஆபத்து எனச் செல்கிறான் என்பது மட்டும் புரிய, இதுவரை அவன் உடைமாற்றும் அறைக்குள் இருந்தால் அங்கே சென்றிராதவள்..., முதல் முறையாக..., அந்த அறைக்கதவை திறந்துகொண்டு உள்ளே சென்றாள்.

அந்த நேரம் அங்கே அவள் வருவாள் என்பதை எதிர்பார்த்திராத வினித், சட்டென படுக்கையில் கிடந்த டவ்வலை எடுத்து, தன் இடுப்பில் முடிய, அங்கே அவன் உள்ளாடையோடு நிற்பான் என்பதை எதிர்பார்த்திராத ஐஸ்வர்யா ஒரு நொடி திகைத்தாள்.

அங்கிருந்து செல் என மூளை கட்டளை இட்டாலும், சட்டென அதைச் செய்ய முடியாமல் அவள் தடுமாற, தன்னைச் சுதாரித்த வினித், “ஏய்..., ஐஷூ..., என்னடா முளிச்சுட்டியா...? இரு..., டிரஸ் மாத்திட்டு வந்து உன்னோட இயர்போனை எடுத்து தரேன். தூங்கு சரியா...? நான் உடனே கம்பெனிக்கு போகணும்...”, அவள் பதிலை எதிர்பாராமல், உடை மாற்றத் துவங்கினான்.

அவன் உடை மாற்றும் இடத்தில் தான் இருக்கிறோம் என்பதை உணராமலே, “என்ன சொன்ன...? ஆபீஸ் போறியா...? இந்த நேரமா? அங்கே என்ன...?”, படபடத்தாள்.

“நான் போயிட்டு வந்து சொல்றேன்...”, அவன் கிளம்ப முயன்றான்.

“போயிட்டு வந்தா...? அதெல்லாம் முடியாது, இப்போ சொல்...”, பிடிவாதம் பிடித்தாள்.

அவளிடம் இதற்குமேல் சொல்லாமல் முடியாது என்பதை உணர்ந்தவன், “நம்ம ஆபீஸ்ல..., அந்த ஸ்க்ராப் புக் போட்டு வச்சிருந்த கொடவுன்ல ஃபயர் ஆக்சிடென்ட்டாம்..., தீ எந்த நேரம் வேண்ணா..., நம்ம மெயின் ப்ளாக் வந்துடும். உடனே போய், புக் எல்லாம் செக்கியூர் பண்ணனும், இப்போ பேச நேரமில்லை..., நான் போறேன்...”, கிளம்பினான்.

ஒரு நொடி அவன் சொன்ன வார்த்தைகளை கிரகிக்க நின்றவள், அடுத்த நிமிடம், அறையை விட்டு அவன் வெளியேறும் முன்னர், அவன் கையைப் பிடித்து தடுத்திருந்தாள்.

“ம்ச்..., ஐஸ்..., இப்போ நான் போய் ஆகணும். ஓ..., உன் இயர்போனா...?”, கேட்டவன்..., அங்கிருந்த ஒரு டிராயரைத் திறந்து அதை அவள் கையில் திணிக்க, அதை வாங்கியவள் படுக்கையில் வீசி எறிந்தாள்.

அவள் செய்கையில் எரிச்சலானவன், “எப்போ விளையாடறதுன்னு ஒரு இதே கிடையாதா...? வழியை விடு...”, கோபமாக உரைத்தவன், செல்வதிலேயே குறியாக இருந்தான்.

“நீ இப்போ எங்கேயும் போகப் போறது கிடையாது...”, அவன் கரத்தை அழுத்தமாக பற்றிக் கொண்டாள்.

“உளறாதே ஐஸ்..., நான் இங்கே டைம் வேஸ்ட் பண்ண முடியாது..., செக்கியூரிட்டி போன் பண்ணார். எந்த நேரமும் எதுவும் நடக்கலாம். ரெண்டு செக்கியூரிட்டியால் டப்புன்னு எதுவும் செய்ய முடியாது. விடு...”, அவள் கையை விலக்க முயன்றான்.

“அதுக்கு..., நீ போய் தீயை அணைக்கப் போறியா...? அதெல்லாம் அவங்க பாத்துப்பாங்க. உன்னை நான் அனுப்ப மாட்டேன்...”, சட்டென அவனை தாவி அணைத்துக் கொண்டாள்.

அப்பொழுதுதான் அவள் மனநிலையே அவனுக்குப் புரிந்தது. போனால் தனக்கு எதுவும் ஆபத்து வந்துவிடுமோ என அவள் அஞ்சுவது புரிய, மனதுக்குள் உற்சாக ஊற்று.

“நான் என்ன போய் தீயிலே...”, வேண்டுமென்றே அவன் பேச, சட்டென அவன் வாயை தன் கரத்தால் மூடினாள்.

“இப்போ என்ன..., உனக்குப் போகணும்.., அதானே..., நானும் வரேன்..., வா..., இரு ட்ரெஸ் மாத்திட்டு வரேன்...”, அவள் உள்ளே செல்லப் போனாள்.

அவள் உள்ளே சென்றவுடன், தான் வெளியே போய்விடலாம் என அவன் எண்ண.., அவன் மனதை புரிந்தவளாக..., “நீயும் வா..., சேர்ந்தே போகலாம்..”, அவனை இழுத்துக்கொண்டு, உடை மாற்றும் அறைக்குள் சென்றவள், கதவையும் மறக்காமல் உள்ளே தாழ் போட்டாள்.

“ஏய்..., என்ன.., விளையாடுறியா...?”, அவன் கேட்க, “கொஞ்சம் கண்ணை மூடிக்கோ..., இல்லையா..., எனக்கு ஒண்ணும் பிரச்சனை இல்லை...”, அவனுக்கு முதுகு காட்டி நின்றவள், தன் நயிட்டியில் கை வைக்க, வேகமாக திரும்பி நின்றுகொண்டான்.

விழிகளை மூடினால் கற்பனைகள் தீர்ந்துவிடுமா என்ன...? இரண்டு நிமிடங்களில் அவன் முன்னால் வந்து நின்றவள்..., “ரொம்ப நல்ல புள்ளைதான்..., வா...”, அவள் சுடிதாரில் இருப்பதைப் பார்த்தவன், கடமையை எண்ணி..., வேகமானான்.

கீழே இறங்கியவன்..., அவள் மறுத்தும் கேளாமல், வேறு வழி இல்லாமல் ஸ்ரீராமை எழுப்பியவன், விஷயத்தை உரைத்துவிட்டு, “இவளை பாத்துகோங்க, நான் போறேன்...”, அவன் வார்த்தைகள், அவளுக்குள் பிரளயத்தை மூட்டியது.

‘எதுவும் விபரீதமாக நடந்துவிட்டால்...?’ ஏற்கனவே ஸ்ரீராம் உரைத்த அவன் செய்கை அசந்தர்ப்பமாக நினைவுக்கு வர, ஸ்ரீராமுக்கோ, அந்த சாமியார் சொன்னது நினைவிற்கு வந்து கலவரமூட்டியது. அவர் என்ன செய்ய என தடுமாற,

அவளுக்கு எங்கிருந்துதான் அவ்வளவு வேகமும், கோபமும் வந்ததோ, “டேய்..., இப்போ என்னை கூட்டி போகல..., பிறகு ஏண்டா இவளை கூட்டி போகலன்னு நீ ரொம்ப பீல் பண்ணுவ...?”, அவள் கோபக் குரலில், அடுத்த நிமிடம் திரும்பி வந்தான்.

ஸ்ரீராம் நிம்மதிப் பெருமூச்சு விட்டவர்..., “அதான் இவளும் கிளம்பிட்டாளே மாப்ள..., நீங்க அவளை கூட்டி போங்க...,

நான் பின்னாடியே வரேன்...”, வேறு வழியின்று அவளை அழைத்துக்கொண்டு விரைந்தான்.

கார் அவன் கையில் அம்பாய் பாய, பத்து நிமிடங்களுக்குள் அவர்கள் அலுவலகத்தை அடைந்தார்கள். அவன் எண்ணியது போலவே, மெயின் ப்ளாகில் தீ பரவியிருக்க, இரண்டு தீயணைப்பு வண்டிகள் தீயை அணைக்க போராடிக் கொண்டிருந்தார்கள்.

சுற்றிலும் சில வண்டிகளும், ஆட்களும் இருக்க, சில அடி தூரத்துக்கு முன்பே அவர்கள் வண்டியை நிறுத்தவேண்டி வந்தது. காரில் இருந்து இறங்கியவன், “நீ இங்கேயே இரு..., நான் போயிட்டு வரேன்..., கார்த்திக் வேற வரானாம்...”, அவளுக்கு தகவல் சொன்னவன், நடந்தான்.

ஆனால்..., வினித் அங்கே முடியாமல் தடுத்தாள் ஐஸ்வர்யா. “நீ போகக் கூடாது. எல்லாம் அவங்க பாத்துப்பாங்க...”, அவளது பிடிவாத முகமும், வார்த்தையும், அவனை அப்படியே கட்டிப் போட்டது.

ஆனாலும்..., “என்ன நிலைன்னு பாத்துட்டு வந்துடுறேன். கொஞ்சமாவது ஹெல்ப் பண்ணலாமே..., வேடிக்கை பாக்கவா வந்தேன்...? எத்தனை கோடி ரூபாய் தெரியுமா...? கண்ணு முன்னாடி அதை எப்படி அழிய விட...?”, ஒரு வேளை பணத்தைச் சொன்னால் மசிவாளோ என அவன் எண்ண...?

“நீ போனால்..., நானும் உள்ளே வருவேன்..., உன்னை தனியா அனுப்ப மாட்டேன். என்னால் உன்னை அங்கே அனுப்பிட்டு வெளியே தவிக்க முடியாது. அவ்வளவு தான்..., இப்போ என்ன..., உனக்குப் போகணும் அவ்வளவு தானே. வா...”, கோபமாக உரைத்தவள், அவன் கையை பிடித்துக் கொண்டு முன்னால் நடக்க, அங்கே இருக்கும் சூழல் மறந்து, அவளை இறுக அணைத்தவன், அவள் இரு கன்னத்திலும் நூறு முத்தம் பதித்தான்.

தான் சொன்ன வார்த்தைகளின் அர்த்தமும், அவன் செய்கையின் விளக்கமும் புரியாமல், விழி விரிய

அவனைப் பார்த்தாள் ஐஸ்வர்யா.

***

# பகுதி - 24.

அடுத்த சில நிமிடங்கள் என்ன நடந்தது என்பது அவளுக்கு நிச்சயம் நினைவில்லை. அவள் ஒரு மோன நிலையில் சிக்கியிருக்க, அங்கே வேகமாக வந்த கார்த்திக்கையும், குமாரையும் பார்த்தவன், வேகமாக அவளை விட்டு விலகி நின்றான்.

“மச்சான்…, வந்துட்டியா.., வா போகலாம்…”, வினித் அவளை விட்டு நகர, அவளோ…, அங்கே இருக்கும் மற்றவர் பற்றிய கவலையே இல்லாமல், அவனை விட மாட்டேன் என பிடித்துக் கொண்டாள்.

சரியாக அதே நேரம் ஸ்ரீராம் வர, “மாமா…, உங்க பொண்ணு நிலைமையை புரிஞ்சுக்க மாட்டேன்னு அடம் பண்றா…, நீங்க இவளைப் பாருங்க. நானும் இவங்களும் பாக்கறோம்…”, அவள் கரத்தை வலுக்கட்டாயமாக பிரித்து அவரிடம் கொடுத்துவிட்டு முன்னால் ஓடினான்.

“வினு…, வேண்டாம்…”, தந்தையின் கையில் அவள் திமிர, அவள் அழைப்பை கேட்ட கார்த்திக், சட்டென திரும்பி வந்தவன்,

“நீங்க கவலைப்படாதீங்க…, நான் வினித்தை பாத்துக்கறேன்…”, அவளிடம் உரைத்தவன், “குமார்…, வாடா…”, இருவரும் உள்ளே ஓடினார்கள்.

ஏற்கனவே அங்கே நிறையபேர் அங்கே செயல்பட்டுக் கொண்டிருக்க, ஐஸ்வர்யாவின் புலன்கள் அனைத்தும், உள்ளே சென்ற தன்னவனைப் பற்றியே சிந்தித்தது.

கார்த்திக் வந்துவிட்டது அவளுக்கு மலையளவு நம்பிக்கையை கொடுத்தது. நிச்சயம் அவன் பார்த்துக் கொள்வான் என்ற நம்பிக்கை. குமாரும் உடன் இருக்க.., யானை பலம் கொண்ட உணர்வு.

ஆனாலும்…, அவர்களையும் மீறி ஏதாவது நேர்ந்துவிட்டால்…, அவர்களை மீறி இவன் செயல்பட்டால்…? எப்படியும் குமாரும், கார்த்திக்கும் அவனை தனியாக

விட்டுவிட மாட்டார்கள் என்ற நம்பிக்கை இருந்தாலும், ஒரு மனைவிக்கே உரிய பதட்டம்.

தனக்கு உயிரானவனுக்கு எதுவும் நேர்ந்துவிடக் கூடாதே என்ற தவிப்பு. தெய்வத்தையே வேண்டியிராதவள்..., முதல் முறையாக ‘அவனை எந்த ஆபத்தும் இல்லாமல் காப்பாத்திடு...’ தன் இஷ்ட தெய்வத்திடம் வேகமாக மனு போடவும் வைத்தது.

“அப்பா..., நாமளும் போகலாம்..., என்னால் இங்கே இருக்க முடியலை...”, அவள் விடாமல் புலம்ப,

“இப்போ அங்கே போனால்..., அவங்க உன்னை பாப்பாங்களா? இல்ல வேலையைப் பாப்பாங்களா...? அதான் அவங்க எல்லாம் இருக்காங்களே, கொஞ்சம் பொறுமையா இரும்மா...”, அவரும் விடாமல் சமாதானம் செய்தார்.

அடுத்த ஒரு மணி நேரத்தில் நெருப்பு முற்றாக அணைக்கப் பட, முகம் முழுக்க கரியைப் பூசியவாறு வெளியே வந்தார்கள். ஒரே பாய்ச்சலில் அவனை நெருங்கியவள்..., “உனக்கு ஒண்ணும் இல்லையே...?”, பதட்டமாக வினவியவள்..., “இதென்ன முகமெல்லாம் இப்படி இருக்கு...?”, தன் ஷாலை எடுத்து அவன் கன்னம் துடைத்தாள்.

அவள் செய்கையை பாராமல் பார்த்தவாறு..., மனம் முழுக்க பரவிய நிம்மதியோடு..., ஸ்ரீராம் கேட்ட கேள்விகளுக்கு பதில் உரைத்துக் கொண்டிருந்தான் கார்த்திக்.

குமாரும் அதே வேலையை..., விழிகள் தெறித்துவிடும் வியப்போடு நோக்கியவன், கார்த்திக்கை ஜாடையாகப் பார்க்க, ‘அப்படித்தான்...’ என விழி மூடி சமிக்ஞை செய்தான்.

“கார்த்திக்..., புக் மொத்தமும் போயிடுச்சா...? என்ன நிலைமை...”, கவலையாக கேட்டார்.

அனைத்து புத்தகங்களும் இன்சியூரன்ஸ் செய்திருந்தாலும்..., எப்படியும் எண்பது சதவீதம் மட்டுமே அது கிடைக்கும். அதைவிட..., தீயில் எரிந்த புத்தகங்களின் கணக்கும், அதை மீண்டும் அச்சடிப்பது, கொண்டு வருவது.., நினைக்கவே அவருக்கு தலை சுற்றியது.

“சார்.., ஸ்க்ராப் புக் மட்டும்தான் மொத்தமா போச்சு. எப்பவும் நாம அதை கணக்கு வைக்காததால்..., பிரச்சனை இல்லை. அதே மாதிரி..., ஏற்கனவே நாம கம்பெனியை அம்பத்தூர்க்கு ஷிபிட் பண்ணுவதால், புது புக் எல்லாம் எதுவுமே இங்கே வரலை.

“நம்ம ஆடரை எல்லாம் கூட, கொச்சியில் இருந்துதான் பிளேஸ் பண்ணிட்டு இருக்கோம். இங்கே டுவன்ட்டி ப்ரசன்ட் புக் தான் இருந்தது. அதுவும் எல்லாம் க்ரவுண்ட் ப்ளோர்ல தான் இருக்கு. இப்போ நெருப்பு பிடித்தது எல்லாம் ராக்ல தான்.

“நஷ்டம்னு பார்த்தால்..., ராக்..., மேலே இருந்த ஃபேன்..., லைட்..., கொஞ்சம் ஓல்ட் ஸ்டாக் புக்..., பஞ்சிங் மெஷின், ட்ராலி..., இப்படி திங்க்ஸ் தான்..., நல்ல வேளை..., வினித் நேத்துதான் புதுசா இங்கே லோட் வந்த ரெண்டு லாரியை கூட, அம்பத்தூர் திருப்பி விட்டான்.

“இல்லன்னா அது மொத்தமும் போயிருக்கும்...”, அவன் பேச்சில் பெரிய நிம்மதியே எழுந்தது.

“பிறகு ஏன் இவ்வளவு நெருப்பு...?”, அவர் கேட்க,

“அதான் எல்லாம் மர ராக்..., அது மட்டும் இல்லை.., பூச்சி எல்லாம் போக, நேத்து ஆட்கள் வந்து வேலை பாத்தாங்களே..., எல்லாம் சேரவே நெருப்பு கப்புன்னு பத்திகிச்சு..., மத்தபடி எதுவும் இல்லை...”, ஆசுவாசமாக உரைத்தான்.

“அதான் அங்கே எதுவும் இல்லையே..., பிறகு ஏன் இவ்வளவு பதட்டம்? அதுவும் இவ்வளவு வேகமா போனீங்க...?”, புரியாமல் கேட்டார்.

“அது…, நாங்க முக்கியமா நாங்க போனதே…, அந்த ஸ்ட்ரெச் ரேப்பர் மெஷினை காப்பாத்த முடியுமான்னு பாக்கத்தான். ஆனா…, முடியலை…”, கவலையாக உரைத்தான்.

அவன் பேச்சைக் கேட்டவள்…, வினித்திடமிருந்து கலைந்து…, “வாட்.., அந்த ஒத்த மெஷினுக்கு வேண்டியா…, உயிரை பணையம் வச்சு போனீங்க? உங்களுக்கென்ன பயித்தியமா…?”, கோபமாக கத்தினாள்.

அதற்கு கார்த்திக் பதில் உரைக்காமல் வினித்தைப் பார்க்க,

“இல்ல…, அந்த மெஷின் போன வாரம்தான் வந்துது. அதுவும் என்னோட பிரஷரால் வாங்கிய மெஷின்…, அதான்…, சாரி…, நான் இப்படி நடக்கும்னு எதிர் பாக்கவே இல்லை. கொஞ்சம் முன்னாடி நான் உள்ளே வந்திருந்தால் எப்படியாவது அதை காப்பாத்தி இருப்பேன்…”, தன்னால் ஒரு பெரும் பொருள் நஷ்டமாகி விட்டதே என்ற கவலை வினித் முகத்தில் அப்பிக் கிடந்தது.

“யூ…, இடியட்…, அப்படின்னா…, அவ்வளவு வேகமா…?”, அவன் சட்டையைப் பிடித்து உலுக்கியவள்…, அவன் மட்டும் முன்னால் வந்திருந்தால் என்ன ஆகி இருக்கும் என்ற நினைவில் உடல் நடுங்க, வேகமாகத் திரும்பி காருக்கு சென்றாள்.

“என்ன வினித்…, இதுக்குப்போய்…”, ஸ்ரீராமும் கடிந்துகொண்டார். அவருக்கும் தன் சிந்தையை விட்டு வெளியே வர முடியவில்லை. ஒரு வேளை…, விவகாரமாக ஏதாவது ஆகி இருந்தால்…,

“அப்படியில்லை மாமா. தேவையில்லாமல் நான் செய்த வேலை…, அதான் கொஞ்சம் டென்ஷன் ஆயிட்டேன். ஆனா…, இப்போ நஷ்டம் நஷ்டம் தானே….”, அவனால் அதை ஏற்க முடியவில்லை.

அங்கே முதலில் தெளிந்தது கார்த்திக் தான். “டேய் மச்சான்…, முதல்ல அவங்களை போய் பார்….”, அவன் கார் நின்ற இடத்தை சுட்டிக் காட்டினான்.

“இங்கே…”, அவன் இழுக்க…, “அதான் நாங்க இத்தனை பேர் இருக்கோமே…, நாங்க பாத்துக்கறோம்…”, அவனை அனுப்பினான்.

மனைவியை எப்படி எதிர்கொள்ள என்ற தயக்கத்தோடு காருக்குச் சென்றான். அவளோ…, “காரை எடு…, வீட்டுக்குப் போகலாம்…”, முகத்தில் அவ்வளவு கோபம்.

“போயும் போயும்…, இதுக்காகவா…? அப்படியென்றால்…, இப்பொழுதும் அவன் உயிர் அவனுக்கு ஒரு பொருட்டே இல்லையா…? அப்போ நான்…’, அவளுக்குள் பல குழப்பம்.

அடுத்த கால்மணி நேரத்துக்குள் அறையில் இருக்க…, அவளோ எதையும் பேச மறுத்தாள். எங்கே பேசினால்…, வார்த்தைகளை ஏறுக்கு மாறாக சிதற விட்டு விடுவோமோ என அஞ்சியே அவ்வாறு நடந்து கொண்டாள்.

அவனோ…, முதல் வேலையாக குளித்துவிட்டு வந்தவன்…, அவளிடம் எப்படிப் பேசவென்று தெரியாமலும்…, அவள் நேசம் தன்மேல் இருக்கும் அளவு புரிந்தவனாக, அது ஏற்படுத்திய பரவசம் மீதியுமாக சற்று நேரம் அவள் அருகில் வந்து அமைதியாக அமர்ந்தான்.

அவள் அமைதியாக இருக்கவே…, தானாகவே அவளை தன்மேல் சாய்த்துக்கொள்ள, அவள் கரம் அவன் கழுத்தை சூழ்ந்த சற்று நேரத்தில் அவள் உறங்கிவிட்டதை உணர்ந்தவன், தானும் அவள் அருகில் படுத்துக் கொண்டான்.

அடுத்த நாட்களில் அலுவலகத்தை மாற்றும் வேலையில் முனைப்பாக இறங்க, பழைய அலுவலகம் மூன்று மாடிகளாக இருக்கவே, புத்தகங்களை எடுக்கவும், வைக்கவும் அடுக்கவும் என பல சிரமங்கள் இருக்க, புதிய அலுவலகம் ஐம்பதாயிரம் சதுர அடியில்…, பரந்து விரிந்து அழகாக இருந்தது.

அனைத்தையும் பார்த்து பார்த்து செட் செய்தவன்…, ஒவ்வொரு விஷயத்திலும் அவள் ஆலோசனையையும்

கேட்டுக் கொண்டான். அவளும் உற்சாகமாகவே கலந்து கொண்டாள்.

அதென்னவோ முதல் முத்தத்துக்குப் பிறகு எழுந்த ஒருவித மனப்பான்மையில், அவனை நெருங்குவதை அவள் தவிர்க்க, அன்று அவள் கேட்ட கேள்விக்குப் பிறகு, தானும் அவளை நெருங்குவதை தவிர்த்தான்.

அவள் மனதுக்குள், தன்மேல் இருக்கும் நேசம் அவனுக்குப் புரிந்தாலும், அதை ஒத்துகொள்ள மாட்டேன்..., என அவள் பிடிக்கும் பிடிவாதம்..., அவனால் அதை உடைக்க முடியவில்லை.

அன்று கூட அப்படித்தான்..., புது அலுவலகம் செயல்படத் துவங்கியிருக்க, அங்கே வேலைக்கு வந்த காண்டிராக்ட் பையன்களில் இருவர், ஒழுங்காக அலுவலகம் வராமல் போகவே, அவர்களது முதலாளியிடம், இவர்கள் வேண்டாம் என அவன் தெளிவாக உரைத்து, அவர்களை வேலையை விட்டே நிறுத்திவிட்டான்.

அவர்கள் அந்த பகுதியில் வசிப்பவர்கள் என்பதால்..., அவர்கள் கம்பெனியின் யூனியன் ஆட்களில் இருவரும் லோக்கலில் இருந்து வருவதால், அவர்களுக்காக, வினித்திடம் பேசச் சென்றார்கள்.

அன்று ஏற்கனவே கேஸ் விஷயத்தில் சற்று டென்ஷனாக இருந்தவன், “நீங்களே இங்கே சும்மா சம்பளம் வாங்கிட்டு இருக்கீங்க. இதில் அவங்களுக்கு வேற சப்போட்டா...? முதல்ல நீங்க வாங்குற சம்பளத்துக்கு வேலை பாருங்க...”, சற்று காட்டமாகவே சொல்லி அனுப்பிவிட்டான்.

அவனிடம் இப்படி ஒரு பதிலை எதிர்பார்த்திராத அவர்கள், கோபத்தில்..., அவன் பைக்கின் சீட்டை பிளேடால் கீறியவர்கள், அவன் பைக்கின் கண்ணாடியையும் உடைத்துப் போட்டார்கள்.

இந்த அலுவலகத்தில்..., எல்லா இடத்திலும் சிசி டிவி வைத்து பார்த்துக் கொண்டிருந்தவள், தன் கணவனின் வண்டியை அவர்கள் உடைப்பதைப் பார்த்தவள்..., அடுத்த

நிமிடம்..., “சந்தியா...”, அவள் அழைத்த அழைப்பில், பக்கத்து கேபினில் இருந்த அவள் அடித்து பிடித்து ஓடி வந்தாள்.

“இங்கே பார்..., இவங்க ரெண்டுபேருக்கும் உடனே டிஸ்மிஸ் ஆடர் ரெடி பண்ணிட்டு வா...”, அவள் டிவியை சுட்டிக் காட்டி பேச, அவள் குரலுக்கு அங்கே விரைந்திருந்த வினித், “என்ன ஆச்சு மேம்...?”, அவள் அருகில் வந்தான்.

“நீ ஏன் இன்னும் இங்கேயே நிக்கற..? போ...”, நீண்ட நாட்களுக்குப் பிறகு அவள் கோபத்தைக் கண்டாள் சந்தியா.

சட்டென அங்கிருந்து அவள் விலக, “எதுக்கு இவ்வளவு கோபம்? அவங்க ஏதோ கோபத்தில் செய்யிறாங்க..., அதுக்குபோய்...”, அவன் டிவியைப் பார்த்தவாறே உரைத்தான்.

அவளோ..., “இது என் கம்பெனி..., இங்கே என்ன செய்யணும்னு நான்தான் முடிவெடுப்பேன். என் கம்பெனியோட விபி வண்டியை உடைக்கும் அதிகாரத்தை அவங்களுக்கு யார் கொடுத்தது....? இது உனக்கான மரியாதை கிடையாது. என் கம்பெனியின் விபிக்கான மரியாதை...”, கோபம் குறையாமலே உரைத்தாள்.

அவள் பதில் அவனுக்கு சற்று வலிக்கவே செய்தது. அவனுக்கு நன்றாகத் தெரியும்..., இதுவே பழைய ஐஸ்வர்யாவாக இருந்தால்..., ‘உன் வண்டியை அவன் உடைத்தால்..., அதுக்கு கம்பெனி எப்படி பொறுப்பாகும்? போய் வேலையைப் பார்...’ என அசால்ட்டாக உரைத்திருப்பாள்.

அதை உணர்ந்தவன்..., “நிஜமாவே அவ்வளவு தானா...? அதுக்காகத்தானா?”, தன் ஏமாற்றத்தை..., காதல் வலியை மறைக்கமுடியாமல் கேட்டே விட்டான்.

அவன் கேள்வியில் அவள் ஆவி துடித்தாலும்..., அவளுக்குள் ஒட்டிக் கொண்டிருக்கும் அந்த பணக்கார

ரத்தம்..., அவனுக்காகத்தான் இதைச் செய்தேன் என சொல்ல விடாமல் தடுத்தது.

“அப்போ எனக்காக இல்லையா...?”, உருகிப் போனது அவன் குரல்.

அவளோ..., தன்னை மேலும் கடினப்படுத்தியவள், “இந்த ஐஸ்வர்யா தேவிக்கு.., அவள் நியாயங்கள் தனி...”, இளக்கமே இல்லாமல் உரைக்க, அவள் போட்டுக்கொள்ளும் வேலிகளை உடைக்க முடியாமல் போராடி சோர்ந்தான்.

‘அவனுக்காகவா...? அவன் எனக்காக ஏதாவது பார்த்தானா? அவன் பிடிவாதம் தானே அவனுக்குப் பெரிது. அப்போ எனக்கு மட்டும் என்னவாம்...’, அவன் நியாயங்களை புரிந்துகொள்ள மாட்டேன் என கண்களை மூடிக்கொள்ளும் அவளை என்ன செய்ய?

அன்று புப்ளிஷேர் மீட்டிங் இருக்க..., அத்தோடு மாலையில் ஒரு பார்ட்டிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்க, அங்கே கூட்டத்துக்கு சென்றவர்கள், அங்கே பிரதாப்பை எதிர்கொண்டாள்.

பிரதாப்புக்கு எப்பொழுதும் அவள் மேல் ஒரு கண் இருந்தது. அவளை திருமணத்துக்கு பேசுகையில்..., அவள் அழகோடு..., கணக்கிலடங்கா சொத்தும் தனக்கு வரப்போகிறது என அவன் எதிர்பார்த்திருக்க, அது இல்லாமல் போனதோடு..., அவளிடம் வேலை பார்க்கும் ஒருவனை அவள் திருமணம் செய்ததைத்தான் அவனால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

மீட்டிங் துவங்கும் முன்பே..., அவளைப் பார்த்தவன்..., “எங்கே...? உன் கோட்டீஸ்வர மாப்பிள்ளையைக் காணோம்? ஓ..., அவர் கம்பெனியை பாத்துகறாரோ...?”, நக்கலாக கேட்டுவிட்டு நகர்ந்திருந்தான்.

அதன் பிறகு ஏனோ அவளால் அந்த மீட்டிங்கை தொடர முடியவில்லை. ஆனாலும்..., அவன் முன்னால் தன்

தோல்வியை ஒத்துகொள்ள முடியாமல், பிடிவாதமாக அமர்ந்திருந்தாள்.

காதல் என வந்துவிட்டால் மனம் பலகீனமாகிவிடுமோ? மனதுக்குப் பிடித்தவனை ஏதாவது சொல்கையில், உள்ளம் காயப்படுவதும், பலகீனமாவது...? அதை அறியாமலே அனுபவித்தாள்.

இதுவே பழைய ஐஸ்வர்யாவாக இருந்திருந்தால்..., அவன் முகத்தை பெயர்க்கும் அளவுக்கு எதையாவது சொல்லியிருப்பாள். ஆனால்..., இந்த ஐஸ்வர்யாவுக்கு வினித் மட்டுமே சிந்தையில் நின்றான்.

அதே நேரம்..., அவள் கரமோ, தன் அலைபேசியில் இருந்து அவனுக்கு குறுஞ்செய்தியை அனுப்பி இருந்தது. அதைப் பார்த்தவனது புருவம் முடிச்சிட..., தன் தாடையை தேய்த்துக் கொண்டான்.

மாலையில் பார்ட்டிக்கு செல்வதாகத்தான் அவன் முடிவெடுத்து இருக்க, ‘உடனே வா...’ என்ற அவள் செய்தியை தவிர்க்கவும் முடியாமல், அங்கே செல்லவும் முடியாமல் அமர்ந்திருந்தான்.

அந்த நேரம்..., நிச்சயம் தன்னை அவள் அருகில் எதிர்பார்க்கிறாள் என்பது மட்டும் புரிய, எதைபற்றியும் யோசிக்காமல், கிளம்பி விட்டிருந்தான். மீட்டிங் ஹாலில் அவனைப் பார்த்தவுடன்..., யானை பலம் கொண்டாள்.

தன் தனிமையிலும், துன்பத்திலும் அவன் அருகாமையை நாடுவது எதனால் என்பதை மறந்தும் அவள் யோசிக்கவில்லை. அதை வன்மமாக பார்த்துக் கொண்டிருந்தான் பிரதாப்.

உள்ளே நுழைந்தவனை..., கண்ணசைவில் தன் அருகில் அழைத்தவள், தன் அருகில் இருத்திக் கொண்டவள், மற்றவர் அறியாதவாறு அவன் கரத்தை கோர்த்துக் கொண்டாள்.

தானும் அவள் கரத்தை இறுக்கி, அவளுக்கு தான் இருப்பதாக நம்பிக்கை அளித்தவன், “என்னடா..., சின்னப் பிள்ளை மாதிரி...”, அவன் சின்னக் குரலில் கேட்க, அங்கேயே அவனை இறுக்க அணைத்துக்கொள்ள வேண்டும் என்ற வேகத்தை அடக்கிக் கொண்டாள்.

மதிய உணவு இடைவேளையில் கூட, அவன் அருகாமையை விட்டு செல்லவில்லை. ‘ஏன் இப்படி...?’ அவன் எண்ண..., அதற்கான விடை உடனே கிடைத்தது.

அவள் உணவை முடித்துக்கொண்டு கை கழுவச் செல்ல, வினித்தை நெருங்கியவன், “மாப்பிள்ளை இன்னும் கூஜாதான் தூக்கறார் போல...?”, நைசாக விஷம் ஏற்ற,

“அதில் உங்களுக்கு ரொம்ப வருத்தம் போல..., சான்ஸ் கிடைக்கலையேன்னு.....”, அவனும் அசராமல் பதில் கொடுக்க, அவன் முகம் விகாரமானது.

தன் ப்ளேட்டில் இருந்த உணவை நிதானமாக வினித் உண்ண, ஆத்திரமாக அங்கிருந்து எழுந்து சென்றான். அதைப் பார்த்தவாறே அவள் வர, “மூட்டைப்பூச்சிக்கெல்லாம் நீ எப்போ பயப்பட ஆரம்பிச்ச ஐஸ். மடியில் கணம் இருந்தால் தான், வழியில் பயம் இருக்கும்...”, அவள் விழிகளுக்குள் உற்று பார்த்து உரைத்தவன்,

“நான் நைட் பார்ட்டிக்கு வரேன். இப்போ ஆபீஸ்ல கொஞ்சம் வேலை இருக்கு...”, கிளம்பிவிட்டான்.

அவன் என்னவோ சாதாரணமாகத்தான் அதை உரைத்தான். ஆனால் அவளுக்குத்தான்..., மனதுக்குள் பூகம்பம். ‘அப்படின்னா..., என் மனசுக்குள் களங்கம் இருக்குன்னு நினைக்கறாரா...?’ அப்படி நினைக்க கூட அவளால் முடியவில்லை.

கலங்கும் மனதை..., சட்டென இறுக்கிக் கொண்டாள். மீட்டிங் முடியும்வரை, முரட்டு மனதோடு உலாவியவள், மாலையில் அவனை பார்ட்டி ஹாலில் பார்த்த பொழுது,

அவள் இறுக்கத்தையும் மீறி, முகம் மலர்ந்தது என்னவோ உண்மை.

இதைப் பார்த்த பிரதாப்புக்கு மேலும் எரிந்தது. எப்படியாவது அவர்களை பிளவுபடுத்தியே ஆக வேண்டும் என்ற வேகம். தன் அருகில் பிள்ளை சுமந்த வயிற்றோடு மனைவி அருகில் இருப்பது அவன் கண்களுக்கு தெரியாவே இல்லை.

மாறாக..., ஒரு வார்த்தை கூட பேசிக்கொள்ளாமல் இருந்தாலும், இருவரின் முகத்திலும் இருந்த அமைதி..., பூரிப்பு..., நிறைவு..., மனம் காந்தியது.

“ஹப்பா...”, நீண்ட நேரமாக ஒரே இடத்தில் அமர்ந்திருந்ததால், இடுப்பு வலிக்க, தன்னை சற்று ஆசுவாசித்துக் கொண்டாள் பிரதாப்பின் மனைவி.

அவள் குரலில் கலைந்தவனுக்கு..., அவள் வயிறு பார்வைக்குப் பட, அவன் முகத்தில் ஒரு விகாரமும், ஒரு வெற்றிப் புன்னகையும் எழ, இருக்கையில் இருந்து எழுந்து, மனைவியையும் அழைத்துக்கொண்டு அவர்கள் அருகில் சென்றான்.

“ஹல்லோ...”, இருவருக்கும் பொதுவாக உரைத்தவன், அவர்கள் எதிரில் அமர்ந்தான்.

“ஹாய்...”, தானும் பதில் கொடுத்தவன், அமைதியாக அமர்ந்து கொண்டான். ஐஸ்வர்யாவோ அவனை கண்டுகொள்ளவே இல்லை.

“உங்களை எங்க வீட்டு விசேஷத்துக்கு அழைக்கத்தான் வந்தேன். அடுத்த மாசம் என் மனைவிக்கு வளைகாப்பு...”, தந்தை ஆன கௌரவம் அவன் முகத்தில் வழிந்தது.

‘இதை ஏன் இங்கே வைத்து சொல்கிறான்...?’, அவன் மனைவி அவனை ஏறிட,

பிரதாப்போ..., “நாங்க விசேஷம் வைக்கற அளவுக்கு வந்தாச்சு. நீங்க எப்போ நல்ல விஷயம் சொல்லப் போறீங்க...? யாரோ அன்னைக்கு ஒரு ஆம்பளையைத்தான்

நான் கல்யாணம் பண்ணிக்க ஆசைப் பட்டேன்னு சொன்னாங்க. இப்போ என்னன்னா.... ஒண்ணும் வேலைக்கு ஆகலை போல....", அவன் பேச்சில் அங்கிருந்த மூவரின் முகமும் அருவருத்துப் போனது.

அவன் இப்படிப் பேசுவான் என எதிர்பார்த்திராத அவன் மனைவி..., "என்னங்க...", அவன் கையை அழுத்த...,

"பிஜேஎம் பப்ளிஷரோட வருங்கால வாரிசு..., என் அடையாளம்..., என் கௌரவம்..., எங்கே..., சாந்தி தேவியின் பரம்பரை தழைக்குமா...? இல்லையென்றால்...", அவன் மேலும் கொச்சையாக பேச,

ஐஸ்வர்யாவுக்கு எங்கிருந்துதான் அவ்வளவு கோபம் வந்ததோ..? "ச்சீ..., சீ...., இதெல்லாம் ஒரு பிழைப்பா...? இருட்டு அறைக்குள் உடம்பை மட்டுமே அனுபவிக்கும் உனக்கெல்லாம்..., மனைவியின் மனசெங்கே புரியும்? ஒரு நிமிஷம் அவ முகத்தைப் பார்...", பிரதாப்புக்கு தன் மனைவியின் முகத்தை ஏறிட முடியவில்லை.

இதுவரை..., ஐஸ்வர்யாவை காயப்படுத்தவேண்டும்..., குதறவேண்டும் என மட்டுமே எண்ணியவனுக்கு..., தான், தன் மனைவிக்கு துரோகம் செய்கிறோம் என்ற நினைவே இல்லாமல் போனது.

புத்திக்குள் ஏறியிருந்த ஒருவித அகங்காரம்..., ஆணவம்..., அவளை வீழ்த்த முடியவில்லையே என்ற வேகம்..., ஐஸ்வர்யாவை காயப்படுத்த வேண்டும் என்ற அவன் எண்ணம்..., பூமராங்காக மாறி அவன் மனைவியை காயப்படுத்திய விந்தை..., அவன் இதை எதிர்பார்க்கவே இல்லை.

"காதலில் உருவான குழந்தையாக இருந்தால் உன்னால் இப்படி பேச முடியுமா? காமத்துக்கு மட்டுமே பிள்ளை பெறப்போகும் உனக்கு, எங்களைப் பற்றி பேசும் அருகதை கிடையாது. முதலில் உன் வாழ்க்கையை காப்பாற்றிகொள்ளப் பார். பிறகு மத்தவங்களை ஆராயலாம்...",

“நீங்க வாங்க..., இவனெல்லாம் ஒரு மனுஷனா...?”, தன் கணவனின் கை பற்றி எழுப்பியவள்..., கிளம்பிவிட்டாள்.

ப்ரதாப்பின் மனைவி, விருட்டென எழுந்து வேகமாக வெளியேற..., அதைப் பார்த்தவனுக்கு..., அப்பொழுதுதான் தான் செய்த மடத்தனத்தின் அளவு புரிந்தது. காலம் கடந்த புரிதல்..., யாருக்கு என்ன செய்ய முடியும்? இனிமேல் அவன் வாழ்க்கையில், அவன் மனைவி அவளை ஏற்றுக் கொள்வாளா?

ஒரு வேளை அவன் தன் காதலை, தன் மனைவிக்கு புரிய வைத்தால், உணர வைத்தால்..., அவள் மனமும் மாறலாம். பிரதாப் மனைவியின் பின்னால் ஓடினான்.

வினித் நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு ஐஸ்வர்யாவின் பின்னால் செல்ல..., அவள் மனதுக்குள் அடுத்த ஈகோவை பிரதாப் விதைத்திருக்கிறான் என்பதை உணராமலே போனான் வினித்.

***

# பகுதி - 25.

வீட்டுக்கு வந்த மகளின் முகம் வழக்கமான அமைதியில் இருக்காமல், குழப்பத்திலும் கோபத்திலும் இருப்பதைப் பார்த்த ஸ்ரீராம், “வினித், பார்ட்டி நல்லபடியா முடிஞ்சுதா...?”, மகளைப் பார்த்தவாறே அவனிடம் கேட்டார்.

“ரொம்ப நல்லபடியா முடிஞ்சுது மாமா....”, அவன் உரைக்க, மகளை ஜாடையாக அவர் பார்க்க, ‘சும்மா...’ என்னும் விதமாக கண்ணை சிமிட்ட, நிம்மதியாக மூச்சு விட்டார்.

அவர்களுக்குள் சீக்கிரமே அனைத்தும் சரியாகிப் போகும் என்ற நம்பிக்கையை,அந்த விபத்து அவருக்கு உணர்த்தியிருக்க, தன் மகள் மனதுக்குள் வினித் இருக்கிறான் என்பதை அறிந்த பிறகு, அவரது கவலை பெருமளவு குறைந்து போனது என்பது உண்மை.

ஆனால்..., அவள் தான் காதலை உணராமல், அதை அறிய முற்படாமல், ஆராயாமல்..., தன் கௌரவத்துக்குள் உழல்வது பாவம் அவருக்குத் தெரியாமல் போனது.

ஸ்ரீராமிடம் சற்று நேரம் உரையாடியவர்கள், தங்கள் அறைக்குள் நுழைய, அவள் உடை மாற்றாமல் படுக்கையில் சென்று அமர, அவள் தன்னிடம் பேச விரும்புவது புரிய, அவள் அருகில் சென்று அமர்ந்தான்.

பொதுவாக அவள் அமைதி அவனுக்குள் பெரிய கலவரத்தையே மூட்டும். அவள் கோபமாக கத்தினால் கூட அதை அத்தோடு அவன் மறந்துவிடுவான். ஆனால்..., அவள் அமைதி..., அதுவும் அந்த ஃபயர் விபத்து நடந்த பிறகு, அடுத்த ஒரு வாரம் அவள் நடந்துகொண்ட விதம்..., அவனால் அதை இன்றும் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை.

அவள் மனதுக்குள் என்ன நினைக்கிறாள் என்றும் புரியாமல், இயல்பாய் அவள் நடக்காமல், ஒரு வித்தியாசமான அவள் நடத்தை..., அவளை மீறிய அமைதி, அலுவலகத்தில் ஈடுபாடு இன்மை, தங்கள் அறைக்குள்,

அவனை தவிர்க்கவும் முடியாமல், தன்னோடு இணக்கமாக நடக்கவும் முடியாமல், அவள் கோபத்தையும் காட்ட முடியாமல், தன் நேசத்தையும் வெளிப்படுத்த முடியாமல் அவள் தவித்த தவிப்பு…

வாய் திறந்து அவள் பேசியிருந்தாலோ, சண்டை போட்டிருந்தாலோ அது அத்தோடு முடிந்திருக்கும். ஆனால்…, அதைச் செய்யாமல்.., அவளுக்குள் புதைந்திருக்கும் நேசத்தை கூட வெளிப்படுத்த மறுத்த அவள் பிடிவாதம்…, அவனும் தன்னை கட்டுப்படுத்திக்கொண்டு அமைதியாக இருந்து பார்த்தான்.

ஒரு அளவுக்குமேல் அவனால் முடியாமல் போக, அவளை மென்மையாக அணைத்தவன்…, அவள் காதுக்குள் தன் நேசத்தை…, உரைக்க…, அவன் உதிர்த்த அந்த ஐ லவ் யூ மட்டுமே அவள் இறுக்கத்தை கொஞ்சம் தளர்த்தியிருந்தது.

‘அப்படியென்றால் இத்தனை நாள் என் நேசத்தையா எதிர்பார்த்தாள்? என் அன்பின்மேல் அவளுக்கு சந்தேகமா? இல்லையென்றால் வேறு எதுவும் குழப்பமா…?’ அவனால் புரிந்துகொள்ள முடியவில்லை என்றாலும், தன் நேசத்தை அவள் எதிர்பார்ப்பதை புரிந்த பிறகு, காலையில் எழும்பொழுது அவள் நெற்றியில் இதழ் ஒற்றி அவன் உரைக்கும் காலை வணக்கம் துவங்கி…., ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் மென்மையாக அவளை அணைத்து விலகும் வேளையில் கூட தன் நேசத்தை வெளிப்படுத்த துவங்கிய பிறகே அவள் இயல்புக்கு திரும்பினாள்.

அப்படி இருக்கையில்…., இந்த அமைதி எதில் போய் நிற்கும்…? அவள் அமைதியை தாங்க முடியாமல்…, அவளை தன் தோளில் சாய்த்தவன், “என்ன ஐஷூ…, அதான் அவன்கிட்டே சரியா பேசிட்டியே…., பிறகு என்ன? இப்போ என்ன குழப்பம்…?”, அவள் நாடியைப் பிடித்து நிமிர்த்தினான்.

அவன் போட்டிருந்த ‘கோட்’ காலரை இறுக பற்றியவள்…, அவன் முகத்தை ஏறிட்டு, அவன் கண்களுக்குள் உற்று பார்த்து…, “எனக்கு குழந்தை வேணும்…”, அவள் உரைத்த

அடுத்த நிமிடம்..., அவ்வளவு நேரம் கனிந்திருந்த அவன் முகம் இறுகிப் போக..., அத்தோடு தாள முடியாத துயரை அவன் கண்கள் வெளிப்படுத்த, அவன் கண்களையே வெறித்தவள், குழம்பிப் போனாள்.

“வேண்டாம் ஐஷூ..., என்னால் முடியாது...”, குரலில் இவ்வளவு வலியை வெளிப்படுத்த முடியுமா? அவன் செய்தான்..., முதல் முறையாக அவளிடம் தன் மறுப்பை வீட்டில் அழுத்தமாக பதிவிட்டவன், தன் கோட்டில் இருந்த அவள் கையை மெதுவாக விலக்கிவிட்டு, அறையை விட்டு வெளியேறினான்.

அவன் செய்கையில் ஸ்த்தம்பித்து போனாள். ‘நான் அப்படியென்ன கேட்டேன்...? எனக்கு குழந்தை வேண்டும் என்று தானே கேட்டேன்...? இவனிடம் கேட்காமல் வேறு யாரிடம் கேட்பதாம்...?’, மனம் முழுக்க கோபம் மட்டுமே வியாபித்தது.

‘எப்பொழுதும் என்னை அவமானப்படுத்துவதே அவனது வேலையாகப் போயிற்று. அவனுக்கு இதில் என்ன கஷ்டமாம்...?’, அவளால் தன்னையே சமாதானம் செய்ய முடியவில்லை.

நெகிழ்வான தருணத்தில் தான் கொடுத்த இதழ் முத்தத்தையே அவமானமாகக் கருதியவள்..., அவனிடம் வாய்மொழியாக கேட்டு, அவன் மறுத்ததை அவளால் எப்படி சாதாரணமாக எடுக்க முடியும்?

அப்படியே அவனை கடித்துக் குதறும் வேகம் எழுந்தது. அதே நேரம்..., அவன் முகத்தில் கவிழ்ந்த வேதனையின் காரணம் அவளுக்கு புரியவே இல்லை.

‘ஒரு வேளை..., அவன்...’, அந்த யோசனையை முழுதாக முடிக்கக் கூட அவளால் முடியவில்லை. அவன் முழு ஆண்மகன் என்பதில் அவளுக்கு எந்த சந்தேகமும் இருக்கவில்லை.

ஏற்கனவே எதற்காகவும் தான் ஏங்கக் கூடாது என எண்ணுபவள், அவன் தானாகவே தன் தேவையை,

ஆசையை, விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும் என நினைப்பவள், இன்று அவன் தான் வாய்விட்டு கேட்ட பிறகும் விலகிச் சென்ற விதம்...?

சாந்தி தேவியின் வம்சம் வளர்ந்தே ஆகவேண்டும்..., அதை அழிய விடமாட்டேன்..., பிடிவாதம் முளைத்தது.

அது அடுத்து வந்த நாட்களில் அவள் அலுவலகத்தில் வெளிப்பட்டது. அவள் கோபம், முழுதாக அவன்மேல் பாய்ந்தது. அது விபரீத விளைவுகளை ஏற்படுத்தப் போவதை அவள் உணரவே இல்லை.

புதிதாக ஏற்படுத்திய வேர்ஹவுஸ் ஒரு வழியாக செட்டாகி இருக்க, அங்கே லோக்கலில் இருக்கும் லேபர் சங்க ஆட்கள் அன்று அவளை வந்து சந்தித்தார்கள்.

அவளோடு வினித்தும் இருக்கவே..., அவர்கள் வருவதை அறிந்தபொழுதே, “எதையும் கமிட் பண்ணிடாதீங்க...? யோசித்து சொல்வதா சொல்லி அவங்களை அனுப்பிடுங்க...”, அவளிடம் உரைத்திருந்தான்.

அவளோ..., ‘நான் மட்டும் நீ சொன்னால் கேக்கணும்..., ஆனா.., நீ மட்டும், நான் சொன்னால் கேக்க மாட்டியோ..., பாத்துக்கறேன்...’, அவள் விழி அந்த செய்தியை அவனுக்கு பறைசாற்ற,

“வேண்டாம் ஐஷூ..., பெர்சனலையும் ஆபீஸ் விஷயத்தையும் குழப்பிக்காதே...”, முதல் முறையாக கணவனாக அலுவலகத்தில் மாறினான்.

“எல்லாம் எனக்குத் தெரியும்...?”, முகத்தை வெடுக்கென அவள் திருப்பிக்கொள்ள, ‘எதுவோ சரியில்லாமல் போகப் போகிறது...’, எண்ணியவனால் எதுவும் செய்ய முடியவில்லை.

அவளைப் பார்க்க வந்த அந்த வயதானவரை..., அவள் அமைதியாக ஏறிட, “அம்மா..., வணக்கம்..., நாங்க இங்கே லோக்கல் சங்க தொழிலாளர்கள். பொதுவாக எங்க

ஏரியாவுக்கு வரும் புது கம்பெனிகளில், எங்க ஆட்கள் தான் வேலைக்கு இருப்பாங்க.

“அதாவது லோட் இறக்குறது, ஏத்துறது..., இந்த வேலை மட்டும் நாங்கதான் செய்வோம். வெளியே இருந்து ஆட்கள் வரதை நாங்க அனுமதிக்க மாட்டோம்.

“நீங்க அதுக்காக பதட்டப்பட வேண்டாம். நீங்க அவங்களுக்கு கொடுக்கும் கூலியில் பாதி பணம் கொடுத்தால் போதும். தினமும் நீங்க கூப்பிடுற நேரம் நாங்க இங்கே இருப்போம். வயசானவங்க எங்களால் என்ன செய்ய முடியும்னு நீங்க யோசிக்க வேண்டாம்.

“நம்ம பசங்க வந்து செய்வாங்க. சட்டுன்னு முடிச்சுடுவாங்க..., நீங்க என்ன சொல்றீங்க...?”, அவர் வார்த்தைகளை கோர்த்து, தேர்ந்தெடுத்து பேச, வினித்தை ஒரு பார்வை பார்த்தவள், அவன் வேண்டாம் என தலை அசைக்க, பிடிவாதமாக...,

“நீங்க நாளைக்கு உங்க ஆட்களை வரச் சொல்லுங்க..., பத்து பேரை அனுப்புங்க...”, உரைத்து விட்டிருந்தாள்.

‘நீ செய்தது சரியில்லை ஐஷூ...’, அவளிடம் பார்வையில் உரைத்தவன், வெளியே வந்து..., “அவளுக்கு இனிமேல் தான் இருக்கு பார். அவ்வளவு சொல்லியும் கேக்காமல்..., வேலியில் போன எதையோ எடுத்து, வேட்டிக்குள் விட்டாச்சு..., பத்து நாள் போனால் தெரியும்...”, தாங்க முடியாமல் சந்தியாவிடம் பொரிந்துவிட்டு சென்றான்.

அவன் எதற்காக இவ்வளவு கவலைப்படுகிறான் என்பது புரியாமல், அவனைப் பார்த்தவள், ‘கண்டிப்பா எதுவோ இருக்கு...’, எண்ணிய சந்தியாவுக்கு, அது என்னவாக இருக்கும் என்பதுதான் புரியவில்லை.

அடுத்த நாள்முதல் அவர்களும் வந்துவிட, வேலையில் எந்த குழப்பமும் இல்லாமல், விரைவாகவே நடந்தது. அதைப் பார்த்தவள், வினித்தை மிதப்பாக ஒரு பார்வை பார்க்க..., ‘எத்தனை நாள்...?’ என்ற பாவனையில் அவனும் திரும்பி நடந்தான்.

அதே நேரம்..., அவன் வண்டியை கிழித்தார்கள் என்ற காரணத்தால், டெர்மினேட் செய்த ஊழியர்களின் துணைவிமார் அங்கே வர, “ஐயா..., அம்மாகிட்டே பேசுங்கையா...? வீட்டில் புள்ளை குட்டி எல்லாம் கஷ்டப்படுது. இந்த வயசுக்கு மேலே எப்படி வேற வேலைக்கு போவார்...? கொஞ்சம் தயவு பண்ணுங்கையா...”, அவனிடம் கெஞ்சினார்கள்.

அவனுமே எத்தனையோ நாள் அவளிடம் அதைப்பற்றி பேசிவிட்டான். பலன் என்னவோ பூஜ்யம் தான். ஒரு வேளை இப்பொழுது தன்மேல் இருக்கும் கோபத்தில் இப்பொழுது எதையாவது செய்வாளா...? யோசனை பளிச்சிட, அவள் அறைக்குச் சென்றான்.

‘என்ன...?’ கேள்வியோடு அவனை ஏறிட...,

“முருகா, வேலப்பன் அவங்க மனைவிமார் வந்திருக்காங்க....”, அவன் நிறுத்த, “அதுக்கென்ன இப்போ..., அதான் எல்லாம் முடிச்சாச்சே..., கேஸ் வேற போட்டிருக்காங்க..., எல்லாம் கோர்ட்டில் பாத்துக்கட்டும்...”, இளக்கமே இல்லாமல் உரைத்தாள்.

“ஐஷூ..., அவங்களுக்கு வேலை கொடுக்கலை என்றாலும்..., அவங்க செட்டில்மென்ட் பணத்தையாவது கொடுத்தால் அவங்களுக்கு உபயோகமா இருக்கும். கொஞ்சம் புரிஞ்சுக்கோ... பாவம் அவங்க”, அவனுக்குத் தெரியும்..., அவள் பிடிவாதத்தை எதனாலும் கலைக்க முடியாது என்று. ஆனாலும் முயன்றான்.

“மத்தவங்க எல்லாம் பாவம்..., அப்போ நான்...?”, அவள் எதற்கும், எதற்கும் முடிச்சு போடுகிறாள் என்பதை உணர்ந்தவன், வாயடைத்துப் போனான்.

இயலாமையாய் அவளைப் பார்த்தவன், பார்வையை அவளிடமிருந்து திருப்பிக் கொள்ள, இருக்கையில் இருந்து பட்டென எழுந்தவள், “பேசுடா..., இவ்வளவு நேரம் நிறைய பேசின..., இப்போ பேசு. ஏன்..., இப்போ மட்டும் வாயடைச்சு போச்சா...?”, ஆத்திரமாக அவனை நெருங்க, அதே நேரம்

சரியாக, அவள் அறையின் கதவு தட்டும் ஓசை கேட்க, அங்கிருந்து வெளியேறினான் வினித்.

‘போய்ட்டான்..., இதுக்கு மட்டும் வாயே தொறக்க மாட்டான். இன்னைக்கு அவனுக்கு இருக்கு...?’, அவள் பொறுமையும் குறைந்துகொண்டே வந்தது.

அன்று அந்த பிரச்சனையை ஒழித்தவன், அடுத்த பிரச்சனையாக யூனியன் ஆட்கள் ‘ஓ டி’ வேண்டும் என அவனை அணுக, மற்றவருக்கு கிடைக்கும் சலுகைகள், அவர்களுக்கும் கிடைத்தால் நன்றாக இருக்கும் என எண்ணியவன், தன் விஷயத்தை தள்ளி வைத்துவிட்டு, அவளைக் காணச் சென்றான்.

அவள் பார்வை..., ‘என்னிடமிருந்து நீ தப்பிக்க முடியாது...’ என உரைக்க, அதை தவிர்த்தவன், “ஓ டி’ விஷயமா பேச வந்தேன்....”, தான் வந்த விஷயத்தை அவன் உரைக்க, “பேசலாமே..., தாராளமா பேசலாம். ஆனா நான் ஏற்கனவே கேட்ட கேள்விக்கு நீ பதில் சொல்வதாக இருந்தால்...”, அவள் விடுவதாக இல்லை.

“ம்ச்..., இது ஆபீஸ் ஐஷூ...”, அவளைக் கடிந்தான்.

“நீ என் புருஷன் தானே...”, இதற்கு என்ன சொல்வான்...? அவன் அமைதி அவளை எரிச்சல் மூட்ட..., “உனக்கு என்னை விட வேற எவ பிரம்மாதமா கிடைப்பா...? இப்படி ஒரு வாழ்க்கை கிடைத்தும், அதை வாழ துப்பில்லை. உன்னையெல்லாம்...”, அவளுக்கும் வார்த்தைகள் தடுமாறியது.

அவன் முகத்தில் கவிழும் வேதனை அவளை தாக்க..., அவனை காயப்படுத்தவும் முடியாமல், தன்னை சமாதானம் செய்யவும் முடியாமல் திண்டாடினாள்.

“ப்ளீஸ் ஐஸூ....”, அவன் வார்த்தைகள் கெஞ்சிற்று.

“நீதான் என்னை ப்ளீஸ் பண்ணனும்...”, இப்பொழுது அவனை மேலும் நெருங்கினாள்.

அவனோ.., அவளை ஏறிடாமல்..., “இங்கே ஆபீஸ் விஷயத்தை பாக்கலாம். வீட்டுக்குப் போய் பேசிக்கலாம்..”, அவளிடம் இருந்து தப்பிக்கும் மார்க்கம் அவனுக்குத் தெரியவில்லை.

“எங்கே.., என் முகத்தைப் பார்த்து சொல்..., வீட்டுக்குப் போய் பேசலாம்னு...”, அவன் நாடியைப் பிடித்து திருப்பினாள்.

அவன் முகத்தில் இருந்த பாவனை அவள் மனதை பிரண்டினாலும், “ஏண்டா..., நானே கேட்டதால் உனக்கு நான் இளக்காரமா போயிட்டேனா? என் நிலை உனக்குத் தெரியும் தானே. அப்படியிருந்தும்..., உன் அதிஷ்டம் உனக்குப் புரியவே இல்லையா...?”, அவள் பேச்சு மேலும் அவனை காயப்படுத்துவதை உணராமல் பேசிக்கொண்டே இருந்தாள்.

அவளும் வேறு என்னதான் செய்ய முடியும்? தன் அமைதிக்கோ, பேச்சுக்கோ, அவன் மதிப்பளிக்காமல் போனால்...,

“நான் அதிஷ்டக்காரன் இல்லை ஐஷூ..., இந்த உலகத்தில் பிறக்கும்போதே சாபம் வாங்கிட்டு பிறந்தவன்..., ஒரு நிமிஷம்..., என்னோட வா...”, அவள் கையைப் பிடித்து இழுத்தவன், காருக்குச் சென்று, கிரியிடமிருந்து கார் சாவியை பெற்றுக்கொண்டு தானே காரை ஓட்டிக்கொண்டு கிளம்பினான்.

தன்னை எங்கே அழைத்துச் செல்கிறான் எனத் தெரியாமல், அவனையே பார்த்தவாறு இருக்க, அவன் முகம் பாறையென இறுகி இருக்க, அதில் இருந்து அவனால் எதையும் உணர முடியவில்லை.

ஒரு செராக்ஸ் கடைக்கு சற்று தள்ளி காரை நிறுத்தியவன், “அங்கே பார்...”, அவன் சுட்டிக் காட்டிய இடத்தில்..., கால் செயல்பட முடியாத ஒரு இளைஞன் பேப்பர்களை அடுக்கிக் கொண்டிருக்க, சற்று நேரத்தில் அங்கே வந்த ஒரு இளம்பெண்..., அவன் கையில் ஒரு சாப்பாட்டு பாக்ஸ்சை

திணிக்க..., முகம் கொள்ளா புன்னகையோடு அவன் அதை பெற்றுக் கொள்வது தெரிந்தது.

அத்தோடு..., அவள் விலகிச் செல்ல முயல்கையில்..., அவள் கையைப் பிடித்து அவன் தடுக்க, அந்த பெண்..., அவன் மனைவி..., கடைக்கு வெளியே சற்று பதட்டத்தோடு பார்வையை செலுத்துவதும்..., பிறகு சட்டென அவனை அணுகியவள்..., அவன் கன்னத்தில் மின்னலென தன் இதழை பதித்தவள், செல்லமாக அவன் தலையை கலைத்துவிட்டு செல்வது தெரிந்தது.

கண்டிப்பாக அங்கே இப்படி ஒரு நிகழ்வை எதிர்பாராத ஐஸ்வர்யா முகத்தை திருப்பியவள்..., “ஏய்..., இட்ஸ் நாட் குட்....”, அங்கே பார்வையை பதித்திருந்த அவனைக் கலைக்க, அவனோ..., “அதோ..., அங்கே இருக்கானே..., அவன் அதிஷ்டக்காரன்..., ஒரே ஒரு நிமிஷம்..., அவன் இடத்தில் நான் இருக்க மாட்டேனான்னு மனசு ஏங்குது...”, உரைத்தவன் காரை கிளப்பிச் செல்ல, படபடக்கும் இதயத்தை தடுக்க முடியாமல் அவனை வெறித்தாள்.

“நான் எதையும் தவிர்ப்பதா எனக்கு தெரியலை...”, தன்னை சம்மாளித்துகொண்டு அவள் உரைக்க, உணர்ச்சியற்ற பார்வையை அவளை நோக்கி செலுத்தியவன், ஒரு வார்த்தை கூட அவளிடம் பேசவில்லை.

“உனக்கு புரியப்போவதில்லை ஐஷு..., புரியவே போவதில்லை...”, காரை வீட்டை நோக்கி செலுத்தினான்.

அவன் அவர்களது நேசத்தின் அளவை, அன்பை அவளுக்கு உணர்ந்த முயல, ஐஸ்வர்யாவுக்கோ..., அவர்கள் நெருக்கத்தை அவன் சுட்டிக் காட்டுவதாக புரிந்து கொண்டாள். அதை அவனும் உணர, எதையும் அவளுக்கு புரிய வைக்க முடியாது என எண்ணியவன், அலுவலகம் செல்ல மனமின்றி, வீட்டுக்குச் சென்றான்.

அறைக்குத் திரும்பியவன், தன் ‘கோட்’டை கழட்டி சோபாவில் வீசியவன், படுக்கையில் விழுந்து, கண்களுக்கு மேலாக இடக்கையை குடையாக்கி படுத்துக் கொண்டான்.

அவன் தொண்டைக்குழி மட்டும் ஏறி இறங்கிக் கொண்டிருந்தது.

அது அவனது வேதனையை பறைசாற்ற..., ‘எதற்கு இப்படி வேதனைப்படுகிறான்?’, சத்தியமாக அவளுக்குப் புரியவில்லை.

‘இவன் செய்யும் வேலைக்கு நான்தான் இப்படி கிடக்கணும்..., இங்கே என்னன்னா எல்லாம் தலைகீழா இருக்கு...’, எண்ணிக் கொண்டவள், அவனைப் பார்த்தவாறே நின்றாள்.

சிறிது நேரத்துக்குப் பிறகும் அவன் நிலையில் மாற்றம் இல்லாமல் போக, அவளால் அதை தங்கிக் கொள்ள முடியவில்லை. ‘என்னடா...?’, ஆறுதலாகக் கேட்டு, அவன் தலை கோதினால் அனைத்தும் தெளிவாகிவிடும். ஆனால்..., அதைச் செய்ய அவளுக்குத் தெரியவில்லை.

‘தன்னிடமிருந்து எதையோ எதிர்பார்க்கிறான் என்பது மட்டும் புரிய, என்ன செய்ய..., ஏது செய்ய....? எதுவும் புரியாமல்..., தன் நெருக்கம் அவன் மனநிலையை மாற்றுமா...? யோசித்தவள்..., அவன் அருகில், அவனை ஒட்டி படுத்துக் கொண்டவள்..., அவன் வலக்கரத்தை எடுத்து தன் இடையில் தவழ விட்டாள்.

மறுப்பு எதுவும் இன்றி..., அவளை தன்னோடு இறுக்கியவன்.., அதற்குமேல் முன்னேறவில்லை. ஐஸ்வர்யாவுக்குத்தான் அவமானமாக இருந்தது. ‘ஒரு பெண் இதற்குமேல் என்ன செய்ய முடியும்...? அதுவும் வெட்கத்தை விட்டு, இவ்வளவு இறங்கிய பிறகும்..., அவன் நிலை...’, கட்டுக்கடங்காத கோபத்தை பெருக்கியது.

“டேய்.., நிஜமாவே நீ ஆம்பளை தானே...”, அவன் முகத்தில் கவிழ்ந்திருந்த இடக்கையை வெடுக்கென தள்ளியவள், வழக்கம்போல் அவள் வார்த்தைகள் வீரியமாக வெளியேற, அது அவன் இதயத்தை துளைத்தது.

அடுத்த நிமிடம் படுக்கையில் இருந்து துள்ளி எழுந்தவன், முகம் முழுக்க அவமானமும்..., வலியும் போட்டிபோட

அவளை வெறித்தவன், “கேட்க வேண்டியதுதான்...? எனக்குத் தேவைதான்..., என்ன கேட்ட..., நான் ஆம்பளையான்னா..., உன் கேள்விக்கு விடையை ஒரு நிமிஷத்தில் என்னால் ப்ரூவ் பண்ண முடியும்.

“ஆனா..., நான் அம்பளைத்தனம்னு நினைக்கிறது..., ஒருவன் தன் மனைவியை நடத்தும் விதத்தில் தான் இருக்குன்னு நினைக்கிறேன். அப்படிப் பார்த்தால்..., நான் முழு ஆம்பளை தான். அதே நேரம்..., நீ கேட்ட விதத்தில்..., கண்டிப்பா ப்ரூவ் பண்றேன். நாளைக்கே...”, தன் ‘கோட்’டை எடுத்துகொண்டு அவன் கிளம்ப, படுக்கையில் அமர்ந்தவள், தலையை அழுந்த பற்றிக் கொண்டாள்.

***

# பகுதி - 26.

ஒரு வழியாக தன்னை மீட்டுக் கொண்டவள், அதிர்வில் இருந்து மீண்டு அலுவலகம் செல்ல..., அங்கே அவன் வந்ததற்கான எந்த அறிகுறியும் இருக்கவில்லை.

அவனது கோபத்திலும் கூட, கிரியை வீட்டுக்கு வரச் சொல்லி, தன்னை அலுவலகத்துக்கு அழைத்து வரச் சொன்ன அவனது கரிசனையை அவளால் மெச்சாமல் இருக்க முடியவில்லை.

அன்று மாலை வரைக்கும் அவன் அலுவலகம் வராமல் போகவே, சற்று தவித்துதான் போனாள். தன் கோபமும், வார்த்தைகளும் அவனை காயப்படுத்துவதை உணர்ந்தாலும், அவளால் எதுவும் செய்ய முடியவில்லை.

‘ஒரு வேளை கார்த்திக்கிற்கு தெரிந்திருக்குமோ...’, எண்ணியவள், உடனே அவன் தொலைபேசிக்கு அழைத்தாள். தன் மேஜைமேல் இருந்த தொலைபேசி அலறவே..., அதை செவிமடுத்தவன், அது ஐஸ்வர்யாவின் அழைப்பு என்பதை உணர்ந்து, திகைப்பும், ஆச்சரியமும் ஒருங்கே கொண்டான்.

பொதுவாக அவள் நேரடியாக யாரையும் அழைப்பதோ, பேசுவதோ கிடையாது. அப்படியிருக்கையில்..., அவளது இந்த செய்கையை எதிர்பாராமல் வியந்தான். அவள் பேசத் தயங்கவே, “நான் நேர்ல வரேன் மேம்...”, தொலைபேசியை வைத்தவன் அவள் அறைக்கு விரைந்தான்.

அவள் அறைக்கதவை தட்டிவிட்டு, உள்ளே சென்றவன், “மேம்...”, தயக்கமாக அழைக்க, ஒரு நொடி அவனை ஏறிட்டவள்..., கையில் இருந்த பேனாவை சுழற்றியவாறே..., “வினு...”, கேள்வியாக இழுத்து நிறுத்தினாள்.

‘ஹால்ப் டே லீவ்ன்னு சொன்னதை, இவங்க கிட்டே சொல்லலையா?’, எண்ணியவன்..., “அவன் ஹால்ப் டே லீவ் வேணும்னு சொல்லிட்டு போய்ட்டான்...., வேண்ணா

அவனுக்கு போன் செய்து பாக்கறேன்…”, வேகமாக தன் அலைபேசியை எடுத்தான்.

“அது ஸ்விட்ச்ஆஃப் ல இருக்கு…”, கடுப்பாக உரைத்தாள்.

“ஓ…, ஏதாவது அவசர வேலையா இருக்கலாம். பாக்கறேன்…”, உரைத்தவன், வெளியேறினான்.

அன்று ஓவர் டைம் வேலை இருக்க, வழக்கமாக அந்த நேரம் அங்கே இருக்காதவள், ஒரு வேளை வினித் அங்கே வருவானோ என்ற எண்ணத்தில், அங்கேயே இருந்தாள்.

இரவு மணி ஏழாக…, அவள் அலைபேசிக்கு அழைத்த ஸ்ரீராம்…, “என்னமா…, மாப்பிள்ளை சாயங்காலமே வீட்டுக்கு வந்துட்டார். நீ இன்னும் அங்கே என்ன பண்ற…? முதல்ல வீட்டுக்கு வா…”, அவர் உரைக்க, அடுத்த நொடி அங்கிருந்து கிளம்பி விட்டாள்.

அவள் கார் சத்தம் கேட்கவே…, தன் அறையில் இருந்து வெளியேறியவன், ஸ்ரீராமோடு சென்று அமர்ந்து கொண்டான். அவனை ஒரு பார்வை பார்த்தவள், காலை அழுத்தமாக உதைத்தவாறு நடந்து சென்றாள்.

“தேவிக்கு எப்போதான் இந்த முன்கோபம் சரியாகுமோ தெரியலை…”, ஸ்ரீராம் உரைக்க, “சீக்கிரம் சரியாயிடும் மாமா…”, அவருக்கு பதில் உரைத்தவன், தான் அடுத்ததாக மற்ற இடங்களுக்கு செயல்படுத்த வேண்டிய வழிமுறைகளை விளக்கினான்.

அதை கவனமாக கேட்டவர்…, “இது ரொம்ப அருமையான ஐடியா…, ஐஸ்வர்யா கிட்டேயும் ஒரு வார்த்தை சொல்லிடுங்க…”, அவர் உரைக்க, ஒப்புதலாக தலை அசைத்தவன், உணவு நேரம் வரும் வரைக்கும் தங்கள் அறைக்குச் செல்லவில்லை.

அவன் அறைக்கு வருவான் என காத்துக் கொண்டிருந்த ஐஸ்வர்யா, எட்டு முப்பது வரைக்கும் அவன் வராமல் போகவே, டின்னர் உண்ண கீழே இறங்கி வந்தாள்.

இரவு உணவை உண்ண அமர்ந்தவர்கள்..., அமைதியாகவே உண்ண, “தேவி..., வினித் நம்ம கம்பெனிக்கு ஒரு பெரிய ஐடியாவை ஒர்கவுட் பண்ணியிருக்கார். அதை அப்பளை செய்தால், நமக்கு இடத்தோட தேவையும், காட்டன் பாக்ஸ் வேஸ்ட் ஆகுறதையும் தடுக்க முடியும். கொஞ்சம் அது என்னன்னு பாத்துடும்மா...”, அவர் உரைக்கவே, சரி என தலை அசைத்தாள்.

அவள் வினித்தை பார்க்க, அவனோ..., எனக்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என தன் உணவிலேயே கவனமாக இருப்பது தெரிந்தது.

‘திங்கதுக்குன்னே பிறப்பெடுத்த மாதிரி இருக்கான் பார்...’, மனதுக்குள் கருவிக் கொண்டாலும், அவன் சரியாக சாப்பிடவில்லை என்பதை ஒற்றை பார்வையில் அவளால் உணர முடிந்தது.

அடுத்த பத்து நிமிடங்களில், ஸ்ரீராமிடம் விடை பெற்று திரும்பியவர்கள், அவள் உடை மாற்றி வர செல்ல, அவன் தன் மடிக் கணினியை உயிர்ப்பித்து அவள் வரவுக்காக காத்திருந்தான்.

அவள் வரவை..., அவள் காலடி ஓசை உரைக்கும் முன்பே, அவளது பிரத்தியேக வாசனை அவனுக்கு உணர்த்த, அவள்மேல் பதியத்துடித்த பார்வையை பிடிவாதமாக கணினியில் பதித்திருந்தான்.

சோபாவில் தனக்கு நெருக்கமாக அமர்ந்த நொடியில், அந்த வித்தியாசத்தை அவன் உணர்ந்து கொண்டான். தன் இரவு உடைக்குமேல், நைட் கோட் அவள் அணியாதது, அவனுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

‘இவளுக்குன்னு எங்கே இருந்துதான் இப்படி நைட் டிரஸ் கிடைக்குமோ? மனுஷனை வெறியேத்தவே இப்படியெல்லாம் செய்யிறா...’, அவளது ஒளி ஊடுருவும் உடை, அவன் நாடி நரம்புகளில் ஒருவித வேகத்தை மூட்டியது.

‘இவமேலே கோபத்தில் இருக்கும்போது கூட இப்படி அவஸ்த்தையா இருக்கே’, மனதுக்குள் நொந்து போனான்.

“இன்னும் எவ்வளவு நேரம் நான் இப்படியே உக்காந்து இருக்க? சாயங்காலம் எங்கே போன? ஏன் ஆபீஸ் வரவே இல்லை? நியாயப்படி பார்த்தால், நான்தான் உன்மேல் கோபப்படணும்? இங்கே என்னன்னா…”, படபடவென பொரிந்தாள்.

“எங்கே போயிருந்தேன்னு பிறகு சொல்றேன்…, முதல்ல வேலையைப் பார்க்கலாம்…”, அவன் மடிக்கணினியை அவள் பக்கம் நகர்த்த, அதைப் பார்க்க வசதியாக சற்று திரும்பி, இடக்கையை உயர்த்தி, சோபாவுக்கு மேலே வைத்தவள், அவன் அருகில் நகர்ந்து அமர்ந்தாள்.

“அது என்னன்னா…?”, உரைத்தவன், அவள் பக்கம் திரும்ப, அவள் இரவு உடையின் அபாயமான இறக்கமும், அவள் கை தூக்கி அமர்ந்திருந்த விதமும், அவன் கட்டுப்பாட்டையும் மீறி அவன் பார்வை, அவள் அழகிடத்தில் பதிய, அவனுக்கு பேச்சு மறந்து போனது.

அவனிடம் அடுத்த வார்த்தை வராமல் போகவே…, ‘என்ன பேச்சையே காணோம்…’, அவன் மடிக்கணினியில் இருந்து பார்வையை விலக்கியவள், அவன் முகம் பார்க்க, அவன் பார்வை பதிந்த இடத்தைப் பார்த்து, தன்னைக் குனிந்து பார்த்தவள், தான் செய்த முட்டாள்த்தனம் அப்பொழுதுதான் அவளுக்குப் புரிந்தது.

இப்பொழுது எழுந்து சென்று நைட் கோட் அணிவது அவளுக்கு அதிகப்படியாக தோன்ற…, ‘ஆண்டவா…, என்ன இப்படிப் பாக்கறான்…? இன்னைக்குதான் இந்த பார்வையாவது இருக்கு. இல்லன்னா…?’, ஒரு பெருமூச்சை வெளியேற்ற, அதில் சட்டென கலைந்தவன், வேகமாக அவள் முகம் நோக்கினான்.

‘நான் உன்னை கண்டுகொண்டேன்…’ என அவள் பார்வை அவனுக்கு உணர்த்த, அதில் தெரிந்த மெல்லிய புன்னகையும், நக்கலும், ‘அடேய்…, என்னடா இப்படி

பண்ணிட்ட..., இப்போ இதுக்கு என்ன சொல்வான்னு தெரியலையே...?', மனதுக்குள் புலம்பினான்.

"ம்கும்...", தன்னையே மீட்டுக் கொண்டவன், "அது என்னன்னா..., நம்ம புக் எல்லாம் ஒவ்வொரு வெரைட்டியும், ஒவ்வொரு சைஸ்..., அதனால் நமக்கு காட்டன் பாக்ஸ் தேவையும் ஒவ்வொரு விதமா தேவைப்படுது, அதே நேரம், அதை வைக்க இடமும் ரொம்ப தேவைப்படுத்து. அதுக்குதான் நான் ஒரு வழி கண்டு பிடிச்சிருக்கேன்...", அவன் உரைக்க,

"இதுக்கெல்லாம் நல்லா வழி கண்டு பிடிப்பியே...", அவள் பட்டென உரைக்க, அடுத்து சொல்ல வந்ததே அவனுக்கு மறந்து போனது.

"ஐஷூ..., இப்போ நான் சொல்லவா வேண்டாமா...?".

"நான் உன் வாயை அடைக்கவே இல்லையே...?", அவள் பதில் உரைக்க,

"அடைச்சுத்தான் பாரேன்...", அவனும் இப்பொழுது பதில் கொடுக்க, அவன் கண்களில் வழிந்த சவால்..., அவளை விழி விரிக்க செய்தது.

"எதுக்கு...? மறுபடியும் நான் அவமானப்படவா...?", அவள் கேட்க, தன் மடிக்கணினியை டீபா மேல் வைத்தவன், பட்டென எழுந்து கொண்டான்.

"நான் உன்னை எந்த நேரமும் அவமானப்படுத்தணும்னு நினைத்தது இல்லை ஐஷூ...", அவளுக்கு முதுகு காட்டி நின்றான்.

"அப்போ இன்னைக்கு நீ செய்தது.., என்னை பாராட்டும் விஷயமா...?", ஏனோ அவளால் மறக்க முடியவில்லை.

"ஐ லவ் யூ ஐஷூ...", அவளைப் பார்க்க திரும்பினான்.

"ம்ச்..., இது சும்மா..., என்னை ஏமாற்றும் வேலை...", கடுப்பானாள்.

“ஒரு நிமிஷம்...”, அவளிடம் உரைத்தவன்..., ஒரு ஃபயிலை எடுத்து, அதற்குள் இருந்த ஒரு காகிதத்தை அவள் பக்கம் நீட்டினான்.

“என்ன இது...?”, அவள் அதை கையில் வாங்காமல் கேட்க,

“வாங்கிப் பார்த்தால் புரியும். உன் சந்தேகத்துக்கான விடை...”, அவன் உரைக்க, முகம் முழுக்க குழப்பத்தோடு அதை வாங்கி பார்வையை செலுத்தினாள்.

முதலில் குழப்பமாக நெரிந்த அவள் பார்வை..., அடுத்தடுத்த வரிகளை படிக்க..., அவள் முகம் கொஞ்சம் கொஞ்சமாக கோபத்துக்குப் போனது. அவள் முகத்திலேயே பார்வையை பதித்தவன்..., தன் முகத்தில் எந்த பாவத்தையும் வெளிப்படுத்தவில்லை.

இறுதியாக அந்த பேப்பரை சுக்கல் சுக்கலாக கிழித்து அதை அவன் முகத்திலேயே விசிறியடித்தவள்..., பாய்ந்து சென்று அவன் டிஷர்ட்டை கொத்தாக பற்றிக் கொண்டாள்.

“இதுக்கு என்னடா அர்த்தம்...?”, உச்ச கோபத்தில் கத்தினாள்.

“உன் சந்தேகத்துக்கு என்னால் முடிந்த விளக்கம்...”, அவன் உணர்வே இல்லாமல் பதில் கொடுத்தான்.

“மண்ணாங்கட்டி...”, வெடித்தாள்.

“இல்லை ஐஷூ..., இன்னொரு முறை அந்த கேள்வியை நீ என்கிட்டே கேக்கக் கூடாது பார்..., அதான்...”,

“அதுக்கு..., அதுக்கு..., இதென்னடா..., நான்..., இதையா உன்கிட்டே எதிர் பார்த்தேன்...?”, அவனைப் பிடித்து தள்ளினாள்.

“இல்லை ஐஷூ..., இன்னொரு முறை உனக்கு இந்த சந்தேகம் வரக் கூடாது பார். அதான்..., மருத்துவ முறையில் அதற்கான விளக்கத்தை உனக்கு சொல்லி இருக்கிறேன். என்னோட நார்மல் ***, உச்சத்தில் அதன் நிலை..., அத்தோடு..., என்னால் ஒரே நேரத்தில் ஐம்பது குழந்தைக்கு

தந்தை ஆக முடியும் என்பதற்கான மருத்துவ அறிக்கை..., இனிமேல் உனக்கு அந்த சந்தேகம் வராது பார்...”, அசைவே இல்லாமல் உரைத்தான்.

இதைச் செய்ய அவன் மனம் என்ன பாடு பட்டிருக்கும் என்பதை அவளால் முதல் முறையாக புரிந்துகொள்ள முடிந்தது. “அப்போ..., இன்னைக்கு நீ ஆபீஸ் வராததன் காரணம் இதுவா...? ஏண்டா இப்படி..., கேள்வி கேட்ட என்கிட்டே நிரூபிப்பதை விட்டுட்டு..., ஒரு பேப்பரில் அதை எடுத்துட்டு வந்திருக்க...”, வாய் விட்டு அழவேண்டும் என்று எழுந்த உணர்வை அடக்க அவள் மிகுந்த சிரமப் பட்டாள்.

அவன் நெஞ்சில் சாய்ந்து கொண்டவள், அவன் இடையை வளைத்துக் கொண்டாள். அவள் செய்கை அவனுக்கு மிகுந்த ஆறுதல் அளிக்க, “ஐஷூ, இப்போ இந்த நிமிஷம்..., என்னால் அதை உன்கிட்டே நிரூபிக்க முடியும். நீ என்னை நெருங்கும் வேளை, என் மூச்சுக்காற்றில் ஏறும் வெப்பம் உனக்குப் புரியவில்லை என்றாலும், எனக்கு அது புரியுது.

“இப்படியே உன்னை கட்டிக்கொண்டு, மூச்சு திணறத் திணற உன்னை முத்தமிடும் வேகம் எனக்குள் கொட்டிக் கிடப்பது உனக்குத் தெரியாது. உன்னை முழுதாக அறிய என் ஒவ்வொரு அணுவும் துடிப்பதும், உன்னை அக்டோபஸ் மாதிரி வளைத்து இறுக்க என் கைகள் தவிப்பதும் உனக்குத் தெரியாது.

“ஆனால்..., இவை எதையுமே செய்ய என்னால் முடியாது. ஏன்னா...? எனக்கு அவ்வளவு தைரியம் இல்லை ஐஷூ..., அந்த விஷயத்தில் நான் மிகப்பெரிய கோழை. என்னால் நீ சுமத்தும் எந்த குற்றசாட்டையும், உன் கோபத்தையும் என்னால் தாங்கிக்கொள்ள முடியும்.

“ஆனா..., இந்த நிமிடம் நான் உன்னை முழுதாக ஆண்டுவிட்டால்..., அடுத்த நிமிடம் நீ என்னிடம் கேட்கப் போகும் கேள்வியை எதிர்கொள்ளும் தைரியம் எனக்கு இல்லை...”, அவளை தன்னோடு இறுக்கிக் கொண்டான்.

அவன் நெஞ்சில் முகத்தை புதைத்தவள்..., தன் இதழை அவன் நெஞ்சில் அழுந்த புதைத்துக் கொண்டாள். “அப்போ இதற்கு என்னதான் வழி? நான் என்ன செய்ய...? சாந்தி தேவியின் வம்சம் என்னோடு முடிந்து போகுமா? இதற்கு ஒரு வாரிசு வேண்டாமா?”, அவனிடம் கேட்க, அவன் முகத்தில் அப்பட்டமான வேதனை.

‘இவை அனைத்தும் நீ உரைக்கும் அந்த மூன்றெழுத்தில் முடிவுக்கு வந்துவிடும். ஆனால்..., அதை உரைக்க நீ தயாராக இல்லையே...’, மனதுக்குள் அரற்றியவன்,

“ஐ திங்..., ஐ பீல் கம்ஃபர்ட்டபிள் வித் யூ...”, அவள் இந்த வார்த்தைகளை உரைத்த அடுத்த நிமிடம், “ப்ளீஸ் ஐஷூ..., டோன்ட் சே தேட்...”, அவள் வாயை தன் கரத்தால் மூடியவனது கண்களில் கண்ணீர் தடம்.

அதை எதிர்பார்த்திராத ஐஸ்வர்யா..., “ஏய்..., இப்போ நான் என்ன சொல்லிட்டேன்னு இப்படி பீகேவ் பண்ற...? நான் உண்மையைத்தான்...”, அவன் தன்னை விட்டு விலகிய வேகத்தில், வார்த்தைகளை நிறுத்திக் கொண்டாள்.

“இப்போ என்ன..., இந்த சாம்ராஜ்யத்தை ஆள உனக்கு ஒரு வாரிசு வேண்டும் அவ்வளவு தானே...”, அவளிடமிருந்து விலகியவன், குரல் நடுங்க கேட்டான்.

“அது என் வயிற்றில் உருவாகணும்..., என் பரம்பரையின் அடையாளமா அது இருக்கும்...”, அவள் உரைக்க..., தகர்ந்து போய்..., தளர்ந்து போய் படுக்கையில் அமர்ந்தான்.

“ஏய்...”, அவன் செய்கையில் பதறியவளாய் அவனை நெருங்க, “ஒரு வாரத்தில் அது நடக்கும்...”, அவன் உரைக்க..., சந்தோஷமாக அவனை அணைத்துக் கொண்டாள்.

ஆனால்..., அவளது சந்தோசம் துளியும் அவனிடம் இல்லாமல் போனதை பாவம் அவள் அறியவோ உணரவோ இல்லை.

அவளைப் பொறுத்த வரைக்கும், அவன் தொடுகையையோ, அருகாமையையோ, அணைப்பையோ அவள் வெறுக்கவில்லை. அவன் அருகாமையை விரும்பவே செய்தாள். எனவே அவனிடம் அதை தாராளமாக வெளியிட்டாள்.

அதுவே அவளுக்கு போதுமானதாக இருந்தது. மனதுக்குள் அவன் இருப்பதால் தான், தன்னால் இதை தயங்காமல் சொல்ல முடிந்தது என்பதை அவள் அறியவில்லை. அவளைப் பொறுத்த வரைக்கும், அவன்மேல் காதல், நேசம் என்பதை சிந்திக்க கூட இல்லை.

அப்படி இருக்கையில்..., அவள் வாயால் அந்த மூன்று வார்த்தையை அவள் எப்படி அவனிடம் உரைப்பாள்? அன்றைய இரவு அவனுக்கு விடியா இரவாக, வழக்கம்போல் அவனோடு ஒட்டிக் கொண்டவள், இன்று நிம்மதியாகவே உறங்கினாள்.

மறுநாள் அலுவலகத்தில் அவள் தந்தை அந்த வினித் சொன்ன ஐடியாவை செயல்படுத்தி விடுவோமா எனக் கேட்க, அவள் விழிக்கவே செய்தாள். ‘அட ஆண்டவா..., நேத்து எங்கேயோ துவங்கிய பேச்சு..., எப்படியே முடிஞ்சுடுச்சே...’, எண்ணியவள்,

“டேட்..., அதைபத்தி நாங்க இன்னும் சரியா டிஸ்கஸ் பண்ணலை. நாளைக்கு சொல்லட்டுமா?”, அவள் மெல்லியதாக கேட்க, ஆச்சரியமாக அவளைப் பார்த்தாலும், சரி என தலை அசைத்தார்.

ஆனால்..., அடுத்து வந்த இரண்டு நாட்களிலும் கூட அவளால், அதைப்பற்றி வினித்திடம் பேச முடியாமல் போனது. மாலை வரை அலுவலகத்தில் இருப்பவன், அதன் பிறகு எங்கே செல்கிறான் என்பது அவளுக்கு புரியாத புதிராக இருந்தது.

ஆனால்..., அவன் எங்கே சென்றான் என்பது தெரிய வந்த பொழுது, முதல் முறையாக நொறுங்கிப் போனாள். அன்று அப்படித்தான்..., மதிய உணவு இடைவேளை முடிய, அவள்

அறைக்கு வந்தவன், “ஐஷூ..., கொஞ்சம் வெளியே போயிட்டு வரலாம்..., வரியா...?”, அவளை தயக்கமாக அழைக்க, எங்கே..., எதற்கு என்று கூட கேட்காமல் கிளம்பிவிட்டாள்.

அன்றும் காரை அவனே ஓட்ட..., ‘அப்படி எங்கே அழைத்துச் செல்கிறான்? அன்றைக்குபோல் எங்கேயாவதா?’, எண்ணியவள் அவன் முகத்தைப் பார்க்க, இன்றும் அவன் முகம் இறுகியே இருந்தது.

‘ஹம்..., பஸ்ட் நைட் கொண்டாட..., முகத்தை இப்படி வச்சுக்கற ஆள் இவனாத்தான் இருப்பான்..., உனக்கு இருக்குடி மாப்ள..., அன்னைக்கு என்னென்னவோ தோணுதுன்னு சொன்னல்ல..., என்ன பண்ணப் போறன்னு பாக்கத்தானே போறேன்...’, முதல் முறையாக அவள் இதழ்களில் வெட்கப் புன்னகை.

ஆனால்..., அந்த நினைவு ஒரு நொடியே நீடித்தது. கார் ஒரு மருத்துவமனைக்குள் நுழைய, வேகமாக அவனை ஏறிட்டாள். அவன் அதை கண்டுகொள்ளாமல், காரை இடம் பார்த்து நிறுத்தியவன், “வா...”, ஒற்றை அழைப்போடு முன்னால் நடந்தான்.

“இங்கே எதுக்கு...? யாருக்கு என்ன...? உனக்கு உடம்பு சரியில்லையா...?”, கேட்டவள்..., வேகமாக அவன் நெற்றியில் கை வைத்து பார்க்க, அது சற்று வெதுவெதுப்பாக இருப்பதுபோல் இருந்தது. அது அவள் மனதின் வெளிப்பாடா என்பது அவளுக்குப் புரியவில்லை.

“ஏய்..., உனக்கு பீவரா...?”, அவன் கரத்தை பிடித்து நிறுத்த, “இல்ல..., வா...”, அவளை அழைத்துக்கொண்டு காலியாக இருந்த காரிடாரில் நடந்தான். வராண்டாவில் யாரும் இருக்கவில்லை. அதுவே..., ஓபி நேரம் முடிந்துவிட்டது என்பதை அவளுக்கு உணர்த்த, அவனோடு நடந்தாள்.

“வேதவல்லி..., கைனகாலஜிஸ்ட்....”, பெயர் பலகைக்கு முன்னால் நின்றவன், ஒற்றை விரலால் கதவைத் தட்ட,

“எஸ் கம்மின்...”, அவர் குரல் அமைதியாக ஒலிக்க, கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே சென்றான்.

ஐம்பதுகளின் துவக்கத்தில் இருந்த அவர் முகம், அமைதியாக, அறிவுக் களையோடு, அனுபவ முதிர்வோடு..., மூக்குக் கண்ணாடியின் வழியாக அவர்களை ஏறிட்டார்.

“ஓ..., வினித்..., வாங்க..., இவங்கதான் உங்க மிஸ்ஸஸ்ஸா..., வாம்மா..., எல்லாம் சரியாயிடும்..., நம்பிக்கையா இருங்க..., எல்லாம் நான் பாத்துக்கறேன்...”, அவர் உரைக்க,

‘இவங்க என்ன பாத்துப்பாங்க...? எதுக்கு நம்பிக்கை...?’, குழப்பமாக அவரை ஏறிட்டவள், “என்ன டாக்டர்...?”, அதை தன் வார்த்தையிலும் வெளிப்படுத்தினாள்.

“வினித்..., நீங்க வெளியே இருங்க..., நான் செக் பண்ணிட்டு சொல்றேன்...”, அவனிடம் உரைக்க, வேகமாக அவனை ஏறிட்டாள்.

அவனோ..., அவள் பார்வையை சந்திக்காமல்..., சற்று பதட்டத்தோடு வெளியேறினான். அவன் செய்கை அவள் புருவத்தை நெரிக்க, குழப்பம் தேங்கிய விழிகளோடு மருத்துவரை ஏறிட்டாள்.

“உங்க ***ரை கழட்டிட்டு..., உள்ளே இருக்கும் டேபிள் மேலே ஏறி படுங்க..., நான் இப்போ வரேன்...”, அவர் உரைக்க, புரியாத பாஷையை அவர் பேசியதுபோல் விழித்தாள்.

“என்னம்மா..., பயமா இருக்கா...? அதெல்லாம் எதுவும் தேவையில்லை. என்னை உன் அம்மாவா நினைச்சுக்கோ...”, அவள் தோளை ஆதரவாக தட்டியவர்..., அவளை அங்கே செல்ல பணித்தார்.

“இல்ல..., இங்கே என்ன நடக்குது...? எனக்குப் புரியலை...”, தன் மறுப்பை வெளியிட்டாள்.

“சொல்லத்தான் போறேன்..., முதல்ல சின்ன செக்கப் பண்ணிடலாம். நீ வா. சொல்றேன்ல்ல...”, அவர் கனிவான பேச்சு கூட, அவள் அடி வயிற்றை பிசைந்தது.

அவர் இருக்கையில் இருந்து எழுந்து, தனக்கு காட்டிய பக்கத்துக்கு எதிர் திசையில் செல்ல..., வேறு வழியின்றி அவர் காட்டிய பகுதிக்குச் சென்று அங்கே இருந்த இருக்கையில் ஏறி அமர்ந்தாள்.

இரண்டு நிமிடங்களை செலவிட்டுவிட்டு அவர் அங்கே வர, அவள் அசையாமல் இருப்பதைப் பார்த்தவர்..., “என்னம்மா..., உன் கோவாப்பரேஷன் இல்லாமல் என்னால் எதுவும் செய்ய முடியாது. உனக்கு குழந்தை வேணும் தானே. அப்போ இப்படி பயப்பட்டால்?

“ஒரு சாதாரண செக்கபுக்கே இப்படின்னா..., இன்னும் ஃபர்தர் டிரீட்மென்ட்க்கு என்ன செய்வ? டெஸ்ட் டியூப் பேபி பெத்துக்கறதுன்னா சும்மாவா...? குழந்தை வேணும்னு மட்டும் நினைச்சுக்கோ..., இதெல்லாம் பெருசாவே தெரியாது...”, அவர் உரைத்து முடித்து, அவளை படுக்க வைக்க, அவள் தோளைத் தொட்டார்.

அவ்வளவுதான்..., அடுத்த நிமிடம்..., “நோ..., நோ...”, அவள் அலறல் அந்த கட்டிடத்தையே அதிர வைக்க, அடுத்த நொடி..., “ஐஷூ...”, பதறியவன் அறைக்குள் பாய்ந்திருந்தான்.

***

# பகுதி - 27.

திரையின் மறைவில் இருந்து வந்தவளை அவன் எதிர்கொள்ள..., எங்கிருந்துதான் அவளுக்கு அவ்வளவு ஆத்திரம் வந்ததோ..., தன் மொத்த கோபத்தையும் அவன் கன்னத்தில் ஒற்றை அறையில் வெளிப்படுத்தியவள், அடுத்த நிமிடம் அந்த அறையில் இருந்து வெளியேறியிருந்தாள்.

ஒரு நொடி உறைந்துபோய் நின்றவன், அவனை திகைப்பாய் பார்த்த மருத்துவரிடம், "சாரி டாக்டர்..., சின்ன மிஸ் அண்டர்ஸ்டாண்டிங்..., அதான்", உரைத்தவன் ஒரு ஓட்டமாக ஓடினான்.

கார் பார்க்கிங்கில் அவள் நுழைவதைப் பார்த்தவன், கையில் இருந்த கீயின் உதவியால் தூரத்தில் இருந்தே அன்லாக் செய்தவன், அவள் உள்ளே ஏறி அமர்வதை பார்த்த பிறகே நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.

தான் செய்தது எவ்வளவு பெரிய தவறு என்பது அவனுக்குத் தெரியும்தான். ஆனாலும்..., அவனுக்கு வேறு வழி இருக்கவில்லை. தன் காயத்தை அவள்மேல் திணித்துவிட்டது அவனுக்கு புரியவே செய்தது.

அதிலும்..., எதற்காகவும் எப்பொழுதும் யாரிடமும் கேட்டிராத ஐஸ்வர்யா..., தன்னிடம் வாய்விட்டு குழந்தை வேண்டும் என கேட்ட பிறகும், அதை செயல்படுத்த முடியாத தன் நிலை, அவளை நெருங்கத் துணிந்தாலே நடுங்கும் மனது...,

அவனால் முடியவே இல்லை. அவள் தன்னை அணைப்பதையே விலக்கித் தள்ள தைரியமற்றவன்தான்..., அவள் வாய்விட்டு கேட்டு..., தன்னை வெட்கம் விட்டு நெருங்கிய பிறகும், மனதை இரும்பாக்கிக் கொண்டு விலகி ஓடிய விதம்..., அவள் ஆசையை நிறைவேற்ற என்று மட்டுமே தான் எடுத்த முடிவு...

‘ஹையோ…, பெரிய தப்பு பண்ணிட்டேன்…’, நெஞ்சம் பதறினான். ஏதோ ஒரு வேகத்தில், குழப்பத்தில் தான் எடுத்த முடிவு…, தான் செய்த செயலின் வீரியம் அப்பொழுதுதான் அவனைத் தாக்கியது.

அவளை காயப்படுத்த முடியாது என எண்ணும் தானே…, அவள் மனதை குத்தி கிழித்துவிட்டது புரிந்தது. என்ன செய்து அந்த காயத்தை ஆற்றுவேன்? என்ன சொல்லி அவளுக்கு புரிய வைப்பேன்…? நெஞ்சம் பதறியது.

காருக்குள் அவள் கண்ணை மூடி அமர்ந்திருக்க, அவள் அமர்ந்திருந்த நிலை…, இப்படியே விட்டால் வெடித்து சிதறிவிடுவேன்…, என சொல்லாமல் சொல்ல…, அவளை தன்மேல் சாய்த்துக்கொள்ள துடித்த கரத்தை இறுக மூடிக் கொண்டான்.

அவன் வந்தது தெரிந்தும்…, அவள் விழியை திறக்கவே இல்லை. ஓலமிட்டு கதற வேண்டும் போல் இருந்த உணர்வை அடக்குவது மட்டுமே அந்த நிமிட போராட்டமாக இருக்க…, விழி திறந்து அவனை நோக்கினாலே தான் சிதறிவிடுவோம் என்பது புரிய விழியை இறுக மூடிக் கொண்டாள்.

காரை அசுர வேகத்தில் செலுத்தியவன், அடுத்த அரைமணி நேரத்தில் காரை தங்கள் வீட்டின் முன்னால் நிறுத்த, கார் நின்றவுடன் வீட்டுக்குள் ஓடியவள், வரவேற்பறையில் அமர்ந்திருந்த ஸ்ரீராமை கண்டுகொள்ளவே இல்லை.

“என்னப்பா…, ரெண்டுபேரும் வெளியே போயிருக்கீங்கன்னு கேள்விப்பட்டு சந்தோஷமா வந்தால்…, அவ கோபமா போற மாதிரி இருக்கு…?”, அவனிடம் கேட்க,

“சாரி மாமா…, பிறகு சொல்றேன். இப்போ நான் போகணும்…”, அவசரமாக உரைத்தவன், படிகளில் தாவி ஏறினான்.

அங்கே அவன் கண்ட காட்சி…, அவன் இதயத்தை பிசைந்தது. படுக்கையில், தன் முழங்காலை கட்டிக்கொண்டு, அதில் முகம் புதைத்து அவள்

அமர்ந்திருந்த தோற்றம்..., இதுவரை கனவிலோ, கற்பனையிலோ கூட அவளை இப்படி அவன் பார்த்ததில்லை.

தான் செய்த முட்டாள்த்தனம்..., அவள் இயல்பையே நொறுக்கியதை உணர்ந்தவனுக்கு..., எப்படி அவளை நெருங்கவென்றே புரியவில்லை. சற்று நேரத்தில் கீழே செல்லவேண்டும். கீழே செல்லவில்லை என்றால், ஸ்ரீராம் கவலை கொள்வார் என்பது புரிய, அமைதியாக சென்றுவிட்டான்.

மாலை கடந்து இரவு உணவு வேளை வந்தபிறகும் அவள் கீழே வராமல் போகவே..., “வினித்..., தேவியை கொஞ்சம் சாப்பிட வரச் சொல்லுப்பா. எவ்வளவு நேரம்தான் இப்படியே இருப்பா...”, அவர் கேட்க, மாடி ஏறினான்.

மாலையில் அவன் விட்டுச் சென்ற நிலையிலேயே அவள் இருப்பதைப் பார்த்தவன்..., அவளை சாப்பிட அழைக்காமலேயே திரும்பினான். அவளை இப்பொழுது கலைத்தால்..., அவள் எப்படி செயல்படுவாள் எனப் புரியாத பயம் அவனை ஆட்டுவித்தது.

கீழே இறங்கியவன்..., “அவளுக்கு பசிக்கலையாம்..., நான் போகும்போது ரெண்டு சப்பாத்தியும், பாலும் எடுத்துட்டு போறேன் மாமா. நீங்க கவலைப் படாதீங்க...”, அவரை சமாதானம் செய்துவிட்டான்.

ஆனால்..., அவளை சமாதானம் செய்வது அவ்வளவு சுலபமா? அறைக்குள் அவளோ..., குமுறிக் கொண்டிருந்தாள். சற்று நேரம் வரைக்கும், எதையுமே எண்ண முடியாதபடி, மூளை மரத்துப் போன உணர்வு.

அவள் வாழ்நாளிலேயே இப்படி ஒரு சூழலை, நிலையை அவள் சந்தித்ததில்லை. ஒரு திருமணம் தன்னை இப்படி புரட்டிப் போடுமா? நெஞ்சை அடைத்தது. அதே நேரம்..., ‘என்னை எவ்வளவு கீழாக நினைத்துவிட்டான். அவன் தொடுவதற்கு நான் தகுதியில்லாதவள் என எண்ணிவிட்டானா?

‘எவ்வளவு தைரியம் இருந்தால் என்னை அங்கே அழைத்து சென்றிருப்பான். அந்த மருத்துவர் ஒரு சோதனை செய்தாலே..., நான் கன்னிப்பெண் என்பதை அவர் கண்டுகொள்ள மாட்டாரா...?’ எண்ணியவளுக்கு,

‘ஒரு வேளை..., நான் கன்னியாக இருக்க மாட்டேன் என எண்ணிவிட்டானோ’ அந்த நினைப்பே அவள் நெஞ்சை அறுத்து கூறு போட்டது.

வாய்விட்டு கதறிவிடு என புலன்கள் அனைத்தும் கெஞ்ச, ஸ்ரீ ஐஸ்வர்யா தேவியான அவளால்..., கண்ணீர் விடுவதை நினைத்துக் கூட பார்க்க முடியவில்லை. அழுகை என்ற ஒன்றை காணாமலே வளர்ந்தவள் அவள்.

அந்த நேரம்..., கையில் தட்டோடு அறைக்குள் நுழைந்தவன், கொண்டு வந்தவற்றை டீபாயின் மீது வைத்துவிட்டு, அவளை நெருங்கினான்.

“ஐஷூ...”, அவளை அழைக்க, அவளிடம் எந்தவிதமான அசைவும் இருக்கவில்லை.

“ஐஷூ..., இங்கே பார்...”, அவள் தோளைத் தொட, அடுத்த நிமிடம் அவன் கையை வெடுக்கென தள்ளிவிட்டாள்.

“ப்ளீஸ்ம்மா..., ஏதாவது பேசு..., இப்படி இருக்காதே. என்னால் பார்க்க முடியலை. என்னை இன்னும் நாலு அடி வேண்ணா அடிச்சுடு. என்னால் அதை தாங்கிக்க முடியும்..., ஆனா இதை...”, அவளை இழுத்து தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டான்.

ஒரே தள்ளில் அவனை வெடுக்கென உதறியவள்..., “தொடாதே..., என்னைத் தொடும் தகுதியை நீ இழந்துட்ட. என்னைப்பற்றி நீ எப்படி எண்ணியிருந்தால், இப்படி ஒரு காரியத்தை செய்யத் துணிவாய்...”, அவளது உதறலில்..., கட்டிலின் விளிம்பில் சென்று விழுந்தவன், பதட்டமாக எழுந்து அவள் அருகில் வந்தான்.

“அப்படியெல்லாம்...”, அவன் மறுக்க...

“வேண்டாம்..., உன் எந்த விளக்கமும் எனக்கு தேவையில்லை. என்னைப்பற்றி எவ்வளவு கேவலமா நினைத்திருந்தால் இப்படி செய்திருப்ப. அப்போ..., உன் மனசில் நான் கன்னிப் பொண்ணே இல்லன்னு முடிவு பண்ணித்தான் என்னை நீ நெருங்கவே இல்லையா...? இது தெரியாமல்...”, அவள் உறுதி அனைத்தும் நிலை குலைய..., அவள் கட்டுப்பாட்டையும் மீறி கண்ணீர் கன்னத்தில் வழிந்தே விட்டது.

இப்படி ஒரு கோணத்தில் எண்ணிப் பார்த்தே இராத வினித் திகைத்துப் போனான். “ஐயோ..., ஐஷூ..., என் காதல் மேல் ஆணை..., நான் அப்படி நினைக்கவே இல்லை....”, கதறிவிட்டான்.

“ஆண்டவா..., எனக்கு மட்டும் ஏன் இப்படி...”, தன் தலையிலேயே அடித்துக் கொண்டவன், “ஐஷூ..., என் மனசுக்குள் புதைந்து கிடக்கும் ரணம், என்னை இப்படி செய்யத் தூண்டி விட்டது. எனக்கு ஒரு பத்து நிமிஷம் டைம் கொடு..., எல்லாத்தையும் நான் புரிய வைக்கறேன். நான் சொன்னதை கேட்ட பிறகு..., நீ என்ன தண்டனை கொடுத்தாலும் அதை நான் ஏற்றுக் கொள்கிறேன்..”, அவள் கைகளைப் பிடித்து கெஞ்சியவன், அதில் முகம் புதைக்க..., அவன் கண்ணீரை அவள் கரங்கள் உணர்ந்தது.

அவன்மேல் கட்டுக்கடங்காத கோபம் இருந்தாலும்..., ஒரு நிமிர்வான ஆண்மகனாகவே அவனைப் பார்த்துப் பழகியவளுக்கு, அவன் கண்ணீர் நெஞ்சை சுட்டது.

அமைதியாக அவனை வெறிக்க..., அதுவே அவனுக்கு போதுமானதாக இருந்தது. அவள் கையைப் பற்றியவாறே அவள் அருகில் அமர்ந்தவன், “ஒரு பத்து நிமிஷம்..., என்மேல் இருக்கும் கோபத்தை தள்ளி வச்சுட்டு, நான் சொல்றதை கேள் ஐஷூ.., ப்ளீஸ்...”, அவள் கையை தன் நெஞ்சில் பதித்துக் கொண்டான்.

அவன் இதயத்துடிப்பு ரயில் எஞ்சின் வேகத்தில் துடிக்க, அதை தன் கை வழியாக உணர்ந்தவளுக்கு அவனை மறுத்துப் பேச முடியவில்லை. அதிலும், தன் காதல் மேல்

ஆணையிட்ட அவனை அவளால் நம்பாமல் இருக்க முடியவில்லை என்பதும் உண்மையே.

“டூ யூ நோ, வாட் இஸ் செக்ஸ்...?”, அவன் கேள்விக்கு, கோபமாக அவன் முகத்தை ஏறிட்டவள்.., “ஐ’ம் நாட் எ கிட்...”, சூடாகவே பதில் கொடுத்தாள்.

“ஓகே..., தென்..., “டூ யூ வான்ட் டு பீல் செக்ஸ்...?”, அவன் அடுத்த கேள்விக்கு, அவனிடமிருந்து தன் கையை உருவிக்கொள்ள போராடினாள். அதை சுலபமாக முறியடித்தவன்..., “என் கேள்விக்கு மட்டும் பதில் சொல்லு ஐஸ்...”, அவன் குரல் கமறியது.

“நோ...”, ஆத்திரமாக பதில் கொடுத்தாள்.

“சரி..., அப்போ..., டூ யூ லவ் மீ...”, இந்த கேள்விக்கு சட்டென அவளால் பதில் கொடுக்க முடியவில்லை என்றாலும்..., சற்று நிதானித்தவள், “எனக்கு உன் மேல் காதல் வராது...”, மனதில் கனன்ற கோபம் அவளை இவ்வாறு பேசத் தூண்டியது.

அவன் முகத்தில் கணக்கிட முடியாத சோகம் சூழ, அதை குரூர திருப்தியில் வெறித்தாள். அதே நேரம்..., மனதின் ஓரத்தில் எழுந்த வலியின் காரணம் அவளுக்குப் புரியவில்லை.

“டூ யூ வான்ட் டு பீல் மீ...?”, அவன் அடுத்த கேள்வியை முன்வைக்க, “ஐ ஹேட் யூ...”, கோபம், ஆத்திரம் ஆற்றாமை அனைத்தும் கலந்து உரைத்தாள்.

சற்று நேரம் அவள் பதிலை கிரகிக்க எடுத்துக் கொண்டவன்..., “ஏன் ஐஷூ..., உனக்கு என்னைப் பிடிக்கலை..., செக்ஸ் பத்தி தெரிஞ்சுக்கற ஆசையும் இல்லை. என்னை தெரிந்துகொள்ளும் ஆர்வமும் இல்லை..., அப்போ..., குழந்தை மட்டும் வேணும்னு எப்படி, எந்த விதத்தில் எதிர்பார்க்கற...?”, கரகரப்பாய் ஒலித்த அவன் கேள்வியில் தொங்கியிருந்த வலியில் இமைக்காமல் அவனை வெறித்தாள்.

“இந்த படுக்கையில்..., எந்த உணர்வும் இல்லாமல்..., குழந்தைக்காக உன்னோடு ‘கூட’ நான் என்ன மிருகமா?’, அவன் கேள்வி அவள் முகத்தில் அறைந்தது.

அவள் பேச்சற்று அவனைப் பார்க்க..., “கௌரவத்துக்காக ஆயிரம் விஷயம் செய்யலாம். நூறு கார் வாங்கு..., அடுக்கு மாடி கட்டிடம் வாங்கு. ஒரு நாய்க்குட்டி கூட வாங்கி வீட்டில் கட்டிப்போடு. ஆனால் குழந்தை...”, அவன் கண்கள் கண்ணீரை வடித்தது.

நீ வாங்கும் பொருட்களுக்குத் தெரியாது..., அதை நீ பிடிக்காமல், காட்சிப் பொருளாகத்தான் வாங்கி இருக்கன்னு. ஏன்..., அந்த நாய்குட்டிக்கு கூடத் தெரியாது..., அலங்காரத்துக்குத்தான் அதை வளர்க்கிறாய் என்று. ஆனா..., பத்து மாசம்..., உன் உதிரத்தில் வளர்ந்து,

“உன் சுவாசத்தில் ஜீவித்து, நீ சாப்பிடும் சாப்பாட்டை உண்டு..., ரத்தமும் சதையுமா..., பத்து மாசம்..., நீ என்ன நினைக்கிற...? நீ எப்படி பாத்துப்ப? இப்படி ஆயிரம் கனவுகளோட..., அது உன் கர்ப்பத்தில் இருக்கும்..., ஆனா..., ஆனா...”, அவனால் சொல்ல முடியாமல் தொண்டை அடைத்தது.

“மசக்கை வருகையில்..., அந்த குழந்தையின் தாய் சொல்வா..., இந்த சனியன் என் வயித்தில் வந்ததால் தான் இப்படி ஆச்சுன்னு. வயிறு நிறைமாதம் ஆகும்போது..., இந்த அசிங்கம் பிடித்த வயிறை தள்ளிட்டு வெளியே போக முடியலன்னு கரிச்சு கொட்டுவா.

“இதெல்லாம் அந்த குழந்தைக்கு தெரியாது. தான் ஒரு வேண்டாத ஜீவன்னு அதுக்குப் புரியாது. ஒரு நாள்..., அதுக்கு புரிஞ்சுடும்...

“பத்து மாசம் முடிகையில்..., உன் உதிரத்தில் இருந்து அதைப் பிரித்து எடுத்த பிறகு..., எங்கேயோ வந்துட்டோம்னு அது அலறி அழும்..., அப்போ... உன் அணைப்புக்காக..., ஆதரவுக்காக அது ஏங்கும். ஆனா..., சட்டுன்னு ஒரு புரியாத கரம் அதை தாங்கும்..., தாலாட்டும்..., அந்த நிமிஷம்...,

அதோட உணர்வு எப்படி இருக்கும் தெரியுமா...?", அவன் உதிர்த்த வார்த்தைகளில், அதை அனுபவித்தவனின் வலி தெரிந்தது.

இப்பொழுது அவள் அவன் கரத்தை பற்றிக் கொள்ள, "யார் கையிலேயோ வளந்து, பசிக்கு எதையோ சாப்ட்டு..., அம்மா..., அம்மான்னு மனசு அடிச்சுக்கும், ஆனா..., அந்த அம்மாவோட கதகதப்பு கிடைக்கவே செய்யாது.

"தவழும் வேளையில்..., அதுவே தாயின் வாசனை அறிந்து அவ கிட்டே போனால்..., 'இந்த சனியனை தூக்கிட்டு போ'ன்னு வள்ளுன்னு விழுவா. அப்போ அதுக்கு அந்த குரல் மட்டும்தான் தெரியும். அம்மா ஏதோ கோபமா இருக்கான்னு நினைச்சுக்கும்.

"அதுவே.., அஞ்சு வயசு ஆகும்போது..., அம்மாவுக்கு ஏன் என்னைப் பிடிக்கலன்னு ஏக்கமா ஆரம்பிக்கும். ஒரு நாள் கூட தொட்டு தழுவியிராத அம்மா..., பிறந்தநாள் அன்னைக்கு..., என் பையன்..., எங்க வாரிசுன்னு சொல்லி பூரிக்கும்போது..., அவனுக்கும் சந்தோஷமா இருக்கும்.

"அதுவே அடுத்த நாள்..., என்னை தொல்லை செய்யாதேன்னு விலகிப் போகும்போது..., மனசு உடைஞ்சு போய்டும். நோய் வந்தால், இடி இடித்தால், தனியா பீல் பண்ணினால்.., அம்மா வேணும்னு மனசு தவிக்கும். ஆனால்..., என்ன புரண்டாலும் அம்மா வரமாட்டா.

"அந்த உண்மை புரிய வரப்போ..., அந்த பிஞ்சு மனசு நொறுங்கிப் போகும். அந்த வீட்டில் தானும் ஒரு அலங்காரப் பொருள்னு தெரிய வரப்போ..., ஏன் இருக்கோம்னு வெதும்பி போய்டும்...", அவனால் தன் கண்ணீரை கட்டுப்படுத்தவே முடியவில்லை.

"ஏய்...", அவன் எதிரில் மண்டியிட்டு அமர்ந்தவள்..., அவனை அணைத்துக் கொண்டாள். அவன் கண்ணீர் அவள் தோளை நனைக்க, "இந்த உலகத்துக்கு இன்னொரு வினித் வேண்டாம் ஐஷூ..., என்னால் அதை தாங்க முடியாது...", அவன் இப்பொழுது வாய்விட்டு கதற, இவ்வளவு நேரமாக

அவன் எதையோ சொல்ல வருகிறான் என கவனித்துக் கொண்டிருந்தவள், அவனது இறுதி வார்த்தையில் துடித்துப் போனாள்.

“என்னடா சொல்ற...?”, அவள் வார்த்தைகள் வெளியே வர மறுக்க, “நம்ம குழந்தையை நீ அப்படி ஒண்ணும் விட்டுட மாட்ட...”, அவனை இழுத்து தன் மார்போடு அணைத்துக் கொண்டாள்.

“இல்ல..., குழந்தைக்கு அம்மா வேணும் ஐஷூ. அம்மா..., அம்மா இல்லாமல், அவ அணைப்பு கிடைக்காமல்..., பெத்த அம்மாவுக்கே தன்னைப் பிடிக்கலன்னா..., வேற யாருக்கு என்னைப் பிடிக்கும்? அம்மா...”, அவன் உடல் மேலும் ஏதோ நினைவில் விரைத்துப் போக, பதைத்துப் போனாள்.

ஒரு கன்னித்தாயாக.., அவள் மார்பில் பாலூறும் உணர்வு..., அந்த நொடியில் அவனுக்கு தான் தாயாக மாற வேண்டும் என்ற அவள் வேகம்.., என்ன செய்ய என்று தெரியாத தடுமாற்றம்..., இப்பொழுது அவன் செய்த செயலுக்கான காரணம் தெளிவாக புரிந்து போனது.

‘இவன் மனதுக்குள் இவ்வளவு பெரிய காயமா...?’, அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

“என் குழந்தை..., நம்மோட உச்ச காதலின் வெளிப்பாடா இருக்கணும் ஐஷூ. அது உன் வயிற்றில் உருவாகும் பொழுதே..., அதை நாம உயிரா தாங்கணும். நீ உன் வயிற்றில் நம்ம குழந்தையை சுமக்கும் பொழுது, உங்க ரெண்டுபேரையும் நான் என் நெஞ்சில் சுமக்கணும்.

“நீ மசக்கையில் துன்பப்பட்டால்..., உன்னை நான் தாங்கணும். நீ அந்த மாசக்கையை விரும்பி அனுபவிக்கணும்.., அதோட ஒவ்வொரு அசைவையும், நீ பூரிப்பா எனக்கு தெரியப் படுத்தணும். உன் குழந்தை என்னை பாடா படுத்தறான்னு செல்ல கோபத்தில் அலுத்துக்கணும்..., இப்படி..., ஏகப்பட்ட ஆசை...”, அவள் நெஞ்சோடு புதைந்து கொண்டான்.

அவளும் அவனை இறுக தழுவிக் கொண்டாள். அவள் மார்புச் சேலை நனையும் உணர்வில் கலைந்தவள்..., “ம்ச்.., இங்கே பார்.., இப்போ எதுக்கு இந்த அழுகை...?”, அவன் முகத்தை நிமிர்த்த போராடினாள்.

அது முடியாமல் போக..., “இப்படி ஒரு பயித்தியக்காரத்தனமான ஆசையை மனசுக்குள் வச்சுட்டு..., உன் மனசின் ஆசை புரிந்த பிறகு அது முடியாது எனத் தெரியவே..., வாரிசுக்காக உன்னை அணுக என்னால் முடியலை ஐஷூ.

“அதே நேரம்..., உன் விருப்பத்தையாவது நிறைவேற்றுவோம்னு..., என் மனசை கல்லாக்கிட்டு, நான் செய்த வேலை.., அது உன்னை இந்த அளவு காயப்படுத்தும்னு நான் யோசிக்கவே இல்லம்மா. என்னை மன்னிச்சுடு. இன்னுமே என் மனசுக்குள் நிறைய இருக்கு. ஆனா..., அதையெல்லாம் சொல்லும் தைரியம் எனக்கு இல்லை...”, அப்படியே அவளுக்குள் புதைந்து போக முயன்றான்.

அழுகையில் குலுங்கிய அந்த ஆண்மகனை இறுக அணைத்துக் கொள்வதைத் தவிர, அவனுக்கு எந்த ஆறுதலையும் அவளால் சொல்ல முடியவில்லை.

அவன் சொன்ன விஷயங்கள் அனைத்தும் நடந்திருக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் அவள் கண் முன்னால் நிழலாட..., வாரிசு வேண்டும் என்ற அவள் முடிவை, முற்றாக அவள் மனதில் இருந்து களைந்தாள்.

அவன், தன்மேல் காதல் கொண்டிருக்கிறாயா என்ற கேள்விக்கு..., ‘உன்மேல் எனக்கு காதலே வராது’ என்ற தன் பதில், அவனை எவ்வளவு தூரம் காயப்படுத்தியிருக்கும் என்பதை உணர்ந்தவளுக்கு, இப்பொழுது என்ன சொல்லி அதை சரி செய்ய என்பது புரியவில்லை.

அவன் மேலும் தொடர்ந்தான்..., “என் வாழ்நாளிலேயே நான் முதல் முறை வாங்கிய முத்தம் உன்னோடதுதான் ஐஷூ. அதை நீ கொடுத்தப்போ..., ஒரு ஆண்மகனா நான்

எப்படியோ பதிலடி கொடுக்க வேண்டும் என என் உணர்வுகள் போராடியது.

“ஆனா..., அதை நிதானமா உணரச் சொல்லி என் மனசு கெஞ்சியது. அதான்..., அன்னைக்கு எதுவுமே செய்யலை. ஆனால்..., நீ அதைகூட..., உன்னை கேவலமா நினைத்தேனோ என கேட்ட பார்...., முடியலை ஐஷூ..., எதையுமே என்னால் முழுசா அனுபவிக்கவே முடியாதா...?”, தன்னிரக்கம் போட்டி போட..., அதற்குமேல் தன் நிலையை அவள் முன்னால் வெளிப்படுத்த முடியாமல், பட்டென எழுந்து, வேகமாக அங்கிருந்த பாத்ரூமுக்குள் புகுந்து கொண்டான்.

விக்கித்துபோய் அமர்ந்திருந்தாள் ஐஸ்வர்யா. ‘இப்போ நான் எழுந்து அவன் பின்னால் ஓடணுமா? அழாதேன்னு கொஞ்சணுமா? என்னிடம் வந்துவிடு என கெஞ்சணுமா...?’ அவளுக்கு எதுவும் ஓடவில்லை.

அவன் மனதளவில் மிகுந்த பாடு பட்டிருக்கிறான் என்பது மட்டும் புரிந்தது. அவனை தானும் தன் பங்குக்கு காயப்படுத்திவிட்டோம் என்பதும் தெரிந்தது. ஆனால்..., அடுத்து என்ன...? எதுவும் புரியவில்லை.

பாத்ரூம் சென்றவன்..., முயன்று தன்னை சீர்படுத்திக் கொண்டவன், அடுத்த ஐந்து நிமிடத்தில், குளித்துவிட்டு, அப்படியே உடை மாற்றும் அறைக்குச் சென்றவன், வழக்கமாக தான் அணியும் பெர்முடாசும், ஒரு கையில்லாத டிஷர்ட்டும் அணிந்தவன், இயல்பான முகத்தோடு வெளியே வந்தான்.

இன்னும் அவள் படுக்கையில் அசையாமல் அமர்ந்திருப்பதைப் பார்த்தவன், தான் கொண்டு வந்து வைத்த ப்ளேட்டை கையில் எடுத்தவன், “நீ இன்னும் சாப்பிடவே இல்லையே ஐஷூ..., முதல்ல சாப்பிடு...”, அவள் கையில் பிளேட்டை கொடுத்தவன், அவள் அருகில் அமர்ந்து கொண்டான்.

“சாரிம்மா..., இனிமேல் இப்படி செய்ய மாட்டேன்....”, அவன் உரைக்க, அவள் வாயில் வைத்திருந்த சப்பாத்தி, தொண்டைக் குழியில் இறங்க மறுத்தது.

***

# பகுதி - 28.

மிகவும் அழகான விடியல்..., அவன் வாழ்நாளிலேயே இப்படி ஒரு விடியலை அனுபவித்ததில்லை. காலையில் கண் விழித்தவன்..., வழக்கமாக தன்மேல் சாய்ந்திருக்கும் மனைவியை காணாமல் சோர்ந்து போனான்.

ஆனால் அது ஒரு நொடிதான்..., கண் விழித்தவனுக்கு அந்த வருத்தம் காற்றில் மிதக்கும் பஞ்சாக காணாமல் போனது. அதற்குக் காரணம்...., அவன் தலை ஐஸ்வர்யாவின் மடியில் இருக்க..., கட்டிலில் இரு தலையணை வைத்து சாய்ந்து அமர்ந்திருந்தவளின் கரம் அவன் நெஞ்சில் பதிந்திருந்தது.

கண் விழித்தவன் இமைக்காமல் அவளையே வெறித்திருந்தான். அவளோ..., இன்னும் உறக்கத்தில் இருந்தாள். தலை இடப்பக்கமாக சாய்ந்திருக்க..., அவன்மேல் இருந்த கரத்தின்மேல் தலையைத் தாங்கியிருந்தாள்.

‘ஹையோ..., எவ்வளவு நேரமா இப்படி இருக்கா? கழுத்து வலிக்குமே. நான் எப்போ..., எப்படி அவ மடியில் படுத்தேன்...?’, யோசனை ஓடினாலும், அவளுக்கு கழுத்து வலிக்குமே என்ற நினைவில் சட்டென எழுந்து விட்டான்.

நேற்று இரவில் தான் படுக்கையில் தானாக படுத்த நினைவே இல்லை. அவளிடம் விடாமல் எதையோ புலம்பியவாறு, தலை கவிழ்ந்து அமர்ந்திருந்தது மட்டுமே நினைவிற்கு இருக்கிறது.

அவள் சப்பாத்தியை சாப்பிட்டுவிட்டு, பாலை குடித்து முடித்தவள், ப்ளேட்டை அறைக்கு வெளியே வைத்த வரைக்கும்தான் நினைவிற்கு வந்தது. அதற்கு மேல்..., அவள் பாத்ரூம் சென்றதும் ஏதோ நிழல் போல் நினைவில் ஆடியது.

‘அப்படின்னா..., அப்படியே உக்காந்தே தூங்கிட்டேனா?’, அதன் பிறகு அவள் தன்னிடம் பேசவில்லையே என வருத்தப்பட்டு அமர்ந்திருந்தது புகைபோல்

தெளிவில்லாமல் தெரிந்தது. ‘உக்காந்தே தூங்கினவன்..., எப்படி அவ மடிக்கு போனேன்...?

‘ஏதோ நினைப்பில் நடு ராத்திரி அவமேலே போய் விழுந்துட்டேனா? அப்படி இருந்தாலும், அவ உக்காந்தே தூங்கி இருக்கிறாளே..., ஒரு சின்ன சத்தத்துக்கே விழித்துக் கொள்பவள்..., இந்த நிலையில் எப்படி தூங்கியிருப்பாள்?’, கவலை கொண்டான்.

ஐஸ்வர்யாவை அவன் கவனித்தவரை..., அவள் சவுகர்யமாக படுத்தால் மட்டுமே தூங்குவாள். ஒரு சிறு சத்தம் கூட அவள் தூக்கத்தை கலைத்துவிடும். அப்படி எழும் பட்சத்தில்..., அவள் மொபைலில் இருக்கும் பாடலை ஒலிக்கவிட்டு, காதுக்குள் இயர்போனை திணித்துக் கொண்டால் தான் தூங்குவாள்.

அப்படிப்பட்டவள்..., அமர்ந்த நிலையில்..., இரவில் ஒரு பொட்டு கூட உறங்கியிருக்க மாட்டாள் என்பதும், விடியக் காலையில்..., தன்னை மீறி கண்ணயர்ந்து இருப்பாள் என்பதும் புரிய..., அவள் எழுந்துவிடாதவாறு, அவள் தோள் பற்றி, படுக்கையில் சரித்தவன், தலையணையில் அவள் தலையை சரியாக வைத்துவிட்டு, அவள் நெற்றியில் புரண்ட முடியை மெதுவாக விலக்கியவன், அவள் நெற்றியில் பட்டும் படாமல் இதழ் ஒற்றிப் பிரிந்தான்.

ஏசியை அவளுக்கு பிடித்த விதத்தில் சில்லை அதிகரித்தவன், கம்பளியை எடுத்து அவள் கழுத்துவரை போர்த்திவிட்டு, தன் காலைக் கடன்களை பார்க்கச் சென்றான்.

நேரம் தான் வழக்கமாக எழும் நேரத்தைவிட, இரண்டுமணி நேரம் அதிகமாக காட்ட..., ‘நானுமா இவ்வளவு நேரம் தூங்கிட்டேன்...? அப்போ நானும் லேட்டாதான் தூங்கினேனா? அவளை பேசியே அறுத்துட்டேன் போல...’, எண்ணினாலும்..., அவள் கோபத்தை கைவிட்டுவிட்டு, தன்னை மடி தாங்கியது அவனுக்கு பிடித்தது.

அதே நேரம்..., தான் அவளை இந்த அளவு காயப்படுத்தியிருக்கக் கூடாது என்பதும்..., முடிந்த அளவு அவளுக்கு பிடித்த மாதிரி நடந்துகொள்ள வேண்டும் எனவும் முடிவெடுத்துக் கொண்டான்.

அவன் குளித்து முடித்து, அலுவலகத்துக்கு கிளம்பி வந்த பிறகும், அவள் அசந்து தூங்குவதைப் பார்த்தவன்..., ஜன்னல் திரைச்சீலைகளை நன்றாக இழுத்து மூடிவிட்டு கீழே இறங்கி வந்தான்.

அவனுக்காக ஸ்ரீராம் காத்திருக்க..., ஒரு நொடி நடையை தேக்கியவன், “மாமா..., ஐஸ்வர்யா நல்லா தூங்கறா..., அதான் அவளை எழுப்பலை”, அவன் உரைக்கவே..., அமைதியாக கேட்டுக் கொண்டார்.

உணவு மேஜையில் அமர்ந்தவன்..., இரண்டு இட்லியோடு உணவை முடித்துக் கொள்ள, “என்ன தம்பி..., வர வர சரியாவே சாப்பிடுறது இல்லை. உங்களுக்கு வேண்டி ஆசையா சமைக்கிறது எல்லாம் அப்படியே மீந்துருது...”, துரை கவலையாக உரைத்தார்.

“கொஞ்சம் வயிறு சரியில்லை..., அதான்..., நீங்க ஐஸ்வர்யாவுக்கு சான்ட்விச்சும்..., ஜூசும் தாங்க..., நான் ரூம்ல வச்சுட்டு கிளம்பறேன்...”, பேச்சை மாற்றி விட்டான்.

‘வயிறு மட்டும்தான் சரியில்லையா...?’, ஸ்ரீராமின் நுனி நாக்குவரை வந்த கேள்வியை, அவசரமாக இட்லியோடு சேர்த்து விழுங்கினார்.

மகளின் இந்த தூக்கத்துக்குப் பின்னால்..., தான் மகிழும் அளவுக்கான காரணம் எதுவும் இல்லை என்பது அவருக்கு தெளிவாகத் தெரியும். அப்படி இருக்கையில்..., எப்பொழுதுமே விடிந்த பிறகு ஒரு நிமிடம் கூட தூங்கியிராத மகள் தூங்குகிறாள் என அவன் உரைத்தால்..., அவரால் மகிழ முடியுமா என்ன?

அதிலும்..., நேற்று மதியத்துக்குமேல்..., மாலை, இரவு என அறையை விட்டு வெளியே வராதவள்..., “வினித்...,

அவளுக்கு உடம்புக்கு எதுவும் இல்லையே…”, ஒரு தந்தையாக அவரது கவலை…

“இல்ல மாமா…, நல்லாத்தான் இருக்கா…” ‘ஆனா…, மனசுதான்…’, எண்ணியதை சொல்ல முடியாமல்…, வேகமாக கை கழுவ எழுந்து சென்றான்.

அன்று அவரிடம் எல்லாம் தான் பார்த்துக் கொள்கிறேன் என வீராப்பாக சொல்லிவிட்டு…, அவர் மகளின் மனதை குத்திக் கிழித்துவிட்டேன் என அவரிடம் எந்த முகத்தை வைத்துகொண்டு சொல்வது.

துரை கொண்டுவந்த டிரேயை வாங்கிவிட்டு வேகமாக மாடியேறினான். “ஐயா…, சிறுசுங்க ஒண்ணும் சந்தோஷமா இருக்க மாதிரி இல்லைங்களே. அதான் இப்போ எல்லாரும் என்னவோ ஹனிமூன் எல்லாம் போறாங்களே…, நீங்களும் சிறுசுங்களை அனுப்பி வைங்களேன்…”, அவருக்குத் தெரிந்த யோசனையை உரைத்தார்.

“எனக்கு மட்டும் அந்த ஆசை இல்லையா என்ன…, ஆனா…, அதை நாம முடிவு பண்ண முடியாதே. இவ்வளவு நாள் பொறுத்துட்டோம்…, இன்னும் கொஞ்ச நாள்…, பார்க்கலாம்…”, ஸ்ரீராம் அலுவலகம் கிளம்பிவிட்டார்.

தங்கள் அறைக்குள் நுழைந்த வினித் ஐஸ்வர்யாவைப் பார்க்க, இப்பொழுது தன் இடக்கரத்தை தன் கன்னம் தாங்கி…, வலக்கரத்தை அருகில் இருந்த தலையணையில் வைத்து, ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள்.

அங்கேயே…, அப்படியே அவள் முகம் பார்த்தவாறு அமர்ந்துவிடச் சொல்லி, அவன் உள்ளம் உந்தினாலும், கண்விழிக்கும் அவள் முகத்தை நேருக்கு நேர் பார்க்கும் தைரியமற்றவனாக, உணவை டீபா மேல் வைத்துவிட்டு, ஒரு வெள்ளை காகிதத்தில் ‘sorry…’ என எழுதியவன், ஒரு சோக ஸ்மைலியை வரைந்துவிட்டு டிரெயின் அடியில் வைத்துவிட்டு கிளம்பிவிட்டான்.

அலுவலகத்துக்கு வந்துவிட்டானே தவிர, எந்த வேலையையும் அவனால் செய்ய முடியவில்லை.

மனதுக்குள் ஒரு வித அழுத்தம்..., நேரம் பதினொன்றை கடக்க..., 'எழுந்திருப்பாளா...?' அலைபேசியை ஒரு ஆயிரம் முறையாக எடுத்தவன், அவளுக்கு அழைக்க முடியாமல் மீண்டும் மேஜைமேல் தூக்கிப் போட்டான்.

அவன் நடத்தையில் இருந்த மாற்றத்தை சட்டென உணர்ந்துகொண்ட குமார்..., "கார்த்தி.., என்ன வினித் சார் ஆபீஸ்க்கு வந்தவர், ரூமை விட்டு வெளியவே வரக் காணோம்? மேடத்தை வேற காணோம்..., எதுவும் பிரச்சனையா இருக்குமோ...?", கவலையானான்.

"ஏண்டா..., நான் என்ன அவனோடவா இருக்கேன். உன்கூடத்தானே இருக்கேன். எனக்கு மட்டும் எப்படித் தெரியும்...? இப்போ கேண்டீன் போகும்போது அவனை தள்ளிகிட்டு போய் என்னன்னு கேக்கலாம்..., நீ வேலையைப் பார்....", தங்கள் வேலையைத் தொடர்ந்தார்கள்.

அங்கே படுக்கையில் இருந்து கண்விழித்த ஐஸ்வர்யா சோம்பலாக கண்விழித்த ஐஸ்வர்யா, கைகளால் அருகில் துழாவ, அவன் இல்லை எனவே, வேகமாக எழுந்து அமர்ந்தாள்.

கண்கள் தாமாகவே கடிகாரத்திற்குச் செல்ல..., அது நண்பகல் வேளையைக் காட்ட..., "அடப்பாவமே..., இவ்வளவு நேரமா தூங்கிட்டேன்...", அவள் இரவில் நேரம் பார்க்கும்பொழுது, அது நான்கு மணியை காட்டிய ஞாபகம்.

"அப்போ அதுக்குப் பிறகு தூங்கிட்டேன் போல...", வாய் விட்டு உரைத்தவள், எழுந்து பாத்ரூம் செல்ல, அங்கிருந்த ட்ரேயைப் பார்த்தவள்..., "என்ன நினைப்பில் இருந்தாலும், வயித்தை வாடவே விட மாட்டான்...", செல்லமாக அலுத்தவள், பசியை உணர்ந்து, பல் துலக்கியவள், முதல் வேலையாக ஜூஸை காலி செய்தாள்.

கீழே இருந்த வெள்ளை காகிதத்தைப் பார்த்தவள், புருவம் நெரிய அதை கையில் எடுத்தவள், அதில் இருந்த வார்த்தைகளைப் பார்த்து மெல்லிய கோபம் கொண்டாள்.

“ஹப்பா..., இவன் இதை இனிமேல் விடவே மாட்டான் போல..., இருடா..., உன்னை வந்து கவனிக்கிறேன்...”, அவனை இப்பொழுதே காணவேண்டும்போல் இருந்தது. இரவில் அவன் விடாமல் புலம்பியதும், தான் படுக்க வருகையில்..., தலை குனிந்தவாறு அவன் உறங்கி விட்டத்தையும் பார்த்தவள், “வினு...”, அவனை கலைத்தாள்.

அவனோ..., மீண்டும் ‘சாரி...’ என புலம்ப, அவனை சாய்த்து படுக்க வைக்க முயல்கையில், அவன் தடுமாறி அவள் மடியில் விழ, ஏனோ அவனை தள்ளி படுக்க வைக்க மனமின்றி, தலையணையை எடுத்து சாய்த்து வைத்து, அதில் சாய்ந்து கொண்டு, அவன் முகத்தை பார்த்தவாறு அமர்ந்திருந்தாள்.

அவன் சிகை காற்றுக்கு ஆட..., ஒருவித தயக்கமும், நடுக்கமும் போட்டி போட, அவன் சிகையை கோதியவள்..., அவன் கன்னம் தடவியவாறு அமர்ந்திருந்தாள். கடிகாரத்தின் ஓசையில் தன் நினைவை கலைத்தவள்,

அதன் பிறகு வேகமாக குளித்து கிளம்ப, மதிய வேளை ஆகையால், உணவை முடித்துக் கொண்டே அலுவலகம் கிளம்பினாள். அங்கே கிரி தயாராக இருப்பதைப் பார்த்தவள்..., ‘இவன் எப்போ வந்தான்னு தெரியலையே?’ எண்ணினாலும் அதை வாய் விட்டு கேட்கவில்லை.

அலுவலகத்துக்குள் நுழைந்தவள், முதல் வேலையாக அவனைத் தேட, அவனோ அவள் பார்வைக்கு படவே இல்லை. அவள் வந்ததை உணர்ந்த சந்தியா அவளைக் காண வர, “விபி எங்கே...? ரூம்ல ஆளைக் காணோம்”, அவள் முதல் கேள்வி இதுவாகத்தான் இருந்தது.

“அவங்க எல்லோரும் இப்போதான் கேண்டீன் போறதைப் பார்த்தேன். கூப்பிடவா மேம்...”, அவள் சற்று பதட்டமானாள். வந்ததும் வராததுமாக அவனைக் கேட்டால், அவளும் என்னதான் செய்வாள்.

“ஓ..., சரி நீ போ..., நான் பாத்துக்கறேன்...”, அவள் இருக்கையை விட்டு உடனே எழுந்து செல்ல, அதைப்

பார்த்த சந்தியா வேகமாக தன் அலைபேசியை எடுத்து வினித்துக்கு அழைத்தாள்.

அதைப் பார்த்த ஐஸ்வர்யா..., “இப்போ யாருக்கு போன்...?”, அவள் முன்னால் நின்று கேட்க, அதற்குள் அவள் அழைப்பை ஏற்ற வினித், “சந்தியா..., எனி ப்ராப்ளம்...?”, அவன் கேட்டுக் கொண்டிருக்க, அவள் அலைபேசியை வாங்கிய ஐஸ்வர்யா, அதை ஸ்பீக்கரில் மாற்றினாள்.

“சந்து..., போன் பண்ணிட்டு பேசாமல் இருந்தால் என்ன அர்த்தம்? பேசும்மா...”, எதிரில் இருந்த கார்த்திக்கை ஓரக்கண்ணால் கவனித்தவாறு பேச, அதை கேட்டுக் கொண்டிருந்த ஐஸ்வர்யாவுக்கு பிபி எகிறியது மட்டும் உண்மை.

கார்த்திக்கும் அவனை முறைக்க, அதைக் கண்டுகொள்ளாமல், “சந்து..., ரெண்டு நாள் முன்னாடி உன்னை பொண்ணு பாக்க வராங்கன்னு சொன்னியே..., என்ன கிளிக் ஆயிடுச்சா...? சந்தோஷத்தில் வாயடைச்சு போயிருக்க போல...”, சிரிப்பை உள்ளடக்கிய குரலில் கலாய்க்க, அவன் உற்சாகம் ஐஸ்வர்யாவை கோபப்படுத்தியது.

‘என்கிட்டே அளந்து கூட பேச மாட்டான்..., இங்கே சந்துவாம்..., மவனே.., உனக்கு இருக்குடா...’, அவள் பல்லைக் கடிக்க..., அவள் முகத்தைப் பார்த்த சந்தியா நடுங்கிப் போனாள்.

“ஐயோ வினித்..., கொஞ்சம் நிப்பாட்டுறீங்களா...? நிலைமை புரியாமல்”, அவள் அவனைத் தடுக்க,

“என்ன...? உனக்கு மாப்பிள்ளையை பிடிக்கலையா...? வேற யாரை பிடிச்சிருக்காம்...?”, அவன் கேட்டுக் கொண்டிருக்க, அவன் அலைபேசியைப் பிடுங்கி அணைத்து வைத்தான் கார்த்திக்.

அலைபேசி கட்டாக..., ஒரு நிம்மதி பெருமூச்சு விட்டாள் சந்தியா. அந்த நிம்மதியை கலைத்தது ஐஸ்வர்யாவின் பார்வை. “என்ன நடக்குது இங்கே...?”, அவள் வினவ...,

“ஐயோ மேம்..., வினித் சும்மா கலாய்க்கறார்”, அவள் படபடக்க,

“ஓ...”, அவள் பாவனையே, சந்தியா சொல்வதை நம்பவில்லை என உரைக்க, கையைப் பிசைந்தாள்.

“அவனை அங்கே போய் கவனிக்கறேன்...”, ஐஸ்வர்யா கிளம்பிவிட, தன் அலைபேசியை பிடுங்கிச் சென்ற அவளை திகைப்பாய் பார்த்தவாறு நின்றிருந்தாள்.

“இன்னைக்கு வினித்க்கு நேரமே சரியில்லை போல..., கார்த்திக் பக்கத்தில் இருந்தால் என்ன பேசுறோம் என்னன்னே வினித்க்கு புரியாதே...”, அலுத்துக் கொண்டவள், ஐஸ்வர்யாவின் பின்னால் சென்றாள்.

ஐஸ்வர்யா கேண்டீன் செல்ல, அங்கே வினித்தை துரத்திக் கொண்டிருந்தான் கார்த்திக். “டேய்..., வேண்டாம்..., நின்னுடு.., இல்ல கொன்னுடுவேன்...”, கார்த்திக் கத்த,

“அட..., இது நல்லா இருக்கே..., உன்கிட்டே அடி வாங்க நான் நிக்கணுமா? முடிந்தால் பிடிடா...”, அவன் போக்கு காட்ட,

“டேய் குமார்..., அவனைப் பிடிடா...”, குமாரிடம் கேட்டான்.

“ம்கும்..., என்னைய ஓயாம ஓட்ரல்ல.., அதெல்லாம் முடியாது போ...”, அவன் முறுக்கிக் கொண்டான்.

“போடா பண்ணி...”, அருகில் இருந்த டம்ப்ளரை அவனை நோக்கி வீச, “கேச்..., நீ அவுட்டு...”, அவன் உரைக்க, இப்பொழுது அவனை அடிக்கப் பாய்ந்தான்.

இப்படி ஒரு சூழலை அங்கே எதிர்பார்த்திராத ஐஸ்வர்யா வாசலிலேயே நின்றுகொள்ள, “நான் அவுட்டா..., இப்போ நீ அவுட்டாக போற பார்...”, குமாரை புரட்டி எடுத்தான்.

“டேய் கார்த்திக்..., என்னைய அடிக்க முடியலன்னு.., அந்த பச்ச புள்ளையை ஏண்டா அடிக்க..., அங்கிருந்த டிஷு பேப்பரை சுருட்டி அவன் முதுகில் எறிந்தான்.

“யார்…, இவன் பச்ச புள்ளையா…? இப்போ விட்டா கூட பத்து புள்ளை பெத்துடுவான்…, இவனைப் போய்…”, அவன் சொல்லிக் கொண்டிருக்கும் வேளையே…,

“வாங்க மேம்…, பிரெஷ் ஜூஸ் போடவா…?”, கேண்டீன் மாஸ்டர் குரல் கொடுக்க, சாப்பிட்டு டேபிள் மேல் குமாரை போட்டு புரட்டிக் கொண்டிருந்த கார்த்திக், பட்டென அவனை கை கொடுத்து எழுப்பியவன், அவன் தோளில் கை போட்டுக் கொண்டான்.

அவன் செய்கையைப் பார்த்த சந்தியா பக்கென சிரித்துவிட, சிரிப்பை மறைத்த ஐஸ்வர்யாவோ…, போலியாக அவர்களை முறைத்தாள். இதுவே மற்ற நேரமாக இருந்திருந்தால், அவர்களை கடித்து குதறியிருப்பாள். ஆனால்…, இன்று தன் கணவனின் முகத்தில் இருந்த அளவிட முடியாத சந்தோசம், அவளை கோபமாக எதையும் சொல்ல அனுமதிக்கவில்லை.

வினித்தும் கார்த்திக் அருகில் வந்தவன், “மச்சான்…, பெர்பெக்ட் டைம்டா…”, அவன் காதில் கிசுகிசுக்க…, இப்பொழுது கொலை வெறியில் அவனை முறைத்தான் கார்த்திக்.

“டேய் கரடி…”, வினித்துக்கு கேட்குமாறு முனகியவள், “இது ஆபீஸா இல்ல வீடா…? சின்னப் பசங்க மாதிரி விளையாடுறீங்க?”, குரல் உயர்த்தி, அவள் கேட்க…, மூவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். அதைவிட, அவளது கரடி என்ற அழைப்பை, கார்த்திக்கும், குமாரும் கூட உணர்ந்து கொண்டார்கள்.

வினித்தின் மனம் உல்லாசத்தில் நிறைய, அவளைப் பார்த்து மெல்லியதாக சிரித்தான்.

“நல்லா கேளுங்க மேம்…, சின்னப் பசங்க மாதிரி அடிச்சுக்கறாங்க…”, குமாரும் எடுத்துக் கொடுக்க, மற்ற இருவரும் அவனை முறைத்தார்கள்.

“நீ வெளியே வாடி…”, கார்த்திக் அடிக்குரலில் உறும, “மேடம்…, வெளியே போய் என்னை மிதிப்பாராம்…”, புகார்

வாசித்தான்.

அவன் தோளில் போட்டிருந்த கையை நெரிக்க..., வலியில் நெளிந்தவன், முகத்தில் அதை காட்டாமல் மறைக்க திணறினான்.

அதைப் பார்த்தவள்..., “இதுதான் நீங்க வேலை செய்யும் லச்சணமா..? கேண்டீனில் இவ்வளவு நேரமா என்ன பண்றீங்க...?”, பார்வை வினித்தை துளைத்தது.

“அது மேம்..., நம்ம குமாரோட இங்கிலீஷ் புலமையை பாத்துட்டு இருந்ததில் நேரம் போனதே தெரியலை....”, வினித் பட்டென உரைக்க, குமார் கலவரமானான்.

“சார்..., சார்..., வேணா சார்..., அதான் இம்மா நேரமா ஓடுனீங்கல்ல..., போதும்...”, அலறினான்.

ஐஸ்வர்யாவின் முகத்தில் ஒரு சுவாரசியம் வர, அமைதியாகவே அவர்களை ஏறிட்டாள். அங்கிருந்து அகன்றுவிட அவளுக்கு ஒரு நொடி ஆகாது..., ஆனால்..., தன்னிடம் பேசும் அவனை, முகம் முறித்துச் செல்ல முடியவில்லை.

அதை உணர்ந்தவன்..., “அது என்னன்னா..., திருவனந்தபுரத்தில் இருந்து கோழிகோடு எவ்வளவு தூரம்னு கேட்டால்..., குமார் கிட்டத்தட்ட நானூறு கிலோமீட்டர் இருக்கும்னு சொன்னான்.

“சரி அப்போ ட்ருவண்ட்ரம் டு கேழிகட் எவ்வளவு தூரம்னு கேட்டால்..., அம்பது கிலோமீட்டர் தான் இருக்குமாம்...”, வினித் உரைக்கவே, தன்னையும் மீறி சிரித்துவிட்டாள் ஐஸ்வர்யா.

அவள் சிரிப்பதை அங்கிருந்த அனைவரும் விழி விரிய பார்க்க, குமார் மயக்கம் போட்டே விழுந்துவிட்டான். “போச்சுடா...”, வினித் சிரிக்க,

“முதல்ல போய் உங்க வேலையைப் பாருங்க..., இவனையும் எழுப்பி விடுங்க...”, உரைத்தவள், தன் பின்னால் நின்ற சந்தியாவை முறைத்துவிட்டு நகர்ந்தாள்.

ஐஸ்வர்யா செல்லவே..., அவர்கள் அருகில் வந்த சந்தியா..., “என்ன வினித், ஏற்கனவே கோபமா வந்தாங்க...”, அவனிடம் புலம்ப,

“ஏய் சந்து..., அவ வரான்னு ஒரு வார்த்தை சொல்ல மாட்டியா..?”, செல்லமாக அவள் தலையில் வினித் குட்ட, “ஆமா.., அதைச் சொல்ல போன் பண்ணா..., தேவையில்லாம எதையோ பேசுனது நீங்கதான். இப்போ என்னையவே குத்தம் சொல்றீங்களா...?”, தன் கையில் இருந்த ஃபயிலால் அவனை அடித்தாள்.

ஜன்னல் வழியாக அதைப் பார்த்த ஐஸ்வர்யாவுக்கு, வினித்தின் மேல் கோபம் எழுந்தது. ‘ஒரு நாளாவது என்கிட்டே இப்படி பேசியிருக்கானா?’ அவள் மனம் எண்ண, நீ அவனிடம் பேசினாயா...? மனசாட்சியின் கேள்விக்கு பதில் உரைக்க முடியாமல், வேகமாக அங்கிருந்து நகர்ந்தாள்.

“சந்து..., உனக்கு நான் ஒரு மாப்பிள்ளை பார்த்திருக்கேன். பாக்கறியா...?”, வினித் ஆர்வமாக வினவ,

“டேய்..., முதல்ல இந்த எருமையை எழுப்புடா. மீதியை பிறகு பாக்கலாம்”, கார்த்திக் எரிந்து விழுந்தான்.

“நாம பிறகு பேசலாம்...”, வினித் அதற்கும் பேச, “சந்தியா..., நீங்க கிளம்புங்க...”, கார்த்திக் அவளிடம் உரைத்தான்.

மறு பேச்சின்றி அவள் கிளம்ப, வினித் அவனை முறைத்தான். “இப்போ ஏண்டா அவளை விரட்டுற...?”, அவனிடம் சண்டைக்கு போனான்.

“டேய் எரும..., கொரங்கே.., எந்திரிடா..., சும்மா சீனைப் போடாதே...”, குமாரின் சட்டையைப் பிடித்து உலுக்கினான்.

கண்ணைத் திறந்தவன், “அதுக்கு ஏன் என்னை அனிமலை எழுப்புற மாதிரி எழுப்பற..., குமார் எழுந்து நிற்க, “ம்கும்..., இங்கே ஒருத்தன் கரடின்னு சொன்னதுக்கே ‘ஈ’ இருக்கான். உனக்கு ஏண்டா...”, அதற்கும் எரிந்து விழுந்தான்.

“மேடமும், நீயும் ஒண்ணா சார்...? சரி..., உன்னை எந்த பக்கம் பக்கம் பாத்தாலும் எனக்கு அப்படித் தெரியலையே...?”, குமார், ஒரு மார்கமாக அவனைப் பார்த்து உரைக்க, பகபகவென சிரித்துவிட்டான் வினித்.

சற்று நேரத்துக்கு முன்பு வரைக்கும் ‘உம்’ என இருந்தவன் இவன்தானா என இருவரும் ஒருவர் மற்றவரை பார்த்துக் கொண்டார்கள். அதே நேரம்..., தன் நண்பன் வாழ்க்கையை வாழத் துவங்கிவிட்டான் என்பதில் இருவருக்கும் பரம திருப்தி.

“சரிடா..., எனக்கு எம்டி கிட்டே ஒரு டிஸ்கஷன் இருக்கு, நான் கிளம்பறேன்”, அங்கிருந்து கிளம்பிவிட்டான்.

அவள் அறைக்குச் செல்லப் போகையில், சந்தியாவின் நினைவு வந்தவனாக, அவள் கேபினுக்குச் சென்றான். அவள் மேஜைமேல் தலை கவிழ்ந்து அமர்ந்திருக்க, “சந்து...”, அவள் அருகில் சென்று, அவன் தலையில் கை வைத்தான்.

கண் கலங்க அவனை ஏறிட்டவள்.., “நிஜமாவே கார்த்திக்கு என்னை பிடிக்கவே இல்லையா? என்னால் எவ்வளவு நாள்தான் இப்படி நடிக்க முடியும்...?”, கலங்கிய குரலில் வினவினாள்.

“ஹேய்..., உன்னை ரொம்ப தைரியமான பொண்ணுன்னு நினைச்சுட்டு இருக்கேன்..., நீ என்னன்னா..., அவனுக்கு உன்னை பிடிக்காமல் தான், உனக்கு மாப்பிள்ளை பாத்திருக்கேன்னு சொன்னவுடன் இப்படி கொந்தளிக்கிறானா?

“சரி விடு..., உனக்கு ஒரு மாப்பிள்ளை பாத்திருக்கேன்னு சொன்னேனே..., நீ அதை கண்டுக்கவே இல்லை. இரு..., அவன் போட்டோவை காட்டறேன்...”, உரைத்தவன், தன் அலைபேசியில் இருந்த கார்த்திக்கின் புகைப்படத்தைக் காட்ட..., “ஐயோ...”, அந்த படத்தைப் பார்த்தவள், பட்டென முகத்தை மூடிக் கொண்டாள்.

சந்தியாவின் முகத்தில் அப்பட்டமாக ஒரு வெட்கமும், தவிப்பும் போட்டி போட, சிணுங்கலான முகபாவனையுடன் அவனை முறைக்க முயன்றாள்.

அதே நேரம்..., சந்தியாவின் அலைபேசியை அவளிடம் கொடுக்க வந்த சந்தியா இந்த காட்சியைக் காண.., அவள் முகத்தில் அப்பட்டமான அதிர்ச்சி.

அவள் வந்த வேகத்தில் திரும்பிச் செல்ல, "ஐஷூ...", அவளை அழைத்தவன், "இன்னைக்கு எல்லாமே சொதப்பலாவே இருக்கு...", புலம்பியவாறு அவள் பின்னால் ஓடினான்.

அவளோ..., தன் மடிக்கணினியை பட்டென மூடியவள், தன் அலைபேசியை எடுத்துகொண்டு வெளியேறினாள். 'ஐயோ..., மலையேறிடா போல இருக்கே. ஏண்டா இப்படி சொதப்புற...', தன்னையே கடிந்துகொண்டவன். அன்றைய வேலையை விட்டுச் செல்ல முடியாமல் அங்கே தேங்கினான்.

இரவில் தங்கள் அறைக்குள் நுழைந்தவனுக்கு, நேற்றைய நிகழ்வும் சேர்ந்து நினைவிற்கு வர, அடுத்த அடியை எடுத்து வைக்க வெகுவாய் தயங்கினான். அவளை எப்படி எதிர்கொள்ளப் போகிறோம் என்ற சங்கடம் அதிகமிருந்தது.

குளித்து உடை மாற்றியவன்..., அவள் எங்கே என்று தேட..., பால்க்கனியில் அவள் இருப்பது புரிய..., அங்கே சென்றவன், "ம்கும்...", தொண்டையை செருமினான்.

"சார் இப்போதான் வரீங்களா...? ஆபீஸ்ல ரொம்ப வேலை போல...", நக்கலாக கேட்டாள். அவள் கண்களோ கோபத்தை வெளிப்படுத்தியது.

"சாரி...", அவன் துவங்கவே..., "அதென்ன..., என்கிட்டே மட்டும் இந்த சாரியை விட்டால் உனக்கு பேச வேற எதுவுமே இல்லையா? ஊர்ல இருக்க எல்லார்ட்டயும் இளிச்சு..., இளிச்சு பேசற..., அந்த சந்தியா கிட்டே உனக்கு என்ன பேச்சு வேண்டிக் கிடக்கு...", கோபமாக கேட்டவள், அவனை நோக்கி வர..., இருவரும் அறைக்குள் வந்து விட்டிருந்தனர்.

“அதிலேயும்..., என்னவோ நீதான் பெத்து பேர் வச்சவன் மாதிரி..., ‘சந்தூதூதூ...’ன்னு கொஞ்சல் வேற..., செல்லமா நீ குட்றதும், அவ அடிக்கிறதும்..., இன்னும் எனக்குத் தெரியாமல் வேற என்னவெல்லாம் இருக்கு...?”, அவள் பேச்சில் பொறாமை தூக்கலாகவே இருந்தது.

“ஏய்..., அவ எனக்கு தங்கச்சி மாதிரி...”, பதறினான்.

“ஓ..., உங்க ஊர்ல தங்கச்சியா நினைக்கறவளை கையைப் பிடிச்சு பேசுவீங்களா? நீ நின்ன விதமும்..., அவ வெக்கத்தையும் பாத்தா..., நீ என்னவோ அவளுக்கு....”, அடுத்த வார்த்தை பேச அவள் இதழ்கள் அவள் வசம் இருக்கவில்லை.

பட்டென அவளை சுவற்றில் சாய்த்தவன்..., அவள்மேல் அழுந்த சாய்ந்துகொண்டு, அவள் இதழ்களை கவ்விக் கொண்டான். “டே...ய்...”, இந்த இரு வார்த்தைகள் கூட..., முழுதாக அவள் இதழ் தாண்டி வெளியே வர முடியவில்லை.

அவன் நெஞ்சில் கை வைத்து தள்ள முயல, அவனை ஒரு இன்ச் கூட அவளால் நகர்த்த முடியவில்லை. அவள் கரத்தை தூசி தட்டுவதுபோல் விலக்கியவன்.., கைகள் இரண்டையும் அவள் மேனியில் தாறுமாறாய் பயணிக்க விட்டான்.

அவன் பார்வைக்கள் கூட படரத் தயங்கிய இடங்களை எல்லாம்..., அவன் கரங்கள் மொத்தமாக உணர..., அவன் கையைத் தடுக்க முயன்றவளுக்கு, வெற்றிகரமான தோல்வியே மிஞ்சியது.

‘அ..ம்...மா...’, அவன் செய்கையில் மொத்தமாக அவள் தேகம் குழைய..., கால்கள் பலமிழக்க, இறுதியில் ‘என்னவோ செய்துகொள்...’ என தன் கரத்தை அவன் கழுத்தில் கோர்த்து, தன்னை நிலைப்படுத்திக் கொள்ள போராடினாள்.

மூச்சுக்காற்றுக்கு அவள் நெஞ்சுக்கூடு தவிக்க..., அவன் மூச்சுக்காற்றை அவளுக்கு கொடுத்தானே தவிர, அவளை

விலக அனுமதிக்கவில்லை. அவன் முத்தமிட்ட வேகத்தில்..., அவள் வாய் உலர்ந்து போனது.

ஒரு பக்கம் எங்கே சுவரைப் பெயர்த்துக்கொண்டு வெளியே விழுந்து விடுவோமோ என அவள் அஞ்ச..., இன்று அவளை கரைத்துக் குடித்துவிடும் வேகத்தில் இருந்தான் அவன்.

ஒரு கட்டத்தில், அவளுக்குள் புதைந்துபோகும் வேட்கை எழ, அவள் இதழ்களைப் பிரிந்தவன்..., அவள் கழுத்தடியில் தன் முகத்தை புதைத்துக் கொண்டான். அவன் கைகள் பயணித்த இடங்களில் அவன் இதழ்கள் பயணிக்கத் துவங்க..., இதற்குமேல் தாங்க மாட்டேன் என அவள் புலன்கள் போராட..., அவன் தலை முடியில் கை கோர்த்தவள்..., “முடியலடா பொறுக்கி...”, உரைத்தவள்..., முயன்று, போராடி அவனை தன்னிடமிருந்து விலக்கினாள்.

அதுவும் ஒரு நொடிதான்..., “ஆமா..., இந்த உலகத்திலேயே என்னோட மொத்த பொறுக்கித்தனத்தையும் நான் உன்கிட்டதான் காட்டுவேன். உன்னால் என்ன செய்ய முடியுமோ செய்...”, குரல் குழைய உரைத்தவன், அவள் இதழ்களை மீண்டும் கவ்விக் கொண்டான்.

அதே நேரம்..., அவன் உணர்வுகள் வெடித்துக் கிளம்ப..., தன் நிலையை அவளுக்கு தயக்கமே இல்லாமல் உணர்த்தினான். அதை உணர்ந்தவள், சற்று நடுங்கித்தான் போனாள்.

“டே..ய்..., பய..ம்...மா இருக்கு..டா..., வேண்..டா..ம்...”, சொல்லப்போனால் அவன் வேகத்தில் மிரண்டவளுக்கு..., அவன் உணர்வுகள் சொன்ன செய்தியும், அவன் நிலையும்..., அவன் முத்தத்தையே தாங்க முடியாத போது..., அடுத்ததை நினைக்கவே அச்சமாக இருந்தது.

அவனுக்கோ.., அவளை விட்டு மீள முடியாத நிலை. ஒரு இதழ் முத்தத்தில் அவள் வாயை அடைக்க நினைத்தவனுக்கு, அதிலேயே மூழ்கிப் போக வேண்டும் என்ற வேகம்..., “ப்..ளீ..ஸ் வி..னு...”, அவள் குரலில்

அப்பட்டமான நடுக்கத்தை உணர்ந்தவன்..., தன்னை முயன்று கட்டுப்படுத்திக்கொண்டு விலகினான்.

“சாரி...”, அவன் தலையை அழுந்த கோதிக்கொண்டு செல்ல, இப்பொழுது அவன் உணர்வுகளையும் தான் கொன்றுகொண்டிருக்கிறோம் என்பது புரிய, அங்கேயே மடிந்து அமர்ந்து அழத் துவங்கினாள் ஐஸ்வர்யா.

***

# பகுதி - 29.

அறையை விட்டு வெளியேறியவனோ, தன் கன்னத்தில் தானே பலம் கொண்ட மட்டும் அடித்துக் கொண்டான்.

“என்ன வேலைடா பாக்கற...? நேத்து என்னவோ அவ்வளவு தூரம் பக்கம் பக்கமா பேசிட்டு..., இன்னைக்கு..., ச்சே..., அந்த அளவுக்கா உன் உணர்வுகள் உன்னை அடிமைப் படுத்துது...”, கேட்டவன் மீண்டும் தன்னை அறைந்து கொண்டான்.

“மனசுக்குப் பிடித்தவள், உரிமையா பேசவே நிலை தடுமாறிட்டேன்...”, அவன் மனம் பரிதாபமாக புலம்ப, கால்களோ அந்த தோட்டத்தை வேகமாக சுற்றி வந்தது.

அவன் மனம் இரண்டாகப் பிரிந்து விவாதித்தாலும், அவன் உணர்வுகள் ஒவ்வொன்றும் ஐஸ்வர்யா வேண்டும் என அடம் பிடித்தது. நேற்று அவள்..., ‘நம்ம குழந்தையை நீ அப்படி விட மாட்ட...’ என உரைத்த பொழுது, ‘நம்ம’ குழந்தை என சொல்பவள், உணராமலா சொல்வாள் என தன்னையே கேட்டுக் கொண்டான்.

அந்த உணர்வே..., அவளுக்கு தன்மேல் வெறுப்பு இல்லை என புரிய வைக்க, அவள்மேல் இருந்த நேசம் பெருகியது. ஏற்கனவே அவள்மேல் நேசம் கொண்டவன்..., அவள் மனமும் புரிய, அவள் பொறாமை குணமும் தலை தூக்கவே..., அப்படி இல்லை என உணர்த்த தான் செய்த செய்கை..., தன்னையே தாக்குவதை உணர்ந்தான்.

ஏற்கனவே ஒரு முறை செய்த தவறுக்கு பரிகாரம் தேட முடியாமல் இருக்க, இதில் அடுத்த தவறும்..., அவனுக்கு ‘ஐயோ...’ என இருந்தது.

இதற்கு ஏதாவது சமாதானம் சொல்ல முடியுமா என்ன? எங்கேயாவது போய் முட்டிக்கொள்ள வேண்டும் போல் இருந்தது. அவன் நடை இப்பொழுது ஓட்டமாக மாறியிருக்க, தலைதெறிக்க ஓடினான்.

ஒரு கட்டத்தில் ஓடிக் களைத்தவன்..., அங்கிருந்த இருக்கையில் அமர்ந்து கொண்டான். அவன் அமரவே..., அவன் தோளில் ஒரு கரம் விழ, திடுக்கிட்டு திரும்பினான்.

அங்கே துரையை எதிர்பாராதவன், கேள்வியாய் அவரை ஏறிட்டான். “தம்பி, சொல்லலாமா இல்லையான்னு எனக்குத் தெரியலை. ஆனா..., சொல்லித்தான் ஆகணும்னு என் மனசு கிடந்தது தவிக்குது. உங்களுக்கும் கல்யாணம் ஆகி, அந்தா இந்தான்னு அஞ்சு மாசம் ஓடிப் போச்சு. ஆனா, இன்னுமே நீங்க ரெண்டுபேரும் ஓட்டமா தனியாத்தான் நிக்கீங்க.

“நம்ம பாப்பாவைப் பொறுத்த வரைக்கும், அதுக்கு எதுவுமே தெரியாது தம்பி. பிடிவாதமா வேலை பாக்கும், முரட்டுத்தனமா கோவப்படும். ஆனா..., அதுக்கு என்ன வேணும்னு அதுக்கே தெரியாதுப்பா.

“அதுக்கு பிடிக்காத எதையுமே செய்ய வைக்க முடியாது. நம்ம ஐயாவும் மூணு வருஷமா மூவாயிரம் மாப்பிள்ளை பார்த்தார்..., யாரையுமே திரும்பிக் கூட பாக்கலை. ஆனா..., நீங்கதான் மாப்பிள்ளைன்னு சொன்னப்போ, முரட்டு கோவம் கொண்டாலும், உங்களை கட்டிக்கிடுச்சு.

“அது மனசுல உங்க மேலே இஷ்டம் இல்லன்னா.., அது உங்களை கட்டிகிட்டே இருந்திருக்காது. அது கோவப்படுதுன்னு நீங்க ஒரு பக்கம் இழுக்க, அது ஒரு பக்கம் இழுத்தால்..., அதோட முரட்டுத்தனம் தான் அதிகரிக்கும்.

“நீங்க உங்க பிடிவாதத்தை விட்டுட்டு, ஒண்ணு மண்ணா சேந்தீங்கன்னா, கண்டிப்பா எல்லாம் சரியாப் போய்டும். அது மட்டும் பாசம் வச்சா விடவே செய்யாது. அது சின்னப்புள்ளையா இருக்கச்சே..., நம்ம ஐயா அதை விட்டுபோட்டு வெளியூர் போய்ட்டார்.

“அவர் வர வரைக்கும் புள்ளைக்கு ஜூரம் விடவே இல்லை. அது வரைக்கும் நம்ம அய்யாவுக்கே தெரியாது..., பாப்பா

அவர்மேல் இம்புட்டு பாசம் வச்சிருக்குன்னு. அதுக்குப் பிறகு அவர் வெளியூர் போறதையே விட்டுட்டார்.

“அதுக்கு பாசத்தை காட்டத் தெரியாது தம்பி. அதேபோல்.., மனசுக்குள் இக்கதை சொல்லவும் தெரியாது. நீங்கதான் புரிஞ்சு நடந்துக்கணும். பொதுவா இந்த மாதிரி விஷயங்களை பொம்பளைப் புள்ளைக்குத்தான் சொல்வாங்க. ஆனா…, உங்களுக்கு சொல்ல வேண்டியதா இருக்கு.

“என்ன செய்ய…, அது வளந்த வளப்பு அப்படி…, வளத்த ஆள் அப்படி. அதையும் குத்தம் சொல்ல முடியாது. அது எம்புட்டு கோவப்பட்டாலும்.., நீங்க இல்லாமல் ஒத்த நாள் இந்த வீட்டில் இருந்திருக்கா…? யோசனை பண்ணுங்க.

“நீங்க ஒண்ணு மண்ணா வாழறதா பாக்க நாங்க தவிச்சுப் போய் கிடக்கோம். அதை ஜெயிக்க நினைக்காதீங்க…, தம்பி…, நீங்க வாழ்க்கையில் தோத்துப் போய்டுவீங்க. ஏன்னா…, உங்களை ஜெயிக்கணும்னே எல்லாத்தையும் செய்யும் அது. அதான்…, பாத்துக்கங்க தம்பி…”, தன் மனதில் இருந்ததை எல்லாம் கொட்டியவர், எழுந்து சென்றுவிட்டார்.

அவர் செல்லவே…, அவர் சொன்னவற்றை அசை போட்டவன்…, தான் இத்தனை நாளாக, முட்டாள்த்தனமாக எண்ணிய விஷயத்தை எண்ணி சிரித்துக் கொண்டான்.

‘அவர் சொல்வதும் சரிதானே…, எதையுமே சொல்லத் தெரியாதவளுக்கு…, காதலை எப்படி சொல்லத் தெரியும்? ஒவ்வொரு இரவிலும் தான் இல்லாமல் அவள் இருந்தது கிடையாதே.

தான் வராமல் போன இரவுகளில் கூட, கோபமாக எனினும் தன்னை அழைத்தாளே. அவளுக்கு என்மேல் விருப்பம் இல்லாமலா என் குழந்தை வேண்டும் எனக் கேட்டாள்…? என்னிடம் கம்ஃபர்ட்டபிளாக உணர்கிறேன் என்றால்…., உன்னிடம் பாதுகாப்பையும், அரவணைப்பையும்,

அன்பையும் உணர்கிறேன்..., எதிர்பார்க்கிறேன் என்பது தானே உண்மை.

‘ச்சே..., இது புரியாமல்..., தானும் குழம்பி, அவளையும் வேதனைப்படுத்தி, என்ன முட்டாள்த்தனம் செய்துவிட்டேன்...’, இப்பொழுது செல்லமாகத் தன் நெற்றியில் தட்டிக் கொண்டான்.

இந்த உண்மைகளை உணர்ந்த பிறகு, மனம் பறக்கும் உணர்வு. சந்தோஷத்தின் உச்சியில் இருப்பதாக உணர்ந்தான். இது போதும்..., நிச்சயம் என்றாவது ஒரு நாள் தன் காதலை அவள் உணர்ந்து கொள்வாள்.

அப்படி அவள் உணரவில்லை என்றாலும் கவலையில்லை..., தன்னை விட்டு விலகிச் செல்லவோ, தன்னை விட்டுகொடுக்கவோ மாட்டாள் என எண்ணியவனுக்கு, மனம் முழுக்க நிம்மதி.

இனிமேல் வாழ்க்கையை அதன் போக்கில் அனுபவிக்க வேண்டும். தன் முரட்டுத்தனத்தை ஒதுக்கிவிட்டு, அவள் மனம் புரிந்து நடந்துகொள்ள வேண்டும் என எண்ணியவன், அவளைக் காணும் ஆசையில் வீட்டுக்குள் அடியெடுத்து வைத்தான்.

ஆனால் அதைச் செய்ய முடியாமல்..., ஸ்ரீராம் அவனை அழைக்க, வேண்டா வெறுப்பாக அவரை நோக்கிச் சென்றான்.

ஐஸ்வர்யாவால் நடந்த நிகழ்வின் தாக்கத்தில் இருந்து மீளவே முடியவில்லை. தேகம் மொத்தமும் தீப்பற்றிய உணர்வில் தகித்துக் கொண்டிருந்தது. அவன் சுவைத்த இதழ்கள், இன்னும் வெம்மையாக இருக்கும் உணர்வு.

அவன் கரங்கள் தீண்டிய இடங்கள் அனைத்தும்..., நடந்தவற்றை அவளுக்கு நினைவூட்ட..., அந்த தகிப்பு அடங்காத வேதனை..., சொர்க்கத்தின் வாசலில் இருந்து, நரகத்தின் வாயிலில் விழுந்த வலி..., ஏனோ கண்ணீர் நிற்கவே இல்லை.

தனக்கே இப்படியென்றால்..., தன்னை அனுபவிக்கத் துடித்த அவனுக்கு எப்படி இருக்கும். அதுவும்..., இறுதி நொடியில், தாங்கவே மாட்டேன்..., அவன் தன் நிலையை உணர்த்திய பிறகும், இரக்கமே இல்லாமல் தான் நடந்துகொண்ட விதம்...

‘அவனிடம் உனக்கு அப்படியென்ன பயம்.., நடுக்கம்...?’, தன்னையே கேட்டுக் கொண்டவளுக்கு..., அவன் வேகத்தை தாங்க முடியாதோ என்ற பயம்தான் காரணம் என புரிய..., ‘உன்னை அப்படியென்ன காயப்படுத்தி விடுவான்...?’ மனசாட்சியின் கேள்விக்கு, அவளிடம் பதில் இல்லை.

‘எவ்வளவு ஆசையாய் நெருங்கினான்..., எவ்வளவு ஆர்வமாய் தன் தேடலைத் துவங்கினான்...., எவ்வளவு தாபமாய் தன்னை ஆக்கிரமித்தான், அனைத்தையும் ஒற்றை நொடியில் நாசமாக்கி விட்டோமே. நேற்று எவ்வளவு வருந்தினான்..., இன்று மேலும் ஒரு வருத்தமா...

‘இதுவரை தன்னை தாபமாக நெருங்கியிராதவன்..., முதல் முறையாக நெருங்க, அதை கலைத்துவிட்டோமே. இனிமேல் எப்படி நெருங்குவான்? அவன் அணைக்கவில்லை என்று கோபம் கொண்ட நானே..., அவன் உச்ச தவிப்பில், தவிக்க விட்டு விட்டோமே..., நினைப்பே அவளை கூறு போட்டது.

நேற்றே தன் அழுகை அவனை அவ்வளவு பாதித்திருக்க..., இன்றும் அவனுக்கு அந்த வருத்தத்தை கொடுக்க மனமில்லாமல், இருந்த இடத்தில் இருந்து எழுந்தவள்..., வெந்நீர் ஷவரில் சென்று நின்றுகொண்டாள். அந்த சூட்டால் கூட அவள் உடலின் வெம்மையை தணிக்க முடியவில்லை.

கூந்தலை உலர்த்தியவள், ஒரு சுடிதாரை அணிந்துகொண்டு வெளியே வரக் கிளம்பினாள்.

“வினித்..., அந்த காட்டன் பாக்ஸ் விஷயத்தை இன்னும் தேவி கிட்டே நீ பேசலன்னு நினைக்கறேன். ஏன்னா..., இப்போ அவசரமா ஒரு பத்தாயிரம் காட்டன் பாக்ஸ்

வேணும்னு கார்த்திக் போன் பண்ணினான். என்னன்னு கொஞ்சம் பாத்துடேன்...", அவர் உரைக்க..., அந்த விஷயத்தை தான் பாதியிலேயே மறந்து போனதை எண்ணியவன்,

"இதோ..., இப்போவே பேசிடுறேன்...", படிகளில் ஓடினான். தான் மாறிவிட்ட உணர்வு. முதலிரவுக்குச் செல்லப்போகும் மணாளன் போல்..., மனதுக்குள் உல்லாசமும், தடுமாற்றமும் போட்டி போட்டது.

அவன் கதவைத் திறப்பதற்கும், அவள் வெளியே வருவதற்கும் சரியாக இருக்க, இருவரின் கண்களும் நேரடியாக சந்தித்துக் கொண்டது.

இருவரும் அசையாமல் நின்றுவிட, முதலில் தெளிந்தவன், "ஐஷூ..., அந்த காட்டன் பாக்ஸ் பத்தி பேசணுமே. பேசலாமா...?", அவன் சாதாரணமாக பேசவே,

"ம்..., டின்னர் முடிச்சுட்டு அப்படியே கார்டன் போய்டலாம்".

"அப்போ சரி..., வா...", திரும்பி நடந்தான்.

சாப்பாட்டு மேஜையில் அன்று மூவரும் சகஜமாக உரையாட, முதலில் சாப்பாட்டை முடித்தவன், தன் மடிக் கணினியோடு கீழே இறங்கி வந்தான்.

அடுத்த ஒரு மணி நேரமும், தங்கள் புத்தகங்களின் சைஸ் மூன்றே விதங்களில் மட்டுமே இருக்க வேண்டும் எனத் துவங்கி..., அதற்கான காட்டன் பாக்ஸ் சைஸ் என உரைத்து..., அனைத்தையும் அவன் விளக்க, கேட்டுக் கொண்டிருந்த ஐஸ்வர்யாவுக்கு வியப்பு.

"இத்தனை வருஷத்தில் இதை யாருமே சொன்னதில்லை..., நிஜமாவே ரொம்ப நல்ல ஐடியா. நாளைக்கு..., இருபதாம் தேதி தானே..., நாளைக்கே எல்லா மேனேஜர்க்கும் ஒரு கான்ஃபோ கால் போட்டு, விஷயத்தை சொல்லிடலாம்.

"அவசரப்பட்டு காட்டன் பாக்ஸ் எதையும் வாங்க வேண்டாம்னு சொல்லிடலாம்", அவள் உற்சாகமாக

சொல்லிக்கொண்டேபோக, சட்டென அவனிடம் ஒரு அமைதி.

அவனிடம் பதில் இல்லாமல் போகவே.., “என்ன…?”, அவன் தோளை உலுக்கினாள்.

“நாளைக்கு இருபதாம் தேதின்னா சொன்ன…?”, அவன் கேள்வியில், ஒரு நொடி நிதானித்தவள், “ஆமா…, இன்னைக்கு நயன்டீன்…, அப்போ நாளைக்கு டுவண்டி தானே…”, அவனையே திருப்பிக் கேட்க, மௌனமாக தலை அசைத்தான்.

அதன் பிறகு அந்த நேரத்தின் ஏகாந்தத்தை இருவரும் அனுபவிக்க…, இருவருக்கும் மட்டுமான அந்த தனிமையும், இனிமையும்…, சட்டென வாழ்க்கை அழகாகிப் போன உணர்வு.

வினித்தின் மனதிலோ…, ‘நாளைக்கு எனக்குப் பிறந்தநாள்…, அவளது வாழ்த்து கிடைக்குமா?’, மனதுக்குள் ஒரு ஆசை முளை விட்டது.

நண்பர்களாவது உரைப்பார்களா…? எதிர்பார்ப்பு போட்டி போட்டது. இத்தனை வருடங்களில், ஆடம்பரமாக மட்டுமே மாறியிருந்த தன் பிறந்தநாள்…, இந்த வருடத்தில் அதற்கு ஒரு இனிமை சேருமா? தன் காதல் மனைவியின் ஒரு வாழ்த்து மட்டுமாவது வேண்டும் என அவன் மனம் விரும்பியது.

ஆனால்…, அவன் ஒன்றை மறந்துவிட்டான்…, இந்த ஊரில் அவன் பிறந்தநாள் தெரியாது என்பதுதான் அது.

அன்றைய நள்ளிரவு அவனுக்கு பெரிய ஏமாற்றத்தை விதைக்க, தன்மேல் உறங்கும் மனைவியை அமைதியாக பார்த்தவன், அவளை அணைத்தவாறு இமைகளை மூடிக் கொண்டான்.

அன்றைய அலுவல் அனைத்திலும்…, நண்பர்களின் முகம் பார்ப்பதும், எதையோ கேட்க விழைவதும்.., அது முடியாமல்

திரும்புவதுமாக ஒரு கண்ணாமூச்சி ஆட்டமே அங்கே நடந்தது.

அதென்னவோ இத்தனை வருடம் கொண்டாடிய ஒன்று, இந்த வருடத்தில் பிசுபிசுப்பதை அவனால் ஏற்க முடியவில்லை. ஒரு வழியாக மாலை வரை கடத்தியவன், நண்பர்களைத் தேடிச் சென்றான்.

“டேய் மச்சான்..., இன்னைக்கு ஹோட்டல் போகலாமா...?”, இப்படிக் கேட்ட வினித்தை ஏறிட்ட கார்த்திக், உடனடியாக சம்மதம் உரைத்தான்.

குமார் ஒரு படி மேலே சென்று..., “இன்னைக்கு எனக்கு சரக்கு வேணுமே வேணும்...”, அறிவிக்க, கார்த்திக் தடுக்கும் முன்பே..., “நானும் இன்னைக்கு உனக்கு கம்பெனி கொடுக்கறேன்...”, வினித் உரைக்க, ஒரு நொடி நண்பனை ஏறிட்டவன், அமைதியாகி விட்டான்.

வினித் அழைத்துச் சென்ற இடத்தைப் பார்த்தவனுக்கு புருவம் இரண்டும் முடிச்சிட்டது. “டேய் மச்சான்..., இஸ் எவ்ரிதிங் ஓகே...”, அவன் கரத்தை பற்றிக்கொள்ள,

“ம்ச்..., ஒரு நாள் தண்ணியடிக்கனும்னு தோணுது. வேற எதுவும் இல்லடா...”, அவன் அழுத்தி உரைக்கவே, மேலே எதையும் துருவவில்லை.

உள்ளே சென்றவர்கள்..., அந்த உயர்தர பாரின் மெல்லிய இருட்டுக்கு தங்கள் கண்களை பழக்கப்படுத்திக் கொண்டு, ஓரமான இருக்கையைத் தேடி அமர்ந்தார்கள்.

கார்த்திக் தனக்கு ஒரு பீர் மட்டும் எடுத்துக் கொள்ள, குமார் தன் ஆசை தீரும் வரைக்கும் ஒவ்வொன்றாக வாங்கினான். வினித்தோ..., தன் முன்னால் வைக்கப்பட்ட முழு பாட்டிலைப் பார்த்தவன்..., சற்றும் யோசிக்காமல், ஒரே மூச்சில் வாயில் சரித்துக் கொண்டான்.

அதே நேரம்..., தன் முன்னால் தயக்கமாக நின்ற சந்தியாவை ஏறிட்ட ஐஸ்வர்யா..., “சந்தியா..., இன்னுமா நீ கிளம்பலை..., டைம் ஏழாச்சே...”, அவள் கேட்க,

“மேம்..., இன்னைக்கு வினித் சாரோட அக்ரிமென்ட் பேப்பரை பார்த்தேன். அதாவது அவர் வந்து ஏழு மாசத்துக்கு மேலே முடிஞ்சுடுச்சு. ஆனா..., நாம ஆறு மாசம்தான் அக்ரிமென்ட் போட்டிருந்தோம். அதை நான் மறந்துட்டேன்...”, சற்று பயத்தோடு உரைத்தாள்.

தன் கடமையை மறந்ததற்கு அவளிடம் என்ன வாங்கி கட்டிக்கொள்ள வேண்டி வருமோ என்ற பயம் அவளை பிடித்து ஆட்டியது.

“ம்ச்..., இப்போ எதுக்கு அதைப்பற்றி பேச்சு. இந்த கம்பெனியில் அவனுக்கு இல்லாத உரிமையா..., இதில் அகிரிமென்ட்..., அந்த பேச்சை விடு...”, அவள் அதை கண்டுகொண்டதாகவே இல்லை.

சந்தியா இன்னும் போகாமல் இருக்கவே..., “அதான் சொல்லிட்டேனே..., போ...”.

“மேம்..., அப்போதான் இன்னொரு விஷயம் தெரிய வந்தது. அது என்னன்னா...?”, சொல்லவா வேண்டாமா என அவள் திணற,

“முழுங்காமல் விஷயத்தை சொல்லு...”.

“அது வினித் சார்க்கு இன்னைக்கு பிறந்தநாள்ன்னு...”, “என்ன..”, கூவியிருந்தாள்.

“ஆமா..., நீங்களே...”, கையில் கொண்டுவந்த பேப்பரை அவள் முன்னால் நீட்ட..., அவன் நேற்று கேட்டதன் அர்த்தம் இப்பொழுது புரிந்தது. அத்தோடு..., அவன் பார்வைக்கும்...

“ஷிட்...”, வாய் விட்டே புலம்பியவள், வேகமாக அவன் அலைபேசிக்கு முயன்றாள்.

அது அணைத்து வைக்கப்பட்டிருப்பதாக உரைக்கவே..., வேகமாக அவன் அலைபேசிக்கு பிறந்தநாள் வாழ்த்து செய்தியை அனுப்பி வைத்தாள்.

“ச்சே.., மொபைலை ஆப் பண்ணிட்டு என்ன பண்றான்..?”, புலம்பினாள்.

அவள் செய்கையை பார்த்துக் கொண்டிருந்தவள்..., “மேம்..., வினித் சார் இன்னைக்கு அவங்க பிரண்ட்ஸ்சோட வெளியே போனதைப் பார்த்தேன். ஒரு நிமிஷம்...”, உரைத்தவள், கார்த்திக்கை அழைத்தாள்.

இங்கே வினித் முழு பாட்டிலை காலி செய்து முடிக்க, அவனை தடுக்கப் பார்த்தும் முடியாமல் போக, திகைப்பாய் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தான் கார்த்திக்.

குமாரும் தான் குடிப்பதை நிறுத்திவிட்டு..., “இன்னா சார்..., இப்படி முழு பாட்டிலையும் கவுத்துட்ட..., குடல் என்னத்துக்கு ஆகும். மொதோ இந்த சிக்கனைத் துன்னு. அப்படியே பிரியாணி சாப்பிடு..., கோடல் வெந்து பூடும்...”, அவன் கையைப் பிடித்து உலுக்கினான்.

இருவரின் பார்வையும் கலவரமாக சந்தித்துக் கொள்ள, கார்த்தக்கின் அலைபேசி அவர்களை கலைத்தது. சந்தியாவின் எண்ணைப் பார்த்த கார்த்திக் ஒரு நொடி தயங்கினாலும், அடுத்த நிமிடம் என்ன அவசரமோ என்ற நினைப்பில் அதை ஆன் செய்தான்.

“கார்த்திக்..., வினித் அங்கே இருக்காரா...?”, அவள் குரலில் இருந்த பதட்டத்தை உணர்ந்தவன்,

“ஆமா..., எங்களோடதான் இருக்கான். ஏதோ மூட் சரியில்லாத மாதிரி இருக்கான்...”, தன் கவலையை பகிர்ந்தான்.

“அவருக்கு இன்னைக்கு பிறந்தநாள்..., ஒரு வேளை அதனால் இருக்குமா...?”, சந்தேகமாகத்தான் கேட்டாள்.

“அப்படியா...? ஒரு நிமிஷம் இரு..., டேய் மச்சான்..., ஹாப்பி பெர்த்டே டா...”, கார்த்திக் உரைத்த அடுத்த நொடி..., “ஏண்டா..., இதைச் சொல்ல உனக்கு ஒரு நாள் தேவைப் பட்டுதா...? காலையில் இருந்து..., ஒருத்தர் கூட விஷ் பண்ணவே இல்லடா...

“அதான்..., இன்னைக்கு இங்கே உங்களை அழைச்சுட்டு வந்து தண்ணி அடிச்சேன்...”, அவன் குரல் குழறலாக

ஸ்பீக்கர் வழியே கேட்க, தன் இருக்கையில் பொத்தென அமர்ந்து கொண்டாள் ஐஸ்வர்யா.

“டேய்..., இதுக்கு ஏண்டா தண்ணி அடிக்கணும்? எனக்கெல்லாம் என்னைக்கு பொறந்த நாள்ன்னே தெரியாது...”, குமார் உரைக்க,

“டேய் எரும..., முதல்ல மூடிட்டு குடி...”, கார்த்திக்கின் குரல் கடுப்பில் ஒலிக்க, “டேய் மச்சான்..., ஏதோ நினைப்பில் மறந்துட்டோம். அதுக்குப் போய்...”, கார்த்திக் சமாதானப் படுத்தினான்.

“என்னோட ஒவ்வொரு பெர்த்டேக்கும்..., பத்துலட்ச ரூபாய்க்கு மேலே செலவு பண்ணி, பார்ட்டி வைப்பாங்க. அப்போ என்னை சுத்தி நடிக்கிறவங்க மட்டும் இருந்தாங்க. ஆனா இந்த வருஷம்..., என்னை உண்மையா நேசிக்கிற நீங்க இருக்கீங்க.

“உங்க வாழ்த்து கிடைக்கணும்னு ஆசைப் பட்டேண்டா. ஐஷூ கூட..., ம்ச்..., அவளும் மறந்துட்டா போலடா...”, அவன் குரல் இப்பொழுது அதிக குழறலாக ஒலிக்க, ஐஸ்வர்யாவுக்கு தான் எப்படி உணர்கிறோம் என்றே தெரியவில்லை.

“கார்த்தி..., நாமல்லா ஏன் பொறந்தோம்னு பீல் பண்ணா..., இவர் என்ன இப்படி பீல் பண்றார்...?”, குமாரின் குரல் இறங்கி ஒலிக்க,

“ம்ச்..., உன்னை இங்கே கூப்ட்டனா..., உன் வேலையைப் பார்...”, கார்த்திக் கடிந்தவன், அமைதியாக இருந்தான்.

ஐஸ்வர்யாவுக்கு தெளிவாகப் புரிந்தது. வினித்தின் மனநிலைக்குக் காரணம், அவன் பிறந்தநாளை கொண்டாடும் மோகமில்லை..., மாறாக, அந்த ஒரு நாளில் தான்..., அவனைப் பெற்றவர்கள் அவனைக் கொண்டாடி இருக்கிறார்கள்.

அது பிடித்தாலும், பிடிக்கவில்லை என்றாலும்..., ஒவ்வொரு வருடமும் தன் பிறந்தநாளை அவன் ஆவலாக

எதிர்பார்த்திருக்கிறான் என்பது அவளுக்கு தெளிவானது.

இந்த வருடம்..., இன்னும் ஆவலாக எதிர்பார்த்திருப்பானோ..., எல்லாம் தவறாகவே நடப்பது போன்ற பிரம்மை. சந்தியா, ஐஸ்வர்யாவைப் பார்க்க, “அவனை வீட்டுக்கு கூட்டி வந்து விடச் சொல்லு...”, அவள் குரலைக் கேட்ட கார்த்திக், அடுத்த நிமிடம் அலைபேசியை வைத்து விட்டான்.

நேரம் ஏழு முப்பதைக் காட்ட..., “டேய் மச்சான்..., எந்திரி..., வீட்டுக்குப் போகலாம்...”, அவனை கைபிடித்து எழுப்பினான்.

வினித் குடிப்பான்தான்..., அது ஒரு பெக், அல்லது இரண்டு பெக், அதற்குமேல் குடித்து பழகியிராதவன், இன்று முழு பாட்டிலையும் சரித்திருக்க, அவனால் தலை நிமிர்த்தி அமர முடியவில்லை.

கார்த்திக்கின் செய்கையைப் பார்த்த குமார்..., “என்ன கார்த்திக்..., பார்ட்டி இன்னும் பாதியிலேயே நிக்குது..., நீ கிளம்பறியே...”, அவன் குறைபட,

“ம்..., நம்ம மேடம் அவங்க வீட்டில் உனக்கு விருந்து வைக்கறாங்களாம் வா...”, அவன் பேச்சில், குமாரின் கையில் இருந்த சிக்கன் பீஸ் நழுவி கீழே விழுந்தது.

***

# பகுதி - 30.

தன் நிலை இல்லாமல் தள்ளாடிய வினித்தை, கைத்தாங்கலாக வெளியே அழைத்து வந்து விட்டார்கள். சட்டென என்ன செய்வது என்பது பெரிய கேள்வியாகத்தான் இருந்தது.

அதிலும், ஐஸ்வர்யாவுக்கு விஷயம் தெரிந்துவிட்டது என்பது, அவர்கள் இருவரின் அடி வயிற்றிலும் பயப்பந்தை சுழற்றியது.

“கார்த்திக் சார்..., என்னைய வுட்டுடுங்க..., நான் இப்படியே கிளம்பறேன். என்னால் அந்தம்மா கிட்டே எல்லாம் வர முடியாது...”, குமார் புலம்பவே துவங்கிவிட்டான்.

“டேய்..., நல்ல நாக்கை தொங்கப்போட்டுட்டு இங்கே வரும்போது நல்லா இருந்தது, இப்போ கசக்குதா? ஒழுங்கு மரியாதையா வர, இல்ல..., உன்னை இங்கேயே தூக்கிப் போட்டு மிதிச்சிடுவேன்...”, ஏற்கனவே சரிந்துவிழும் வினித்தின் நிலைமை வேறு அவனை பதட்டப்படுத்தியது.

“நீ என்னைய கெட்ட வார்த்தையில் வேண்ணா திட்டு..., ஆனா அந்தம்மா வீட்டுக்கு மட்டும் வேண்டாம்டா...”, கெஞ்சினான்.

“குமார் வேண்டாம்..., ஏற்கனவே நான் ஏக கடுப்பில் இருக்கேன்..., இதில் இவனை வேற இந்த நிலைமையில் நிச்சயமா வீட்டுக்கு கூட்டி போக முடியாது. சூழ்நிலை புரியாமல் விளையாடாதே...”.

“யார் சார் விளையாடுறா...? நீயா இல்ல நானா..? சாதாரணமா அந்தம்மா நம்மளைப் பாத்தாலே பார்வையில் நெருப்பு பறக்கும். இதில்..., அவரைக் கூட்டிவந்து நாமதான் ஊத்திக் குடுத்தோம்னு நினைச்சுட்டு, எக்குத்தப்பா எதையாவது செய்து வச்சால்..., என்னால் முடியாது...”, அவன் பயமும் நியாயம் தான்.

“ஏண்டா..., இந்த பயம் முதல்லையே இருந்திருக்கணும்..”.

“அட போ சார்..., இவர் என்ன விட மோசமா குடிப்பார்ன்னு எனக்கு எப்படித் தெரியும். ஆனா..., அப்படி குடிக்கிறவர் ஏன் மட்டை ஆயிட்டார்ன்னுதான் புரியலை...”, அவன் உரைக்க..., அப்படியே அவனைப் பிடித்து நாலு அறை விடும் வேகம் எழுந்தது.

தன்னை கட்டுப்படுத்தியவன்..., “டேய் எரும..., அவனுக்கு இப்படி குடிச்சு பழக்கமில்லை..., அதான் இப்படி இருக்கான்...”, சரிந்த நண்பனை பைக்கில் அமர வைத்தவாறு உரைத்தான்.

“பழக்கமே இல்லாமல் இம்புட்டு குடிச்சா.., அப்போ பழகியிருந்தால்...?”.

“ம்..., உன்னை பிடிச்சு கொழுத்தியிருப்பான். எரிச்சலை கிளப்பிகிட்டு. இப்போ இவன் போதை இறங்கியே ஆகணும். அப்படி மட்டும் நடக்கல..., நாளையில் இருந்து நீ டாஸ்மாக்கில் தண்ணியடிக்கதுக்கு நான் கேரண்டி...”.

“என்ன கார்த்திக் சொல்ற...?”, புரியாமல் கேட்டான்.

“வேலை இல்லன்னா கவலையில் நீயும் வேற என்னதான் செய்வ...?”. கார்த்திக் கேட்க, அலறியே விட்டான்.

“ஐயோ சார்..., ஏன் சார் உனக்கு இந்த கொலைவெறி...? பாரின் சரக்கடிக்க ஆசைப்பட்ட பாவத்துக்கு..., சாபமே விடுற..., இன்னையோட இந்த தண்ணிக்கே நான் முழுக்கு போடறேன்...”,

“ஏண்டா..., ஒண்ணு கார்த்திக்ன்னு சொல்லு..., இல்ல சார்ன்னு சொல்லு, ரெண்டையும் போட்டு இப்படி குழப்பற...?”.

“இந்த விஷயம் இப்போ நாட்டுக்கு ரொம்ப முக்கியம்..., சொம்மா..., வா சார்...”, அசால்ட்டாக உரைக்க, கார்த்திக் மெல்லியதாக சிரித்துக் கொண்டான்.

“இவன் இருக்க நிலைமையில்..., கண்டிப்பா பைக் பின்னாடி உக்காந்துக்க மாட்டான். ஏதாவது ஒரு பைக்கை

இங்கே விட்டுட்டுதான் போகணும் என்ன செய்ய...?", கவலையானான்.

"அட விடு சார்..., அத்தெல்லாம் இங்கே பாத்துப்பாங்க. அவங்களுக்கு தெரியாததா. முதல்ல உன் வண்டியை எடு போகலாம்...", கிளம்ப ஆயத்தமானான்.

"என்னது போறதா..? உன்கிட்டே நான் என்ன சொல்லிட்டு இருக்கேன்..., நீ என்ன செய்யிற...?", கோபமாக கத்த, புரியாமல் அவனை ஏறிட்டான்.

"ஏண்டா இப்படி பச்சப் புள்ள மாதிரி பாக்க...?", கடுப்பானான்.

"என்ன..., இவர் போதையை இறக்கணும் அதானே...., அதுக்கு இங்கே எல்லாம் மருந்து கிடைக்காது. ஒரு நல்ல பெட்டிக்கடையா பாத்து வண்டியை நிறுத்து..., நான் பாத்துக்கறேன்...", கார்த்திக் வண்டி ஓட்ட, நடுவில் வினித்தை அமர்த்தியவன், அவன் பின்னால் ஏறிக் கொண்டான்.

சற்று தூரம் வந்தவர்கள்..., ஒரு பெட்டிக்கடையின் முன்னால் இறங்கி, முதலில் சோடாவை வாங்கி வினித்தின் முகத்தில் அடிக்க, அவன் அப்பொழுதுதான் சற்று கண் திறந்தான்.

"ஏய்..., யார்ரா அது...?", குழற...,

"ம்..., உங்க பொண்டாட்டி இலங்கோ..., சொம்மா..., இதெல்லாம் பாட்டில் மூடியை மோந்தே மட்டை ஆகுற ஆளுங்க. இதில் புல் பாட்டில்..., கெத்து...", குமார் சகட்டு மேனிக்கு கலாய்க்க,

"டேய்..., அவன் போதையை தெளிய வைன்னா..., என்னவோ மயக்கம் போட்டவனுக்கு சோடா அடிக்கிற மாதிரி அடிக்கிற...?".

"அய்யய்யா..., ஏன் சார் சொம்மா... சொன்னதையே சொல்லிக்கிட்டு. அதான் பண்ணிக்கிட்டு இருக்கேன்ல்ல...", அவனிடம் உரைத்தவன், "தாத்தா..., நல்லதா ஸ்ட்ராங்கா

ஒரு எலுமிச்சை ஜூஸ்..., உப்பு போட்டு..., அப்படியே ரெண்டு கிளாஸ் மோர்...", ஆடர் செய்தவன், இவர்கள் அருகில் வந்தான்.

கார்த்திக்கோ அவனை கொலைவெறியில் முறைத்துவிட்டு நேரம் பார்க்க, அது எட்டிக் காட்டியது. "ஏண்டா..., ஜூஸ் குடிக்கிற நேரமா இது. இவன் மட்டும் இல்ல..., இன்னைக்கு சத்தியமா என்கிட்டே மிதி வாங்கியிருப்ப..".

"ஐய..., ஜூஸ் எனக்கில்லை..., நம்ம சாருக்குத்தான். ஐ.., இது நல்லா இருக்கே..., ஏறினதே தம்மாத்துண்டு..., அத்தையும் இறக்கச் சொல்றியா...? நான் மாட்டேன்...", அவன் சொல்ல, அவனை சந்தேகமாகப் பார்த்தான்.

"நம்பு சார்..., பத்து நிமிஷத்துல உன்னைய யார்ன்னு அவர் அடையாளம் சொல்லலையாக்கும்..., என் பேரை மாத்தி வச்சுக்கறேன்...", சவால் விட,

"ஆமா.., அமெரிக்க பிரசிடென்ட் பேரு..., அதை மாத்தப் போறாரு..., போடா...", அவன் சொல்லிகொண்டிருக்க, அவன் கேட்டவற்றை எடுத்துகொண்டு அந்த பெரியவர் அவர்களை நெருங்கினார்.

"இந்தாப்பா நீ கேட்டது. ஏம்ப்பா இப்படி குடிச்சு உடம்பை கெடுத்துக்கறீங்க. பாத்தா பெரிய இடத்து புள்ளைங்க மாதிரி இருக்கீங்க. வேண்டாம்ப்பா...", தட்டை குமாரின் கையில் கொடுத்துவிட்டு சென்றார்.

"இன்னாடா இது..., நம்மளை குடிகாரன் ரேஞ்சுக்கு பேசிட்டு போறார்...", குமார் அங்கலாய்க்க...,

"பின்ன உன்னை வேற என்னன்னு சொல்வாராம். வேலையைப் பாருடா...".

"சரி..., நல்ல டைட்டா அவர் மூக்கைப் பிடி..., இல்லன்னா இத்த குடிக்க மாட்டார்...", குமார் உரைக்க, மறு பேச்சின்றி அவன் சொன்னதைச் செய்ய, அடுத்த நிமிடம்..., அந்த மூன்று க்ளாஸ் நீரும் வினித் வயிற்றுக்குள் இறங்கியது.

அடுத்த ஐந்தாவது நிமிடம்..., குடலே வாய் வழியாக வெளியே வந்துவிடும் அளவு அவன் வாந்தி எடுக்க..., பதட்டமாக அவன் தோளைப் பற்றிக் கொண்டான் கார்த்திக்.

குமார் கையில் ஒரு தண்ணீர் பாட்டிலோடு வந்தவன்..., அவன் சற்று நிமிரவே..., “ஆங்.., எல்லாம் சரியாப் போச்சு..., வாயைக் கழுவு சார்...”, அவன் முகத்தில் மேலும் நீர் அடித்து கழுவியவன், சற்று நேரம் அமைதியாக பைக்கின் மேல் ஏறி அமர்ந்து கொண்டான்.

ஒரு இரண்டு நிமிடம் செல்ல..., “கார்த்திக்..., இப்போ டைம் என்ன...?”, தலையை உலுக்கியவாறே கேட்டான்.

கார்த்திக் ஆச்சரியமாக குமாரைப் பார்க்க, தன் சட்டையில் இருந்த காலரை தூக்கி விட்டுக் கொண்டான்.

“டைம்.., எட்டரை ஆகுது மச்சான்...”, உரைத்தவன், அவனை தோளோடு அணைத்து, “ஹேப்பிபர்த்டே மச்சான்..., மெனி மோர் ஹாப்பி ரிட்டன்ஸ் ஆப் தி டே...”, ஆத்மார்த்தமாக உரைக்க, தானும் அவனை தோளோடு அணைத்துக் கொண்டான்.

“என்னடா..., ரொம்ப படுத்திட்டனா...?”, சங்கடமாக கேட்டான்.

“ம்ச்..., அதெல்லாம் இல்லடா. முதல்ல வீட்டுக்குப் போகலாம்...”, அவன் உரைக்கவே..., சம்மதமாக தலை அசைத்தான்.

“இன்னா சார்..., புல்லா இறங்கிடுச்சா...? இத்தையும் குடி சார்..., சுத்தமா இறங்கிடும். பொறவு நீ குச்சன்னு சத்தியம் பண்ணா கூட யாரும் நம்ப மாட்டாங்க...”, குமார் மேலும் பேசப் போனவன், கார்த்திக்கின் கண்ஜாடையைப் பார்த்துவிட்டு, பேசாமல் இருந்தான்.

அவன் கொடுத்த எலுமிச்சை ஜூசை மறுக்காமல் குடித்தவன், “எப்படி வந்தோம்...?”, வினித் கேட்க,

“ம்..., ப்ளைட்ல..”, குமார் நக்கலாக பதில் கொடுக்க, அவன் முதுகிலேயே ஒன்று போட்டான் கார்த்திக்.

குமார் டம்ப்ளரை கொடுத்துவிட்டு திரும்ப வர, பைக்கை கிளப்பியவன், அவன் ஏறக் காத்திருந்தான்.

“சார்..., இப்போ பைக்ல மூணுபேர் போறதைப் பாத்தால் போலீஸ் புடிச்சுப்பான். நீங்க போங்க..., நான் இப்படியே ரூமுக்கு போறேன்...”, நைசாக கழண்டுகொள்ள பார்த்தான்.

“அப்படியா..., ஆனா..., அதை நான் பாத்துக்கறேன் முதல்ல நீ மூடிகிட்டு ஏறு...”, விட்டுவிடுவேனா உன்னை என்ற ரீதியில் கார்த்திக் பேச, குமாரின் கெஞ்சல் பார்வைக்கு அவனிடம் மதிப்பிருக்கவில்லை.

வேறு வழியின்றி அவன் ஏற..., பைக்கை கிளப்பினான். அவர்கள் வீட்டுக் கேட்டின் முன்னால் வண்டியை நிறுத்தியவன், “டேய் மச்சான்..., யார்ட்டையும் எதுவும் பேசாதே. போனோமா..., குளிச்சோமா..., சாப்ட்டமான்னு படுத்துடு புரியுதா...?”, கார்த்திக் உரைக்க,

“நீ சொல்லலன்னா மட்டும் அவர் என்ன ஜல்லிக்கட்டில் மாடா புடிக்க போய்டுவார்..., போ சார்...”, அவனை அனுப்பினான்.

அதே நேரம்..., அவர்கள் வீட்டு கூர்க்கா இவர்களை நோக்கி ஓடி வருவதைப் பார்க்க, “என்ன கார்த்திக் சார்..., இவரை கைத்தாங்கலா கூட்டி போக கூர்க்காட்ட சொல்லிட்டாங்க போல...”, குமார் அவன் காதைக் கடிக்க,

“சும்மா இருடா...”, அடிக்குரலில் சாடியவன், என்ன என்பதுபோல் அவனைப் பார்க்க, “உங்களையும் உள்ளே வரச் சொன்னாங்க...”, அவன் பேச்சில்..., வெடவெடத்துப் போனான் குமார்.

“என்ன சொல்றீங்க முனிபாய்...? யார் கூப்ட்டா...?”, வினித் குழப்பமாக கேட்டான்.

“நம்ம ஐயாதான் வந்து சொல்லிட்டு போனார்...”, அவர்கள் பேச, இங்கே...,

“கார்த்திக் சார்.., அதான் தெளிய வச்சுட்டோமே..., பிறகு என்ன...?”, அவன் கரத்தை பற்றிக் கொண்டவன்...,

“அப்படியே வண்டியை திருப்பு சார்..., சும்மா சர்ருன்னு ஓடிப் போய்டலாம்...”, ஐடியா கொடுத்தான்.

“போய்ட்டு..., நாளைக்கு நீ ஆபீஸ் வரணுமா இல்லையா...?”, அவன் கேள்வியில் கப்பென அடங்கிப் போனான்.

“வா சார்..., உள்ளேயே போகலாம்...”, வண்டியை தள்ளிக்கொண்டு, வினித்தின் பின்னால் சென்றார்கள்.

வீட்டு போர்டிகோவுக்கு சென்றவர்களுக்கு ஆச்சரியம் காத்திருந்தது. ஸ்ரீராம் அங்கேயே காத்திருக்க, “வாங்கப்பா...?”, அவர்களை அழைத்துக்கொண்டு உள்ளே செல்ல, வீட்டுக்குள் காலடி வைத்த வினித்துக்கு தன் கண்களையே நம்ப முடியவில்லை.

அவர்கள் வீட்டு ஹால் மிகவும் எளிமையாக அலங்கரிக்கப் பட்டிருக்க, அலங்கார மேஜை மேல்..., ஒரு அழகான ப்ளாக்ஃபாரஸ்ட் கேக் அலங்கரித்திருந்தது. சந்தியாவும் அங்கே இருப்பதைப் பார்த்தான்.

அவன் ஸ்ரீராமை திரும்பிப் பார்க்க..., “போய் குளிச்சுட்டு வாப்பா...”, அவனை அனுப்பினார்.

தன் அறைக்குள் நுழைய..., அங்கே படுக்கையின் மேல் புது கோட் சூட் இருப்பதைப் பார்த்தவனுக்கு, நடப்பதை நம்பவும் முடியவில்லை, நம்பாமல் இருக்கவும் முடியவில்லை.

பார்வையை சுழற்றியவனுக்கு, ஐஸ்வர்யா அங்கே இல்லாதது ஏமாற்றமாக இருந்தாலும், அதை மறைத்தவாறே குளிக்கச் சென்றான். குளித்து கிளம்பி அவன் கீழே வர, கையில் ஆளுக்கொரு ஜூஸ் பாட்டிலோடு அவனுக்காக காத்துக் கொண்டிருந்தார்கள் அனைவரும்.

ஏற்கனவே நேரமாகி விட்டதால்..., அனைவரும் பிறந்தநாள் வாழ்த்து உரைக்க, கேக்கை உடனே வெட்டியவன்..., முதல் துண்டை ஐஸ்வர்யாவுக்கு கொடுக்க, மறுக்காமல் பெற்றுக் கொண்டவள்..., துரையைப் பார்க்க..., அதைத் தொடர்ந்து இரவு உணவு வழங்கப் பட்டது.

அவள் தனக்கு கேக்கை ஊட்டுவாள் என அவன் எதிர்பார்க்க, அது நடக்காததில் சற்று வருத்தம் கொண்டான். ஆனால்..., ஸ்ரீராம் அதைச் செய்ய, தன்னை சம்மாதானப்படுத்திக் கொண்டான்.

“இன்னா சார் நடக்குது இங்கே. நம்ம சீட்டை கிழிப்பாங்கன்னு பாத்தா..., நீ சொன்ன மாதிரி விருந்தே போடுறாங்க...?”, குமார் அந்த நேரமும் கார்த்திக்கின் காதைக் கடிக்க,

“நான் வேண்ணா போய் ஞாபகப்படுத்தவா...?”, கார்த்திக் கடுப்பாக, தன் தட்டைக் காலி செய்யும் வேலையில் இறங்கினான். அனைவரும் சேர்ந்தே இரவு உணவை உண்டார்கள்.

வினித்தின் பார்வை முழுவதும், ஐஸ்வர்யாவையே சுற்றி வந்தது. எப்பொழுதுமே அவள் உடை அலங்காரம் அவனுக்கு போதையேற்றும். இன்றோ..., ஒரு மைசூர்சில்க் அவள் மேனியை தழுவியிருக்க..., ஒற்றையில் அவள் விட்டிருந்த முந்தானை அவனை பித்துகொள்ளவே செய்தது.

‘ஆண்டவா..., இன்னைக்கு ஒரு நைட் என்னை காப்பாத்திடு...’, வேகமாக வேண்டுதல் வைத்தான்.

ஐஸ்வர்யாவும் அவனைத்தான் பார்த்துக் கொண்டிருந்தாள். இரண்டு மணி நேரங்களில் அவனுக்காக அனைத்தையும் ஒருங்கிணைத்தவள்.., அவனுக்கு இந்த கோட் நன்றாக இருக்கும் என தேடி எடுத்தவளாயிற்றே. அவன் கம்பீரம் அவளையும் தடுமாற வைத்தது.

உணவை முடித்தவன், அவள் அருகில் அமர்ந்தவன், மற்றவர் அறியாதவாறு அவள் கரத்தை அழுந்த பற்றிக்கொள்ள..., அவன் முகம் சொன்ன நன்றியை அவளால் ஏற்கவும் முடியாமல், மறுக்கவும் முடியாமல் ஒரு தடுமாற்றமான நிலையில் இருந்தாள்.

அதே நேரம் கார்த்திக்கும், குமாரும் கிளம்ப முயல..., தங்கள் மோன நிலையை கலைத்தவர்கள், அவர்களை அனுப்ப அவர்களை நெருங்கினர். ஐஸ்வர்யா சாதாரணமாக அவர்களை நோக்க.., குமார் வேகமாக கார்த்திக்கின் முதுகின் பின்னால் மறைந்தான்.

ஐஸ்வர்யா அவர்களிடம் பேசவில்லை என்றாலும், முன்புபோல் அவர்களை வெறுக்கவோ, கேவலமாக நினைக்கவோ இல்லை என்பது அவள் நடத்தையிலேயே கார்த்திக்கிற்கு புரிந்தது.

“நாங்க வரோம் மேம். தேங்க்ஸ் பார் தி டின்னர்...”, கார்த்திக் உரைக்க, அமைதியாக தலையாட்டிக் கொண்டாள்.

“நாங்க வரோம் மேம்...”, திணறிய குமார், அவள் முகம் பார்க்க தயங்க, கார்த்திக்கிற்கு உள்ளுக்குள் பயம் இருந்தாலும் அதை வெளியே காட்டிக்கொள்ளவில்லை.

சந்தியா அங்கே இருப்பதைப் பார்த்தவன்..., “தேங்க்ஸ் சந்து...”, வினித் உரைக்க, “ம்ச்..., கூல்..., இட்ஸ் மை ப்ளஷர்...”, அழகாய் புன்னகைத்தாள்.

“டேட்..., சந்தியாவை கிரியை விட்டு வீட்டில் டிராப் பண்ண சொல்லுங்க. அப்படியே அவனுக்கு பைவ் ஹண்ட்ரட் ருபீஸ் கொடுங்க. நாளைக்கு அவனை வர வேண்டாம்னு சொல்லிடுங்க...”, சந்தியா கார் கிளம்பிச் செல்லும் வரைக்கும் வினித் கீழே இருக்க, ஐஸ்வர்யாவோ, தங்கள் அறைக்குச் சென்றுவிட்டாள்.

வினித்தும் ஸ்ரீராமிடம் விடைபெற்றவன்..., தன் கோட்டை கழட்டி கைகளில் வைத்துகொண்டு அறைக்குத் திரும்பினான். அறையிலோ, ட்ரசிங் அறையிலோ அவள் இல்லை என்பது ஒற்றை பார்வையில் அவனுக்குப் புரிய, பால்க்கனி பக்கம் நகர்ந்தான்.

அறையிலும் மெல்லிய வெளிச்சமே இருக்க, பால்க்கனியோ அறை விளக்கின் உபயத்தில் சோபையாக காட்சி அளித்தது. அங்கே..., கைகளை கட்டிக்கொண்டு,

கூந்தல் முடி காற்றில் ஆட, அவனுக்கு முதுகு காட்டி நின்றிருந்தாள்.

மெதுவாக அவள் பின்னால் நெருக்கமாக நின்றவன்..., அவளுக்கு அணைவாக இரு பக்கமும் கையை பாலக்கனி கம்பியில் கோர்த்தவன்..., அசையாமல் நின்றான். அவன் மூச்சுக்காற்று அவள் தோளில் சுடும் அளவு நெருக்கம்.

அவளிடம் வீசும் அதே பிரத்தியேக வாசனை..., முகத்தை இன்னும் இறக்கி..., அவன் தோளில் வாசம் பிடித்தவன்..., "தேங்க்ஸ்..., தேங்க்ஸ் பார் எவ்ரிதிங்...", உரைத்தவன்..., அவள் முதுகோடு இணைந்திருந்தான்.

தானும் அவன்மேல் சாய்ந்தவள்..., கம்பியில் இருந்த அவன் இடக்கரத்தை எடுத்து..., ஒரு அழகான கைக்கடிகாரத்தை மாட்டினாள். "ஹேப்பி பெர்த்டே... வினு...", அவள் மெல்லியதாக உரைக்க..., தன் இடக்கரத்தை அவள் வெற்றிடையில் அழுத்தமாக பதித்துக் கொண்டான்.

அவன் கரத்தின்மேல் தன் கரத்தை வைத்து அழுத்தியவள்.., அவன் இடதுபக்கத் தோளில் சாய்ந்துகொண்டாள். அவனோ..., அவள் வலக்கழுத்தில் எறும்பாய் ஊர.., அவன் மூச்சுக்காற்றின் வெம்மை அவளை உருக்கியது.

அவன் வலக்கரம் உயர்ந்து அவள் கன்னம் தழுவ..., அவனோடு இன்னும் ஒட்டிக் கொண்டாள். அந்த நிலையை கலைக்கவும், முன்னேறவும் முடியாமல், இருவரிடமும் ஒருவித தயக்கம்..., அவனுக்கோ முன்னேறவா வேண்டாமா என இருக்க...,

அவளுக்கோ..., தான் எதுவும் சொதப்பிவிடக் கூடாதே என தவிப்பாக இருந்தது. "இது பாலக்கனி..., இங்கே வேண்டாம்...", அவள் தயக்கமாக இழுக்க..., அவளை தன்பக்கம் திருப்பியவன், இறுக அணைத்து விடுவித்தான்.

அவன் விடுவிக்கவே..., அறைக்குள் வேகமாக நுழைந்தவள்.., தடுமாறிப் போனாள். அவனும் மொத்தமாக சூடாகிப் போனான். அவள் மறுத்திருந்தால் அவன் சரியாகி

இருப்பான். ஆனால்..., அவள் வெட்கம்..., அவனை பாடாய் படுத்தியது.

அவளுக்கு வெட்கம் என்ற உணர்வையே முதல் முறையாக அவளுக்கு அறிமுகப்படுத்த..., அவள் வெட்கத்தை இமைக்காமல் ரசித்தவன்,

பால்க்கனி கதவை சாற்றிவிட்டு உள்ளே வந்தவன்..., அறையின் மங்கல் ஒளியில் தேவதையாக நின்ற அவளை அடிமேல் அடி வைத்து நெருங்கினான். அவளோ..., டீபாமேல் இருந்த சிறு கிண்ணத்தை எடுத்தவள்..., அதில் இருந்த கேக்கை சிறிது பிட்டு..., அவன் உதட்டின் அருகே கொண்டு சென்றாள்.

அதை அவள் விரலோடு சேர்த்து பெற்றுக் கொண்டவன்..., “இதில் என்ன ஸ்பெஷல்...? இதை அங்கேயே கொடுத்திருக்கலாமே...”, அவன் கேட்க, அவன் கன்னம் இரண்டிலும் தன் இதழை பதித்து விலகினாள்.

அவள் விலகாமல் இடையில் கை கோர்த்து தேக்கியவன்..., “இது போங்காட்டம்....”, அவள் நெற்றியில் முட்டினான்.

தன் கையில் இருந்த கிண்ணத்தை டீபாயில் வைத்தவள்...., “ட்ரெஸ் மாத்தணும்...”, குரல் வெளியே வராமல் உரைத்தாள்.

“அதுக்கு நான் ஹெல்ப் பண்ணவா...?”, கேட்டவன்..., அவள் ஜாக்கெட்டில் இருந்த முடிச்சை உருவ...., “பொறுக்கி...”, நாணமாக உரைத்தாள்.

“என் பொறுக்கித்தனத்தை நான் இன்னும் காட்டவே இல்லை...”, உரைத்தவன், அவள் முதுகில் தன் விரலால் கோலம் போட..., உணர்ச்சிப் பிழம்பாகிக் கொண்டிருந்தாள் ஐஸ்வர்யா.

அதன் தகிப்பை தாங்க முடியாமல்..., சட்டென அவனை விட்டு விலக முயல, அதற்கு அனுமதிக்காமல்..., தன்னோடு இறுக்கிக் கொண்டவன்..., முரட்டுத்தனமாக அவளை முத்தமிட்டான்.

அவன் கைகள் இரண்டும் அவள் சேலை மறைக்கா இடங்களில் தன் வித்தையை பதிக்க..., "ம்...", அவன் வாய்க்குள் மென்மையாக முனகினாள்.

அவள் ஒத்துழைப்பு அவனை மேலும் முன்னேறத் துடிக்க, முத்தமிட்டவனது உதடுகள் உணர்ச்சி வேகத்தில் பல்த்தடம் பதிய கடித்து வைக்க..., "டேய்.., மெதுவா...?", அவன் சிகைக்குள் கை கோர்த்தவள், அவனை அடக்க முயல, "இதுவே கம்மிதான்...", அவன் கரங்கள் இரண்டும் அவள்மேல் தன் உரிமையை நிலைநாட்ட துடித்தது.

"ஏன் தாங்க மாட்டியா...?", 'முடியும்னு சொல்லேன்..' என்ற தோரணையில் அவன் குரல் அவளிடம் கெஞ்ச...,

"எதைச் சொல்ற...?", அவனைச் சீண்டினாள்.

"ஏய்.., வேண்டாம்..., என்னைச் சீண்டாதே...", அவள் கன்னம் தீண்டி..., காது மடல் வருடி..., அவள் கழுத்தடியில் இதழ்கள் இறங்க....

அவன் கைகள் இரண்டும் தன் தடையைக் கடக்கத் துடிக்க..., "கையை வச்சுட்டு சும்மா இருக்க மாட்டியா..., டேய்..., அங்..கே கை..யை...", அவள் வார்த்தைகளை முழுதாக முடிக்க அவன் அனுமதிக்கவில்லை.

அன்று பயத்தில் விலகியவள்.., இன்று அவனை எதிர்கொள்ளத் துணிந்துவிட்டாள். "என்னை பொறுக்கின்னா சொன்ன..? பொறுக்கி என்னவெல்லாம் செய்வான் பார்...",

"ம்ஹூம்...", அவள் பலகீனமான மறுப்பையும், வெட்கத்தையும் அவன் மதிக்காமல் போனான். அதற்காக அவள் கோபம் கொள்ளவில்லை, மாறாக..,

"ஹையோ..., என்ன பண்ற...", வேகமாக தன்னை போர்வைக்குள் திணித்துக் கொண்டாள்.

அவள் எலும்பே நொறுங்கும் அளவு அவளை இறுக்க..., "நான் என்ன ஓடியா போகப் போகிறேன்..., இல்ல..., அ...",

“ஸ்….”,அதற்குமேல் அவளால் ஒரு வார்த்தையும் பேச முடியவில்லை.

அவன் இதழ் தொடாத பாகங்கள் அவள் உடலில் எதுவும் இல்லாமல் போக, அவன் ஈர முத்தம் உணர்த்திய செய்கையில் சொக்கிப் போனாள். “வினு…, மோசம்…”, அவள் உளற,

“அது இவ்வளவு நேரம் கழித்தா தெரிந்தது…”, சிரிப்பாய் பதிலடி கொடுக்க,

“போடா பொறுக்கி, கரடி…”, சொல் ஒன்றாகவும், செயல் ஒன்றாகவும், அவனை தழுவிக் கொண்டாள். அவள் கரங்கள் அவன் வெற்று முதுகில் கோலம் போட.., அவனுக்கோ.., தன் இரு கரமும், ஒற்றை வாயும் பத்தாத தவிப்பில் இருந்தான்.

அன்று அவன் உரைத்த அனைத்தையும்…, கொஞ்சம் கூட தயவு காட்டாமல் அவளிடம் நிலை நாட்ட…., அவன் குழைவு.., கெஞ்சல்…, செய்கை…, அனைத்தையும் தாங்கிக் கொண்டவள்…, அவனையும் எதிர்கொண்டாள்.

அவன் நெருக்கம் ஏற்படுத்திய தகிப்பை அவளால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. அவனுக்கோ அவளுக்குள் அடைக்கலமாகும் வேகம்…,

ஒரு கட்டத்தில் அவளுக்கு மூச்சு முட்ட…, “டேய்…, மூச்சு முட்டுதுடா…”, அவன் காதுக்குள் செல்லமாக கதற…, “புருஷனை தாங்க முடியலன்னு சொல்றியே…”, அவளைச் சீண்ட…, இப்பொழுது அவன் இதழ்கள் அவளிடம் சரியான பரிசை பெற்றுக் கொண்டது.

“ஆ…”, மெல்லியதாக அவன் அலற…, “இவ்வளவு நேரமா.., நான் ஏதாவது சத்தம் போட்டேனா..? பிறகு நீ மட்டும் ஏண்டா..?”, அவனை செல்லமாக அடிக்க, அவளுக்குப் போட்டியாக அவனும் களத்தில் குதித்தான்.

“வினு…”, தாள முடியாமல் அவள் புலம்ப…, “ஐஷூ…, ஐ கான்ட்…”, அவள் காதில் கொஞ்சினான்.

“ம்ஹூம்...”, அவள் பலகீனமாக மறுக்க..., “அப்படியா...?”, அவன் போலியாக விலக முயல..., “ஏண்டா என்னை கொல்ற...”, அவள் துவள,அவனோ தன் நெருக்கத்தை அதிகப்படுத்த, துவண்டு போனாள்.

“டேய்..., முடியலடா...”, அவள் உரைக்க..., அவள் இதழ்களை சிறை செய்தவன், அவளை மொத்தமாக தனக்குள் சுருட்டிக் கொண்டான். அந்த விடியல் அவளுக்கு விடியா இரவாக..., அடுத்த நாளே வரப்போவதில்லை என்பதுபோல்..., அவன் நடந்துகொண்டான்.

மொத்த இரவையும் அனுபவிக்கும் வேகம் அவனிடம் இருக்க..., தன்னை விட்டு பிரிய மறுத்த அவனை தானும் அவனுக்குக் குறையாத வேகத்தில் தாங்கிக் கொண்டாள்.

“நாளைக்கு மிச்சம் வைக்கவே போறதில்லையா...?”, அவன் வேட்கை கண்டு வினவ,

“இல்லை...”, அவன் இரக்கமில்லாத பதிலைக் கேட்டவளுக்கு, ஏனோ கோபத்துக்குப் பதிலாக உல்லாசம் பொங்கியது.

ஒரு கட்டத்தில் அந்த உறவை முயன்று அவள்தான் முடிவுக்கு கொண்டுவர வேண்டி இருந்தது. “இன்னும் ஒரு முறை...”, என அவன் கெஞ்சுகையில்..., அவளால் மட்டும் மறுக்க முடியுமா என்ன...? அந்த இரவில் அவர்கள் மனதுக்குள் எந்த திட்டமும் இருக்கவில்லை. மாறாக..., வாழ்க்கையை அதன் போக்கில் வாழ முடிவெடுத்தார்கள்.

விடியலின் துவக்கத்தில், அவளை தன்மேல் அவன் சாய்த்துக் கொண்டவன், “சாரி..., ரொம்ப கஷ்டப்படுத்திட்டனா...?”, அவன் கேள்விக்கு..., “என்ன டயட் ஆயிட்டியா...?”, அவள் பதிலில்..., செயலில் அதற்கான பதிலை அவன் உரைக்க...,

“என்னை என்னடா பண்ண..., இப்படி மாறிட்டேன்...”, அவன் காதுக்குள் வெட்கம் கலந்து உரைக்க..., “எனக்குத் தெரியாது...?”, அவன் பதிலில், அவனை இறுக்கிக்

கொண்டு கண் மூடி, உறங்கத் துவங்கையில், கீழ்வானம் சிவந்தது.

***

# பகுதி - 31.

காலையில் கண்விழித்த வினித், தன் கைக்குள் சுருண்டிருந்த ஐஸ்வர்யாவைப் பார்த்தவன், பூரித்துப் போனான். தினமும் அவன் அணைப்புக்குள் தான் அவள் இருப்பாள் என்றாலும், இன்றைய நாள் அவனுக்கு ஸ்பெஷலாக விடிந்தது.

அவளது அலட்டல் இல்லாத தன்மை, தன் நெருக்கத்திலும் இயல்பாக இருந்த அவள் செய்கை..., நினைத்தவனுக்கு தேகம் சூடாக..., அவன் கரங்கள் அவளை இறுக்க, தன் இதழை அவள் முகத்தில் தவழவிட்டான்.

அவன் செய்கையில் மெதுவாக உறக்கம் கலைந்தவள், தன் முகத்தை அவன் வெற்று நெஞ்சில் அழுத்தமாக உரசி, “ம்ம்ம்...” செல்லமாக முனகினாள்.

“ஹேய்.., முழிச்சுதான் இருக்கறியா?”, கேட்டவன் அவள்மேல் சரிய, “வினு..., வேண்டாம்...”, அவசரமாக அவனைத் தடுத்தாள்.

“எனக்கு வேணும்...”, அவன் முன்னேற..., “சொன்னா கேளு...”, “கேக்க மாட்டேன்...”, அந்த பிடிவாதக்காரன் தன் ஆக்கிரமிப்பை அதிகரிக்க, அவள்தான் வேறு வழியின்றி பின்வாங்க வேண்டி இருந்தது.

அவன் தான் நினைத்ததை முடித்த பிறகே விலக, “பொறுக்கி..., பொறுக்கி..”, அவனை தலையணையால் தாக்கியவள், “நேரத்தை பாத்தியா..., உன்னால் தான்..., நேத்து பேசவேண்டிய கான்ஃபோ கால், இன்னைக்கு தள்ளிபோச்சு..., பதினோரு மணிக்கு ஆபீஸ்ல இருக்கணும், இப்போவே மணி பத்து...

“எப்போ குளிச்சு, கிளம்பி...”, வேகமாக தன்னை சரிப்படுத்திக் கொள்ள,

“இப்போ என்ன..., டைம் சேவ் பண்ணனும் அவ்வளவு தானே...”, கேட்டவன், அவள் என்னவென்று உணரும் முன்பே, அவளை தூக்கிக் கொண்டு பாத்ரூமின் அடியில்,

ஷவரைத் திறந்து நிறுத்த, “ஏய்..., என்ன வேலை பாக்கற...? ச்சீ..., போடா..., வேண்டாம்...”, அவன் சேட்டைகள் அங்கேயும் தொடர்ந்தது.

ஒரு வழியாக இருவரும் குளித்து கிளம்பி, அலுவலகம் வந்து சேரும் வேளை, அரைமணிநேரம் தாமதமாகி இருந்தது மட்டும் உண்மை. இருவரும் சேர்ந்து வருவதைப் பார்த்த அந்த அலுவலகமே வியக்க, அவற்றை இருவரும் கண்டுகொள்ளவில்லை.

அலுவலகத்தில் அன்றைய வேலைகளைத் துவங்க, கான்ஃபோ காலை முடித்தவர்களை, கொஞ்சம் டென்ஷனாக காண வந்தான் கார்த்திக். அப்பொழுது வினித் அவள் அறையிலேயே இருக்க, “என்ன கார்த்திக்? ஏன் ஒரு மாதிரி இருக்க...?”, தன் இருக்கையை விட்டு எழுந்து வந்தான்.

ஐஸ்வர்யா அவனை எதுவும் கேட்காமல் ஏறிட, அவளை ஒரு பார்வை பார்த்தவன்..., “ரெண்டு லாரி வந்து ரெண்டு நாள் ஆகுது. ஆனால் அதை அன்லோட் பண்ணவே முடியலை... அதான்...”, கையைப் பிசைந்தான்.

“என்ன..., ரெண்டு நாளா...? நேத்து கேட்டப்போ முடிஞ்சுடும்னு சொன்ன...”, ஐஸ்வர்யா கோபமாக வினவினாள்.

“இல்ல மேம்..., லோக்கல் ஆட்கள் இன்னைக்காவது வந்துடுவாங்கன்னு நினைத்தேன்...”, தடுமாறினான்.

“வந்துடுவாங்கன்னு நினைத்தியா...? அப்போ அவங்க எத்தனை நாளா வரலை...?”, ஆத்திரமானாள்.

“அது...”, அவன் மென்று முழுங்க,

“சொல்...”, எகிறினாள்.

“முதல்ல பத்துபேர் வந்தவங்க பிறகு எட்டு, ஆறு.., கடைசியா நாலுபேர் வந்தாங்க. ரெண்டு நாளா யாரும் வரலை. எப்படியோ சம்மாளிச்சாச்சு. இப்போ ரெண்டு கோடி ரூபாய் ஆடர் ஒண்ணு வந்திருக்கு, அதுக்கு சரக்கு அந்த

லாரியில் தான் இருக்கு..., அதான்...", நிலைமையை சம்மாளிக்க முடியாத தன்மை அவனிடம்.

"இதை எல்லாம் முதலிலேயே சொல்ல மாட்டியா...?", கடுப்பானாள்.

அவனோ பேசாமல் இருக்க, "கார்த்திக்..., நம்ம ஆட்களை வைத்து தேவையானதை மட்டும் இறக்க வேண்டியது தானே...", வினித் வினவ,

"இத்தனை நாள் வெளி ஆட்களை வச்சு செஞ்சீங்கல்ல..., இப்பவும் அப்படியே செய்ங்கன்னு சொல்றாங்க. நானும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன் கேக்கலை...".

"இதைச் சொல்ல உனக்கு வெக்கமா இல்லை...", இருக்கையில் இருந்து அவள் எழ, சட்டென அவளைக் கோபமான ஒரு பார்வை பார்த்த வினித், "நீ போ கார்த்திக்..., நான் வரேன்...", அவனை அனுப்பினான்.

அவன் செல்லவே..., "ஏய்..., என்ன நீ...", அவனிடமும் எகிற..,

"பண்றதெல்லாம் நீங்க பண்ணிட்டு அவனை ஏன் மிரட்றீங்க...?", அவன் கேட்க, கோபமாக அவனை முறைத்தாள்.

வேகமாக அவன் அருகில் வந்தவள்..., "டேய்..., ஒழுங்கா பேசுடா..., பெரிய சின்சியர் சிகாமணி..., ஆபீஸ்ல மரியாதை இல்லாமல் பேச மாட்டார்...", அவன் சட்டை பட்டனைத் திருகினாள்.

"மேடம் அடிக்க வரீங்கன்னு பார்த்தால்...", அவள் இடையை வளைத்தான்.

"ம்ச்..., அப்போ ஏதோ கோபம்...", அவன்மேல் சாய்ந்து கொள்ள,

"இப்போ கோபம் இல்லையா...", அவளை இறுக்கினான்.

'இல்லை என தலை அசைத்தவள், "நான் என்னடா பண்ணேன்..? என்னையவே குறை சொல்ற...?", அவன்

நெஞ்சில் கையால் குத்தினாள்.

அவளை விலக்கியவன்..., “உனக்குப் புரியலையா ஐஷூ..., நான்தான் ஏற்கனவே லோக்கல் ஆட்கள் வேண்டாம்னு சொன்னேன். நீதான் கேக்கவே இல்லை. இப்போ பார்..., அவங்க வேலையை காட்டுறாங்க...”, கவலையாக உரைத்தான்.

அவனை ஏறிட்டவள்..., “ஏன்..., என்ன ஆச்சு...?”, அவன் கவலைக்கான காரணம் புரியாமல் கேட்டாள்.

“சொல்லப்போனால் இப்போ நாம அவனுங்களுக்கு கீழே இருக்கோம். நாளைக்கே வந்து, இவ்வளவு ரூபாய் கொடுத்தால் தான் வேலை செய்வோம்னு சொல்வான்.., நாம முடியாதுன்னு சொல்லி, வெளி ஆளை கொண்டு வந்தால்..., அவங்களை வேலை செய்ய விடாமல் தடுப்பான்.

“மீறியும் வேலை நடந்தால்..., லோடு உள்ளே வராமல் ப்ளாக் பண்ணுவான். பிரச்சனை பெருசாகும். நாம அவங்களை வேலையை விட்டு தூக்கினால்..., லோக்கல் ஆட்கள் என்ன வேண்ணா செய்யலாம். ஒரு தீக்குச்சி போதும் அவங்களுக்கு...”, அவன் சொல்லிக்கொண்டே போக, முதல் முறையாக அவள் கண்ணில் பயம்.

“என்னடா சொல்ற...?”, அதிர்ச்சியாக வினவ,

“இதெல்லாம் நடந்துடும்னு சொல்லலை..., ஆனா நடக்க தொண்ணூறு சதவீதம் வாய்ப்பு இருக்குன்னு சொல்றேன்..”, அவள் தோளில் கை கோர்த்தான்.

“இதுக்கு வேற வழியே இல்லையா...?”.

“கண்டிப்பா இருக்கு. ஆனா.., அதை ரொம்ப பொறுமையா தான் செய்யணும்....”, அவன் உரைக்க, தான் யோசிக்காமல் செய்த வேலை, இவ்வளவு பெரிய விளைவை ஏற்படுத்துகிறதே என கவலை கொண்டாள்.

“சரி..., நீ எதையும் குழப்பிக்காதே..., எல்லாம் நான் பாத்துக்கறேன்...”, அவன் விலகிச் செல்ல..., அவன் கழுத்து டையைப் பிடித்து இழுத்தாள்.

“இப்போ என்னை வேலை செய்ய விடப்போறியா இல்லையா...”, கேட்டவன், சட்டென அவளை இழுத்து, அழுத்தமாக அவள் இதழில் தன் முத்திரையைப் பதித்தான்.

“ஹா...ங்....”, ஐஸ்வர்யாவின் அறைக்குள் வந்த சந்தியா, திகைத்துபோய் கத்தப் போனவள், சட்டென திரும்பி நின்று, தன் கையால் வாய் பொத்தி நின்றவள்...,

“சாரி..., சாரி...”, அங்கிருந்து செல்லப் போனாள்.

அவள் குரலில் பட்டென விலகி நின்றவர்கள்..., ஐஸ்வர்யா இமைகளை இறுக மூடி இடக்கையால் முகத்தை வெட்கமாக மூட, வினித்தோ..., “ஹேய் சந்தியா..., நத்திங்..., நீ பேசு..., நான் வரேன்...”, அறையை விட்டு சாதரணமாக வெளியேறினான்.

‘என்னை மாட்டி விட்டுட்டு எவ்வளவு கூலா போறான் பார்...’, அதென்னவோ மற்ற விஷயமாக இருந்தால், தெனாவெட்டாக சிலுப்பும் அவளுக்கு..., இந்த நிகழ்வை அப்படி சாதாரணமாக கையாள முடியவில்லை.

‘செத்தேன் நான்...’, சந்தியா நினைக்க, ஐஸ்வர்யாவின் அமைதி அவளை வியக்க வைத்தது. அறையை தட்டாமல் வந்ததற்கு தன்னை கடித்து குதறப் போகிறாள் என அவள் எதிர்பார்க்க..., அவள் அமைதியாக இருந்தால், அதுவும் சங்கடமான முக பாவனையில் இருந்தால் அவளும் என்னதான் செய்வாள்?

தன்னை திடப்படுத்தியவள், “வாழ்த்துக்கள் மேம்...”, சந்தியாவின் வாழ்த்தில் விழி திறந்தவள், முயன்று தன்னை சீர் படுத்திக் கொண்டாள்.

“ம்..., தேங்க்ஸ்...”, அவளிடம் இந்த செய்கையை எதிர்பாராத சந்தியாவுக்கு, அவர்கள் நெருக்கத்தை விட, இதுதான் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியது. விக்கித்துபோய் அவளை வெறிக்க, அவள் செய்கைக்கான காரணம் புரிய, “சொல்லு சந்தியா..., ஏதாவது முக்கியமான விஷயமா...?”, அவள் கேட்ட பிறகுதான் தான் வந்த காரணமே அவளுக்கு நினைவிற்கு வந்தது.

“எஸ் மேம்..., அந்த லோக்கல் ஆட்கள் வந்து பிரச்சனை பண்றாங்க...”, அவள் பதட்டமாக உரைக்கவே, தன் இருக்கையை விட்டு வேகமாக வெளியேறினாள்.

அங்கே கார்த்திக்கும், வினித்தும் அவர்களோடு விவாதிக்க.., “எப்படி எங்க வேலையை மத்தவங்க செய்யலாம்...?”, அன்று வந்த அந்த வயதானவர் குரலை கர்ஜனையாக்கி ஒலிக்க விட்டார்.

அதைக் கேட்டவளுக்கோ..., ‘அன்னைக்கு பூனை மாதிரி பேசினவன் இவன் தானா...?’ என்ற கேள்வி பிறந்தது.

“உங்க வேலைன்னு நாங்க எதுவும் எழுதிக் கொடுக்கலையே...?”, வினித் பேச,

“ஒரு இடத்துக்குள் நாங்க வந்துட்டா..., எங்களை மீறி நீங்க எதுவும் செய்ய முடியாது. ஆமா..., நீ யாரு..., நான் எதுக்கு உன்கிட்டே பேசணும்? உன் முதலாளியம்மாவை கூப்பிடு.....”, அவர் தெனாவெட்டாக உரைத்தார்.

அதைக் கேட்டவள்..., கொந்தளித்துப் போனாள். “ஹல்லோ..., அவர் யாரா..? உன் இடம் ஏது..., அவர் இடம் எதுன்னு முதல்ல தெரிஞ்சுகிட்டு பேசு...”, அவரை கைநீட்டி எச்சரித்தவள்...,

“வினு..., என்ன பண்ணுவியோ எனக்குத் தெரியாது. இந்த பிரச்சனை இங்கே இப்போ முடியணும். இவங்க யாரும் மேலே ஒரு வார்த்தை பேசக் கூடாது..., செய்...”, கம்பீரமாக..., பொறுப்பை உன்னிடம் ஒப்படைத்துவிட்டேன் என அவன் எதிரில் நின்றாள்.

அந்த அலுவலகமே அவள் செய்கையை, பேச்சை வாய் பிளந்து பார்த்துக் கொண்டது. வாயைத் திறந்தாலே..., ஸ்ரீ ஐஸ்வர்யா தேவியின் குலப் பெருமையையும், தன் அதிகாரத்தையும் பிரகடனப்படுத்துபவள், வினித்தை முன்னிறுத்துவதை வியக்காமல் என்ன செய்வர்.

ஏற்கனவே வினித்தின் நடத்தையால் அவன்மேல் மதிப்பு கொண்டிருந்தவர்கள், ஐஸ்வர்யாவின் பேச்சைக் கேட்டு,

மேலும் அவன்மேல் மரியாதை கொண்டார்கள்.

“ஓ..., ஐயாதான் இங்கே எல்லாமா...? பாப்போம்..., அப்படி என்ன கிழிக்கரார்ன்னு. லாரியில் இருந்து ஒரு புக்கூட கீழே இறங்காது...”, அவரும் ஆணவமாக நின்றார்.

தன்னை நம்பி இவ்வளவு பெரிய முடிவை அவள் ஒப்படைத்துவிட்டதை உணர்ந்தவனுக்கு..., ஒரு பக்கம் சந்தோஷமும், கவலையும் ஒருங்கே எழுந்தது.

‘இவ்வளவு அவசரமாக முடிவெடுத்தால்...?’ அவர்கள் தன்னை அவமதிப்பதை தாங்க முடியாமல்தான் அவள் செய்கிறாள் என்பது புரிய, ஒரு கணவனாக பெருமிதம் கொண்டான்.

அதே நேரம்..., இது எவ்வளவு பெரிய சிக்கலை உருவாக்கும் என சிந்தித்து கவலை கொண்டவன், நொடியில் அதை தள்ளி வைத்தவன், “கொஞ்சம் தள்ளி நில்லுங்க...”, அவரிடம் உரைத்தவன், தங்கள் ஊழியர்கள் பக்கம் திரும்பினான்.

“எல்லோரும் நல்லா கேட்டுகோங்க..., இப்போ நார்மல் வேலை நேரம்தான். ஆனா..., அந்த லாரியில் இருக்கும் புக்ஸ்சை அன்லோட் பண்ணும் அவ்வளவு நேரத்துக்கும் தனியா இன்னைக்கு ஓடி கொடுக்கறேன். உங்களுக்கு சம்மதம்னா வேலையைப் பாருங்க...”, அவன் உரைக்கவே..,

“என்ன..., எங்களை மீறி எவனாவது லாரியில் காலை வச்சுடுவானா? அப்படி வச்சால் நாங்கதான் சும்மா இருப்போமா...?”, அப்பட்டமான மிரட்டல் விடுத்தான்.

“யோவ்..., யார் கம்பெனிக்குள்ளே வந்து யாரை மிரட்டுற...? இது எங்க கம்பெனி..., அங்கே உன்னை நாட்டாமை பண்ண விட்டுடுவோமா? சார்..., எங்க வேலையை செய்யிறதுக்கு நீங்க எதுக்கு சார் ஓடி கொடுக்கணும்..., நாங்க இறக்கறோம்..., எப்பா..., எல்லாம் வாங்க...”, யூனியன் தலைவன் ஹரி அழைக்க, அடுத்த நிமிடம் அவர்கள் வேலையைத் துவங்கினர்.

அந்த நிமிடம்..., வினித் தொழிலாளர்களிடம் ஏற்படுத்தியிருக்கும் சுமுக உறவைக் கண்டு வியந்தாள் ஐஸ்வர்யா. அப்படியே அவனை கட்டிக்கொள்ள உள்ளம் பரபரக்க..., முகம் பெருமையில் போங்க அவனை ஏறிட்டாள்.

வினித்தே கூட இப்படி ஒரு மாற்றத்தை எதிர்பார்க்கவில்லை என்பதை அவன் முகம் காட்ட..., "இப்போ என்ன சொல்ற..?", அவனிடம் சவால் விட்டான்.

"இன்னைக்கு இவனுங்க செய்வானுங்க..., நாளைக்கு..., அவன் வேலையைப் பாப்பானுங்களா..., இல்ல லோட் இறக்குவாங்களா? ஒரு பய வெளியே இருந்து வர முடியாது...", தொடை தட்டினான்.

ஐஸ்வர்யா திடுக்கிட..., 'அதானே..., தினமும் தங்கள் ஆட்களை வைத்து வேலை செய்வது சாத்தியமில்லையே...', அவளும் எண்ண..., வினித்துக்கோ அந்த கவலை இருந்ததாகத் தெரியவில்லை.

"அப்படியா...?", நக்கலாக கேட்டவன் தாடையைத் தடவி விட்டு, தன் கோட் பாக்கெட்டில் இருந்து அலைபேசியை எடுத்தவன்..., "ஏபிபி ட்ரான்ஸ்போர்ட்..., அங்கே மிஸ்டர் பரந்தாமன் இருக்காரா..? நான் தேவி பப்ளிகேஷன் விபி வினித் பேசறேன்னு சொல்லுங்க...", உரைத்தவன், காத்திருக்க, அங்கே இருந்து பதில் வரவே, தன் மொபைலின் ஸ்பீக்கரை ஆன் செய்தான்.

"ஹல்லோ பரந்தாமன்..., நீங்க ஒரு முறை உங்க லோட் லாரியோட சேர்த்து.., அன்லோட் பண்ண ஆள் வேணுமான்னு கேட்டீங்கல்ல? எங்களுக்கு இப்போ தேவைப்படுது. என்ன சொல்றீங்க?", அவன் கேட்க, அந்தபக்கம் அவர் குஷியானார்.

"வினித்..., நிஜமாதான் சொல்றீங்களா? வித் ப்ளஷர்..., எத்தனை பேர் வேணும்னு சொல்லுங்க..", அவர் குரலிலும் அது வெளிப்பட்டது.

"அட என்ன சார்..., லோட் வரும்போது அதை இறக்க எத்தனை பேர் வேணும்னு உங்களுக்கே தெரியாதா?

ரொம்ப சிம்பிள்..., லோடோட சேர்த்து, அவங்க கூலியையும் மொத்தம் இவ்வளவுன்னு பேசிடுவோம். ஒரு ஆளை வைத்தாலும் சரி, பத்துபேரை வைத்தாலும் சரி, அது உங்க சாமர்த்தியம்...", அவன் பேச்சில் அவர் மொத்தமாக கவிழ்ந்தது மட்டும் உண்மை.

"அட..., இந்த ஏற்பாடு ரொம்பவே நல்லா இருக்கே. அப்போ தாராளமா பேசிடுவோம்...", அவர் உற்சாகம் இங்கே வரைக்கும் தெறிக்க, லோக்கல் தலைவன் குமுறினான்.

"மிஸ்டர் பரந்தாமன்...., இங்கே லோக்கல் ஆட்கள் கொஞ்சம் பிரச்சனை பண்ணுவாங்க. அதை என்னன்னு நீங்க கொஞ்சம் பாத்துக்கணும். இதில் எங்களை இழுக்கக் கூடாது...", கண்களில் நக்கலை வழியவிட்டு வினித் பேச, தலைவன் கண்களில் வெறி ஏறியது.

"அதை விடுங்க சார்..., நம்ம கைவசம் இல்லாத போலீசா..., அடியாளா..., தாதாவா...? எதுவா இருந்தாலும் ஒரு கை பாத்துடுவோம்...".

"அப்போ சரி..., நாளைக்கு வாங்க..., அக்கிரிமென்ட் போட்டுடலாம்...", அலைபேசியை வைத்தவன், 'இப்போ என்ன சொல்கிறாய்...?', என்பதுபோல் அவனை ஏறிட்டான்.

"நாளைக்கு எப்படி நீ இதை செய்யறன்னு நான் பாக்கறேன்...", தலைவன் கருவ,

"பார் பார்..., இப்போ கிளம்பு..., உன் பருப்பெல்லாம் இங்கே வேகாது...", குமார் அவன் தோளில் கைவைக்க, வெடுக்கென உதறியவன், வினித்தை முறைத்தவாறே சென்றான்.

அவன் முறைப்பே ஒரு விதமாக இருக்க, கார்த்திக் அதைக் கவனித்தவன், "டேய் மச்சான்..., அவன் பார்வையே சரியில்லடா...", அவன் காதைக் கடிக்க, தனக்கும் அதே உணர்வுதான் என தலை அசைத்து ஆமோதித்தான்.

ஐஸ்வர்யாவோ..., அவன் அதிரடி செய்கையை மட்டுமே பார்த்தவளாக, அசந்துபோய் நின்றுவிட்டாள். அவனை

நெருங்கியவள்..., “அசத்திட்டடா...”, அவன் கை பற்றி குலுக்க, அதையும் அனைவரும் பார்த்து, தங்களுக்குள் பார்வையை பரிமாறிக் கொண்டார்கள்.

இனிமேல் வினித்தை எதிர்த்து ஒரு வார்த்தை பேசினாலும், அவர்கள் நிலை என்னவாகும் என்பதை, அவர்களது நெருக்கம் மற்றவருக்கு உணர்த்த, தங்கள் வேலையைத் தொடர்ந்தனர்.

“நீ ரூமுக்கு போ..., நான் வரேன்...”, அவளை அனுப்பியவன், தீவிரமாக எதையோ சிந்தித்தான். அதே நேரம்..., கேட் வாசலில் நின்று, இங்கே நோட்டம் விட்ட இருவரைப் பார்த்த வினித், “டேய் கார்த்திக்..., அவனுங்க ஏதோ ப்ளான் போடுறாங்கடா...”, அவர்களைக் காட்டினான்.

“இப்போ என்னடா செய்ய...? பேசாமல் ஸ்ரீராம் சார்ட்ட சொல்லி, போலீஸ்ல முதல்ல இன்ஃபாம் பண்ணு. ரெண்டுபேரை தட்டினால் தான் அடங்குவாங்க...”, தனக்குத் தெரிந்ததை உரைத்தான்.

“இல்லடா..., அது சரி வராது..., என்னன்னு சொல்றது...? சிரிப்பாங்க. இன்னைக்கு கொஞ்சம் கவனமாத்தான் இருக்கணும். நானும் கொஞ்சம் அவசரப் பட்டுட்டேன்...”, தன் நெற்றியை தேய்த்தான்.

“விடுடா மச்சான்..., பொண்டாட்டி ஒரு வார்த்தை சொல்லி, அதை செய்யலைன்ன..., நீ பண்ணது சரிதாண்டா...”, ஐஸ்வர்யாவின் மாற்றத்தை பார்த்தவனுக்கு, வினித் செய்தது சரியென்றே தோன்றியது.

“இன்னைக்குன்னு பாத்து கிரி வரலை போல..., எனக்கென்னவோ அவன் இருந்தால் கொஞ்சம் சேஃப்ன்னு தோணுதுடா. எதுக்கும் ஜஸ்ட் டிராப் பண்ண மட்டும் அவனுக்கு வர முடியுமான்னு கேளு...”, வினித்துக்கும் அதுவே சரியெனத் தோன்ற, தன் அலைபேசியை எடுத்து அவனுக்கு அழைத்தான்.

“கார்த்திக்.., அவன் வரேன்னு சொல்லிட்டான். எதுக்கும் இன்னைக்கு எங்க பின்னாடியே நீயும், குமாரும் வாங்க.

நாம கொஞ்சம் ஜாக்ரதையா இருக்குறது நல்லது....", அவன் யோசனையை மறுப்பே இல்லாமல் ஏற்றுக் கொண்டான்.

"மச்சான்..., மேடத்தை முன்னாடியே அனுப்பிட்டா...?"

"இல்லடா..., அவ என்னோட இருக்குறதுதான் சேஃப்..., அவங்க யாருக்கு குறி வைக்கறாங்கன்னு தெரியாமல் ரிஸ்க் எடுக்க முடியாது", அத்தோடு அதை முடித்துவிட்டான்.

"நான் குமாரை வெளியே போய் ஒரு எட்டு பாத்துட்டு வரச் சொல்றேன்...", அவன் சென்று உரைக்க, அடுத்த நிமிடம், குமார் வெளியே பேப்பர் பார்க்கச் சென்றிருந்தான்.

அங்கே இருந்த நிலவரம், நிச்சயம் அவனுக்கும் சரியாகத் தோன்றாமல், தன் குப்பத்து ஆட்களையும் வரச் சொல்லிவிட்டு, முன்னேற்ப் பாட்டோடு சென்றான்.

மாலை சரியாக அறு மணிக்கு..., "ஐஷூ..., நாம கிளம்பலாம். இன்னைக்கு ஓ டி இல்லைன்னு எல்லாரையும் அனுப்பியாச்சு. நாம மட்டும்தான் கிளம்பணும்...", அவன் பேச்சும், நடத்தையும் வித்தியாசமாக இருக்க, குழப்பத்தோடு அவன் பின்னால் சென்றாள்.

காரில் ஏறியவுடனே..., "கிரி..., நான் என்ன சொன்னாலும் மறுக்காமல் கேப்பல்ல...", வினித் திடுமென கேட்க, "கண்டிப்பா சார்...", ரிவர்வியூ வழியாக அவனைப் பார்த்தவன் உரைத்திருந்தான்.

'ஏன் திடீர்ன்னு...?', ஐஸ்வர்யா அவனை ஏறிட, "ச்சும்மா...", அவன் கண்ணடித்து உரைக்க, அவன் விளையாடுவதாக எண்ணியவள், "கடவுளே..., உன்ன...", சின்னக் குரலில் கடிந்தவள்..., சற்று விலகியே அமர்ந்து கொண்டாள்.

நிகழப்போகும் விபரீதம் அறியாமல் அவள் மனம் குதூகலிக்க, அவன் மனதிலோ பூகம்பம்.

***

# பகுதி - 32.

கார் அதன் வழக்கமான பாதையில் ஓடினாலும், வினித்தின் மனதுக்குள் எதுவோ நிகழப்போகிறது என்பது மட்டும் தெளிவாகத் தெரிந்து போனது. அவன் கண்கள் நாலா புறமும் சுழல, எதுவும் வித்தியாசமாகத் தெரியவில்லை.

ஆனால்..., சட்டென கார் பாதை மாற..., “கிரி..., ஏன் ரூட் மாத்துற?”, சந்தேகமாகக் கேட்டான்.

“சார்..., ரோட்ல பள்ளம் தோண்டி போட்டிருக்காங்க. டேக் டைவர்ஷன் போர்டு வச்சிருந்தாங்களே பாக்கலையா...?”, கேட்டவன் பார்வையை ரோட்டில் பதிக்க, அமைதியானான்.

அதே நேரம்..., “குமார்..., யாரோ வராங்கன்னு சொன்னியே வந்துட்டாங்களா?”, கார்த்திக் கேட்க,

“அவங்க எதிர்ல வருவாங்க...?”, குமார் உரைக்க..., அதே நேரம், அவர்களும் பாதை மாற்றத்தை உணர்ந்து பதட்டமடைந்தார்கள்.

“என்னடா இது...?”, கார்த்திக் அலற..., “அதான் சார் எனக்கும் தெரியலை...”, அவசரமாக தன் அலைபேசியை எடுத்தான். அதே நேரம்..., ஒரு பைக்கில், நிறைய டியூப்லைட்களை ஏற்றிக்கொண்டு இருவர் அசுர வேகத்தில் கடந்து சென்றனர்.

குமாரும், கார்த்திக்கும் அவர்களை கவனிக்கவில்லை. குமார் அழைத்த எண் ரிங் சென்றுகொண்டே இருக்க, “டேய்..., முதல்ல வண்டியில் ஏறு..., மத்ததை பிறகு பாத்துக்கலாம்..., வினித் கார் கண்ணை விட்டு மறஞ்சுடுச்சு...”, பதட்டமானான்.

ஆனால் அவர்கள் கிளம்பியது தாமதமாகத்தான் என்பதை சற்று நேரத்தில் உணர்ந்து கொண்டார்கள்.

அங்கே..., இவர்களை தாண்டிச் சென்ற பைக், ஓர் இடத்தில்..., வினித்தின் காரை முந்திச் சென்று சடன் பிரேக்

போட, அவர்களது செய்கையை எதிர்பார்த்திராத கிரி, கடைசி நொடியில் சுதாரித்து ஒடித்து காரை நிறுத்தினான்.

“நோ கிரி...”, வினித் அலற..., அதற்கு முன்பே..., பைக்கில் இருந்து இறங்கியவர்கள் ஆளுக்கொரு டியூப்லைட்டோடு அவனை நெருங்கிவிட்டார்கள். மேலும் இரு பைக்கில் வந்த நால்வரும் அவர்களோடு இணைய..., பின்பக்க கதவைத் திறந்தவர்கள், ஒரே பாய்ச்சலில் வினித்தை வெளியே இழுத்தார்கள்.

“ஏய்..., யார்டா நீங்க...?”, ஐஸ்வர்யா பின்னால் குரல் கொடுத்தவாறு இறங்க,

“டேய்..., அவளை நீங்க பாருங்கடா...?”, வினித்தை பிடித்தவர்கள், பின்னால் வந்தவர்களிடம் உரைத்தான்.

கிரி நடப்பதை உணர்ந்து காரிலிருந்து இறங்கி வர முயல, “கிரி..., காரில் இருந்து இறங்காதே..., முதல்ல காரை கிளப்பு..., ஐஸ்வர்யாவை பத்திரமா கூட்டி போ...”, கத்தியவனை..., அந்த முரடர்கள் லைட்டால் குத்த வர, தன் உள்ளங்கையை அவன் பலியாக்க..., அவன் இரு கைகளிலும், விசையோடு அவை இறங்கியது.

“ஸ்.., ஆ....”, வினித் அலற..., “சார்...”, கிரி அதற்குமேல் கத்த, “வினு..., டேய்...”, காரில் இருந்து இறங்க முயன்றாள். கெட்டதிலும் ஒரு நல்ல நேரமாக, யாரும், காருக்கு அந்தப் பக்கம் வந்து, அவள் பக்க கதவைத் திறக்க முனையவில்லை.

ஒரு வேளை..., அவள் பக்கம் வாகனங்கள் விரைந்து கொண்டிருந்ததால் அதைச் செய்யவில்லையோ என்னவோ.

“கிரி..., நான் சொன்னதைச் செய்..., என்னைப்பற்றி கவலைப்படாதே. போ..., போ...”, தன்னைத் தாண்டி வெளியே வர முயன்ற ஐஸ்வர்யாவை, பாட்டில் குத்திய ஒற்றைக் கையில் பிடித்து உள்ளே தள்ளியவன், “கிரி, சென்டர் லாக்கை ஆன் பண்ணு..., கார் நிக்கவே கூடாது..., போ...”, டோரை அறைந்து சாத்தினான்.

அவனும் உள்ளே ஏறி இருக்கலாம்..., ஆனால்..., இருவர் முரட்டுத்தனமாக அவனை பிடித்திருக்க, அவர்களை விலக்கப் போராடினால், அந்த தாமதத்தில் ஐஸ்வர்யாவை எதுவும் செய்து விடுவார்களோ என அஞ்சியதால்..., அதை அவன் முயலவே இல்லை.

“டேய்..., முதல்ல டிரைவரை வெளியே தள்ளு...”, ஒருவன் முன்னேற, அடுத்த நிமிடம் எதையும் யோசிக்காமல், கிரி காரை கிளப்பியிருந்தான்.

“கிரி..., காரை நிப்பாட்டு..., வினுவை அங்கே விட்டுட்டு போக முடியாது..., டேய்.., சொன்னா கேளுடா..., காரை திருப்புடா...”, கோபமாக கத்தியவள், அவன் கேட்கவில்லை எனவே..., இப்பொழுது கெஞ்சினாள்.

“என்னை மன்னிச்சிடுங்க மேம்..., உங்களை பாதுகாப்பா வீட்டில் விட்டுட்டு நான் வரேன்...”, அவனுக்கும் அவள் பாதுகாப்பு மட்டுமே இப்பொழுது பிரதானமாக இருந்தது. மேலும்..., வினித் காரில் ஏறியவுடன் கேட்ட கேள்விக்கான காரணமும் புரிந்தது.

அங்கோ..., ஆறுபேர் சூழ..., ஏற்கனவே இருவர் கையில் இருந்த லைட் உடைந்திருக்க..., மற்ற நால்வரும் அவனை நெருங்கினர். அவன் தலையில் டியூபால் அடிக்க முயல..., தன் இரு கரத்தையும் வைத்து தடுத்தவனது சட்டையையும் கிழித்தவாறு, அவன் கரத்தை பதம் பார்த்தது.

வந்தவர்களும் அவனை முழுதாக தாக்க மட்டுமே வந்திருப்பார்கள் போல, அது மட்டுமின்றி, அவர்களும் தொழில் ரவுடிகள் கிடையாதே..., சகட்டு மேனிக்கு அவனைத் தாக்க..., அவர்களது அடியை முயன்றவரை தன் கையால் தடுத்தான்.

அதில்..., அவன் இரு கரங்களும் மித்தமாக கிழிந்து போனது. ஒருவன் நேரடியாக அவன் முகத்துக்கு குறி வைக்க..., ஏற்கனவே குத்திக் கிழித்திருந்த உள்ளங்கையை முகத்தில் மீண்டும் காட்ட..., அவன் எலும்புகளே வெளியே தெரியும் அளவுக்கு சதைகள் பிய்ந்து போனது.

ரோட்டை விட்டு கீழே இறங்கிவிட..., அங்கே பெரும் போராட்டமே நடந்தது. வாகனத்தில் போனவர்களும், நமக்கேன் வம்பு என கடந்து செல்ல, யாரும் அவன் துணைக்கு வரவில்லை.

தன் வலியையும், ரத்தத்தையும் பொருட்படுத்தாமல் அவனும் திருப்பித் தாக்க..., அவர்களுக்கும் அடி விழுந்தது. வினித் பிரதானமாக தன் காலை வைத்து அவர்களைத் தாக்க..., அவனை அடக்குவது அவர்களுக்கும் சற்று சிரமமாகவே இருந்தது.

அவன் சுழன்று திமிறியதால்..., அவர்கள் அடி, தங்கள் கூட்டாளிக்கே கூட விழ, மேலும் கொதித்துப் போனார்கள்.

“ஏண்டா..., பெருசா ப்ளானா போடுற..? நாளைக்கு சைன் பண்ண எப்படி கை இருக்குன்னு பார்ப்போம்...”,

“இந்த கை தானே..., இது தானே...”, அவர்கள் பேச்சை கேட்ட பிறகுதான், அவர்களுக்கு தன்னைக் கொல்வதை விட, தன் கையை சிதைப்பதில்தான் வெறி என்பதை புரிந்துகொண்டான்.

இறுதியாக ஒருவன் இரும்பு கம்பியை எடுத்துக் கொண்டு, அவன் கையை உடைக்க வர..., சரியாக அந்த நேரம், கார்த்திக்கும் குமாரும் அங்கே வந்தவர்கள்..., குமார்..., பின்னிருக்கையில் இருந்து பாய்ந்தவன், கையில் கம்பியை வைத்திருந்தவனிடமிருந்து பிடுங்கி, அவனைத் தாக்க..., கார்த்திக்கும் கைக்கு கிடைத்த ஒரு கயிறோடு அவர்களை நெருங்கியவன், விளாசித் தள்ளினான்.

தன் நண்பர்கள் வந்ததைப் பார்த்த பிறகே, மயங்கி சரிந்தான் வினித்.

அடுத்த நிமிடத்தின் துவக்கத்தில் அவர்கள் சிதறி ஓட, “குமார்..., வினித்தை தூக்கு...,, வா...”, அடுத்த நிமிடம் தன் பைக்கை அசுர வேகத்தில் செலுத்தினான்.

வினித்தோ..., நடந்த போராட்டத்தில், ரத்தம் பெருகும் கரத்தோடு, மயக்கத்துக்குப் போயிருந்தான்.

“கார்த்திக்..., கொஞ்சம் வேகமா போடா..., மேடம் என்ன ஆனாங்க...?”, குமார் பதைத்தான்.

கார்த்திக் நீர் வழியும் விழிகளை இமை கொட்டி சரி செய்தவனாக..., “நாம வண்டியை நிறுத்தியிருக்க கூடாதுடா...”, புலம்பினான்.

அடுத்த ஐந்து நிமிடத்தில்..., அந்த அப்பல்லோ மருத்துவமனை கண்ணுக்குப் பட, புயல் வேகத்தில் அங்கே செலுத்தியவன், பைக்கை நிறுத்திவிட்டு , இருவருமாக அவனை தூக்கிக் கொண்டு உள்ளே ஓடினார்கள்.

உடனடியாக அவர்கள் டிரெஸ்ஸிங் துவங்க, அவன் கையில் குத்தியிருந்த கண்ணாடித் துண்டுகளை ஒவ்வொன்றாக அகற்றினார்கள். வினித் கண்கள் செருக, அரை மயக்கத்தில் இருந்தவன்..., அவர்கள் எடுக்க எடுக்க, வலியில் துடித்தான்.

“என்ன சார் இது...? இப்படி கண்ணாடி பீசா இருக்கு. ரத்தமும், சதையும் சேர்ந்து அகோரமா..., யார் சார் செய்த வேலை...?”, அந்த செவிலிகளுக்கே பொறுக்கவில்லை.

அதே நேரம்.., அவன் அலைபேசி விடாமல் ஒலிக்க..., அதை எடுத்த கார்த்திக்கிற்கு, அதை அட்டன் செய்யும் தைரியம் இருக்கவில்லை. அதே நேரம்..., அவள் எப்படி தவிப்பாள் என்பதும் புரிய..., பதைத்துபோய் நின்றிருந்தான்.

ஒரு செவிலி, வினித்தின் முகத்தில் நீரடித்தவள், “சார்..., இந்த தண்ணியை குடிங்க...”, அவனுக்கு புகட்டினாள்.

அதில் சற்று தெளிந்தவன்..., “ஸ்..., ஆ..., ம்..., மா...”, வலி தாளாமல் துடித்தான்.

மீண்டும் அவன் அலைபேசி ஒலிக்க, அது ஐஸ்வர்யாவின் அழைப்பு என்பதை உணர்ந்தவன், விழி மலர்த்தியவன், கார்த்திகைப் பார்த்து, “குடுடா...”, செவிலி தடுத்தும் கேளாமல், அலைபேசியை பறித்தவன், “ஐஷு...”, அவன் குரல் கொடுக்கும் முன்பே...

“வினு..., வினு..., உனக்கு ஒண்ணும் இல்லையே..., பேசுடா..., வினு..., பதில் சொல்லு..., வினு...”, அவன் அழைப்பை உணரும் நிலையில் கூட அவள் இல்லை.

“ஐ...ஷூ...”, முயன்று அவன் உரைக்க..., “சார்.., கை புல்லா கிழிஞ்சு ரத்தம் ஊத்துது. இப்போ போய் போன்..., கொடுங்க...”, அவனிடமிருந்து அதைப் பறித்தவள்,

“மேம்.., இவரோட வைஃப்பா நீங்க...? அவர் இங்கே அப்பல்லோல தான் இருக்கார் வாங்க. பேஷண்டை தொல்லை பண்ணாதீங்க...”, அலைபேசியை வைத்துவிட்டாள்.

“கிரி..., வண்டியை திருப்பு..., அப்பல்லோ போ...”, அவள் முதல் பேச்சை கண்டுகொள்ளாதவன், இரண்டாவது வார்த்தையில் காரை திருப்பி விட்டான்.

அடுத்த பத்தாவது நிமிடம் அங்கே இருக்க..., தலை தெறிக்க ஓடியவள், தூரத்தில் கார்த்திகைப் பார்த்து விட்டு..., கால் தடுமாற, கால்கள் நடுங்க, நடை தள்ளாட..., அவனிடம் ஓடினாள்.

“கார்த்திக்..., வினு...”, அவள் குரலும் தோற்றமும்.., அவனை நிலை குலையச் செய்தது. கண்களில் கூட கலக்கத்தை காட்டாதவள், அவள் தளர்ந்த நடையும், வெறித்த பார்வையும், கலங்கிய முகமும், அவனை திகைக்க வைத்தது. மௌனமாக எதிரில் இருந்த அறையை சுட்டிக் காட்டினான்.

அசுர வேகத்தில் உள்ளே பாய..., வினித்தின் தேகம் மொத்தமும் ரத்தம் சிதறி இருக்க, இரண்டு கைகளையும் நான்கு செவிலிகள் சேர்ந்து சுத்தம் செய்து தையல் போட..., புழுவாய் துடித்துக் கொண்டிருந்தான் வினித்.

“ஐயோ..., என்ன இது...?”, கேட்டவள் அடுத்த நொடி மயங்கிச் சரிய, அவள் பின்னால் வந்த கார்த்திக் சட்டென தாங்கிக் கொண்டான்.

“கார்த்திக்..., அவளை வீட்டுக்கு கூட்டி போ...”, அந்த நிலையிலும் வினித் உரைக்க, என்ன செய்வதென தெரியாமல் திண்டாடிப் போனான்.

“நல்ல வேலை..., இவங்களை ஏன் சார் உள்ளே அலவ் பண்ணீங்க...? முதல்ல வெளியே போங்க சார்..., தயா..., அவங்களுக்கு பக்கத்து ரூம்ல ஒரு ‘பெட்’டை போடு....”, சாதாரணமாக உரைத்தவள், அவள் வேலையைத் தொடர்ந்தாள்.

அடுத்த ஒரு மணி நேரத்தில்..., வினித்தின் கை காயம் முழுவதும் சுத்தப்படுத்தப்பட்டு, தையல் போடப்பட்டு, முழுவதுமாக பொதியப் பட்டது. இரண்டு கைகளும், முழங்கைக்கு கீழே நன்றாக சிதைந்திருக்க, உள்ளங்கை கூட தப்பவில்லை.

விரல் நுனிகள் மட்டுமே காயத்தில் இருந்து தப்பியது. தோள்ப்பட்டையில் சிறிது காயம் இருக்க, அவன் சட்டை முழுதாக கத்தரித்து அகற்றப் பட்டிருந்தது. கையில் இருந்த முடிகள் அனைத்தும் முற்றாக மழிக்கப்பட்டு, அதன் பிறகே தையல் போடப்பட்டது.

மருந்தின் வீரியத்தில் உறங்கிக் கொண்டிருந்தான். அவனை அறைக்கு மாற்ற பேசிக் கொண்டிருக்க, அந்த நேரம் கண்விழித்தாள் ஐஸ்வர்யா.

விழித்தவள்..., “வினு...”, என்ற கூவலோடு படுக்கையை விட்டு தாவி இறங்க, உடல் ஒத்துழைக்க மறுத்தாலும், அதை அவள் கண்டுகொள்ளவில்லை.

“அம்மாடி..., பாத்து...”, தந்தையின் குரலில், தாவி அவரை அணைத்தவள், அவர் நெஞ்சில் விழுந்து கதறினாள்.

“ம்ச்.., அழாதம்மா..., அதான் மாப்பிள்ளைக்கு ஒண்ணும் இல்லையே..., ஒரு வாரத்தில் எல்லாம் சரியாப் போய்டும்...”, கலங்கிய குரலில் அவளைத் தேற்றினார்.

சாவின் விளிம்புக்கு சென்று அவன் திரும்பியிருப்பது அவருக்கும் நடுக்கத்தை ஏற்படுத்தி இருந்தது.

“சார்..., வினித்தை ரூமுக்கு மாத்தலாம்னு சொல்றாங்க...”, கார்த்திக் அங்கே வர,

“இல்ல..., நாம வீட்டுக்கு கூட்டி போய்டலாம்...”, பட்டென உரைத்தாள்.

“இல்லம்மா..., ரெண்டு நாள் இங்கே இருக்கட்டும். பிறகு...”,

“நோ..., இங்கே வேண்டாம். வீட்டுக்குப் போய்டலாம்...”, பிடிவாதம் பிடித்தாள்.

வினித்தின் இரண்டு கரங்களும் அவனுக்கு ஒரு வாரம் உபயோகப்படப் போவதில்லை என்பதை உணர்ந்த கார்த்திக்கிற்கு, இத்தோடு போனதே என சந்தோஷப் படுவதா? தாங்கள் இருந்தும் இப்படி ஆகி விட்டதே என வருத்தப் படுவதா? எதுவும் புரியவில்லை.

அவனை தங்கள் அறைக்கு கூட்டிப் போனால் நன்றாக இருக்கும் என அவன் எண்ணினான். ஆனால்..., அதை அங்கே தெரிவிக்க சரியான சந்தர்ப்பம் அமையாமல் போகவே அமைதியானான்.

மருத்துவரும் வந்தவர்..., ஒரு நாளாவது இருக்கட்டும் என சொல்லிப் பார்க்க, ஐஸ்வர்யாவின் பிடிவாதத்தை யாராலும் கலைக்க முடியவில்லை. வினித்தின் ஓய்ந்த தோற்றத்தை இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

நேற்று தன்னை தழுவிய கரங்கள்..., முத்தமிட்ட இதழ்கள், சற்று முன்னர், தன்னைப் பார்த்து சிமிட்டிய கண்கள், குறும்பு பேசிய வாய்..., நினைக்க நினைக்க கண்ணீர் பெருகியது.

“ப்ளீஸ் டேட்..., வீட்டுக்கு போகலாம்...”, கெஞ்சினாள். மருத்துவமனை என்றால், எப்படியும் அவளைத் தங்க, கார்த்திக்கோ, தன் தந்தையோ அனுமதிக்க மாட்டார் என்பது அவளுக்குத் தெரியும், அவளைப் பொறுத்த வரை, இனிமேல் அவனுக்கு தான்தான்..., என முடிவெடுத்துவிட்டாள்.

நேரம் ஏழு முப்பதைக் காட்ட..., கடந்த ஒருமணி நேரத்தில் தங்கள் நண்பனை இழக்க இருந்தோமே என்ற நினைவில் கார்த்திக்கின் தேகம் சிலிர்த்தது.

வேறு வழியின்றி வினித்தை டிச்சார்ஜ் செய்ய, கார்த்திக்கிடம், அனைத்து மருந்து மாத்திரை பற்றிய விளக்கம், அவனுக்கு மயக்கம் தெளிந்தவுடன், உணவு கொடுத்துவிட்டு மாத்திரை கொடுக்கச் சொன்னது..., காலையில் ஊசி போட வேண்டும் என உரைக்க, அதை எழுதி வாங்கியவன், தங்கள் மருத்துவரை வைத்து பார்த்துக் கொள்வதாக உரைத்தான்.

அனைத்தையும் கேட்டவன், அவற்றை அப்படியே ஐஸ்வர்யாவிடம் ஒப்புவிக்க, அவளுக்கு புரிந்ததா, இல்லையா என்பது கூட அவனுக்குத் தெரியவில்லை. ஆனால்..., அவளது அந்த பார்வையும், முகமும்.., அவன் கண்களை கலங்க வைத்தது மட்டும் உண்மை.

தன் நண்பனுக்காக அவள் இப்படித் துடிப்பாள் என்பதை கனவில் கூட எண்ணியிராதவன் ஆயிற்றே. ஆனாலும்..., அவனை எப்படி பார்த்துக் கொள்வாள்? சந்தேகத்தை தனக்குள் புதைத்துக் கொண்டான்.

அடுத்த பத்தாவது நிமிடத்தில் அங்கிருந்து கிளம்பியவர்கள், வீட்டுக்குச் சென்றுவிட்டார்கள். கார்த்திக்கும் அரை மனதாக கிளம்பிவிட்டான்.

ஐஸ்வர்யா இரவு உணவாக பால் மட்டும் அருந்தியவள், அவன் அருகில் அமைதியாகச் சென்று படுத்துக் கொண்டாள். அவன் வெற்று நெஞ்சில் ஒரு டவ்வல் மூடியிருக்க, இடையிலும் ஒரு டவ்வல் மட்டுமே சுற்றியிருந்தது.

ஒரு போர்வையை அவனுக்கு மூடியவள்..., சற்று இடைவெளி விட்டு படுத்துக் கொண்டு அவனையே வெறித்தாள். அலைச்சலும், மன உளைச்சலும், அவள் விழியை மூட வைக்க, ஒரு சிறு முனகல் சத்தத்தில் பட்டென கண் விழித்தாள்.

வேகமாக குழல் விளக்கை எரிய விட்டவள், வினித்தைப் பார்க்க, அவன் கை வலியில் முனகுவது அவளுக்குப் புரிந்தது.

“வினு…”, மெதுவாக அவன் தோள் தொட, மெல்லிய சூட்டை உணர்ந்தவள், வேகமாக அவன் நெற்றியில் கை வைக்க, அதுவும் சற்று வெப்பத்தை அவளுக்கு அறிவித்தது.

வேகமாக கார்த்திக் தன்னிடம் கொடுத்த மாத்திரைகளில், இரவு கொடுக்க வேண்டியவற்றை எடுத்தவள், அறையில் இருந்த ப்ரிஜ்ஜில் இருந்து சிறு தண்ணீர் பாட்டிலை எடுத்து வந்தாள்.

அவள் செய்கையில் அவனும் விழித்துவிட…, முயன்று எழுந்து அமர்ந்தான். “சாரி…, எழுப்பிட்டேனா?”, கேட்டவன், வலியில் முகம் சுழித்தான்.

அதே நேரம்…, பசியையும் உணர்ந்தான். மதியத்துக்குப் பிறகு அவன் எதுவுமே சாப்பிடவில்லை. மருத்துவமையில் என்றால் கூட குளுக்கோஸ் போட்டிருப்பார்கள்…,

“ம்ச்…, என்ன கேள்வி இது…? முதல்ல மாத்திரை சாப்பிடு…”, அவன் அருகில் வந்தாள். அவனுக்கோ.., பசியை வைத்துகொண்டு, வெறும் வயிற்றில் மருந்து சாப்பிடுவது முடியாத காரியம் என்றே தோன்றியது.

அவன் மெல்லியதாக மறுக்க.., “கை வலி, ஜுரம்.., மருந்து சாப்பிடாமல்..? முதல்ல வாயைத் தொற…”, செல்லமாக கடிந்து கொண்டாள். அவனுக்கு பசிக்கும் என்பதே அவளுக்கு நினைவில்லை.

அவனோ…, அவள் முகம் பாராமல்…, முகத்தை சற்று திருப்பியவன்…, “பசிக்குது ஐஷூ…”, பசி கொண்ட குழந்தைக் குரலில் உரைக்க, அவள் கையில் இருந்தவை அனைத்தும் மொத்தமாக நழுவ,

“வினு…”, கதறியவள், அவனை தன் மார்போடு அணைத்துக் கொண்டு மேலும் வெடித்து அழுதாள்.

அவனை நான் பார்த்துக் கொள்கிறேன் என வீராப்பாக வீட்டுக்கு அழைத்து வந்துவிட்டு, அவன் பசியைக் கூட கண்டுகொள்ளாத, உணராத தன்னை என்ன செய்வது? கண்ணீர் பெருகியது.

இதை எப்படி மறந்தாள்? அவள் கோபமாக இருந்தாலோ.., தாமதமாக எழுந்தாலோ.., அவளுக்கான உணவை ஒரு நாள் கூட அவன் மறந்தது கிடையாது. அப்படி இருக்கையில்..., அவன் உடல்நலக் குறைவில் கூட, தனக்கு அந்த எண்ணமில்லையே.., வெட்கினாள்.

கார்த்திக் பசிக்கு உணவு கொடுத்தான் என்றபொழுது சாதாரணமாக தெரிந்த விஷயம்..., இந்த நிமிடம்..., சாதனையாகத் தெரிந்தது. அவள் மதிப்பில் அவன் உயர்ந்து போனான்.

அவள் அழுகையைத் தொடர..., “ம்ச்.., அழாதே ஐஷூ..., பசிச்சது கேட்டேன். அதுக்குப்போய்...”, அவளை மாற்ற முயலும் அவன் செய்கையை கண்டுகொண்டவள், தன் பிரிட்ஜை நோக்கிச் செல்ல,

“எனக்கு பழமெல்லாம் பத்தாது. வேற ஏதாவது வேணும்...”, அவன் உரைக்கவே,

“சரி..., கிச்சனில் ஏதாவது இருக்கான்னு பாத்துட்டு வரேன்...”, அவள் செல்ல..., தானும் உடன் எழுந்தான். அவன் இடையில் கட்டியிருந்த டவ்வல் அவிழப் பார்க்க, சட்டென தாங்கியவன், சங்கடமாக அவள் முகம் பார்த்தான்.

அவளோ.., “ஐயோ..., எனக்கும் கட்டத் தெரியாதே. இரு பெல்ட் போட்டுடலாம்...”, வழி கண்டவள் அதைச் செயல்படுத்தினாள்.

“நீ இங்கேயே இருக்கறியா..? நான் போறேன்...”, அவள் கோரிக்கையை மறுத்தவன், தன் கை வலியை தாங்கிக் கொண்டு அவளோடு சென்றான்.

அவள் உணராத அவனது பசியை, துரை உணர்ந்திருக்கிறார் என்பதற்கு அடையாளமாக, சாப்பாட்டு

மேஜைமேல் ஹாட்பாக்ஸ் இருந்தது. அதில் இருந்த இட்லியைப் பார்த்தவள், சாம்பார், சட்னி ஊற்றி, முதல் முறையாக அவனுக்கு உணவு ஊட்டினாள்.

திருப்தியாக உண்டவன், அறைக்கு வந்து, “தேங்க்ஸ் ஐஷூ…”, அவன் உரைக்க, செல்லமாக முறைத்தவள், அவனுக்கு மருந்து கொடுத்தாள்.

“படுத்துக்கோ…, கை ரொம்ப வலிக்குதா? ஜுரம் எப்படி இருக்கு…?”, அவன் நெஞ்சில் கைவைத்து பார்த்தவள், அவனை படுக்கச் சொன்னாள்.

அவனோ அமைதியாக இருக்க…, அவன் அமைதி அவளுக்கு வித்தியாசமாக இருந்தது.

“என்ன…?”, அவன் கன்னத்தில் கை கொடுத்து தன் பக்கம் திருப்பினாள்.

ஒரு நிமிடம் அவள் முகத்தையே அசையாமல் பார்த்தவன், “நேத்து இந்த நேரம் நாம இருவரும் எப்படி இருந்தோம்? ஆனா இன்னைக்கு…, எனக்கு அதிர்ஷ்டமே கிடையாது ஐஷூ…, எதையுமே முழுசா அனுபவிக்க எனக்கு கொடுப்பனையே இல்லை…”, அவன் உரைக்க, அவள் முகத்தில் அப்பட்டமான அதிர்ச்சி.

அவளைப் பொறுத்த வரைக்கும், அவனை கவனித்துக்கொள்ள வேண்டும் என்பது மட்டுமே மனதில் இருக்க, ஒரு ஆண்மகனாக அவன் சிந்தை செல்லும் திசையும், அவன் ஏக்கமும், ஆசையும்…, அவன் கண்பார்த்து உணர முயன்றாள்.

அவன் ஆசையை மட்டுமே நிறைவேற்றுவது என முடிவெடுத்தாள்.

ஒரு நொடி அவனை நோக்கியவள், அடுத்த நிமிடம், அறையின் குழல் விளக்கையும், விடி விளக்கையும் நிறுத்தினாள். அவளை தான் காயப்படுத்துவிட்டோமோ என அவன் திணற…, அடுத்த சில நிமிடங்கள் அறையில் மயான அமைதி நிலவியது.

அந்த மையிருட்டு வேளையில்..., அவள் கரம் அவனைப் படுக்கையில் கிடைத்த..., மறு பேச்சின்றி படுத்தவன், அடுத்த நிமிடம் தன்மேல் மொத்தமாகப் படர்ந்த ஐஸ்வர்யாவின் செய்கையில் உறைந்து போனான்.

தன் வெற்று நெஞ்சம் உணர்த்திய செய்தியை நம்ப முடியாமல் திகைத்தவன், “ஐஷூ...”, தான் எப்படி உணர்கிறோம் என்றே புரியாமல், தன் கட்டுபோட்ட கரத்தை அவள் முதுகில் பதித்து தன்னோடு இறுக்க,

அவன் இதழ்களை இறுக்கமாக கவ்விக் கொண்டாள். “ம்ஹூம்..., உன் கை வலிக்கும்..., வேண்டாம்...”, உரைத்தவள், அவன்மேல் அழுத்தமாக புதைந்தாள்.

“ஐஷூ..., இல்லம்மா...?”, அவன் தடுமாற...,

“வினு.., இப்போ உன் கைகளுக்குள் நான் முழு மனசோட தான் இருக்கிறேன். எனக்கு நான் செய்யிறது சரியா தப்பான்னு தெரியலை. ஆனா..., நீ எதுக்கும் இனிமேல் ஏங்கக் கூடாது. இந்த விளக்கை அணைத்தது கூட, என் வெட்கத்தை நான் துறக்கத்தான்...”, உரைத்தவள், அவன் நெஞ்சம் முழுவதும் முத்தமிட..., இப்படி ஒரு மனைவியை அடைய நான் என்ன தவம் செய்தேன் என எண்ணிக் கொண்டான்.

“சாரிம்மா..., நான்...”, அவன் இதழில் மீண்டும் அழுந்த முத்தமிட்டவள், “இந்த நிமிடத்தை மட்டும் அனுபவி..., எனக்கு இதில் எந்த வருத்தமும் இல்லை. ஏன்..., உனக்கு பிடிக்கவில்லையா....?”, கால்களை அவனோடு பின்னிக்கொள்ள,

அவள் இதழ்கள் அவன் இதழ்களுக்குள் சிக்கிக்கொண்டு திணறியது. அதில் அவன் கண்ணீரும் கலக்க..., “ம்ச்..., குழந்தை மாதிரி...”, செல்லமாக கடிந்துகொள்ள,

“இந்த நிமிஷம்..., நான் உனக்கு குழந்தையாகத்தான் மாற ஆசைப்படுறேன் ஐஷூ...”, அவள் கழுத்தடியில் முகம் புதைத்தவன், நிம்மதியாக விழி மூடினான்.

உடலின் கூடலைத் தாண்டிய தேவை அது. அவள் வழங்கிய எண்ணிலடங்கா முத்தமும், அவன் திருப்பிக் கொடுத்த கண்ணீர்த் துளிகளும், அவர்கள் வாழ்க்கையை ஜெயிக்க வைத்தது.

***

# பகுதி - 33.

வீட்டு நடு ஹாலில், தன் முன்னால் கோபம் உச்சத்தில் ஏற, பொரிந்து தள்ளிக் கொண்டிருந்த மகளை புன்னகையும், பூரிப்புமாக பார்த்துக் கொண்டிருந்தார் ஶ்ரீராம்.

“டேட்..., எவன் எவன் இதுக்கு காரணமோ..., அவன் ஒருத்தனும் வெளியே இருக்கக் கூடாது. என்ன செய்வீங்களோ..., ஏது செய்வீங்களோ எனக்குத் தெரியாது. அவங்க கண்டிப்பா தண்டனையை அனுபவிச்சே ஆகணும்.

“எவ்வளவு தைரியம் இருந்தால்.., என் வினுவின் மேல் கை வச்சிருப்பாங்க? எவ்வளவு ரத்தம்...? அப்படியே துவச்சுபோட்ட துண்டாட்டம் துவண்டு போய் இருக்கான் டேட்.

“நேத்து என்கிட்டே..., கை வலிக்குன்னு..., நோ டேட்..., அவனுக்கு வலிக்கிற அளவுக்கு நான் பாத்துட்டு இருந்திருக்கேன். என்னால் எதுவுமே செய்ய முடியலை....”, அவளால் பேசக் கூட முடியவில்லை.

“இன்னும் பத்து தலைமுறை உக்காந்து சாப்பிடுற அளவுக்கு சொத்து இருக்கு..., ஆனா..., அவன்..., பசிக்குதுன்னு..., ஹையோ..., டேட்..., என்னால் அதை இப்போ கூட நினைச்சுப் பாக்கவே முடியலை...”, நிற்க முடியாமல் நடந்தாள்.

“என் கண்ணு முன்னாடியே.., என் உயிரை உருவி எடுக்குற அளவுக்கு பதற வச்சுட்டாங்க. எனக்கு வலிக்குது டேட். அவனுக்கு வலிக்கறதை விட ஆயிரம் மடங்கு எனக்கு வலிக்குது...”, கட்டுக்கடங்காமல் கண்ணீர் பெருகியது.

குழந்தை முதல், அவள் கண்களில் கண்ணீரைக் கண்டிராத, ஶ்ரீராமுக்கு, அவள் கண்களில் நிற்காமல் வழியும் கண்ணீரைப் பார்த்து பெருமிதமாக இருந்தது.

மகள் அழுவதை பார்த்துக் கொண்டிருக்கும் அளவுக்கு அவர் ஒன்றும் கொடுமைக்கார தகப்பன் இல்லை. தன்

மகள்மேல் உயிரையே வைத்திருக்கும் பாசக்கார தந்தை. அவர் பெருமிதத்துக்குக் காரணம், மகள் தனக்காக அழாமல்..., அவள் கணவன் வினித்துக்காக அழுகிறாள் என்பதுதான்.

அடுத்தவரைப் பற்றி ஒரு சதவீதம் கூட கவலைப்படாத தன் மகள், யோசிக்கக் கூட விரும்பாத, செய்யாத தன் மகள்...,தன் கணவனுக்காக கண்ணீர் வடிக்கிறாள் என்றால்.., அவன்மேல் எவ்வளவு பாசம் கொண்டிருக்க வேண்டும் என்பதை அறிந்ததால் வந்த பெருமிதம்.

“நான் சொல்லிட்டே இருக்கேன்..., நீங்க பேசாமலே இருந்தால் என்ன அர்த்தம்...?”, அவரிடம் சாடினாள்.

“என் மகளின் நிழலைக் கூட தொட்டுப் பார்க்க நினைப்பவனையே நான் விட மாட்டேன். என் மகளோட உயிரை பதற வச்சவனை..., அவ கண்ணீருக்கு காரணமானவங்களை நான் சும்மா விட்டுடுவேனா?”, அவர் நிதானமாக வினவ,

“டேட்...”, நீர் நிரம்பிய விழிகளோடு அவரை ஏறிட்டாள்.

“உன் ஒவ்வொரு சொட்டு கண்ணீருக்கும் அவங்க விலை கொடுத்துதான் ஆகணும் தேவி. இனிமேல் உன்னைப்பற்றி நினைக்க கூட அவங்க யோசிப்பாங்க..., போ..., நீ போய் மாப்பிள்ளையைப் பார்...”, அவர் உரைக்க, அதற்குமேல் அவரிடம் எதையும் கேட்கவில்லை.

வினித் எழுந்துவிட்டானா என்பதை அறிய அறைக்குச் செல்ல, படுக்கையில் எழுந்து அமர்ந்திருந்தான். “வினு..., எழுந்துட்டியா...?”, அவனை நெருங்கினாள்.

அவன் தன் இரு கரத்தையும் விரித்து, கண்களால் வா என அழைக்க..., விரைந்து அவன் கரத்துக்குள் புகுந்து கொண்டாள். அவளை தன் மடியில் அமர வைக்க, அவன் கழுத்தை கட்டிக் கொண்டவள், “உனக்கு இன்னும் ஜுரம் இருக்கு...”, அவன் பின்னந்தலையில் சிகை கோதி..., அவன் கன்னத்தில் இதழ் பதித்தாள்.

அவனோ..., அவள் கழுத்தில் முகம் புதைத்தவன், அமைதியாகவே அமர்ந்திருந்தான். “ம்ச்..., என்னடா..., நீ இப்படி இருக்குறது நல்லாவே இல்லை...”, கலங்கிய குரலில் உரைக்க,

“என் ஐஷுவோட கவனிப்பு எனக்குக் கிடைக்கும்னா..., இன்னும் எத்தனை அடி படவும் நான் தயாரா இருக்கேன்...”, நெகிழ்ந்து போனான்.

“உன் ஐஷுவுக்கு எப்படி கவனிக்கணும்னே தெரியாதுடா...”, அவன் தலை கோதினாள்.

“இதைவிட வேறு என்ன வேணும்...”, அந்த ஏகாந்தம் இருவருக்கும் பிடித்தது.

சட்டென நினைவிற்கு வந்தவளாக..., “ஏய்..., நீ ப்ரெஷ் பண்ணனும்.., ரெஸ்ட் ரூம் போகணும்..., ஜஸ்ட் ஹாட் பாத் எடுக்கணும்...”, ஒவ்வொன்றாக அடுக்கினாள்.

அவள் கழுத்தில் இருந்து விலகியவன்.., “என்ன..., காலையில் இருந்து ஒவ்வொரு வேலையா யோசிக்கறியா? வேண்டாம் ஐஷூ..., கஷ்டப்படாதே நான் பாத்துக்கறேன்...”, அவளை கஷ்ட்டப்படுத்த அவன் விரும்பவில்லை.

அவனுக்குத் தெரியும், அவளுக்கு எதுவும் பழக்கம் இருக்காது என்று. “என்ன பாத்துப்ப...? இந்த ரெண்டு விரல் வைத்து என்ன வேலை செய்வ, அதைவிட முழங்கையை முழுசா மடக்கக் கூட உன்னால் முடியலை...”, கோபம் கொண்டாள்.

“இங்கே பார் ஐஷூ..., ஒவ்வொரு வேலையையும் நீ பாத்து பாத்து செய்தால் தான் உனக்கு என்மேல் பாசம்னு அர்த்தமா? என்னோடவே இருக்கணும், என் தேவை எதுவா இருந்தாலும் நிறைவேற்றணும்னு நினைக்கறியே..., இந்த நினைப்பே எனக்குப் போதும்.

“உன்னையும் என்னால் ‘சிக்’காக்க முடியாது. நான் சொல்வதை கொஞ்சம் பொறுமையா கேள். வெளியே கண்டிப்பா கார்த்திக்கும் குமாரும் இருப்பாங்க, அவங்களை

வரச்சொல்.., அவங்க பாத்துப்பாங்க...", ஒரு குழந்தைக்குச் சொல்லி புரிய வைப்பதுபோல் உரைத்தான்.

அவன் சொல்வதில் இருக்கும் உண்மையும், நியாயமும் புரிய, அவன் முகத்தை ஏறிட்டவள், "அவங்க இல்லன்னா...?", பதில் கேள்வி கேட்டாள்.

"இருப்பாங்க..., நம்ம பால்க்கனி வழியா வெளியே பார்..., நிச்சயம் இந்த தெருவில் தான் நிப்பாங்க...", உறுதியாக உரைத்தான்.

அவன் நம்பிக்கையைப் பார்த்து, வியந்தாலும், நம்பிக்கை இல்லாமல் வெளியே பார்வையைச் செலுத்த, அவர்கள் வீட்டுக்கு சற்று தள்ளி, இருவரும், பைக்கில் அமர்ந்திருந்தார்கள். வினித்தின் பைக்கையும் அவர்கள் எடுத்து வந்திருப்பது தெரிந்தது.

இன்டர்க்காமில் துரையை அழைத்தவள், கூர்க்காவிடம் சொல்லி அவர்களை உள்ளே அழைத்துவரப் பணித்தவள், முகத்தை தூக்கி வைத்திருந்தாள்.

அவள் செய்கையில் சிரித்துக் கொண்டவன், "என் செல்லத்துக்கு எதுக்கு இப்போ கோபம்..., உன் மனசு எனக்குப் புரியுதுடா. அது புரியலன்னா, நான் மனுஷனே இல்லை. அதே நேரம்..., என் ஐஷுவை கஷ்டப்படுத்தவும் என்னால் முடியாது. புரிஞ்சுக்கோ...", அவன் கெஞ்ச அரை மனதாய் சம்மதித்தாள்.

வெளியே.., கூர்க்கா அவர்களை அழைக்க..., சற்று தயங்கினாலும் அவனோடு சென்றார்கள். வராண்டாவில் தேங்கியவர்கள், உள்ளே செல்லத் தயங்க, வெளியே வந்த துரை, "வாங்க தம்பி..., பாப்பா உங்களை மேலே வரச் சொன்னாங்க..., போங்க...", அவர் உரைக்க, போகவா வேண்டாமா என்ற தடுமாற்றத்தில் வீட்டுக்குள் வந்தார்கள்.

"டேய் கார்த்திக்..., மேலே வாங்க...", வினித்தின் அழைப்பில், மாடியேறியவர்கள், "டேய் மச்சான்..., கை வலி எப்படிடா இருக்கு? நைட் ஜூரம் வந்துதா? நம்ம ரூமுக்கு வந்துடுறியாடா..., ஒரு நாலு நாள் அங்கே இருந்துட்டு

வந்துடலாம். நாங்க உன்னை பாத்துக்கறோம்டா...", நண்பனை உடன் இருந்து கவனிக்கும் அக்கறை அவனிடம்.

அவர்களது பேச்சைக் கேட்டவாறே அங்கே வந்த ஐஸ்வர்யா..., "ஏன்..., நாங்க கவனிக்க மாட்டோமா?", வெடுக்கென கேட்க,

"ஐயோ..., அப்படியில்லை மேம்..., எப்படின்னாலும் ஒரு ஆம்பளை நர்ஸ் வைப்பீங்க..., அதுக்கு...", அவள் முகம் கோபத்துக்குச் செல்ல, கப்பென வாயை மூடிக் கொண்டான்.

வினித்தை பரிதாபமாக ஒரு பார்வை பார்க்க, "டேய்..., நைட் அவதான் சாப்பாடு ஊட்டி, மெடிசின் கொடுத்து..., பெல்ட் போட்டு..., எல்லாம் கவனிச்சுகிட்டா. அதான் அம்மையார்க்கு கோபம்...", அவன் குரலில் அவ்வளவு பெருமிதம்.

"ஓ..., சாரி மேம்...", கார்த்திக் வருத்தப்பட்டான்.

"நான் என்னதான் கவனிச்சாலும்..., உங்க ப்ரண்டுக்கு நீங்கதான் கவனிக்கணுமாம்...", நொடித்துக் கொண்டவள்,

"அந்த பக்கத்து ரூம் கெஸ்ட் ரூம் தான். நீங்க ரெண்டுபேரும் ஒரு வாரம் இங்கேயே தங்கிக்கோங்க..., டே டைம் மட்டும்தான் வினித் உங்களுக்கு அலவ்ட்...", வினித்தை ஒரு முறைப்பு முறைத்துவிட்டு சென்றாள்.

கார்த்திக்கும் குமாரும் வாய் பிளந்து, இமைக்க மறந்து அவள் முதுகை வெறிக்க, "டேய்..., என்னங்கடா...?", அவர்களை கலைத்தான்.

"நம்ம மேடமா சார் இது...?", குமார் அவ்வளவு அதிர்ச்சியாக வினவ,

"இல்ல.., என் மனைவி...", வினித்தின் குரலில் இருந்த கர்வம்..., ஒரு ஆண்மகனாக, கணவனாக ஒருவன் உணர்வது.

“ம்..., சரி வா..., ப்ரெஷ் பண்ணிட்டியா...?”, கேட்டவர்கள் அவனை கவனிக்கத் துவங்க, அவனுக்கான உணவோடு சேர்த்து, அவர்களுக்கான உணவும் அறைக்கே வந்தது. அனைவரும் சேர்ந்தே உண்ண..., “டேய்..., ஐஷூ சாப்டாளான்னு கேட்டு வரேன்...”, உரைத்தவன், முகம் வாட திரும்பி வந்தான்.

“என்னடா...?”, கார்த்திக் கவலையாக, “செல்லக் கோபம் தான். விடு சரியாயிடும்...”, உரைத்தவன் அவர்களோடு ஐக்கியமானான்.

குமார் சற்று நேரத்தில் அலுவலகம் கிளம்பியவன், “கார்த்திக் சார்..., நான் ஆபீஸ் போயிட்டு வரேன். நான் வந்த பிறகு நீங்க போகலாம். மொத்தமா எல்லாரும் இல்லன்னா அவனுங்க ஓபி அடிப்பாங்க...”, கிளம்பிவிட்டான்.

அவன் சொல்வதில் இருக்கும் நியாயம் புரிய, ஐஸ்வர்யாவை சென்று பார்த்தவன், அந்த காண்டிராக்ட் சைன் ஆகவேண்டும் என அவளை கட்டாயப்படுத்தி அலுவலகம் அனுப்பினான். ஸ்ரீராம் இன்று அவளோடு செல்ல, குமார் அவர்கள் காவலுக்குச் சென்றான்.

அத்தோடு..., தனது குப்பத்து நண்பர்களையும் அழைத்திருக்க, ஸ்ரீராமும், ஐஸ்வர்யாவும் அவன் அக்கறையை கவனித்தாலும் எதுவும் மறுக்கவில்லை.

அன்று முழுவதும் கார்த்திக் அவனோடு இருந்தவன், உணவு ஊட்டி, அவனை உறங்க வைத்து, என கவனித்துக் கொண்டான். அதே நேரம், மருத்துவர் வந்து ஊசி போட்டுச் செல்ல..., எப்படியும் ஏழு நாள் கழித்துதான் கட்டு பிரிக்க வேண்டும் என்பதால்..., அவ்வளவு நாள் தாங்கள் இங்கே வர வேண்டும் என எண்ணிக் கொண்டான்.

துரை அவர்களுக்குத் தேவையான அனைத்தையும் பார்த்து பார்த்து செய்தார். அவளுக்காக கூட தன்னிடம் பேசியிராத ஐஸ்வர்யா..., தன்னைப் பார்த்து..., “அவங்களுக்கு என்ன வேணுமோ பாத்து செய்ங்க...”, என்று சொன்னால்..., அவரால் அதை மறுக்க முடியுமா என்ன?

இரவு நெருங்கவே..., ஐஸ்வர்யா வந்துவிட, வினித்தை அவன் அறையில் விட்டவன், வெளியே நிற்க, “ஐஷூ..., கார்த்திக் உன்கிட்டே என்னவோ சொல்லணுமாம்? என்னன்னு கேள்...”, படுக்கையில் சென்று அமர்ந்து கொண்டான்.

“ம்ம்..?’, ஒரு மாதிரி கேள்வியாக இழுத்தவள் வெளியே வர, “மேம்..., அது என்னன்னா..., நாங்க இப்போ போயிட்டு காலையில் வரோம்...”, அவன் தயங்கி இழுக்க, “ஏன்..., இங்கே எதுவும் வசதி பத்தலையா?..”, அவள் கேள்விக்கு அவன் விழித்தான்.

“அப்படியெல்லாம் எதுவும் இல்லை மேம்...”, வேகமாக மறுத்தான்.

“பிறகு என்ன...? போ...”, விஷயம் முடிந்தது என போய்விட்டாள்.

அதன் பிறகு வேறு வழியின்றி, அவளிடம் மறுத்து பேச முடியாமல் திரும்பிச் சென்றுவிட்டான். அடுத்து வந்த நாட்களிலும் அவர்கள் இங்கே தங்கிக் கொள்ள, மாலையில் நண்பர்கள் மூவரின் அரட்டையும், கொண்டாட்டமும் காணும் ஐஸ்வர்யாவுக்கு, அவ்வளவு நாள் மயான அமைதியாக இருந்த வீட்டில் சட்டென ஒரு கலகலப்பு தொற்றிக் கொண்டதாகத் தோன்றியது.

அதே நேரம்..., தங்கள் வீட்டில் குழந்தைகள் இருந்தால் இப்படித்தான் இருக்குமா? என்ற எண்ணம் எழ, தேகம் முழுவதும் சிலிர்ப்பு. குழந்தை என்ற வார்த்தையை கூட பரவசமாக தனக்குள் சொல்லிப் பார்த்துக் கொண்டாள்.

அன்றைய இரவில்.., அவனோடு ஆசையாக ஒட்டிகொண்டவளுக்கு, தன் மனதின் ஆசையை அவனிடம் தெரிவிக்க முடியவில்லை. நாளை காலையில் அவன் கையில் இருக்கும் தையல்களை பிரிக்கவேண்டும் என உரைத்திருக்க..., அந்த டென்ஷனும் சேர்ந்துகொள்ள அவனை இறுக அணைத்தவாறு படுத்துக் கொண்டாள்.

மறுநாள் காலையிலும் அவளை அலுவலகத்துக்கு கட்டாயமாக அனுப்பிவிட்டு, நண்பனை அழைத்துக்கொண்டு மருத்துவமனைக்குச் சென்றான். அவன் கையைப் பார்த்த கார்த்திகிற்கே தாங்க முடியாமல் இருக்க, நிச்சயம் இதை ஐஸ்வர்யா தாங்கிக்கொள்ள மாட்டாள் என்றே தோன்றியது.

மாலையில் வீட்டுக்கு வந்தவள்.., அவன் கையின் நிலையைப் பார்த்து ஒரு பக்கம் விம்மினாள் என்றால்..., தன்னை அழைக்காமல் சென்றுவிட்டானே என கோபமும் கொண்டாள்.

அடுத்த ஒரு வாரத்தில் அவன் காயம் அனைத்தும் ஆறியிருக்க, அதன் வடுக்கள் அப்படியே இருந்தது. அவன் கையை தன் கையால் வருடியவள், “உன்னை கரடின்னு சொல்வேன்..., இப்போ...”, சற்று வருத்தமாக உரைக்க..., அவள் முகத்தை தன் அருகே இழுத்தவன்,

“கையில் இருந்த முடி தானே போச்சு..., விடு...”, உரைத்தவன், அவளை தன் நெஞ்சோடு அணைக்க..., அவன் மேல் தன் முகத்தை அழுத்தமாக உரசியவள், “உண்மைதான்...”, கிசுகிசுப்பாக உரைக்க, வாய்விட்டே சிரித்தான்.

“போடா...”, சிணுங்கியவள் அவனை விட்டு விலக முயல, அவளால் அது முடியாமல் போனது. அவர்களது பிரிவை ஈடுகட்டும் முயற்சியில் அவன் இறங்க, தானும் அவனோடு இணைந்து கொண்டாள்.

அடுத்து வந்த நாட்கள் அழகாய் நகர, அன்று சற்று பரபரப்பாக அவள் அறைக்குள் நுழைந்தான். “என்ன...?”, அவள் கேள்வியாக ஏறிட,

“ஐஷூ..., இன்னைக்கே நாம கேரளா கிளம்பறோம். நாளைக்கு காலையில் ஒரு இம்பார்ட்டன் மீட்டிங் இருக்கு...”, அவன் உரைக்கவே, கோபமாக அவனை முறைத்தாள்.

“என்ன விளையாடுறியா...? அங்கே நாளையில் இருந்து பத்துநாள் பெரிய மீட் இருக்கு. இப்போ டிக்கட், ஹோட்டல்

எங்கேயும் எதுவும் முடியாது...", கடுப்பானாள்.

"ம்ச்..., எனக்கு அது தெரியாதா...? நாம போறோம்..., அவ்வளவுதான்...", உரைத்தவன், கார்த்திக்கை அழைத்து பொறுப்பை இரண்டு மூன்றுநாள் அவனை கவனிக்க சொல்லிவிட்டு, அப்பொழுதே வீட்டுக்குச் சென்றார்கள்.

அவர்கள் பின்னால் வந்த ஸ்ரீராம்..., "வினித்...., அவளுக்கு டிரெய்ன் ட்ராவல் ஒத்துக்காது. ஏற்கனவே அவளுக்கு டாய்லெட் அலர்ஜி அதிகம்னு, லாங் டூர், வெளிநாட்டு பயணம்..., எல்லாத்தையுமே தவிர்த்துடுவா...", சங்கடமாக உரைத்தார்.

"எல்லாம் நான் பாத்துக்கறேன் மாமா...", உரைத்தவன், மாலை ஐந்து மணி டிரெயினை பிடிக்க போகவேண்டும் என்பதால்..., பரபரப்பாக செயல்பட்டான்.

கார் ரயில்வே ஸ்டேஷன் செல்ல..., உண்மையாகவே கடும் கோபம் கொண்டாள். "ப்ளீஸ் ஐஷூ...", கிரி அறியாதவாறு அவளிடம் கெஞ்ச, வேறு வழியின்றி அமைதியானாள்.

முதல் வகுப்பு பெட்டியில் ஏறியவன்..., "இங்கே நமக்கு எந்த தொல்லையும் இருக்காது..., ஒரு நைட் மட்டும் தான்..., காலையில் ஹோட்டல் போய்டலாம்...", அவள் மனநிலை புரிய..., கெஞ்சலாகவே அவளை கரைத்தான்.

ஏனென்றால் போகும் மீட்டிங் அவ்வளவு முக்கியமானது. கடைசி நிமிடமே அவர்கள் அரைமணி நேரம் ஒதுக்கி இருக்க..., இந்த அவசர பயணம். விமான டிக்கெட் எதுவும் இல்லாமல் போகவே, வேறு வழியின்றியே இதை தெரிந்தெடுத்தான்.

அவர்களுக்கு காரை எடுத்துகொண்டு பயணித்திருப்பதோ...., வேறு வழியையோ அவனால் சுலபமாக கையாண்டிருக்க முடியும். ஆனால்..., இந்த ரயில் பயணத்தின் சுகத்தை, இனிமையை அவளும் அனுபவிக்க வேண்டும் என எண்ணினான்.

ஒரு மாற்று பயணம்..., அவள் உணர்ந்தே இராத இதம்..., அவளுக்கு அளிக்க அவன் விரும்பினான்.

கேரளாவுக்கு தாங்கள் எதற்காக செல்கிறோம் என்பதை கேள்விப்பட்ட பிறகு, கொண்டாட்டம் அடைவாள் என்பதில் அவனுக்கு எந்தவிதமான சந்தேகமும் இல்லை. அவளோ, அரை மனதாக அமர்ந்திருக்க, அவள் அமர்வதற்கு கூட, தங்கள் வீட்டு போர்வையை சீட்டில் விரித்து அவளை அமர வைத்த அவன் செய்கை..., அவள் கோபத்தை சற்று இறக்கியது.

அவளை நெருங்கி அமர்ந்தவன்..., "நம்ம வாழ்நாளிலேயே இப்படி ஒரு பயணமும்..., இந்த சூழலும் நமக்கு கிடைக்கவே செய்யாது. ஜஸ்ட் என்ஜாய் டா...", அவள் விரல்கள் ஒவ்வொன்றாக முத்தமிட்டான்.

நாலுபேர் அமரும் கூபேயில் அவர்கள் இருவர் மட்டுமே இருந்தனர்.

அவன் செய்கையில் அவள் தேகம் குழைய, அதை அடக்கியவாறு அமர்ந்திருந்தாள். அவனோ..., அவள் முழங்கை, தோள் வளைவு, காது மடல், கன்னம்.., என பயணித்தவன்..., அவள் இதழ்களில் புதைய, அவன் கரம் அவள் மேனியில் சுகமாய் பயணித்தது.

அவள் இதழில் அழுத்தமாக முத்தமிட்டவன்..., சட்டென அவள் கழுத்தடியில் புதைந்து போக..., அவன் பின்னத்தலையில் கை கோர்த்து தன்னோடு இறுக்கியவள்..., "டேய்.., பொறுக்கி..., எங்கே என்ன வேலை பாக்குற...?", அவள் வார்த்தைகளில் இருந்த கோபம், அவள் குரலுக்கு இருக்கவில்லை.

ரயிலின் சுகமான தாலாட்டும்..., அவன் நெருக்கமும்..., அவனுக்குள் அமிழ்ந்து கொண்டிருந்தாள். அவனோ, அவளை சரித்து முன்னேற..., "ம்ஹும்..., வேணாம்...", பலகீனமாக மறுத்தாள்.

அவனோ..., அந்த இனிமையில்..., அவள்மேல் எறும்பாய் பயணித்தான். அவன் இதழ்களின் வேகம் தாறுமாறாக

இருக்க..., அவளை ஆண்டுவிடும் தகிப்பை அடக்க முடியாமல் திணறினான்.

அவளுக்கு பிடிக்காதோ என்ற பயம் ஒரு பக்கம் முளைவிட..., “ஐஷூ..., ஓகேயா...?”, அவளிடம் அனுமதி வேண்ட..., “பொறுக்கி..., எப்போ என்ன கேக்கற...”, வேலையைப் பாருடா..., என்னும் தொனி அதில் இருக்க, அவள் மேல் மேலும் முன்னேறினான்.

அவளது அந்த அழைப்பு எப்பொழுதும்போல் அவனை வேகம் கொள்ளச் செய்ய, தன் வார்த்தைகள் அவனை சீன்டிவிட்டதை உணர்ந்தவளுக்கு, பயத்துக்கு பதிலாக, சந்தோஷமே அதிகம் இருந்தது.

தன்னை முரட்டுத்தனமாய் அணுகியவனை..., அவனுக்கு குறையாத விதத்தில் எதிர்கொள்ள..., நிச்சயம் அந்த பயணம் தன் வாழ்நாளிலேயே மறக்க முடியாததாகிப் போகும் என்பதை உணர்ந்து கொண்டாள்.

“டேய்.., மெதுவா...?”, ஒரு கட்டத்தில் அவனை தேக்க முயல, அவனோ, முரட்டுத்தனமாய் அவள் இதழ்களை கவ்விக் கொண்டான்.

இதற்குமேல் தன் எந்த மறுப்பும் அவனை தேக்காது என்பது புரிய, அவன் போக்கில் விட்டுவிட்டாள். முழு மூச்சில் அவளோடு கலந்தவனோ, தன் வழக்கமான இறுதி முத்திரையோடு அவளை விட்டு விலகி, அவளை முழுதாக தன்மேல் போட்டுகொண்டு கண் மூடினான்.

இந்த ரயில் சத்தத்தில் தன்னால் ஒரு பொட்டு கூட உறங்க முடியாது என எண்ணியிருந்தவளோ, விடிந்த பிறகு, அவன் இறங்கவேண்டும் என சொல்லி எழுப்புகையில், நம்ப முடியாமல் விழி விரித்தாள்.

***

# பகுதி - 34.

சேரளாவில் கால் வைத்தவர்களை..., அந்த மாநிலத்துக்கே உரிய குளுமை தொற்றிக்கொள்ள, அவர்களுக்காக காத்திருந்த காரில் ஏறி இருவரும் பயணித்தார்கள்.

அவன் புக் செய்த ஹோட்டலுக்கு அவளை அழைத்துச் சென்றவன், காரில் பயணிக்கும் பொழுதே..., “ஐஷூ..., இங்கே பெரிய மீட் என்பதால், எல்லா ஹோட்டலும் புல். ரொம்ப கஷ்டப்பட்டு, இந்த ஹோட்டலில் சிங்கிள் ரூம் தான் கிடைத்தது உனக்கு ஓகே தானே...”, கொஞ்சம் தயக்கத்தோடுதான் கேட்டான்.

அவன் கேள்வியில், அவள் முகத்தில் கோபம் படர, “ம்ச்...”, அவனை கடிந்தவள், முகத்தை திருப்பி வெளியே பார்வையை படர விட்டாள்.

அடுத்த பத்தே நிமிடங்களில் அறைக்குள் நுழைய..., கதவை தாழிட்டவன் திரும்ப, அவன் சட்டையை கொத்தாக பற்றிக் கொண்டாள். “டேய்..., என்ன விளையாடுறியா...? நீ சொன்னன்னு..., உனக்காகத்தான் அந்த பெட்டியிலேயே உன்னோட வந்தேன்.

“அப்படியிருக்கும்போது..., இவ்வளவு பெரிய ரூமில் இருக்க மாட்டனா? நீ என்னோட இருக்குறதா இருந்தால்..., நரகத்துக்கே கூட நான் வருவேன்...”, அவள் உரைக்க.., அவள் இடையில் கை கோர்த்து தன்னோடு இறுக்கியவன், “ஐ லவ் யூ ஐஷூ...”, நெகிழ்ந்து போனான்.

இதைவிட காதலை ஒருத்தியால் எப்படி உணர்த்த முடியும்? வார்த்தையால் சொன்னால் தானா? ஒரு செய்கை, பார்வை போதாதா? காதலின் மறு பரிணாமத்தை அவன் உணர்ந்த தருணம்...

சட்டென தன்னை மீட்டவன்..., “சரி..., இப்போ மணி ஆறரை, சீக்கிரம் குளியல் போட்டுட்டு, சீக்கிரம் தூங்கு. சரியா பன்னிரண்டு மணிக்கு நமக்கு மீட்டிங் இருக்கு. உனக்குத்

தேவையான எல்லா பிரசண்டேஷனும் நான் ரெடி பண்றேன். உனக்கு ப்ரிப்பேர் பண்ண அரைமணி நேரம் போதும்தானே...", அவளை விலக்கினான்.

"எனக்குத் தெரிந்து நீயே பேசியிருப்பியே..., இது ஃபைனல் தானே..., பிறகு..., நீயே பேசலாமே...", அவள் தயங்க,

"ம்ச்..., ஒரு எம்டி செய்ய வேண்டியதை, அவங்க செய்தால் தான் சரியா இருக்கும். சோ...", அவளை அனுப்பியவன், தன் மடிக்கணினியை எடுத்து வைத்துக் கொண்டான்.

அடுத்த இரண்டு மணி நேரங்கள் அவள் உறங்கி எழ, அவன் தன் வேலையைச் செய்தான்.

எட்டரை மணிக்கு அவள் கண் விழிக்க, கேரளா ஸ்பெஷல் சாப்பாடு, ஆப்பம், கடலைக்கறி வாங்கியவன், அவளையும் அதையே உண்ணச் சொன்னான்.

அவளுக்கும் ஒரு மாறுதல் அவசியமாக இருந்த காரணத்தால்..., அதை ஆசையாகவே உண்டாள். ஹோட்டல் அறையின் ஜன்னல் வழியாக வெளியே பார்த்தவள், "பக்கத்தில் பீச் இருக்கா...?", ஆர்வமாக வினவினாள்.

"ம்.., நிறைய சீனரி எல்லாம் பாக்கலாம்...", அவன் கண்ணடித்து உரைக்க, அவனை வன்மையாக முறைத்தாள்.

"அட..., உண்மையைச் சொன்னால் இப்படியா முறைப்பாங்க...?", கேட்டவன், இன்னைக்கு நைட் நமக்கு பீச் ரிசாட்டில் டின்னர் ஏற்பாடு செய்திருக்கிறேன். இங்கே புல்லா என்ஜாய் பண்ணிட்டுதான் நாம போறோம் ஓகே...", அவன் கேட்க, உற்சாகமாகவே தலை அசைத்தாள்.

கணக்கிலடங்கா பணம் இருந்தாலும்..., ஐஸ்வர்யாவின் உலகம் மிகச் சிறியது. அதிலும் அவளுக்கு நிறைய விஷயங்கள் ஒத்துகொள்ளாது என்பதால், அவளை வீட்டை விட்டு எங்கும் அவளை அனுப்பியது கிடையாது.

எனவே..., இந்த பயணத்தை மிகவும் விரும்பினாள். அடுத்த சில நேரங்கள், அவனது அறிக்கையில் கவனம்

செலுத்தியவள், அது எதைப் பற்றியது என்பதை உணர்ந்து, கண்கள் ஆச்சரியத்தில் விரிந்தது.

“வினு…, இந்த கம்பெனியா…? டையப் வைக்க ஒத்துட்டாங்களா?”, நம்ப முடியாமல் கேட்டாள்.

‘இல்லையென்றால் உன்னை அழைத்து வருவேனா…?’, என்பதுபோல் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

“அன் பிலீவபிள்…, ஏய்…, ஃபைனல் அக்ரிமென்ட்க்கு தான் வந்திருக்கிறோமா? அப்போ…, இங்கே சைன் பண்ணுவது மட்டும்தான் என் வேலை இல்ல…”, அவன் மடிக்கணினியை அங்கிருந்த கூடை மேஜை மேல் வைத்தவள், அவனிடம் பாய்ந்தாள்.

“சர்ப்ரைஸ்…, நான் நம்ம கம்பெனிக்கு வந்தது முதல் ட்ரை பண்ணிட்டு இருந்தேன். இப்போதான் முடிச்சிருக்கேன். இது ரொம்ப லேட்…”, அவளை எதிர்கொண்டவன் உரைக்க, அவள் புருவங்கள் முடிச்சிட்டது.

‘இதெப்படி சாத்தியம்…?’, அவள் மனதில் கேள்வி முளைவிட, அதைக் கேட்கும் முன்னர்…, “ஐஷு…, இப்போ பேச டைம் இல்லை. நான் குளிக்கப் போகணும். லஞ்ச் அக்ரிமென்ட் முடிச்சுட்டு வந்து பாத்துக்கலாம் தானே…”, அவன் அவசரமாக விலக, அவள் கேட்க வந்ததே அவளுக்கு மறந்து போனது.

அவன் குளித்து வெளியே வர, “வினு…, எங்கே மீட்டிங்…?”, அவள் கேட்க, “ஹிந்துஸ்தான் பீச் ரிசார்ட்ல தான் அவங்க தங்கி இருக்காங்க. அங்கே இருக்கும் மீட்டிங் ஹாலில் தான் மீட் பண்ணப் போறோம். நம்மளை பாத்துட்டு, அவங்க, வந்த வேலையை பாக்கப் போய்டுவாங்க, நாம நம்ம வேலையைப் பாக்கலாம்…”, அவன் உரைக்க, அவன் உரைத்த தொனியில், அவளுக்கு உலகமே மறந்து போனது.

சரியாக பதினொன்று ஐம்பதுக்கு அவர்கள் அந்த ஹோட்டலுக்குள் நுழைந்து, மீட்டிங் ஹால் எங்கே என கேட்டு செல்ல, அந்த அகலமான காரிடார், அதில் இருந்த,

ஆளுயர அழகுச் செடிகள்.., ஓவியங்கள்..., என பார்வையை பதித்தவாறே சென்றாள்.

பிஸினசை பொறுத்தவரை அவளுக்கு பெரிதாக எந்த டென்ஷனும் எப்பொழுதும் இருந்ததில்லை. இப்பொழுதும் சாதாரணமாகவே அமர்ந்திருந்தாள்.

சரியாக பன்னிரண்டு மணிக்கு, அறை வாயிலை திறந்துகொண்டு, இரண்டு வெள்ளைக்காரர்களும், இரண்டு பெண்மணிகளும் உள்ளே நுழைந்தார்கள்.

அனைவரிடமும் கை குலுக்கியவன்..., “மீட் மிசஸ் ஐஸ்வர்யாவினித் சக்சேனா...”, அவன் அறிமுகப்படுத்த, அந்த வார்த்தைகள் ஒருவித சிலிர்ப்பையும், அதே நேரம்.., ஒரு வித்தியாசத்தையும் ஐஸ்வர்யாவுக்கு கொடுத்தது.

அதை ஆராய நேரமின்றி, ஆண்களில் ஒருவன் முதலில் கை நீட்டி, “ஹாய்..., ஐ’ம் டேனி...”, அறிமுகப்படுத்திவிட்டு, அவர்கள் நாட்டு வழக்கப்படி, ஐஸ்வர்யாவை மென்மையாக அணைக்க முயல, ஐஸ்வர்யாவோ, கொஞ்சம் கூட பதறாமல், அதே நேரம்..., தன் இடத்தில் அழுத்தமாக நின்றவள்..., எனக்கு இதில் விருப்பமில்லை என சொல்லாமல் சொல்ல, அவனோ..., நாசூக்காய் விலகிக் கொண்டான்.

மற்றவன் அவள் செய்கையைப் பார்த்து, கை குலுக்கலோடு நிறுத்திக் கொள்ள, பெண்களிடம்..., அவர்கள் செய்கையை ஏற்றுக் கொண்டாள். அவள் செய்கையைப் பார்த்த வினித்துக்கு..., பரபரவென தேகம் முழுவதும் ஏதோ ஒன்று பரவும் உணர்வு.

வானத்தில் பறக்கும் உணர்வு..., ‘இவள் என் மனைவி...’, கூவ வேண்டும் என்ற வேகம்..., முயன்று தன்னை அடக்கிக் கொண்டான்.

“இஸ் இட் ஓகே ஃபார் யூ...?”, அவள் கேட்க, அனைவரின் சம்மதத்தோடு ஒப்பந்தம் கையெழுத்தானது. அடுத்த பத்தே நிமிடங்களில் அனைத்தும் முடிய, “ஷெல் வீ கோ பாஃர்

லஞ்ச்...”, டேனி கேட்க, மறுக்க முடியாமல், சம்மதமாய் தலை அசைத்தாள்.

“தென் லெட்ஸ் மூவ்..”, அவர்கள் பேசியவாறு முன்னால் செல்ல, சற்று பின் தங்கினார்கள் இவர்கள்.

காரிடாரில் அவர்கள் நடக்க, சட்டென ஒரு அலங்காரச் செடிக்கு பின்னால், சுவற்றோடு அவளைச் சாய்த்தவன், அவள்மேல் சாய்ந்து, அவள் கன்னத்தோடு கன்னம் இழைத்தான்.

அவன் தாடை ரோமம் அழுத்தமாக உரசி அவளை இம்சிக்க, அதே நேரம் முன்னால் செல்பவர்கள் தங்களைத் திரும்பிப் பார்த்தால் என்னவாகும் எனப் பதறினாள்.

“டேய்..., என்ன பண்ற...?”, சின்னக் குரலில் கடிய,

“ஐஷூ..., கிஸ் மீ...”, அவன் கோரிக்கையில், திகைத்துப் போனாள்.

“இங்கே...?”, அவள் பார்வையை காரிடாரின் இரு பக்கமும் செலுத்த, “ப்ளீஸ்...”, அவன் கெஞ்சலில், அவன் தாடையைப் பற்றி திருப்பியவள், அவசரமாக அவன் இரு கன்னத்திலும் இதழ் பதித்து விலக முயன்றாள்.

அவனோ..., அவளை விலகாமல் செய்தவன்.., அழுத்தமாக அவள் இதழை கவ்விக் கொண்டான். அவனது இந்த செய்கையை எதிர்பாராதவள்..., ஒரே தள்ளில் அவனை விலக்க, ஒரு சிறு ஓசையோடு அவள் இதழை விட்டுப் பிரிந்தான்.

அவள் முறைக்க முயல, அவனோ..., உல்லாசமாக அவளைப் பார்த்து சிரிக்க, “டேய்..., எங்கே வச்சு என்ன வேலை பாக்கற...? ரூமுக்கு வாடா..., நீயா நானான்னு பாத்துடலாம்...”, முறைப்பாய் பதில் கொடுத்து, வேகமாக நடக்க, “நான் ரெடி..., இப்போவே போகலாமா..?”, அவன் கேள்வியில், இவனுக்கு என்ன ஆனது என்பதுபோல் பார்த்தாள்.

பொதுவாக அவன் இப்படி நடந்துகொள்பவன் கிடையாது. அதிலும் பொதுவிடம் என்றால்..., மிகவும் கண்ணியமாக நடந்து கொள்பவன், அலுவலகத்தில் கூட அவளை மனைவியாக ஒரு பார்வை பார்க்க மாட்டான்.

அப்படிபட்டவன்..., பிசினஸ் பேச வந்த இடத்தில், அதுவும் காரிடாரில் அவன் நடந்துகொண்ட விதம்..., அவளை திகைக்க வைத்தது. ஆனால்..., அதையும் துருவ வழியின்றி, அவர்களோடு இணைய வேண்டி இருந்ததால், அவர்கள் பின்னால் ஓடினாள்.

உணவு உண்ணும் வேளையும் சரி..., அதன் பிறகு அருகில் இருந்த ஒரு மாலுக்குள் புகுந்து, எதை எதையோ வாங்கும்பொழுதும் சரி, அவன் பார்வை அவளையே வட்டமிட்டது. நிச்சயம் அதில் ஒரு கணவனுக்கான தேடல் இருக்கவில்லை. மாறாக..., வேறு எதுவோ..., அவளால் இனம் காண முடியவில்லை.

கைகளை அவளோடு கோர்த்தவன், அதை விலக்கிக் கொள்ளும் எண்ணமே இல்லாமல் இருந்தான். மாலை மங்க, ஹோட்டலுக்குச் சென்று உடை மாற்றியவர்கள், பீச் ரிசார்ட் சென்றார்கள்.

அங்கே வெளிநாட்டுப் பெண்கள், அவர்கள் கலாச்சாரத்தில் இருக்க, அவனோ..., எதிலும் கவனம் பதிக்கவில்லை. அவளையே மொய்க்கும் பார்வை பார்க்க, “டேய்..., இந்த உலகத்திலேயே நான் மட்டும்தான் இருக்கேன்ற மாதிரி பாக்குற...? சுத்திப் பாருடா.

“நீ சொன்ன மாதிரி நிறைய சீனரி எல்லாம் இருக்கு...”, அவனை கலைக்க முயன்றாள்.

“எனக்குக் சொந்தமானது எதிரிலேயே இருக்கும்பொழுது, நான் ஏன் தேவையில்லாததை பாக்கணும்...”, அவன் கேள்வியில், அவனுக்கு எதிரில் அமர்ந்திருந்தவள், அவன் அருகில் இருந்த இருக்கையில் அமர்ந்து கொண்டு, அவன் இடக்கரத்தை கோர்த்துக் கொண்டாள்.

அவன் தோளில் சாய்ந்தவள், சற்று நேரம் அமைதியாக இருந்துவிட்டு, "வினு, கேக்கணும்னு நினைத்தேன்..., இந்த கம்பெனியை எப்படி உனக்குத் தெரியும்? இவங்களை நான் ஒரு முறை காண்டெக்ட் பண்ண நினைச்சப்போ, முடியவே முடியாதுன்னு மறுத்துட்டாங்க...", அவள், அவன் கண்களை ஏறிட,

"ஹனிமூன் வந்துட்டு, பிஸினஸ் பத்தி பேசுறியே..., வேற ரொமாண்டிக்காவே பேசத் தெரியாதா...?", அவளை திசை திருப்பினான்.

அதுவும் அவளுக்கு நன்றாகவே புரிந்தது. 'எதையோ மறைக்கிறான்...?' முதல் முறையாக மனதுக்குள் சிறு நெருடல், ஆனாலும், அதை அவள் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

இரவு உணவை முடித்தவர்கள், "கடல்ல கொஞ்சம் கால் நனைக்கலாமா? உனக்கு ஓகேயா....?", அவன் கேட்க, "உப்புத்தண்ணி கொஞ்சம் அலர்ஜி ஆகும், ஆனாலும் பரவாயில்லை..., உங்களுக்காக...", அவள் உரைக்க,

"அப்போ வேண்டாம்..., ஜஸ்ட் ஓரமா நின்னு பாத்துட்டு போகலாம்...", இரவின் நிலவு சற்று கடக்கும்வரை, அலையை பார்த்தவாறே இருந்தான்.

அன்று ஒரு நாள் இதேபோல் ஒரு கடலில் என் வாழ்க்கையை முடித்துகொள்ளப் பார்த்தேன். ஆனால் இன்று..., எண்ணியவன்..., அவளை இடையோடு அணைக்க, அவன் கண்கள் கடலை வெறித்த விதத்திலேயே, அவன் மனம் இங்கே இல்லை என்பதை புரிந்துகொண்டாள்.

இத்தனை நாட்களில், ஒரு நாள் கூட, தன் தந்தை சொன்ன விஷயத்தை அவனிடம் கேட்க அவள் விரும்பியது கிடையாது. இன்று கேட்டால் என்னவென்று தோன்ற..., "வினு...", மென்மையாக அழைத்தவள், "நீங்க தற்கொலைக்கு முயற்சி பண்ணதா டேட் சொன்னாங்க. எதுக்குன்னு...", அவள் கேட்க, அவன் முகத்தில் நீண்ட

வாரங்களுக்குப் பிறகு அதே வேதனையின் சாயல் படிந்தது.

அதைப் பார்த்தவள்.., பேச்சை அப்படியே நிறுத்திவிட்டாள். அவனோ, “கண்டிப்பா ஒரு நாள் சொல்றேன். ஆனா..., இங்கே வேண்டாம்..., சென்னையில் போய்...”, உரைத்தவன், அவளை நெஞ்சோடு தழுவியவன், “இங்கே ஹனிமூன் வந்திருக்கோம்னு சொன்னதை மறந்துட்டியா....”, அவன் அணைப்பில் அவள் எலும்புகள் நெரிய, அவள் அவனோடு ஒட்டிக் கொண்டாள்.

அறைக்கு வந்தவன்..., வந்த வேகத்தில் அவளோடு யுத்தம் துவங்க, முதலிரவைக் கொண்டாடும் மணாளனைபோல் அவன் மாற, அந்த இரவும் அவளுக்கு விடியா இரவானது.

காலையில் அவள் தாமதமாக எழ, அவள் அசைவை உணர்ந்தவன், தன் கையில் இருந்த பேப்பரை தூக்கிப் போட்டுவிட்டு, “குட் மார்னிங் ஐஷூ..., சைட் சீயிங் போகலாமா? இல்ல இங்கேயே ரெஸ்ட் எடுக்கணுமா?”, குறும்பாக அவன் கேட்க, அவனை முறைக்க முயன்று தோற்றாள்.

“செய்யிறதெல்லாம் செஞ்சுட்டு..., கேள்வியைப்பார்...”, தலையணையை அவன்மேல் வீச,

“அட..., கஷ்டப்பட்டு வேலை பாக்குறது நான்..., உனக்கு டயடா...? உனக்கே நியாயமா இருக்கா...?”, அவன் குறும்பு பேச,

“ஐய.., பேச்சைப் பார்..., போடா...”, முகத்தை திருப்பிக் கொள்ள, அவள் அருகில் நெருங்கியவன், “என் ஐஷூவோட வெட்கம் இப்படித்தான் இருக்குமா? உன்னோட எல்லா முகத்தையும் பார்த்திருக்கிறேன். இந்த முகம்..., ரொம்ப புதுசா இருக்கு...”, அவள் கன்னத்தில் தன் மூக்கால் உரசினான்.

“ஆமா..., இப்படித்தான் ஸ்டாட் பண்ண வேண்டியது..., பிறகு என்னை குறை சொல்றது...”, அவள் குரல் குழைய உரைக்க,

“இந்த வயசில் கொஞ்சாமல்..., வேற எப்போ கொஞ்சுறதாம்? நமக்கு பசங்க வந்த பிறகா...”, அவளை இன்னும் நெருங்க,

“அப்போ இன்னைக்கு சைட் சீயிங் கிடையாது...”, அவன் செய்கையைப் பார்த்து, கேலி செய்தாள்.

அதைக் கண்டுகொள்ளாமல்..., “ஐஷூ..., எனக்கு உன்னை மாதிரி ஒரு பெண் குழந்தை வேணும். பெத்துத் தரியா...?”, அவள் கழுத்தில் முகம் புதைத்தான்.

அவள் தேகத்தில் மெல்லிய நடுக்கம். ‘அப்படின்னா.., என்மேல் இவனுக்கு நம்பிக்கை வந்துவிட்டதா....? நான் அவன் குழந்தையை பார்த்துக் கொள்வேன் என எண்ணுகிறானா? நிஜமாகத்தானா...?’, சிலிர்த்த அதே நேரம், கண்கள் அங்கே மாட்டியிருந்த கேலண்டரில் பதிய, ஒரு வாரம் நாள் தள்ளியிருப்பதை உணர்ந்து கொண்டாள்.

சட்டென அவள் உணர்வுப் பெருக்கில் படுக்கையில் இருந்து எழுந்துவிட, அவள் விலகியதில் திகைத்தவன், தன் பேச்சைக் கேட்டுதான் விலகி விட்டாளோ என கவலை கொண்டான்.

“ஏன் ஐஷூ.., நீ கேட்டப்போ நான் மறுத்தேன்னு..., கோபமா...? அதான்...”, அவன் எதையோ சொல்ல முயல...,

“லூசு மாதிரி உலறாதடா..., உனக்கு ஒண்ணு இல்லை..., பத்து குழந்தை பெத்து தரேன்..., போதுமா...”, கேட்டவள், அவன் இதழில் முத்தமிட்டு, “இப்போ சொல்லு..., ‘பெட்’டா..., அவுட்டா..?”, அவள் கேட்க, முதல்ல பெட்.., பிறகு அவுட்...

அவன் அவளோடு இணைய..., தன் மனதில் இருந்த சந்தேகத்தோடு அவனோடு கூடுவது சிறு பயத்தை கொடுத்தாலும், அவன் குழந்தை தானே என மனதை தேற்றிக் கொண்டாள். அத்தோடு..., தன் சந்தேகத்தைச் சொல்லி அவனை தூண்டி விட்டுவிட்டு, அப்படி இல்லையென்றால், அவனுக்கு அந்த ஏமாற்றத்தை அளிக்க அவள் விரும்பவில்லை.

ஒரு வழியாக அவர்கள் காலை உணவை முடிக்க வரும்பொழுது நேரம் பதினொன்று. உற்சாகமாக உண்டவர்கள்..., கிளம்ப முயல்கையில், “வினு..., எப்போ ட்ரெயின்...”, அவள் கேட்க,

“இப்போ ப்ளைட் தான். சோ நோ வொரி...”, சந்தோஷமாக உரைத்தான்.

“ஓகே...”, உரைத்தவள்..., மேலும் எதையோ பேசிக் கொண்டிருக்க, தன்னை யாரோ உற்று பார்க்கும் உணர்வில், பார்வையை அவளிடமிருந்து திருப்பி, மெதுவாக சுழற்றினான்.

அவன் சந்தேகப்பட்டது போலவே.., கைகளை மார்புக்கு குறுக்காக கட்டிக்கொண்டு, அவனையே ஆழமாக பார்த்துக் கொண்டிருந்தான் அவன். அவனைப் பார்த்தவுடன், வினித்தின் முகத்தில் இருந்த உற்சாகம் துணிகொண்டு துடைத்தாற்போல் மறைய,

“ஐஷூ..., வா போகலாம்...”, அவளை இழுத்துக்கொண்டு எழுந்து நடந்தான்.

“வினு..., கை கழுவலை..., இப்போ வந்துடுறேன்...”, அவள் குரலை அவன் கண்டுகொள்ளவே இல்லை.

அவன் வேகத்துக்கு ஈடு கொடுக்காமல்..., வயிற்றில் இருக்கும் சிசுவுக்கு ஏதாவது ஆகி விடுமோ என்ற பயத்திலும், அவள் நடையை மெதுவாக்க, அவனோ..., அவள் தயக்கத்தையோ, தடுமாற்றத்தையோ கண்டுகொள்ளாமல், தங்கள் கார் நிறுத்தி இருந்த இடத்துக்கு விரைந்தான்.

டிரைவரை விரைவாக காரை எடுக்கச் சொன்னவன்..., ஐஸ்வர்யா உணராதவாறு, மற்றவன் தன்னைத் தொடர்கிறானா...? என பார்வையை சுழற்றியவாறே வந்தான். அவன் தன்னைத் தொடரவில்லை என்பதை உணர்ந்த பிறகுதான் நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.

‘இனிமேல் இங்கே இருக்கக் கூடாது. இருக்கும் அவ்வளவு நேரமும், அறையை விட்டு வெளியே வரவே கூடாது…’, தனக்குள் உரு போட்டான்.

தான் எதில் இருந்து தப்பிக்க முயல்கிறோம் என்பது அவனுக்குப் புரியவே இல்லை. ஆனால்…, மீண்டும் பழைய அடையாளத்துக்குள் தான் இல்லை என்பதில் உறுதியாக இருந்தான்.

அறைக்குள் வந்து சேர்ந்த பிறகு கூட அவன் நடப்புக்குத் திரும்பவில்லை. ஐஸ்வர்யாவோ…, தன் நினைப்புக்குள் மூழ்கி இருந்ததால் அவனது மாறுதலை கண்டுகொள்ளவில்லை.

சற்று நேரம் அமைதியில் கழிய, அந்த நிசப்தத்தை கலைத்தது கதவு தட்டும் ஓசை. திடுக்கிட்டுப் போனான் வினித். கதவை திறக்கவில்லை என்றால், ஏன் என்ற கேள்வி வரும் எனப் புரிய, நெஞ்சம் படபடக்க கதவைத் திறந்தான்.

அவன் பயம் சரியே என்பதுபோல்…, எதிரில் அவன் நிற்க, கதவை அடைக்கப் போனவனை தடுத்து, அறைக்குள் வம்படியாக புகுந்தான் புதியவன்.

“வெளியே போ…”, வினித்தின் கோபக் குரலைக் கேட்டவள், அப்பொழுதுதான் தன் எண்ணத்தில் இருந்து விழிக்க, அவன் குரலை இவ்வளவு சத்தமாக கேட்டிராதவள், திகைத்துப் போனாள்.

“போக முடியாது. ஒரு வருஷமா உன்னைத்தாண்டா நான் தேடிட்டு அலையிறேன். அதுவும் நாயா பேயா அலையிறேன்…, அவ்வளவு சீக்கிரம் போய்டுவனா…?”, வந்தவனும் சளைத்தவனில்லை எனக் காட்டினான்.

“உன்னை யார் தேடச் சொன்னா…? நான் செத்துட்டேன்னு…”, “வினித்…”, ஐஸ்வர்யாவின் குரலைக் கேட்ட பிறகுதான், அங்கே அவள் இருப்பதே அவன் நினைவிற்கு வந்தது.

சட்டென தன் தலையிலேயே அடித்துக் கொண்டவன்..., “இல்லம்மா...”, அவளை சமாதானம் செய்ய திரும்பினான்.

அவளோ..., அதிர்வாக அவனை நோக்க, வினித் செயல்பட முடியாமல் திணறினான். அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திய புதியவன், “நீங்க...?”, கேள்வியாக இழுக்க,

“அவரோட மனைவி...”, அவள் வாய் அவனுக்கு தேவையான பதிலை உரைக்க,

“டேய்..., இதைக்கூட மறைச்சுட்ட இல்ல...”, ஆதங்கப்பட்டான்.

“நீ யார்...?”, அவள் வினவ, “தி கிரேட் விஜே டயர்ஸ் எம்டி, மிஸ்டர் வினித் சக்சேனாவின் அந்தரங்க காரியதரிசின்னு சொன்னால் உங்களுக்குப் போதுமா...?”, அவன் பதிலில், நம்ப முடியாத திகைப்பில், ‘உண்மையா...?’, என்ற கேள்வியோடு கணவனை வெறித்தாள்.

***

# பகுதி - 35.

சத்தியமாக இப்படி ஒரு சூழலில் தன் பின்புலம் வெளிப்படும் என்பதை வினித் அறிந்திருக்கவே இல்லை. வாழ்க்கையில் என்றாவது ஒரு நாள், ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் தான் இதை நேரிட வேண்டி இருக்கும் என்பது அவன் அறிந்தது தான்.

ஆனால்..., இவ்வளவு சீக்கிரம் அது நிகழும் என்பதை அவன் அறிந்திருக்கவில்லை. எவ்வளவு கவனமாக, தன் அடையாளங்கள் மொத்தத்தயும் விட்டுவிட்டு, இரவோடு இரவாக ஓடி வந்தான். அடுத்த வேளை உணவுக்கு கூட அவன் காசு வைத்துக்கொள்ளவில்லை.

நிச்சயம் இதனால் அவன் ஏதோ ஒரு முடிவிற்கு வந்துவிட்டான் என்பதை அவர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்றே இப்படிச் செய்தான். ஆனால்..., அனைத்தும் ஒரு நொடியில் வெளிச்சத்துக்கு வந்த கொடுமை. அவன் என்ன செய்வான்?

“பரமா..., இதற்குமேல் ஒரு வார்த்தை பேசினாலும் நான் மனுஷனாவே இருக்க மாட்டேன். முதல்ல இங்கே இருந்து போ. இந்த வினித்தை நீ சந்தித்தாய் என்பதையே மறந்துவிடு...”, எச்சரித்தான்.

அவனுக்கு இப்படி கூட பேசத் தெரியுமா என நம்ப முடியாமல் அவனையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் கைகள் வேகமாக தன் அடி வயிற்றை பற்றிக் கொண்டது. தன் அதிர்ச்சியில் குழந்தைக்கு எதுவும் ஆகிவிடக் கூடாதே என அஞ்சினாள்.

“ஐஷூ..., அவன் சொன்னது எதையும் நம்பாதே. நான் உன் கணவன் வினித் மட்டும்தான். வா நாம வீட்டுக்குப் போகலாம்...”, அவளை தோள் தொட்டு திருப்பினான்.

“உன்னை சந்தித்ததை மறக்கவா? அதற்காகவா இவ்வளவு கஷ்டப்பட்டு உன்னை கண்டு பிடித்திருக்கிறேன்? உனக்கு உன் நலன் மட்டும்தான் பெரிதாகப் போயிற்று இல்ல.

எப்போ இருந்துடா நீ இவ்வளவு சுயநலக்காரனாக மாறிப் போனாய்...?”, அவனை குற்றம் சுமத்தினான்.

“ஆமா..., நான் சுயநலக்காரன் தான். போதுமா. நீ கிளம்பு...”, இரக்கமே இல்லாமல் உரைத்தான்.

அத்தோடு..., “ஐஷூ..., நான் சொல்றது உன் காதில் விழுதா? கிளம்பு..”, மனைவியையும் கடிந்தான்.

‘தான் என்ன செய்ய வேண்டும் எனத் தெரியாமல் திகைப்பில் இருந்து மீள முடியாமல் அமர்ந்திருந்தாள். அவன் உயரம் தெரிந்ததால் வந்த அதிர்ச்சியை சுலபமாக அவளால் தள்ள முடியவில்லை.

விஜே டயர்ஸ்..., இந்தியாவில் மட்டுமல்ல..., வெளிநாடுகளிலும் தன் முத்திரையைப் பதித்த நிறுவனம்..., உலக பணக்காரர்களின் கார் டயர்களை அலங்கரிப்பது அவனது டயர். சொந்தமாக இரண்டு விமானங்களையே வைத்திருக்கிறார்கள்.

சொந்த உபயோகத்துக்கு ஹெலிகாப்ட்டரில் பயணிக்கும் திறன் படைத்தவன்..., கொஞ்சம் கூட தயக்கமே இல்லாமல்..., நேற்று தன்னோடு ரயிலில் பயணித்ததை, அதுவும் கொஞ்சம் கூட முக சுழிப்பு இல்லாமல் செய்ததை எண்ணியவளுக்கு, தன்னைக் குறித்தே வெட்கமாக இருந்தது.

பணக்காரி என்ற ஆணவத்தில்..., கீழே வேலை செய்யும் ஆட்களை ஒரு பொருட்டாக கூட மதிக்காத தான் எங்கே..., பணத்தை எங்கே வைப்பது எனத் தெரியாமல் திண்டாடும் அளவுக்கு வல்லமை உள்ள அவன், தொழிலாளர்கள் தோளில் கைபோட்டு உறவாடும் அவன் எங்கே?

பட்டு மெத்தையும், மினரல் வாட்டரும் என அவள் இருக்க, அவனோ..., ஒற்றை அறையில், கொசுக்கடிக்கு மத்தியில், வெட்ட வெளியில், மொட்டை மாடியில், அவன் நிலைக்கு அருகில் கூட வர முடியாத கார்த்திக்குடன் சரி சமமாக பழகுவதை என்ன சொல்வது?

திருமணத்தின் போது..., அவனை தான் எப்படியெல்லாம் பேசினோம், அவன் தகுதி, தராதரம், பிச்சைக்காரன்..., யோசிக்க யோசிக்க, அவளுக்கு ஹையோ... என்று இருந்தது. இப்பொழுது அவன் நிலைக்கு, தான் அவனுக்கு தகுதியில்லாதவள் என எண்ணினாள்.

இந்தியாவிலேயே விரல்விட்டு எண்ணக்கூடிய பணக்காரர்களின் வரிசையில் முதல் மூன்று இடங்களுக்குள் இருப்பவன், உலக பணக்காரர்களில் ஐம்பது இடங்களுக்குள் இருக்கும் ஒருவன், தன் கணவன் என்பதில், சந்தோஷப்படுவதா? துக்கப்படுவதா?

ஆனால் சந்தோஷத்துக்குப் பதில், மனதைக் கவ்வும் பயம் எழுவது எதனால்? அப்படியென்றால்..., அவனை தான் அந்த அளவுக்கா விரும்புகிறோம்? அவனை யாருக்கும் எதற்காகவும் விட்டுகொடுக்க முடியாமல் தவிக்கிறோம் என்பதை கண்டுகொண்டவளுக்கு, அழுவதா? சிரிப்பதா எனத் தெரியவில்லை.

அவன்மேல் காதல் வராது என வீம்புக்குதான் சொன்னாள் என்பது, அதைச் சொல்லும்பொழுதே அவளுக்குத் தெரியும். ஆனால்..., அவனை தன் உயிரில் கலந்து வைத்திருக்கிறோம் என்பதை, எங்கே அவன் போய்விடுவானோ என்ற ஒற்றை நினைப்பு பீரிட்டு எழச் செய்வதை உணர்ந்துகொண்டாள்.

அவன் தனது வினித்தாக மட்டுமே இருந்தால் போதும்... அவள் மனம் அடித்துக் கொண்டது. அதை அவனிடம் சொல்லிவிடு என உள்ளம் துடிக்க, அதை வெளியிட முடியாமல் நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டது.

‘போய்விடுவானோ...?’, அந்த நினைப்பை முடிக்கக் கூட அவளால் முடியவில்லை. அவர்கள் விவாதிப்பது அவள் காதிலேயே விழவில்லை. வயிற்றில் இருக்கும் குழந்தை..., உண்மையாக இருக்க வேண்டும் என அவள் மனம் அடித்துக் கொண்டது.

வினித்தின் குழந்தை, அவன் நிலை தெரியும் முன்பே எனக்குள் உருவாகி இருக்க வேண்டும். இனிமேல் இல்லை...., மனம் கண்டதையும் நினைத்து குழம்பியது.

பரமாவுக்கு (பரமேஸ்வரன்) அவன் தன்னை துண்டாக்கிக் கொள்வதிலேயே முனைப்பாக இருப்பதைப் பார்த்து வருத்தமாக இருந்தது. வினித் இப்படி செய்வதற்கான காரணம் அவனுக்குத் தெரியும். அதற்காக..., அவனை இப்படியே விட முடியாதே.

“உனக்கு நடந்தவை அனைத்தும் தெரியுமா வினித்? தெரிந்துமா நீ இப்படி இருக்கிறாய்...?”, வேதனையாகக் கேட்டான்.

“இல்லை பரமா..., எனக்கு எதுவுமே தெரிய வேண்டாம். என் மனைவியோடு நான் நிம்மதியாக இருக்கிறேன். எனக்கு இது போதும். எனக்கு எந்த அடையாளமும் வேண்டாம். நான் இப்படியே இருந்துவிட்டுப் போகிறேன்...”, என்னை விட்டுவிடேன் என்பதுபோல் கெஞ்சினான்.

“மேடம்..., நீங்களாவது சொல்லுங்களேன்...”, அவன் வேலைக்காகப் போவதில்லை என்று உணர்ந்து அவளிடம் மன்றாடினான்.

ஐஸ்வர்யா அமைதியாகவே இருக்கவே.., “போடா பரமா. என் ஐஷூ இப்படி இருந்து நான் பார்த்ததே இல்லை. அவளை கலங்க வைத்துவிட்டாயே, வேண்டாம் போதும்..., போ...”, அவனை பிடித்து தள்ளியவன்,

அவள் கன்னங்களைத் தாங்கியவன், அவள் கண்களுக்குள் உற்றுப் பார்க்க, அவள் கண்களில் தெரிந்த அதிர்ச்சியும், பயமும், அவனை கூறு போட்டது.

அதே நேரம்..., அவள் கண்களில், தான் பணக்காரன் என்பதை அறிந்து சந்தோசம் இல்லாததைப் பார்த்தவனுக்கு, அவ்வளவு நிம்மதியாக இருந்தது.

‘என் மனைவி பணத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. என்னை எனக்காக மட்டுமே

நேசிக்கிறாள்...’, எண்ணியவனுக்கு, அந்த சூழலில் கூட பரவசமாக இருந்தது.

ஆனாலும்..., அவள் கண்களில் இருந்த பயத்தைப் பார்த்தவனுக்கு, அவளை விட்டு சென்றுவிடுவேனோ..., என அவள் எப்படி எண்ணலாம்? என் நேசம் அவளுக்கு உண்மையானதாகத் தோன்றவில்லையா என மெல்லிய கோபம் கூட எழுந்தது.

ஆனால்..., அது கோபப்படும் நேரம் இல்லை என்பதை உணர்ந்தவன்..., “ஐஷூ..., இங்கே பார். நான் உன் வினு மட்டும்தான். உனக்கு மட்டும் தான். உன்னை விட்டு நான் எங்கேயும் போக மாட்டேன். வா.., எதைபற்றியும் யோசிக்காதே..., நாம போய்டலாம். அவன் நம் பின்னாடி வர மாட்டான்...”, அவளை படுக்கையில் இருந்து எழுப்பினான்.

“வினித்..., உன் அம்மா, அப்பா உன் வரவுக்காக மும்பை ஜிஹெச்சில் காத்திட்டிருக்காங்க..., அது உனக்குத் தெரியுமா...?”, தன் மனதை கல்லாக்கிக் கொண்டுதான் அந்த கேள்வியை அவனிடம் கேட்டான்.

பரமேஸ்வரனுக்கு வேறு வழி இருக்கவில்லை. அவனை சாதாரணமாக அழைத்தால், தன் அழைப்பை அவன் கண்டுகொள்ளவே இல்லை. அப்படியென்றால்..., அவன் வர வேண்டியதன் கட்டாயத்தை எடுத்துரைக்க, சட்டென ஐஸ்வர்யாவிடமிருந்து திரும்பியவன், தான் கேட்ட செய்தியை நம்ப முடியாமல் ஸ்தம்பித்தான்.

“என்னடா சொல்ற..?”, எகிறும் இதயத்தை அடக்க முடியாமல் கூவினான். என்ன இருந்தாலும் அவனை இந்த உலகுக்கு கொண்டு வந்தவர்கள் ஆயிற்றே. அவன் இறுக்கத்தையும் மீறி, அவன் தேகம் நடுங்கவே செய்தது.

அவர்கள் மேல் அவனுக்கு தீராத வெறுப்புதான். அதற்காக..., இந்த உலகத்தில் எங்கோ ஒரு மூலையில் தன்னைப் பெற்றவர்கள் இருக்கிறார்கள் என்ற நிம்மதியில் அவன் இருக்க, அவர்கள் இந்த உலகத்தில் இல்லை என்ற செய்தி அவனை துடிக்க வைத்தது.

“டேய்..., அப்படின்னா..., அந்த விபத்தில்...?”, வினித் கேள்வியாக இழுக்க, பரமுவின் தலை சம்மதமாக ஆடியது.

சற்று நேரம் எடுத்து தன்னைத் தேற்றியவன், “ஓ..., அப்போ இந்த உலகத்துக்கு விஜே டயர்ஸ் ஓனர் ஹாஸ்பிட்டல்ல கோமாவில் இருக்கிறார்ன்னு நம்ப வச்சுட்டு இருக்கீங்க. ம்..., புரியுது. அவங்க காரியத்தை நீயே முடிச்சுடு..., இப்போ இருக்கிற மாதிரி, எல்லாத்தையும் நீயே பாத்துக்கோ...”, உரைத்தவன், இதற்குமேல் பேச எதுவும் இல்லை என தங்கள் பொருட்களை அடுக்குவதில் முனைந்தான்.

அவனது இந்த பதிலில் ஐஸ்வர்யாவே திகைத்தாள். ‘என்ன மனிதன் இவன்..., பெற்றவர்கள் மேல் என்னதான் கோபம் இருந்தாலும், இந்த உலகத்திலேயே இல்லாமல் போன அவர்கள் மேல் அவனுக்கு ஏன் இவ்வளவு வன்மம்...?”, அவளுக்குப் புரியவில்லை.

மனதோ..., அவன் செல்ல மாட்டேன் என்றதில் கொள்ளும் நிம்மதியை உணர்ந்தவளுக்கோ..., தன் மனதை எண்ணி வியப்பாக இருந்தது.

“சரி..., அவங்களுக்கு ஒரு வழி சொல்லிட்ட, உன்னை நம்பியே இருக்கும் லட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு என்ன சொல்லப் போற? கம்பெனியை இழுத்து மூடி, அவங்க வயிற்றில் அடிக்கச் சொல்றியா? அதையும் சொல்லிடு..., அப்படியே செய்யறேன்...”, பரமா கோபத்திலும், ஆற்றாமையிலும் புலம்பித் தள்ளினான்.

அவ்வளவு நேரமும் அவனுக்கு பதிலுக்கு பதில் உரைத்துக் கொண்டிருந்தவன், அவனது இந்த கேள்வியில் சட்டென பதில் உரைக்க முடியவில்லை. அவனால் எப்படி அதைச் செய்ய முடியும்? இரண்டு தொழிலாளர்களின் வேலை போனதற்கே, இரண்டு மாதங்களாக அவளிடம் வாதாடியவனாயிற்றே.

கணவனின் மனம் இப்பொழுது படும் பாட்டை ஐஸ்வர்யாவால் புரிந்துகொள்ள முடிந்தது. இதற்கு தான்தான் ஒரு முடிவெடுக்க வேண்டும் என

எண்ணியவள்..., "பரமா..., நீ...ங்க.. ஒரு வாரம் கழித்து, எங்களை சென்னையில் வந்து மீட் பண்ணுங்க. எங்க அட்ரஸ்..., தன் விசிட்டிங் கார்டை எடுத்துக் கொடுத்தவள், ரெண்டு நாள் கழித்து போன் பண்ணுங்க. கண்டிப்பா நல்ல முடிவா சொல்வார்...", அவள் இடை புகுந்தாள்.

"இல்ல ஐஷூ..., ஒரு வாரம் இல்லை, ஒரு வருஷம்..., ஒரு மாமாங்கம் ஆனாலும் என் முடிவு மாறாது...", பிடிவாதமாக உரைத்தான்.

பரமன் அவனைக் கண்டுகொள்ளாமல்..., "தேங்க்ஸ் மேம்..., கண்டிப்பா ரெண்டு நாளில் நான் கால் பண்றேன்....", அவளிடம் உரைத்தவன், "சாரி வினித்...", அவனை இறுக தழுவி விடுவித்தான்.

"ஏழு நாள் உன்னை எந்த தொல்லையும் செய்ய மாட்டேன். ஆனால்..., ஏழாவது நாள் உன்னை விடவும் மாட்டேன்...", உறுதியாக உரைத்துவிட்டு அங்கிருந்து அகன்றுவிட்டான்.

தன் தலையில் கை கொடுத்தவாறு அங்கிருந்த மூங்கில் கூடையில் அவன் அமர, அவனைப் பார்த்தவாறு படுக்கையில் அமர்ந்தாள். இருவரின் மனமும், ஒவ்வொரு விதத்தில் தவித்துக் கொண்டிருந்தது.

'எப்படி அவளிடம் சொல்ல? என்ன சொல்ல...', அவன் சிந்திக்க, 'என்ன முடிவெடுப்பான்...? என் நிலை...?', அவள் மனம் தவித்தது.

மதிய வேளை கடக்க, அவள் பசி மட்டுமே இப்பொழுது முக்கியமாக இருக்க, தொலைபேசியில் உணவை அறைக்கே வர வைத்து, அவளையும் அமர வைத்து தானே அவளுக்கு சாப்பாடு ஊட்டினான்.

'எவ்வளவு பெரிய நிலையில் உள்ளவன்...', அவள் எண்ணம் கண்ணில் தெரிய, "ப்ளீஸ் ஐஷூ..., நான் உன்னோட அதே வினு தான். என்னை தள்ளி வச்சுடதே..., நான் தாங்க மாட்டேன்...", சாப்பாட்டு தட்டை கீழே வைத்துவிட்டு, அவள் மடியில் கவிழ்ந்து கொண்டான்.

அவனை தன் வயிற்றோடு அணைத்தவள், “ம்ச்…, உன்னை அவ்வளவு சீக்கிரம் விட்டுடுவேனா…?”, அவள் குரல் தடுமாறியது.

எதையும் அவனிடம் அவளால் கேட்க முடியவில்லை. முதலில் சென்னைக்குப் போகலாம், பிறகு பேசிக் கொள்ளலாம், முடிவெடுத்தாள்.

தன் அலைபேசியில் இருந்து தந்தைக்கு ஒரு செய்தி அனுப்பியவள், உணவை உண்டுவிட்டு, அறையிலேயே ஓய்வெடுத்தனர். அவனோ…, அவளை கைக்குள் இருந்து பிரிக்க மறுத்தான். அவளும் அதை விரும்பியே ஏற்றுக் கொண்டாள். அவனோடு ஒட்டிக் கொண்டாள்.

ஆனாலும்…, அவள் மனதுக்குள் அவன் உயரம் பயத்தை ஏற்படுத்தியத்தை மறுக்க முடியவில்லை. ஐந்து மணிக்கு விமானத்தில் ஏறியவர்கள், ஐந்தே முக்காலுக்கு சென்னையில் தரையிறங்க, அவர்களை அழைத்துச் சொல்ல கிரி வந்திருந்தான்.

அவர்கள் வீட்டுக்குள் நுழைய, அவர்களை எதிர்கொண்டார் ஸ்ரீராம். “வாங்க…, என்னம்மா.., எல்லாம் நல்லபடியா முடிஞ்சதா? எத்தனையோ வருஷம் முயன்றது, இந்த வருஷம்தான் சாதிச்சிருக்கோம்…”, அவரிடம் அவ்வளவு சந்தோசம்.

அமைதியாக அவரோடு சென்று அங்கிருந்த சோபாவில் அமர்ந்தவள், “இதை எப்படி சாதிச்சோம்னு தெரியுமாப்பா…?”, அவர் முகம் ஏறிட,

“எல்லாம் நம்ம வினித் செய்தது தாம்மா…., அதில் என்ன சந்தேகம்…”, பெருமை பட்டார்.

“ம்…, சரி…, உங்களுக்கு விஜே டயர்ஸ் பத்தி ஏதாவது தெரியுமாப்பா…?”, அவள் கேட்க, “ஐஷூ…, இப்போ எதுக்கு அது…?”, அவளை தடுக்க முயன்றான்.

அவர்கள் செய்கையை வித்தியாசமாகப் பார்த்தவர், தன் மகள் முகத்தில் இருந்த கலக்கமும், அவன் முகத்தில்

இருந்த தவிப்பும்..., 'தான் எல்லாம் சரியாகிவிட்டது என எண்ணியது தவறா...?', கவலை கொண்டவர், "விஜே டயர்ஸ்..., உலகத்திலேயே பெரிய லீடிங் கம்பெனி என்பது தெரியும்மா", மகள் கேள்விக்கு பதில் கொடுத்தார்.

"அதோட ஓனர் யார்ன்னு தெரியுமா டேட்...?", கலங்கிய குரலில் கேட்க,

"ஏன் தெரியாமல்..., அதான் மிஸ்டர் விபின் சக்சேனா..., சக்சேனா...", மறுபடியும் சொல்லிப் பார்த்தவர்..., அதிர்ச்சியாகி இருக்கையில் இருந்தே எழுந்துவிட்டார்.

"எஸ் டேட்..., வினித் சக்சேனா இஸ் தி எம்டி ஓப் தட் கம்பெனி...", அவள் உரைத்துவிட்டு குலுங்கி அழ, "ஐஷூ...", அவளை இழுத்து தன்மேல் சாய்த்துக் கொண்டான்.

"ஏண்டா இப்படிப் பண்ண...? ஏன்...?", அவன் முதுகில் குத்தினாள்.

"ஐ லவ் யூ ஐஷூ...", அவன் பதில் இதுவாகத்தான் இருந்தது. அவன் நெஞ்சில் முகம் புதைத்தவள், "நான் இப்போ என்னடா செய்யணும்? எனக்குத் தெரியலையே..., இது வரைக்கும் உன் முகம் பார்த்துதான் எதையாவது செய்ய முயன்றிருக்கிறேன்..., இப்போ..., உன் உயரம்..., எனக்கு பயம்மா இருக்கு...", அவனை விட முடியாது என்பதுபோல் இறுக்கிக் கொண்டாள்.

"வினித்..., அவளை ரூமுக்கு அழைச்சுட்டு போங்க...", ஸ்ரீராமுக்கும் தன்னை மீட்டுக்கொள்ள வேண்டியிருந்தது.

அவருக்கும் இது அதிர்ச்சியாகத்தான் இருந்தது. இப்பொழுது என்ன செய்ய? ஏணி வைத்தாலும் அவர்கள் உயரத்துக்கு ஈடாக முடியாது. அவனைப்பற்றி தெரிந்துகொண்டு, தான் அவனை வளைத்துப் போட்டதாக எண்ணுவானோ?', நிச்சயம் அவன் சாதாரண குடும்ப பையன் இல்லை என்பது அவருக்குத் தெரியும்.

அதற்காக..., இவ்வளவு பெரிய உயரத்தை அவர் எதிர்பார்த்திருக்கவில்லை. இப்போ..., அவங்க வீட்டில்

இருந்து வந்து, தன்னை நிற்க வைத்து கேள்வி கேட்டால்? தான் நினைத்ததையே கேட்டு குற்றம் சுமத்தினால்? தன் மகளது வாழ்க்கை? அவள் நிலை...? இனிமேல் அவள் எதிர்காலம்...? அவருக்கு நினைத்தாலே நெஞ்சம் பதறியது.

அவன் அப்படியொன்றும் ஐஸ்வர்யாவை கைவிட்டு விடமாட்டான் என்றாலும், மனதுக்குள் இனம் புரியாத பயம் கவ்விக் கொண்டது.

வினித்துக்கு அவர்களது பயத்தை நினைத்தாலே சிரிப்புதான் வந்தது. அவளை விரும்பி, அதுவும் அவள் குணம் புரிந்து திருமணம் செய்து கொண்டவன், அவ்வளவு சுலபமாக விட்டுவிடுவேனா என்ன? திருமணத்தின் பொழுது, என் உயரம் அவர்களுக்கு வேண்டுமானால் தெரியாமல் இருக்கலாம், ஆனால் எனக்குத் தெரியும் தானே...’ அந்த நிலையிலும் சிரிக்கவேண்டும்போல் இருந்தது.

அறைக்குள் நுழைந்தவன், அவளை அணைத்துக் கொண்டு, தன் நினைப்பு அனைத்தையும் உரைக்க, அவன் பேச்சில் இருந்த உண்மையை உணர்ந்தவளுக்கு, சற்று நிம்மதியாக இருந்தது.

அதே நேரம்..., அவன் மும்பை சென்றுவிட்டால்...., அவன் வேலைகள் அவனை அமிழ்ந்துவிடும் என்பதும், அவன் சென்னையில் வந்து போவது மட்டுமே சாத்தியம் என்பதும் புரிய, அவனை விட்டு இருக்கவேண்டும் என்பதை அவளால் நினைக்கவே வெறுப்பாக இருந்தது.

அதிலும் சற்று சந்தேகத்தை கிளப்பியிருக்கும் தன் வயிற்றுப் பிள்ளையின் நினைவு வேறு அவளை ஆனந்தமும், துன்பப்பமும் படுத்தியது. ஆனந்தம்..., அவனை வினித்தாகவே ஏற்றுகொண்ட பொழுது உருவானது என்பதை எண்ணி, வருத்தமோ..., தன் இந்த நிலையில் அவன் தன்னோடு இருக்க மாட்டானே என்பதை எண்ணி.

அவள் அமைதியாகவே இருக்க, “ஏய்., நீ இன்னும் என்னை நம்பலையா?”, அவள் கண்ணைப் பார்த்து கேட்க, மறுப்பாக தலை அசைத்தவள், அவன் தோள் சாய்ந்தாள்.

“என்னன்னு சொன்னால் தானே தெரியும்...? சொல்லும்மா...”, அவளை அழைத்து வந்து படுக்கையில் அமர்த்தினான். அவளுக்கு கேட்பதா, வேணாமா என்ற குழப்பம். ஆனாலும்..., அதை அறியாமல் அவளால் இருக்க முடியாது என்பது புரிய,

“ஏன் வினு மும்பை போக மாட்டேன்னு சொல்ற...? அம்மா அப்பாவுக்கு நாம செய்ய வேண்டிய கடமையை செய்து தானே ஆகணும்...?”, மென்மையாக கேட்டாள்.

அது அவனுக்கே தெரியும் என்பது அவளுக்குத் தெரியும். ஆனாலும்..., அவளுக்கு கேட்க வேண்டி இருந்தது. கூடவே..., ‘ஏன் வீட்டை விட்டு வந்தான்’ என்பதும்.

அவனே அவனுக்குள்ளாக இவ்வளவு நேரமும் கேட்டுக்கொண்ட கேள்வி, தன்னைப் பெற்ற தாய், தந்தை இறந்துவிட்டார்கள்..., மருத்துவமனையில் அவன் வரவுக்காக, அவர்களது பூத உடல் வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு மகனாக, அவர்களுக்குச் செய்ய வேண்டியதை உடனே செய்யச்சொல்லி, அவன் மனசாட்சி அவனை தூண்டுகிறது தான்.

ஆனால்..., அதைச் செய்ய முடியாமல்..., தடுக்கும் ஒரு விஷயம்..., அவனால் அதை சாதாரணமாக தள்ளிவிட முடியவில்லையே. என்ன செய்ய? மனம் என்னவோ பச்சை புண்ணை, சூட்டுக் கோலால் திருவியதுபோல் வலித்தது.

அந்த ரணம்..., தான் அனுபவித்த துன்பம்..., அவர்கள்மேல் எப்பொழுதுமே பெரிதாக பாசம் இருந்ததில்லை, பெற்றவர்கள் ஏன் இப்படி என்ற ஏக்கம் இருந்ததுண்டு. அதுவும் ஒரு நாள் வற்றிபோகச் செய்தவர்கள்..., எப்படியும் அவர்களுக்குச் செய்ய வேண்டியவன் தான் தான்.

அதை விழுந்தடித்துக்கொண்டு அதைச் செய்ய முடியாமல் தடுப்பது எது? அவனால் அதை உணர முடிந்தாலும், தன்

மனைவியிடம் அதை எப்படி சொல்லி புரிய வைப்பான்? அவளால் தான் சொல்வதை சரியாக புரிந்துகொள்ள முடியுமா? ஒரு பக்கம் இந்த கவலை அவனை வாட்டியது.

ஒரு நல்ல மகனாக அவனால் இருக்க முடியாமல் போகலாம். ஒரு நல்ல கணவனாக இருக்க வேண்டும், ஒரு நல்ல அப்பாவாக தான் இருக்க வேண்டும் என அவன் மனம் தவித்தது. இப்பொழுது அவன் முன்னால் இருக்கும் மிகப்பெரும் போராட்டம்..., அவன் மனைவியை விட்டுவிட்டு அவனால் செல்ல முடியாது என்பதே.

அவன் சிந்தையை அவள் கலைக்க, “நீ கேட்பது சரிதான். நியாயமும் கூட...”, நிறுத்தியவன், படுக்கையில் இருந்து எழுந்து சென்று பால்க்கனியின் இருளை வெறித்தான். அவன் செய்கை வித்தியாசமாகவும், அவன் வருந்துவதும் புரிய, எழுந்து சென்றவள், அவன் முதுகில் சாய்ந்து, அவன் இடையை கட்டிக் கொண்டாள்.

***

# பகுதி - 36.

அவள் செய்கை அவனுக்கு ஆறுதல் அளிக்க..., “உன்னால் எந்த அளவு நான் சொல்வதை நம்ப முடியும்னு தெரியலை..., ஆனால்..., நான் சொல்வது முற்றிலும் உண்மை...”, அவன் நிறுத்த, உன்னை நம்புகிறேன் என்பதாக அவன் நெஞ்சை கையால் நீவினாள்.

“என் பிறப்பு, வளர்ப்பை பற்றி நான் உனக்கு ஏற்கனவே சொல்லி இருக்கிறேன். ஆனால்..., அது பாதிதான். நான் எப்படியோ வளர்ந்து, எதையோ செய்து..., என் வீடு என்றுமே என்னை கேள்வி கேட்டதில்லை. அப்போவே எனக்கு கிரெடிட் கார்ட்..., பைக்..., கார்..., நான் நினைத்ததை நானே வாங்கிக் கொள்ளும் வளம் என்னிடம் இருந்தது.

“ஆனால்..., நான் ஏங்கியது ஒரு விஷயத்துக்குத்தான்..., அது... அன்பு. எங்கேயும் எனக்கு உண்மையான நேசம் கிடைத்ததில்லை. பள்ளி, கல்லூரி எல்லா நண்பர்களுமே, என் பணத்தை மட்டுமே விரும்பினாங்க. நான் எனக்கு வாங்குவதை விட, அவர்களுக்கு செய்வதை சந்தோஷமா செய்தேன்.

“எல்லாம் இருட்டும் வரைக்கும் மட்டுமே நிலைக்கும். இரவு வந்தால்..., நான் தனியாகி விடுவேன். போதையோ..., பெண்களோ..., என்னை பெரிதாக ஈர்க்கவில்லை. மும்பை ரோட்டோரம் இருக்கும் பிச்சைக் காரர்களைப் பார்த்தவாறு எத்தனையோ நான் என் இரவை கழித்திருக்கிறேன்...”, அவன் குரல் குழற, வேகமாக அவனைத் திருப்பி, அணைத்துக் கொண்டாள்.

“அவங்களுக்கு மறுநாள் சாப்பாட்டுக்கு வழி கிடையாது. ஆனாலும்..., ஒருத்தொருக்கொருத்தர் சாப்பாட்டை பகிர்வது, குழந்தைகளை கவனிப்பது. நான் அங்கே பொறந்திருக்கலாம்னு...”, இப்பொழுது அவன் வாயை அடைத்தவள், ‘உனக்கு நான் இருக்கிறேன்..’, என தாங்கிக் கொண்டாள்.

அவனும் அதை அத்தோடு நிறுத்தியவன்..., “என் வீட்டில் எப்பொழுதுமே பார்ட்டி, கொண்டாட்டம், கும்மாளம்னு மாதம் தவறாமல் நடக்கும். அந்த ஒரு விஷயம் எனக்கு சின்ன வயதிலேயே அறவே பிடிக்காது. அப்போல்லாம், நான் என் அறையை விட்டு வெளியே வரவே மாட்டேன்.

“அங்கே எதுவோ தப்பா நடக்குது, என்று என் உள்ளுணர்வு என்னை எப்பொழுதும் எச்சரிக்கை செய்துட்டே இருக்கும். அப்போ அதை நான் பெரிதா எடுத்துகிட்டதே இல்லை. எல்லாத்தையும் தவிர்க்க, என்னை படிப்பில் திணித்தேன்.

“யூஜி, பீஜி..., எல்லாம் நல்ல கல்லூரி. ஐஐடி என்ட்ரன்ஸ் எழுதி, மும்பையில் ஜாயின்ட் பண்ணேன். எனக்கு வெளிநாடு செல்ல விருப்பம் இல்லை, எனவே நான் அதை செய்யலை...”.

“அங்கே ஹாஸ்டல்ல தங்கிகிட்டேன். முடிந்த அளவு என் அடையாளத்தை அங்கே மறைத்தேன். அங்கே எனக்கு கிடைத்த நண்பன் தான் பரமேஸ்வரன்., பரமா அவனும் ஒரு புத்தகப் புழு, எனக்கும் அவனுக்கும் ரொம்பவே ஒத்துப் போச்சு.

“கல்லூரி விடுமுறையில் வீட்டுக்குப் போகையில், என்னை அங்கே நடக்கும் பார்ட்டிகளில் கலந்துக்கச் சொல்லி கட்டாயப்படுத்துவாங்க. அவங்க கட்டாயத்துக்காக சில பார்ட்டிகளில் கலந்திருக்கேன். அங்கே அம்மாவே சில பெண்களை எனக்கு அறிமுகப்படுத்தி வைப்பாங்க.

“நானும் சாதாரண அறிமுகம்தான்னு நினைத்து அப்படியே விட்டுடுவேன். அதுக்கு மேலே அங்கே இருக்காமல், கிளம்பிடுவேன். மறுநாள் காலையில் ஏன் அப்படி செய்தேன்னு என்னை திட்டுவாங்க. அந்த பெண்ணைப் பற்றி என்ன நினைக்கிறாய்னு கேக்கும்போது, எதுவும் புரியாது.

“ஆனா..., ஒரு நாள் புரிய வந்தப்போ...”, அப்படியே அவன் தேகம் முற்றாக இறுகிப் போவதை அவள் உணர்ந்தாள்.

“ஏன்…? என்ன ஆச்சு…?”, அவள் பதற, அதை நிறுத்தியவன், “அதை பிறகு சொல்றேன்…”.

“ஒரு வழியா படிப்பை முடித்தேன்…, அடுத்து என்னன்னு யோசிச்சப்போ, என் அப்பா எங்க கம்பெனியை எடுத்து நடத்தச் சொல்லவே, சந்தோஷமா சம்மதித்தேன்…, அதுக்குப் பிறகுதான்…”, அவனால் அதை சொல்லவே முடியவில்லை.

அவன் திணற, “இல்ல வினு…, உனக்கு கஷ்டமா இருந்தால் வேண்டாம்…”, அவள் தடுக்க, மறுப்பாக தலை அசைத்தான். எங்க அப்பா என்னை எம்டி சீட்டில் உக்கார வைத்த அன்னைக்கு…., நான் எப்படி உணர்ந்தேன் தெரியுமா? ஒரு மகாராஜாவின் தோரணை என்னிடம் இருந்தது.

“அது அதிகநாள் நீடிக்கப் போவதில்லைன்னு எனக்கு அப்போ தெரியலை…”, அவனிடம் அங்கே அசாத்திய அமைதி நிலவியது.

“நான் பொறுப்பேற்றவுடன், எனக்குத் துணையா பரமாவை வரச் சொல்லி சேர்த்துகிட்டேன். அப்போதான் அவனுக்கு நான் யார் என்ற உண்மையே தெரியும். அப்பொழுதும் அவன் அவனாகவே இருந்தான்.

“என் முதல் மாதம் முடிவில் அந்த ஹோட்டல்ல பார்ட்டிக்கு ஏற்பாடு செய்தப்போ, என் செயல்பாட்டை பாராட்டத்தான்னு நான் நினைத்தேன். ஆனால்…., அங்கே நடந்ததோ…? முழு போதை கொண்டாட்டத்தில், யார் யாரோடு இருக்கிறார்கள் என்பதே தெரியலை.

“அது எனக்காக ஏற்பாடு செய்த பார்ட்டி என்பதால்.. என்னால் பாதியில் விட்டுவிட்டுச் செல்ல முடியவில்லை. அங்கே என்ஜாய் செய்வது மட்டுமே முக்கியம் என்பது போன்ற அவர்கள் நடத்தை…, அதைக் கூட ஓரளவுக்கு ஒத்துக் கொண்டாலும்…,

“கணவன் மனைவிக்குள் புனிதமாக கருதப்படும் ஒரு உறவை, ஜஸ்ட் லைக் தேட்…, மற்றவர்களோடு அதை பகிர்ந்து கொள்வதை என்னால் ஜீரணிக்க முடியவில்லை.

அதுவும்..., தன் இணைகளின் சம்மதத்தோடு நடக்கும் அந்த கேவலம்...", அன்றைய நினைவில் இன்று குமுறினான்.

அவன் சொல்ல வருவதை புரிந்துகொள்ளவே ஐஸ்வர்யாவுக்கு சற்று நேரம் பிடித்தது. அதிர்ந்து போனாள். அவள் முகத்தைப் பார்த்தே அதை புரிந்துகொண்டவன், "இதற்கு மேல் தான் பெரிய அதிர்ச்சியே எனக்கு காத்திருந்தது...", அவன் உரைக்க, அவள் மனம் தாறுமாறாக சிந்தித்தது.

"மறுநாள் காலையில் நான் என்னைப் பெத்தவங்க கிட்டே அதைப்பற்றி கேட்டப்போ..., வாழ்க்கையை அனுபவிக்கணும்னு எனக்கே அட்வைஸ் பண்ணாங்க. நானும் அதற்குமேல் அவங்ககிட்டே எதுவும் கேட்கலை.

"நாட்களும், மாதங்களும் இப்படியே போனப்போதான்..., எனக்கு ஒரு பெண் பாத்திருக்கதா சொன்னாங்க. என்னால் நம்பவே முடியலை, இதுவரை என் வாழ்க்கையில் எந்த ஒரு விஷயத்திலும் தலையிடாதவங்க, என் வாழ்வின் மிகப்பெரிய விஷயத்தை நிர்ணயிக்கிறதா சொன்னப்போ..., எனக்கு அதிர்ச்சியா இருந்தது.

"இதவிட மிகப்பெரிய கொடுமை என்னன்னா..., அவங்க எனக்காக பார்த்திருந்த பொண்ணை நானே சில பார்ட்டிகளில் வேறு வேறு ஆண்களுடன் பார்த்திருக்கிறேன். என்னால் அந்த அதிர்ச்சியை தாங்கவே முடியலை.

"அதை நான் அவங்ககிட்டே சொன்னப்போ..., அதனால் என்னன்னு கேட்டாங்க பார்..., ஓமைகாட்..., அப்படியே அந்த போட்டோவை கிழித்து அவங்க மூஞ்சியிலேயே விட்டெறிந்து, எனக்கு அந்த பொண்ணைப் பிடிக்கலைன்னு கத்தணும் போல் இருந்தது. ஆனால்..., அதைச் செய்யாமல் என்னை கட்டுப்படுத்திகிட்டேன்.

"ரெண்டு மாசம் கடந்த பிறகு, மறுபடியும் அதே பொண்ணை என் வாழ்க்கையில் அவங்க கொண்டுவர முயன்றப்போ..., அழுத்தமா என் மறுப்பை தெரிவித்தேன். ஆனா..., அவங்க

அதை கண்டுகொள்ளாமல், கல்யாணம் ஒரே மாசத்தில் நடக்கணும்னு சொன்னப்போ..., என்னால் அதை தாங்கிக்கவே முடியலை...", அவன் குரலில் மலையளவு வருத்தம்.

அதை உணர்ந்தவள்..., "ஏன் அப்படி சொன்னாங்களாம்...?", ஏதாவது காரணம் இருக்குமோ என அவள் எண்ணினாள்.

"அதை நானும் கேட்டேன்..., பையன் வாழ்க்கை, ஆசையை விட, அந்த பொண்ணைத்தான் ஏன் கட்டிக்கணும்னு? அதுக்கு...", அவன் குரல் அப்படியே இறுகிப் போக,

"அவளுக்கு நம்ம சொசைட்டியோடு பழகத் தெரியும்..., அவளும் சாதாரண குடும்பம் கிடையாது..., அப்படி இப்படின்னு..., என்னால் அதை ஜீரணிக்கவே முடியலை..., சொசைட்டி.., பழக்கம்..., அப்போ... அவங்க அந்த சாக்கடைக்குள் புரள்வதோடு.., என்னையும் அதில் இழுத்து விடப் பாக்குறாங்களா...?", கோபத்தில் அவன் கை இறுகியது.

"என் கோபத்தை அடக்க முடியாமல்..., அப்போ அவ கர்ப்பமா இருந்தால் கூட உங்களுக்கெல்லாம் கவலை இல்லையானு நான் வெடிக்க..., கொஞ்சம் கூட அசராமல்..., 'நான் இப்போ இல்லையாடான்னு...' கேட்டு என் அப்பா என் தலையில் இடியை இறக்கினால்...,

'நீ யார்க்கு உருவானன்னு எனக்கே தெரியாதுன்னு என் அம்மா என்னை குழியில் தள்ளி..., ஐயோ..., இதை எப்படி என்னால் தாங்க முடிஞ்சது? நான் எப்படி அந்த நேரம் நெஞ்சு வெடிச்சு சாகலன்னு எனக்குத் தெரியவே இல்லை ஐஷூ...,

"அப்படியே இந்த உடம்பு முழுக்க பெட்ரோலை ஊத்தி அவங்க கொளுத்தியிருந்தால் கூட எனக்கு இப்படி எரிந்திருக்காது....", அவன் கதறலை ஐஸ்வர்யாவால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

இப்படியும் மனிதர்கள் இருப்பார்களா? அவளால் எண்ணாமல் இருக்க முடியவில்லை.

“அப்படியே சாக்கடையில் புடண்ட மாதிரி..., இந்த உடம்பை அப்படியே சிதைக்கணும்னு..., நான் உயிரோடவே இருக்கக் கூடாதுன்னு ஒரு வெறி..., என்னை கட்டுப்படுத்திகிட்டு..., என்னம்மா சொல்றீங்கன்னு கேட்டால்..., அப்படி கேட்கத் தூண்டியது எதுன்னு இப்போ வரைக்கும் எனக்குத் தெரியவே இல்லை...”, அவன் மனநிலை அடியோடு மாறியதுபோல் அவளுக்குத் தோன்றியது.

“என் அம்மா அதுக்கு சொன்ன பதில்..., கல்யாணம் முடிஞ்சு நடந்த எத்தனையோ பார்ட்டிகளுக்குப் பிறகு நான் உருவானதால் தான், தனக்கே அந்த சந்தேகம்னு சொல்றாங்க. எப்படியும் ஒரு வாரிசு வேணும், சோ நானும் அதைப்பற்றி கவலைப் பாடலைன்னு அப்பா சொல்ல..., ஆயிரத்தில் ஒரு விதமா, நான் அவரோட பையனாவே இருந்துட்டா...?

“அப்படி இருக்கணும்னு..., நான் முதல் முறையா இந்த உலகத்தில் இருக்கும் எல்லா தெய்வத்துகிட்டேயும் முதல் முறையா நான் வேண்டினேன்....”, அப்பொழுது அவன் மனம் என்ன நிலையில் இருந்திருக்கும் என்பதை, அவளால் உணர்ந்துகொள்ள முடிந்தது.

“அடுத்த நாளே நான் டிஎன்ஏ டெஸ்ட் பண்ண கொடுத்துட்டு, அந்த ஒரு நாள் முழுவதும் நான் பட்ட பாடு இருக்கே..., என் எதிரிக்கு கூட அந்த நிலைமை வரக் கூடாது. அந்த லேப் வாசலில் நான் இருந்த ஒவ்வொரு நொடியும்..., செத்து பிழைத்தேன் ஐஷூ..., செத்து பிழைத்தேன்...”, அன்று அவன் பட்ட பாடை, இன்றும் அவன் உணர, அவனை அணைத்தவள்,

“வேண்டாம் வினு..., எதையும் சொல்ல வேண்டாம்..., எனக்குப் புரியுது...”, அவன் உயிரை மாய்த்துக்கொள்ளாமல் இருப்பதன் காரணத்தை அவன் சொல்லாமலேயே அவளால் உணர முடிந்தது.

“அந்த ரிப்போட் என் கைக்கு வந்து..., அதை பிரித்துப் படிக்கும் பொழுது, இதயம் வெடிச்சு சிதறுற மாதிரி இருந்தது. என் அப்பா அவர்தான் என்பதை வாசித்த

பிறகுதான்..., என்னால் நிம்மதியா சாகக் கூட முடியும் என தோன்றியது", அவன் குரலில் இருந்த நிம்மதி அவளையும் தாக்க, அமைதியாகவே இருந்தாள்.

“இதற்குமேல் அங்கே இருக்க முடியாது..., அவங்க அடையாளம், பணம்..., எதுவுமே வேண்டாம். வாழ்க்கையை முடிச்சுக்கலாம்னு தான் கிளம்பினேன். பீச்சில் போய் விழத்தான் போனேன். ஆனா...,எது என்னை தடுத்ததுன்னு எனக்குப் புரியவே இல்லை...", அவன் நிறுத்த, ‘நீ எனக்கானவன் டா...', அவள் செய்கை அவனுக்கு உணர்த்தியது.

அவள் புரிதல் புரிந்தாலும், “உனக்கு என் பிறப்பும், வாழ்க்கையும் வெறுப்பா இருக்கா ஐஷூ...", அவன் குரல் நடுங்கிற்று.

அவன் சொன்னவை அவளுக்கும் பேரதிர்ச்சிதான் என்றாலும், தன் முன்னால் ஏற்கனவே நொறுங்கிப் போயிருக்கும் அவனை மேலும் கவலைப்படுத்த அவள் விரும்பாமல், தன்னை சட்டென மீட்டுக் கொண்டாள்.

ஏற்கனவே இப்படிப்பட்ட விஷயங்களை அவள் கேள்விப் பட்டிருந்ததால், அதிர்ச்சி சற்று குறைவாக இருந்தாலும், அவன் வாழ்க்கையில் நடந்தது என்பது மட்டுமே அதன் அளவை கூட்டியது.

அவளைப் பொறுத்த மட்டில், அவன்தான் அவளுக்கு முக்கியம். அவனைப் பெற்றவர்கள் செய்த தவறுக்கு, அவனை அவளால் வெறுக்க முடியுமா? தாங்கள் வாழத் துவங்குவதற்கு முன்னால் கேள்விபட்டிருந்தால் கூட, அவனை தவிர்க்க அவளால் முடியாது என்னும்போது..., இப்போழுதா முடியும்?

அவள் இதை எப்படி எடுத்துக் கொள்வாள் என உள்ளம் பதறவே செய்தது. “சேற்றில் முளைத்த செந்தாமரை மாதிரி, நாகப்பாம்பு வாயில் இருந்த மாணிக்கம் மாதிரி, நீ விலையேறப் பெற்றவன்டா..., சோ உனக்கு அந்த சந்தேகமே வேண்டாம்...., இனிமேல் இதைபத்திய சின்ன

சந்தேகம் கூட உனக்கு வரக் கூடாது...", அவள் குரல் இப்பொழுது உறுதியாக ஒலித்தது.

தன் அணைப்பை இறுக்கி அதன் சந்தோஷத்தை வெளிப்படுத்தினான். அவளோ..., "ஆனாலும்..., நீ எப்படி என்னை கட்டிகிட்டன்னுதான் எனக்குப் புரியவே இல்லை...", அவனை சீண்டினாள்.

அவனிடம் ஒரு நொடி அமைதி நிலவ, "உன்னை என்னைக்கு முதல் முதலா பார்த்தேனோ..., அன்னைக்கு உன் அப்பா சொன்னது எவ்வளவு பெரிய சாத்தியம்னு புரிஞ்சுகிட்டேன். என் வாழ்க்கைக்கான கடவுளின் திட்டம் என்னன்னு எனக்குத் தெரிந்தது ஐஷூ...", அவன் குரலே அவன் எவ்வளவு உணர்ந்து சொல்கிறான் என்பதை அவளுக்கு உணர்த்தியது.

"முதல் பார்வையிலேயே..., ஒரு அலட்சியத்தையும், திமிரையும் பார்வையில் சுமந்து, ஆணென்றால் என்னைவிட்டு எட்டியே இருன்னு உன் பார்வை சொன்னப்போ..., இவதான் உன் வாழ்க்கைக்கான திட்டம்னு என் காதில் யாரோ ஓதினாற்போல் இருந்தது...", அவன் மனநிலை, இப்பொழுது முற்றாக மாறியிருக்க, அவனை தன் அணைப்பில் இருந்து விலக்கியவள் அவன் முகம் பார்த்தாள்.

அவள் கண்களில் அப்படி ஒரு ஆச்சரியம்..., "டேய்..., என்னை பார்த்த அன்னைக்கேவா...?", அவள் குரலில் அப்படி ஒரு துள்ளல்.

"ஆமா..., உன்னை பார்த்த அந்த நொடியே..., நீ என் மனசுக்குள் போய் உக்காந்துட்ட. உன்னை சீண்டி விடுவதும், நீ என்னிடம் தோற்றுப் போகும் நொடியில் உன் கண்களில் தெரியும் கனலும், கையாலாகாத தன்மையும், இதெல்லாம் சும்மாடா'ன்னு உன்கிட்டே சொல்ல என் வாய் துறுதுறுக்கும். ஆனா...., எதையுமே கண்ணில் காட்டாமல் அகன்று விடுவேன்...", அவன் உல்லாசமாக உரைக்க, அவளுக்குள் உற்சாக ஊற்று.

“டேய் பொறுக்கி..., அப்போவே என்னை சைட் அடிச்சிருக்க? இது தெரியாமல், உனக்கு என்னை பிடிக்கலைன்னு நான் கவலைப் பட்டேன் பாரேன்...”, அவன் நெஞ்சில் போலியாக குத்தினாள்.

“உன் அப்பா..., உன்னை கல்யாணம் செய்துக்கச் சொன்னப்போ..., நான் ரொம்ப தயங்கினேன். அதுக்கு காரணம், என் மறைந்து கிடக்கும் வாழ்க்கை தான் காரணம். அத்தோடு..., உன் கண்களில் உன்னை மீறி என்மேல் சிறு சலனம் தெரிந்தாலும், வெறுப்பை மட்டுமே வெளிப்படுத்தும் உன்னை, எப்படி சம்மதிக்க வைக்கப் போகிறோம் என்பது எனக்கு பெரிய கவலை...”, அவளை அழைத்துவந்து படுக்கையில் அமர்ந்தான்.

“இது தெரியாமல்..., உங்கப்பா என்னை சாமியார்ட்ட எல்லாம் கூட்டி போய் மந்திரிச்சார் பார். சத்தியமா எனக்கு ரொம்ப காமெடியா இருந்தது. ஆனால், பாவம் அவர் மனசை நோகடிக்க வேண்டாம்னு பேசாமல் இருந்தேன்...”, சொல்லியவன் பொங்கிச் சிரிக்க, அவனை செல்லமாக குத்தினாள்.

“ஏய்..., என் அப்பாவையே கிண்டல் பண்றியா?”, போலி கோபம் காட்ட, அதை ரசித்தவன்,

“உன் மனசு ஓரளவுக்கு எனக்குப் புரிந்தாலும், எங்கே உன்னை கட்டாயப்படுத்துகிறோமோ என்ற கவலையும், உனக்கு என்னை பிடிக்கவே இல்லையோ என்ற கவலையும் சேரத்தான், அன்னைக்கு மண்டபத்தில் உன்னிடம் கேட்டேன்.

“அதற்கு நீ நேரடியாக பதில் கொடுக்கவில்லை என்றாலும், உன் பதில் எனக்கு பெரிய நிம்மதியை கொடுத்தது. ஆனா இப்போதானே தெரியும், அம்மணிக்கு காதலை கூட கண்டுபிடிக்கவோ, சொல்லவோ தெரியாதுன்னு...”, இப்பொழுது அவன் சீண்ட..., நிஜமாகவே அவனை மொத்தினாள்.

அவற்றை சுகமாக பெற்றுக் கொண்டவன், “நிஜமாவே ஐஷூ..., நேத்து நீ அந்த வெள்ளைக்காரனை ஹக் பண்ணாதப்போ..., எனக்கு எப்படி இருந்தது தெரியுமா...? கண்டிப்பா அதை நீ செய்திருந்தாலும் நான் தவறாக எடுத்திருக்கப் போவதில்லை.

“ஆனால்..., இது வேற மாதிரி..., அதாவது...., இந்த உலகத்திலேயே..., உன்னை சாதாரணமாகவோ..., அசாதரணமாகவோ..., முழுமையாகவோ உணர முடியும் என்றால்..., அது என்னால் மட்டுமே முடியும். அது ஒரு கர்வம்..., அது எனக்கு நீ கொடுத்தது..., அதான் நேத்து, காரிடார் என்று கூட பார்க்காமல்...”, அவன் இழுக்க, அவன் செய்கைக்கான காரணம் இப்பொழுது அவளுக்கு தெளிவாக புரிந்தது.

“அதற்காக..., உன்மேல் ஓவர் பொசசிவ் என்று சொல்ல மாட்டேன். அதேபோல், ஆண்களையே நீ பார்க்கக் கூடாது, பேசக் கூடாது அப்படி எண்ணும் ஆள் இல்லை. இது வேற மாதிரி..., உனக்குப் புரியுது தானே...”, அவன் தன் செய்கையை அவள் தவறாக எண்ணிவிடுவாளோ, என தவிப்பாய் அவள் முகம் பார்த்தான்.

“ஏய்..., எனக்குப் புரியுதுடா. நம் திருமணம் முடிந்த இந்த ஆறு மாதங்களில், ஒரு நாளாவது நீ என்னிடம் அப்படி நடந்து கொண்டிருக்கிறாயா என்ன? எனக்கு உன்னைத் தெரியும்...?”, அவன் தோள் சாய்ந்தாள்.

“எனக்கு ஒரு சின்ன சந்தேகம்..., நான் உன்கிட்டே அவ்வளவு கோபப்பட்டு பேசி, ஒதுக்கும்போதேல்லாம்..., உன்னால் எப்படி என்னை மன்னிக்க முடிந்தது...? நான் ரொம்ப சின்னத்தனமா நடந்து கொண்டேன் தானே...”, குரல் மெலிய அவள் கேட்க,

“மன்னிக்கும் அளவுக்கு நீ என்ன தவறு செய்தாய் ஐஷூ...? உனக்கு என்மேல் கோபப்பட எல்லா உரிமையும் இருக்கு. நான் உன்னை மனதார விரும்பி கல்யாணம் செய்துகிட்டேன். அப்படி உன்னை, உன் பேச்சுக்காக வெறுத்தால்..., என் காதல் எப்படி உண்மையாக இருக்கும்?

ஆனால்..., பணம் குறுக்கே வரும்பொழுது தான்..., எனக்கு வருத்தமா இருக்கும். ஆனால், அதை என்னால் ஒரு நாள் போக்க முடியும் என்பதால், அதை நான் பெரிதாக எடுக்கவில்லை...", அவன் உரைக்க, சட்டென அமைதியானாள்.

தன்னை மீட்டவள்..., "எனக்கு ஒரு சந்தேகம்..., என்னை காதலிச்சு கல்யாணம் பண்ணவன்..., பிறகு எப்படிடா உன்னால் தள்ளியிருக்க முடிந்தது...? சாதாரணமா அலைந்தாய்...", புகார் வாசித்தாள்.

"என்னது..., சாதாரணமா இருக்குறதா? அடிப்பாவி..., ஒவ்வொரு நாள் ராத்திரியும்..., இந்த ரூமுக்குள் கொந்தளித்துப் போனது எனக்கு மட்டும் தானே தெரியும். அதிலும்..., அந்த நைட்டி..., ஐயோ..., உனக்கு யார் அதை வாங்கிக் கொடுப்பது?

"அதைவிட பெரிய சந்தேகம்..., 'உள்ள' போடுறதை கூட மேச்சிங்காதான் போடுவியா? அம்மாடி..., முழுசா பாக்கவும் முடியாமல், பார்வையை திருப்பவும் முடியாமல், அதைவிட, ராத்திரி..., பச்சக்குன்னு வந்து ஓட்டிகிட்டு..., ஹையோ..., ஒவ்வொரு ராத்திரியும் சத்திய சோதனையை கொடுத்துட்டு...", அவன் இன்னும் சொல்லிக்கொண்டே போக,

"பொறுக்கி..., பொறுக்கி..., நானும், நீ என்னவோ ரொம்ப நல்லவன்னு எதார்த்தமா இருந்தால்..., இப்படியா செய்வ?", வெட்கமும், பூரிப்பும் போட்டியிட அவனை அடித்தாள்.

"முதல் நாளே இது நடந்ததுன்னா...? உன் மனசுக்குள் நான் அப்போவே இருந்தேன்னு உனக்குப் புரியவே இல்லையா ஐஷூ. அதுவும், முதல் நாளே என்னைத் தொட்டு அடித்து..., நிஜமாவே அப்போ, உன்னை ஒரு நொடி அப்படியே இறுக்கி அணைச்சு..., உன் வாயில் என்னோட வாயை அழுத்தமா புதைஞ்சுக்க எழுந்த ஆவலை அடக்க நான் எவ்வளவு சிரமப்பட்டேன் தெரியுமா...?", அன்று விட்டதை, இன்று செயல்படுத்த, ஆர்வமாக அவனோடு இணைந்துகொண்டாள்.

அவன் அவளை விட்டு விலக, தான் இன்னும் முக்கியமாக பேச வேண்டியதை பேசவில்லை என்பதை உணர்ந்தவள், “வினு…, நீ சொல்வது”, அவள் துவங்க,

“ப்ளீஸ் ஐஷூ…, முடிந்தது முடிந்ததாகவே இருக்கட்டும். என்னால் அங்கே போவதை நினைத்துப் பார்க்கவே முடியலை…”, அவன் அவளை தடுத்தான்.

“நீ சொல்வது…, உயிரோட அவங்க இருந்தால் சரி. ஆனால்…, இப்போ…, நீ அங்கே எல்லாத்தையும் சரி செய்யணும்? கட்டி ஆள ஆள் இல்லன்னா, எல்லாம் பாழா போய்டும். உனக்கு உயிர் கொடுத்தவங்களுக்கு, நீ உன் கடமையை செய்தே ஆகணும்…”, ஒரு முடிவோடு உரைத்தாள்.

தன் கணவனின் அடையாளம்…, அவன் பின்னால் இருக்கும் பெயருக்கான மதிப்பு, அதை இழக்க அவள் தயாராக இருக்கவில்லை. அவன் பணத்தை விட, அவன் அடையாளம் முக்கியம் என அவள் எண்ணினாள்.

ஒரு சாம்ராஜ்யத்தை அமைப்பதும், கட்டி எழுப்புவதும், அதை கட்டமைப்பதும், வளர்ப்பதும் எவ்வளவு சிரமமென்று அவளுக்குத் தெரியும். அது அவனுக்கும் தெரியும் தான்…, ஆனாலும், அவன் மனதுக்குள் இருக்கும் வெறுப்பு அதை செய்ய முடியாமல் தடுப்பதை உணர்ந்தாள்.

நிச்சயம் தன்னால் அதை மாற்ற முடியும் என எண்ணினாள். அவனுக்குச் சொல்லி புரிய வைக்க முயன்றாள். ஆனால்…, அதை அவன் கேட்க தயாராக இருக்கவில்லை. விஷயத்தை ஆறப்போட்டால் தான் சரி வரும் என உணர்ந்தவள், அதையே செய்தாள்.

***

# பகுதி - 37.

இரவு உணவுக்காக தயாராகி கீழே சென்றவர்கள், ஸ்ரீராமின் முகத்தில் கலக்கத்தைப் பார்த்தவன், “மாமா..., நான் என்னைக்கும் உங்க மருமகன் வினித் மட்டும் தான். தேவையில்லாமல் மனசை போட்டு குழப்பிக்காதீங்க...”, முதலிலேயே உரைத்துவிட, அமைதியாக இருந்துகொண்டார்.

தன் தந்தையிடம் தேவையான விஷயங்களை மட்டும் உரைத்தவள், தான் இன்னும் இரண்டு நாளில் பரமனுக்கு பதில் சொல்வதாக சொல்லியிருப்பதையும் அவரிடம் தெரிவிக்க, அவள் முடிவு சரிதான் என்பதை அவரும் ஒத்துக் கொண்டார்.

ஆனால்..., அவன் வாழ்க்கை மும்பையில் என்றால், அவள் வாழ்க்கை எங்கே இருக்கும்? அவர் அந்த கேள்வியை கேட்க, “நான் அங்கே போவதை அவரே விரும்ப மாட்டார் டேட்...”, அவள் பதிலை கேட்டவாறே அங்கே வந்த வினித், “ஐஷூ..., சரியா சொல்லிட்டா மாமா. அதோட என்னோட வாழ்க்கையும் இங்கே தான்...”, தெளிவாக உரைத்தான்.

அவன் பதில் ஒரு பக்கம் சந்தோஷத்தை அளித்தாலும், இது நடைமுறைக்கு சாத்தியம் இல்லை என்பதை உணர்ந்த ஸ்ரீராம் அதை அவனிடம் தெரிவிக்கவில்லை.

அன்றைய நாளும், அடுத்த நாளும் இவ்வாறே கழிய, இன்னும் ஒரு நாள் தான் இருக்கிறது என்பதை உணர்ந்தவளுக்கு தவிப்பாக இருந்தது. அதே நேரம்..., தான் இன்னும் மருத்துவமனைக்குச் செல்லவில்லை என்பதை அறிந்தவளுக்கு, முதலில் அதைச் செய்யவேண்டும் எண்ணினாள்.

தான் அவனிடம் சொல்லும் விஷயமும், தன் கர்ப்பமும் அவனை இக்கட்டான சூழலில் நிறுத்திவிடும் என்பதை உணர்த்த, அவன் தங்கள் அலுவலகத்தில் தீயணைப்புக் கருவி பொருத்துவதைப் பற்றி பேச கவர்மென்ட் ஆபீஸ் செல்வதை பயன்படுத்திக்கொள்ள முடிவெடுத்தாள்.

கிரியை அழைத்தவள், “ஹாஸ்பிடல் போகணும். ஆனால் யாருக்கும் அது தெரியக் கூடாது புரியுதா? உன் விசுவாசத்தை இதில் கொஞ்சம் தள்ளி வை...”, கட்டளையாக உரைக்க, வேகமாக தலையை அசைத்தான்.

மருத்துவமனைக்குச் சென்றவள், சோதனை முடிவிற்காக காத்திருக்க, அவர்கள் பேமிலி டாக்ட்டரின் மகள், மருத்துவர் தேவயானி அவளை அறைக்கு அழைத்தாள்.

அவள் எதிரில் சிறு படபடப்போடு அமர்ந்திருக்க, “தேவி..., உங்களுக்கா டென்ஷன்...? என்னால் நம்பவே முடியலை. உரைத்தவள், “நீங்க அம்மா ஆகப் போறீங்க. அதே நேரம்..., சரி எங்கே மிஸ்டர் தேவி?”, அவள் வினவ,

“இப்போ அவர் எதுக்கு? எதுவா இருந்தாலும் என்கிட்டேயே சொல்லுங்க...”, அவள் குரல் பிடிவாதமாக ஒலிக்க, வேறு வழியின்றி போனது.

“தேவி..., ஒரு கருவை தாங்கும் அளவுக்கு நீங்க வலுவா இல்லை. நீங்க ஹெல்த்தியா இருந்தால் தான் பேபி ஹெல்த்தியா இருக்கும். ஆனா..., நீங்க இப்போ கொஞ்சம் உங்களை ஸ்ட்ரெயின் செய்தாலும்..., குழந்தை...”, அவள் சொல்லிக்கொண்டே போக,

“போதும் தேவயானி..., என் குழந்தை எனக்கு முக்கியம், அவ்வளவுதான்...”, வழக்கம்போல் அவள் பிடிவாதத்தை நொந்தவள், அடுத்த வாரம் முதல் ஸ்கேன் எடுக்கணும், சோ..., மிஸ்டர் தேவியை கூட்டி வா...”, அவள் உரைக்க,

“அவர் மிஸ்டர் தேவி இல்லை..., நான் தான் மிஸ்ஸஸ் வினித் சக்சேனா”, அவள் குரலில் ஒலித்த பாவனையில், வாயடைத்துப் போனாள் தேவயானி.

“வினித் சக்சேனா...? ஹேய்..., இன்னைக்கு காலையில் டிவியில் இந்த பெயரை கேட்ட ஞாபகம் இருக்கே. விஜே டயர்ஸ் எம்டி..., நிஜமாவா...?”, ஆச்சரியத்தில் அவள் கூட, அவள் உரைத்த செய்தியில் திகைத்துப் போனாள் ஐஸ்வர்யா.

“டிவியில்..., என்ன சொல்ற...?”, நம்ப முடியாமல் கேட்க, “அட..., ஆமாப்பா, அவங்க அப்பா மிஸ்டர் சக்சேனாவும், மிசஸ் சக்சேனாவும் ஹாஸ்பிடல்ல இறந்துட்டதாகவும், அவங்க மகன் வினித் சக்சேனா வரவுக்காக காத்திருக்கிறதாவும் நியூஸ்ல சொன்னாங்களே? உங்களுக்கு விஷயமே தெரியாதா...?”, நம்ப முடியாமல் கேட்டாள்.

‘அப்படின்னா..., பரமா செக் வைக்கறான். இதில் இருந்து எப்படியும் வினித்தால் தப்பிக்க முடியாது. இவ்வளவு நாள் எங்கே இருக்கிறான் எனத் தெரியாமல் அமைதி காத்தவன், வினித் இருக்கும் இடம் தெரியவே, அவன் கடமையைச் செய்கிறான்...’, கோபத்தை விட, வினித் இங்கே இருக்க மாட்டான் என்பதுதான் பிரதானமாக இருந்தது.

அவளுக்கு பதில் கொடுக்காமல், அங்கிருந்து கிளம்பிவிட்டாள். மறுநாள் காலையில் கால் செய்யும் அவனுக்கு என்ன பதில் சொல்லப் போகிறோம்? மிகப்பெரும் கேள்வியாக எழுந்து அவளை மிரட்டியது.

என்ன ஆனாலும், அவனை கொஞ்சநாள் தான் விட்டுக் கொடுத்துதான் ஆக வேண்டும் என்ற உண்மை முகத்தில் அறைய, அதை எதிர்கொள்ள முடியாமல் துவண்டு போனாள்.

முயன்று தன்னை சமன் செய்தவள், அலுவலகத்தில் தீவிர சிந்தையோடு அமர்ந்து கொண்டாள். தன் வயிற்றில் இருக்கும் குழந்தையின் நினைவு வர, இந்த நல்ல செய்தியை அவனிடம் மறைக்கிறோம்..., என வருத்தமும், தான் பலகீனமாக இருப்பது பற்றி தேவயானி உரைத்ததும் சேர, திடனாக இருக்க முடியாமல் சோர்ந்தாள்.

வெளியே தன் வேலையை முடித்துவிட்டு அலுவலகம் வந்தவன், அவளது சோர்ந்த முகம் பார்த்து, மென்மையாக கடிந்து கொண்டான். அவளோ, செய்தி விஷயத்தை உரைக்க, “ஓ...”, ஒற்றை வார்த்தையில் இழுத்தவன், அதற்குமேல் எந்த முக்கியத்துவமும் அளிக்கவில்லை.

அதுவே அவளை மேலும் சோர்ந்து போகச் செய்ய, “வினு..., நான் சொன்னால் கேப்பீங்க தானே. ஜஸ்ட் போயிட்டு உங்க கடமையை முடிச்சுட்டு வாங்க. இப்போ விஷயம் வெளியே வந்துட்ட பிறகு, இன்னும் நீங்க இங்கே தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும், அது உங்கள் இம்மேஜை பாதிக்கும்...”, தன் வருத்தம் மறைத்து உரைத்தாள்.

அவனுக்கும் அது தெரிகிறது தான். ஆனால்..., அவளை விட்டுச் செல்வது என்றால்..., அதுவும் அங்கே சென்று எத்தனை நாளில் தன் விஷயங்களை முடிப்பான் என அவனுக்கே நிச்சயம் இல்லாத பொழுது, அதை சட்டென செய்ய அவனால் முடியவில்லை.

அவன் அமைதியே அவன் யோசிப்பதை பறை சாற்ற, “கண்டிப்பா யோசிங்க...”, தன்மையாகவே உரைத்தாள்.

தலை ஆட்டியவன், அலுவலகத்தில் வேலையை கவனிக்கச் செல்ல, விம்மும் மனதை அடக்க வழியின்றி தவித்தாள். அவள்தான் அவனை போகவும் சொல்கிறாள், அதே நேரம்..., தவிக்கவும் செய்கிறாள் அவள் மனதை அவளால் புரிந்துகொள்ளவே முடியவில்லை.

மறுநாள் காலை.., விடிந்தும் விடியாத வேளையில், அவர்கள் வீட்டின் முன்பு, படகுக் கார்கள் பல அணிவகுக்க, அதைப் பார்த்த கூர்க்கா அலறியடித்துக்கொண்டு, அவர்களை அழைத்தான்.

காரில் இருந்து இறங்கியவர்கள் வீட்டுக்குள் கம்பீரமாக நுழைய, மாடியில் ஹாலில் இருந்து பார்த்த ஐஸ்வர்யாவுக்கு கண்கள் கலங்கும்போல் இருந்தது. அலைபேசியில் அழைப்பு வரும் என அவர்கள் எதிர்பார்க்க, வீட்டுக்கே வந்து இறங்கினால்..., அவளும் என்னதான் செய்வாள்?

‘இப்போ என்ன செய்ய...?’, தன் அருகில் நின்ற கணவனை ஏறிட, முகத்தில் எதையும் காட்டாமல் அவளையே வெறித்தான். ‘எனக்கு இப்படித்தான் ஆகுமென்று தெரியும்...’, அவன் பார்வை ரகசிய செய்தி உரைத்தது.

“சார்…, ப்ளீஸ்…”, கீழே இருந்து அவர்கள் குரல் கொடுக்க, “வெயிட்…”, குரல் கொடுத்தவன், அறைக்குள் நுழைந்து கொண்டான்.

‘போய்தான் ஆக வேண்டும். இனிமேல் தவிர்க்க முடியாது…’, மனதுக்குள் புலம்பியவன், தன் அருகில் வந்தமர்ந்த மனைவியை ஏறிட்டான்.

அவனுக்கு ஒரு பக்கம் அவளை தன்னோடு அழைத்துச் செல்லவேண்டும் என்ற வேகம் இருந்தாலும், அவன் உலகத்துக்குள் நுழைந்துவிட்டால், அவன் நேரம் அவனுக்கானதாக இருக்கப் போவதில்லை. கண்டிப்பாக அங்கே நேராக்க வேண்டிய விஷயங்கள் எக்கச்சக்கம் குவிந்திருக்கும்.

இந்தியாவும், வெளிநாடும் அவனை அலைக்கழிக்கும்…, அந்த நேரம், அவளை அங்கே மும்பையில் விட்டுச் செல்வதோ…, தன்னோடு அழைத்துச் செல்வதோ முடியாத காரியம்.

அதைவிட, அவளுக்காக வெளிநாட்டு கம்பெனியோடு அவன் செய்த ஒப்பந்தத்துக்கான வேலைகள் உடனே நடந்தாக வேண்டும். அதற்கு ஐஷ்வர்யா இங்கே இருந்தே ஆக வேண்டியது கட்டாயம். அவனால் தன் புது மனைவியை பிரிவது பெரும் துன்பமாக இருந்தது.

அவன் சக்திக்கு கெலிகாப்டரில் அவளை தூக்கிச் செல்வது ஒன்றும் அவ்வளவு முடியாத காரியமாக இருக்கப் போவதில்லை. ஆனால்…, அவள் வளர்ச்சிக்காக தான் செய்த விஷயம் அவன் கை, காலை கட்டிப் போடுவதை ஒரு இயலாமையாய் உணர்ந்தான்.

‘இந்த பரமாவை நான் இப்போழுதா சந்தித்திருக்க வேண்டும்…?’, தன் நண்பன் என்றும் பாராமல், அவனை மனமார சபித்தான். அதே நேரம், அவள், அவன் தோள் தொட, தன் சிந்தையை நிறுத்தியவன்…, நடப்புக்குத் திரும்பினான்.

“கிளம்பணும்..., போகணும்..., நீ இல்லாமல் நான் எப்படி இருப்பேன்? நான் இல்லாமல் நீ இருந்து விடுவாயா? என்னைக்கு எப்போ வருவேன்னு தெரியாது...”, அவன் வருத்தத்தில் புலம்ப, ஏற்கனவே மனதுக்குள் தவித்துக் கொண்டிருந்தவள், அவனை இறுக அணைத்துக் கொண்டாள்.

“என்னால் முடியாது ஐஷூ..., அதே நேரம்..., உன்னை அழைத்துக்கொண்டு செல்லவும் முடியாது...”, புலம்பியவனின் அணைப்பு இறுக, தவித்துப் போனாள்.

‘போகாதே...’, அவளுக்கு உரைத்துவிட விருப்பம்தான். ஆனால்..., அதைச் செய்யக் கூடாது.., தன்னை கட்டுப்படுத்திக் கொண்டாள்.

“உன்னை விட்டுட்டு..., எப்படி...?”, புலம்பியவன், அடுத்த நொடி, அவளை எலும்புகள் உடையும் அளவு அணைத்தவன், அவள் கன்னம் தாங்கி, அவள் இதழ்களில் புதைந்து போனான். அவளை விட்டுச் செல்ல வேண்டும் என்ற நினைப்பே அவனை செயல்பட வைக்க,

“ஐஷூ..., ஐஷூ...”, தவிப்பாய் அழைத்தவன், முரட்டுத்தனமாய் அவளை உணர முயன்றான். அப்படியே அவனோடு கரைந்துவிட அவள் துடித்தாலும், சட்டென தேவயானியின் வார்த்தைகள் காதில் வந்து அறைய, அவனை விலக்க முயன்றாள்.

“அங்கே எல்லாரும் வெயிட் பண்றாங்க...”, அவனை கலைக்க முயன்றாள்.

“பத்து நாள் ஆனாலும் அவங்க நிப்பாங்க...”, உரைத்தவன்..., அவள்மேல் சரிந்து, தன் தவிப்பை அவளுக்கு உணர்த்த, விதிர்த்துப் போனாள்.

‘இது’ நடக்கவே கூடாது என தனிப்பட்ட விதத்தில் தேவயானி சொல்லி அனுப்பினாள்..., அப்படி இருக்கையில்..., ‘இல்லை இது கூடாது...”, தனக்குள் புலம்பியவள், அவனை விலக்குவதில் முனைய,

அவனோ..., "ப்ளீஸ் ஐஷூ...", அவள் விலகலை தாங்க முடியாமல் கெஞ்சினான்.

அவன் செய்கையில், அவள் தேகமும் குழைய, இதற்குமேல் தான் உடன்பட்டுவிடுவோம் என்பது புரிய, அதே நேரம், தனக்கு ஒன்று என்றால்..., அவன் தாங்க மாட்டான் என்பதும் சேர, "வினு, வேண்டாம்..., உன் முரட்டுத்தனத்தை நான் தாங்குவேன்..., ஆனால்.., நம் பிள்ளை தாங்காது", வேறு வழி இல்லாமல், உண்மையை உரைத்தே விட்டாள்.

ஒரு நிமிடம் தன் செய்கையை நிறுத்தியவன், அவள் உரைத்ததை சற்று கிரகித்தவன், சட்டென அவளை விட்டு விலகி அமர்ந்தான். "ஐஷூ...", சந்தோஷமும், சிறு கோபமும் போட்டி போட, உற்சாக மிகுதியில் கத்தியே விட்டான்.

"ஐஷூ..., நி..ஜ..மாவா...? நம்..., நீ..., குழந்தை...", அவனால் பேசவே முடியவில்லை. கை கூட கொஞ்சம் நடுங்கியது. தான் தந்தை ஆகிவிட்டோம் என்ற உணர்வே..., எதையோ சாதித்துவிட்ட உணர்வை, ஆயிரம் பூக்களை தலையில் ஒன்றாக கவிழ்த்ததுபோல், தன் வாழ்க்கைக்கே ஒரு அர்த்தம் கிடைத்ததுபோல், சந்தோஷ மிகுதியில் கண்களில் கண்ணீர் வழிந்தது.

அவன் நிலை உணர்ந்தவள், அவன் கைகளை பற்றி, தன் அடி வயிற்றில் வைத்தவள், "நம்ம குழந்தை..., நீ சொன்னியே..., காதலோட உச்சத்தில் உன் குழந்தை உருவாகணும்னு..., என் காதலுக்கு சாட்சியா..., உன் காதலோட உச்ச பரிசு..., நீ அப்பா ஆகப் போற...", அவள் உரைக்க,

தன் கைகளை உருவிக்கொண்டு, அவள் மடியில் தலை கவிழ்ந்தவன், கேவலாக சற்று கதறியே விட்டான். "டேய்..., ஏண்டா...?", அவன் தலை கோதியவள், ஒரு குழந்தையை சமாதனப்படுத்தும் குரலில் கேட்டாள்.

'ஒன்றும் இல்லை' என தலை அசைத்தவன், அந்த நிமிடத்தை ஆழ்ந்து அனுபவித்தான். அடுத்த நொடி,

அவளை ஆயிரம் முத்தங்களால் அர்ச்சித்தவன், “ஐ லவ் யூ...., ஐ லவ் யூ ஐஷூ...”, முத்தங்களுக்கிடையில் அவன் உரைக்க, இதை இழக்க முடியாது என்றே அவளுக்குத் தோன்றியது.

ஆனாலும்..., அவனுக்காக காத்திருக்கும் நபர்களின் நினைவு வர, “வினு.., எல்லாரும் காத்துட்டு இருக்காங்க....”, அதை நினைவுபடுத்தும் வேளையில், தன் செய்கையை அவளே அறவே வெறுத்தாள்.

“ஆமால்ல..., ஆனா...., உன்னைவிட எனக்கு எதுவும் முக்கியம் இல்லை. அதே நேரம்..., என் கடமையையும் நிச்சயம் நிறைவேற்றுவேன்...”, அவளை விட்டு விலகி அமர்ந்தவன்,

“எப்போ ஹாஸ்பிடல் போன...?”, அவன் கோபத்தை முதல் முறையாக எதிர் கொள்கிறாள். வார்த்தைகளில் கோபம் தெறிக்காமல், குரலில் தெறித்த கோபம்..., உள்ளுக்குள் சற்று நடுங்கினாலும், அவன் தன்னை நிச்சயம் காயப்படுத்த மாட்டான் என்ற நம்பிக்கை கொடுத்த தைரியம்...,

“நேத்து..., நீங்க ஃபயர் ஆபீஸ் போயிருந்தப்போ போனேன்...”, தயங்கினாலும், அவன் முகம் பார்த்து பதில் உரைத்தாள்.

“ஓ..., சரி கிளம்பு..., இப்போ நாம ஹாஸ்பிடல் போகலாம். யார் டாக்டர்...? எந்த ஹாஸ்பிடல்...?”, அவன் தன் அலைபேசியை எடுக்க, அவனுக்காக காத்திருப்பவர்களைப் பற்றி உரைக்க அவளுக்கு நா எழவில்லை.

‘நானே பார்த்துவிட்டேன்...’, அவனை தடுக்கவும் முடியவில்லை. தன் அலைபேசியை எடுத்துகொண்டு கீழே சென்றவன், வந்தவர்களிடம் என்ன உரைத்தான் என்பது அவளுக்குத் தெரியாது. ஆனால்..., அடுத்த பத்து நிமிடங்களில் அனைவரும் கிளம்பிச் சென்றிருந்தனர்.

அவர்கள் செல்லவே..., தானே காரை எடுத்தவன், அவளோடு மருத்துவமனைக்குள் நுழைந்தான். "அண்ணா நீங்களா...? போச்சுடா..., நான் எங்கே போனாலும் என்னை விட மாட்டீங்களா? ஜெனரல் வார்ட்ல இருந்து மெட்டனிட்டி வார்ட் வந்தால்..., இங்கேயுமா? என் குட்டி நெஞ்சு தாங்காதுண்ணா...", ஐஸ்வர்யாவுக்கு கால் சுழுக்கிய அன்று பார்த்த அதே நர்ஸ், அவனைப் பார்த்து அலறினாள்.

அவள் செய்கையில் வாய் விட்டே சிரித்துவிட்டான். ஐஸ்வர்யா அவளை புரியாமல் பார்க்க..., "அண்ணா.., அங்கே பாருங்க, எவடா இவன்னு பாக்குறாங்க பாருங்க. அந்த அளவுக்கு அன்னைக்கு உங்களைத் தவிர யாரையுமே அவங்க கண்ணுக்குத் தெரியலை பாருங்க. மேடம்..., வேண்டாம் நான் அழுதுடுவேன்...", தன் கண்களில் வழியாத கண்ணீரை துடைத்துக் கொண்டாள்.

இப்பொழுது ஐஸ்வர்யாவுக்கே கொஞ்சம் சிரிப்பு வரும்போல் இருந்தது. "டாக்டர் தேவயானியைப் பாக்கணும்..., இருக்காங்களா?", அவன் கேட்க, "ஓ..., இருக்காங்களே..., இப்போ விஜபி டைம்..., சோ..., ப்ரீயாத்தான் இருக்காங்க, நீங்க போங்க...", நேற்றே அவள் விவரங்கள் உரைத்திருந்ததால், நேரடியாக தேவயானியை சந்திக்கச் சென்றனர்.

"ஹல்லோ மிஸ்டர் வினித்..., வாங்க..., நேத்தைக்கே நான் உங்களை எதிர் பார்த்தேன்...", தோழமையாக வரவேற்றவள், அவன் கேட்ட கேள்விகள் அனைத்துக்கும் பொறுமையாகவே பதில் உரைத்தாள்.

"ஐஷூ ரொம்ப வீக்கா இருக்காளா டாக்டர்...?", இறுதியாக அவன் மீண்டும் கேட்க, "ரொம்பன்னு சொல்ல முடியாது, பட் வீக்கா இருக்காங்க. புல் பெட் ரெஸ்ட் வேணும். சத்தான சாப்பாடு சாப்பிடணும்..., அவங்க சாப்பிடுற சேண்ட்விச்..., பட்டர் ப்ரெட்..., இதெல்லாம் குழந்தைக்கு பத்தாது...", பதில் உரைத்தாள்.

"நெக்ஸ்ட் வீக் ஃபஸ்ட் ஸ்கேன் எடுக்கணும்..., அப்போதான் தெளிவா சொல்ல முடியும்...", முடித்தாள்.

“ஓகே டாக்டர்..., தேங்க்ஸ்...”, எழுந்து விட்டான். தான் அவளோடு இருக்க வேண்டிய அவசியம் புரிந்தது. இந்த நேரம் அவளை விட்டு அவனால் நிச்சயம் செல்ல முடியாது. அதைவிட, ஒரு குழந்தையை தாங்கும் அளவு அவள் வலுவாக இல்லை என்று சொன்னது வேறு மனதை வலிக்கச் செய்தது.

அவன் அமைதி அவளை வதைக்க, கியர் கம்பியின்மேல் இருந்த அவன் கையை அழுத்தியவள், ‘என்ன?’ என்பதுபோல் அவனைப் பார்த்தாள்.

“தப்பு பண்ணிட்டேன் ஐஷூ..., உன் ஹெல்த்தை நான் முதல்ல செக் பண்ணியிருந்திருக்கணும், இப்போ பார்...., நீ வீக்கா இருந்திருக்க, அது தெரியாமல்..”, அவன் கவலையாக உரைக்க, திடுக்கிட்டாள்.

“ம்ச்..., டாக்டர் எல்லாம் அப்படித்தான் சொல்வாங்க..., இதுக்கெல்லாம் பயப்பட்டால் முடியுமா? இனிமேல் கவனமா இருந்துக்கறேன்...”, அவனுக்கு பதில் உரைத்தாள்.

வீட்டுக்கு வந்தவன், அவளை அறைக்கு அனுப்பிவிட்டு, முதலில் சென்றது துரையிடம் தான். தன் மனைவியின் உடல் நிலையை அவரிடம் உரைத்தவன், “அவளுக்கு ஹெல்த்தி ‘புட்’ கொடுக்கணும். அவளுக்கு பிடித்த மாதிரியும் இருக்கணும்..., யாராவது உங்களுக்குத் தெரிஞ்சவங்க இருக்காங்களா?”.

அவன் உரைத்த விஷயத்தைக் கேட்டு சந்தோஷமானவர், “என்ன தம்பி இப்படி கேட்டுட்டீங்க...? என் ஒண்ணு விட்ட தங்கச்சி..., பேரன் பேத்தி எல்லாம் பாத்தவ, கிராமத்து மருத்துவச்சின்னு சொல்லுவாங்க. அதே நேரம் நல்ல கைப்பக்குவமா சமைப்பா..., அவளை வேண்ணா வரச் சொல்லட்டுமா? பாத்து பதமா செய்வா...”, அவர் உரக்க, வினித்தின் முகம் பிரகாசமானது.

அவனுக்கு ஒரு அனுபவம் வாய்ந்த பெண் வீட்டில் இருப்பது நல்லது என உணர்ந்ததாலேயே அவ்வாறு செய்தான்.

மேலும் ஸ்ரீராமிடம் சென்றவன், விஷயத்தை உரைக்க, சந்தோஷ மிகுதியில் அவனை இறுக கட்டிக் கொண்டார்.

“வாழ்த்துக்கள் வினித்..., எனக்கு ரொம்ப சந்தோசம்...”, தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். அதே நேரம்..., அவன் செல்ல வேண்டுமே என்ற கவலையில் அவர் முகமும் வாடியது.

அதை உணர்ந்தவன், “நீங்க கவலைப்படாதீங்க மாமா. நிச்சயம் இதுக்கு நான் ஒரு வழி பண்றேன்...”, உரைத்தவன், அறைக்குச் சென்று சற்று யோசனையாகவே சுற்றிக் கொண்டிருந்தான்.

அடுத்த சில நிமிடங்கள்..., ஏகப்பட்ட அலைபேசி அழைப்புக்களை செய்தவன், இறுதியாக முகத்தில் நிம்மதி பூக்க, அவள் அருகில் அமர்ந்தான். பேச்சையே மறந்துவிட்டவள் போல், அவள் அமைதியாகவே இருக்க, தானும் அதை கலைக்கவில்லை.

சிறிது நேரம் கழிய, “யாருக்கு இவ்வளவு போன் கால்...?”, அவள் கேட்க, கண்டிப்பா சொல்றேன்..., ஆனா..., எல்லாம் நல்லபடியா முடிந்த பிறகுதான். எனக்கு ரெண்டே நாள் தான் டைம் இருக்கு. அதற்குமேல் அவனிடம் எதையும் அவள் கேட்கவில்லை.

அன்றைய இரவில்..., அவளை மிகவும் மென்மையாக அணைத்தவாறு படுத்துக் கொண்டான். அவர்கள் அறையை விட்டு, எதற்காகவும் அவளை கீழே வர அனுமதிக்கவில்லை. அனைத்தையும் அவனே செய்தான்..., சாப்பாடு முதல் அனைத்தும் அவள் படுக்கைக்கே வந்தது.

தன்னை அவன் தாங்குவதைக் கண்டு, நிம்மதியாக தானும் கண் மூடினாள்.

மறுநாள் காலையில்..., ஒரு வயதான பெண்மணி தன் வீட்டில் நடப்பதைப் பார்த்து, புருவம் உயர்த்தியவள், ‘யார்..?’ என அவனை ஏறிட, அவரை அழைத்தவன், “இனிமேல் இவங்கதான் உன்னோட டயட்டை பாத்துக்கப் போறாங்க. நீங்க போங்கம்மா...”, அவரை அனுப்பிவிட்டு,

“உனக்கு பிடிக்கிறதோ இல்லையோ..., கொஞ்ச நாள்..., எனக்காக..., ப்ளீஸ்...”, அவள் கைகளைப் பிடித்து கெஞ்சினான். தனக்கு விருப்பம் இல்லை என்றாலும், அரை மனதாக தலை அசைத்தாள்.

அன்று மதியம்..., “ஐஷூ..., எனக்கு வெளியே கொஞ்சம் வேலை இருக்கு. போயிட்டு வரேன்...”, அவள் நெற்றியில் இதழ் பதித்துவிட்டு விலகிச் சென்றான்.

செல்லும் அவனை தடுக்க மனமின்றி பேசாமலே இருந்தாள். அவனோ, நேராகச் சென்றது சந்தியாவின் வீட்டுக்கு. அன்று விடுமுறை தினமாகையால், படுக்கையை விட்டு எழாமல் இருந்த சந்தியா, வினித் அவளைத் தேடி வந்திருப்பதாக உரைக்க, பரபரப்பானாள்.

வேகமாக தன்னை திருத்திக் கொண்டவள், அவனைப் பார்க்க விரைய, “வினித்..., நீங்க..., ஒரு போன் பண்ணியிருக்கலாமே..., நானே வந்திருப்பேன்...”, கேட்டவள் அவன் எதிரில் இருந்த சோபாவில் அமர்ந்தாள்.

“டேடி.., நான் சொல்லியிருக்கேனே..., மிஸ்டர் வினித்...”, அவள் தந்தையிடம் கேட்க, இருவரும் கை குலுக்கிக் கொண்டார்கள்.

“நீங்க வந்த அன்னையில் இருந்து உங்க புகழ்தான். அதிலும்..., இவளோட மேடத்தை வாயடைக்க வைக்கும் ஒரே ஆள்ன்னு..., புளகாங்கிதம் தான் போங்க...”, அவரும் உரைக்க, “அப்பா..., உங்களை அறிமுகப்படுத்தினால்..., என்னை போட்டுக் குடுக்கறீங்களா? நீங்க கிளம்புங்க...”, அவள் போலியாக கோபம் கொள்ள, வாய்விட்டே சிரித்துவிட்டான்.

அவரும் நாசூக்காக எழுந்து செல்ல, “சொல்லுங்க...”, அவனைத் தூண்டினாள்.

“சந்தியா..., எனக்கு ஒரு உதவி வேணும்..., கண்டிப்பா உன்னால் செய்ய முடியும்...”, அவன் தயங்க,

“அட, சொல்லுங்க..., எதுக்கு இந்த பீடிகை எல்லாம்...”,

“அது.., இனிமேல் கொஞ்ச நாள் ஐஸ்வர்யாவால் ஆபீஸ் வர முடியாது... ஏன்னா...”, விஷயத்தை அவன் உரைக்க, வேகமாக அவன் கையைப் பிடித்து வாழ்த்து தெரிவித்தவள், “அப்போ..., அவங்க வராததற்கு..., நான் உங்க வீட்டுக்குப் போய் என் வேலையைப் பாக்கணும் அதானே...”, நான் ரெடி..., ஆனால் சின்ன கண்டிஷன்...”, அவள் கண்கள் மின்ன அவனுக்கு நிபந்தனை விதிக்க,

“இப்போ என்ன..., உனக்கும் கார்த்திக்குக்கும் நான் பேசி கல்யாணம் பண்ணி வைக்கணும்..., அதானே..., நான் ரெடி...”, அவன் வேகமாக உரைத்தான்.

“நிஜமாவா...?”, அவள் குதூகலிக்க, அது மட்டும் இல்லை..., இன்னும் உனக்கு பெரிய சர்ப்ரைசே இருக்கு. அவனே உங்க வீட்டுக்கு வந்து உன்னை பெண் கேட்பான் அதுக்கு நான் கேரண்டி...”, அவன் நம்பிக்கையாக உரைக்க, அவனை நம்ப முடியாத திகைப்பில் ஏறிட்டாள்.

***

# பகுதி - 38.

வினித் உரைத்ததை..., அவளால் நம்பவும் முடியவில்லை, நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. அதையே அவள் விழிகள் வெளிப்படுத்த, “என்ன நம்ப முடியலையா...?”, அவளிடம் கேட்க, எல்லா பக்கமும் தலை அசைத்தாள்.

“ம்கும்..., உங்க ஸ்டாட்டிங் எல்லாம் நல்லாத்தான் இருக்கு, ஆனா பாருங்க ஃபினிஷின் சரியே கிடையாது. அவன் உங்களை எல்லாம் முழுங்கி ஏப்பம் விட்டுடுவான். சரியான கல்லுளி மங்கன்...”, நொடித்தாள்.

“அவனே வந்து உன்கிட்டே காதலைச் சொல்லி, உன்னை கை பிடிப்பான். ஆனால்..., அதுக்கு நீ இன்னும் கொஞ்ச நாள் காத்திருக்கணும். என்னால் இப்போ எதையும் செய்ய முடியாத சூழ்நிலையில் நான் இருக்கிறேன். ப்ளீஸ்...”, தனக்கு காத்திருக்கும் வேலைகளில் அவன் முகம் வாடிப் போனது.

அதைப் பார்த்தவள்.., “வினித்..., நீங்க இவ்வளவு சொல்லும்போது..., கண்டிப்பா நான் காத்திருக்க தயார். நீங்க கவலையே படாதீங்க.”, உரைத்தவள், அப்பொழுதுதான் நினைவிற்கு வந்தவளாக, “எல்லாம் சரி..., நீங்க எங்கே போறீங்களாம்..”, அவனை வினவ,தன் நிலையை அவளுக்கு விளக்க, அவன் உரைத்து முடிக்கும் வேளை, அவள் முகத்தில் ஈயாடவில்லை.

அவன் உயரம் அவளையும் மிரட்ட, அந்த நினைப்பு கொஞ்சம் கூட இல்லாமல், வெகு சாதாரணமாக தன் முன்னால், மனைவிக்காக கெஞ்சும் அவனை நம்ப முடியாத திகைப்பில் வெறித்தாள்.

“வினித்..., சார்...”, அவள் திணற, “ம்ச்..., நான் என்னைக்கும் உனக்கு அதே வினித்..., அதே ப்ரண்ட் தான்..., இந்த பணம், அந்தஸ்து நட்புக்குள் வருவதை நான் விரும்பவில்லை. ப்ளீஸ் அண்டர்ச்டான்ட்...”, அவன் உறுதியாக உரைக்க, தன்னை மீட்டுக் கொண்டாள்.

“ஓகே வினித்..., கண்டிப்பா நீ சொன்ன மாதிரியே செய்யறேன். வீட்டுக்கே வந்து, அவங்களுக்கு ஹெல்ப் பண்றேன். ஆனா..., அவங்க...”, அவள் தயங்கும் காரணம் அவனுக்குப் புரிய, கொஞ்சம் சோர்ந்தாலும், தன்னை சட்டென மீட்டுக் கொண்டான்.

“இப்போ இருக்குறது வினித்தோட மனைவி..., நிச்சயம் உன்னை ஏத்துப்பா..., நல்லபடியா நடத்துவா என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு. ஒரு வேளை..., அப்படி இல்லன்னாலும்..., எனக்காக, நீ அவ கூடவே இருக்கணும். அவளைச் சுற்றி பெரியவங்க இருந்தாலும், அவ மனசு விட்டு பேச, நீ இருந்தால் நல்லா இருக்கும்..”, அவன் பேச்சில், அதற்குமேல் அவளால் மறுக்க முடியவில்லை.

சம்மதம் எனச் சொல்லி அவனை அனுப்பி வைத்தாள். அடுத்ததாக அவன் சென்றது கார்த்திக்கிடமே. தான் வந்த விஷயத்தை உரைக்க, ஏற்கனவே செய்திகள் வாயிலாக அவன் நிலையை உணர்ந்தவன், அவன் சொன்னவற்றுக்கு மறுக்க முடியாமல் நின்றான்.

“டேய்..., நான் கேட்டதுக்கு பதிலையே காணோம்...? உனக்கு விருப்பம் இல்லையா? முடியாதுன்னா சொல்லிடு..., நான் வேற ஆள் பாத்துக்கறேன்..”, அவனை உலுக்கினான்.

“வினித்..., நீ சொன்னதை நம்ப முடியாமல் திகைச்சுபோய் நிக்கறேன்டா. நிஜமாவே நான்.., என்னால் இதைச் செய்ய முடியும்னு நினைக்கறியா? ஏஜிஎம்ன்னா.., பெரிய பொறுப்பு, அதான் தயங்கினேன்...”, வாய் திறந்தான்.

“பரமா, உனக்கு எல்லா விதத்திலும் ஹெல்ப் பண்ணுவான். ஜஸ்ட்..., ஒரு ரெண்டு வருஷம்..., நீ மும்பையில் அவனுக்கு பக்கபலமா இருந்தால் போதும். எல்லாம் அவன் பாத்துப்பான். மும்பை வாழ்க்கை உனக்கு ஓகேயான்னு மட்டும் சொல்லு...,

“நல்ல சம்பளம்..., நல்ல எதிர்காலம்..., இதன் மூலம்..., உன் மனதுக்கு பிடித்த பெண்ணையே நீ அடைய ஒரு வாய்ப்பு இருக்கு. எக்கனாமிக்கா உன்னால் உயர முடியும்...”, அவன்

உரைக்கவே, தன் நிலையை உயர்த்துவதற்காக அவன் எடுத்த முடிவைக் கண்டுகொண்டவனுக்கு, கண்கள் பனித்தது.

“நன்றிக்கடனா வினித்...?”, நேரடியாக கேட்க,

“சும்மா உலறாதடா...., உனக்கு சம்மதம் தானே...”, அவன் அதிலேயே நிற்க, கார்த்திக் தன் திறமையை வளர்த்துக்கொள்ள நல்ல வாய்ப்பாக அது இருக்கும் எனக் கருதி சம்மதம் தெரிவித்தான்.

“தேங்க்ஸ்..., இன்னொரு விஷயம்.., அன்னைக்கு ஒரு பையன்..., வேலை கேட்டு வந்து, நாம அவன் டேட்டா என்ட்ரி ஆப்பரேட்டர்க்கு அவன் ஓவர் கிவாலிபிகேஷன்னு சொல்லி அனுப்பினோமே..., அவன் பேர் கூட ம்..., திவாகர்..., அவனை உடனே போன் பண்ணி வரச் சொல்லி, உன் வேலையை ஜஸ்ட் ஒரு ஹின்ட் கொடுத்து, அவன் ஓகேயான்னு பாக்க முடியுமா?”, அவனிடம் ஒரு பொறுப்பை ஒப்படைக்க, அதை விரும்பியே ஏற்றுக் கொண்டான்.

அடுத்த மூன்றாம் நாள் காலையில்..., வினித் கிளம்பிவிட்டான். அவனுக்கு முன்பாகவே, கார்த்திக் கிளம்பிச் சென்றிருக்க, அவனோ..., முதல் முறையாக சந்தியாவிடம் சொல்லிச் சென்றதை, வினித்திடம் அவள் உரைக்க, “பய இப்போதான் தேறி இருக்கான்..., இன்னும் பார்...”, அவளுக்கு நம்பிக்கை அளித்தவன் மும்பையில் இறங்கினான்.

வந்த அன்றே பெற்றவர்களுக்கு ஈமக்கிரியை செய்ய, ஐஸ்வர்யா தாய்மையடைந்து இருப்பதால், தலையை மழிக்கக் கூடாது என கார்த்திக் உரைக்க, அதை ஏற்றவன், முடிந்த அளவு அவன் அறிவுரையை ஏற்றான்.

இங்கே..., அவன் சென்றதில்..., வீடே அவளுக்கு அந்நியமாகிப் போயிருக்க, அவளால் அதை தாங்கவே முடியவில்லை. அவள் அறைக்குச் செல்லும் அனுமதி யாருக்கும் வழங்கப்படாமல் போக..., தனிமையை முதல் முறையாக உணர்ந்தாள்.

அடுத்த நாள் காலையில், அவள் அறையில் இருந்த தொலைபேசி ஒலிக்க, அலுப்பாக அதை எடுத்தவள், அதை காதுக்கு கொடுக்க, துரை சொன்னதை கேட்டவளுக்கு தன் காதையே நம்ப முடியவில்லை.

“அம்மா..., அவங்களை அனுப்பட்டுங்களா...?”, துரை தயங்க,

“அனுப்புங்க...”, அவர் அனுமதியை நம்ப முடியாமல் திணறியவர், “மேலே.., ஹாலுக்கு இடது பக்கம் முதல் ரூம்..., அங்கேதான் இருப்பாங்க. போங்க...”, அவளை அனுப்பினார்.

கால்கள் பின்னிக்கொள்ள, மலையளவு தயக்கத்தோடு அவள் படியேற.., அறைக்கு முன்பாக நின்றவள், மென்மையாக அதைத் தட்டிவிட்டு, “மேம்...”, வார்த்தைக்கு வலிக்குமோ என அழைக்க, “எஸ்...”, அவள் அனுமதி வழங்கிய பிறகு, மிகுந்த தயக்கத்தோடு அறைக்கதவை தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்தாள்.

சந்தியாவின் வெளிறிய முகத்தைப் பார்த்த ஐஸ்வர்யாவுக்கு, முதல் முறையாக தான் நடந்துகொண்ட முறைக்காக வெட்கினாள். இதே சந்தியா..., வினித்தை..., அவன் பெயர் சொல்லி அழைத்து, எவ்வளவு தோழமையோடு உரையாடுவாள். அதற்குக் காரணம்..., அவனது தோழமையும், நட்புமே காரணம்.

‘அதே நேரம்..., சந்தியாவின் இந்த தயக்கத்துக்கு..., தன் நடத்தையே காரணம் என்பது புரிய, பணத்துக்கும், பண்புக்கும் சம்பந்தம் இல்லை என்பதை அவள் புரிந்த தருணம் அது.

“வா..., ஏன் அங்கேயே நிக்கற...?”, ஐஸ்வர்யா சாதாரணமாக உரையாடிய பிறகுதான்..., சந்தியாவுக்கு மூச்சே வந்தது.

தயங்கியவாறு அவளை நெருங்க..., “என்ன..., இந்தப்பக்கம்...?”, சாதாரணமாகவே கேட்டாள்.

அவளது அந்த கேள்வியே அவளை வெலவெலக்கச் செய்ய..., “இல்ல மேம்..., நீங்க ரெஸ்ட் எடுக்கணுமாம்..,

அதான்..., இல்லை..., கொஞ்சம் வேலை..., அதுவும்..., ஜஸ்ட் முடிந்தால் பார்க்கச்சொல்லி..., வினித் சார்...", அவளுக்கு தந்தியடித்தது.

எப்பொழுதும் ஐஸ்வர்யாவிடம் மூன்று வார்த்தையில் பேசும் அவளை, மூன்று பக்கத்துக்கு பேசச் சொன்னால் அவளும் என்னதான் செய்வாள்? 'வினித்...', மனதுக்குள் பல்லைக் கடித்தவள், அசையாமல் அவளை ஏறிட்டாள்.

"இப்போ நான் ரெஸ்ட் எடுக்கணுமா? இல்லை வேலை செய்யணுமா?", அவளிடமே திருப்பிக் கேட்க, "மேம்..., சத்தியமா என்னால் முடியலை. எல்லாம் அந்த வினித் சார் செய்த வேலை...", இறுதியில் அவளிடமே சரணடைந்து விட்டாள்.

தன் கணவன், தன் தனிமையை உணர்ந்து செய்துச் சென்றிருக்கும் ஏற்பாட்டைப் பார்த்து, அவன்மேல் அவளுக்கு இருக்கும் காதல் பெருகியது.

"சரி..., சரி..., இப்போ என்ன வேலை கொண்டு வந்திருக்க சொல்...", சமாதானமாக உரைக்க,

"மேம்..., நீங்க சைன் பண்ண வேண்டிய ஃபைல், பாக்க வேண்டிய மெயில், பண்ண வேண்டிய போன் கால்..., இன்னைக்கு வந்த ஆடர்..., டெஸ்பேச் டீட்டேல்..., எல்லாம் இதில் இருக்கு...", கொஞ்சம் நடுக்கத்தோடுதான் உரைத்தாள்.

அவள் நடுக்கத்தை உணர்ந்தவள், "நான் என்ன சிங்கமா, புலியா? உன்னை கடிச்சு முழுங்கப் போற மாதிரி இப்படி பயப்படுற...?", கொஞ்சம் கோபமாகத்தான் கேட்டாளோ?

"ஐயோ.., மேம்..., அப்படியெல்லாம் இல்லை....", பதறி அவள் உரைக்க, 'இந்த மேம்க்கு பாசத்தை கூட கோபமாகத்தான் வெளிப்படுத்த தெரியும் போல...', ஐஸ்வர்யாவைப் பற்றி மனதுக்குள் எண்ணிக் கொண்டாள்.

"சரி..., ஒண்ணு ஒண்ணா சொல்லு..., எல்லாத்தையும் மொத்தமா சொன்னால் நான் எப்படி செய்யிறதாம்?",

கேட்டவள், “அந்த சோபாவை இப்படி இழுத்து போட்டுக்கோ...”, உரைத்தவள், தான் கையெழுத்திட வேண்டியவற்றை ஒவ்வொன்றாக பார்க்கத் துவங்கினாள்.

“இவ்வளவு வேலையையும் கொடுத்து, என்னை ரெஸ்ட்டும் எடுக்க வைக்கச் சொன்னாரா...?”, ஐஸ்வர்யா கேட்க, குத்துமதிப்பாக எல்லா பக்கமும் தலை அசைத்தாள். அவள் செய்கையில்..., முதல் முறையாக அவள் முன்னால் சிரித்தாள் ஐஸ்வர்யா.

அதைப் பார்த்த சந்தியா..., “வினித் சார் சும்மா சொல்லலை...”, தன் போக்கில் நினைக்க..., “என்ன சொன்ன...? வினித் என்ன சொல்லலை...?”, ஐஸ்வர்யா அவளிடம் கேட்ட பிறகுதான்..., தான் மனதுக்குள் நினைப்பதாக எண்ணிக்கொண்டு, வாய்விட்டே புலம்பியிருப்பது அவளுக்குப் புரிந்தது.

“அது வந்து மேம்...”, அவள் சம்மாளிக்க முயல, “இப்போ நீ சொல்ற...’, அவள் முறைப்பை பார்த்த பிறகு, அவளால் பொய் உரைக்க முடியுமா என்ன? அவள் உண்மையை அப்படியே உரைக்க..., “அவன் அப்படியா சொன்னான்...? இப்போ இருப்பது அவன் மனைவி என்றா சொன்னான்...?”, மீண்டும் மீண்டும் கேட்டவளுக்கு..., நிச்சயம் அது உண்மைதான் என்ற நிறைவு, பூரிப்பு.

அதை அவள் முகமும் வெளிப்படுத்த..., ‘அம்மாடி..., என்ன எக்ஸ்ப்ரஷன்...’, அவள் முகத்தில் வந்துபோகும் கலவையான உணர்வுகளைப் பார்த்தவாறு எண்ணிக் கொண்டாள்.

அன்று மதியம் கடக்கும்வரை அவளோடு இருந்த சந்தியா..., அதன் பிறகே கிளம்பிச் சென்றாள். அன்று இரவு வினித் அவளுக்குப் பேச..., அலைபேசியை எடுத்தவுடன், தனக்கு கணக்கிலடங்கா முத்தங்களை வாரி வழங்கும் அவள் செய்கைக்கான காரணம் புரியவில்லை என்றாலும், அதை ரசித்தான்.

அடுத்து அவள் சந்தியாவின் வரவைப் பற்றி உரைக்க, "உனக்கு கோபம் இல்லையே...?", அவன் தயங்கி கேட்க, "இப்போ என் கிட்டே நீ இருந்தால், எவ்வளவு கோபம்னு காட்டியிருப்பேன்...", அவள் குரல் உணர்த்திய செய்தியில்..., கிறங்கித்தான் போனான்.

அடுத்து வந்த, ஒவ்வொரு நாள் இரவை கடப்பது அவனுக்கு மிகுந்த சிரமமாக இருந்தது. ஒரு நாள் கூட அவளை விட்டு அவன் பிரிந்து இருந்ததில்லை.

அவளுக்கு தலையணையே அவன்தான்..., அப்படி இருக்கையில்..., அவளுக்கு மட்டும் முடியுமா என்ன? அவள் கண்ணீரால் தலையணை நனைகையில்...., இப்படி ஒருவனுக்காக தான் இந்த அளவு மாறுவோம் என நம்பியிராத ஐஸ்வர்யா..., "என்னை என்னடா பண்ண...? இப்படி மாறிட்டேன்...", வாய் விட்டே புலம்பினாள்.

அவன் சென்ற மறு வாரம்..., முதல் ஸ்கேன் செய்ய அவள் சென்றிருக்க, அவளை சோதித்த மருத்துவர் கொடுத்த அறிக்கையை தேவயானியிடம் காட்ட, அவள் முகம் சிறு கவலையை வெளிப்படுத்தியது.

"என்ன...?", அவள் கவலையாக,

"கரு உருவாகி இருக்கு..., ஆனால்..., நாற்பதுநாள் வளர்ச்சி அதனிடம் இல்லை...", அவள் சொல்லி முடிக்கும் முன்னர், ஐஸ்வர்யாவின் கட்டுப்பாட்டை மீறி கண்ணீர் வழிந்தது.

"ஹேய்..., இதுக்கு ஏன் இவ்வளவு வருத்தம்? உங்களுக்கும், வினித்துக்கும் இன்னும் வயசும் இளமையும் இருக்கு..., அவர்ட்ட பேசணுமே...", அவளை சமாதானம் செய்யும் விதத்திலேயே எதுவோ நெருட,

"இல்ல தேவயானி..., நீ எதையோ மறைக்கிற. அந்த ஸ்கேன் டாக்டர் எதையோ சொல்ல வந்துட்டு பாதியில் முழுங்கறான்..., இப்போ உண்மையை சொல்லபோறியா இல்லையா...?", கத்தினாள்.

“ப்ளீஸ் ஐஸ்வர்யா..., வினித்தை என்கிட்டே பேசச் சொல்...”, தயங்கினாள்.

“முடியாது..., என்கிட்டே சொல்..., இல்ல..., நான் வேற ஹாஸ்பிடல் பாத்துக்கறேன்...”, அவள் எழ,

“உக்காருங்க..., அது என்னன்னா..., ஒரு கருவே உங்களால் சுமக்க முடியாதப்போ..., இப்போ ரெண்டு கரு உருவாகி இருக்கு..., இதை எப்படி உன்னால் தாங்க முடியும்? ரிஸ்க் ஐஸ்வர்யா...”, கெஞ்சினாள்.

“நிஜமாவா...? ரெட்டையா...?”, அவள் கண்கள் கண்ணீரை சொரிய, மேஜைமேல் கவிழ்ந்தவள், அழுதே விட்டாள். தன் இருக்கையில் இருந்து எழுந்த தேவயானி, அவளிடம் தண்ணீரைக் கொடுக்க, அதை கையால் மறுத்தவள், “எனக்கு வினு வேணும்...”, கேவல்களுக்கிடையில் புலம்பினாள்.

தேவயானிக்கு அவள் மனநிலை புரிந்தது. “போன் பண்ணி வரச் சொல்ல வேண்டியது தானே...?”, கேட்க, மறுப்பாக தலை அசைத்தவள், “என்னால் செய்ய முடியாது...”, அழுகை அதிகரித்தது.

தேவயானிக்குத் தெரிந்தவரை, ஐஸ்வர்யா இதுவரை வருத்தப்பட்டு கூட அவள் பார்த்ததில்லை, தன் உணர்வுகளை யாருக்கும் காட்டாத, முறைப்பான பெண், அப்படி இருக்கையில், அவள் வருத்தப்பட்டு பார்ப்பதே பெரிதென்றால்..., இன்று அவள் விடும் கண்ணீரை நிச்சயம் தேவயானி எதிர்பார்க்கவே இல்லை.

அவள் கண்ணீரே..., அவள் வினித்தின்மேல் கொண்டிருக்கும் காதலை அவளுக்கு உணர்த்த, இந்த காதல் எவ்வளவு கொடுமையானது.., உறுதியான மனம் படைத்த இவளையே அழ வைத்துவிட்டதே என எண்ணாமல் இருக்க முடியவில்லை.

ஒவ்வொரு நாளும் அவன் செய்யும் வேலையும், படும் கஷ்டத்தையும் அவள் கேள்விபட்டுகொண்டு தானே

இருக்கிறாள். அவன் சொல்லவில்லை என்றாலும்..., கார்த்திக் தினமும் ரிப்போட் கொடுக்கிறானே.

இங்கே சீக்கிரம் வரவேண்டும் என்ற காரணத்தால்..., இரவு கூட வெளிநாட்டு வேலையைப் பார்க்கும் அவனை தொல்லை செய்ய அவளுக்கு மனமில்லை.

அதே நேரம்.., அவள் அலைபேசி ஒலியெழுப்ப, ஐஸ்வர்யா எடுக்கத் தயங்கவே, அதை எடுத்து காதுக்கு கொடுத்தவள், “ஐஷூ...”, அவன் குரலில் இருந்த தவிப்பில் தேங்கினாள்.

“ஹல்லோ மிஸ்டர் வினித்..., நான் தேவயானி..., ஐஸ்வர்யா செக்கப்க்கு வந்தாங்க...”, அவள் முடிக்கும் முன்னர், அலைபேசியை பறித்த ஐஸ்வர்யா, தன்னை முயன்று சரி செய்தவள், “வினு.., நான் ஸ்கேன் எடுத்துட்டேன். குழந்தை ரொம்ப நல்லா இருக்காம். கவலைப்படும்படி எதுவும் இல்லை...”, அவள் படபடத்தாள்.

“ஐஷூ..., அப்படியா? உன் ஹெல்த் எப்படி இருக்கு...? நீ டாக்டர் கிட்டே போனைக் கொடு...”, அவன் குரலில் சந்தேகம்.

அவளால் அதை உணர்ந்துகொள்ள முடிந்தது. அவனுக்கு இப்பொழுது தான், இரட்டை குழந்தைகளுக்கு தாய்மை அடைந்திருக்கிறேன் என்றால், கண்டிப்பாக இதைத் தொடர சம்மதிக்க மாட்டான் என்பது அவளுக்கு உறுதி.

அதிலும்..., தன் வேலை அனைத்தையும் விட்டுவிட்டு, அவளைக் காண ஓடி வந்துவிடுவான்..., பிறகு இத்தனை நாள் தான் பட்ட கஷ்டத்துக்கு பலனே இல்லாமல் போய்விடும்..., அவள் உடல்நிலையை விட, அவனுக்கு நிச்சயம் குழந்தை பெரிதாக இருக்கப் போவதில்லை என்பது திண்ணம்.

ஏற்கனவே அவ்வளவு வருத்தப்பட்டவன்..., இதை அறிந்தால்..., தன் மனதை கல்லாக்கிக் கொண்டு..., குழந்தையை தொடர வேண்டாம் என சொல்லி விடுவான். அதை அவனாலோ..., தன்னாலோ தாங்கிக்கொள்ள முடியாது.

தேவயானியின் கையில் போனைக் கொடுத்தவள்..., “ப்ளீஸ்...”, எதையும் சொல்லிவிடாதே என அவளிடம் வேண்ட..., தேவயானியால் உண்மையை உரைக்க முடியவில்லை.

“டாக்டர்..., நீங்க சொல்லுங்க..., இஸ் ஷி ஓகே...”, அவன் சாதாரணமாக கேட்க நினைத்தாலும், அதில் இருந்த தவிப்பை அவளால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

“ஆமா..., என்ன இன்னும் கொஞ்சம் வீக்கா இருக்காங்க. நீங்க கிட்ட இருந்தால் நல்லா இருக்கும்னு நினைக்கறேன்...”, நாசூக்காக அவள் உணர்த்திய செய்தி, அவனை சரியாக சென்றடைந்தது.

“அப்படின்னா..., அவ நல்லா இல்லை அதானே..., ஓகே தேங்க்ஸ்..., பேபி ஓகே யா? இல்லையென்றால் நீங்க ஏதாவது அட்வைஸ் பண்றீங்களா?”, அவன் குரலில் கண்ணீர் தடம்.

அதை புரிந்தவளுக்கோ..., ‘சும்மாவா இவனால் இவ்வளவு பெரிய சாம்ராஜ்யத்தை கட்டி ஆள முடிகிறது...?’, எண்ணியவள், அமைதியாக..., “ஜஸ்ட் பீ வித் ஹெர்...”, பேச்சை அத்தோடு முடித்துக் கொண்டாள்.

இங்கே..., சக்சேனாவின் மறைவு.., அவன் கம்பெனியின் நம்பிக்கைத் தன்மையை சற்று ஆட்டம் காண வைக்க, அதை நிலை நிறுத்துவதே பெரும் வேலையாக அவனுக்கு இருந்தது.

சட்டென கிளம்பி வர அவனுக்கு முடியும், ஒரு மணி நேரத்தில் அவள் முன்னால் அவனால் குதிக்க முடியும், ஆனால்..., அதன் பிறகு, அவளை விட்டுச் செல்லவேண்டி வந்தால்..., அது அவனால் முடியவே முடியாது.

ஏற்கனவே அவளை அவன் அழைத்துச் செல்லாததன் காரணமே, அவன் மும்பையில் மட்டும் இருக்கப் போவதில்லை, இந்தியா முழுவதும் சென்று தங்கள் கம்பெனியை பார்ப்பதோடு, வெளிநாட்டுக்கும் சென்று

பார்க்க வேண்டி இருந்ததே..., அப்படி இருக்கையில்..., பெருமூச்சு எழுந்தது.

அன்றைய இரவில்..., அலைபேசியை கீழே வைக்க முடியாமல் அவன் பேச, அவன் குரலில் தெரிந்த தவிப்பிலும், குற்ற உணர்விலும் சோர்ந்து போனாள்.

அதே நேரம்..., இரவுகள் துன்பமாக இருந்தாலும், காலை வேளையில், அவள் நாட்களை அழகாக நகரச் செய்தது சந்தியாவின் வருகையே. துரையின் தங்கை ரமா கொடுக்கும் அனைத்தையும், அவள் மூட் உணர்ந்து, பதமாக பக்குவமாக கொடுப்பது சந்தியாவே.

அவள் இல்லையென்றால்..., நிச்சயம் தன்னால் சம்மாளித்திருக்க முடியாது என்றே எண்ணினாள். மசக்கை அவளை படுத்தினாலும், தன் கணவனின் அருகாமை வேண்டும் என மனம் தவித்தாலும், சரியாக அவள் தவிப்பை மாற்றி, வேறு விஷயத்தில் திணித்து விடுவாள்.

‘அவன் வேண்டும்..., அவன் கைகளுக்குள் சுருண்டு கொள்ள வேண்டும்...’, இதை அவளால் அவனிடம் கூட பகிர்ந்து கொள்ள முடியவில்லை.

அதுவே அவள் உடல்நிலையை சற்று வலுவிழக்கச் செய்தது. காலையில் அவளுக்கு இருக்கும் மசக்கையும், தலை சுற்றலும், குமட்டலும், ரமா வைத்துக் கொடுக்கும் எலுமிச்சையும், இஞ்சியும் கலந்த ஒரு பானத்தில் காணாமல் போவது மட்டும் உண்மை.

ஆனாலும்..., அவள் உடல் நலிவதை சிறு கலக்கத்தோடு பார்த்த சந்தியா..., “மேம்..., அதான் டாக்டர் உங்களை ஹாஸ்பிட்டல்ல அட்மிட் ஆகச் சொல்றாங்களே..., அவங்க சொல்றதையும் கேட்டால் கொஞ்சம் நல்லா இருக்குமே...”, கொஞ்சம் தயங்கினாலும், இப்பொழுது இருக்கும் ஐஸ்வர்யாவிடம் அவளால் பேச முடிந்தது.

“ம்ச்.., நீ தெரிந்துதான் பேசுறியா? இப்போ நான் ஹாஸ்பிட்டல் போய் அட்மிட் ஆனால்..., வினித் அங்கே அவன் வேலையைப் பாப்பான்னு நினைக்கறியா?”, அவள்

கேள்வியில் வாயடைத்துப் போவது சந்தியாவின் முறை ஆயிற்று.

அத்தோடு, “மசக்கையில் பொண்ணுங்க இப்படித்தான் ஆயிடுவாங்களாம்”, அவளுக்கு விளக்கம் வேறு கொடுத்தாள். அதே நேரம்..., தினமும் தன்னிடம் உரையாடி, அவள் உடல்நிலையைப் பற்றி விசாரிக்கும் வினித்திடம், பொய் சொல்கிறோமே என குமைந்தாள் சந்தியா.

இதே நிலையில் கிட்டத்தட்ட ஒரு மாதம் ஓடியே போய்விட்டது. வினித் அரை மனிதனாக ஆகிப் போனான். அவன் சோர்வும் மெலிவும்..., “டேய் மச்சான்..., மேடம் தானே உண்டாகி இருக்காங்க..., நீ ஏண்டா இப்படி தேஞ்சுட்டே போற...”, கார்த்திக் கேலி செய்தாலும், கவலை அதில் கலந்திருந்தது.

“அதெல்லாம் அவளைப் பார்த்தாலே சரியா போய்டும்டா...”, கொஞ்சம் கூட தயக்கமே இல்லாமல் அவன் மனதை வெளிப்படுத்த, அதைக் கேட்ட கார்த்திக் வருத்தப்பட்டான்.

ஆனால்..., அங்கே இருக்கும் சூழல் அவனுக்கும் தெரியுமாகையால்..., அவனுக்கும் அமைதியாக இருப்பதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை. ஒரு வழியாக அவன் அனைத்தையும் ஓரளவுக்கு நேராக்குகையில்..., நாற்பத்தைந்து நாள் ஓடிப் போயிருந்தது.

அன்று காலை எழுந்தது முதல்..., ஐஸ்வர்யாவை பார்த்தே ஆக வேண்டும் போல் ஒரு வேகம்..., அவனால் அதை அடக்கவே முடியவில்லை. கார்த்திக்கிடம் அதை உரைத்தவன், பரமாவிடம் உடனடியாக சென்னைக்கு தங்கள் ஹெலிகாப்ட்டரை தயார் நிலையில் இருக்கச் சொல்லி, அவர்களிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு கிளம்பிவிட்டான்.

தாம்பரம் மிலிட்டரி ஹெலிபேடில் வந்து இறங்கியவன், கிரியை காரை எடுத்துவரச் சொல்லிவிட்டு, அடுத்த

அரைமணி நேரத்தில் வீட்டில் இருந்தான். அன்று..., ஐஸ்வர்யாவால் படுக்கையை விட்டு எழவே முடியவில்லை.

உடல் மொத்தமும் தளர்ந்து, தலை சுற்றலும், மயக்கமும் சேர, முதல் முறையாக, அன்று குடலே வெளியே வந்துவிடும் அளவு வாந்தி எடுத்தாள். பொதுவாக அவள் அறைக்குள் யாரையும் அனுமதிக்காத காரணத்தால்..., அவள் செய்கை வீட்டில் இருந்த யாருக்கும் தெரியாமலே போனது.

நீண்டநாள் பிரிவிற்குப் பிறகு, மனைவியைக் காணப்போகும் ஆர்வத்தில் மாடி ஏறியவன், அறைக்குள் பூனைபோல் நுழைய, அறையில் அவள் இல்லாமல், பாத்ரூமில் அவள் வாந்தி எடுக்கும் ஓசை கேட்க, துடித்துபோய் அங்கே ஓடினான்.

அங்கே அவன் கண்ட காட்சி..., உடல் இளைத்து, சோர்ந்து, அரை மயக்கத்தில், வாந்தி எடுத்த களைப்பும் சேர..., சுவற்றில் சாய்ந்திருந்த ஐஸ்வர்யாவைத்தான்.

அவன் அவளை அழைக்கப் போக..., “டேய்..., வினு..., என்னால் முடியலடா...?”, கண்ணீர் கன்னத்தில் வழிய அவள் புலம்ப..., “ஐஷூ...., வந்துட்டேன்..., என்னம்மா பண்ணுது...? ஏன் இப்படி இருக்க? ஏன் என்கிட்டே யாருமே சொல்லலை...? இதுதான் நீ வீடியோ சேட் வராத காரணமா...?”, அவளை கைகளில் அள்ளிக் கொண்டான்.

அவளோ..., அவன் முகத்தை கைகளில் ஏந்தியவள்..., அவன் முகத்தை கண்களில் நிரப்பிக் கொண்டிருந்தாள். “வினு..., இது காணவில்லையே...”, அவள் கேட்டபொழுது, துடித்துப் போனான்.

“இல்லம்மா...”, உரைத்தவன்..., தன்னோடு இறுக்கிக் கொண்டான்.

“ஐஷூ..., முதல்ல ஹாஸ்பிடல் கிளம்பு..., நீ எதுவும் பேச வேண்டாம்....”, அடுத்த நிமிடம், அவள் மருத்துவமனையில், தேவயானியின் கண்காணிப்பில் இருந்தாள்.

“இதுதான் நீங்க அவளை கவனிக்கும் லட்சணமா...? ஏன் எனக்கு தகவல் தெரிவிக்கவில்லை..? அவள் இவ்வளவு சோர்ந்து போகும் அளவுக்கு ஏன் அவளை விட்டீங்க? இதற்காகவா உங்களை வேலைக்கு வைத்தேன்? மருத்துவம் இவ்வளவு முன்னேறி இருக்கு..., என் மனைவி எப்படி வாந்தி எடுக்கலாம்...? அவளுக்கு வலிக்காமல் ஊசி போடு...”, அப்பப்பா..., தேவயானி துவங்கி, நர்ஸ், ரமா பாட்டி, ஸ்ரீராம்..., என அனைவரும் அவன் கோபத்துக்கு தப்பாமல்..., இலக்காகிக் கொண்டிருந்தார்கள்.

அவன் கோபத்தை சின்ன சிரிப்போடு, பூரிப்பும் சேர, அவன் வந்துவிட்டான் என்ற நிம்மதியும் ஆக்கிரமிக்க..., இவ்வளவு நேரம் அவள் முகத்தில் இருந்த சோகம் விடைபெற்று, பூரித்திருந்தாள் ஐஸ்வர்யா.

“வினு...”, அவன் கோபத்தை தாங்க முடியாமல், எதிர்த்து ஒரு வார்த்தை கூட பேச முடியாமல் அவர்கள் திகைக்க, ஐஸ்வர்யாதான் அவனை அடக்க வேண்டி இருந்தது.

“நீ எதுவும் பேசாதே..., இதுதான் நீ நல்லா இருக்கும் லட்சணமா...? உன்னை இப்படித்தான் பார்த்துக் கொள்வாயா...? இதற்குதான் உன்னை விட்டு போகச்சொல்லி என்னைச் சொன்னாயா?”, அவனால் தாங்கவே முடியவில்லை.

“ம்ச்.., அதான் இப்போ நீ வந்துட்டியே...”, தன் அருகில் அமர்ந்தவனது தோள் சேர..., அதில் இருவருக்கும் அப்படி ஒரு நிம்மதி.

தேவயானியும் எத்தனையோ முறை அவளை மருத்துவமனையின் கண்காணிப்பில் வந்து இருக்கச் சொல்லி கேட்டாள் தான். ஆனால்.., ஐஸ்வர்யாதான் பிடிவாதமாக அதை மறுத்துவிட்டாள். இப்பொழுது கணவன் அழைக்கவே, மறு பேச்சின்றி, இங்கே வந்தவளைப் பார்க்க, அவர்கள் அன்பை எண்ணி வியக்காமல் இருக்க முடியவில்லை.

அனைவரும் விலகிச் செல்ல..., “ஐஷூ..., நீ ரொம்ப கஷ்டப்படுறியே..., ரொம்ப முடியலையா...? நான் இல்லாமல் ரொம்ப கஷ்டப்பட்டியா...?”, அவன் முதல் கேள்விகளுக்கெல்லாம் மறுப்பாக தலை அசைத்தவள், இறுதி கேள்விக்கு, அவனை அணைத்துக்கொண்டு கண் கலங்கிவிட்டாள்.

அவள் செய்கையே..., தன்னை எவ்வளவு தேடியிருக்கிறாள் என்பது புரிய, தானும் அவளை அணைத்து, அவள் நெற்றியில் இதழ் பதித்தான். “வினு..., நீயும் மெலிஞ்சுட்ட...”, அவன் முதுகைத் தடவி அவள் உரைக்க, “அதான் உன்கிட்டே வந்துட்டேனே...”, அவள் சொன்னதையே அவன் திருப்பிப் படிக்க, ஒருவர் அணைப்பில் மற்றவர் கட்டுண்டு இருந்தார்கள்.

அங்கே அவர்களைச் சுற்றி இருந்த அனைவருக்குமே கண் கலங்கி விட்டது.

அடுத்த அரைமணி நேரத்தில்..., ஐஸ்வர்யா உறங்க, அவளை ஸ்ரீராமின் பொறுப்பில் ஒப்படைத்துவிட்டு, தேவயானியை காணச் சென்றான். அவன் நிச்சயம் தன்னைத் தேடி வருவான் என்பது அவளுக்குத் தெரியும். ஆனால் இவ்வளவு சீக்கிரம் வருவான் என்பதைத்தான் அவள் எதிர்பார்த்திருக்கவில்லை.

அவனை நர்ஸ் ஜெனி தடுக்க, “இங்கே பார்..., ஏற்கனவே நான் செம கடுப்புல இருக்கேன்..., விலகிடு...”, கோபத்தை உள்ளடக்கிய குரலில் உரைக்க,

“அண்ணா..., நீங்க இப்படித்தான் செய்வீங்கன்னு தெரியும், உங்களை நான் தடுக்கவே இல்லை..., ஒரே ஒரு நிமிஷம்..., உள்ளே இருக்கும் பேஷன்ட் வெளியே வந்த பிறகு நீங்க போகலாம் சரியா...”, அவனை சமாதானப்படுத்தியவள்...,

“ஒரு சின்னப்புள்ளை நான் எவ்வளவு தான் தாங்குவேன்..., பொறாமைப்பட வைக்கிறாங்களே...”, அவள் வாய்விட்டே புலம்ப, அந்த நிலையிலும் பக்கென சிரித்துவிட்டான்.

“ஏய் வாலு..., உனக்கு வாய் நீளம் தான்...”, அவளை கேலி செய்ய...

“வாயெல்லாம் ஒண்ணும் நீளமில்லை..., நீங்கதான் என்னை பேச வைக்கறீங்க. அதே மாதிரி நான் வாலு இல்லை..., என் பேர் ஜெனி...”, நொடித்தவள், “அண்ணா.., நீங்க போங்க..., அவங்க வந்துட்டாங்க...”, அவனை அனுப்பினாள்.

உள்ளே நுழைந்தவன், “ஐஸ்வர்யா இவ்வளவு வீக்கா இருக்க காரணம் என்ன...?”, எந்தவித முகாந்திரமும் இல்லாமல் துவங்கினான்.

ஏற்கனவே அவன் வரவை எதிர்பார்த்து இருந்ததால்..., “வினித்..., முதல்ல உக்காருங்க. ஐஸ்வர்யாவுக்கு பெருசா எதுவும் இல்லை. எல்லாத்துக்கும் மனசுதான் காரணம். அதே நேரம்..., அவங்களுக்கு நிறைய மெடிசின் ஒத்துக்க மாட்டேங்குது.

“சோ..., ரொம்ப கேர்புல்லா ஹேண்டில் பண்ண வேண்டி இருக்கு. வாந்திக்கு எல்லாம் மருந்து கொடுக்க முடியலை..., அது அவங்களுக்கு ஒத்துக்காமல் போய்ட்டா..., அதுக்கு வேற மெடிசின் கொடுக்க வேண்டி இருக்கும்..., நான் ஏற்கனவே அவங்களை அப்சர்வேஷன்ல இருக்கச் சொல்லி வரச் சொன்னேன்.

“ஆனா..., அவங்கதான் நீங்க வர வரைக்கும் முடியவே செய்யாதுன்னு சொல்லிட்டாங்க. இனிமேல் எல்லாம் அவங்க புட் ஹேபிட்லதான் இருக்கு. கேல்சியம், அயன்..., எல்லாம் அவங்களுக்கு ஓரளவுக்குத்தான் டேப்லட்ல கொடுக்க முடியும்.

“மற்றபடி அவங்க சாப்பிடும் சாப்பாட்டில் தான் இருக்கு. பிரெஷ் ஜூஸ், கீரை, பால், முட்டை..., எல்லாம் சரியான விதத்தில் கொடுக்கணும். எல்லாம் ஒரே நேரத்தில் திணிக்காமல், டைம் பார்த்து செய்யணும்...”, அவள் உரைக்க, “அதெல்லாம் நான் பாத்துக்கறேன்...”, வேகமாக உரைத்தான்.

அவன் செய்கையில் சிரித்தவள், “அந்த ரமாம்மா ரொம்பவே நல்லா பண்றாங்க. அவங்களையே நீங்க சாப்பாட்டு விஷயத்தில் கேட்டுக்கலாம். மற்றபடி ஷி இஸ் ஓகே..., பெர்பெக்ட்லி ஓகே யா இருக்கணும்னா...”, அவள் இடைவெளி விட,

அவன் கலக்கமாக ஏறிட, “நீங்க அவங்களோட இருந்தால் போதும்...”, அவள் உரைக்கவே..., மெல்லியதாக சிரித்தவன், “இனிமேல் அவளை விட்டு எங்கேயும் போக மாட்டேன்...”, உறுதி அளித்தான்.

அவன் செல்லவே..., ஒரு பெருமூச்சு அவளிடமிருந்து வெளியேறியது. இதை உரைத்ததற்கே அவன் முகத்தில் இருந்த கலக்கம்..., அவள் இரட்டை பிள்ளைகளுக்கு தாயாகி இருக்கிறாள் என்றால்..., நிச்சயம் அவனால் அதை இயல்பாக ஏற்றிருக்க முடியாது என்பது புரிந்தது.

‘ஹப்பா..., புருஷனைப் பத்தி சரியா புரிஞ்சு வச்சிருக்காங்க...’, ஐஸ்வர்யாவை மெச்சிக் கொண்டாள். அதே நேரம்..., நிச்சயம் ஐஸ்வர்யாவை கண்ணுக்குள் வைத்து பார்த்துகொள்வான் என்பதால், அவள் உடல்நிலை இனிமேல் தேறிவிடும் என்ற நம்பிக்கையும் வந்தது.

அடுத்த ஒரு வாரம் ஐஸ்வர்யா மருத்துவமையிலேயே இருக்க, அவளோடு தானும் இருந்தான். அவள் உறங்கப் போகிறேன் என்று சொல்லி, அவனை அனுப்பும் வேளைகளில் மட்டுமே அலுவலக வேலைகளைச் செய்யப் போனான். சந்தியா இப்பொழுது அலுவலக வேலைகளில் முனைப்பானாள்.

அப்பொழுது கூட, ஜெனியை அவளுக்கு பாதுகாப்புக்கு இருத்திவிட்டே செல்ல, “அண்ணா..., இதெல்லாம் ரொம்ப ஓவர்..., அவங்க என்ன பச்ச புள்ளையா...? கட்டில்ல இருந்து உருண்டு விழுந்திராமல் இருக்க என்னை காவலுக்கு உக்காத்தி வைக்கறீங்களே...”, அலுத்துக் கொண்டாலும், சந்தோஷமாகவே செய்தாள்.

ஐஸ்வர்யா கூட, ஜெனியிடம் சில வார்த்தைகள் பேசும் அளவுக்கு முன்னேறி இருந்தாள். சொல்லப்போனால்..., ஐஸ்வர்யா வீட்டுக்குச் செல்லும் வேளையில், அவளை தான் ரொம்ப மிஸ் பண்ணுவாள் என ஜெனி உரைக்க, ஐஸ்வர்யாவுக்கு நெகிழ்வாக இருந்தது.

இரண்டொரு வார்த்தைக்கே தன்மேல் பாசம் கொள்ளும் மனிதர்களை, இத்தனைநாள் தான் புரிந்துகொள்ளாமல் இருந்திருக்கிறோமே என எண்ணிக் கொண்டாள்.

அடுத்த நாட்கள் அழகாய் கடக்க..., கணவன் உள்ளங்கையில் வைத்து தாங்குவது என்றால் என்னவென்று உணர்ந்து கொண்டாள். கால்மணி நேரத்துக்கு ஏதாவது ஒரு ஜூஸ்..., பால்..., முட்டையின் வெள்ளைக்கரு..., இப்படியாக..., அவன் கவனிப்பு அலாதியாக இருந்தது.

இரவுகளில் அவன் கைகளுக்குள் இருந்தாலும், எதுவோ குறைவது போன்ற உணர்வு. சில நாள்..., ஒருவித இறுக்கத்தில் அணைப்பவன், அழுத்தமாக சில முத்திரைகளை பதித்து விலகுகையில், குறைவது எதுவென அவளுக்குப் புரிந்து போகும்.

அவன் தவிப்பு புரிய, தன் சம்மதத்தை..., அவன் நெஞ்சில் அழுந்த புதைந்து உணர்த்தினாலும், அதை தொடராமல், அவளை இறுக அணைத்தவாறு இமைகளை இறுக மூடிக் கொள்வான்.

‘ஏத்தி விட்டுட்டு பேசாமல் இருக்கான் பார்...’, சில வேளைகளில் செல்லக் கோபம் எழுந்து, அவன் நெஞ்சில் தன் கையை முஷ்டியாக்கி குத்துபவள், அவன் கன்னத்தை அழுந்த கடித்து தன் கோபத்தை வெளிப்படுத்துவாள்.

அவள் செய்கைக்கான காரணம் புரிந்தாலும், அழகாய் அவள் மனநிலையை மாற்றி விடுவான். நான்கு மாதங்கள் முழுவதும், தன் படுக்கையை விட்டு எழாமல் ஓய்வெடுக்க, ஐந்தாம் மாதம் துவக்கத்தில் சற்று தெம்பாக உணர்ந்தாள்.

அவளால் வீட்டில் இருக்க போர் அடிக்கிறது என உரைக்க, அவள் அலுவலகம் வருவதற்கு வேண்டி..., ரோல்ஸ்ராய்ஸ் கார் ஒன்றை இங்கே இறக்கியவன், தானே அவளை அலுங்காமல் அலுவலகம் கூட்டிச் சென்றான்.

அலுவலகத்தில் கூட அவன் கவனிப்பு தொடர்ந்தது. அதே நேரம்..., அவள் அலுவலகம் வரத் துவங்கியபொழுது, அவன் வெளி வேலைகளில் பிஸியாவது புரிய, அவனது கம்பெனி வேலையையும் அவன் பார்ப்பதை உணர்ந்து கொண்டாள்.

ஐஸ்வர்யாவுக்கு பிடிக்காத உணவாக கீரை இருக்க, ரமா..., கீரைத் தண்ணீர் தினமும் அரைஉப்பு போட்டு குடிக்கக் கொடுக்க, அவனுக்காக என்றே அவள் அனைத்தையும், தனக்குப் பிடிக்கவில்லை என்றாலும் சகித்துக்கொண்டு விழுங்க, அந்த பிரச்சனை சுலபமாக முடிந்ததில் நிம்மதியாக உணர்ந்தான்.

அவளுக்கு ஸ்கேன் எடுக்கும் இடத்தில் தான் விதிர்த்துப் போவாள். அங்கே அவன் அருகாமையும் வேண்டும், தன் குழந்தைகளை அவன் காண வேண்டும், அசைவை உணர வேண்டும்..., அதே நேரம்..., அவர்கள் இரட்டை என்பதை அவன் உணர்ந்துகொள்ளவும் கூடாது என தவித்துப் போவாள்.

ஏற்கனவே ஸ்கேன் மருத்துவரிடமும், ஜெனியிடமும் அவனுக்கு விஷயம் தெரியக்கூடாது என சொல்லியிருந்ததால், அனைவரும் கவனமாகவே நடந்து கொண்டாலும், ஒரு வேளை..., ஸ்கேன் செய்யும்பொழுது அவனாகவே அறிந்து கொள்வானோ என்ற கேள்விதான் அவள் மனதைக் குடைந்தது.

தேவயானியோ..., அவள் தேவையில்லாமல் இதைப்பற்றி சிந்தித்து, பிபி அதிகமாகி, பிரசவம் சிக்கலாகிவிடக் கூடாது என எச்சரித்து இருந்ததால், அவனாக விஷயத்தை தெரிந்துகொண்டால் பரவாயில்லை என்ற மனநிலைக்கு வந்திருந்தாள்.

ஐந்தாம் மாதத்தில் ஸ்கேன் எடுக்க அவர்கள் உள்ளே சென்றிருக்க, அங்கே ஏழாம் மாத ஸ்கேன் முடித்த பெண்ணிடம், அங்கிருந்த நர்ஸ்..., “இனிமேல் உங்களுக்கு ஒன்பதாம் மாசம் ஸ்கேன்.., இந்த டேட்ல வரும்..., வந்துடுங்க...”, என்றவாறு..., அவள் ரிப்போட்டை உறையில் போட்டு கொடுக்க, எதேச்சையாக அந்த பெண்ணின் வயிற்றில் பார்வை பதிய, தன் மனைவியின் வயிறு அதற்கு ஒத்திருக்க, வியப்பானான்.

‘தன் மனைவியின் வயிற்றில் இருக்கும் குழந்தை ஹெல்த்தியாக இருக்கிறது என்ற சந்தோஷத்திலேயே..., அவள் ஸ்கேனை அவ்வளவு ஸ்ரத்தையாக அவன் கவனிக்கவில்லை. அவன் கவனம் முழுவதும் மனைவியிடமே இருக்க..., தன் குழந்தைகள் கை கோர்த்து, அவள் வயிற்றில் இருப்பதை நிழல்போல் காட்டிய ஸ்கேனை அவன் கவனிக்க மறந்தான்.

ஐஸ்வர்யா அதைப் பார்த்தவள், சற்று திகைத்து அவன் முகம் பார்க்க, அவன் முழு கவனமும் இங்கே இல்லாமல், ஏதோ யோசனையில் இருப்பது புரிய சற்று நிம்மதியானாள்.

அன்றைய இரவில்..., “ஐஷு..., நீ இன்னைக்கு நாம ஸ்கேன் பண்ண போனப்போ, அங்கே இருந்த பொண்ணோட வயித்தை பாத்தியா? ஏழு மாசம் முடிஞ்சுடுச்சாம்..., ஆனால்..., உன் வயிறு அளவுதான் இருக்கு. அப்போ அந்த குழந்தை ரொம்ப சின்ன குழந்தையா இருக்குமோ?”, தன் சந்தேகத்தை அவளிடம் கேட்க,

திக்கென மனம் அதிர்ந்தாலும், அவன் ஆராய்ச்சியை தொடர விட மனமின்றி, “என்ன சொன்ன...? இன்னொரு வாட்டி சொல்லு..., அப்போ..., இதுக்கு அர்த்தம்..., எல்லா பொண்ணுங்களையும் நீ பாக்கற அதானே. அடப்பாவி.., நீ ரொம்ப நல்லவன்னு நினைத்தேன்..., நீயும் மத்தவனுங்க மாதிரி, அடுத்தவன் பொண்டாட்டியை...”, அவள் அடுத்த வார்த்தை பேசும் முன்பு, வேகமாக அவள் வாயை, தன்

வாயால் அழுந்த மூடியவன், சற்று நேரம் அவளை விடுவிக்கவே இல்லை.

அவள் மூச்சுக்கு திணறி விடுபட, “என்னைப் பார்த்தால் உனக்கு எப்படி இருக்கு? உன்னைத் தவிர இந்த உலகத்தில் இருக்கும் எல்லா பொண்ணுங்களும், என் கூடப் பிறக்காத தங்கச்சிங்களாத்தான் நான் நினைக்கறேன். என்னைப் பார்த்து...”, மீண்டும் அவள் இதழ்களை கவ்விக் கொள்ள, அந்த பேச்சு அத்தோடு போனது.

***

# பகுதி - 39.

தொடர்ந்த நாட்கள்..., ஐஸ்வர்யாவும் வினித்தும் தங்கள் வேலைகளில் கவனமாக, வினித் நள்ளிரவைத் தாண்டியும் வேலை செய்யவேண்டி இருந்தது.

ஐஸ்வர்யாவின் கம்பெனி வெளிநாட்டு கம்பெனியோடு கூட்டு சேர்ந்திருப்பதால், புதிதாக புத்தகம் அச்சடிப்பது, மார்க்கெட்டிங் பீப்பிளை சந்திப்பது, மீட்டிங்..., புதிதாக சிபிஎஸ்சி பள்ளிகளை கவர்வது, இன்டர்நேஷனல் பள்ளிகளுக்கு சில சலுகைகள் அறிவிப்பது என அவளும் தன் வேலையில் மூழ்க, நாட்கள் ரெக்கை கட்டிப் பறந்தது.

ஐஸ்வர்யாவுக்கு ஏழாம் மாதம் முடிய ஒரு வாரமே இருக்க, அன்று செக்கப்புக்கு வந்தவளை சோதனை செய்த தேவயானி..., “ஐஸ்வர்யா..., இனிமேல் நீங்க ரொம்பவே கவனமா இருக்கணும். இப்போவே வயிறு இறங்கிடுச்சு..., அதே நேரம்..., கர்ப்ப வாசல் வேற சீக்கிரம் திறந்திடும் போல..., சோ..., அதிக கவனம் தேவை...”, அவளுக்கு அறிவுறுத்த, ஐஸ்வர்யாவின் முகத்தில் மெல்லிய பயம்.

“அதைப் பார்த்தவள், “ஹேய்.., இதை உன்னை பயப்படுத்த சொல்லலை, கவனமா இருக்க வேண்டி சொன்னேன். அதே போல்..., குறைப் பிரசவம்னு கவலைப் பட வேண்டாம். எட்டு மாசம் ஆனாலே பேபி நார்மலா இருக்கும். என்ன வெயிட் தான் கொஞ்சம் கம்மியா இருக்கும். அதையும் இன்க்பேட்டரில் வைத்து சரி பண்ணிடலாம்.

“இனி வர மாசம் எல்லாம் புல் பெட் ரெஸ்ட் தான். அதில் நோ காம்ப்ரமைஸ், நான் வினித் கிட்டே சொல்லிடுறேன்...”, அதே விஷயத்தை அவனிடம் தெரிவிக்க, அவளுக்கு ஓய்வு அளிப்பதாக உறுதி அளித்தான்.

அதே நேரம், சற்று தயங்கியவன், “டாக்டர்..., எனக்கென்னவோ ஐஸ்வர்யாவோட வயிற்றில் இருக்கும் குழந்தை ரொம்ப வளந்துட்ட மாதிரி ஒரு பீல். கொஞ்சம் பயம்மா இருக்கு...”, அவள் வயிற்றை பார்த்தவாறே அவன்

உரைக்க, இரு பெண்களின் பார்வையும் வேகமாக சந்தித்துக் கொண்டது.

“வினித்..., அதெல்லாம் நீங்க எந்த கவலையும் பட வேண்டாம்..., எல்லாம் நல்லபடியா நடக்கும். நீங்க ஐஸ்வர்யாவை மட்டும் பாத்துகோங்க...”, சம்மாளித்து அனுப்பிவிட்டாள்.

வீட்டுக்கு அவன் வர, அவனை எதிர்கொண்ட ரமா..., “தம்பி..., சொல்றேன்னு எதுவும் நினைக்காதீங்க. பேசாமல் ஏழாம் மாசமே அம்மாவுக்கு வளைகாப்பு வச்சுடலாம். இன்னும் மாசம் ஆனால்..., எப்படி இருக்கும்னு சொல்ல முடியாது அதான்...”, அவர் தாங்கியவாறு சொல்லி முடிக்க, அவன் முகம் யோசனையைக் காட்டியது.

அன்று இரவே ஸ்ரீராமிடம் பேசியவன், ஏழாம் மாதம் முடிய இன்னும் ஒரு வாரமே இருப்பதால்..., அடுத்த மூன்று நாளில், வளைகாப்பை முடித்துவிடலாம் என பேசினார்கள்.

அதே நேரம்..., ஐஸ்வர்யாவைத் தேடிச் சென்ற ரமா பாட்டி, “அம்மாடி...”, அறைக்கு வெளியே இருந்து அழைக்க, படுக்கையில் இருந்தவள், எழுந்து வெளியே வந்தாள்.

வந்தவள்..., கேள்வியாக அவரை ஏறிட..., “அம்மாடி..., ஒரு விஷயம் சொல்லணும், சொல்லவா வேண்டாமான்னு தெரியலை...”, ரொம்பவே தயங்கினார்.

‘சொல்லுங்க...’, என்னும் விதமாக அவரைப் பார்த்து தலை அசைக்க, “அம்மாடி..., இதை நான் சொல்லக் கூடாது. ஆனாலும் சொல்லாமல் இருக்க முடியலை..., நீ ரெட்டை உசுரை வயித்தில் சுமந்துட்டு இருக்க, இப்போ வளைகாப்பு பெருசா வைத்தால்..., ஒரு கண்ணு போல, இன்னொரு கண்ணு இருக்காது..., அதனால்...”, பேச்சை அப்படியே நிறுத்திவிட்டார்.

ஐஸ்வர்யாவோ அதிர்ந்துபோய் அவரை வெறித்தாள். இதுவரை பெற்ற தகப்பனுக்குக் கூட சொல்லாத ஒரு விஷயத்தை..., அனாயசமாக உரைத்துவிட்டு நிற்க, தன்

வியப்பை முகத்தில் தேக்கியவள், “உங்களுக்கு எப்படி…?”, அதிர்ச்சியாக வினவ,

“அம்மாடி…, இதைக்கூட கண்டு புடிக்கலன்னா…, நானல்லாம் என்ன மருத்துவச்சி…? எனக்கு உன் மூணாம் மாசமே தெரியும். அன்னைக்கு நீ ரொம்ப மயக்கமா இருக்குன்னு சொன்னப்போ…, நாடி புடிச்சு பாத்தேனே…, அப்போவே கண்டுகிட்டேன்…”, அசால்ட்டாக உரைக்க, மறு வார்த்தை பேசவில்லை.

“இது அவருக்கு…”, அவள் தடுமாற, “அம்மாடி…, ஆம்பளைங்க பாக்கத்தான் முரடனுங்க. மனசு பூஞ்சையா இருக்கும். இதெல்லாம் பொம்பளைங்கதான் பாத்து, சூதானமா நடந்துக்கணும். எனக்கு தெரியாதா தாயி…, என் வாயில் இருந்து ஒத்த வார்த்தை வராது…, நீ நான் சொன்னதை கொஞ்சம் யோசனை பண்ணுத்தா…”, அப்படியே கிளம்பிவிட்டார்.

அவர் நிலைக்கு…, அவளிடம் இவ்வளவு பேசியதே அதிகம் என்பது அவருக்குத் தெரியும். எல்லாம் எனக்குத் தெரியும் என அவள் முகத்தில் அடித்தாற்போல் சொல்லிவிட்டாலும் பரவாயில்லை என்றுதான் அவர் இவ்வளவு தூரம் சொன்னதே.

ஐஸ்வர்யாவுக்கும் அவர் சொல்வது சரியாகத் தோன்ற, கீழே இறங்கி வந்தாள். அவள் வருவதைப் பார்த்தவன், “ஐஷூ…, ஒரு குரல் கொடுத்தால், நான் வந்துட்டு போறேன்…, நீ எதுக்கு இப்போ அலையிற…?”, அவன் மென்மைகாக கடிந்து கொண்டான்.

“உங்க ரெண்டுபேர் கிட்டேயும் பேசணும் அதான்…”, உரைத்தவள், வளைகாப்பை சிம்பிளாகச் செய்யச் சொல்ல, இரு ஆண்களும் திடுக்கிட்டனர். அவர்கள் இருவரும் அதை பிரம்மாண்ட விழாவாக ஏற்பாடு செய்ய திட்டம் தீட்ட, அவள் இவ்வாறு உரைக்கவே, அதிர்ந்தார்கள்.

“ஏம்மா அப்படிச் சொல்ற…?”, ஸ்ரீராம் வினவ,

“டேட்..., இப்போவே என்னால் முடியலை, இதில் அவ்வளவு பெரிய விழா, அலைச்சல்..., கூட்டம்..., நோ டேட்.., ஐ கான்ட்..., குழந்தை பிறந்த பிறகு, பேர் வைக்கும் விழாவை பிரம்மாண்டமா செய்யலாம். ப்ளீஸ்...”, அவள் சாதாரணமாக கேட்டாலே, ஒத்துக் கொள்பவர்கள், கெஞ்சினால்..., அப்படியே சரண்டர் தான்.

அவள் விருப்பப்படியே..., அடுத்த இரண்டாம் நாள்..., வீட்டிலேயே சிறிதாக, மாலையில் வைக்கலாம் என முடிவு செய்யப்பட்டு, கார்த்திக்கின் குடும்பம், சந்தியாவின் குடும்பம் மட்டும் அழைக்கப் பட்டது.

ரமாவின் மேற்பார்வையில் அனைத்தும் ஏற்பாடு செய்யப்பட, வீடும் எளிமையாக அலங்கரிக்கப் பட்டது. அவளுக்காக பிரத்தியேகமாக நெய்த பட்டுப் புடவையில்..., எளிய அலங்காரத்தில், தாய்மையின் பூரிப்பில், ஜொலித்தாள் ஐஸ்வர்யா.

வினித்தும் பட்டு வேஷ்டி சட்டையில் கம்பீரமாக உடை மாற்றி வெளியே வர, இருவரின் பார்வையும் தங்கள் இணையை பார்வையால் வருடிச் சென்றது. நிமிடம் அப்படியே உறைய, “அம்மாடி...”, ராமாவின் குரலும், தொடர்ந்த சந்தியாவின் குரலும் இருவரையும் நடப்புக்குத் திருப்பியது.

ஐஸ்வர்யா, கதவைத் திறக்கச் செல்ல, “ஐஷூ..., ஒண்ணே ஒண்ணு...”, கண்களில் கெஞ்சலோடு அவளைத் தடுத்தான்.

அவன் பார்வையின் வேகம் தாளாமல், முகம் திருப்பியவள், “உங்களுக்கு ஒரு நிமிஷம் தான் டைம்...”, அவனைப் பற்றி அறிந்தவளாக அவள் உரைக்க, “ஹம்..., அப்போ முடியாது..., வா போகலாம்...”, மீண்டும் அவர்கள் அழைக்கும் முன்பு, அறையை விட்டு வெளியேறினர்.

அவர்கள் இருவரையும் பார்த்த அனைவருமே ஆச்சரியப்பட்டுப் போனார்கள். அதிலும் ஐஸ்வர்யாவின் பூரிப்பும், மகிழ்ச்சியும், அத்தோடு..., மனையில்

அமர்ந்திருந்தாலும், தன்னவனைத் தேடித் தழுவும் அவள் பார்வையும், எங்கே இருந்தாலும், அவள் பார்வையை கவ்விக்கொள்ளும் அவனும்..., பெரியவர்கள் மனம் நிறைந்தது என்றால்..., இளையவர்கள் மனமோ, தங்கள் இணை இப்படி வேண்டும் என ஏங்கியது.

அவனை அவளுக்கு வளையல் போட்டுவிட அழைக்க, தன் கைகளில் சந்தனத்தை குழைத்து, அவள் கன்னத்தில் பூசியவன், தன் கையை விலக்கிக் கொள்ளவே நேரமெடுத்தது.

“வினு...”, முகம் முழுக்க வெட்கச் சாயல் பூச, மென்மையாக அவனை அழைக்க, அவள் கைகளில் தங்க வளையல்களைப் பூட்டியவன், சுற்றிலும் இருக்கும் ஆட்களை பொருட்படுத்தாமல், அவள் கன்னத்தில் அழுத்தமாக தன் இதழ் பதித்து விலக, மொத்தமாய் சிவந்து போனாள்.

“ஓ...”, சந்தியா, கார்த்திக்கின் தங்கைகள் கூச்சலிட, “ஏய்..., என் பொண்டாட்டி, நான் கிஸ் பண்ணேன்...”, அவன் விளக்கம் வேறு கொடுக்க, செல்லமாய் அவன் கையை அடித்தாள்.

“அண்ணா..., உங்களுக்கு என்ன குழந்தை வேணும்...?”, கார்த்திக்கின் தங்கை வர்ஷா கேட்க,

“அவனுக்கு பொண்ணு வேணுமாம்...”, ஐஸ்வர்யா பதில் கொடுக்க, “அவளுக்கு பையன் வேணுமாம்...”, அவன் உரைத்தான்.

“ஐ..., அப்போ நீங்க ரெட்டை புள்ளைதான் பெத்துக்கணும். ஆனாலும்..., யார் வின் பண்றான்னு பாக்கலாம்...”, அவள் கூவ, “எதுவா இருந்தாலும் நாங்க சந்தோஷம்தான் படுவோம்...”, மனைவியை தோளோடு அணைத்துக் கொண்டான்.

அதைப் பார்த்த ஸ்ரீராமின் கண்கள் கலங்க..., ‘இப்படி என்மகளை பார்ப்பேனா என்று ஏங்கி இருந்தேனே. இன்று

நடந்துவிட்டது. இது போதும்…”, கண்ணீரோடு, தன் அருகில் வந்த வினித்தை அணைத்துக் கொண்டார்.

மற்றவர்களும் வளையல் போட்டு, அவளுக்கு ரமா பிரசவ தண்ணீர் என ஒரு தண்ணீர் கொடுக்க…, அடுத்து தொடர்ந்த விருந்து, என அதுவே நேரம் இழுத்துச் சென்றது.

அவளோடு உணவு அருந்தியவனது பார்வை, அவளையும் சேர்த்து விழுங்கிக் கொண்டிருந்தது. மற்றவரின் கேலியை அவன் கண்டுகொள்ளவே இல்லை. ஐஸ்வர்யாவுக்கு அவன் பார்வை ஏற்படுத்தும் சிலிர்ப்பை அடக்கவே பெரும் பாடாக இருந்தது.

ஒன்பது மணிக்கு அனைத்தும் முடிய, அவர்களை வைத்து சுற்றிப் போட்டார்கள். “தம்பி…, பாப்பாவை ரூமுக்கு கூட்டி போங்க…”, ரமா உரைக்க, அனைவரும் கிளம்பிச் செல்லவே, அவளை அழைத்துக் கொண்டு, தங்கள் அறைக்குச் சென்றான்.

என்னவோ இன்றுதான் மணம் ஆனதுபோல், அவள் கால்கள் பின்னிக்கொள்ள, இதயம் வேகமாக அடித்துக் கொண்டது. அவள் முதுகின் பின்னால் அவன் வாசல் அடைக்க, தேகம் முழுவதும் ஒருவித சிலிர்ப்பு.

அவள் அசையாமல் நிற்க, அவள் முதுகோடு இணைந்தவன், கரத்தை அவள் மேடிட்ட வயிற்றில் கட்டிக் கொண்டான். அவன் தோளில் அழுத்தமாக சாய்ந்தவள், அவன் கழுத்தில் முகம் புதைத்தாள்.

அவள் சந்தனம் பூசிய கன்னத்தோடு, தன் கன்னம் இழைத்தவன், “ஐஷூ…”, நீண்ட நாட்களுக்குப் பிறகு, அவன் மயக்கும் குரலில், தாபமாய் தவிப்பாய் அழைத்தான். அவன் மெல்லிய குரலுக்கே குழைபவள், அவன் இந்த குரலுக்கு உருகியே போனாள்.

“ம்…”, முனகியவள், விழி திறக்கவில்லை.

அவளை சற்று விலக்கி நிறுத்தியவன், மாலையில் விட்ட வேலையை இப்பொழுது தொடர்ந்தான். சற்று களைப்பும்,

சோர்வும் அவள் முகத்தில் தெரிந்தாலும், அதையும் மீறிய பூரிப்பு.., அவளை அணுவணுவாக ரசிக்க, அவன் பார்வையில் தவித்தவள், வேகமாய் அவனை நெருங்கி, அவன் நெஞ்சில் சாய்ந்து கொண்டாள்.

அவள் கன்னம்..., காதுமடல்..., பின்னங்கழுத்து என அவன் இதழ்கள் ஊர்வலம் போக..., அவன் சட்டையை அழுத்தமாக பற்றியவள், அவனோடு ஒட்டிக் கொண்டாள்.

“வினு.., குளிக்கணும்..., ட்ரெஸ் மாத்தணும்...”, அவள் முனக,

“ஓ...”, கேட்டவன்..., அவளை அழைத்துச் சென்று, டிரேசிங் டேபிள் முன்னால் அமர வைத்தவன், அவள் கழுத்தில் இருந்த ஒவ்வொரு நகையாக கழற்ற, அவன் இதழ்கள் அவள் முதுகில் அழுத்தமாக புதைந்து, அவளை உணர்ச்சிப் பிழம்பாக்கியது.

“டேய்...”, அவள் வார்த்தை குழைந்து போனது.

அவளை விட்டு விலகியவன், அவளை கைகளில் ஏந்திக்கொண்டு, படுக்கையில் அமர வைக்க, அவன் முகம் காண முடியாமல், அவள் மூச்சுக் காற்றில் வெப்பம்.

அவனோ..., “ஐஷூ..., மே ஐ...”, கேட்டவன்..., அவள் என்னவென்று யோசிக்க, அவன் கரங்கள்..., அவள் ஜாக்கெட்டின் இருந்த பின்களை பதமாய் அகற்ற, அவள் தேகத்தில் மெல்லிய நடுக்கம்.

அதை உணர்ந்தவன்..., “ஏண்டா...?”, கேட்டு..., அவள் இதழ்களை கவ்விக்கொள்ள, அவன் கரங்கள் அதன் வேலையைச் செய்ய, மொத்தமாய் நிலை குலைந்தாள். தானும் அதில் இணைந்து கொண்டாள்.

எத்தனையோ முறை மூழ்கிய முத்தம் தான். ஆனால்..., ஒவ்வொரு முறையும் புதிதாக..., புதிராக..., அவன் இதழ்களுக்குள், அவள் இதழ்கள் வெண்ணையாக கரையும் உணர்வு.

அவள் இதழை விட்டு விலக முடியாமல் விலகியவனது பார்வை சொன்ன செய்தியும், பதியும் இடமும், “ஏய்...”, வெட்கமாய்..., அவனை இழுத்து அணைத்துக் கொண்டாள்.

அவன் கைகள் நீண்டு குழல் விளக்கை நிறுத்த, அவன் உணர்வுகள் கொந்தளிக்க, மொத்தமாக அவளை சுருட்டிக்கொள்ள அவன் வேகம் முயன்றாலும், தன் மனைவியின் நிலை உணர்ந்து, பதமாய் அவளைக் கையாள, அதிலும்..., அவன் நீண்டநாள் பிரிவின் வேகத்தை அவளால் உணர முடிந்தது.

அதை ஒரு கட்டத்தில் அவனும் உணர, “பாப்பாக்கு வலிக்குமா...?”, அவள் காதுக்குள் அவன் முனகலாக கேட்க, அவன் தலையில் செல்லமாக குட்டியவள், “பேசாதடா...”, அவனை தன் மார்புக்குள் புதைத்துக் கொண்டாள்.

அவள் மார்பில் புதைந்தவன், “ஐஸூ..., பாப்பா ரொம்ப வெயிட் போட்டுட்டா போல...”, அவன் முனக, மனதுக்குள் அதிர்ந்தாலும், அவனை மேலே பேசவிடாமல் செய்ய, அந்த உறவு முழுமையானது அங்கே.

அவளது ஒன்பதாம் மாத துவக்கத்தில், கார்த்திக்கின் திருமண நாள் நிச்சயிக்கப்பட, மனைவியை விட்டுச் செல்ல வெகுவாய் தயங்கினான். ஆனால்..., அவர்களது நட்பின் ஆழம் புரிந்தவள், அவனை வற்புறுத்தி அனுப்பினாள்.

இப்பொழுது ஐஸ்வர்யாவால் படுக்கையில் நேராக அமரக் கூட முடியாத அளவுக்கு, குழந்தை அடி வயிற்றில் இறங்கிவிட்டது. அவள் கஷ்டம் புரிந்தவன், போக மறுத்தாலும், தான் போகாமல் இருந்தால், நன்றாக இருக்காது என்ற காரணத்தால் அரை மனதாக கிளம்பிவிட்டான்.

கார்த்திக் தன் பெற்றவர்களிடம் தன் மன ஆசையை உரைத்து, அவர்கள் மூலமாகவே சந்தியாவை பெண் கேட்டு அனைத்தையும் முடித்திருந்தான்.

மறுநாள்..., கார்த்திக் தாலி கட்டி முடித்தவுடன், கார்த்திக்கிடம் உரைத்துவிட்டு, காரில் கிளம்பிவிட்டான்.

அவன் நிலை புரிந்தவனாக, அவனும் விடை கொடுத்தான்.

இங்கே ஐஸ்வர்யாவுக்கோ..., பிரசவ வலி லேசாக எழ, முதலில் சற்று அசட்டை பண்ணியவள், ஏற்கனவே தேவயானி சொல்லியிருந்த காரணத்தால், அது பொய் வலியாக இருக்குமோ என எண்ணி, அடுத்த வலி வர காத்திருந்தாள்.

அடுத்த வலியும் சற்று நேரத்தில் எழ, அடுத்த பத்து நிமிடங்களில் மீண்டும் எழ, தன் கையருகில் இருந்த தொலைபேசியில், கீழ அழைக்க, அடுத்த நொடி, ரமா அவள் அறைக்குள் இருந்தாள்.

அவள் வயிற்றை தன் கையால் அழுத்திப் பார்த்தவள், “புள்ள தலை திரும்பிடுச்சு..., உடனே ஆஸ்பத்திரிக்கு போகணும்...”, அடுத்த நிமிடம் ரோல்ஸ்ராய்ஸ் காரில் அவள், ரமா, ஸ்ரீராம் ஏற, கிரி காரை மருத்துவமனைக்கு விரட்டினான்.

உடனடியாக தகவல் வினித்துக்கு தெரிவிக்கப்பட, “அடுத்த அரைமணி நேரத்தில் அங்கே இருப்பதாகச் சொல்லி, அதேபோல் மருத்துவமனையில், ஐஸ்வர்யாவின் முன்னால் நின்றான்.

பிரசவ அறையில் அவள் வலியில் துடிக்க, “டாக்டர்..., ஏன் இப்படி பேசாமல் இருக்கீங்க? ஏதாவது செய்ங்க...”, அவளை விட அதிகமாய் அவன் துடித்தான்.

“வினித்..., வலி இருந்தாலும், குழந்தை வெளியே வரப்போதான் வரும்...”, அவனுக்கு விலக்கினாள்.

அப்பொழுது அமைதியானவன், “அம்மா...”, அவளது அலறலில், “டாக்டர்..., அவளுக்கு வலிக்கிதாம்..., வலியைக் குறைக்க ஏதாவது பண்ணுங்க...”, மீண்டும் அவன் தவித்தான்.

“வலி இருந்தால் தான் நல்லது...?”, ஜெனியின் விளக்கத்தில், அவளை கொலை செய்யும் வெறியே அவனுக்கு எழுந்தது.

அதை உணர்ந்தவள்..., “இப்போ என்ன..., அவங்களுக்கு வலிக்குது அதானே. அதானே..., நான் பாக்கறேன்...”, இரு கையையும் அவன் முன்னால் சமாதானமாக நீட்டியவள், பக்கத்தில் பிரசவம் பார்க்க உதவும் சாக்கில் ஓடியே போனாள்.

ஐஸ்வர்யா படும் பாட்டை அவனால் கண்கொண்டு காண முடியவில்லை. அவன் படும் துன்பம் முடியாமல், அவனை வெளியே கொஞ்ச நேரம் இருக்கச் சொல்லி, தேவயானி விரட்டியே விட்டாள்.

அவன் கண்களில் கண்ணீர் வழிய, இருக்கையில் அமர முடியாமல் தவிக்க, அவன் அருகில் வந்த ரமா, “தம்பி..., இன்னும் அரைமணி நேரத்தில் குழந்தை பொறந்துடும்...”, அவர் உரைக்க,

“என்ன..., இன்னும் அரைமணி நேரமா...? முடியாது...”, உரைத்தவன், பிரசவ அறைக்குள் பாய்ந்து..., “டாக்டர்..., வேண்டாம்..., அவ இப்படி கஷ்டப்படுவதை என்னால் பார்க்க முடியலை, அவளுக்கு சிசேரியன் பண்ணிடுங்க...”, பிடிவாதமாக நின்றான்.

“வினித்..., எல்லாம் சிசேரியன்னா முன்னாடி அலறுவாங்க..., இப்போ என்னன்னா..., நீங்க கொஞ்சம் அமைதியா இருந்தாலே போதும்...”, அவனை அடக்கினாள்.

அவள் சமாதானமோ..., பேச்சோ..., அவன் தவிப்பை குறைக்கவே இல்லை. மாறாக..., வலியில் தவிக்கும் தன் மனைவியின் கையை கெட்டியாக பிடித்துக் கொண்டவன், “ஐஷு..., உன் விருப்பப்படி பையனே பொறக்கட்டும்..., எனக்கு பொண்ணு வேண்டாம்..., என்னால் நீ படுற கஷ்டத்தை பாக்க முடியலை....”, அவளைவிட அவன் தவிப்பது, அவளுக்கு பெருமையாக இருந்தது.

அதே நேரம்..., அவன் கண்ணீர் அவளைத் தாக்க, தன் வலியை பல்லைக் கடித்து அவள் பொறுத்துக் கொண்டு, “இன்...னும் கொ..ஞ்..ச நேரம்...”, அவள் உரைக்க, “நீ வலியை அடக்காதே..., இந்தா என் கையை கடிச்சுக்கோ...”,

அவன் கையைக் கொடுக்க, அழுத்தமாக பற்றிக் கொண்டாள்.

அதே நேரம்..., "அம்மா...", அதிகமாக அலற, வேகமாக அவள் அருகில் நெருங்கிய தேவயானி..., "ஐஸ்வர்யா..., லாஸ்ட் மினிட்..., குழந்தை தலை வெளியே வருது..., அப்படியே அழுத்தி முக்குங்க...", பரபரப்பாக, அடுத்த அலறலில்..., குழந்தை வெளியே வர, "வினித்..., பொண்ணு பொறந்திருக்க..., வாழ்த்துக்கள்...", தேவயானி உரைக்க, அவனோ, சந்தோசம் அடைந்தாலும், சட்டென முகம் லேசாக சுருங்க மனைவியை ஏறிட,

"நீ தானே ஆசைப்பட்ட..., உனக்குத்தான்...", அவள் அந்த வலியிலும் உரைக்க, கண்களில் கண்ணீரோடு, அவள் கன்னத்தில் இதழ் பதித்தான். அதே நேரம்..., மீண்டும் அவளிடம் அலறல் வெளிப்பட, "டாக்டர்..., இன்னும் ஏன்...?", அவன் கேட்டு முடிக்கும் முன்னர்..., "வினித்..., மறுபடியும் வாழ்த்துக்கள், பையன் பொறந்திருக்கான்...", தேவயானியின் குரலில், சட்டென மனைவியைப் பார்த்தான்.

"ஐஷூ...", அலறியவன்..., அது மருத்துவமனை என்பதை மறந்து..., அவள் முகத்தில் முத்தமழை பொழிந்தவன், "ஏண்டி என்கிட்டே சொல்லலை...", முதல் முறையாக அவளை 'டி' போட்டு, மிகுந்த உரிமையாய்..., சந்தோஷமாய், உல்லாசமாய் , சிறு கோபமாய் கேட்டான்.

அதைக் கேட்டவளுக்கு தேகம் முழுக்க சிலிர்க்க, "நீ தாண்டா காரணம்...', என்பதுபோல் அவனை கை நீட்டியவள், மயக்கத்துக்குச் செல்ல, அவன் அலறல் கேட்டாலும் அவளால் கண்விழிக்க முடியவில்லை.

"டாக்டர்...", அவன் அலறலில்..., வெளியே நின்றவர்கள் ஸ்தம்பிக்க, "ஐயோ..., அண்ணா..., சாதாரண மயக்கம் தான். அதுக்கு ஏன் ஊரையே கூட்டுறீங்க...? முதல்ல நீங்க வெளியே போய், குழந்தைங்களை பாருங்க...", உரிமையாய் அவன் முதுகில் கை கொடுத்து வெளியே தள்ளி விட்டாள்.

வெளியே நின்றவர்களின் வெளிறிய முகத்தைப் பார்த்த பிறகுதான், தன் தவறு புரிய, “இல்ல..., கொஞ்சம் பயந்துட்டேன்...”, புறங்கையால் தன் கண்ணீரைத் துடைத்தவாறு அவன் சிரிக்க,

“நீங்க கொஞ்சம் பயந்து..., அவங்களை வெலவெலக்க பண்ணிட்டீங்க. நல்ல ஆளு போங்க...”, கவுண்டர் கொடுத்துவிட்டு, ஜெனி உள்ளே மறைய, அவனை அணைத்த ஸ்ரீராம், தன் வாழ்த்தை உரைத்தார்.

இரட்டை பிள்ளை என்பது அவரையுமே பெருமிதத்திலும், சந்தோஷத்திலும் மிதக்கச் செய்ய, செவிலி கொண்டுவந்த இரு குழந்தைகளையும் கைகளில் ஏந்த தெரியாமல் தவித்தவன், பரிதாபமாக முழிக்க, அவனுக்கு உதவிக்கு வந்தார் ரமா.

அவர் உதவியால் தன் மகவை ஏந்தியவனுக்கு, அந்த வானம் வசப்பட்ட உணர்வு. ஐஸ்வர்யா அடுத்த ஒருமணி நேரத்தில் கண் விழிக்க, தன் இரண்டு மகவையும், முயன்று கைகளில் ஏந்தியவன், அவள் பார்வை படும் இடத்தில் நெஞ்சு விடைக்க நின்றிருந்தான்.

“ஐஷூ...”, அவள் சோம்பலாக கண் விழிக்க, மென்மையாக அழைத்தவன், ரமா உதவியால் குழந்தைகளை அவள் அருகில் கிடத்தினான்.

அவனை கண்ணசைவில் அருகில் அழைத்தவள், “சந்தோஷமா...?”, அவன் காதில் கேட்க, அவள் நெற்றியில் அழுந்த முத்தமிட்டவன், தன் சந்தோஷத்தை வெளிப்படுத்தினான்.

அடுத்த மூன்றாம் மாதம்..., குழந்தைகளுக்கு பெயர் சூட்டும் விழா கோலாகலமாக நடக்க, அனைத்து முன்னணி பத்திரிகை நிருபர்கள், மீடியா என அனைத்தும் அந்த மண்டபத்தில் குழுமி இருக்க, தன் பிள்ளைகளுக்கு, “சத்ருதன் சக்சேனா..., ஷஷ்மிதா தேவி...”, என பெயர் சூட்டி மகிழ்ந்தவர்கள், அடுத்த நிமிடம், தன் மனைவியை,

குழந்தைகளை ஆளுக்கொருவராக ஏந்தியவாறு பத்திரிக்கையாளர்களை சந்திக்கச் சென்றான்.

அவர்கள் கேட்கும் முன்பே, தன் மனைவி, குழந்தைகளை அறிமுகம் செய்தவன், அடுத்த நிமிடம், “என் கம்பெனியின் தலைமை அலுவலகம், டயர் பிளான்ட்டை..., இங்கே தமிழகத்தில் நிறுவ முடிவெடுத்து இருக்கிறேன்.

“அடுத்த ஒரு வருடத்துக்குள் அனைத்தும் இங்கே வந்திருக்கும். இதன் மூலம், தமிழகத்தில் தொழில் முன்னேற்றமும், வேலை வாய்ப்பும், பொருளாதாரமும் மேம்படும். மேலே உங்களுக்குத் தேவையான தகவல்களை என் ஜிஎம் மிஸ்டர் பரமேஸ்வரன் கொடுப்பார். நன்றி...”, அப்படியே விலகிவிட்டான்.

அவன் ஏற்படுத்திய தொழில் அலையில்..., அவன் குடும்ப வாழ்வு அப்படியே அடிபட்டுப் போனது. தன் கணவனின் திறமையை உணர்ந்த ஐஸ்வர்யா, வழக்கம்போல் அவனை மெச்சிக் கொண்டாள். மற்றவர் உணராதவாறு சட்டென தன் இதழை அவன் கன்னத்தில் பதித்து மீட்டவள், அவன் கண்கள் மின்ன அவளை ஏறிட,

“என்னை என்னடா பண்ண..., இப்படி ஆயிட்டேன்...?”, அவனிடமே கேட்க, அவளை ஆசையாய் அணைத்துக் கொண்டான். அவர்கள் வாழ்க்கை இனிமேல் வசந்தமாய் வீசும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

நன்றி.